ஆசிரியர்: மு.தயாளன் புரட்டாதி - 2024 300ரூபா

50வது இதழ்
சிறப்பிதழ்

# சிறுகதை மஞ்சரி



வாசித்து வாசித்து வாழ்வை வளமாக்குவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்

Luxmi Publication



மு.தயாளன் மு.தயாளன் மு.தயாளன் மு.தயாளன் மு.தயாளன் மு.தயாளன்



மு.தயாளன் மு.தயாளன் மு.தயாளன் மு.தயாளன் மு.தயாளன் மு.தயாளன்




மு.தயாளன் மு.தயாளன் மு.தயாளன் சு. ஆர்த்திகா அலெக்ஸ் பரந்தாமன் சியாமளா




பிரமி M.Thayalan M.Thayalan M.Thayalan M.Thayalan மு.தயாளன்




யோர்ச் அருளானந்தம் மு.தயாளன் மு.தயாளன்

நூல்கள் வேண்டுவோர் தொடர்பு கொள்ளவேண்டிய
whatsup இலக்கம் : 00447505455811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை நிறைத்த மஞ்சரி



சில விடயங்களை நாம் நினையாப்பிரகாரமாகத் தொடங்கிவிடுகிறோம். அதன் பின்விளைவுகள் எதனைப்பற்றியும் மனம் சிந்திப்பதில்லை. மனதில் ஒரு நம்பிக்கை, உறுதி, முன்னோக்கிச் செல்லும் வேகம் ஆகிய மூன்றும் இருந்துவிட்டால் எந்த மலையையும் அநாயசமாக அசைத்துவிடலாம். எழுதத்தொடங்கிய வயதிலிருந்தே சஞ்சிகை வெளியிடவேண்டும் என்ற ஆசை என்னுள் இருந்தது. படிக்கும் காலத்தில் 'தென்றல்' என்ற கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டேன். அதனது கடைசி பக்கம் நான்கினை வாசகர் அபிப்பிராயம் எழுத ஒதுக்கியிருப்பேன். நெல்லியடி - வதிரி வாசகசாலையில் பார்வைக்கு வைத்துவிட்டு வேறொரு மேசையில் இருந்து எத்தனைபேர் பார்க்கிறார்கள் எத்தனைபேர் அபிப்பிராயம் எழுதுகிறார்கள் என்று பார்த்து மனதிற்குள் சந்தோசத்தால் துள்ளிக் குதிப்பேன்.

பின்பு செவ்வந்தி என்ற ஒரு கையெழுத்துச் சஞ்சிகையை நண்பன் அல்வைச் சுந்தரனுடன் சேர்ந்து செய்தேன். வர்ணங்கள் கலந்து வெளியிடப்பட்ட அந்த சஞ்சிகையும் பிரபலமானது. என்னதான் இவற்றை வெளியிட்டும் மனதில் சந்தோசம் பூர்த்தியாகவில்லை. சிறிதுகாலத்தில் நாட்டின் அரசியற் பிரச்சினைகளால் நாடுவிட்டு வந்து ஜெர்மன் நாட்டில் வாழ்க்கை தன் கடையை விரித்தது. இங்கு புதிய தென்றல் என்ற கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டேன். பலர் இதனைப் பாராட்டியபோதும் என் மனம் என்னவோ என்னைப் பாராட்ட வில்லை.

லண்டனுக்கு என் வாழ்க்கை நகர்கிறது. லண்டனில் சைவ முன்னேற்றச் சங்கம் என்ற அமைப்போடு எனக்குத் தொடர்பு ஏற்படுகிறது. அவர்களின் தேவையின் பொருட்டு 'கலசம்' என்ற காலாண்டுச் சஞ்சிகையை அச்சில் கொண்டுவருகிறேன். பத்து வருடங்கள் அதன் ஆசிரியராக இருந்து பணி புரிகிறேன். இங்கும் நான் திருப்திப்படவில்லை.

கலசத்தைவிட்டு வெளியே வருகிறேன். சுதந்திரமாக 'திருவருள்' என்கின்ற சஞ்சிகையை நானே ஆரம்பிக்கிறேன். பதினைந்து இதழ்கள் வெளிவந்தன. ஏதோ ஒரு விடயத்தில் திருப்தி ஏற்படாமல் தவித்தேன். அது என்ன என்பதும் எனக்குப் புரியவில்லை. திருவருள் அப்படியே நின்றுவிடுகிறது. சும்மா இருக்கமுடியவில்லை. 'அனுபவம்' என்ற இதழை ஆரம்பித்தேன். இந்த இதழ் ஒரு இதழோடு அழுதபடி நின்றுவிட்டது. சிலமாதங்கள் ஓய்வு நிலையில் இருந்தபடி வெளிவந்து கொண்டிருந்த சஞ்சிகைகளுக்குப் பண உதவி செய்தேன்.

இந்தக் காலகட்டத்தில்தான் 'சிறுகதை மஞ்சரி' பற்றிய எண்ணக்கரு என்னுள் உருவாகியது. சில நண்பர்களோடு கதைத்தேன். ஆகக்குறைந்தது நான்கு இதழாவது தொடர்ந்து வெளியிடுவதாக இருந்தால் சந்தா பெற்றுத் தருகிறோம் என்றார்கள். அவர்களின் அந்தக் கேள்வி எனக்குள் எரிந்து கொண்டிருந்த பொறியைத் தட்டிவிட்டது. முழுமூச்சோடு இயங்கினேன். என்னோடு காலஞ்சென்ற நண்பன் பேராசிரியர் செ. யோகராசா, காலஞ்சென்ற நந்தினி சேவியர், மைக்கல் கொலின், பெறாமகள் சரண்யா, ஷெல்லிதாசன், கனக தீபகாந்தன், லண்டனைச் சேர்ந்த வ.இ. இராமநாதன், எனது பால்ய நண்பன் கிருஸ்ணமூர்த்தி, வ.இ. லோகநாதன் , எனது பால்ய நண்பர் வைத்திய கலாநிதி ராசையா, அற்புதானந்தன், ந. ஜெயரூபலிங்கம் ஆகியோர் மறக்கமுடியாத அளவுக்கு நெஞ்சுரத்தைத் தந்தார்கள்.

ஒவ்வொரு இதழின் அட்டைகளை அழகுபடுத்திய என்மகன் ரமணனையும் ஒவ்வொரு பக்கத்தையும் கூர்ந்து பார்த்துத் திருத்திய என் மனைவி சாருகேசியையும் எம்மோடு உறவாக இணைந்த ஆர்த்தி துவாரகனின் அரும் பணியையும் அவ்வப்போ உற்சாகம் தந்து என்னை நிமிரவைத்த என் மகள் கீர்த்திகாவையும் என் உணர்வுகளாகப் பிணைந்திருந்த என் பேரப்பிள்ளைகளையும் எப்படி நான் மறக்க முடியும்? இவர்களெல்லாம் என்னோடு இணைந்து பிணைந்தார்கள். மஞ்சரி உருவானது. மகத்தான வரவாக அது அணிவகுக்க ஆரம்பித்தது. புதிய புதிய எழுத்தாளர்களை மஞ்சரி உள்வாங்கியது. சிறுகதைக்கென்றே வெளிவரும் ஒரே சஞ்சிகையாக மஞ்சரி திகழ்ந்தது, திகழ்ந்து கொண்டிருக்கிறது, திகழும். என்னுடைய எண்ணம் என்னுடைய கனவு நிறைவேறும் கற்பகதருவாகவே மஞ்சரியைப் பார்க்கிறேன். இந்த 50 ஆவது மஞ்சரி உங்கள் கைகளில் தவழும்போது நான் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருப்பேன். இதுவரைகாலமும் மஞ்சரிக்குக் கதைகளை எழுதி மஞ்சரியை வளர்த்த எழுத்தாளர்களின் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். ஒவ்வொருமாதமும் அழகு குறையாது மஞ்சரியை உங்கள் கைகளில் தவளச் செய்த மட்டக்களப்பைச் சேர்ந்த வணசிங்க அச்சகத்திற்கும் அதன் அன்புமிகு ஊழியர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றிகள்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் இலக்கியம்!

**மு.தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை மஞ்சரி - 50

## உள்ளடக்கம்...


| | | |
|---|---|---|
| 1. | தீண்டத்தகாதவர்களின் எழுச்சி | கேணிப்பித்தன் ச.அருளானந்தம் |
| 2. | நன்றியாய் ஓர் ஏழை நெஞ்சம் | அன்னலட்சுமி இராஜதுரை |
| 3. | வேறுவிதத்தில் ஒரு பாடம்..! | ஷெல்லிதாசன் |
| 4. | விதி வரைந்த பாதை | மண்டைதீவு கலைச்செல்வி |
| 5. | வித்தகர்கள் | அலெக்ஸ்பரந்தாமன் |
| 6. | கடவுளும் கண்ணனும் | இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். |
| 7. | டாப்பர் மாமா | புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் |
| 8. | எங்கே என் செவ்வந்தி? | முனைவர் கோ. ஒளிவண்ணன் |
| 9. | மாப்புளக் கோட் | திக்குவல்லை கமால் |
| 10. | ஜோசபின் | தாட்சாயணி |
| 11. | தங்கமலர் | சந்திரா இரவீந்திரன் |
| 12. | உறல்முறையோர் | ஆதிலட்சுமி சிவகுமார் |
| 13. | நதிகளின் பாதையில்.. | சியாமளா யோகேஸ்வரன் |
| 14. | அவளா இவள்? | நோயல் நடேசன் |
| 15. | நதியிலே புதுப்புனல் | கே.எஸ்.சுதாகர் |
| 16. | பேசப்படாத மௌனங்கள் | குரு சதாசிவம் |
| 17. | ஏன் சிரித்தாய் என்னைப் பார்த்து | உரும்பிராய் எம்.ரி.செல்வராஜா |
| 18. | எல்லாம் உனக்காக.. | ந. ஜெயரூபலிங்கம் |
| 19. | இச்சை | ஆதவன் |
| 20. | ஊனம் | கந்தையா பத்மானந்தன் |
| 21. | ஐயாச்சி | குலசிங்கம் வசீகரன் |
| 22. | அடர் இருள் என்செயும் | ஸ்ரீரஞ்சனி |
| 23. | காத்திருப்பு | விமல் பரம் |
| 24. | மனிதக் கிருமி | நவஜோதி ஜோகரட்னம், |
| 25. | மூன்று வினாடி விதி | பூங்கோதை |
| 26. | தமிழ் மணி | யோர்ச் அருளானந்தம் |
| 27. | சுழல் | ஐ. கிருத்திகா |
| 28. | இன்னும் ஆறு நாட்களே.... | அர்ஷா |
| 29. | ஆண்கள் உலகம் | வி. மைக்கல் கொலின் |
| 30. | அமைதிக்குகும் அப்பால்... | பிரமி |
| 31. | இறுதிக் கடமை | றொசில்டா அன்டன் |
| 32. | நிரந்தர நியமனம் | சம்பூர் சமரன் |
| 33. | புதிய திங்கள் | அகரா |
| 34. | பாடம் | நிலாவெளியூர் கெஜதர்மா |
| 35. | அக்கார அடிசில் | சுரேந்திரன் தர்சித் ராகுல் |
| 36. | கண்ணிவெடி | சோலையூர் குருபரன் |
| 37. | அகதியின் காணி | குறுேபஸ் |
| 38. | ஆறிய தேநீர் | கனகசூரியம் யோகானந்தம் |
| 39. | புதுப்புது அர்த்தங்கள் | ச. சிறீரங்கன் |
| 40. | Awaiting | Jeevaretnam |
| 41. | Realisation | M. Thayalan |
| 42. | 'Going to planet Mars' | Rajes Bala |



**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன்,
திருமதி சாரு நற்குணதயாளன்,
திரு ரமணன் நற்குணதயாளன்,
செல்வி சரண்யா தனபாலசிங்கம்,
திரு வி. மைக்கல் கொலின்,
வணசிங்க அச்சகத்தினர்.

**அட்டை வடிவமைப்பு:** வணசிங்க அச்சகம்
**அட்டைப்படம் :** இணையம்
**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் . T. சௌந்தர்.
செயற்கை நுண்ணறிவு. இணையம்

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின். செல்வி த. சரண்யா,
திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன், திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்** Dr P.இராசையா
**கள நிர்வாகம்** கனக தீபகாந்தன்.
வி. மைக்கல் கொலின். த. சரண்யா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari,**
**14 Brands Road, Berkshire SL3 8QP,UK**
**sirukathai1@gmail.com, +447505455811**

**Sirukathaimanjari**
**91, Barathi street, Trincomalee, Srilanka**
**sirukathai1@gmail.com, +94765554649**



**சந்தா விபரம்:**
Srilanka : 1000Rs/Year
Mrs Thanabalasingam,
Commercial Bank, Trinco Branch, 8370042817
England £20/Year
Den/Swiss/Ger : 80Euro/Year Can/USA/Amer : $120
Bank Details: M. Natkunathayalan,
Barclays, Sort code 20-37-15,
A/C Number 60389307
IBAN : GB11BUKB 20371560389307 S
WIFTBIC BUKBGB22


**விநியோகம்:**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் | +94 773788795 |
| மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் | +94 774338878 |
| திருகோணமலை: த. சரண்யா | +94765554649 |
| கனக. தீபகாந்தன் | +94772121508 |
| வெண்பா புத்தகசாலை. யாழ்ப்பாணம் | +94 212 225 090 |
| பண்டாரவன்னியன் புத்தகசாலை வவுனியா | +94772244616 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேணிப்பித்தன்
ச.அருளானந்தம்



# தீண்டத்தகாதவர்களின் எழுச்சி

கண்டியில் நாங்கள் இருக்கும் இடத்தில் இருந்து தொடர்வண்டிப் பாதையோரமாக நடந்தால் பத்து நிமிடங்களில் மஹியாவப் பாடசாலையில் நிற்கலாம். காலையில் நடைப்பயிற்சி பத்து நிமிடம்.

மஹியாவ 'இரட்சணிய சேனைப் பாடசாலை' என இருந்தது. கொழும்பில் கொம்பெனித் தெருவில் பெரிய தொரு கட்டிடத்தொகுதி இருப்பதை நினைவு கூர்ந்தேன். எனது கால்கள் றெயில்வீதி ஓரமாக மக்கள் போவதும், வருவதுமாக இருந்தனர். அகலமான அந்த வீதியால் என் கால்கள் நடந்தன. தொடர் வண்டிகள் கூவிய வண்ணம் போய்க் கொண்டிருந்தன.

மஹியவா தொடர்வண்டி நிலையம் தெரிந்தது. ரயில் நிலையத்தில் நின்றது. பயணிகள் சிலர் இறங்கினர். சிலர் ஏறிக்கொண்டனர். தொடர் வண்டி போய்விட்டது. இடப்பக்கமாகப் படிகள் இருந்தன. ஏறிநடந்தேன். மஹியாவ பாடசாலை 'வா வா' என வரவேற்றது. பாடசாலை வளாகத்தினுள் நுழைந்தேன். அந்த இடத்தை நன்றாக அவதானித்தேன். உயரமான ஒதுக்குப்புறமாக இரண்டு கட்டிடத் தொகுதிகள் இருந்தன. க.பொ.த சாதாரணதர வகுப்பு வரை உள்ளது. பல ஆசிரியர்கள் இருந்தும் வகுப்புக்கள் வெறுமனே கிடந்தன. பிள்ளைகள் தங்கள் விருப்பம் போல் வெளியில் போவதும் வருவதுமாக இருந்தனர். சில ஆசிரியர்கள் விருப்போடு கற்பித்துக் கொண்டிருந்தனர்.

பல வருடங்களாகத் தொடர்ந்து அதிபராகச் சேவையாற்றிக் கொண்டிருப்பவர் இன்னும் வரவில்லை. அதிபருக்காகத் தனியான அறை உள்ளது, அங்கே இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டேன். ஜனாப். தாஜூதீன் அதிபருக்கு உதவியாக இருந்தார், எப்போது வந்தாலும் ஆசிரியர்கள் 7.30 மணியைத் தவறாமல் பதிந்தார்கள். தாஜூதினோடு உரையாடிப் பாடசாலை நிலையை அறிந்து கொண்டேன். நானும் இங்கு ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்திருப்பதாகக் கூறிவைத்தேன். அப்போதுதான் ஜேசுதாசன் இன்னும் மூன்று மாதங்கள் மட்டுமே இருப்பார். பின் ஓய்வு பெற்றுவிடுவார் என்பது தெரிய வந்தது. இடைவேளை நேரம். பாடசாலையில் கன்ரீன் இருக்கிறது. தாஜூதீன் என்னையும் அழைத்துக் கன்ரீனுக்குக் கூட்டிச் சென்றார். தேநீர் குடித்தவாறே "இவரும் நமது பாடசாலைக்கு வந்திருக்கிறார்." என்றார். பல ஆசிரியர்கள் புதுவிதச் சிரிப்போடு என்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தனர். அவர்கள் அரட்டை அடித்தபடியே இருந்தனர். இவர்கள் இப்படித்தான். இடைவேளை முடியும் நேரம் அதிபர் வந்து சேர்ந்தார். பிள்ளைகள் வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். அவர்களைப் பற்றி யாரும் சிந்திக்க வில்லை. ஒவ்வொருவராக, ஆறுதலாக வந்து கொண்டிருந் தார்கள். பிள்ளைகளின் வீடுகள் பாடசாலைக்கு அண்மையிலேயே இருந்தன. படிக்கட்டுகளில் ஏறிவந்தால் பாடசாலை. இறங்கினால் வீடு. தோட்டத் தொழிலாளர் களின் லயங்கள் போல் வீடுகள். பாடசாலை யில் இருந்து பார்த்தால் அத்தனை வீடுகளும் ஒரேமாதிரியாக தொடராக அமைந்து உள்ளன. இவர்கள் அத்தனை மக்களும் நகரசுத்தித் தொழிலாளர்கள். அவர்கள் படித்தால் என்ன, படியாவிட் டால் என்ன என்ற நினைவில் ஆசிரியர்களும், அரச அதிகாரி களும் நடந்து கொள்வது உள்ளத்தை குத்திக் கிளறியது.

நகரசுத்தித் தொழிலாளர் என்போர் தீண்டத் தகாதவர்களா? அவர்களை ஒதுக்குப் புறத்தில் குடியமர்த்தி, அவர்களின் கல்விக்கும் தடை போடுவதா? ஔவை, வள்ளுவர், காந்தி, பாரதி, அம்பேத்கார் விபுலானந்தர் போன்றவர்கள் இன்னும் பல சான்றோர்கள் எவ்வளவுதான் அறிவுரைகள் கூறினாலும் இந்த மனிதர்கள் திருந்தப் போவதில்லை. அதிபர் திரு ஜேசுதாசன் இருக்கையில் அமர்ந்தார். ஒரு பத்து நிமிடத்தால் அவரின் பக்கத்தில் சென்றேன். கடிதத் தையும், கடமையேற்ற கடிதப் பிரதிகளையும் கொடுத்தேன். கடிதத்தைப் பார்த்ததும் கண்ணீர் விட்டார். அறையில் வேறு யாரும் இல்லை.

"ஐயா! ஏன் கண்ணீர்.? உங்களைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். இன்னும் மூன்று மாதங்கள் இருக்கிறது ஓய்வுக்கு. நீங்கள் ஓய்வு பெறுமட்டும் நீங்கள்தான் அதிபர். நான் உங்கள் உதவி அதிபர். இன்றே என்னோடு கல்வித் திணைக்களம்வாங்க. உரிய அனுமதியை பெற்றுத்தருகிறேன். இந்தத் தேநீரைக் குடியுங்கள்.." அவரின் முதுகில் தட்டி எழுப்பினேன். அவர் யோசித்தார். அவரிடம் தேநீரைக் கொடுத்தேன். வாங்கிக் கொண்டார். இருவரும் குடித்தோம். "கற்பித்தல், மேற்பார்வை, கட்டொழுங்கை நான் கவனிப்பேன்." என்றதும் அவருக்கு என்மேல் நம்பிக்கை வந்தது, "புதிய அதிபர் வந்திருக்கிறார் என்பதை யாரிடமும் கூறாதீர்கள். எனது கடமையேற்றல் கடிதத்திலும் வெறுமனே பாடசாலையில் கடமையேற்றேன். என்றே எழுதியுள்ளேன்." என்று நம்பிக்கை ஊட்டினேன்.

இருவரும் பாடசாலை வகுப்புக்களைப் பார்வையிட் டோம். என்னை வகுப்புப் பிள்ளைகளுக்கு புதிதாக வந்தி ருக்கும் ஆசிரியர் என்று அறிமுகம் செய்தார். பிள்ளைகள் வணக்கம் சொன்னார்கள். நானும் அவர்களுக்கு வணக்கம் கூறினேன். வாழத்துடிக்கும் மாணவர்களாக இருப்பதை அவர்கள் கண்களும் முகங்களும் கூறுவதைக் கவனித்தேன். பாட சாலை முடிவுக்கு வந்தது. மணி ஒலித்ததும் மாணவர் களுக்கு முன் ஆசிரியர்கள் ஓடுவதை அவதானித்தேன். பிள்ளை களும் ஆளையாள் தள்ளிக் கொண்டு ஓடினார்கள். ஒரு ஆசிரியர் பிள்ளைகளைக் கட்டுப் படுத்திக் கொண்டு நின்றார். அவருக்கு மட்டுமேன் அக்கறை? சிந்தித்தவாறே அதிபரின் பின்னால் நடந்தேன்.

அப்படியே கல்வித் திணைக்களம் சென்றோம். பணிப்பாளர் இரண்டரை மணிக்கு வருவார். கல்வித் திணைக் களச் சிற்றூழியரிடம் அனுமதி கேட்டு எழுதிய கடிதத்தைப் பணிப்பாளரிடம் கொடுக்கும்படி கொடுத்தேன். அப்படியே கன்ரினில் அதிபருக்கும் சேர்த்து உணவுப் பொட்டலம் எடுத்து உண்டோம். முடிந்ததும் பணிப்பாளரைச் சந்திக்கச் சென்றோம். கல்விப்பணிப்பாளரை அதிபர் இன்றுதான் சந்திக்கப் போகிறார். அவர் பயந்து கொண்டே வந்தார். பணிப்பாளர் இருந்தார். என்னைக் கண்டதும் அழைத்தார். "கம்..கம்.. கூஸ் இஸ் திஸ் ஜென்ரில்மன்" ? என்றார். நான் அவரை அறிமுகம் செய்து, விபரமாக விசயங்களை முன் வைத்து உதவுமாறு கேட்டுக் கொண்டேன்.

அவர் சிரித்தார். "யூ ஆர் எ வண்டபுல் மான்" என்றார். தான் இந்த அதிபரை இதுவரை சந்திக்கவே இல்லை. சிங்களம் உங்களுக்குத் தெரியுமா? என்றார். அதிபர் "ஆம்" என்றார். நீங்கள் பயமில்லாது இவரை நம்பலாம். நீங்கள் ஓய்வு பெற்றபின் அவர் பொறுப்பேற்பார். அதுவரை அனுசரித்துப் போங்கள். போய்வாருங்கள்." விடைபெற்று வெளியில் வந்தோம். அதிபர் எனது கைகளைப் பிடித்துத் தன் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

"நாளை பாடசாலையில் சந்திக்கலாம்" என்று கூறி இருவரும் விடைபெற்றோம்.

இரவாகியதும் பறவைகள் தம் கூடுகளை நாடிச் செல்வது போல் நண்பர்கள் வந்து சேர்ந்தனர். சேர்ந்து சமைத்தோம். சமைக்கும்போதே எனது பாடசாலையைப் பற்றிக் கூறினேன். "ஏன் அந்தப் பாடசாலைக்கு போறிங்க"? பலரும் கேட்டார் கள். எனக்கு அதிர்ச்சி. எங்களோடு ஒரு பல்வைத்தியர் இருந்தார். அவர் ஒரு புரட்சியாளர். யாழ்ப்பாணம் இரண்டு கிழமைகளுக்கு ஒருமுறை தொடர்வண்டியில் சென்று வருவார். ரிக்கற் எடுக்காது பயணிப்பதில் வல்லவர். நான் அந்தப் பாடசாலைக்குப் போவதை ஆதரித்தார். நடராசா என்றொரு எழுதுவினைஞர் கல்வித் திணைக்களத்தில் சேவையாற்றினார். அருமையான மனிதர். நீங்க கட்டாயம் அந்தப் பாடசாலைக்குப் போங்க. அந்தப் பிள்ளைகளுக் குத்தான் கற்பிக்க வேண்டும். பாவம். நகரசுத்தித் தொழிலா ளர்களின் பிள்ளைகள். வேறு பாடசாலைகளுக்குப் போவ தற்கு வசதியில்லை. தங்களுக்குள்ளேயே ஒரு தாழ்வுச் சிக்கல். 'இரட்சனிய சேனை' அவர்களுக்காக ஒரு பாடசாலை யைக் கட்டி நடத்தியமை ஒரு வரப்பிரசாதமாகும். **1962**ல் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றதால் அரசாங்கப் பாடசாலையாயிற்று. நடராசா அண்ணர் சைவமகாசபையில் ஒரு உறுப்பினர். அவரோடு போயா தினத்தன்று கண்டி போகம்பரை சிறைச்சாலையில் கைதிகளுக்கு சமய ஆராத னைகளும், அறிவுரைகளும் வழங்குவோம். அதனால் நடராசா அண்ணன் என்னைத் தன் தம்பியாகவே ஏற்றுக் கொண்டார்.

உணவின்போது இதைப்பற்றியே கதை தொடர்ந்தது. நான் அந்தப் பாடசாலைக்குப் போவதை அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்றனர். காலையில் முதலில் திரு.மூர்த்தியே எழும்பு வார். அவர் தெல்தெனியா சிதம்பர மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றுகிறார். ஆறுமணிக்கு பேருந்தைப் பிடிக்க வேண்டும். போய்விடுவார். நடராசா அண்ணர் தேநீர் போடுவதில் வல்லவர். எல்லோருக்கும் பிளைன்ரீ போட்டுத் தருவார். எனக்கு அரிசி களைந்து உலையிடுவது கடமையாகி விட்டது... நடராசா அண்ணர் கஞ்சி வடித்து அதில் துருவிய தேங்காய்ப் பூவைக் கலந்து வைப்பார். ஆளுக்கொரு சிரட்டையில் எடுத்துக் குடிப்போம்.. குடித்தவாறே ஒரு பெரிய கறி , அது பெரிய சட்டி நிறைந்த சாம்பாராக இருக்கும். பசி, ருசி அறியாது. சிலவேளைகளில் ஆளுக்கொரு பணிஸ். கடமைகளுக்குப் போய் விடுவோம்.. நான் ரயில் பாதையோரமாக அன்றைய வேலைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான முறைகளைத் திட்ட மிட்டவாறே நடந்தேன். நான் போய் சேர்ந்ததும் பிள்ளைகள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தார்கள். முத்துலிங்கம் மட்டும் பிள்ளைகளை இயக்கிக் கொண்டிருந்தார். நானும் சேர்ந்து கொண்டேன். பாடசாலையின் உண்மை நிலை யினைக் கற்றுக் கொண்டேன். அலுவலகத்தினைத் திறந்து ஆசிரியர் ஒப்பமிடும் வரவுப் புத்தகத்தில் முத்துலிங்கம் கையெழுத்திட்டார். அவர் ஏழு மணி எனப் பதிந்தார். அவர் பாடசாலைக்கு முதலில் வருவது வழக்கம். சரியான நேரத்தைக் கேட்டேன். எட்டு மணி. பாடசாலை 7.30 மணிக்குத் தொடங்கி 1.30 மணிக்கு விடும். என்றார். நான் கையெழுத்திட்டு எட்டு மணி எனப் பதிந்தேன். அதற்குக் கீழ் சிவப்புக் கோடும் இட்டேன். திரு. முத்துலிங்கம் பயந்து நின்றார். "மற்றவங்களப் பகைக்க வேண்டிவரும்." என்றார்.

"வருவதைச் சந்திக்கலாம். ஒன்றுகூடலை நடத்து வோம். மணியடிக்கச் சொல்லுங்க" முத்துலிங்கம் சந்தோசத் தோடு இயங்கினார். பிள்ளைகள் கூடிவிட்டனர். அவர்களை ஈர்க்கக் கூடிய கதையைக் கூறி சிந்தனைக்கு வினாக்களைக் கொடுத்தேன். இன்றிலிருந்து நடைமுறைக்கு வரும் திட்டங் களை அறிவித்தேன். பாடசாலைப் பாடல் முடிந்ததும் வகுப்பு ஒழுங்கில் வரிசையாகச் சென்றனர். ஆசிரியர்கள் அலுவலகத்தில் கையெழுத்திடாது காத்திருந்தனர். நாங்கள் வகுப்புகளுக்குள் சென்றோம். நான் இருந்த வகுப்புக்குள் தேடி வந்தனர்.

"நேற்று கடமையேற்ற உமக்கு சிவத்தக் கோடு அடிக்க அதிகாரம் தந்தது யார்? இவ்வளவு காலமும் நடக்காத புதினம் இது". அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"வகுப்புக்குள் நின்று சத்தமிடாமல் அதிபரிடம் போய் சத்தமிடுங்கள்." என்றேன்.

அதிபர் களைத்து விழுந்து வந்து சேர்ந்தார். அவர் அலுவல கத்தினுள் சென்றதும் ஒப்பமிடும் புத்தகத்தைப் பார்த்தார். முகம் புன்முறுவல் பூத்தது. சரியான ஆளைத்தான் அதிபராய் நியமித்துள்ளார்கள். மனதில் நினைத்துக் கொண்டார்.

"என்ன சேர் இஞ்ச நடக்குது"? ஆசிரியர்களின் குரல் ஒன்றாய் ஒலித்தது.

"ஏன்? ஒன்றுமில்லையே" ஒன்றும் நடக்காதது போல் கேட்டார்

"கையெழுத்துப் போடும் கொப்பியைப் பாருங்கள்" ஒரு ஆசிரியர் எடுத்து விரித்துக் காட்டினார். "சிவத்தக் கோட்டை நேற்று வந்த ஆசிரியர் கீறியுள்ளார். ஆர் அனுமதி கொடுத்தது" வினாக்கள் அதிபரின் ஒரு காதில் நுழைந்து மறுகாதால் சென்றன. அவர் சிரித்தவாறே

"நான்தான் கொடுத்தேன். நானும் வந்த நேரத்தைத் தான் பதிந்துள்ளேன். நேற்றோடு பழையன மறையட்டும். 7.30 தொடக்கம் 1.30 வரை பாடசாலை நடைபெறும். விரும்பிய ஆசிரியர்கள் இருக்கலாம். விருப்பம் இல்லையோ எழுதித் தாங்க. மாற்றம் எடுத்துத் தாறன். இன்றைக்கு நீங்க வந்த நேரத்தக்குறியுங்க. இல்லாட்டி லீவு மனுவைத் தாங்க" அதிபர் இறுக்கமாக இருந்ததை இதுவரை அவர்கள் காணவில்லை.

எல்லோரும் எட்டு மணி என்று கையெழுத்திட்டு வகுப்புக்குள் போகாது கன்ரீனில் புகுந்தார்கள். வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. அதிபர் கன்ரீனுள் சென்றார். உடனடியாக உங்கள் வகுப்புக்களுக்குச் செல்லுங்கள். மிஸ்டர்.சகாப்தீன் எங்கே? தேடினார். ஒரு மாணவனை அழைத்து சகாப்தீன் சேரையும் புதுசா வந்த சேரையும் வரச் சொல்" என்றார். சில ஆசிரியர்கள் தங்கள் பாடங்களை கற்பித்துக் கொண்டார்கள். அதிபர் அலுவலகத்துக்குள் போகுமுன் சகாப்தீனும் நானும் சென்றோம்.

"மிஸ்டர். சகாப்தீன் 'ஸ்ராப் மீற்றிங்' 11.30க்கு ஏற்பாடு செய்யுங்க" அவர் சென்றுவிட்டார். என்னைப் பார்த்து முதலாவது நாளே அதிரடியாக இருந்தது. நான் பெயரளவில்தான் அதிபர். நடத்துபவர் நீங்கதான். இந்தச் சமூகம் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும். அதற்கு உங்கட தலைமைதான் சரி. அதற்காக உதவுங்கள்." அதிபர் உறுதியாகக் கூறினார்.

ஆசிரியர்கள் வந்துவிட்டனர். இன்று நடந்த நிகழ்வையே எல்லோரும் கதைத்தனர். அமைதியாக இருங்கள். உங்கள் கேள்விகளுக்கு ஒரே பதில்தான். பாடசாலையால் நீங்கள் பெற்ற நன்மைகளை எண்ணிப் பாருங்க. எத்தனை பிள்ளைகள் சித்தியடைந்திருக்கிறாங்க. பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காக வருவதைக் கவனிக்கிறீர்களா? நீங்கள் நேரத்துக்குப் பாடசாலைக்கு வருவதே இல்லை. பிள்ளைகள் வீடுபோய் சேருவதை விசாரிக்கிறிங்களா? நான் பேசாதிருந்தால் நீங்கள் உங்கள் விருப்பம்போல் நடப்பீர்களா? நான் எல்லாரையும் குறைகூறவில்லை..

இன்றிலிருந்து பாடசாலை தொடங்குமுன் வரவேண்டும். பாடக்குறிப்பு, திட்டம், இடைவேளை நேரம் முடிந்ததும் வகுப்புக்களில் பிள்ளைகளும், ஆசிரியர்களும் இருக்க வேண்டும். பாடசாலை விட்டபின் பிள்ளைகள் சென்றபின் அலுவலகத்தில் போகும் நேரத்தையும் பதிந்து செல்லவேண்டும். இவற்றை விரும்பாதவர்கள் இடமாற்றத் துக்கான கடிதம் தரலாம். பலருக்கு விரைவில் இடமாற்றம் வரலாம்." அதிபர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஆசிரியர்கள் வாயடைத்து நின்றார்கள். எரிக்கும் கண்களால் அதிபரையும் என்னையும் பார்த்தனர். நேற்று கல்விப்பணிப்பாளரைச் சந்தித்தேன். அவர் பாடசாலை நிலைபற்றிக் கவலையோடு உரையாடினார். தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பல வருடங்களாக தொடர்ந்து சேவையாற்றுவதையும் சுட்டிக்காட்டினார். நான் சொல்லுறதைச் சொல்லிப் போட்டன். நான் ஓய்வில் போகுமுன் பாடசாலையை நிமிர்த்த உதவுங்கள்"

அவர் எழுந்து வெளியில் சென்றார். முத்துலிங்கத்துடன் மாணவரைச் சந்தித்து விளக்கினேன்.

"நாளைக்கு 7.30 க்கு பாடசாலை தொடங்கும். இடைவேளை நேரம் வகுப்பை விட்டுச் செல்பவர்கள் இடைவேளை முடிந்து மணி ஒலித்ததும் வகுப்பில் இருக்க வேண்டும். கால அட்டவணைக்கு ஏற்பப் பாடங்கள் நடைபெறும். பாடசாலை தொடங்கும்போது கீழ்வகுப்பில் இருந்து வரிசைக்கிரமமாக நிற்கவேண்டும். எல்லாம் முடிந்தபின் வந்ததுபோல் வகுப்புக்களுக்குச் செல்ல வேண்டும்.. பாடங்களுக்கு ஆசிரியர் வராவிட்டால் மொனிற்ரர் அலுவலகத்தில் சொல்ல வேண்டும். விழாவில் விளையாட்டுப் போட்டி நடைபெறும். விருப்பமா? கூறிமுடிக்குமுன் பிள்ளைகள் ஆரவாரத்துடன் தங்கள் கைகளைத் தட்டி சந்தோசத்தைத் தெரிவித்தனர்.

பிள்ளைகள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டனர். ஆசிரியர்கள் ஒரு சிலர் முகம் சுழித்து நின்றனர். பாடசாலை மணி ஒலித்தது. பிள்ளைகள் பதுமைகளாக வகுப்பு ரீதியில் வரிசையில் சென்றனர். வீதியில் போக்குவரத்துக் காவலர்கள் கடமையில் நின்றனர். அதிபர் வெளியில் வந்து பார்த்தார். அவர் தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார். உண்மையாகவே இருந்தது. சந்தோசப்பட்டுக் கொண்டார். ஆசிரியர்களும் பிள்ளைகளின் பின் சென்றார்கள். பாடசாலை மாற்றம் பெறத்தயாராகி விட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்கள் வந்தார்கள். மாற்றத்தைக் கண்டு சந்தோசித்தார்கள்..

"பொலிஸ்காரர் நிற்கிறார்கள். பாடசாலையில ஏதும் அசம்பாவிதமோ என்று யோசித்தோம்." என்றார்கள். "உங்களை வரச்சொன்னதற்குக் காரணம், நாங்கள் புதிய திட்டம் போட்டுள்ளோம். அதனை புதிதாக வந்த ஆசிரியர் விளக்குவார்" என்றார்..

"நீங்கள் ஒத்துழைத்தால் நமது பாடசாலை முன்னணியில் திகழும். பாடசாலை முடிந்ததும் வெளியார் நுழைந்து அசிங்கமாக்குவதை தடைசெய்வது உங்கள் கடமை. அதனை இன்றிலிருந்து தொடங்குங்கள். நமது சங்கத்தில் நிதியில்லை. பெற்றோர் உங்கள் சங்கத்தில் இருந்து இந்தப் பாடசாலைக்கு மின்சாரம் பெற உதவவேண்டும். அடுத்து விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது. பரிசுப் பொருட்கள் போன்றன தேவை. நிறைவேற்ற உதவுங்கள். பிள்ளைகளின் கல்வியின் தரத்துக்கு நாங்கள் பொறுப்பு. வீட்டில் உங்கள் கவனிப்பும் தேவை. செய்வீர்களா? திரு. சாத்தையாதானே செயலாளர். அவர் நினைத்தால் சாதிக்கலாம். என்ன சொல்கிறீர்கள். நான் பாடசாலையிலேயே தங்குவேன்." முடித்தேன். அதிபர் அவற்றை ஆதரித்தார்.

"நாளைக்கே இவற்றை தொடங்க வேண்டும்." என்று அதிபர் முடித்தார்.

ஆசிரியர் தமக்குள்ளேயே உரையாடிக் கொண்டு ஒதுங்கி இருந்தனர். திரு. முத்துலிங்கம் வந்தார். "நாங்கள் உங்கள் வீடுகளுக்கு வரவிருக்கிறோம். நமக்குள் நல்ல பிணைப்பும் புரிதலும் இருக்க வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலம் நமது கைகளில் தங்கியுள்ளது. இன்று இத்துடன் முடித்துக் கொள்வோம். அனைவரும் கலைந்து சென்றனர். அதிபர் நாளை சந்திப்பதாகக் கூறி தனது வீடு சென்றுவிட்டார். முத்துலிங்கம் இரண்டு சாப்பாட்டு பார்சல் கொண்டு வந்தார். "சாப்பிடுவோம்" என்றார்.

மோப்பம் பிடித்து மேல் வகுப்பு மாணவர்கள் வந்து விட்டனர். எவ்வளவு ஆர்வத்தோடு செயல்படுகின்றனர். வாழத்துடிக்கும் பிள்ளைகள். வஞ்சகம் செய்யும் சமூகம். அரச அதிகாரிகள். விளையாட்டுப்போட்டி என்றதும் அவர்களின் உற்சாகம் அளவற்றது. கண்டி நுழைவாயிலில் பெரிய விளையாட்டுத் திடல் உள்ளது. உதவி அரசாங்க அதிபரைச் சந்தித்து உரையாட நினைத்தோம். சாத்தையா மின்சார வசதிக்கான உபகரணங்களோடும், அவற்றைப் பொருத்தும் ஆட்களோடும் வந்தார். மாணவர்கள் உதவினார்கள். யாரிடம் எதனை, எப்படிப் பெறவேண்டும் என்பதை அறிந்திருந்தேன். அவர்களிடமே பாடசாலைப் பெயர் மாற்றம் பற்றிக் கேட்டேன். பாடசாலை வரலாறு தெரியாத மக்கள். காலையில் நகரசுத்தித் தொழிலை முடித்தால் மாலை மதுவோடு சந்தோசிப்பார்கள்.

அவர்கள் வாழ்க்கை முறை சந்தோசமானது. பாடசாலை ஒரு மலைத்தொடரின் இறுதியில் இருந்தது. பாடசாலையில் இருந்து பார்த்தால் கண்டியின் ஒருபகுதி சரிந்து படுத்திருப்பதுபோல் அழகூட்டும். மஹியவா இரவில் ஜொலிக்கும். விண்ணில் மிதக்கும் லங்கா என்று அனுமான் கூறியதாகப் பேசுவர். பாடசாலையில் இருந்து படிகளில் இறங்கி இவர்களது வீடுகளுக்குச் செல்லவேண்டும். ஒரு வரிசையில் பல தொடர் வீடுகள். அத்தொடர் வீடுகளுக்குப் பின்னால் அடுத்த வரிசை வீடுகள். இப்படிப் பல தொடர் வீடுகள். மேலிருந்து பார்த்தால் தொடும் தூரத்தில் தெரியும். நடந்தால் இன்னும் கொஞ்ச தூரத்தில் பணிய (கீழே) இருக்கு என்பார்கள்.

முத்துலிங்கத்துடன் சென்றேன். தோட்டத்தொழிலாளர்களின் வரிசைக் கொட்டில்கள் 'லயம்' போல் தெரிந்தன. எங்களைக் கண்டதும் வீட்டுக்காரர்கள் விறைத்து நின்றார்கள். வீட்டு வாசலிலேயே நின்று பதிலளித்தார்கள். முத்துலிங்கம் அறிமுகம் செய்தார். நான் வீட்டினுள் நுழைந்தேன். "ஐயையோ" என்று பதறினர். முத்துலிங்கமும் என்னோடு உள்ளே வந்தார். அங்கே இருந்த இருக்கைகளில் இருந்தோம். "இதுவரை எங்கள் வீடுகளுக்கு யாரும் வந்ததே இல்லை. நீங்கதான் எங்களை பெரிதாக மதித்து வந்து இருக்கிறீர்கள். வாங்க சேர்". எங்களைக் கண்ட பிள்ளைகள் முகம் மலர வரவேற்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களை ஏன் தீண்டத்தகாதவர்கள் என்று கதை கட்டிப் பிரித்து வைத்துள்ளார்கள். அழகாக கோயில் கள்போல் வீடு காட்சியாகியது. பிராமணர் வீடுகள் குப்பை யாக இருக்கும். சிறிய அறைகள்தான்... ஆனால் மாளிகை போல் சுத்தமாக வைத்துள்ளார்கள். "குடிப்பதற்கு ஏதாவது கிடைக்குமா"? கேட்டேன். "இதோ கொண்டு வருகிறேன்." கூறிச்சென்று அருமையான தேநீர் கொண்டுவந்து தந்தார்கள். நான் வாய் வைத்தே குடித்தேன். நமது தலைவர்கள் இவ்வா றான மக்களோடு பழகி உதவி செய்ய முன்வரவேண்டும்.

பாடசாலை பற்றி விளக்கினோம். எங்கள் பிள்ளை களுக்காக எடுக்கும் செயல்களுக்கு ஆதரவு தருவதாக வாக்களித்தார்கள். பல வீடுகளைத் தரிசித்தோம். அவை எல்லாம் வீடுகள் அல்ல. உழைக்கும் தெய்வங்கள் வாழும் கோயில்கள். அவர்கள் செய்யும் தொழில்களால் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளனர். அதனால் அவர்கள் அடிமை களாக வைத்துள்ளனர். நமது கால்களைக் கழுவிக் கொண்டே அவர்களது வீடுகளுக்குள் கால்களை வைக்க மனம் சொல்லும். அவ்வளவு தூய்மையாக வீடுகள் உள்ளன. அதேவேளை நமது கோயில்களுள்ளே எட்டிப் பார்த்தால் அழுக்கடைந்து கிடக்கும். எனக்கு அதிசயமும் ஆச்சரியமும். இவர்களி டையே கல்வியை ஊட்டிவிட்டால் வாழ்க்கையில் மேன்மை யடைவர்.

இப்போது பாடசாலையில் குதூகலம். பிள்ளைகள் நேரத்துக்கே வந்து பாடசாலையின் வகுப்புக்களையும், வெளிச் சுத்தங்களையும் செய்தனர். மாணவர் தலைவர்கள் நெறிப்படுத்தினார்கள். மாணவர்கள் ஒன்று கூடலில் நற்சிந்தனை வழங்கத் தொடங்கினார்கள். ஆசிரியர் சிலர் தடுமாறினர். இரண்டுபேர் இடமாற்றம் வேண்டும் என்று விண்ணப்பித்தார்கள். அதிபரிடம் கொடுத்ததும் பரிந்துரை செய்தார்.

தாஜூதீன் உள்ளே வந்தார். "சேர்! கண்டி உதவி அரசாங்க அதிபர் உங்களைச் சந்திக்க வந்துள்ளார். வெளியில் காத்திருக்கிறார்." கூறினார்.

"அப்படியாவரச்சொல்லுங்க". அவருக்கு வெயர்த்துக் கொட்டியது. அவர் உள்ளே வந்தார்.

"வாங்க சேர்.. என்னை அழைத்தார். சேர் உதவி அரசாங்க அதிபர் வந்திருக்கிறார். அவரோடு நீங்க கதையுங்க" என்றார். நாங்கள் சந்தித்துக் கலந்துரையாட நினைத்தவரே எங்கள் முன்னால். அவரை வரவேற்றேன். ஆங்கிலத்தில் விசாரித்தேன். தனது இரண்டு மகள்களுக்கும் ஆசிரிய நியமனம் கிடைத்துள்ளது. இருவரும் ஆங்கிலம். சிங்களம் கற்பிப்பார்கள். உங்கள் பாடசாலையில் கற்பிக்க விரும்பு கிறார்கள் உங்கள் சம்மதம் இருந்தால். அனுப்பத் தயார் என்றார். பழம்நழுவிப் பாலில்விழுந்த உணர்வினைப் பெற்றேன். அவரிடம் பாடசாலைத் திட்டங்கள் பற்றி விளக்கினேன் வேண்டியபோது வேண்டிய உதவிகளைச் செய்வதாக உறுதியளித்தார். அவரது மகள்மார் உடனேயே வந்தனர். கடமையேற்று வகுப்புக்களுக்குச் சென்றனர். கூடவே அதிபர் சென்று அறிமுகம் செய்தார். அன்றே மூன்று ஆசிரியர் களுக்கு இடமாற்றம் வந்தது. விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம அதிதியாக வரும்படி கேட்டுக் கொண்டேன்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மாணவர்களும் பாடசாலைக்கு வந்து உதவத் தொடங்கினர். பாடசாலை மாணவர்களும் தாங்களும் பலகலைக்கழகம் சென்று படிக்கும் எண்ணங்களை உருவாக்க உதவியது. விளையாட்டுப் போட்டிக்கு நடுவர்களாக அவர்களே நிறைந்து நின்றனர்.

இரட்சணிய சேனைப் பாடசாலை 'கலைமகள் வித்தியாலயம்' ஆகியது. மக்களுக்கு மகிழ்ச்சி. முதலாவது விளையாட்டுப் போட்டி சிறப்பாக ஏற்பாடாகியது. மாணவர்கள் கடும் பயிற்சியில் ஈடுபட்டனர். பெற்றார் வேண்டிய ஒத்துழைப்பினை நல்கினர்.

பிரதம அதிதியாக உதவி அரசாங்க அதிபர் கலந்து கொண்டார். விளையாட்டுப் போட்டியின் தலைவராக அதிபரே இருந்தார். அவருக்கு உரிய மரியாதையைக் கண்டு பிரமிப்பும் சந்தோசமும் கொண்டார். உதவி அரசாங்க அதிபர் விளையாட்டுப் போட்டியின் ஏற்பாட்டினையும் பிள்ளைகளின் பங்குபற்றலையும், ஆற்றலையும் பாராட் டினார். அதிபரின் திறமையையும் போற்றினார். அவரை வெகுவாகப் பாராட்டினார். பெரியதொரு பெருமை பெற்ற உணர்வை அதிபர் பெற்றார். நன்றியுரையையும் நிறைவுரை யையும் அதிபரே நிகழ்த்தினார்.

"இவ்வளவு காலமாக என்னால் பெறமுடியாத நற்பெயரை இந்த விளையாட்டுப் போட்டி ஊடாகப் பெற்றேன். இதற்கு ஆசிரியர்களும் எனது மாணவ மணி களுமே காரணகர்த்தாக்கள். உங்களுக்கே எனது நன்றி. இதிலே எனது பங்களிப்பு மிகக் குறைவு. நமது புதிதாக வந்த ஆசிரியரின் வருகை நமது பாடசாலைக்கு ஒரு வரப் பிரசாதமே. அடுத்த கிழமை நான் ஓய்வுபெறப் போகிறேன். அதிபராக ஓய்வு பெறவே விரும்பினேன். ஆனால் கல்வித் திணைக்களம் அதற்கு முதலில் ஒரு அதிபரை நியமித்தது. அந்த அதிபர் மிகவும் செல்வாக்குள்ளவர். என்னை ஓய்வு பெறுமட்டும் அதிபராகவே செயற்பட உதவினார். இன்று எனக்குக் கிடைத்த புகழுக்கு அவர்தான் காரணம். அவரை மனதார வாழ்த்துகிறேன்". என்றார்.

வழமைபோல் பாடசாலை இயங்கத்தெடங்கியது. எதிர்ப்புக் காட்டிய ஆசிரியர்கள் இப்போது இல்லை. பாடசாலை தொடங்கும் நேரம் மணி ஒலித்தது. பிள்ளைகள் சொன்னதுபோல் ஒன்றுகூடலுக்கு வந்துவிட்டனர். சஹாப்தீன், முத்துலிங்கம் ஒழுங்குகளைக் கவனித்தனர். ஆசிரியர்கள் பிள்ளைகளின் பின்னால் நின்றனர். அதிபர் முன்னால் நின்று பார்த்தார். பாடசாலையை இயக்க நல்ல தொரு அதிபர் வந்துவிட்டார். கலைமகள் வித்தியாலயம் வளர்ச்சியைக் காணும். மேல் வகுப்பு மாணவர் ஒருவரை அழைத்தார். செல்வன் இராமகிருஸ்ணன் வந்தார்.

"எங்கள் அதிபருக்கு முதல் வணக்கம். அதிபராக கடமையேற்காமலேயே அதிபருக்கு மதிப்பளித்து கௌர வித்துக் கொண்டிருக்கும் அதிபர் அவர்களே! மதிப்புக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களே! பாடசாலை சகோதரர்களே! சகோதரிகளே! வணக்கம். கடந்த ஓரிரு மாதங்களில் நமது பாடசாலையின் திருப்புமுனைகளைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாறே நாம் தொடர்ந்தால் மஹியாவ கலைமகள் மகா வித்தியாலயத்தில் இருந்து பல்கலைக்கழகம் சென்று பட்டதாரிகளாக வெளிவருவார்கள். அதற்கு நமது முயற்சி தான் தேவை. நம்மூர் அதிபர் நாளை மறுநாள் ஓய்வுபெற விருக்கிறார். நல்லதொரு பாராட்டினை அவருக்கு அன்றைய தினம் அளிப்போம். நமது அதிபர் சொல்வதுபோல் சதா நமது பாடசாலையைப் பற்றியே சிந்திக்கும் சிரேஷ்ட ஆசிரியர் திரு. ஞானோதயம் போல் நாமும் சிந்தித்துச் செயலாற்றுவோம். அதற்கான ஆயத்தங்களைச் செய்வோம்." வணக்கம் கூறிச் சென்றார்.

அதிபரை அவரது வீட்டிலிருந்து கோலாகலமாக மாணவர்கள் வரிசையாக வர, ஊர்மக்கள் சேர்ந்து மாலை, மரியாதைகளுடன் வாழ்த்திவர பாடசலைக்கு அழைத்து வந்தனர். அதிபர் மகிழ்ந்துபோனார். தனது உரையில் இங்கே வந்திருக்கும் புதிய அதிபர் வாய்மைமிக்கவர். நான் எவ்வாறு ஓய்வு பெறுமட்டும் அதிபராகவே இருந்து ஓய்வு பெறவேண்டும் என்று இருந்தேன். அதற்குள் ஒரு திறமையான அதிபரை கல்வித் திணைக்களம் மூன்று மாதங் களுக்கு முன் அனுப்பியது. நான் செய்வதறியாது கலங்கினேன். அந்த அதிபர் ஓய்வு பெறுமட்டும் நீங்கள்தான் அதிபர். என்னை கல்வித்திணைக்களம் அழைத்துச் சென்றார். கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து உறுதியுரை பெற்றுத் தந்தார். தன்னை இதுவரை காட்டிக் கொள்ளவில்லை. இவ்வளவு கௌரவம் எனக்குக் கிடைக்கும் என்று எண்ணியிருக்கவில்லை. இது பிரமாண்டமான கௌரவம். இதுபோதும் எனக்கு. இப்பாடசாலையின் புதிய அதிபரை நாளை சந்திப்போம். என்று உரையை முடித்தார்.

பாடசாலை நன்றாக இயங்கியது. பழுதடைந்த கட்டிடம் திருத்தப்பட்டது. பாடசாலையை அடிக்கடி காவல்துறையினர் பார்வையிட்டுக் கண்காணித்தனர். அன்று அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அமைச்சராக இருந்தார். அவரை அழைத்து பாடசாலை நிலைமையை விளக்கினோம். கட்டிடம் அமைக்க நிதி ஒதுக்குவதாக வாக்குறுதி தந்தார். சாத்தையா தலைமையில் குழு அமைக்கப் பட்டு அடிக்கடி அமைச்சரைச் சந்திக்க ஏற்பாடகியது. வெளியாரின் நடமாட்டம் பாடசாலையில் இல்லை. கலைமகள் மகாவித்தியாலயம் வாழத்துடிக்கும் மாணவர்கள் எழுச்சிபெறும் கல்விக்கூடம் ஆகிவிட்டது.

* * *

# மாலை விருந்து...!

ஒரு குடிகாரனை சந்தித்த பாதிரியார் அவனை திருத்த எண்ணி அவனிடம் பேசினார்,

"தம்பி! குடிகாரர்களுக்கு சொர்க்கத்தில் இடமில்லை. குடிக்காத உன் குடும்ப உறுப்பினர்கள் எல்லாம் சொர்க்கத்தில் இருக்கும் பொழுது நீ மட்டும் தனியாக நரகத்தில் இருப்பாய்!"

அந்த குடிகாரனுக்கு கண்களில் நீர் கோர்த்தது.

தழுதழுத்த குரலில் பாதிரியாரிடம் கேட்டான், "சாமி! வெறுமனே குடிக்கிற நானே நரகத்துக்குப் போவேன்னா எனக்கு மது விற்ற கடைக்காரன், ஊற்றி கொடுத்தவன், அந்த மது பாட்டில்களுக்கெல்லாம் தண்டனை கிடையாதா?"

குடிகாரன் திருந்தி வருவதில் பாதிரியாருக்கு சந்தோஷம் தொற்றிக் கொண்டது.

உற்சாகமாக பதிலளித்தார், "அந்த மது பாட்டில்கள் உட்பட அவர்களும் உன்னுடன் நரகத்தில் தான் இருப்பார்கள்"

மெதுவாக கண்ணீரை துடைத்துக்கொண்டு குடிகாரன் மீண்டும் கேட்டான்,

"அப்படீன்னா அந்த மதுக் கடைக்கு வெளியே சிக்கன் வறுக்கிறவன், அந்த சிக்கன், அதெல்லாம் ...?"

குடிகாரன் பாதிரியார் வழிக்கு வருவதை உணர்ந்த பாதிரியார் துள்ளி குதித்து பதில் சொன்னார்,

"அந்த சிக்கன் உட்பட வறுக்கிறவனும் அடுப்போடும், எண்ணை சட்டியோடும் நரகத்தில் உன்னுடன் இருப்பார்கள்" இப்பொழுது அந்த குடிகாரன் மிக உற்சாகமாக சொன்னான்,

"அப்போ நரகத்துக்கு நான் போக தயார் சாமி! நீங்க சொன்ன ஆளுங்களும், ஐட்டங்களும் என்னோடு இருக்கும் போது அந்த இடம் நரகமாவா இருக்கும்? தானா சொர்க்கமா மாறிடாது?

எங்கே நான் மட்டும் தனியா இருக்கணு மோன்னு பயந்து அழுதேன். உங்க விளக்கத்தை கேட்ட பிறகு தான் திருப்தியா இருக்கு. இனிமேல் எந்த பயமும் கவலையும் இல்லாம நிம்மதியா குடிச் சுட்டு நரகத்துக்கு போய் சந்தோஷமா இருப்பேன் சாமி!"

நன்றி : முகநூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னலட்சுமி
இராஜதுரை

# நன்றியாய் ஓர் ஏழை நெஞ்சம்





"இந்திரா!" எஜமானியின் அழைப்பு வழமைபோல் கேட்கிறது. மனம் ஒரு கணம் சுருக்கென்று தைத்து மீண்டும் நிதானமடைகிறது. "அம்மா" இந்திராவின் பணிவான பதில் வருகிறது.

அதற்குள் தாறுமாறாக அவளது அன்றைய வழமையான கடமைகள் மனத்திரையில் படபடவென்று விழுந்து மறைகிறது.

காலை 7 மணிக்கு மருதானையில் உள்ள அவளது வீட்டில் இருந்து பால் எடுத்து கொட்டாஞ்சேனையில் அம்மாவின் வீட்டுக்குக் கொண்டு வந்ததுவரை முடிகிறது.

கோபக்காரராகப் படுக்கையில் இருக்கும் எஜமானுக்காகத் தயாரிக்கப்பட்ட ஓட்ஸ் கஞ்சி சூப் தயாரிப்பு, சீனி போடாத பால்தேனீர் குடிப்பதற்கும் மற்றும் குளிப்பதற்கு மான வெந்நீர் தயாரிப்பு, எசமானி உட்பட ஒவ்வொரு நாளும் காலையில்வந்து கோபக்காரரான கணவரை சுத்தம் செய்யவும் குளிக்கவும் பின் மருந்துகள் உட்கொள்ளவும் உதவி செய்து செல்லும் வேலு, சில வேளைகளில் கார்ச்சாரதியாக வந்து உதவும் டிரைவர் ஜெயக்குமார் என எல்லோருக்குமான காலை, மதிய உணவுத் தயாரிப்புகள் ,எசமானருக்கு வேறான உணவகத் தயாரிப்பு, எல்லாம் ஒழுங்காக நடந்தேறி சாப்பாடு பரிமாறல்களும் நடந்தேறிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறிதுநேரம் அந்த பங்களாவின் பின் புறத்தில் அமைந்துள்ள சிறு பூந்தோட்டப் பக்கத்தில் கிடந்த தூண் போன்ற ஒரு நீளமான கல்லில் அமர்ந்து பூக்களையும் செடிகளையும் பார்த்து ஓய்வெடுத்துக் கொண்டு இருந்த போது எசமானி அழைத்தார்.

கம்பனி ஒன்றில் 'செக்குரிட்டி' யாக வேலை பார்க்கும் அவளது கணவன் இராமநாதன், இரண்டு பெண்கள் ஒரு ஆணுமாக மூன்று சிறு பிள்ளைகள், வயதான தாய் எனத் தனது குடும்பத்தவர்களுடைய நினைப்பையும் 'பட்' டென்று நிறுத்திவிட்டு இந்திரா துரிதமாக ஹோலுக்குள் நுழைந்தாள். ஹோலில் சோபா ஒன்றில் உட்காந்து காலை நீட்டிக்கொண்டு, ஏதோ ஒருவிதமான யோசனையுடன் காணப்பட்டாள் எஜமானியம்மா.

இந்திராவின் தாயின் வயசுதான் இருக்கும். அதாவது எழுபதுக்குமேல் ஆகியும் எஜமானியம்மா அழகுதான். நிறம் கொஞ்சம் கறுப்புத்தான் என்றாலும், நல்ல முகவெட்டு எடுப்பான மூக்கு, அழகான பல்வரிசை, வாலிப்பான உடற் கட்டு, செல்வ லட்சுமியின் கடைக்கண் பார்வை பிறகென்ன?

அம்மாவுக்கும் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணு மாக மூன்று பிள்ளைகள்தான். மூவரும் படித்தவர்கள் மூவருக்கும் திருமணம் நடந்து குடியும் குடித்தனமாகவும் வெவ்வேறு இடங்களில் வாழ்கிறார்கள். ஒரு மகன் எங்கோ வெளிநாடு சென்றுவிட்டதாக கேள்வி. அவனை இந்திரா நேரில் காணும் வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை. மற்ற மகனும், மகளும் தாய்தந்தையைப் பார்க்க வீட்டுக்கு வந்து போனதை அவள் பார்த்திருக்கிறாள். பெரிய இடத்து ஆட்கள் வெகு நாகரீகமாகவே தோன்றுவார்கள். இங்கிலீசில் தான் பெரும்பாலும் பேசுவது கேட்கும்.

கடந்த கொஞ்சக் காலமாக எஜமானி அம்மாவின் முகம் களையிழந்ததுபோலத்தான் இந்திராவுக்குத் தோன்றியது. சாப்பிடுவதும் குறைவு. 'என்னம்மா?' ஏதும் சுகமில்லையா? ஏன்? எதுக்கு? என்று கேட்டுவிட முடியுமா? எஜமானியாச்சே!

தன் கணவர் மீது அம்மா மிகுந்த அன்பு கொண்டவர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இந்திரா பணிப்பெண் வேலைக்கென அங்கு வந்த காலத்தில் இருந்து எஜமான் நல்லாய்த்தான் இருந்தார். அவர் நிறைந்த கடவுள் பக்தி கொண்டவர் என்பதைப் பார்த்தாலே புரியும். நெற்றியில் விபூதியும் சந்தணப் பொட்டுமாகக் காணப்படுவார். அவர் பக்கத்து முருகன் கோவில் தர்மகர்த்தா என்றும் கேள்விப்பட்டிருந்தாள்.

கடந்த ஆறு அல்லது ஏழு மாதகாலமாகத்தான் படுக்கையில் கிடக்கிறார். வயசும் எண்பதுக்கும் மேல் இருக்கலாம். என்னதான் உடம்பைப் பக்குவமாகக் கவனித்துக் கொண்டாலும், நோய் யாரை விட்டது?

ஒரு கணம் இந்திராவுக்குத் தன் தாயின் நினைவு வந்து தட்டிப்போனது 'பாவம் என் அம்மா ஏழை மனிசி' காலங்காலமாக உடல் உபாதைகளையும் மனவேதனைகளை யும் தாங்கிக் கொண்டு எதோ நடமாடிக் கொண்டிருக்கிறா! 'மருந்து மாயமா விட்டமின் குளிசைகள்!' முனிசிப்பல் கிளினிக்கில காலையில் இருந்து மதியம்வரை காத்திருந்து டாக்டரிடம் காட்டி வாங்கி வருகிற மருந்துத் தண்ணியும் ஐந்தாறு குளிசைகளுந்தானே!

"அம்மா... கூப்பிட்டீங்க.... என்ன வேணும்? ரீ... அல்லது ஐஸ் கோப்பி... கூல் டிரிங்ஸ்...ஏதாவது..."

"ஒண்ணும் வேணாம்! நீ இப்படிக் கொஞ்சம் இரு!... உன்னோட கொஞ்சம் பேசணும்..!

"என்னோடயா ?... என்னம்மா. நான் பிழை ஏதும் செய்திட்டேனா?... தெரியாமல் ஏதும் செஞ்சிருந்தா என்னை மன்னிச்சிடுங்கம்மா... நான் பிள்ளைகுட்டிக்காரி..."

"ஒண்ணுமில்லே! உட்கார்!"

"இதோ... இங்கேயே நான் உட்கார்ந்திருக்கிறேன்." என்ற இந்திரா, பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்ட தரையில் எஜமானிக்கு முன்னால் சற்றுத்தள்ளிப் பட்டென்று உட்கார்ந்து கொண்டாள்.

எஜமானி மேலே பார்த்து, ஏதோ ஆழமாக யோசிப் பவள் போல் இருந்தவள் பிறகு இந்திராவை நோக்கினாள்.

"இந்திரா"

"அம்மா"

"என் மனசில இருக்கிற சில விஷயங்களை உன்னோட பேசலாம் என்று எனக்குத் தோணுது. வேறு யாருடனும் பேச விருப்பம் இல்ல. இந்தக்காலத்தில் யாரையும் நம்பி விடவும் முடியாது...."

"அம்மா!" இந்திரா மிரண்டாள்.

"நான் உங்க வேலைக்காரி. வயசும் குறைஞ்சவள். சொந்த விசயங்களை என்னோட பேசுறதா? வேணாம்மா... என்னை நீங்க மன்னிக்கவும்!"

இந்திரா மனப்பூர்வமாகவே சொன்னாள்.

"உன்னோட நல்ல குணம் எனக்கு விளங்கும் இந்திரா மூன்று வருசமாய் எங்களுக்கு விசுவாசமாய் உழைக்கிறாய். நீ எங்க வீட்டு விசயங்களை இப்போதுமாதிரி எங்கேயும் ஒரு போதும் சொல்லாமல் இருந்தால் அதுபோதும். நீ சாப்பிட்டாச்சா?... ஐயாவைப் பாத்தியா?"

"சாப்பிட்டாச்சம்மா ஐயாவை எட்டிப்பார்த்தேன். தூங்குகிறார்..."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி... என் மனசில் உள்ளதைச் சொல்லுறேன் கேள்" எஜமானி பேச ஆரம்பித்தாள்.

"கண்டி தான் எங்க சொந்த ஊர். எங்க குடும்பம் பெரிய வசதியான குடும்பம் என்றில்லை. சுமாரான வருவாயுள்ள குடும்பம்தான். எங்க வீடும் சொந்தந்தான். எனது அப்பா ஒரு பெரிய கடையிலே கணக்குப்பிள்ளையாக வேலை பார்த்தார். எங்க அம்மா நன்கு தையல் தெரிந்தவ. அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு உடுப்புகள் தைத்துக் கொடுத்து ஓரளவு பணம்சம்பாதிப்பவராக இருந்தா. நாங்கள் மூன்று பிள்ளைகள் இரண்டு பெண்கள் ஒரு ஆண் பிள்ளை. எங்கள் மூவரையும் எங்கள் பெற்றோர் படிக்க வைத்தார்கள் நான் ஒன்பதாம் வகுப்புவரை படித்தேன். நாங்கள் வளர்ந்து வயதுக்கு வந்ததும் எங்கள் பெற்றோர் எனது அக்காமாருக்கு திருமணம் செய்து வைத்தார்கள். அதனையடுத்து அப்பா எனக்கு வரன் தேடினார்.

கண்டியில் எங்கள் அப்பாவின் கடைக்குப்பக்கத்தில் உள்ள தேயிலை விற்பனைக்கம்பனி ஒன்றில் ஒரு சேல்ஸ் மனாக வேலை பார்த்தவர்தான் சங்கரலிங்கம் எனப்படும் என் கணவர். அவர் என்னை விரும்பியது மட்டுமன்று தனது கம்பனி மனேஜர் மூலம் என் அப்பாவிடம் திருமணப் பேசச் சொல்லியிருக்கிறார். சங்கர் ஒரு நல்ல இளைஞர். நேர்மையான சுறுசுறுப்பான உழைப்பாளி எனவும் பேர் பெற்றிருந்தார். அது எங்கள் அப்பாவுக்கு தெரிந்திருந்தது. சங்கரின் குடும்பம் தமிழ் நாட்டைச் சேர்ந்தது. பெற்றோர் சிறிது காலம் கண்டியில் வாழ்ந்துவிட்டு மீண்டும் தமிழ் நாட்டுக்குச் சென்றுவிட்டனர். அப்பாவும் இணக்கம் தெரிவிக்கவே எங்கள் திருமணம் நடந்தேறியது. என் கணவர் என்னை மிகவும் அன்பாக நடத்தினார். என் விருப்பங் களையும் அறிந்து செயற்படும் ஒருவராகவும் இருந்தமை நான் செய்த பாக்கியம். நானும் அவர் முகம் கோணாதபடி நடந்து அவரது தொழில் முயற்சிக்கு ஆதரவாக இருந்தேன். எங்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். இருவர் ஆண்கள் கடைசிப்பிள்ளை பெண் மிகவும் எளிமையாகத்தான் எங்கள் குடும்ப வாழ்க்கையும் ஆரம்பித்தது. தேயிலை வர்த்தகம் செய்து வந்த சங்கர், தமது தொழிலை மேலும் விஸ்தரித்து நடத்த ஆர்வம் கொண்டு கொழும்புக்கு இடம் பெயர்ந்தார். எனவே எங்கள் குடும்பம் கொழும்புக்கு இடம் பெயர்ந்தது. மட்டக்குளிப் பகுதியில் ஒரு சிறிய வீட்டினை வாடகைக்கு எடுத்து எங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தோம். சிறுவர்களான எங்கள் பிள்ளைகளையும் மிகவும் சிரமப்பட்டுத் தான் பாடசாலைக்குக் கூட்டிச் சென்று படிக்கவைத்தோம். என் கணவர் தனது வியாபாரமே இலக்காக இரவு பகலாகப் பாடுபட்டார். காலம் சிறிது கடந்து போனது என்றாலும் அவரது உழைப்பு வீண்போகவில்லை. இதனால் அவரது தொழிலில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டது. அவர் வேறு சில உதவியாளர்களையும் தன்னோடு சேர்த்துக் கொண்டார். வருமானமும் கையில் வர ஆரம்பித்த தொழில் வசதிக்காவும் பிள்ளைகளின் மேற்படிப்புகளுக்காகவும் கொட்டாஞ்சேனையில் ஒரு வீடு விற்பனைக்கு வந்தபோது அதனை வாங்கி அங்கே குடி புகுந்தோம். அங்கு சில காலம் வாழ்ந்திருந்த நிலையில் அங்கு வேறு ஒரு பெரிய வீட்டினை வாங்கிக் குடிபுகுந்தோம். அதுதான் இந்த வீடு. கடும் உழைப் பாளியான சங்கர் கடவுள் பக்தியும் நிரம்பியவர். தினமும் அதிகாலை நித்திரை விட்டெழுந்து குளித்துக் கோவிலுக்குப் போய் கும்பிட்டு விட்டு வரத் தவறமாட்டார். பின்னர் அந்த முருகன் கோவில் தர்மகர்த்தாவாகவும் விளங்கினார்.

மகன் மட்டும் மேல்படிப்பில் தேறினான். மகளும் பத்தாம் வகுப்புவரை படித்தாள். பின்னர் அவர்கள் காதலித்த நட்புகளை பிள்ளைகளின் சந்தோசம்தான் எங்களுடைய சந்தோசமும் என்று தகப்பனார் திருமணமும் செய்து கொடுத்தார். அவர்கள் கொழும்பில் வேறு வேறு இடங்க ளில் இருந்து சொந்த தொழில் செய்து வாழ்ந்தார்கள். முக்கிய தினங்கள், பெருநாட்கள் என்று தாம் விரும்பும்போது வந்து போவார்கள். பிள்ளைகளின் நல்வாழ்வில் எங்களுக்கும் எல்லாப் பெற்றோரையும் போலத்திருப்திதான். சந்தோசந்தான்.

எங்கள் முருகன் ஆலயத்திற்கு திருவிழா நாட்களில் சில சந்தர்ப்பங்களில் பக்தர்களுக்கு உரையாற்றவென்று தமிழ்நாட்டில் இருந்து அழைக்கப்படும் பேச்சாளர்களை வீட்டுக்கு அழைத்து வந்து விருந்துபசாரம் செய்து மகிழ் விப்பது, கோவில் திருவிழா நாட்கள் மற்றும் விசேட திருநாட்களில் கணவருடன் சுவாமி தரிசனம் செய்யச் செல்லுவது எங்கள் பகுதி பெண்கள் முன்னேற்றச்சங்கத்தில் நானும் முக்கிய பங்குவகிப்பதால் சங்கத்தின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு ஆதரவு வழங்குவது என்று என் பொழுது தெய்வ அருளில் நன்றாகவே கழிந்தது.

காலம் எங்களுக்காகக் காத்திருக்குமா? முன்னர் இனக்கலவரம் ஏற்பட்டு பெரும் கஷ்டங்களை ஏற்படுத் தியது. பிறகு இனப்போர் வந்து நீடித்து சனங்கள் பெரும் துன்பங்களுக்கு ஆளானதும், அங்கும் இங்குமாக சனங்கள் இடம்பெயர்ந்து ஓடியதும், ஏராளமானோர் வெளிநாடுக ளுக்கு ஓடினதும் தெரியுந்தானே! போதும் போதாதற்கு நோய்த்தொற்று அதுக்கு என்ன பெயர்? கொரோனா வந்து, தொழில் எல்லாம் குறைந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு வந்து பெரும் கஷ்டங்களை கொடுத்தது. இத்தனைக்கு மத்தியிலும் என் கணவர் தன் தொழிலைத் தன்னால் முடிந்த வரை பாதுகாத்து செய்துதான் வந்தார். ஆனாலும் வருமானம் பெரிதும் பாதித்தது என்றும் சொன்னார்.

காலங்கள் ஓடி மறைய ஐயாவும் பலவீனமுற்றவ ரானார். மெல்ல மெல்ல ஆரம்பித்த வயிற்று வருத்தம் அவரை ஆட்டிப்படைக்க ஆரம்பித்தது. ஆஸ்பத்திரிக்கும் டாக்டர்களுக்கும் மருந்துக்கும் என நாங்கள் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. சுகவீனமும் கஷ்டங்களும் எல்லேருக்கும் வருவதுதான் அதற்கு இவரும் விதிவிலக்கில்லை. அத்தோட நெடுகவும் இந்நிலமை இருக்கப்போகிறதா? வயோதிபமும் தன் கைவரிசையைக் காட்டுகிறது. தானாக எழும்பி இருக்க முடியாதவராக இருக்கிறார்.

ஏதோ அவர் கஷ்டப்பட்டு தேடிய பொருள் இருப் பதால் நல்ல வைத்தியரைப் பார்க்கமுடிகிறது. கூடுதலான பணமும் கொடுத்து வேலு போல ஒரு வேலையாளையும் வைத்து அவரை தூக்கிப் பறித்து கழுவித்துடைத்து பார்க்க வும் முடிந்திருக்கிறது. பணத்துக்கு மேலாக வேலுவின் உதவி பெரிய உதவிதான் உண்மை. அதை மறுக்க ஏலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் வருவார்கள், போவார்கள். அவர்களை நான் ஒருபோதும் சிரமப்படுத்தவில்லை. இப்படி இருக்கும்போது தான், ஒருநாள் வேலு வந்து "அம்மா! நீங்கள் எனக்கு கூடுதல் சம்பளம் தாறீங்க என்பது உண்மைதான். நானும் ஐயாவை மிக அக்கறையாகக் கவனித்துக் கொண்டதும் உண்மைதான். ஆனால்இப்போது எனக்கு உடம்புக்கு கொஞ்சம் ஏலாமல் இருக்குது. ஒரு பத்து நாள் என்றாலும் எனக்கு லீவு தாங்க, ஒருக்கால் எங்க ஊருக்குப்போய் வைத்தியரிடமும் காட்டி ஓய்வு எடுத்துவிட்டு வருகிறேன்!" என்று கூறிய போது உண்மையில் நான் குழம்பித்தான் போனேன்!

போதும் போதாதற்கு மறுநாள் நீயும் பிள்ளைகளுக்குச் சுகமில்லையம்மா! அவனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய்க் காட்டனும். ஒருவாரம் லீவு தாங்கம்மா..! என்று கேட்டதும் எனக்கு மேலும் பதட்டமாய்ப் போச்சு. பாவம் அவர். அவரை நல்லபடியாய் கவனித்துக் கொள்ள வேண்டுமே. இப்போது யார் வந்து உதவப் போகிறார்கள் என்று யோசித்தேன்.

பிள்ளைகளிடம் போனால் அவர்கள் வேண்டிய உதவிகளைச் செய்வார்கள் தானே என எண்ணினேன்.

கார் டிரைவரின் உதவியுடன் வருத்தக்காரரான கணவரை காரில் ஏற்றி நேரே தெகிவளையில் மகளுடைய வீட்டுக்குக் கூட்டிச் சென்றேன். ஒரே மகள் அப்பாவிடம் அவள் நல்ல பாசம். பேரப்பிள்ளைகளும் தாத்தா! தாத்தா! என்று அன்பைக் காட்டுவார்கள். அவளுக்குத்தான் இந்த வீடுவாசலை எழுதவேண்டும் என்று தகப்பன் விரும்பியிருந்தார்.

பிறகு ஐயோ கடவுளே! நான் என்னத்தைச் சொல்ல?

ஒரே ஒரு நாள்தான்! மகள் அப்படியும் இப்படியும் ஓடி ஏதோ சாப்பாடு செய்து கொடுத்தார். பேரப்பிள்ளைகள் எவரும் அந்தப் பக்கம் கண்ணில்படவில்லை. நானும் ஏதோ சமாளித்துக் கொண்டிருந்தேன்.

மறு நாட்காலை மருமகன் முகம் சுழித்தவாறு காணப்பட்டார்.

"இடமும் போதாது, சிறு பிள்ளைகள் ஓடித்திரியிற இடம். வருத்தக்காரரை வைச்சுக் கொண்டு இருக்கிறது கஷ்டம். மகன் வீட்டில் விடலாம் இல்லாட்டி நல்ல 'ஸ்ரான்டட் ஹோம்' எல்லாம் இப்ப இருக்கு! விடலாம்...." என்றார். மகள் ஏதும் பேசாமல் நின்றாள்!

நான்இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை! திகைத்துப் போனேன். கணவரிடம் ஏதும் பேசமுடியாது அவருக்குத் தான் ஞாபக சக்தி ஏதும் இல்லையே.

ஓ! மகனிடம்தான் நான் போயிருக்க வேண்டும். இங்கே நேராக வந்தது தவறுதான் என எண்ணினேன்.

"பரவாயில்லை யோசிக்கவேண்டும்!" நான் மகன் அரவிந்குமார் வீட்டுக்கு மாமாவைக் கூட்டிப்போகிறேன். ஒன்றும் பிரச்சினை இல்லை!" என்று பதில் கூறிய நான், அன்று மாலையே ஐயாவை அரவிந்த் குடும்பம் வாழ்ந்த வெள்ளைவத்தை வீட்டுக்கு காரில் அழைத்துப் போனேன். அங்கேயும் இரண்டு நாள்தான் மகன் வீட்டாருடன் ஐயாவை வைத்திருக்க முடிந்தது. மருமகளும் வரவேற்பதாக இல்லை. மகனோ 'பிஸ்னஸ், பிஸ்னஸ்' என்று காலையில் போனால் நடுச்சாமத்தில்தான் வீட்டுக்கு வருபவனாக இருந்தான்.

மூன்றாம் நாள் அவனாகவே "அம்மா உங்களுக்கும் வேலைக்காரர் இல்லாமல் அப்பாவை வைச்சுப் பார்க்கிறது கஷ்டம் ஹோமில விடலாம் தானே அம்மா. காசைக் கொடுத்தால் நல்ல சுப்பர் ஆகப் பாப்பாங்க! என்றவன். வீடுவாசல், சொத்துக்களை எங்களுக்கு எழுதித்தாற வேலையைப் பாருங்கம்மா! பிறகு கஷ்டமாய் போகும்..." என்று இழுத்து அவனும் என் மனநிலையைக் குழப்பினான். இவ்வேளை வெளிநாட்டில் இருந்த மற்றமகன், வீட்டினைத் தனக்கு எழுதித்தரும்படி டெலிபோனில் பேசும் போதெல்லாம் வற்புறுத்திச் சொல்லிக் கொண்டிருந்தான். தனக்கு அங்கு மிகவும் கஷ்டமாம். ஒழுங்கா ஒரு வீடு கூட வாங்க முடியலையாம். இந்த வீட்டினைத் தன் பெயருக்கு எழுதினால் தான் வேண்டியதைச் செய்து கொள்ளலாமாம் என்று சொல்லிக் கொண்டிருந்தான். அப்பாவின் இறுதிக்காலம் பற்றி இந்தப்பிள்ளைகள் அதிக அக்கறை காட்டாமல் தங்களுடைய சொந்தப் பிரச்சனை பற்றியே திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தது எனக்குப் பெரும் வேதனையாக இருந்தது. "நான் இருக்கும்வரை அவரை நான்தான் கவனிப்பேன் என்னாலே அப்படிச் செய்ய முடியாது எல்லாம் கடவுள் சித்தம்! எல்லாம் முருகப்பெருமான் பார்த்துக் கொள்வார். நான் அப்பாவை வீட்டுக்குக் கூட்டிப்போகிறேன்" என்று சொல்லி வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டேன். எல்லாம் அந்தப்பெருமான் கருணை என்றுதான் சொல்ல வேணும்... நான் அவரை வீட்டுக்குக் கொண்டு வந்தவுடன், அன்றைக்கே வேலுவை அழைத்தேன் மறுநாளே அவர் வந்துவிட்டார். நீயும் என் அழைப்பை ஏற்று வந்துவிட்டாய்! எனக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

அதேநேரம் நாங்கள் பெத்து வளர்த்து, பாசமாய், நேசமாய் ஆளாக்கிப் படிப்பித்து சமூகத்தில் வசதியான ஆட்களாக உயர்த்தி வைத்த பிள்ளைகள் ஒரு மிகச்சாதாரண ஏழை மனிதர்களைப்போல கூட இல்லாமல் நடந்து கொண்டுவிட்டார்களே என்று நினைக்க நினைக்க மனம் எவ்வாறு குமைந்து மாளுகிறது தெரியுமா? சே! அவர் பிள்ளைகள் மீது எவ்வளவு பந்தம் பாசமும் கொண்டு பாடுபட்டார். இந்தப் பிள்ளைகள் அந்தத் தகப்பன் பாசத்தை உணராமல் தள்ளிவிடுவதற்குக் காரணம், கலிகாலம் என்கிற இந்தக் காலத்தின் கொடுமையா? பெற்றவரையும் விட பொருள், வசதிவாய்ப்பு, ஆடம்பரம், நாகரீகம், எல்லாம் உசத்தியா? அப்படி நாங்கள் வளர்த்ததேயில்லையே! மனிசரை மனிசராய் மதிக்கவேனும் என்றுதானே சொல்லிக் கொடுத்தோம். சே! என் மனசு தாங்குதில்லை. அவர் நல்லவேளை ஒன்றும் உணரமுடியாத கல்லு மனிதராக இப்போது இருப்பதும் தெய்வசித்தம் தானே இல்லாவிட்டால் தன் பிள்ளைகளின் புறம்போக்கு மனப்பாங்கைப் பார்த்து எவ்வளவு வேதனைப்பட்டுப் புலம்புவார். அன்பான அப்பாவை இவர்கள் நேரடியாகப் பார்த்து தங்களுக்குரிய கடமைகளை செய்ய முன்வராமல் தட்டிக்கழிப்பது தர்மமாகுமா? ஒரு நேர சாப்பாட்டுக்குப் பாடுபடுகிற ஏழைகூட தான் பெற்று வளர்த்த தந்தையை கவனிக்காமல் விடமாட்டார்கள்.

இப்போது வயதான பெற்றோரை வயோதிபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லங்களில் சேர்ப்பது ஒரு வழக்கமாகி வருகிறதாக சொல்கிறார்கள். அது அவரவர் வசதி. அதுக்கு நாங்கள் ஒன்றும் சொல்ல ஏலாது.

ஆனால் எங்களுக்கு என்ன பிரச்சனை? விதி... வீடு... வீடாம்! யாருடைய வீடு...சே! நினைக்க நினைக்க வெட்கமாகவும், வேதனையாகவும் இருக்கிறது. சிலவேளை மனப்பாரம் தாங்காமல், பேசாமல், ஏதாவது குடிக்குக்கிடிச்சு செத்துப்போனாலும் பரவயில்லைப் போல் தோன்றுகிறது. பாவம் அவர்! அந்த அன்பான சீவனை கடைசிவரை நல்ல முறையில் ஆதரவாக கவனிக்க வேண்டும் இது தான் என்னுடைய விருப்பம். ஆருக்காவது என் மனசில் உள்ளதை சொல்லி ஆற வேண்டும் போல இருந்தது. அதுதான் உனக்குச் சொன்னேன். யாரையும் நம்பி எல்லாவற்றையும் சொல்லிவிடவும்முடியாது. நீ யாருக்கும் சொல்லி விடாதே! ஏதோ ஆண்டவன் சித்தம் நடக்கிறது நல்லமாதிரி நடக்கட்டும்." இவ்வளவு நேரமும் தனது எஜமானி கூறியதைப் பணிவாகக் கேட்டுக்கொண்டு இருந்த இந்திரா சட்டென்று எழுந்ததுடன் அவள் இரு கரங்களை சேர்த்துக் கும்பிட்ட வாறு பேசினாள்.

"அம்மா நீங்க எனக்கு தாய்க்குச் சமமானவங்க...! உங்களுக்கு முன்னால என்னால அதிகமாக பேச முடியாது. நீங்க எவ்வளவு பெரிய ஆள். உங்கள் மதிப்பு மரியாதை எவ்வளவு. உங்களுக்கு முன்னால இந்த வேலைக்காரி ஒரு ஈ, கொசு மாதிரி. ஒன்றுமே இல்லாதவள் என்ற போதும் என்னை ஒரு மனிசியாக கருதி, என் முன்னாலே உங்க குடும்பவிசயங்களைப் பேசுற அளவுக்கு நீங்க இந்த ஏழைமீது எவ்வளவு நம்பிக்கை வைச்சிருக்கிறியள் இதை நான் என் சீவியத்தில் மறக்கமாட்டேன்.

உங்க பிள்ளைகள் விசயத்தில் பேச எனக்கு எந்த தகுதியோ அறிவோ இல்லை என்பது அம்மாவுக்குத் தெரியும் தானே. அவங்க படிச்சவங்க பெரியாட்கள்! அவங்க தங்க வசதிக்கு ஏற்ப கருத்து வைச்சிருப்பாங்கதானே அம்மா! அதையெல்லாம் யோசித்து நீங்க ஒரு நல்ல தீர்மானத்தை எடுக்கலாம்தானே! நீங்க ஒண்ணுக்கும் யோசிக்காதேங்கோ அம்மா! கடுமையான முடிவு ஏதும் தயவுசெய்து எடுத்திடா தீங்க! எல்லாம் ஆண்டவன் சித்தமாய் நல்லபடி நடக்கும். எங்க ஐயா எவ்வளவு பெரிய ஆள்! இன்றைக்கு இயலாமல் கிடக்கிறார். கூடுதல் பணத்தைக் கொடுத்து ஒரு நல்ல உதவியாளனைப் பிடிக்கலாம்தானே அம்மா! வேலுவும் இருப்பாங்க. என்னத்தைப் பேசினாலும் உங்க பிள்ளைங்க அப்படியேவிட்டு விடவா போறாங்க! இந்த வேலைக்காரியும் தொடர்ந்து உங்க வீட்டிலே உழைப்பாங்கம்மா." எஜமானி இந்திராவை உற்றுப் பார்த்தாள்.

"சரி நீ போ! வேலையைப் போய் பார்! யாரிடமும் இதுபற்றி ஒரு போதும் பேசக் கூடாது!"

"இல்லை! நீங்க அமைதியாய் இருங்கம்மா!" இந்திரா அவ்விடத்தை விட்டு அகன்றாள். சில நாட்கள் வழமைபோல் கழிந்தன. எஜமானி யம்மா உற்சாகத்தோடு இருந்தா என்று கூறுவதற்கில்லை. அம்மாவின் மேற்பார்வையிலும் உதவியி லும் வேலு ஐயாவின் தேவைகளையும் கருமங்களையும் கவனித்தார். ஒரு நாள் டாக்டர் வந்து ஐயாவைப் பார்த்துப் போனார்.

அன்று திங்கட்கிழமை காலை வழமைபோல் இந்திரா தன் பணிக்காக எஜமானி வீட்டுக்குள் நுழைந்தபோது வீடு வழமையைவிட 'பளிச்' சென்று தோன்றியது போல்இருந்தது. வீட்டின் முன்புறத்தில் இருந்த பூச்செடிகளில் பூத்திருந்த ரோஜா, செவ்வரத்தை, நந்தியாவட்டை, மல்லிகை யாவும் பூத்துக் கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காட்சி தந்தன.

இந்திரா குசினிக்குள் தன் பணிகள் பொருட்டு நுழைந்தாள். ஐயாவின் அறைப்பக்கம் இருந்து யாரோ கதைத்துக் கொண்டிருப்பது கேட்டது.

"இந்திரா"

"அம்மா"

"இங்க வா!" அம்மா ஹோலுக்கு அழைத்தாள். 'என்ன காலையில் கூப்பிடுறங்க! என்னவோ, ஏதோ என்று நினைத்தவாறு இந்திரா ஹோலுக்குள் மெல்ல நுழைந்தாள். எஜமானி சோபாவில் சாவகாசமாக உட்கார்ந்திருந்தாள். இந்திராவைப்பார்த்ததும் "இந்திரா!" நான்இன்றைக்கு ரொம்ப சந்தோஷமாய் இருக்கிறேன் தெரியுமா? என்று சிரித்தாள்.

"ஆமா! நான் இவ்வளவு நாளும் வேலுவைப் போல ஒரு நல்ல உதவியாளனைத் தேடினேன் அல்லவா? அவன் கிடைத்துவிட்டான்...! அவன் ஆர் தெரியுமா? அவன் முன்னர் எங்க வீட்டில் எடுபிடியாக ஐயாவுக்கும் எனக்கும் உதவியாக இருந்த பையன்தான்! ஐயாமீது ரொம்ப பக்தி அவனுக்கு அவர் கீறிய கோட்டைத் தாண்டமாட்டான். ஐயாவும் எந்த நேரமும் 'செல்வா, செல்வா' என்று அவனைக் கூப்பிட்டு வேலைகள் கொடுப்பது மட்டுமல்லாமல் தமாஷ் கதைகள் சொல்லி அவனைச் சிரிக்கவும் வைப்பார். நல்ல அன்பான பையன். பிள்ளைகளோடேயும் அன்பாயும் மரியாதையாயும் நடப்பான்.

பிறகு அவன் எங்களை விட்டுப் பிரிந்து போக வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. இப்போது, முப்பத்தி மூன்று வருஷங்களுக்குப் பிறகு ஐயாவைத் தேடிக் கொண்டு வந்துவிட்டான். அவர் பேசாமல் கட்டைபோல் படுத்திருப்பதைப் பார்த்துக் கண்ணீர் விட்டான். அவனது அழுகையை என்னால் கூட சகிக்க முடியவில்லைப் பாரேன்! நான்தான் ஒருவாறு அவனைச் சமாதானம் செய்தேன். "அம்மா! அந்தநேரம் அனாதையாய்த் திரிந்த எனக்கு ஐயாதான் ஆதரித்த தெய்வம். வழிகாட்டிய கடவுள். நீங்களுந்தான் எனக்கு அன்பு காட்டினீங்க. அவரை இந்த நிலையில் பார்ப்பேன் என்று நான் கனவிலும் எண்ணியிருக் கேல்லை. இனி என்ர தெய்வத்தைக் கவனிப்பது தான் என் ஒரே வேலை. நீங்க ஒண்ணுக்கும் யோசிக்க வேணாம்! இது என்ர கடமையம்மா!" என்றுகூறி இருந்துவிட்டான். நன்றி மறவாத பிள்ளை. நாங்க அவனுக்கு என்னத்தைக் கொடுத்தோம்? ஒரு பிடி சோறு தவிர! இனி அவன் ஐயாவை நல்ல மாதிரிப் பார்த்துக்கொள்ளுவான். வேலுவுக்கும் உதவுவான். எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. மூச்சில் பேசி முடித்த எசமானி, செல்வா! செல்வா! என்று அவனைக் கூப்பிட்டு, இந்திராவுக்கும் அறிமுகம் செய்து வைத்தாள்.

எசமானியம்மாவின் சந்தோசத்தைக் கண்டு முறுவலித்தாள்.


* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறுவிதத்தில் ஒரு பாடம்...!

ஷெல்லிதாசன்





"என்னப்பா....மகளை கொழும்புக்கு கொண்டே விட்டிட்டு வந்ததிலையிருந்து ஒரே யோசனையாயிருக்கிறியள். அவளுக்கு ஒரு வருஷப் படிப்புத்தானே.... கண்மூடித் திறக்கிறதுக்கிடையிலை அது ஓடிப்போயிடும். இப்பவே இப்பிடியெண்டா எக்கணம் அவளை கலியாணம் கட்டி அனுப்பிறதெண்டா... அதுவும் வெளிநாட்டு மாப்பிளையெண்டா என்ன செய்யப்போறியளோ தெரியாது"

கணவன் வரதன் என்ற வரதராசனைப் பார்த்து மனைவி மனோகரி ஆறுதல் வார்த்தைகள் கூறிக்கொண்டிருந்தாள்.

மகள் மீராவின் சட்டத்தரணிக்கான இறுதி ஆண்டுப் படிப்பு திருகோணமலையில் படிக்கமுடியாததால் கொழும்புக்குச் சென்று அவள் படிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக வரதன் மகள் மீராவை தனது மகிழூந்தில் கொழும்புக்கு அழைத்துச் சென்று, அங்கு தனது நண்பர் ஒருவர் மூலம் தீர விசாரித்துத் திருப்தி கொண்டதற்கமைவாக அவளை அந்த மகளிர் விடுதியில் சேர்த்துவிட்டு இரவு வீடு திரும்பியிருந்தான். வரதன் வீட்டுக்கு வரும்போதே மிகவும் முகவாட்டத்துடன் வந்து விறாந்தையில் போடப் பட்டிருந்த சோபா செற்றியில் விழுந்து படுத்திருந்தபடி ஏதோ பலத்த யோசனையில் மூழ்கியிருந்தான். கணவன் அப்படி இருந்ததைப் பார்த்த மனைவி மனோகரி தனது வார்த்தைகளால் அவனை தேற்றிக்கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில், வரதனுக்கு தனது ஒரே பிள்ளையான மகளைப் பிரிந்தது கவலையாகத்தான் இருந்தது, ஆனாலும் அவனின் மனசில் வேறொரு நெருடல் திடீரெனத் தோன்றி அவனுள்ளே பலத்த கவலையைத் தோற்றுவித்துள்ளதை மனைவி மனோகரி அறிந்திருக்க நியாயமில்லை.

கிட்டத்தட்ட இருபது பெண்கள்தங்கிப் படிக்கவோ வேலைக்குச் செல்லவோ மிக்க வசதியாக அமைந்திருந்தது அந்த விடுதி.

அந்த விடுதியில் மகள் மீராவை கொண்டுபோய் சேர்க்கச் சென்றபோது, அந்த மகளிர் விடுதியின் நிர்வாகியும் அதன் சொந்தக்காரி யையும் கண்டதிலிருந்தே வரதனின் உள்ளத்தில் ஒரு குழப்பம் உருவாகியிருந்தது.

ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்களுக்குப் பின்னே தற்செயலாக ஏற்பட்ட சந்திப்பு. அந்த இருபது வயதில் எவ்வளவு அழகியாயிருந்தாள் அவள்.

அந்த அழகியா இவள்... செந்தளிப்பற்ற தோற்றம். வயதின் மூப்பு அவளின் முகத்தில் கோடுகளை அள்ளி வீசியிருந்தது. மகள் மீராவை அடையாளம் காணாத அந்த மகளிர்விடுதித் தலைவி லாவண்ணியா, வரதனைத் திடீரெனக் கண்டதும் திகைத்தே போனாள். மகளை அந்த விடுதியில் சேர்ப்பதற்குமுன் ஒரு விண்ணபப்படிவம் வரதனிடம் வழங்கப்பட்டது. அதை வரதன் பூர்த்திசெய்து அவளிடம் கையளித்தபோதே லாவண்ணியாவுக்கு அந்த அதிர்ச்சி காத்திருந்தது.


மகளது முழுப்பெயரை வரதராசன் மீரா எனக் குறிப்பிட்டதுடன் முகவரியைக் குறிப்பிட்ட வரதன் தனது பதவி நிலையையும் தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் அதில் கோரியிருந்ததற்கமையை அவதானித்து அதனையும் தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பத்தை லாவண்ணியா விடம் கையளித்தான்.

வரதன் அவளின் முகத்தை ஒருமுறை உற்று நோக்கி அவதானித்தபோது லாவண்ணியாவின் முகம் ஓடிக் கறுத்ததைக் கண்டு மனம் வேதனை கொண்டாலும் தனது இளவயதில் அவள் தந்த பலத்த பலமான அவமான அடியின் தாக்கமே தன்னை இந்தளவுக்கு உயர்த்திவிட்டதில் திருப்தி கொண்டு தன்னுள் சிரித்தும் கொண்டான்.

காலம் இப்படியெல்லாம் மாறும் என லாவண்ணியா கனவிலும் நினைக்காதவளாய், வரதனை நிமிர்ந்து பார்க்கத் திராணியற்று திகைத்து நின்ற காட்சிகளுடன் சென்ற கால நிகழ்வுகள் வரதனின் மனத்திரையில் ஓடத்தொடங்கின.

------------------

வரதன் அப்பொழுது வர்த்தக பாடத்தை உயர்தரப் பரீட்சைக்காக எடுத்துவிட்டு பல்கலைக்கழகம் கிடைக்கலா மென்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்தான். ஆனால் அது தவறிவிட்டது அவனுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. ஆனாலும் அவன் அதைப்பற்றிப் பெரிதும் கவலை கொள்ள வில்லை. தனது பெற்றோர்களுக்குத் தன்னைப் பல்கலைக் கழகம் அனுப்பிப் படிக்கவைக்கும் பொருளாதார பலம் இல்லையென்பதை அவன் அறிவான்.



வரதனின் தகப்பனாரோ ஒரு புகையிலை, மிளகாய், வெங்காயத்தோட்டச் செய்கையாளன். குத்தகைக்கு நிலங் களையெடுத்து அதில் பயிர் விளைவித்து வரும் வருமானத் திலிருந்து தான் தனது மனைவி மூன்று பிள்ளைகளென்ற குடும்பத்தைப் பராமரித்து வந்தார். தோட்டச் செய்கை யானது இருந்தாற்போல் ஓகோ என வந்தாலும் சில வேளை களில் குத்தகைக் காசையே கட்டமுடியாத நட்டத்திலும் கொண்டுபோய் விட்டு விடுவதுமுண்டு. ஆனாலும் மனைவி கமலா தனது கணவனுடன் சேர்ந்து பாடுபடுவதுடன் பொருளாதார நிலைக்கேற்றவாறு சிக்கனமாய் சீராக குடும்பம் நடத்துவதில் வல்லவளாகத் திகழ்ந்தாள். அதுமாத் திரமல்ல தாம் படும் கஷடங்களைப் பிள்ளைகள் படக்கூடாது என்ற கனவுகளுடன் அவர்களின் படிப்பில் மிகுந்த கவனம் செலுத்தி வந்தாள். இருந்தும் தமது மூத்தவனான வரதன் எப்படியும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாவான் என்ற அவளது ஆசை நிராசையாகப்போனது அவளை மாத்திரமல்ல கணவனான கந்தசாமியையும் வேதனைகொள்ள வைத்தது.

வரதனுக்கு பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கா விட்டாலும் அவன் சோர்வடையவில்லை. அப்பாவின் சுமையை, வீட்டின் கஷ்டநிலை தனது தங்கை தம்பி ஆகியோரின் படிப்பு அவர்களின் எதிர்காலம் பற்றியெல்லாம் சிந்தித்துச் செயற்படும் ஒருவனாக அவன் இருந்ததால் தனது கல்வித் தகைமைக்கு ஏற்றவாறு வேலைகள் பரீட்சை களுக்கு விடாது விண்ணப்பித்தவண்ணமே இருந்தான். இப்படிப் பல பரீட்சைகளை எழுதியவனுக்குப் பொது எழுது வினைஞர் பரீட்சை வெற்றியைத் தந்தது. பொது எழுது வினைஞனான அவன் தனது முதல் நியமனத்தை கொழும்பு புகையிரதத் திணைக்களத்தில் பெற்று அங்கேயே பலகால மாகக் கடமையாற்றிவந்தான். அங்கு அவன் பணியாற்றும் போது அவனுக்குப் பல சிங்கள முஸ்லிம் பணியா ளர்கள் நண்பர்களாகி சிங்கள மொழியிலும் பேசுவதிலும் எழுதுவதி லும் வல்லவனாகத் தன்னை வளர்த்துக் கொண்டான்.

------------------

கமலத்துக்கு ஒரு அண்ணன் மாத்திரமே. வேறு சகோதரங்கள் கிடையாது. அண்ணன் கமலேந்திரனுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலம் சிறுவயதிலிருந்தே மிகவும் பாசமாக வளர்ந்து வந்தாள். தந்தையை சிறுவயதிலேயே இழந்ததால் தாயின் அரவணைப்பிலேயே வளர்ந்துவந்தனர்.

கமலம் பருவமடைந்து பள்ளிக்குச் சென்றுவரும் காலத்தில் அவளது நல்ல நடத்தை குணம் அழகு என்பவற் றால் ஈர்ப்புக்கொண்ட கந்தசாமி அவளை மணம் செய்ய விரும்பினான். ஆனால் கந்தசாமியோ ஒரு தோட்டச் செய்கையாளனே. தனது தந்தையைப் போலவே புகையிலை வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு சிறப்பாக வாழ்ந்தாலும் அவனை யாரும் மாப்பிளையாக ஏற்கத்தயாராக இருக்க வில்லை. எந்தவித சீதனங்களுமின்றிக் கமலத்தைத் தான் திருமணம் செய்யத்தயாராக இருப்பதை ஒரு தரகர் மூலம் கமலத்தின் தாய்க்கு அவன் அறிவித்தான். தாயும் அண்ண னும் சற்று யோசித்தாலும் கமலம் தோட்டக்காரனாக இருந்தாலும் நல்ல ஒரு உழைப்பாளியாக கந்தசாமி ஊரிலே நல்ல பெயர் வாங்கியிருப்பதையறிந்து அவனை மணக்கச் சம்மதமும் தெரிவித்துத் திருமணமும் செய்துகொண்டாள்.

கமலத்தைத் திருமணம் செய்த அதேவேளை கஷ்டப்படும் கமலத்தின் தாயாருக்கு வேண்டிய பொருளாதார உதவிகளைச் செய்ததுடன் கமலேந்திரனின் படிப்புச் செலவுக்கும் கந்தசாமி உதவி வந்தார்.

அண்ணன் கமலேந்திரன் உயர்தரத்தில் கணிதப் பிரிவில் படித்து பல்கலைக்கழகத்துக்கு எடுபட்டு ஒரு பொறியியலாளனும் ஆகியதுடன் தன்னுடன் பல்கலைக் கழகத்தில் வைத்தியத்துறையில் பயின்று டாக்ரராகிவிட்ட மனோகரியை கொழுத்த சீதன பாதனங்களுடன் மணந்து கொண்டான்.

ஆரம்பகாலங்களில் அண்ணனின் ஒரே மகளான லாவண்ணியாவுடன் தங்கை பிள்ளைகளான வரதனும் தங்கை தம்பியும் அந்நியோன்னியமாக விளையாடி வந்தாலும், ஒரு வைத்தியராக வலம்வந்த மனோகரிக்கு தமது அந்தஸ்த் துக்கு ஏற்றதாக அது இல்லையென அவர்களை நெருங்கிப் பழக அனுமதிக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் மூன்று கடைகள், வவுனியாவில் ஐம்பது ஏக்கரில் தென்னந்தோட்டம், கிளிநொச்சியில் பல வயல்நிலங்கள் என இருந்ததாலும் கணவன் பொறியியலாளர் தான் வைத்தியகலாநிதி என்பதாலும் தனது மகள் லாவண்ணி யாவை மிகுந்த செல்லத்துடன் வளர்த்துவந்தாள். தாயின் செருக்குத்தனங்கள் மகளிடம் இரட்டிப்பாக இருந்ததென்றே கூறலாம்.

கமலேந்திரன் தனது மகள் லாவண்ணியாவை தனது தங்கை கமலத்தின் மகனான வரதராசனுக்கே திருமணம் செய்துவைக்க வேண்டுமென ஆரம்பகாலத்தில் விரும்பிய துடன் கமலத்துக்கும் தனது ஆசையை கூறிய துண்டு. ஆனால் காலப் போக்கில் தனது மகள் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாகவும் தங்கை கமலத்தின் மகன் வரதன் ஒரு சாதாரண எழுது வினைஞனாகவும் இருப்பதை யிட்டு அந்த எண்ணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான். மகள் லாவண்யாவும் தனக்கு இருக்கும் பெருவாரியான சொத்துக்கு தான் மணந்தால் ஒரு பொறியிலாளன் அல்லது டாக்ரர் அல்லது ஒரு எக்கவுண்டனாகவே இருக்கவேண்டும் என சபதமும் எடுத்துக் கொண்டாள். அதற்கேற்றாற்போல் தாய் மனோகரியும் அவளது கர்வத்துக்குத் தீனியும் போட்டு வளர்த்து வந்தாள்.

கமலத்துக்குத் தனது மகன் வரதனை எப்படியும் சொந்தத்துக்குள்ளே கட்டிவைக்கவேண்டுமென்ற நீண்ட நாள் ஆசை. முன்பொருக்கால் அண்ணனும் தனக்கும் அப்படியொரு விருப்பம் இருப்பதாகக் கூறியது நினைவில் இருந்தது. இதற்கமைவாக ஒருநாள் கமலம் தனது கணவர் கந்தசாமியுடன் தனது அண்ணன் வீட்டுக்குச் சென்றாள். அவர்கள் சென்ற நேரம் லாவண்ணியா எங்கோ சென்றி ருந்தாள். என்னதான் இருந்தாலும் அண்ணனிடம் எந்தக் கர்வங்களும் குடிபூரவில்லை.

தந்தையை இழந்த பின்தாய் எவ்வளவு கஷ்டப்பட்டு தன்னை வளர்த்ததும் அந்தவேளை தங்கையான கமலாவும் மைத்துனன் கந்தசாமியும் தனது படிப்புச் செலவுக்கு பக்க துணையாக இல்லாவிட்டில் தான் ஒரு பொறியியலாளனாக வந்திருக்க முடியாதென்பதை அவனால் மறக்கமுடியவில்லை.

தனது வீட்டுக்கு வந்தவர்களை வரவேற்ற கமலேந்திரன், அவர்களை இருக்கவைத்துக் கதைத்துக் கொண்டிருந்தவேளை கமலம் அண்ணனிடம் தமது விருப்பத்தை அதாவது வரதனை அண்ணனின் மகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் விருப்பத்தை எடுத்துரைத்தாள். அதைக் கேட்ட கமலேந்திரனின் முகம் வாட்டமடைந்தது. சமையலறையில் நின்ற மனைவி மனோகரியிடம் தங்கையும் கணவனும் வந்திருப்பதைச் சொன்னதுடன் அவர்களின் திருமணப் பேச்சையும் தயங்கியபடி முன்வைத்த மாத்திரத் தில் எப்படி அவள் மாறினாளோ தெரியாது. “எங்கடை கால் தூசிக்கும் வர ஏலாத இவைக்கு ஒரு நினைப்பு. மகனுக்கு எங்கடை மகளை கட்டிவைச்சா உள்ள சொத்துக் களையெல்லாம் சூறையாடலாமெண்ட நினைப்பாக்கும். தோட்ட வேலையளைவிட்டுவிட்டு கால்மேலைகால்போட்டு சாப்பிடலா மெண்ட நினைப்பு உந்தப்பரதேசியளுக்கு. என்ரை மகளை கட்டவாறவன் ஒரு டொக்ரராய் இஞ்சினியராய் இல்லாட்டி ஒரு எக்கவுண்டனாகத்தான் இருக்கவேணும். எங்கடை மகள் ஒரு பட்டதாரி. உவன் வரதன் ஒரு கிளாக் வேலை பாக்கிற அற்பப்பயல். பட்டதாரியுமில்லை. மாதம் பதினையாயிரம் எடுக்கிற வனுக்கு வேலைக்குப்போகாமலேயே மாதம் மூண்டு லச்சம் வருமானம் வர்ர ஒருத்திக்கு கட்டிவைக்கக் கேக்கிற உங்கடை தங்கச்சிக்கும் புருஷனுக்கும் வெக்கமில்லையே” எனப் பொரிந்து தள்ளிய மனோகரியின் திமிர்க்கதைக்கு ஒரு உதைபோடவேணு மெனக் கோபங்கொண்ட கமலேந்திரன் “வாயைப் பொத்தும் கனக்கக்கதைச்சு கோவத் தைக்கிளராதையும் ஓ..” என கத்திக் கொண்டிருந்தவேளை எங்கோ போயிருந்த லாவண்ணியா ஏதோபெரிசாக சத்தங்கேட்பதையறிந்து குசினிப்பக்கம் போக, மனோகரி தான் விட்டகுறை தொட்ட குறையை மகளிடம் சொல்லிக் கொந்தளித்தாள். விடயமறிந்த மகள் அம்மாவை மிஞ்சியவளாக அப்பாவை அவமதித்துப் பேசியதல்லாமல் கமலமும் கந்தசாமியும இருக்குமிடம் வந்து மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை அவமதித்து ஏசியது மாத்திரமல்ல " நான் கட்டினால் டொக்ரர் இஞ்சினியர் அல்லது எக்கவுண் டன்தான். அதை நினைவில் வைச்சுக் கொள்ளுங்கோ. அப்பிடிக் கலியாணம் நடக்கேக்கை உங்களுக்கும் சொல்லி யனுப்பிறம். முடிஞ்சா வாருங்கோ...இப்ப இடத்தை காலி பண்ணுங்கோ" என அகங்காரம் தொனிக்கப்பேசி அவர் களை அவமானப்படுத்தி வீட்டைவிட்டு வெளியேற்றினாள்.

------------------

தனது மாமனார் வீட்டிலிருந்து அழுத நிலையில் தனது அம்மாவும் அப்பாவும் வந்த நிலையைப்பார்த்த வரதனுக்கு உள்ளம் அனலாகக் கொதித்தது. கோபம் கொப்பளித்தது. எப்படியும் ஒரு இளைஞன் அவன். தனது தாய் தகப்பன் அவமதிக்கப் பட்டதைக் கேட்டு வாழாவிருக்க விரும்புவானா? உடனடியாக அங்கு சென்று அவர்களை உதைத்து நொருக்கிவிட மனம் ஏவியது.

ஆனால் அதன் எதிர் விளைவை அவன் சிந்தித்தான். தனது கோபத்தால் ஏறுக்கு மாறாக ஏதும் நிகழ்ந்துவிட்டால் பொலிஸ், கோடு என இழுபடுவதுடன் தனது வேலையையும் இழந்து குடும்பத்தில் இன்னும கஷ்ட நிலையை தோற்று விக்கலாமென எண்ணிப் பார்த்தான். தனது மாமிக்கும் மச்சாளுக்கும் வேறு விதத்திலேயே சிறந்த பாடங்கற்பிக்க வேண்டுமென அவன் மனம் ஏவியது. தான் இந்த எழுது வினைஞர் பதவியிலிருந்தே மேலே படிக்கவேண்டும் பட்ட தாரியாக வேண்டும். அதற்கு மேலாக ஒரு கணக்காளனாகவும் படித்து உயர்ந்து தன்னையும் தனது பெற்றோரையும இகழ்ந்தவர்கள் முன்னே சாதித்துக் காட்ட வேண்டுமென்ற வெறியானது அவனுக்குள் தலையெடுத்தது.

------------------

காலச் சுழற்சியாலும் நாட்டுப் பிரச்சனைகளாலும் மாமனார் மாமியார் மைத்துனி லாவண்ணியா ஆகியோரின் தொடர்பே அற்றவர்களாகியதுடன், இடம்பெயர்ந்த கந்தசாமி கமலா குடும்பம் திருகோணமலைக்கு வந்து பல காலமாகிவிட்டது.

தனது பதவியிலிருந்தபடியே படித்த வரதன் இன்றோர் பட்டயக் கணக்காளனாக மாறியிருந்தான்.

அவன் எழுதுவினைஞனாக வேலைபார்த்த காலத் திலேயே ஒரு ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த மனோகரியை எந்தவித சீதனமும் எதிர்பாராது மணம்புரிந்துகொண்டான். கணவனை இழந்த நிலையில் இருந்த தாய் கமலமும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. வசதி கூடிய ஒருத்தியையோ அல்லது சாதாரண எழுது வினைஞனான அவனைவிட அதிக சம்பளம் எடுக்கும் ஒருத்தியையோ மருமகளாக எடுத்து அல்ல தொல்லைப்படாமல் மகன் வரதன் சாதாரண நல்ல குணசாலியான இலட்சணமான ஒருத்தியை அவன் மணமகளாகத் தெரிவுசெய்தது கமலத்துக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

தனது மற்றய இரண்டு பிள்ளைகளையும்வரதனதும் மருமகளதும் உதவியால் படிக்கவைத்துப் பட்டதாரிகளாக்கி திருமணமும் செய்து வைத்து மகிழ்ச்சியோடு வாழ்ந்தாள் கமலம்.

இதே வேளை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தனது அண்ணன் குடும்பத்தைப்பற்றி அவள் எதுவித அக்கறையும் கொள்ளவில்லை. அவ்வளவுக்கு அவர்களால் ஏற்படுத்தப் பட்ட அவமானமானது அவள் மனசைக் கல்லாக்கிவிட்டது. ஆனாலும் தனது தமையன் இந்தியன் ஆமியால் சுடப் பட்டதும், மகள் லாவண்ணியாவும் தாயாரும் இடம் பெயர்ந்து சென்று எங்கோ வசிப்பதாகவும் அறிந்து கொண்டாள். அதே வேளை உயர் உத்தியோகத்தை எதிர் பார்த்தே திருமண வயதைக் கோட்டைவிட்டு லாவண்ணியா தனது அம்மாவுடன் தனித்து வாழ்வதையும் சிலர் அவளுக்குச் சொல்லக் கேள்வியுற்றாள்.

பல சொத்துக்களின் அதிபதியாக இருந்தும் லாவண்ணியாவினதும் தாயினதும் அகங்காரப் போக்கை அறிந்த எவருமே அந்தக் குடும்பத்தில் பெண் எடுக்க விரும்பாததுமே லாவண்ணியா தனது திருமண வயதைக் கடந்தும் முதிர் கன்னியாகக் காலங்கடத்தவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானாள் என்பதை வரதனும் அறிந்து தனக்குள் மனவேதனையடைந்தான். காலப்போக்கில் தகப்பனை இழந்த லாவண்ணியா தனது பெயரில் யாழ்ப் பாணத்தில் இருந்த இரண்டுவீடுகளையும் கடைகளையும் விற்றதுடன் வவுனியாவிலிருந்த தென்னந்தோட்டத்தையும் விற்றெடுத்து கொழும்புக்குச் சென்றவள் வெள்ளவத்தையில் மூன்றடுக்கு மாடிவீட்டை கோடிரூபாக்களைக்கொட்டி வாங்கினாள். அதில் ஒரு மகளிர் விடுதியை அமைத்து அதற்காக பல ஆண் பெண் பணியாளர்களை நியமித்து பராமரித்து வசதியாக வாழ்ந்து வந்தாலும் இல்லற பந்தமின்றி தனித்த வாழ்வு அவளுக்கு ஏக்கத்தையே பரிசாக வழங்கி வந்தது.

ஆனாலும் லாவண்ணியாவின் வரட்டுக் கௌரவமும், தற்பெருமையான செயற்பாடுகளும் சொந்த மைத்துனனாக இருந்தபோதும் வரதனை ஒரு சாதாரண எழுது வினைஞனாகவும், தோட்டக்காரன் மகன் எனவும் கேலிசெய்த புறக்கணிப்புக்கள் ஒரு பக்கம் வரதனுக்கு நன்மையையே தந்தது. அப்படி அவளோ மாமியாரோ தன்னையோ தனது பெற்றோரையோ புறக்கணிக்காது அவளை மணந்திருந்தால் கால ஓட்டத்தில் அவனும் அவனது தாய் தந்தை சகோதரங்களும் அடிமைச் சீவியம் செய்யவேண்டியேற்பட்டிருக்கலாம். நல்ல காலத்தூக்கு அவர்களது புறக்கணிப்பானது அவனுக்கு மேலே மேலே படிக்கவேண்டுமென்ற வெறியை ஏற்படுத்தியது.

இப்பொழுது வரதன் ஒரு பட்டயக்கணக்காளன். தனியாக ஒரு சொகுசு வாகனம், பங்களா வசதிகள். மதிப்பு மரியாதைகளும்கூட அவனை வந்து சேர்ந்தது. திருகோண மலை பிரதான செயலகத்தில் அவன் ஒரு பிரதான கணக்காளன் இன்று. அவமதிப்புக்களும்புறக்கணிப்புக்களும் மானமுள்ள ஆணையோ பெண்ணையோ கீழே அமிழ்த்தி அழித்துவிட முடியாது என்பதுக்கமைவாக, அந்த அவமதிப் புக்களை படிக் கற்களாக்கி சாதித்துக்காட்டிய ஒருவனாக வரதன் இன்று எமது கண்களில் வலம்வந்து கொண்டிருக் கின்றான்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-4

மண்டைதீவு
கலைச்செல்வி




# விதி வரைந்த பாதை

மாசி மாதத்தின் பனி தோய்ந்த விடியற் பொழுது. யோகராசா மாஸ்டருக்கு ஒரு ரீ குடிக்கவேண்டும் போல் இருக்கிறது. இந்த விடியற்காலை ஐந்தரைமணி ரீயை அவர் அதிகமாக நேசிப்பார். நாள்ஒன்றுக்கு மூன்று தடவை என்றாலும் ரீ குடிப்பார். இளமைக்காலங்களில் சாதாரண தரம் உயர்தரம் படிக்கின்றபோது, அம்மா அந்தச்சின்னம் சிறிய ஓலைவீட்டில் மண்ணினால் மெழுகப்பட்ட தரையில் உட்கார்ந்து விறகு அடுப்பில், கேற்றிலில் தண்ணீர் நிரப்பி கொதிக்கவைத்து ஐந்து மணிக்கெல்லாம் மாட்டில் பால் கறந்து சூடாக தரும் அந்த ரீயை நினைத்தால் யோகராசா மாஸ்டருக்கு இப்போதும் இனிக்கிறது. அந்த ரீ மட்டுமல்ல அம்மாவின் மிக எளிமையான ஆடம்பரமற்ற அணைத்து சாப்பாடும் மிகச்சுவையானது. யோகராசா மாஸ்டருக்கு ஏழு வயதாக இருக்கும்போதே தந்தையை இழந்தவர். அவருடைய அப்பா இறக்கும்போது அம்மாவுக்கு முப்பத்தி இரண்டு வயது தானாம். மகனையே உலகமாய் நினைத்து வாழ்ந்தவர். சொந்தமாய் ஐந்து பரப்புக் காணியும் அதற்குள் பதினைந்து தென்னை மரங்களும் சிறிய ஒரு வீட்டுத் தோட்டமும் இருபது இருபத்தி ஐந்துகோழிகளும் யோகராசா மாஸ்டரை வளர்க்கவும் படிப்பிக்கவும் உதவியது. வேறு உதவிகள் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. நல்ல நாள் பெருநாள் வரும்போது பட்டாசும் புது உடுப்பும் அவர் பார்த்ததுமில்லை.

அம்மா எத்தனை கஸ்டங்கள் வந்தாலும் வெளியிலே போய் கூலி வேலை செய்தது கிடையாது. முட்டை தேங்காய் மரக்கறி பசுபால் என அயலவர்களுக்கு விற்று தன் முயற்சியினால் வருமானத்தைப் பெற்று, யோகராசா மாஸ்டரைப் படிப்பித்தவர். சாதாரண தரத்தில் அவர் பாடசாலையிலேயே முதல் மாணவனாக சித்தி பெற்றபோது. ஊரே புகழ்ந்து கொண்டாடியது. அம்மாவின் தியாகத்தை...அவரது கண்ணியத்தை... ஊரிலே பலர் உதாரணம் காட்டி இன்றும் கதைப்பதுண்டு.

உயர்தரத்தை கலைப்பிரிவிலே படித்தார். அப்பொழுதுதான் கதிர்வேல்பிள்ளை மாஸ்டர் தமிழ் ஆசிரியராக அந்த பாடசாலைக்கு வந்திருந்தார். அவர் யோகராசா மாஸ்டருக்கு பல வழிகளில் உதவிகள் செய்தார். யோகராசா மாஸ்டர் இன்று தமிழ் சிறப்புப்பட்டதாரியாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் இருப்பதற்குப் பண்டிதர் கதிர்வேற்பிள்ளையே காரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்வேற்பிள்ளையின் வீடு ஒரு சிறிய நூலகம். அடிக்கடி யோகராசா மாஸ்டரை அழைத்துப் புத்தகங்கள் நிறையவே குடுத்து உதவி இருக்கிறார். இரஸ்ய இலக்கியம் தொடங்கி ஈழத்து வரலாறு, அறிவியல் வரை அவரது புத்தகங்கள் பல்கி பெருகி கிடந்தன. பரீட்சை முடிந்தபின்பும் வாசிப்பின் மேல் உள்ள ஆர்வத்தினால் அவர் அங்கு அடிக்கடி சென்று வருவார். அவர் போகப்பிந்தினால் பண்டிதரே ஆள் அனுப்பி கூப்பிடுவார். அவர்கள் இருவரும் புத்தகம், இலக்கியம் என்று பேச ஆரம்பித்தால் இருள்வது கூட புலப்படாது. பண்டிதருக்கு ஓரே ஒரு மகள்தான். யாழ்ப் பாணத்தில் மகளீர் கல்லூரி ஒன்றில் படித்துக்கொண்டி ருந்தாள். அவள் லீவு நாட்களில் வீட்டில் நிற்கும் போது அவளைப்பார்த்திருக்கிறார். சில வேளைகளில் ஒரு புன்னகை யோடு விலகிக்கொண்டாலும் பலவேளைகளில் அவளோடு பேசும் சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்தது. பண்டிதருக்கு கொடுக்கும் அதே மரியாதையோடு அவரும் பழகினார். பண்டிதர் மனைவியாரும் யோகராசாமாஸ்டரை பிள்ளை போல நினைத்துப்பழகினார்.

வறுமையோடும் கஸ்டத்தோடும் போராடிப் பல்கலைக்கழகபட்டப்படிப்பை முடித்தார். பண்டிதரின் மகள் தமிழினியும் பல்கலைக்கழக அனுமதிக்காய் காத்திருந்த காலங்களில் நிறைய அவளுடன் பேசும் தருணங்களை காலம் கொடுத்திருந்தது. அவ் உரையாடல்கள் பொதுவிடயங் களில் துவங்கி, சமகால நிகழ்வுகள், அவர்களின் எதிர்கால கனவுகள் வரை நீண்டிருந்தது. யோகராசா மாஸ்டருக்கு தமிழினியை நிறையவே பிடித்திருந்தது. அது காதலா? என்று கேட்டால் அதற்கு அவரிடம் எந்த பதிலும் இல்லை.

இந்த இனிமையான நிகழ்வுகள் எல்லாம் நீண்ட காலம் நிலைக்கவில்லை. கோட்டை அடிபாடு தொடங்கு வதற்கு முன் ஒரு நாள் பண்டிதர் யோகராசா மாஸ்டரை வீட்டுக்கு அழைத்தார்.

"நாட்டு நிலைமை சரியில்லை.. கொழும்பிலை இருக்கிற என்ர தங்கச்சி வரச்சொல்லி நிக்கிறா.. கொஞ்ச நாள் போய் இருந்திட்டு வருவம் எண்டு நினைக்கிறம். உவன் வடிவேலனிட்ட வீடு வாசலப்பாக்கச் சொல்லி இருக்கிறன். நீங்கள் என்ர பிள்ள மாதிரி. லீவு கிடைக்கேக்கை இடை சுகம் வந்து பாருங்கோ" என்றார். தமிழினியின் முகத்தை பார்த்தார். அழுது முடித்ததற்கு ஆதாரமாய் அவள் கன்னங்கள் சிவந்திருந்தது. காலங்களும் அவர்கள் கண்களும் எந்த பதிலுமே சொல்லிக்கொள்ளவில்லை. தங்கள் கொழும்பு விலாசத்தை கொடுத்து விட்டுப் புறப்பட்டுக்கொண்டார்கள்.

இத்தனை சம்பவங்களும் இன்றும் பச்சையாய் மனதோடு நிற்கிறது. அதன்பின் நாடே தலைகீழாய் மாறியது. கோட்டை அடிபாட்டின் பின் ஊரைவிட்டு சனமெல்லாம் வெளிக்கிடவேண்டி வந்தது. யோகராசா மாஸ்டரும் தாயைகூட்டிக்கொண்டு வவுனியாவில் இருக்கும் அவருடைய பெரியம்மா வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு ஆசிரியர் நியமனமும் கிடைத்தது. பெரியம்மா அவருடைய ஒரே ஒரு சகோதரி... அவரிடம் வந்தது அவருடைய அம்மாவுக்கு நல்ல சந்தோசம். "நீ.. தனிச்சனி. பிள்ளையை வளர்த்துப்படிப்பிச்சி பட்டம் பெறவைச்சு.. உத்தியோகமும் கிடைச்சிட்டுது. இனியென்ன கல்யாணம் தானே?" என்று சொல்லிக்கொண்டு பெரியம்மா கலியாண ஏற்பாட்டில் இறங்கினார். ஆனந்தராசா என்பவர் யோகராசா மாஸ்டரின் தாயாரின் ஒன்று விட்ட சகோதரன் என்று சொல்லிக்கொண்டு வந்து சேர்ந்தார். அம்மா ஒருவரோடும் கொண்டாடவில்லை. அம்மாவைத்தேடியும் ஒருவரும் இன்று வரை வந்ததும் இல்லை. அதனால் யோகராசா மாஸ்டருக்கு அவரைத்தெரியாது.

"ஆனந்தராசாவுக்கு ஒரு பொம்புளைபிள்ளைதான்.. நாலு ஆம்பிளைப்பிள்ளைகள். மூண்டு பெடியளும் வெளிநாடு...ஓ எல்வரையும் படிச்சு இருக்கிறாள். தெரியாதே செல்லப்பிள்ளைகொஞ்சம் உடம்பு...ஏகப்பட்ட சொத் துகள்.. பெரிய வீடுவளவு, எல்லாம் அவளுக்குத்தான்.." என்று தொடங்கி கல்யாணத்தை அவசரமாய் முற்றாக்கினாள் அவருடைய பெரியம்மா.

யோகராசா மாஸ்டர்கொஞ்சம்தடுமாறிப்போனார். அடிமனதில் தமிழினியின் நினைவுகள் அவரை அலைக் கழித்தது. ஊரைவிட்டு வந்தபின் அவர்களோடு எந்தத் தொடர்பும் கிடைக்கவில்லை. கொழும்புக்குப்போய் பார்த்து வர நாட்டு நிலைமையும் அம்மாவின் சம்மதமும் சரியாகக்கிடைக்கவில்லை.

தமிழினியிடம் தான் எதிர்பார்க்கும் பதில் சாதக மாய் அமையுமா? அதற்கும் பதில் இல்லை. திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஒரு முறை ஒரே ஒரு முறை தமிழினியிடம் ஏதாவது ஒரு வழியில் கேட்டு விட வேண்டும் என்கிற கனவு நடப்பதற்கு எந்த வித சாத்தியங்களும் தென்படவில்லை. "நீ கல்யாணம் செய்தால் எனக்கு நிம்மதியப்பு" அம்மாவின் சொல்லுக்கு கட்டுப் பட்டுக்கொண்டார்.

ஒரு புறம் பசுமையான நினைவுகள் மனதில் அக்கினியாய் எரிந்து கொண்டிருக்க, மறுபுறம் அக்கினி சாட்சியாய் ஆனந்தராசா மாமாவின் மகள் ரேவதிக்கும் யோகராசா மாஸ்டருக்கும் திருமணம் நடந்தது. யோகராசா மாஸ்டருக்கு திருமணம் நடந்து இரண்டு மூன்று நாட்களி லேயே தனக்கு வாழ்க்கை நல்லதாய் அமையவில்லை என்று புரிந்து கொள்ள முடிந்தது. ரேவதிக்கு செல்வச் செழிப்பில் உடம்பு வைக்கவில்லை. அகங்காரம் ஆணவம் மற்றவர்களை மதியாத தன்மை. புரிந்துணர்வு இல்லாத தன்மை. எல்லாமும் சேர்ந்துதான் இருந்தது. முக்கியமாய் அவருடைய தாயை சிறிதளவும் மதிக்காத குணம் அவரை வேதனையில் வாட்டி வதைத்தது. ஏதோ நாளடைவில் உணர்ந்துவிடுவாள் என நினைத்தார். அன்பாகச்சொல்லியும் பார்த்தார். மாற்றங்கள் அவளில் நடக்கவில்லை.

அவருடைய அம்மா ஓரிரு தடவை வீட்டுக்கு வந்திருந்தபோது ரேவதியின் பாராமுகம் புறக்கணிப்பு களைப்புரிந்து கொண்டார். மகன் இனியவன் பிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு தாயிடம் தன் பிள்ளையை யாரோ ஒருவருக்கு காட்டுவது போல் காட்டினாள். அதன் பின் அவருடைய அம்மா முற்றாக வருவதை நிறுத்திக்கொண்டார்.

"என்ன அமைதியான மனுசனுக்கு இப்புடி ஒரு பொம்பிளையா?" அரசல் புரசலாக ஊருக்குள் பலரும் யோகராசா மாஸ்டரைப்பற்றி பேசிக்கொண்டார்கள். ஏழ்மையில் மெலிந்து வாழ்ந்த தன் தாயை வேற்றுவாசிபோல் ரேவதி பார்ப்பது அவரை ஆற்றோணாத்துயரத்தில் தள்ளியது. முற்றாகவே ரேவதியுடன் பேசுவதை நிறுத்திக் கொண்டார். மகன் இனியவன் வளர்ந்த பின் ரேவதியில் சிலமாற்றங்கள் தெரிந்தன. அம்மாவின் குறைகளை அவதானித்து அப்பாவுக்காக வாதாடுவான். தந்தையைப்போல் மெளனம் சாதிக்க மாட்டான் அப்பம்மாவை அடிக்கடி பார்க்கச் செல்லுவான்.

காலங்கள் யாருக்கும் காத்து நிற்பதில்லை. யோகராசா மாஸ்டருக்கு ஆசியர் சேவையும் மகனின் ஆதரவும், தாயின் அன்பும், அவருக்கு உயிர் வாழப்போது மாய் இருந்தது. ஏழை மாணவர்களுக்கு இலவசமாக கற்பித்தல், சமூக சேவைகள், மகனுடன் அமர்ந்திருந்து பேசுவது, தியானம் என தன் வாழ்வைக்கடத்தி ஓய்வு நிலைக்கும் வந்து விட்டார்.

யோகராசா மாஸ்டருக்கு இனியவன் மகன் மாத்திரமல்ல நல்ல நண்பனாகவும் இருந்தான். பலவேளைகளில் இனியவன் தந்தையின் தோள் சாய்ந்திருக்கையில் தன்னுடைய கடந்த காலங்களில் நடந்தவைகளைச் சொல்லி ஆறி இருக்கிறார். முக்கியமாக கதிர்வேல்பிள்ளை பண்டிதரைப் பற்றி அவர் தனக்குச்செய்த உதவிகள் பற்றியும் சொல்லி இருக்கிறார். அவர்கள் முகவரியை மனப்பாடம் பண்ணி இப்போதும் சொல்வார். தான் ஒரு தடவை பண்டிதரைப்பார்க்க கொழும்பு போயிருந்ததையும் அவர்கள் குடும்பத்தோடு இந்தியா போய்விட்டதாக அந்த வீட்டில் உள்ளவர்கள் கூறியிருந்ததையும் சொன்னார். நினைவுகளை இன்னமும் இறுக்கமாய் பற்றிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார் யோகராஸா மாஸ்டர்.

நீண்ட காலத்தின் பின் ஒரு தடவை தன் ஊரைச் சேர்ந்த நண்பர் ஒருவரை யோகராசா மாஸ்டர் சந்தித்தார். அவரிடம் முதலாவது உரையாடலிலேயே பண்டிதர் குடும்பத்தைப் பற்றி விசாரித்தார்.

"ஓ..அவையே! பண்டிதர் ஐயா இறந்திட்டார். அம்மாவும் இப்ப கிட்டடியில தான் இறந்திருக்க வேணும்."

"அவர்ட மகள்..." இழுத்தார் யோகராஸா மாஸ்டர். பதில் கேட்க அவர் கண்கள் பனித்தபடி காத்திருந்தன.

"ஓ..தமிழினியே....தமிழினியும் கலியாணம் செய்யேல்லைதானே!"

"என்னது? ஏன்?" அதிர்ந்து போனார் யோகராசா மாஸ்டர்.

"தெரியாதே..பெரிய இடங்கள்..சொத்து பத்து கூடின ஆக்கள். ஒரே ஒரு பொம்புளைப்புள்ள..கலியாணத்தைப்பாத்து பாத்து காலம் கடந்துபோச்சு. அவைக்கு பேசிச்செய்யவும் ஆக்கள் இல்லைத்தானே?" என்று அவர் நண்பன் கூறிய வார்த்தைகள் அடிக்கடி ஞாபகத்திற்கு வந்து வலித்துக்கொண்டிருந்தது.

தமிழினி பிடிவாதம் மிக்கவள் என்று அவளோடு நெருங்கிப்பழகிய அவருக்கு நன்றாகத்தெரியும்.

"தமிழினி ஏன் கல்யாணம் செய்யவில்லை?" இந்தக்கேள்வியை அவருடைய ஆத்மா ஓலமிட்டுக் கேட்டுக்கொண்டே இருந்தது. ஒவ்வொரு நாளும் நினைத்து நினைத்து நைந்துபோவது வழக்கமாகிவிட்டது. தன் வாழ்வில் தவறவிட்ட நொடிகள் தினமும் அவரை கொன்று கொண்டிருக்கிறது. இளமையின் நினைவுகள் இன்னமும் வயோதிபத்தை தின்று கொண்டிருக்கிறது.

மரணம் வந்தால் என்ன...கலங்காமல் மரணிப்பேன் என்று அடிக்கடி அவர் நினைத்துக்கொண்டாலும், எஞ்சினியராகி வேலை செய்ய ஆரம்பித்த மகனின் திருமணத்தை காணாமல் அவர் வாழ்வு அர்த்தம் பெறாது. பல்கலைக்கழகம் படிக்கின்ற காலத்தில் ஒரு பிள்ளையை காதலிப்பதாக இனியவன் அவரின் காதில் சொல்லிவைத்திருக்கிறான். மகனின் வாழ்வு அவன் விரும்பியபடி அமையவேண்டும் என்பதே அவர் எண்ணம். ஆனால் ரேவதி துளியும் காதல் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை."

பரம்பரை பரம்பரையாய் கூலிக்கு வேலைசெய்து பிளைக்கிற ஆக்கள்..படிச்சாப்போல சம்மந்தம் செய்ய முடியுமே? எத்தினை கோடிஸ்வரன்கள் உனக்குப் பொம்புளை தர பாத்துக்கொண்டிருக்கிறாங்கள். போயும் போயும்..சீ..வேண்டாம் விடு. நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டன்." என்று உறுதியாகச்சொல்லியும் விட்டாள். இனியவன் போராடிக்களைத்துப்போனான். தன் நண்பர்களை தெரிந்த பெரியவர்களை அனுப்பி தாயிடம் பேசிப்பார்த்தான். யாருக்கும் ரேவதிசம்மதிக்கவில்லை.

ஒரு நாள் வேலைவிடயமாக கொழும்புபோய்விட்டு வீட்டுக்கு வந்து ஆறி அமராமலே அம்மாவுக்கும் மகனுக்கும் மீண்டும் போர்க்களம் ஆரம்பமானது. நியாயம் சொல்ல முடியாமல் யோகராசா மாஸ்டர் தவித்துக் கொண்டிருந்தார். ரேவதியும் இனியவனும் தங்கள் முடிவுகளில் இருந்து சற்றும் இறங்குவதாய் தெரியவில்லை. வாதங்கள் ஓய்ந்து முடிந்த பிற்பாடு இனியவனின் அறைக்கட்டிலில் அமர்ந்த படி, தன் மகனின் தலையை தடவிக்கொண்டு பேச ஆரம்பித்தார்.

"தம்பி, நீ பதிவுத்திருமணம் செய்... யாருக்கும் தெரிய வேண்டாம்...கொஞ்ச நாளுக்கு பிறகு தாலிய கட்டி கல்யாண வீட்டை செய்வம்" இனியவன் அப்பாவை பார்த்தான். அவனுக்கு அவரைக்கட்டி அணைத்து அழுவதை விட வேறு வழி ஒன்றும் தெரியவில்லை.

"அப்ப...அம்மா ? "என்றான்

"காசையும், சாதியையும் கட்டிக்கொண்டு கிடக்கட்டும்"

ரேவதிக்குத் தெரியாமல் நண்பர்கள் துணையோடு திருமணப்பதிவு செய்ய இனியவன் முடிவெடுத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நண்பர்களில் ஒருவராக யோகராஸா மாஸ்டரும் நின்றிருந்தார். அப்பாவிடம் ஆசீர்வாதம் வேண்டிக்கொண்டு புறப்பட்டார்கள் தம்பதிகள்.

மகனின் விருப்பத்தை நின்று நடாத்தி வழியனுப்பி வைத்து விட்டு தன்னுடைய அறையில் வந்து கட்டிலில் சாய்ந்துகொண்டார். வாழ்க்கை விதி வழி போகிறது. அதைத் தடுக்க யாராலும் முடியாது. தன் வாழ்வின் இறுதிக்கணம் முடிவதற்குள் தமிழினியை ஒரு தடவை பார்க்க வேண்டும் என்று நினைக்கின்றார். அதையும் விதி தான் தீர்மானிக்க வேண்டும். எல்லோருக்குமே எல்லாமே வாய்ப்பதில்லை. சிலருக்கு இளமைக்காலம் அழகானதாய் அமைந்துவிடும். சிலருக்கோ முதுமை அழகானதாயும் ஆனந்தமானதாயும் அமைந்து விடும். யோகராசா மாஸ்டரின் நண்பர் ஒருவர் தன் ஓய்வுகாலத்தை அவுஸ்ரேலியாவில் இருக்கும் தன் மகளுடன் பேரக்குழந்தைகளுடன் கழிப்பதற்காய் சென்று அங்கு அரைக்கால்சட்டை போட்டு ஒரு கடற்கரையில் நின்று படம் எடுத்துப் பேஸ் புக்கில் போட்டிருந்தார்.. அந்தச்சின்னச் சின்ன சந்தோசங்கள்.. எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. சிலரைப் பிள்ளைகள் தாங்கு தாங்கென்று தாங்குவார்கள். சிலர் பிள்ளைகளை தாங்கிக்கொண்டிருப்பார்கள். சிலர் புறக்கணிக்கப்பட்டு தனிமையில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் பின்பு மூன்று கல்லூரிகளின் அதிபராகவும் இருந்து சமூகத்திலும் மக்களிடத்தேயும் நற்பெயர் பெற்ற ஒரு மனிதருக்கு தன் மனைவியிடம் இருந்து நல்ல பெயர் கிடைக்கவில்லை என்கிற கவலை ஒரு பக்கமாய் இருக்கத்தான் செய்கிறது. காலம் மிகச்சிறியது. தான் தொலைத்த சந்தோசத்தை, இழந்த பசுமையை தன் பிள்ளை தொலைக்கவில்லை என்ற நிம்மதிப்பெருமூச்சு அவர் ஆத்மாவை திருப்திப்படுத்திக் கொண்டது.

* * *

# ராவணன்

## ஏன் பத்துமுகங்களைக் கொண்டவனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான்?



ராவணன் பத்து முகங்களைக் கொண்ட ஒருவனாக நம்ஒவ்வொருவருக்கும் பரிச்சயமானவனாக இருந்தாலும் கூட, அவன் ஏன் அவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளான் என்பது பரவலாக அறியப்படாத ஒரு விடயமாக இருந்து வந்துள்ளது. பாரம்பரிய இந்திய தத்துவ ஞானமானது, ஒருவர் தன் அடிப்படை உணர்ச்சிகளைக் கட்டுப்புடுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. அத்தோடு அறிவு மட்டுமே ஒப்புயர்வற்றதென்றும் அது முழங்குகிறது. கோபம், கர்வம் பொறாமை, மகிழ்ச்சி, வருத்தம், பயம், சுயநலம், தணியாத விருப்பம், லட்சியம் ஆகிய ஒன்பது அடிப்படை உணர்ச்சிகளை வெறுத்து ஒதுக்குமாறு மகாபலிப் பேரரசன் இராவணனுக்குப் போதிக்கிறான். அறிவு மட்டுமே வணக்கத்திற்குரியது என்றும் அவன் எடுத்துரைக்கின்றான். மனிதன் தன் சுயத்திலிருந்து மீள்வதன் அவசியத்தை எப்போதுமே வலியுறுத்தி வந்துள்ள இந்திய ஆன்மீக ஞானிகள் ஆன்மா மேன்மையுறுவதற்கு இந்த ஒன்பது உணர்ச்சிகளும் தடையாக இருப்பதாகக் கூறினர்.

ஆனால், தான் இந்தப் பத்து முகங்களைக் கொண்டிருப்பது தன்னை ஒரு முழுமையான மனிதனாக ஆக்குவதால் தான் அவை குறித்துப் பேருவகை கொள்வதாக மகாபலி அரசனுக்கு ராவணன் பதிலளிக்கிறான். ஒரு முழுமையான மனிதனின் உச்சக்கட்ட எடுத்துக்காட்டாக ராவணன் தன்னைப் பார்க்கிறான். தான் தெய்வாம்சம் பொருந்தியவன் என்பதுபோல அவன் வெளிவேசம் போடவில்லை. சமூக சமய ரீதியான விதிமுறைகள் அவனை மட்டுப் படுத்தவில்லை. மனிதன் எவ்வாறு இருக்கவேண்டும் என்று இயற்கை விதித்திருந்ததோ அவன் அவ்வாறு இருந்தான். ராமனின் விடயத்தில் செய்ய முடிந்ததைப் போல ராவணனின் விசயத்தில் அவனது மற்ற ஒன்பது முகங்களையும் இந்த சமூகத்தால் ஒடுக்க முடியவில்லை. ராமன் தெய்வீகப் புருசனாகப் பார்க்கப்படக் கூடும் ஆனால் ராவணன் பூரணத்துவம் பெற்ற ஒரு மனிதனாகத் திகழ்ந்தான்.

தனது தணியாத விருப்பங்களின்மீது எவ்வித கட்டுப்பாடும் இல்லாத ஆனால் வாழ்க்கையை ஆரத் தழுவுவதற்கும் முழுமையாக ருசித்துப் பார்ப்பதற்கும் ஆர்வமாக இருந்த ஒரு மனிதனின் குறியீடாகவே நமது இதிகாசங்கள் ராவணனைப் பத்து முகத் தோனாகச் சித்தரிக்கின்றன.

**- ஆனந் நீலகண்டன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-5

அலெக்ஸ்பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.



# வித்தகர்கள்



தான் தேடிவந்த எழுத்தாளரின் வீடு, நெருங்கி விட்டதைக் கண்டதும், தனது மிதிவண்டியின் வேகத்தைக் குறைத்துக் கொண்டு, அவரது தெருவோரக் கேற்றடியில் போய் நின்றான் பரமன். அவனது பார்வை அந்த எழுத்தாளரின் வீடு மற்றும் வளவு எல்லாவற்றின்மீதும் சுற்றிச் சுழன்று கொண்டு, இறுதியில் கேற்றடியில் வந்து நின்றது.

நவீனமயமானதொரு அந்தக் கல்வீட்டைச் சுற்றி, குளிர்மிகு பயன்தரு மரங்கள் வளர்ந்து சடைத்து நின்றன. தெருவோரக் கேற்றிலிருந்து வீட்டின் முகப்புவரை இருபக்கமும் அழகான குரோட்டன் செடிகள்... அதற்குப் பின்னால் விதம் விதமான பூக்களைக் கொண்ட செவ்வரத்தை மரங்கள்... கேற்றிலிருந்து வீடுவரை, நிலத்திற்குப் பதிக்கப்பட்டிருந்தன மாபிள் கற்கள்...

எழுத்தாளரும் அவரது மனைவியும் ஊரிலுள்ள பிரதேச செயலகத்தில் ஓர் உயர்ந்த பதவியில் பணியாற்றுவதை பரமன் கேள்விப்பட்டிருந்தான். நல்லதொரு வசதியான வாழ்வு அவர்களுக்கு இருந்தது. இருவரும் பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள். சிறப்புப் பட்டதாரிகள். அதைவிட, அவர்களது மூத்தமகன் இலண்டனில் வைத்தியத் துறையில் மேல்படிப்புப் படிப்பதாகவும், இரண்டாவது மகன் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருட மாணவன் என்பதையும், மூன்றாவது மகள் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஏ. எல் படிக்கும் ஒரு மாணவி என்றும் அறிந்துகொண்ட விடயங்கள் ஓரளவுக்குப் பொய்யல்ல... என்பது புலப்பட்டது பரமனுக்கு.

அவனுக்குள் ஏற்பட்டிருந்தது அக்கணத்தில் சற்று தயக்க உணர்வு! உள்ளே போவதற்குக் கூச்சப்பட்டு நின்றவனை, வீட்டுவளவினுள் கட்டி நின்ற அல்ஷேசியன் நாயொன்று கண்டுவிட்டுக் குரைக்க ஆரம்பித்தது. நாயின் குரைப்பொலி கேட்டு எவரும் வெளியே வராததால், இப்போது அவன் தன் குரலை உயர்த்தினான்.

" வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்... "

“ஆரது...?” என்று கேட்டபடி... உள்ளிருந்து வெளியே வந்தாள் ஒரு பெண். தெருவோரக்கேற்றடியில் பரமன் நிற்பதைக் கண்டுவிட்டு, அவனருகில் வந்தாள்.

“எழுத்தாளர் செந்தில் ஐயா நிற்கிறாரோ..?”

“நீங்கள்... ?”

அவன் ஒருகணம் தயங்கிவிட்டு, தான் எழுத்தாளர் செந்திலைச் சந்திக்க வந்த விடயத்தைக் கூறினான். அருகில் நின்ற பெண்மணியின் முகத்தில் வியப்பு!

“ சரி... உள்ள வாங்கோ... ” கூறிவிட்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெண் திரும்பிச்செல்ல, பரமனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

எழுத்தாளர் செந்தில் வீட்டின் நடுப்பகுதியில், ஒரு குசன் கதிரையில் அமர்ந்திருந்தவாறு, தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். பரமனைக் கண்டதும், அவர் தன் மனைவியை வினாக்குறியாய் நோக்கினார். அவரது முகமாறுதலை அவதானித்த பரமன், தன்னைப்பற்றிச் செந்திலுக்கு அறிமுகம் செய்தான்.

" வணக்கம் சேர்! என்னுடைய பேர் பரமன். உங்கட சிறுகதையளை பேப்பருகளிலை வாசிச்சிருக்கிறன். இப்ப கிட்டடியில உங்கட நாவலும் ஒண்டும் வாசிச்சனான். நல்லாத்தான் இருக்குது அக்கதை. அதுதான் உங்களை யொருக்காப் பார்த்திட்டுப் போவமெண்டு வந்தனான்..."

செந்திலுக்கு அவன் கூறிய விடயம் மகிழ்வாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. கதிரையில் அமரும்படி கூறினார். அவனும் அவருக்குப் பக்கவாட்டில் அமர்ந்து கொண்டான்.

"என்னுடைய கதைகளை மட்டுமல்லாது, நாவலை யும் படித்துவிட்டு, அது குறித்து என்னோட கதைக்க வந்தது ரொம்ப சந்தோஷம். அதுசரி! நீர் இப்ப என்ன செய்கிறீர்? எங்கை இருக்கிறீர்?" சிரிப்புமாறா முகபாவத்தோடு, பரமனைக் கேட்டார் செந்தில்.

"நான் உதிலை பக்கத்தூரில ஒரு அரிசி ஆலையில தினக்கூலியாக வேலை செய்யிறன். இடம் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு. பரமன் கூறிக்கொண்டுபோக, செந்திலின் முகத்தில் பலவிதமான உணர்வுகள்.

"எதுவரை படிச்சிருக்கிறீர்...?"

"பத்தாம் வகுப்பு..."

"எவ்வளவு கூலி தருகினம்...?"

அவன் அன்றைய தினவேதனத்தின் தொகையைக் கூறினான். அதைக்கேட்ட செந்திலின் முகத்தில் ஓர் இகழ்ச் சியான வெளிப்பாடு பிரதிபலித்தது. பரமன் எதையும் மறைக்க விரும்பவில்லை. வெளிப்படையாகவே பேசினான்.

இவ்வாறாக இவர்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருக்கையில், செந்திலின் மனைவி பால்தேநீர் கொண்டுவந்து பரமனின்முன் நீட்டினாள். பரமனும் அதைப் பவ்வியமாகப் பெற்று, தனக்கு முன்பாக இருந்த சிறிய மேசைமீது வைத்துக் கொண்டான். தொடர்ந்து இருவருக் குமான உரையாடல்கள் ஆரம்பமானது. அவ்வுரையாடலில், பல ஈழத்து எழுத்தாளர்கள் வந்து போனார்கள். பரமன், தான் படித்த சிறுகதைகள் பற்றிக் கூறினான். செந்தில் அதை எதுவித உணர்ச்சிகளுமற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்

இறுதியாக -

பரமன் தனது வாசிப்பின் அனுபவத்தினூடு, தான் பெற்றுக்கொண்ட ஒரு தரிசனத்தைப் படைப்பாக்கமாக எழுதியிருப்பதையும், அது இன்னமும் பிரசுரமாகவில்லை யென்றும் செந்திலிடம் தெரிவித்தான். செந்திலின் முகம் முகம் முதலில் ஆச்சரியப்பட்டுப் பின்பு அருக்களித்துக் கொண்டது. பரமனை ஒருவித கேள்விக்குறியோடு மேலும் கீழுமாகப் பார்த்தவர், மெலிதான ஒரு புன்முறுவலைத் தன்முகத்தில் தவழவிட்டார்.

"நல்ல விடயம். ஒருக்கா அதைக்கொண்டுவந்து தாருமன் பார்ப்பம்..."

"அதுக்கென்ன சேர். கொண்டுவந்து தாறன். என்ர முதல்கதை. படிச்சுப்பாருங்கோ.. குறைநிறையிருந்தால் சொல்லுங்கோ..."

"சரி... கொண்டு வாரும்... "

" கதையைக் கொண்டு வந்து தரும்படி செந்தில் கூறியது, பரமனுக்கு மகிழ்வாக இருந்தது. அதேவேளை, பொழுதும் இறங்கி இருள் சூழ்வதற்கு ஆயத்தமாகி நின்றது. கூடவே குளிர்காற்று வேறு.

பரமன் செந்திலிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

இரவு பரமனுக்கு நித்திரை வரவில்லை. மாலைப் பொழுதில் எழுத்தாளர் செந்தில் வீட்டிற்குப் போனதும், அவரோடு உரையாடியதும் அவ்வுரையாடலின் நடுவே செந்திலது முகபாவனைகளும் வரிசைக்கிரமமாக அவனது மனத்திரையில் வந்து போய்க்கொண்டிருந்தன.

பரமன் தீவிரமானதொரு வாசிப்பாளன். அதன் நிமித்தம் அவனும் எழுத ஆரம்பித்தான். 'எழுத்தாளர் என்பவர்கள் படைத்தல் தொழிலுக்கு அதிபதியான பிரம்மாவின் மறுவடிவமானவர்கள்...' என்று யாரோ சொன்னதின் நிமித்தம், அவன் கதை எழுதுபவர்களைக் கடவுளாக மனதுக்குள் நினைத்துக் கொண்டிருந்தான். மதிப்பு வைத்திருந்தான். அதன்நிமித்தம் செந்தில் எழுதிய ஒரு சமூகநாவலில் வரும் பாத்திரங்களும் அவர்களது உரையாடல்களும் அவனது மனதை நெகிழச்செய்து விட்டிருந்தன. அதனால் அவரைச் சந்திக்க முடிவு செய்தான். சந்தித்து உரையாடிவிட்டு, தனது வேலைத்தளத்திற்கு வந்துவிட்டான். மாலைப்பொழுதின் நிகழ்வுகளினை மனதிலே போர்த்தபடி... அப்படியே உறங்கிப்போனான்.

செந்திலும் அவரது மனைவியும் பிரதேச செயலகத் தில் பணிபுரிபவர்கள். வாரத்தில் ஐந்துநாள்களிலும் அவர்களைச் சந்திக்க முடியாது.

அதேபோன்று பரமனுக்கும் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் விடுமுறை கிடையாது. அதனால், ஒரு ஞாயிறு தினத்தில் தனது முதற் சிறுகதையோடு செந்திலைக் காணப் புறப்பட்டான் பரமன். வீட்டில் செந்தில் நின்றது மகிழ்வாக இருந்தது அவனுக்கு. பரமன் தனது சிறுகதைப் படைப்பை இருகரம்கொண்டு, மரியாதையாகச்செந்திலிடம் கையளித்தான். செந்தில் கதையை வாசிக்க ஆரம்பித்தார். வாசிப்பினூடு அடிக்கடி பரமனை நிமிர்ந்து பார்ப்பதும், பின்பு கதைக்குள் மூழ்குவதுமாக இருந்தார் செந்தில்.

கதையைப் படித்து முடித்ததும் - " கதையின் கரு, மொழிநடை, சொற்சிக்கனம் எல்லாமே நல்லாத்தான் இருக்கு. இதில ஒருசில திருத்தங்கள் செய்தபின், பிரசுரத்துக்குக் குடுக்கலாம்..."

பரமன் எதுவும் கூறவில்லை. அவர் மேற்கொண்டு என்ன சொல்ல வருகிறார் என்பதில் ஆர்வமாக இருந்தான்.

" சரி! இந்தக்கதை என்னட்டை இருக்கட்டும்..." என்று செந்தில் சொன்னதும், பரமனுக்கு மனதுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேசான ஓர் அதிர்வு. அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ள வில்லை. அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு வந்து விட்டான். அதன்பின் அவன் செந்திலிடம் செல்லவில்லை. ஆலையில் இரவு பகலென வேலைகள் அதிகமாக இருந்தன.

ஒருநாள் ஆலையில் வேலை முடிந்தபின், சகதொழிலாளி சயந்தனுடன் பிரதானவீதியில் உள்ள தேநீர்க்கடைக்கு தேநீர் குடிப்பதற்காகச் சென்றபோது, அங்கு செந்திலைக் காணவேண்டி ஏற்பட்டது. அவர் இவனைக் கண்டதும், தனது மோட்டார்சைக்கிளை அவனருகில் கொண்டுவந்து நிறுத்தினார். .

"எங்கை பிறகு வீட்டுப்பக்கம் காணேல்லை?" என்று கூறியபடி... தனது தோல்பையினுள் கிடந்த 'இதயம்' எனும் கலை இலக்கிய மாத சஞ்சிகையொன்றை எடுத்து, அதில்சில பக்கங்களைப்புரட்டிவிட்டு, அவனிடம்கொடுத்தார்.

பரமனால் நம்பவே முடியவில்லை. பிரசவ விடுதியில் முதன்முதலாக, தான் பெற்றெடுத்த குழந்தையைக்கண்டு பூரிப்படையும் ஒருதாயின் மனநிலையில் அவன் இருந்தான். சஞ்சிகையில் அவனைப்பற்றிய ஒரு சிறு குறிப்போடு, அவனது முதற்சிறுகதையென்றும், வளரத்துடிக்கும் இளம் எழுத்தாளர் என்றும் சிறியதொரு அடைப்புப் பெட்டிக்குள் அவனைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார் செந்தில்.

பரமனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்!

பத்தாம் வகுப்புவரை மட்டுமே படித்துவிட்டு, தினக்கூலியாகத் தொழில் செய்துகொண்டு, இன்று ஓர் 'எழுத்தாளன்' எனும் ஒரு நிலைக்கு, தான் வந்துவிட்டதை நினைத்து அவன் தனக்குள் பெருமிதம் கொண்டான். அவனது மகிழ்வினைக் கண்ணுற்ற செந்தில் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

"பத்திரிகையொன்று தனது முதலாவது ஆண்டு நிறைவையொட்டி, இலக்கியப்போட்டியொன்று நடாத்த இருக்குது. அதற்கு நீர் ஒரு சிறுகதையை அனுப்பும்..." என்று கூறிய செந்தில், பத்திரிகையின் முகவரியையும் போட்டிக்கான அதன் இறுதித் திகதியையும் ஒரு சிறு கடதாசித் துண்டில் எழுதிக்கொடுத்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டார்.

பரமனிடம் ஒரு புது உத்வேகம் தோன்றியிருந்தது. பிரசுரமான தனது சிறுகதையைத் திரும்பத் திரும்பப் படித்தான். அவனிடம் அளவுகடந்த மனப்பூரிப்பு உருவாகியிருந்தது. அந்தப்பூரிப்போடு, பத்திரிகை நடாத்தும் இலக்கியப்போட்டிக்கான சிறுகதையொன்றை எழுதிச் செழுமைப்படுத்திவிட்டு, உறங்கப்போனபோது, நேரம் இரவு ஒருமணியைத் தாண்டி விட்டிருந்தது.

ஒருவாறாக நான்கு மாதங்கள் கழிந்து விட்டன. இடைக்கிடை செந்திலிடம் சென்று, இலக்கியம் சம்பந்தமாகக் கதைத்துவிட்டு வரும் ஒருநாளில், அவன் போட்டிக்கு அனுப்பிய சிறுகதை மூன்றாவதாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ந்து கொண்டான். ஆலையில் சயந்தனைத் தவிர ஏனையோர் அவனை ஒருமாதிரியாகப் பார்த்தார்கள். ஆலை முதலாளியின் முகத்தில் சிரிப்பும் மலர்ச்சியும் தொலைந்துபோய் இருந்தன.

பத்திரிகையின் ஓராம் ஆண்டு நிறைவுவிழாவானது, அரங்கம் நிறைந்த மக்கள்முன்பு நடைபெற்றது. அரங்கில் இருந்தோரின் பலத்த கைதட்டல்களுக்கு மத்தியில், வர்த்தகப்பிரமுகர் ஒருவரிடமிருந்து பரிசினைப் பரமன் வாங்கியபோது... அவனுக்குள் எல்லைகடந்த உவகை ஊறிப்போயிருந்தது. அவனிடத்தில் இப்போது ஒரு நம்பிக்கையுணர்வு...

' என்னால் தொடர்ந்தும் எழுத முடியும்...!'

தனது எழுத்தாக்கத்துக்கு வழிகோலியவர்... என்ற உயர்ந்ததொரு மதிப்பீட்டின்பிரகாரம், செந்திலின் வீட்டிற்கு சென்றுவந்து கொண்டிருந்த பரமனுக்கு, சிலதடவைகளில் தன்னுடனான அவரது அணுகுமுறையில் தற்போது சிறியதொரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தான். குறிப்பாக, சிறுகதைப்போட்டியில் பரிசு பெற்றபின், அவருக்கும் தனக்குமான இலக்கிய நெருக்கத்தில், ஒரு நெருடல் உருவாகியிருப்பது பரமனுக்குத் தெரிந்தது. அவன் ஆரம்பத்தில் அதைப் பெரிது படுத்தவில்லை. ஆயினும், அவர் தன்னை அலட்சியப்படுத்துவதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'என்னாச்சு இவருக்கு...?' என்ற வினாவுக்கும் அவனுக்கு விடை தெரியவில்லை. அவரது பார்வை அடிக்கடி தனது 'சேட்பொக்கெற்'றின்மீது பதிந்து விலகியதை அவதானித்த பரமனுக்கு அதற்கான காரணமும் புரியவில்லை.

இப்போதெல்லாம் செந்திலின் வீட்டிற்குச் செல்வதற்குப் பரமனுக்குத் தயக்கமாக இருந்தது. அவனால் போகாமலும் இருக்க முடியவில்லை. எழுத்துலகிற்கு என்னை இனம் காட்டிவிட்டவர்... என்ற நன்றியுணர்வு அவரிடமிருந்து அவனைப் பிரிக்க முடியாதபடி தடுத்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை நாளில், பின்னேரப் பொழுதொன்றில் செந்திலின் வீடுநோக்கிப் போனான் பரமன். செந்தில் வீட்டில் இருந்தார். வீட்டின் வாசல்கதவு திறந்தபடி இருந்தது. கூப்பிட்டுவிட்டு, அவன் உள்ளே நுழைந்தபோது... செந்திலும் அவரது மனைவியும் தொலைக்காட்சி முன்பாக இருந்தார்கள். பரமனைக் கண்டதும் மனைவி கண்டும் காணாததுபோன்று எழுந்து உள்ளே போனாள். செந்தில் அவனை அமரும்படி கூறவில்லை. அது அவனது மனதை வலிக்கச் செய்தது. ஆயினும், அருகில் இருந்த குசன் கதிரைமீது அமர்ந்து கொண்டான். 'எங்கேயோ பிசகிப்போட்டுது...' என்று நினைத்தபடி, அவனும் தொலைக்காட்சித் தொடரினைப் பார்த்துக் கொண்டிருந்தபோது... வீட்டுக்குள்ளிருந்து செந்திலின் தாயார் வந்து பரமனின் முன்பாக நின்றாள். மெலிந்த தேகம்... வெள்ளை உடை... நரைத்த தலை... மருந்துக்குக்கூட சிரிப்பில்லாத எண்ணெய்முகம்...

" நீங்கள் புதுக்குடியிருப்போ...?" கிழவியின் குரலில் கடுமை தொனித்தது.

" ஓமோம்..." பரமன் கூறியபடி, செந்திலைப் பார்த்தான். அவர் எதுவித சலனமுமின்றி தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"புதுக்குடியிருப்பில கச்சான், கௌபி விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுறதாம். அதில எங்களுக்கும் கொஞ்சம் கொண்டுவந்து தரலாம் தானே..."

பரமன் இதைக் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. அதிலும், கிழவி கூறிய வார்த்தையில், இறுதியாக வந்த "தரலாம்தானே..." என்ற சொல்... பரமனுக்குள் உறைப்பாக விழுந்தது.

"சரியம்மா... சந்திச்சா கொண்டுவந்து தாறன்..."

கிழவி தனது அடுத்த வேண்டுதலை வைத்தாள்.

"முத்தையன்கட்டு உங்கட வீட்டுக்குப் பக்கத்திலேயே இருக்கு...?"

"எங்கட வீட்டுக்குப் பக்கத்திலையில்லை. எங்கட ஊருக்குப் பக்கத்தில..."

" எங்களுக்கும் ஒருபோத்தல் தேன் தேவை. கொண்டுவந்து தர ஏலுமே? கிடைச்சாக் கொண்டு வாரும்..." கிழவி கூறிவிட்டு, கடைக்கண்ணால் தன்மகன் மீது அனல்பார்வையை வீசியபடி... அங்கிருந்து அகன்றாள்.

பரமனுக்கு ஏதோ புரிவது போன்று இருந்தது. சிலநாள்களுக்கு முன்பு செந்திலின் பார்வை தனது 'சேட் பொக் கெற்'றின்மீது மேய்ந்ததையும், இப்போது அவரது தாயார் வலியவந்து கச்சான் கௌபி, தேன்போத்திலென்று கேட்பதையும் தனக்குள் வகுத்துப் பார்த்தபோது, அதற்கான விடை தெளிவாகத் தெரிந்தது பரமனுக்கு.

வேறொரு பிரதேசத்தைச் சேர்ந்தவன்... வேறொரு சமூகத்தைச் சார்ந்தவன்... பத்தாம்வகுப்புவரை படித்தவன்... தினக்கூலியாக இருப்பவன்... இப்படியாக, தமது சமூகத்துக்கும்... கல்வி அறிவுக்கும்... அந்தஸ்துக்கும்... கொஞ்சம்கூடப் பொருத்தமில்லாத ஒருத்தன், கதைகள் எழுத வெளிக்கிட்டதை செந்திலால் ஜீரணிக்க முடியவில்லை. இருப்பினும், தனது சுயலாப தேவைகளின் நலன் சார்ந்து, அவனையும் அவனது படைப்புகளையும் பயன் படுத்தி, அப்பயன்படுத்தல்மூலம் அவனிடமிருந்து மறைமுகமாக சில பிரதியுபகாரங்களை எதிர்பார்த்திருக்கிறார்.

ஆரம்பத்தில் பரமனால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. 'எழுத்தாளர்கள் எல்லோரும் மனத் தூய்மையானவர்கள்...' என்ற அவனது வெகுளித்தனமான கணிப்பானது, செந்திலுக்குள் இருந்த இன்னொரு மனிதனை இனம் காணத் தவறிவிட்டது.

பரமனால்தொடர்ந்தும் அங்கு நிற்க முடியவில்லை. நரகலுக்குள் இருப்பதைப்போன்ற உணர்வு அவனுக்குள் ஏற்பட்டது. எழுந்து கொண்டான். " அப்ப நான் போட்டு வாறன் சேர்..." என்றதும், அவனைத் திரும்பிப் பார்க்காமலேயே ஆடியது அவரது தலை.

பரமன் வெளியே வந்தான். அவனது மனதுக்குள் ஏதோ குடைவதும்... குமைவதும்... குத்துவதுமாக இருந்தன. அவனது பார்வை தற்செயலாக வெளியே வீட்டுச் சுவரில் ஆணியடித்து தொங்கவிடப்பட்டிருந்த செந்திலின் அகன்ற உருவப்படத்தின்மீது விழுகிறது. படத்திற்குக் கீழே 'இலக்கிய வித்தகர் செந்தில்' என்ற வாசகம் அவன் கண்களில் பட்டது. கூடவே 'எழுத்துலகின் இன்னொரு முகமும்' தெரிந்தது அவனுக்கு.

* * *

"எங்கள் மக்கள் ஏன் கோழைகளாகவும் பணிந்து போகும் இயல்பைக் கொண்டவர்களாகவும் இருந்தனர்? இது குறித்து எப்போதுமே வியந்து வந்திருக்கிறேன். ஒரு சிலர் மட்டுமே அதிகாரத்தையும் செல்வத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க மற்றவர்கள் அனைவரும் அந்த ஒரு சிலருக்கு அடி பணிந்து நடப்பதற்கான காரணம் என்ன? இச்சிறிய சுயநலவாதக் கும்பல் தங்களையும் தங்களது குழந்தைகளையும் அடக்கியாள்வதற்கு உதவும் வகையில் அவர்கள் ஏன் தங்கள் வாழ்க்கையைக்கூடத் தியாகம் செய்தனர்.? பயம்தான் அதற்குக் காரணமா? எனக்குத் தெரியாது. ஆனால் நான் எங்கு நோக்கினாலும் அங்கு அடக்குமுறையை மட்டுமே பார்த்தேன். பணம், சாதி, சடங்குகள், சம்பிரதாயங்கள் நம்பிக்கைகள், மூட நம்பிக்கைகள் ஆகிய அனைத்தும் சேர்ந்து பணிவன்பு கொண்ட பெரும்பான்மை மக்களைக் காலில் போட்டு மிதிக்கின்றன. வாழ்வதற்கான நியாயமான ஒரு வாழ்க்கை ஏன் இருக்க முடியாது? ஏன் என்ற கேள்வியை நான் கேட்கத் தொடங்கியதும் இறுமாப்புத் தலையன் என்ற பட்டப்பெயர் எனக்குக் கிடைத்தது. தீய ஆவிகள் என்னை ஆட்கொண்டிருந் ததாகவும் நான் ஒரு ராட்சசன் என்றும், நான் ஒரு அரக்கன் என்றும் கூறி, என் தந்தையின் பிராமண நண்பர்கள் என்னை எங்கள் கிராமத்திலிருந்து துரத்துவதற்கு ஒரு முறை முயற்சித்தனர்."




## இராவணனின் சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.
லண்டன்.





# கடவுளும் கண்ணனும்

கண்ணனின் தாய் அருந்ததி தனது மகன் கண்ணனைப் பற்றி மிகவும் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள். இதுவரை அவன் ஒரு நல்ல தமிழ் இளைஞனாக இருந்ததாகவும், தற்போது பல கேள்விகளைக் கேட்டுத் தனது தமிழ் அடையாளத்தை அவன் தேடுவதாக அவளது பேதை மனம் துடிக்கிறது. அவனுடைய பேச்சைக் கேட்டு மகள் கருணாவும் ஏதோ கேட்கத் தொடங்கி விட்டாள்.

கண்ணனின் குடும்பம் தமிழ் அகதிகளாக லண்டனில் காலடி எடுத்து வைத்தவர்கள்." கடவுள் அருளால் இவ்வளவு நன்றாக இருக்கிறோம். நீங்களும் மற்றவர்கள் மதிக்கத்தக்கதாக வாழ, உயர்ந்த எங்கள் தமிழ் கலாசாரம் சார்ந்த பண்பாடுகளை அறிந்து கொள்ளுங்கள். எண்ணங்களை விருத்தி செய்யுங்கள். கடவுளை வணங்குங்கள்" என்று தனது இரு குழந்தைகளுக்கும் அடிக்கடி புத்தி சொல்பவள் அவள்.

ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகள் பிறந்ததும் பெரும்பாலான புலம் பெயர்ந்த தமிழர்கள் மாதிரி அவளும் அவர்களின் மூன்றாவது வயதில் குழந்தைகளைத் தமிழ்ப் பாடசாலைக்கு அனுப்பினாள். அவர்கள் மூன்றாவது வயதிலேயே தேவாரங்கள் பாடவும். திருஞான சம்பந்தர் ஞானப் பால் குடித்த புராணக் கதைகளையும் கேட்டு மகிழ்ந்தார்கள். வெள்ளிக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும் தவறாது கோயில்களுக்கு அழைத்துச் சென்றாள். பல விரதங்களைச் செய்து தனது கணவர், குழந்தைகளின் நல்வாழ்வுக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள்.

தனது பிள்ளைகள் வைத்தியர்களாக வருவதற்காகப் பல ட்யூசன்களை அவர்களுக்கு ஏற்படுத்தி கெட்டிக்காரர்களாக்கினாள்.

இப்போது மகன் அவனின் இருபத்தி ஓராவது வயதில் வைத்தியக் கல்லூரியில் மூன்றாவது வருடப் படிப்பைத் தொடர்கிறான்.

அவர்களின் மகள் கருணாவுக்குப் பத்தொன்பது வயது. மெடிகல் சயன்ஸ்சில் பட்டப் படிப்பைத் தொடங்கியிருக்கிறாள். இருவரும் பலகலைக்கழக விடுமுறைநாட்களில் வீட்டில் நிற்கும்போது அருந்ததி அவர்களைக் கட்டாயம் கோயிலுக்கு அழைத்துச் செல்வாள்.

அவளின் கணவர், பரமானந்தன் இருவேலைகள் செய்து அவர்களின் குடும்பத்தையும் பராமரித்து, இலங்கையிலுள்ள உறவினர்களுக்கும் உதவி செய்கிறான். அத்துடன், ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து வருடத்திற்கொருதரம் என்றாலும் ஊருக்குப் போய்வர அவனுக்கு ஏற்படும் செலவுகளுக்காகக் கடன் பட்டும் வாழ வேண்டியிருக்கிறது.

அவனுக்கு நாற்பத்தி எட்டு எட்டு வயதாகிறது. நீரிழிவு நோய், உயர்ந்த இரத்த அழுத்தம் என்ற வருத்தங்களுடன் போராடுகிறான். அடிக்கடி வைத்தியரைப் பார்த்துப் பரிசோதனைகளும் மருந்துகளும் எடுக்கிறான். மனைவி மாதிரி அடிக்கடி கோயில்களுக்குப் போகாவிட்டாலும் முடியுமானவரை செல்வான்: வீட்டில் மனைவியால் நடத்தும் பூசைகளிலும் முடிந்த நேரங்களில் கலந்து கொள்வான்.

அருந்ததி, லண்டனுக்கு வந்த காலத்திருந்து ஒரு இலங்கைத் தமிழரின் கடையில் வேலை செய்கிறாள். இலங்கையிலிருந்து வரும்போது ஆங்கிலம் சரியாகப் பேசவராது. கடையில் வேலை செய்யும்போது அங்கு வரும் அன்னிய வாடிக்கையாளரிடம், அவளின் வேலை நிமித்தமாக ஏதோ தட்டுத் தடுமாறி பேசி தனது பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறாள். இந்த வெளியுலகத் தொடர்பைத் தவிர மற்றவர்களுடனான உறவு அருந்தததிக்குத் தெரியாது.

பெரும்பாலான தமிழர்கள் மாதிரித் தங்கள் கலாசாரத்தைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாகவிருக்கிறாள். இப்போது என்ன பிரச்சினை என்றால் மகன் தாயிடம் தங்கள் சமயம் பற்றிக் கேள்வி கேட்கிறான்.

முதலாவது வருட, வைத்தியக் கல்லூரிப் படிப்புக் காலத்திலேயே, அம்மா அடிக்கடி விரதம் இருப்பதன் விளக்கத்தைக் கேட்டான். அதைத் தொடர்ந்து அவன் வரும் போது ஏதோ கேள்விகள் கேட்கத் தொடங்கினான். அவன் பல இன இளம் தலைமுறையினருடன் படிப்பதும் அருந்ததிக்குத் தெரியாத புதிய வாழ்க்கையில் பல அறிவுகளைப் பெறுவதும் அதன் எதிரொலியாக அவன் கேள்விகள் கேட்பதையும் அவள் புரிந்து கொள்ளவேண்டும் என்று அவளது கணவன் அன்புடன் அறிவுரைகள் சொன்னான்.

"அம்மா நாங்கள் இந்துக்களா?" என்று ஒருநாள் கேட்டான்.

"ஒமோம், அதைப்பற்றி என்ன கேள்வி?"

'இந்துக்கள் என்றால் இந்தியாவில் வாழ்பவர்கள். நாங்கள் இப்போது பிரித்தானியர் இங்கு பிரித்தானியாவில் வாழ்கிறோம், அப்படி என்றால் இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் எப்படி இந்துக்களாக வரமுடியும்" என்றான் கண்ணன்.

"நாங்கள் இந்து சமயத்தைப் பின்பற்றுவதால் இந்துக்கள் என்று கூறிக் கொள்கிறோம்' என்றாள்.

"இந்து சமயம் என்றால் என்ன?" என்ற அவனது கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

"கத்தோலிக்கருக்கு இயேசு கடவுள், இஸ்லாமியர்களுக்கு அல்லா கடவுள். எங்களுக்க யார் கடவுள்"? கண்ணன் தனது அறிவை விருத்தி செய்யும் தொனியிற் கேட்டான். ''மகன். நாங்கள் பல கடவுளரை வணங்குறோம். படைக்கும் கடவுளாகப் பிரம்மா இருக்கிறார். காக்கும் கடவுளாக விஷ்ணு இருக்கிறார். அழிக்கும் கடவளாகச் சிவன் இருக்கிறார்'' என்றாள் அவள்.



இதெல்லாம், அவன் மூன்று நான்கு வயதுகளில் லண்டனிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சொல்லிக் கொடுத்தவைதான் ஆனாலும் அவன் இப்போது பல கடவுள்களின் தொழில்கள் பற்றிக் கேட்பது அருந்ததிக்கு மகிழ்ச்சி.

"காக்கும் கடவுள்தானா கண்ணனாக அவதாரம் எடுத்தவர்." என்று கேட்டபோது அருந்ததிக்கு மனிதில் கொஞ்சம் சந்தோசம் அரும்பத் தொடங்கிவிட்டது.

மகன் தனது பெயரின் மகிமையை உணரத்தான் இந்தக் கேள்வியைக் கேட்கிறான் என்று தனது மனதுக்குள் பெருமைப்பட்டாள்.

"அவர்தானே பெண்களின் ஆடைகளைத்திருடி அந்தப் பெண்களின் அவல நிலையைக் கண்டு ஆனந்தப் படுபவர். உலகத்தைப் பாதுகாப்பவர் ஏன் பெண்ணாசை வெறியன் மாதிரி பெண்கள் உடைகளைத் திருடிச் சந்தோசப் படவேண்டும்" அவனின் அழகிய தமிழ் குரலில் இருந்த சந்தேகம் அருந்ததியைத் தர்ம சங்கடப்படுத்தியது.

அவனின் பெயர் கண்ணன் என்பதால், அவனின் சினேகிதர்கள் குறம்புத்தனமாக,'' கண்ணன் வந்தான், கன்னியராடையைக் களவாடி மகிழ்ந்தான்" என்று பாடிக் கேலி செய்து மகிழ்வது அவனுக்குப் பிடிக்காது என்று அவளுக்குத் தெரியும். அப்படிச் சேட்டை விட்டால், இங்கிலாந்தில் சிறையில் தள்ளி விடுவார்கள் என்று அவனுக்குத் தெரியும். இளவயதிலிருந்தே மற்றவர்களைத் துன்புறுத்தக்கூடாது, எல்லோரையும் சாதி. மத, பெண், ஆண், நிறம். மொழி வித்தியாசமின்றி நடத்த வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஆரம்ப பாடசாலைகளிலேயே சொல்லிக் கொடுப்பார்கள்.

"அதெல்லாம் சும்மா கதைகள் மகன்" என்று சமாளித்து விட்டாள்.

"அம்மா சமயக்கதைகள் மக்களை நல்வழியில் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டவேண்டும் என்று சொல்வார்கள், ஏன் எங்கள் கதைகள் பல பெண்களை ஆண்களின் மகிழ்வுக்காக வாழ்பவர்களாகக் காட்டுகிறது"?

கண்ணன் மேற்கொண்டு தொடராமல் அவனின் கேள்விகளை, "மகன், உனக்காக நெய்த்தோசை செய்திருக்கிறேன். தோசை சூடு ஆறமுதல் சாப்பிடு மகனே" என்று சொல்லி பேச்சை மாற்றி விட்டாள். ஆனாலும் அவனின் கேள்விகள் இதுவரை அவனிடமிருந்து வராத புதிய தொனியில் வருவது அவளுக்குப் பயத்தைத் தந்தது.

கணவர் வந்ததும், "இவன் யூனிவர்சிட்டிக்குப் போகத் தொடங்கியதும் ஏன் இந்த விழல்க் கேள்வி எல்லாம் கேட்கிறான்" என்று கேட்டாள்.

"அருந்ததி, பல்கலைக் கழகம் என்பதால் பல கலைகளையும் கற்குமிடம். அங்கு பல தரப் பட்ட மாணவர்களும் வருவார்கள் தங்களின் சமயத்தைப் பற்றிப் பேசும்போது ஒருத்தரின் சமயப் பண்பாடுகளையும் கலாசாரத்தையும் பேசியிருக்கலாம். அதனால் கண்ணனின் மனதில் சில வித்தியாசமான கேள்விகள் வரும் தானே" என்று பதில் சொன்னான்.

அருந்ததி, ஒருநாள் வழக்கம்போல் தனது மகளிடம் பேசிக் கொண்டிருக்கும்போது, அவள் தமயன் கேட்ட கேள்விகளைச் சொன்னாள். இப்போதுதான் பல்கலைகப் படிப்பை ஆரம்பித்திருக்கும் மகள் தமயன் மாதிரிக் கேள்விகள் கேட்பதை ஆரம்பத்திலேயே தடுக்கவேண்டும் என்ற நம்பிக்கையில ஒரு தமிழ்த் தாய்பாசம் தவித்தது.

"எங்களுக்கு விளங்காத விடயங்களைப் பற்றித் தாய் தகப்பனிடம் கேள்வி கேட்பது நல்ல விடயம்தானே" என்றாள்.

தனது தாய் தங்களுக்காகவும் தகப்பனுக்காகவும், குடும்ப நலனுக்காகவும் அடிக்கடி விரதம் இருப்பதும் பட்டினி இருப்பதும் தனக்குத் தர்ம சங்கடத்தைத் தருகிறது என்றும் கருணா தனது தாய்க்குச் சொன்னாள்.

"அப்படியென்றால் நீ உனது கணவர் குழந்தைகளுக்காகக் கடவுளைக் கும்பிடமாட்டாயோ" என்று அருந்ததி சீறினாள். ஒரு நல்ல தமிழ்ப் பெண்ணாக இதுவரை வளர்த்த மகள் இப்படிக் கேட்டது அப்பாவி அருந்ததியைத் திகைக்கப் பண்ணியது.

"அம்மா, நான் பட்டினி இருந்தாற்தான் கடவுள் நன்மை புரிவார் என்பதை நம்புவதில்லை. எங்களைப் படைத்தவனுக்குத் தெரியாதா எங்களின் தேவைகள்? அதாவது, என்னையும் உங்களைப் போல், கந்தஸஸ்டி விரதம், கௌரி விரதம் எல்லாம் இருக்கச் சொல்லாதீர்கள். ஒரு குடும்பத்தின் நன்மைக்கு எல்லோரும்தானே பாடுபடுகிறோம். அப்படியென்றால் பெண்கள் மட்டும்தான் விசேட விடயங்கள் செய்ய வேண்டும் என்பதெல்லாம் பம்மாத்து" என்று சொல்லி விட்டாள்.

இந்த விடயங்கள் நடந்த சில நாட்களில், அருந்ததியின் தமயன் ஊரிலிருந்து வந்திருந்தான். அவனின் மனைவியின் சித்தப்பா ஒருத்தரின் மரணத்திற்குப் போயிருந்ததாகவும், அங்கு நடக்கும் மரணச் சடங்குகளுக்கே பெரிய செலவாகிறது என்றும் சொல்லிக் கொண்டிருந்தார்.

"இங்கேயும்தானே தம்பி, எல்லாச் சாமான்களும் கண்டபாட்டுக்கு விலையேறுது" என்றாள் அருந்ததி.

'ஓமோம், சனங்கள் செய்யுற கொடுமையால, ஐம்பெரும் கடவுளரும் கொதித்தெழுந்து இன்டைக்கு மழை. வெள்ளம், பூகம்பம், எரிமலை வெடிப்பு, கடல் கொந்தளிப்பு. காடுகள் எரிகின்றன. கடவுளரைக் கோபிக்கப் பண்ணினால் அவர்கள் தண்டனை தருவார்கள்தானே" கடவுளர்களுக்காக மிகவும் துக்கப்பட்ட பெருமூச்சுடன் சொன்னார் அருந்ததியின் தம்பியார்.

"மாமா நீங்க சொன்னதெல்லாம் நடக்கிறது கடவுளுக்கு வந்த கோபத்தால இல்லை. இந்த உலகத்து இயற்கைகளை பேராசை பிடித்தவர்கள் அழிப்பதாற்தான் அதன் எதிரொலியாக இந்த அழிவுகள் நடக்கின்றன." மருமகள் அருணா மாமானாருக்குச் சுற்றாடல் சூழ்நிலை பற்றிய விளக்கத்தைச் சொன்னாள்.

"என்ன இருந்தாலும் கருணா, அதிவேகமாக மாறிவரும் மனித சிந்தனைகளையும் அதனால் மக்கள் வாழ்க்கையில் வரும் பிரச்சினைகளையும் முகம் கொடுக்கத் தானே வேணும். உதாரணத்துக்கு ஒரு விசயம் சொல்றன், மரணச் சடங்கை நடத்த வந்த ஐயர் தனக்குத்தரவேண்டிய தானங்களுடன் காலணிகளும் கேட்டு வாங்கினார். இதெல்லாம் முன்னொரு காலத்தில நடைமுறையில இருக்கவில்லை, ஆனா இப்ப எல்லாம் புதிய விடயங்களாக, சமய சடங்கு அணுகுமுறையாக வரத் தொடங்கி விட்டது" துக்கம் நிறைந்த தொனியுடன் மாமா சொன்னார்.

"மரணச் சடங்குக்கும் ஐயருக்குக் காலணிக்கும் என்ன சம்பந்தம்" மாமாவிடம் தனது சந்தேகத்தைக் கேட்டான் கண்ணன்.

"இறந்தவரின் ஆவி சொர்க்கத்திற்குப் போகும் போது காலில் கல்முள் காயப்படுத்தாமல் இருக்க காலணியை அணிந்துகொள்ளச் சொல்லி ஆவியிடம் ஐயர் பிரார்த்தனை செய்வார். அதற்காக அவருக்குக் கொடுக்க வேண்டும்" மாமா விளக்கம் சொன்னார்.

"புதிதாக வந்த மொடலில் வாங்கித் தரச் சொல்லி ஐயரிடம் ஆவி கேட்டிருக்குக்கும் என்று நினைக்கிறேன்" கண்ணன் தனது ஆத்திரத்தைக் காட்டாமல் கிண்டலாகச் சொன்னான்.

அருந்ததிக்குத் தன் குழந்தைகளின் கேள்விகள் பல சந்தேகங்களையுண்டாக்கத் தொடங்கி விட்டன. ஏன் இந்தக் கேள்விகளைக்கேட்கிறார்கள் என்று அவள் கவலை தொடர்ந்தது.

வெளிநாடுகளுக்கு வந்த தமிழர்கள் பலர் தங்கள் சமயத்தை விட்டு வேறு சமயங்களை நாடுவது அவளுக்குத் தெரியும். ஆனாலும். தனது குழந்தைகள், தங்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தை விட்டு வெளியேறி, தங்கள் தாய் தகப்பனை ஒருநாளும் மனவருத்தப் படுத்தமாட்டார்கள் என்று திடமாக நம்பினாள். தாயும் தகப்பனும் அவர்களின் வாழ்க்கையின் உயர்வுக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்வது அவர்களுககுத் தெரியும்.

ஆனாலும் புதுச் சினேகிதங்கள் ஏதும் தேவயைற்ற புத்திமதிகள் சொல்லி அவர்களின் மனத்தைத் திருப்பு கிறார்களோ என்ற சந்தேகமும் சாடையாக வந்தது.

அன்று பின்னேரம், அருந்ததி வழக்கம்போல் தனது வயது வந்த இரண்டு 'குழந்தைகளையும்' அழைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றாள். அன்று அவர்களின் நல்வாழ்வுக்கு அர்ச்சனை செய்ய துண்டு வாங்கிக் கொண்டாள்.

கோயிலில் ஐயர், அருந்ததி கொடுத்த அர்ச்சனைச் சீட்டைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்காகக் கடவுளிடம் பிரார்த்தனைசெய்யத் தொடங்கினார். கண்ணன் தாயின் சொற்படி மிகவும் பக்தியுடன் கோயிற்சிலையைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

ஐயர் கண்ணனின் பெயருடன் ஆரம்பித்து நமஹா, ஸ்வாஹா என்ற சில வார்த்தைகளைப் பாவித்து, தட்டத்தில் வைத்த தீபத்தால் கடவுளை ஆராதித்து, கண்ணனின் தரகராகக் கடவுளிடம் பேசிவிட்டுத் தாயிடம் தட்டத்தை நீட்டிய போது, தாயார் தீபத்தைத் தொட்டு வணங்கி கண்களில் ஒற்றிய பின், அவள் அர்ச்சகருக்காகத் தட்டிற் பணம் போட்டாள். அதைத் தொடர்ந்து, தட்டிற்கிடைத்த பணத்தை எடுத்துக் கொண்டு அர்ச்சனைப் பொருட்களாக ஒரு வெற்றிலையில் ஒரு பழமும் திருநீறும் தாயிடம் கொடுத்தார் ஐயர்.

அதைத் தொடர்ந்து, அங்கு நடந்தவை கண்ணன் மனதில் சில கேள்விகளை எழுப்பியது. வீட்டுக்கு வரும் வழியில், தாயிடம் தயங்கித் தயங்கி ஒரு கேள்வி கேட்டான் அவள் மகன் கண்ணன்.

"அம்மா, அந்த ஐயர் எனக்காக் கடவுளிடம் என்ன கேட்டார்."

"உனது மேன்மைக்கும், உயர்வுக்கும் ஆசி அளிக்கும் படி கடவுளை வேண்டினார் ஐயர்'' என்றாள் அருந்ததி.

"அவர் சொன்னது உங்களுக்குப் புரிந்ததா" மகனின் இந்தக் கேள்வி தாயைத் திடுக்கிடப் பண்ணியது.

"அவர் எனக்குத் தெரியாத கடவுள் மொழியில், எங்களுக்காகக் கடவுளிடம் கேட்பதை நாங்கள் கேள்வி கேட்கக் கூடாது மகனே "என்றாள்.

"அப்படி என்றால் வாழ்க்கை பூராகவும் விரதம் பிடித்துக் காலையில் அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே'' என்று கண்ணீர் மல்கத் தமிழிற் பாடி உருகுகிறாயே அதைப் பற்றிக் கவலைப்படாத கடவுள், அன்னிய மொழியில் நீ தரகர் மூலம் பேசினாற்தான் அருள் புரிவார் என்று ஏன் நினைக்கிறாய்" என்று கேட்டான். தங்களின் நன்மைக்காகத் தாய் படும் துயர்கள் அவனால் புரிய முடியாதிருந்தது.

"மகனே அப்படி எல்லாம் கடவுளைப் பார்க்காதே. கோயிலில் ஐயர் பேசுவது தெய்வ மொழி. அதன் மகிமை வேறு"என்று படபடப்புடன் சொன்னாள்.

"அம்மா நீ எனக்கு அன்பு தரத் தமிழிற்தான் என்னைத் தாலாட்டினாய். எனது அறிவு வளர, எனது ஆங்கில ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் படிப்பித்தார்கள். எனக்கு கடவுள் ஆசீர்வாதம் தருவதாயிருந்தால் எனது மொழியில் அவருடன் தொடர்பு கொள்கிறேன். ஏனென்றால் கடவுள் தான் உலகத்து உயிரினங்கள் அத்தனையையும் படைத்தவர் என்றால் அவருக்குத் தனது குழந்தைகளின் மொழி தெரிந்திருக்க வேண்டும். "

அருந்ததிக்கு மகன் என்ன சொல்கிறான் என்று புரியவில்லை.

அவன் தொடர்ந்தான் "அம்மா, இன்று பல கோடி கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். கத்தோலிக்க மதத்தின் தலைவர் போப் ஆண்டவர் 1968ம் ஆண்டில், உலகக் கத்தோலிக்க மக்கள் அனைவரும் தங்கள் மொழியிற்தான் இயேசுவை வழிபடவேண்டும், பழைய பாரம்பரிய முறைப்படி லத்தின் மொழியில பிரார்த்தனைகளைக் கேட்கத் தேவையில்லை என்று கட்டளையிட்டார். எங்களை மாதிரி ஐயர் சொல்லும் கடவுள் மொழியைத் தெரியாத தமிழர்கள் உலகமெல்லாமிருக்கிறர்கள். இவர்கள் தங்கள் மொழியிற்தான் கடவுளுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று உங்கள் மதத் தலைவர் யாரும் சொல்லவில்லையா?"

"மகன் மற்றவர்கள் சொல்வதெல்லாம் சரியென்று நாங்கள் ஏன் எடுக்கவேண்டும், எங்கள் பாரம்பரியத்தைத் தொடர்வோம் அதில் ஒன்றும் குறை கண்டு பிடிக்காதே" என்றாள்.

"அம்மா, தயவு செய்து எனக்காக வீணாக உங்கள் நேரத்தையும் பணத்தையம் வீணாக்கவேண்டாம். எனக்கு இப்போது இருபத்தியொரு வயது. இன்னும் சில வருடங் களில் ஒரு உயிரைக் காப்பாற்றும் பொறுப்பை எடுக்கப் போகிறேன். எனக்குத் தேவையானால் கடவுளிடம் எனக்குத் தெரிந்த மொழியில் பேசிக் கொள்கிறேன். தயவு செய்து இனி என்னைக் கோயிலுக்கு வரச்சொல்லிக் கூப்பிடாதீர்கள்" என்றான்.

அருந்ததி என்ற தமிழ்த்தாய் திகைத்துப் போய் நின்றாள். ஆனாலும், அவள் நாளைக்கு இன்னொரு விரதம் இருப்பாள். தனது பிள்ளைகளுக்கு நல்ல புத்தியும் கடவுள் நம்பிக்கையும் தொடரவேண்டும் என்று பிரார்த்திப்பாள்.

* * *

கலையின் மேதமை,
கலையின் தகு பொருத்தம் என்பன
பேசப்பட்டு உன்னத இலக்கியங்களை
தலையில் தூக்கி வைத்துக்
கொண்டாடுவதை எதிர்த்து பின்
நவீனத்துவச் சிந்தனை எழுந்தது.

**- எஸ்ஸார்சி-**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-7

புலோலியூர்
ஆ.இரத்தினவேலோன்





# டாப்பர் மாமா

எங்கள் வகுப்பில் பயிலும் ஒரு சிலரைத் தவிர பொதுவாகக் குட்டண்ணா என்றே எல்லோரும் அவரை அழைத்து வந்தோம். பின்வாங்கிலிருக்கும் தடியன் ரவி, ராசேந்தி போன்ற ஒரு சிலரே அவரை 'டாப்பர் மாமா' என்று சொல்லி வந்தார்கள். ஆனாலும் அவரது வயதை ஒத்த ஆதவனண்ணா ஆக்கள் குட்டன் என்று விளித்தே அவரைக் கூப்பிடுவார்கள். கூப்பன் கடை ஆறுமுகப்பா மட்டுமே அவரை அழலாடி என்று அழைக்கலானார். " அது தான் அவரது இடாப்புப் பெயராம் " எட்டாவது அகில அதிசயத்தைக் கண்டு பிடித்தவன் போல் கட்டை ரவிதான், எட்டி ஒரு நாள் என' காதுக்குள் ஓதினான்.

எங்களூர் சந்து பொந்து எங்கிலும் குட்டண்ணா பிரசன்னமாக இருப்பார். அவருக்கென சொந்தமாக குடும்பத்தினரோ, வீடுவாசலோ இருந்ததாக நானறிய வில்லை. அவர் அயலூரைச் சேர்ந்தவரென்றும், மணமாகிய சில நாட்களிலேயே மனைவி இவரை விட்டு ஓடி விட்டதாகவும், அத் துக்கம் தாளாமல் உற்ற சனங்களையும் உதறித் தள்ளிவிட்டு அவர் எங்களூரில் வந்து தஞ்சம் புகுந்ததாகவும், ஒரு நாள் ஆதவனண்ணா தன் நண்பர்களுடன் பேசிக் கொண்டதை நானும் கேட்டுக் கொண்டு நின்றேன். எங்களூர் பிள்ளையார் கோவிலின் வடகிழக்குப் புறமாக ஆலமரத்தின் பின் ஒளித்துக் கொண்டிருக்குமாப் போல் அமைந்திருந்த சுருட்டுக் கொட்டிலின் ஒரு ஓரமாகவே அவர் தங்கியிருப்பதாக என் கூட்டாளிகள் கூறுவர்.

குட்டண்ணா எத் தொழிலிலும் நிலைத்திருக்க மாட்டார். எங்களூர் பள்ளிக்கூடத்தில் நான் நாலாம் வகுப்புப் படித்த காலங்களில் பிள்ளைகளுக்குப் பால் காய்ச்சிக் கொடுக்கும் வேலையைச் சில நாட்கள் செய்து வந்தார். அவர் பால் காய்ச்சும் போது பள்ளிக்கூடத்தையே சுண்டி இழுக்கும் மணம் ஒன்று வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னருகிருக்கும் ராமச்சந்திரன் அவர் காய்ச்சித்தரும் பாலை 'நல்ல உருசையாயிருக்கும்' என்று சொல்லி உறுஞ்சி உறுஞ்சிக் குடிப்பான். நாங்கள் எல்லோரும் ஐந்தாந் தரத்திற்கு வகுப்பேற்றப்பட்ட போது பால் காய்ச்சுவதற்கும், பாடங்கள் முடிய மணி அடிப்பதற்குமாக பள்ளிக்கூட நிரவாகம் நிரந்தரமாகவே வேறொருவரை நியமித்ததில் குட்டண்ணா முன்னாலிருந்த ஆறுமுகப்பாவின் கூப்பன் கடையில் அரிசி மற்றும் மாவு மூடை தூக்கும் வேலைகளை யும் ஏனைய தொட்டாட்டு வேலைகளையும் செய்து கொண்டி ருந்தார். பிறகான சில காலம் சேவையர் சுப்பப்பாவுடன் அளப்பனவிற்கும் செல்லானார். மேசன் முத்தர் பாரட்டியில் அவர் ' முட்டாள்' வேலை செய்த காலை ஒரு நாள்தான் கண்டதாக பெட்டை ரவி சொன்னதாகவும் ஞாபகம்.

குட்டண்ணா வயது வித்தியாசம் பாராது எல்லோரு டனும் பழகி வந்தார். அவர் கூறும் கதைகளையும் பாடும் காத்தான் கூத்துப் பாடல்களையும் சலிப்பின்றிக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அங்கதச் சுவையுடன் கதை சொல்ல வல்லவர். மைமல் பொழுதுகளில் கோயில் முன்றில் அவர் சப்பாணி கட்டி இருந்து விட்டாரென்றால் அவரைச் சுற்றிப் பெருங்கூட்டமே கூடிவிடும். அறுபத்து மூவர் வரலாற்றில் ஆரம்பித்து 360 பாகைகள் சுழன்று வந்து அன்றைய ஊர்ப் புதினங்கள் வரை சுவாரசியங் குன்றாது சொல்வார். 'இவ்வளவு விண்ணாணமுள்ள மனுசன் ஏன் ஒரு நிரந்தர தொழிலில்லாமல் அலைக்கழியிறார்' என கட்டை ரவி அடிக்கடி அங்கலாய்ப்பான்.

அப்போதெல்லாம் பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் தவறாது கூத்துகள் நடக்கும். கோயிலின் உள் வீதியிலுள்ள பட்டடையில் பரந்து கிடக்கும் மூங்கில் கம்பங் களில் சிலவற்றைக் கொண்டு வந்து வடக்கு வீதியில் நாட்டி கோயிலில் பந்தம் பிடிக்கும் செல்லனைக் கொண்டு வெள்ளை கட்டி கூத்துக் கொட்டகை அமைத்து 'பெற்றல் மாக்ஸ்' வெளிச்சத்தில் கூத்துக்களை ஆடுவர். இடைக்கிடை மேடை போட்டு 'சீன்' கூத்தும் நிகழ்த்துவர். அச்சமயங்களில் நல்லை யாண்ணனின் 'லைட் எஞ்சின்' வீதியெங்கும் ஒளி பாய்ச்சும்.

அக் கூத்துகளில் ஏதாவது ஒரு வேடங்கட்டி குட்டண்ணாவும் பட்டையைக் கிளப்புவார். அதிலும் காத்தான் கூத்தில் அவர் ஏற்கும் 'டாப்பர் மாமா' பாத்திரம் கன கச்சிதமாகவே அவருக்குப் பொருந்தி வரும். மேடை மீதேறி " ஓடாத வாச்சு கட்டி அங்கே ஒற்றைக் கண்ணில் கண்ணாடியும் டாப்பர் மாமா" என்று பாடிய வாறே அவர் சிந்து நடை நடந்து வரும்போது விசில் சத்தம் விண்ணைப் பிளக்கும். தடியன் ரவி, ராசோந்தி போன்றோர். குட்டண் ணாவை 'டாப்பர் மாமா' என்றழைப்பதற்கும் அதுவே மூல காரணமாயிற்று.

தோட்ட வேலைகள் செய்வதிலும் குட்டண்ணா அசகாய சூரனாகத் திகழ்ந்தார். புகையிலை வெட்டுக் காலங்களில் தோட்டங்களில் ஒரே சம்பளகாரனாய். தனியா ளாக நின்று உழைப்பதை நான் பல தடவைகள் பார்த்திருக் கிறேன். எங்கள் அப்புவின் தோட்டத்தறையில் மாய்ந்து மாய்ந்து அவர் வேலை செய்தது இன்றும் நினைவில் இருக்கிறது. அப்புவுக்கே சில சமயம் குட்டண்ணா ஆலோச னைகள் கூறுவதையும், "இவனென்ன பொடிப்பயல் எனக்கு யோசனை சொல்லுறான்" என்றில்லாது அவற்றையெல்லாம் காது கொடுத்து அப்பு கேட்பதையுங் கண்டிருக்கிறேன். புகையிலை உலர்த்து வேலைகளில் அத்தை வீடு மும்முரமாக மூழ்கியிருந்த ஒரு பங்குனி மாதத்து மத்தியானப் பொழுது அது. தீராந்தியில் அன்று உலர்த்தப்பட வேண்டிய புகையி லைகளை அப்புவும் குட்டண்ணாவும் வேறிரு சம்பளகாறரும் சோடெடுத்துக் கொண்டிருந்தனர். அச்சமயம் பின் வளவில் தீராந்திக்கு முண்டு கொடுக்குமாப்போல் கிளை விட்டுப் பரந்திருந்த பலா மரத்தடியில் கட்டியிருந்த இளம் மறி ஆடு 'மே மே' எனக் கத்திக்கொண்டிருந்தது.

கையில் தான் தூக்கி வைத்திருந்த புகையிலைக்கு, முன்னால் பரப்பப்பட்டிருந்து குவியலிலிருந்து தகுந்த மற்றும் நான்கு சோடிகளைத் தேடியவாறே "கந்தையாண்ணை உங்கடை மறியும் சோடி தேடுகிது போலை என நமட்டுச் சிரிப்புடன் குட்டண்ணா அப்பவைப் பார்தது கூறியது நேற்றுப்போலிருக்கிறது எனக்கு.

"ஓமடா மேனை, அதைக்கிடாயிலை விட கூவிலுக்கு ஒருக்கா சாய்ச்சுக் கொண்டு போக வேணும். ஓண்டுக்கும் நேரமில்லாமல் கிடக்குதடா" என்ற அப்பு சிறிதிடை வெளிவிட்டு "மெய்யே குட்டன், தெரியாமல் தான் கேக்கிறன், இப்ப ஆடமாடுகளைச் சினைப்படுத்த கால் நடைக் கந்தோரிலை ஒரு ஊசி போடுகினமாமே? கேள்விப்பட்டியோ நீ?" என'றவாறே குட்டண்ணாவை நோக்கினார்.

"அதைப்பற்றி நானும் அறிஞ்சிருக்கிறனண்ணை ஆனால் எனக் கெண்டால் அதிலை அவ்வளவு உடன் பாடில்லை. இயற்கைக்கு ஒவ்வாத சங்கதியண்ணை அது. மிருகங்கள் எண்டாலும் அதுகளுக்கும் உணர்வுகள் இருக்குத்தானே?" என்றவாறே குட்டண்ணா அக்கம் பக்கம் நோட்டம் விட்டு ஆத்தையோ அல்லது வேறு யாராவது பெண்பிரசுகளோ இல்லையென்பதை உறுதி செய்த பின்னர் குரலைச் சற்றுத் தாழ்த்தியவாறே சொல்லலானார். "கலவி முறையிலை சினைப்படுத்தினால்தானண்ணை அதுகளுக்கும் பத்தியப்படும். அதுகள் ஈனுற குட்டிகளும் ஆரோக்கியமான தாயிருக்கும். நோய் நொடிகள் இல்லாமல் நீண்ட கால மிருக்கும். கூடப்பால் கறக்கும் எண்டதுக்காக சினையூசி போட்டு, வாயில்லா சீவனுகளுக்குப் பாதகம் பண்ணக் கூடாது. அண்ணை நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதை யுங்கோ. பொயிலை உலர்த்து இல்லாத ஒரு நாளாய்ப் பாத்து நானே ஆட்டைச் சாய்ச்சுக் கொண்டுபோய் கிடாயிலை விட்டுக்கொண்டு வாறன்.

குட்டண்ணா சொல்ல விழைந்த விடயங்களை ஓரளவிற்குப் புரிந்ததில் அப்பு தலையாட்டினார். ஆனால் எனக்குத்தான் எதுவுமே புரியாதிருந்தது. மறுநாள் காலை, வகுப்பில் எவருமில்லா நேரமாகப் பார்த்து ராமச்சந்திரன் எனக்கு விளக்கிக் கூறும் வரையில், அவையாவும் பெரும்பு தினமாகவும் இருந்தது.

புலவொலி புத்தகசாரைலயில் நான் வேலை செய்து கொண்டிருந்தபோது எனக்கு வயது இருபதாகியிருந்தது. 'அட்வான்ஸ் லெவல்' முடிந்தாயிற்று 'வெயிட்டிங் லிஸ்டில்' கூட பல்கலைக்கழக நுழைவு கிடைக்கப் போவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுவும் உறுதியாகிவிட்டது. சார்ட்டட் எக்கவுண்டன்சி அல்லது அதையொத்த உயர்கல்வி கற்பதென்றாலோ அல்லது வேலை தேடவோ தலைநகர் சென்றாக வேண்டும். விரைவில் அதற்கான ஆயத்தங்களை எடுக்குமாறு ஏற்கனவே ஐயா கூறியிருந்தார். அதுவரையில் எனது அண்ணனின் இப்புத்தகக் கடையே எனக்கு அபயமளித்திருந்தது.

எங்களூர் 'பசார்' ஏறத்தாழ எங்களது கடையிலிருந்தே ஆரம்பமாகியது. வடக்குத் தெற்காக விரிந்து செல்லும் வீதி எங்கள் கடை முன்றில் வந்து இரு கிளைகளாகப் பிரிகின்றது. பிரதான வீதியின் மேற்கே எங்கள் கடை அமைய, குண்டுகளும் குழிகளும் செம்பாதியாய் பரந்துபட்டு கிழக்கே பிரிந்து செல்லும் வீதி ஆதார வைத்திய சாலையில் சென்று முடிகிறது. இரு வீதிகளுக்குமிடையே அகப்பட்டுக் கிடந்த நிலத்தில் பிரமிப்புடன் நோக்கத்தக்கதாயொரு 'பெற்றல் பங்க்' பகலிரவாய் இயங்கிக் கொண்டிருந்தது. எங்களது கடைக்குத் தெற்கே தியாகவின் றொட்டிக்கடை. அதைத் தொடர்ந்து கண்ணுக் கெட்டிய தூரம் வரை புகையிலைத் தோட்டத்தறைகள். அதற்குமங்கால் சென்றால் ஆடு தின்னாப்பாலை புதர்மண்டிக் கிடக்கும். அப்புதர் களினூடு மேற்கே செல்லும் குச்சொழுங்கை வழியே ஒரு நூறு யார் தூரம் பயணித்தால் அம்மன் கோயிலைச் சென்றடையலாம்.

புத்தகக் கடையிலிருந்து பார்த்தால் 'பெற்றல் பங்கிற்கு' அப்பால் நல்லையாண்ணனின் 'அம்பாள் லைட் அண்ட் சவுண்ட் சேர்விஸ்' எனும்கடையின் பெயர்ப்பலகை தேமா மரங்களினூடும் தெளிவாகவே கண்களில் திரையிடும். ஐலட் எஞ்சின் கடைக்குத் தெற்கே சில்வாவின் பாண் பேக்கரி. பாண் வாங்க வருவோரின் 'கியூ' சமயங்களில் ஆஸ்பத்திரி சந்திவரை நீண்டு சென்றதும் உண்டு. பேக்கரியை அடுத்து சதா ஒலியெழுப்பிவாறே ஒரு மில். அந்த அரிசி மில்லை ஒட்டியவாறே மக்கி வீதியொன்று கிழக்கே சென்றது. அவ்வீதி புகையிரதப் பாதைபோல் வளைந்து நெளிந்து அரை மைல் தூரத்திற்கு அப்பால் பள்ளிக்கூடத் தோடு ஒட்டி உறவாடி நிற்கும் எங்கள் பிள்ளையார் கோவிலில் சென்று முடிகிறது.

அரிசி மில்லிற்கு தெற்கே இரும்புக்கடை, பனம் பொருள் விற்பனை நிலையம், லோன்றி, சங்கக்கடை, சலூன் என அணிவகுத்திருக்கும் கடைகளின் எதிர்ப்புறமாய் ஆலடிச் சந்தை அமைந்திருந்தது. அதிலிருந்து கூப்பிடுதூரத்தில் ஆசுப்பத்திரி. நாலாபக்கத்திலிருந்தும் பன்மைல்கள் தாண்டி நோயாளிகள் சிகிச்சைக்காக தினமும் அங்கு வந்து போனார்கள்.

புத்தகக் கடை கல்லாவிலிருந்து பாரத்தால் எங்கள் பார்வையை முழுதாய் ஆக்கிரமிப்பது நல்லையா கடைக்கும் சில்வா பேக்கரிக்கும் இடையில் நசுங்கிய வண்ணம் உள் நீண்டு செல்லும். மூன்று முழத்தளவு குச்சொழுங்கை தான். அவ்வொழுங்கை கள்ளுத்தவறணை போன்றதொரு தோற்றங் காட்டும் தகரக் கடையொன்றில் போய் விழுகிறது. அந்தத் தகரக் கொட்டிலில் தான் இப்போ குட்டண்ணா ஒரு எண்ணெய்க் கடை போட்டிருக்கிறார். அதிகாலை முதல் மைமல் பொழுது வரை போத்தலும் பையுமாக ஆண்களும் பெண்களும் அங்கு அணி திரள்வர்.

குட்டண்ணா இப்போது முழுவதுமாய் மாறிப் போயிருந்தார். 'பீசு வேட்டி தானுடுத்து பித்தல் சால்வை தோளில் போட்டார் டாப்பர் மாமா என்று காத்தான் கூத்தில் சிந்து நடையில் நடப்பது போலவே நிதர்சனத்திலும் தன்னை ஆக்கிக் கொண்டிருந்தார். தொட்டாட்டு மற்றும் தோட்ட வேலைகள் எவற்றிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் நாளும் பொழுது எண்ணெய் கடையே கதியென்று கிடந்தார்.

ஆலடிக் கடைகள் முதல் தியாகு றொட்டிக்கடை வரை எண்ணெய் 'சப்ளை' குட்டண்ணா தான். நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், இலுப்பெண்ணெய், ஆமணக்கு எண்ணெய், மருந்தெண்ணெய் என சகல வகையறாக்களும் அவரது கடையில் கிடைக்கும். அதிலும் குட்டண்ணாவின் மருந்தெண்ணை வலு விசேடமானது. தூர இடத்துச்சனங்களும் தேடி வருமளவிற்கு பிரசித்தமானது. தன்னைத் தேடி வருபவர்களுக்கு எல்லாம் மருந்தெண்ணையை அளந்து போத்தலில் வார்த்துக் குடுப்பதற்கும் அப்பால் தோலில் அதைப்பூசி நன்றாக உள்வாங்குமாறு உராசி, நீவித் தேய்த்து விடுவதை ஒரு 'பிசியோதெரபிஸ்ட்' போலவே நின்று செய்வாராம். ஆலடிச் சந்தையில் 'கறி' விக்கும் வடிவழகிக்கு கை, கால், தொடையெல்லா மருந்தெண்ணை பூசி அவர் மசாஜ் பண்ணிவிடுவதை தான் ஒரு நாள் நேரில் கண்டதாக ஏக்கம் படிந்த கண்களுடன் கட்டை ரவி எனக் கொரு நாள் சொன்னான்.

இதோ, இன்னும் கொஞ்ச நேரத்தில் கல்லாவில் அமருவதற்கு அண்ணர் வந்து விடுவார். மதிய சாப்பாட் டிற்குப் பிறகான சில பொழுதுகள் குட்டித் தூக்கம் அவரை அரவணைத்து விடும். மீண்டும் மூன்றரை மணியளவிலேயே கல்லாவில் வந்தமர்வார் அவர். சொன்னாற்போல் அந்த நேரம் பார்த்து சைக்கிளில் டபிள் பெடல் போட்டவாறே ராசேந்தியும், கட்டைரவியும் கடையடிக்கு வந்து விடுவர். சமயங்களில் ராமச்சந்திரனும் பிரசன்னமாகியிருப்பான். கடை வாசலிற்கு வடக்கே கொஞ்ச தூரம் தள்ளி வேலிக்கரை யோரமாக கிளைகள் பல விட்டுக் கொழுத்துப்போய் நிற்கும் பூவரச மரத்தடியில் மூவருங் கூடுவர். குடை வெறிச் சோடிக் கிடக்கும் பொழுதுகளில் நானும் அவர்களுடன் இணைவதுண்டு.

அண்ணர் இருமியவாறே கல்லாவடிக்கு வந்து விட்டார். அதற்காகவே காத்திருந்த நான் கல்லாவை விட்டெழுந்து கடை முன்றலிற்கு வருகிறேன். முன்னதாகவே மூவருமின்று மரத்தடியில் கூடி நின்றனர். தியாகுவின் கடையில் றொட்டி கொத்தும் சத்தம் உச்சத்திலிருந்தது. அதைவிட உச்சஸ்தாயியில் இலங்கை வானொலியில் ரி. எம். எஸ் இன் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

"கெதியிலை வாடா. உனக்காகத்தான் வெயிட்டிங்" என்ற ராமச்சந்திரன் நான் அணித்தானதும் சொல்ல ஆரம்பித்தான்

"அம்மன் கோயிலடியிலை நேற்று ராத்திரி டெக்கிலை படம் போட்டாங்கள். மூண்டு படமும் முடிய விடியத் தொடங்கீட்டுது. காலம்பற ஒரு அஞ்சு அல்லது அஞ்சரை மணியிருக்கும் நான் இந்த வழியாலைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி வந்தனான். அந்த நேரம் வடிவழகியைக் கூட்டுக் கொண்டு குட்டண்ணா குச்சொழுங்கைக்குள்ளாலை வெளிப்பட்டு வந்தார். அந்தக் கருக்கல் பொழுதிலை வடிவழகிக்கு எண்ணைக் கடையிலை என்ன வேலை எண்டு யோசிச்சபடியே நான் வீட்டை போட்டன். இண்டைக்கு மத்தியானம் உளுந்து திரிப்பிக்கவெண்டு மில்லடிக்கு வந்த இடத்திலை உவன் பெற்றல் பங்க் மயிலனைச் சந்திச்சனான். மயிலன் சொன்ன சங்கதிகள்தான் பெரும் புதினமா இருந்தது"

அவன் கூறும் கதைகளுக்கு எங்கள் மூவரினதும், குறிப்பாக கட்டை ரவியின் பிரதிபலிப்பு மிதமான ஆர்வமாக இருப்பது கண்டு ராமச்சந்திரன் தொடர்ந்தான், "ஒவ்வொரு நாளும் இரவு ஒன்பது ஒன்பதரை மணிக்கு குட்டண்ணா அம்மன் கோயிலடிக்கு வடக்குப் பக்கமாயிருக்கிற வடிவழகியின்ரை வளவுக்கப் போய் அவளைக் கையோடை கூட்டிக் கொண்டு வந்து குச்சொழுங்கைக்குள்ளை உள்ளடுகிறதாகவும், பிறகு கருக்கலோடையே கூட்டிக்கொண்டு போய் அவளை வளவிலை விட்டுட்டு வாறதாகவும் சொன்னான். வடிவழகி தகரக்கடைக்குள்ளை உள்ளிட்டதும் நல்லையா கடையிலை இருக்கிற வாங்கிலை வந்து குட்டண்ணா உறங்கி விடுறாராம். பேக்கரியைப் பூட்டிப் போட்டு வாசற் படியிலை மிலாந்திக் கொண்டிருக்கிற சில்வா குறிப்பா அந்த நேரங்களிலை வெளிப்பாடில்லை எண்டும் மயிலன் சொன்னான்."

சகலத்தையும் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த கட்டை ரவி ஏக்கப் பெருமூச்சொன்றை விட்டவாறே "என்னடா கதையிது?" என அங்கலாய்க்கலானான். அடுத்த கணமே ஏதோ ஒன்று நினைவிற்கு வந்தவனாக, "ஓமடாப்பா முந்த நாள் நல்லெண்ணை வேண்டப் போன பொழுது நானும் அவதானிச்சன், பேக்கரிக் கோடிப்புற வேலியிலை, குட்டண்ணாவின்ரை கடைப்பக்கமாக ஒரு கண்டாயம் கிடந்தது."

கட்டைரவி சொல்லிமுடித்ததைத் தொடர்ந்து நிலவிய நிசப்தத்தை ராசேந்தியின் மதுரக்குரல் இல்லாதொழித்தது. "ஆடாத குட்டிகளை, ஆட்டி வைக்க வல்லவராம் டாப்பர்மாமா". வாயால் உடுக்கடித்தவாறே அக்காத்தான் கூத்துப் பாடலிற்கு அணிசேர்த்துக் கொண்டிருந்தான் கட்டைரவி. தியாகு கடையில் ஒலித்துக் கொண்டிருந்த வானொலி இப்போ ஓய்ந்திருந்தது.

கடைக்கு சனங்கள் வரத் தொடங்கியதும் நான் கடைக்குள்வந்து விற்பனையைக் கவனிக்கத் தொடங்கியிருந்தேன். ஒரிடையில் வெளியில் எட்டிப் பார்த்தேன். பூவரச மரத்தடியில் நண்பர்கள் கூட்டம் இன்னும் கலையாதிருந்தது.

ஊரை விட்டுக் கிளம்பி வந்து இருபது ஆண்டுகள் ஆயிற்று. இப்போது நான் முழுவதுமாய் தலை நகர் வாசியாகவே ஆகிவிட்டிருந்தேன். எங்களூரிற்கே உரித்தான மொழி சற்று என்னை விட்டு விடைபெற ஆரம்பித்திருந்தது. மனைவி சாந்தி பிள்ளைகளிருவரென எனது குடும்பம் என்னுடன் இருந்தாலும் பெற்றவர்களையும் உடன்பிறந்தோரையும் ஊர் சென்று பார்த்து வரமுடியாதபடி கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டு தரைவழிப்பாதைகள் யாவும் முற்றாகவே முடங்கியிருந்தன. வான் வெளியாகச் சென்று வருவதே ஒரே மார்க்கம். அதற்கும் பெமிட் பெற மாதக் கணக்கில் தவமியற்ற வேண்டும்.

அத்தருணத்தில்தான் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் தோற்றுவதற்காய் ராமச்சந்திரன் ஊரிலிருந்து வந்திருந்தான். படிக்கும் காலத்தில் இருந்ததை விட சற்றுப் பருத்திருந்தான். உச்சந்தலையில் பெரிதாக சொட்டை விழுந்திருந்தது. காதருகில் மீதமிருந்த சில முடிகளும் நரை கண்டிருந்தன. கன்னங்கள் இரண்டும் அதைத்துப் போயிருந்தன. முன்னரை விட முகத்தில் சிரிப்பு வெகுவாகக் குறைந்திருந்தது. தூரத்து உறவு முறையிலுள்ள ஓராசிரியையை மணமுடித்து இரு பெண் குழந்தைகளுக்கு அப்பாவாகி யிருந்தான்.

விமானத்தில் பயணித்த தன் முதலனுபவத்தை ராமச்சந்திரன் விலாவாரியாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அதிகாலையிலேயே ஊரிலிருந்து புறப்பட்டு யாழ்நகர் வந்து பின்னர் அங்கிருந்து பலாலி விமானநிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு பல மணி நேரம் சுட்டெரிக்கும் வெய்யிலில் கால்கடுக்க காவல் நின்று விமானமேறி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பயணஞ்செய்து பின் இரத்மலானையில் வந்திறங்கி பேருந்தைப் பிடித்து வெள்ளவத்தையில் நான் தங்கியிருக்கும் தொடர்மாடி மனைக்கு வந்திருக்கிறான். ஒன்றரை மணி நேர விமானப் பயணத்திற்காக முழுப்பகற் பொழுதினையும் பதகளிப்புடன் கடந்து வந்த அவனது அனுபவம் ஏற்கனவே ஊர் பற்றியும் அங்க வதியும் என் அம்மா, ஐயா பற்றியும் நான் கொண்டிருந்த கவலையை மிதமாக்கின. ஊரிற்குப்போய்வரவேண்டுமென்று அடிமனதில் நான் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச விருப்பினையும் மொத்தமாக முடமாக்கின.

ஊரில் என் சகாக்களில் ராசேந்தி, தங்கராசன் எனப் பலர் எறிகணை வீச்சிலும் குண்டு வீச்சிலும் சிக்கிப் பலியாகி விட்டிருந்தார்கள். தடியன் ரவி மாவீரனாகியிருந்தான். எஞ்சியிருந்த மிச்ச சொச்சப்பேர்களிலும் பெரும்பாலானவர்கள் காணாமலாக்கப்பட்டிருந்தனர். இவையாவும் ஏற்கனவே நானறிந்திருந்த செய்திகள்தான், ஆனபோதிலும் உற்ற நண்பன் சொல்லக்கெட்டபோது உடல் பதறிற்று. மனக் கண்களில் பழைய சில காட்சிகள்மீதெழுந்து வந்ததில், இதயத்தை யாரோ இறுகப் பிடித்து முக்குவது போன்றதோர் உணர்வு.

கதையோடு கதையாக குட்டண்ணாவின் கதையும் வந்திடறிற்று "ஆசுப்பத்திரியடி சென்றியிலை ஆமிக்கும் இயக்கத்துக்கும் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சண்டைக்குள்ளை ஆப்பிட்டு குட்டண்ணா செத்தெல்லோ போனார். என ராமச்சந்திரன் சொன்னபோது என் மனமோர் கணம் அதிர்ந்தது. ஒரு தடவை மூச்சை மெதுவாக இழுத்து விட்டுக் கொண்டேன்.

"ஏன் அவர் சென்றியடிப்பக்கம் போனார்?" என்ற எனது கேள்விக்கான பதிலை ராமச்சந்திரன் இடைவிடாது சொல்லிக்கொண்டே இருந்தான். அகண்டுபோய்க் கொண்டிருந்த அக் கதையின் சாராம்சத்தினை மிகச்சுருக்கமாக நான் உள் வாங்கிக் கொள்கிறேன்.

சில்வா வசம் வடிவழகி இருந்த நாட்களில் அவளது கருவறையில் அவனது சிசு வளரத்தொடங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல மெல்ல அதனை அவள் உணரத் தலைப்பட்டிருந்தாலும், சில்வாவின் இறுக்கமான பிணைப்பிலிருந்து விடுபட முடியாதவளாகவும் ஊரின் பழிச் சொல்லிற்கு ஆளாக முடியாமலும் அவள் தத்தளிக்கலானாள். அத் தருணம் வடிவழகியை மனதார ஏற்பதற்கு குட்டண்ணா உடன்படலானார். அவப் பெயரிலிருந்தும் இழிவிலிருந்தும் தன்னைக் காத்துக்கொள்வதற்கு வடிவழகிக்கு இத் திடீர் திருப்பம் தேவைபோலவே பட்டது. சில்வாவுக்குந்தான் பிறகான சில நாட்களில் குட்டண்ணாவின் தகரக் கொட்டிலையே வடிவழகியும் தனக்கிடமாய்க் கொண்டாள். மாசி மாதமாத்துப் பௌர்ணமியுடன் கூடிய மக நட்சத்திரத்தில் வடிவழகி பெண் மகவொன்றைப் பெற்றெடுத்தாள். மகத்தில் பிறந்ததில் மகளுக்கு மேகலை என்று பெயர் சூட்டி வடிவழகி வளர்த்து வரலானாள். அரசியல்நிலைமைகள் மாறலாயின. சில்வாவிற்கு குடாநாட்டினை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் உருவாயிற்று. அதன் பின்னர் பேக்கரி ஊரைச் சேர்ந்த ஒருவர் வசமாயிற்று. அத்தருணம் பேக்கரிக் கோடிப்புற கண்டாயமும் காணாமல் ஆக்கப்பட்டது. கடையுடன் ஒட்டியதாக சிறிய வீடொன்றினையும் குட்டண்ணா தானே வடிவமைத்துக் கொண்டார்.

அச்சில் இட்டு வார்த்தது போலவே அங்க லட்சணங்களிலும், தோற்றப் பொலிவிலும் தாயை உரித்து வைத்து மேகலையும் வளர்ந்து வரலானாள். வயதிற்கும் வந்தாள். ஆலடிச் சந்தைக்கும் மேகலையை இடைக்கிடை அழைத்து வருவாள் வடிவழகி. ஆசுப்பத்திரியடி இராணுவ முகாமிற்கு மீன்கள் கொள்முதல் செய்வென சிப்பாய் உதய குமார ஆலடிச்சந்தைக்கு அடிக்கடி வந்து சென்றான் அவனது விழிகள் விரித்த வலையில் மீனாகச் சிக்கினாள் மேகலை.

குட்டண்ணாவின் எண்ணெய் கடைக்கும் உதயகுமார அடிக்கடி வருவதுண்டு. சில்வாவுடன் பல வருடங்கள் பழகி வந்ததில் குட்டண்ணா சரளமாகக் கதைக்கத்தக்க அளவில் சிங்களத்தைத் தெரிந்து வைத்திருந்தார். தமது மொழியினை நன்கறிந்திருந்த ஒருவர் பசாரில் கடை வைத்திருப்பது குமாரவிற்குப் பெரிதும் வரப்பிரசாதமாயிற்று. அதனால் குமார மட்டுமல்ல ஏனைய சிப்பாய்களும் குட்டண்ணாவைத் தேடித்தேடி பழகி வரலாயினர். இத் தருணத்தில்தான் ஒரு போயா தினமாகப் பார்த்து மேகலை மீதிருந்த அதீத காதலை உதயகுமார குட்டண்ணாவிடம் தெரிவித்திருக்கிறான். அன்றைய பொழுது அஸ்தமித்து நிலவு காலிக்கத் தொடங்கிய வேளையில் அதுபற்றி வடிவழகியிடம் குட்டண்ணாவும் கதைத்திருக்கிறார். சகலதையும் அவதானமாகக் கேட்டுக்கொண்டு வடிவழகி மௌனமாகவே நின்றாள். மறுப்பேதும் தன் தாய் உரைக்காதது தங்கள் காதலிற்குக் காட்டும் பச்சைக்கொடி என்றே மேகலை அர்த்தப்படுத்திக் கொண்டாள்.

அத்தருணத்தில்தான் அசம்பாவிதமொன்று நிகழலாயிற்று. ஆசுப்பத்திரியடி முகாமின் கிழக்குப் புறமாயமைந்த சென்றிக்கு நின்ற இரு சிப்பாய்கள் மீது தோட்டப்பக்கத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்த்தப்பட்டத்தில் காவலிற்கு நின்ற ஒருவன் ஸ்தலத்திலேயே பலியாக மற்றவன் முழங்காலில் பலத்த காயங்களுடன் தப்பித்திருந்தான். தப்பிய சிப்பாய் என்றறிருந்ததும் மேகலை அவனைத் தானுடன் பார்க்க வேண்டுமென்று நிலையாக நின்றாள். தன்னை எப்படியாகவாவது முகாமிற்கு குமாரவிடம் அழைத்துச் செல்லுமாறு குட்டண்ணாவிடம் மண்டியிட்டாள். வழியேதுமில்லாது அன்றை அந்திமாலைப் பொழுதிலேயே அம்மன் கோவிலிற்கு தெற்கேயிருக்கும் குமாரவின் குவாட்டசிற்கு மேகலையை அழைத்துச் சென்றிருக்கிறார் குட்டண்ணா தொடர்ச்சியாகத் தினமும் அது நடைபெறலாயிற்று. நான்காம் நாளன்று மைமல் பொழுதில் மேகலையை முகாமில் விட்டு விட்டு குட்டண்ணா தன் கடைக்கத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் அம்மன் கோவிலிற்கு அணித்தாயமைந்திருக்கும் ஆடுதின்னாப்பாலைப் புதர்ப்பக்கமாயிருந்து, குட்டண்ணா வெளியேறி வந்துகொண்டிருந்த ஆசுபத்திரியின் மேற்குப் புற சென்றிப் பக்கமாக சாரமாரியாக தூப்பாக்கிச் சூடு நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சென்றியில் நின்ற இராணுவத்தினரும் தூப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவே அதனிடை ஆப்பிட்ட குட்டண்ணா நெஞ்சில் பட்ட குண்டுகளுடன் அவ்விடத்தேயே பலியானார்.

விடயமறிந்த குமார மேகலையை முகாமைவிட்டு வெளியே அனுப்ப விரும்பவில்லை. முகாமின் கட்டுப்பாட்டிற்குள் அமைந்திருந்த வீடொன்றிலேயே மேகலை தங்கவைக்கப்பட்டாள். குமாரவும் மெல்ல மெல்ல குணமடைந்து வந்தான். எழும்பி நடக்கவும் ஆரம்பித்திருந்தான். முகாமின் மத்தியில் அரசமரத்தோடு உருவாக்கப்பட்டிருந்த விகாரைக்கு தினமும் கைத்தாங்கலாக மேகலை, உதய குமாரவைக் கூட்டிச் சென்று வருவதாகவும் சில சமயங்களில் தனியாகவும் விகாரையில் இருந்து மேகலை மணிக்கணக்கில் தொழுது வருவதாகவும் ஆசுபத்திரியில் வேலை செய்பவர்கள் வெளியில் பேசிக் கொண்டனர்.

இதோ, இப்பொழுது நேரம் நள்ளிரவு பன்னிரண்டைத் தாண்டியிருக்கும். ஒன்பதரை மணியளவில் இரவு போசனம் முடிந்து ராமச்சந்திரனும் தூங்கச் சென்று விட்டான். பிள்ளைகளது அறையில் அவனைத் தங்க வைத்திருப்பதால், நாம் நால்வரும் இன்று இந்த அறையிலேயே தூங்க வேண்டியதாயிற்று.

சாந்தியும் பிள்ளைகள் இருவரும் அப்போதே அயர்ந்துவிட்டார்கள். ஆனால் தூக்கம் வராமல் படுக்கையில் நான் புரண்டு கொண்டிருந்தேன் நேரம் சென்று கொண்டிருந்தது. கண்கள் சொருகிச் செல்வது போலொரு பிரமை.

"பாடாத குட்டிகளை பாட வைக்க வல்லவராம் டாப்பர்மாமா" என்று பாடியவாறே குட்டண்ணா சிந்து நடை பயின்று வருகிறார். என்னருகில் அமர்ந்து தடியன் ரவியும், ராசோந்தியும் மாறி மாறி விசிலடித்த வண்ணம் என்னை நசுக்கிக் கொண்டிருந்தார்கள்.

மூச்சுத் திணறி நான் விழித்துக் கொள்கிறேன். அடுத்த அறையில் ராமச்சந்திரன் எழுப்பும் குறட்டை உச்சஸ்தாயியில் ஒலித்துக்கொண்டிருந்தது.

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-8

- முனைவர்
கோ. ஒளிவண்ணன் (இந்தியா)



# எங்கே என் செவ்வந்தி?



வணக்கம் சார். என் பேரு கலியமூர்த்தி. மெட்ராஸ்லயே பெரிய கல்யாண மண்டபத்தில செக்கிரிட்டியா வேல செய்யறன் சார். இங்க ஆறு செக்கிரிட்டீங்கள்ல நானும் ஒர்த்தன். நான்தான் இருக்கவ்ஙல்லியே வயிசானவன்.

அய்யா, அம்மா, தொரைமாருங்களே, இத படிச்சுனு இருக்கிற புண்ணியவானுங்களே, தயவுசேஞ்சு இவன் கதல்லாம் இன்னாத்துக்குன்னு பூடாதீங்க.

ஒரே ஒரு தபா எனக்கோசரம் கேட்டுட்டு போங்க சார். இன்னடா அறுவது வயசுகாரன சார்ன்னு சொல்றானேன்னு பாக்காதிங்க. நான் எல்லார்க்கும் ரெஸ்பெக்ட் குடுப்பேன்.

என்னோட மெயின் வேல, கலியாணம் நடக்குற அன்னிக்கி, மண்டபத்துல வண்டி வந்து நின்னா, ஆளுங்க இறங்கெனதும் வண்டிங்கள பார்க்கிங்கு அனுப்பறது. மத்த நாள்ல கேட்டாண்ட இருப்பன், இல்லன்ன பில்டிங்க சுத்தி சுத்தி வருவேன்.

சரி சார் மேட்டருக்கு வரேன்.

நம்பவே முடில சார். நான் செவந்தியப் பார்ப்பேன்னு.

பெர்சா வெள்ள கலரு காரு ஒன்னு வந்துது. இன்னா பேருன்னு தெரில. இப்பதான் புச்சு புச்சா வருதே. டிரைவராண்ட, 'பார்க்கிங் பின்னால இருக்கு'ன்னு சொல்லிகினு இருக்கஸோலவே கார்லருந்து இறங்கன ஆளு யார்னு பாத்தா, செவ்வந்தி.

அட நம்ப செவ்வந்தின்னு சுதார்ச்சிக்குன்னு கிட்ட போறதுக்குள்ள குடுகுடுன்னு உள்ள பூட்டா.

வயசு அம்பதுக்கு மேல இருக்கும். கிண்ணுனு இருந்தா. இந்த வயசுல அல்லாரும் அர கிழவியாட்டும் இருக்கசோல, இவ மட்டும் அப்படியே இருக்கா சார். மூஞ்சில சுர்க்கம் இல்ல. உடம்புல தொளதொளன்னு சதை கீத இல்லாம செதுக்கன செலை கணக்கா இருந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காருங்க ஒன்னு பின்னால ஒன்னா வந்துகின்னு இருந்தது. அதனால வேலய உட்டுட்டு போவ முடில. அதுவும் பங்ஷன் நடக்கசோல, உள்ளே ஸ்டிரிட்டா போ கூடாது சார். ரூல்ஸ் அப்படி. மண்டபத்துள்ள செவ்வந்தி. என் செவ்வந்தி. எனுக்கு ஒரே பேஜாரா இருக்கு சார்.

டூட்டி பாக்க முடியல. ரகு போறத பார்த்தேன்.

'யேய் ரெகு'

'இன்னா பெரிசு?'

கொஞ்சம் பாத்துக்க. டீ குஸ்ட்டு வந்துறன். தல கொடையுது.

'செரி தல. போய்ட்டுவா'

எங்க பாத்தாலும் ஜனங்க. உள்ளர்நது பாட்டு கச்சேரி சத்தம். வெளிய செண்டை அடிக்கறானுங்க. இதுல பாப் கார்னு, பஞ்சு முட்டாய் மிஷினுங்க சத்தம். காது ஜவ்வு கியிஞ்சிடும் சார். ஷோக்கா சிங்காரிச்ச பெர்ரிய யானா. குரோட்டன்ஸ், ரோஜா, மல்லி, நந்தியா வட்டைன்னு தாண்டி மாமரத்தாண்ட ஒதுங்கனன்.

கட்டுலருந்து பீடிய எடுத்து வாயில வச்சி, கொஞ்சமா சப்பி, வத்திகுச்சிய கொளுத்தி மொனைல காட்ட, பசக்னு புடிச்சிக்கிச்சு. நல்லா வலிக்க, புக நெஞ்சுகுள்ள பதமா இறங்குச்சி. படபடப்பு கொறஞ்சா மாறி இருந்துது.

கோச்சுக்காத சார். கதைய கேளு.

நான் பொறந்தது வளர்ந்ததெல்லாம் விரியம்



பாக்கம். அதான் சார் வடபயனி தாண்டி போரூர் போஸல வருமே. எங்க அப்பா துணிகட்ல கணக்குபுள்ள. அம்மா ஊட்டோட. நானு இதுதான்னு இல்லாம எல்லா வேலயும் செஞ்சேன். படிச்சது ஒம்பதாம் கிளாசுதான். ஆவிச்சி ஸ்கோலு. அதுக்கு மேல படிப்பு ஏறல. ஆனா லவ்வு வந்துது.

அப்ப எனக்கு வயசு இருவத்தஞ்சி.

தெனம் காலீல கீரை வித்துகினு வருவா செவ்வந்தி. பாவட கட்டி மேல ஆம்பளைங்க கணக்கா சொக்கா போட்டிருப்பா. தொளதொளன்னு முட்டி வரிக்கும் தொங்கும். சொக்காகுள்ள பனியன் மாதிரி செவப்பு கலர்ல பளிச்சுன்னு தெரியும். கயித்தில கருப்பு கலர்ல மணி போட்ருப்பா. காதுல, மூக்குல ஈர்குச்சி. அவளும் ஈர் குச்சி

'சாப்ட்டியா?'

'எங்க சாப்றது. கூட்டம் அல மோதுது. ஒன்னும் தேறாது போல. மூவாயிரம் சாப்பாடாம். ஆனா நாலாயிரம் இலைக்கு மேல ஓடுதாம்'.

'பெரிய மனுஷங்க வூட்டு கல்யாணம்னா அப்படித் தான்டா'.

'பெரிய மனுஷனுங்களா! இவனுங்ளா?

ஒருத்தன் சாப்ட்டு எயுந்துக்கறதுக்குள்ள, குண்டிய உரசிகின்னு நிக்கிறானுங்க. சோத்துக் கூட்டம்'.

'சீ வாய மூட்றா பேமானி. உனுக்கு இன்னாத்துக்கு இதெல்லாம். தோ பாத்துக்க, வந்துறன்'.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி வெடவெடன்னு ஒசரமா, வெளுப்பா இருப்பா. கைல கால்ல ஒரு கருப்பு கயிறு கட்டியிருப்பா. எத வச்சு அவள எனக்கு புடிச்சுதுன்னு தெரியல சார். கூடையத் தலையில வச்சுக்கினு, ஒரு கையால தாங்கிக்கினு, இன்னொரு கைய விசுக் விசுக்குனு வீசிக்கினு ஒய்யாரமா நடக்கறதயா, இல்ல ஒத்தரு உதவி இல்லாம தானே கூடய எறக்கி, இன்னா கீரை வேணும்னு தலயை ஒரு பக்கம் ஒடிச்சுகினு பளீர் சிரிப்புல ஸ்டைலா கேட்குமே அதுவா. எதுன்னு தெரில. ஆனா தெனம் அது தெருவுல வரும்போது வாசலாண்ட வந்துடுவேன். அம்மாதான் வாங்குவா. நா சைக்கிள தொடச்சிக்கினே, ஏதாவது தேடற மாரி அவள லுக் உடுவேன். என்னிக்காவாது அவ வரலைன்னா, மன்சு டூலாய்டும் சார். சிலவாட்டி அம்மா கீர வேணாண்டும். எனக்கு மெர்சல் ஆய்டும்.

சார் எனுக்கு அது மேல லவ்வு செட்டாயிடுச்சி.

ஒருவாட்டி அம்மா வூட்ல இல்ல. அன்னிக்கு வந்தா. கொஞ்ச நேரம் நின்னு பேசனா. இன்னா பன்றேன்னு கேட்டா. நானும் பேசனேன். மொத மொதல்ல அவள அவ்ளோ கிட்டருந்து பார்த்தேன். அவ மேல மொலகீர வாசன சார். செமையா இருந்தா. அதுவும் கண்ண சிமிட்டாம பார்த்தா. சுத்தி முத்தி தெருவுல பாத்தன். ஜிலோன்னு இருந்துது.

'என்ன புட்சிருக்கா செவ்வந்தி?'

'ம்'. அவ மூஞ்சி தக்காளி மாறி ஆயிட்ச்சி. எவ்ளோ வுன்னு லூசு மாறி கேட்டேன். ரெண்டு கைய விரிச்சி 'ரொம்ப' ன்னா.

என்னோட சொக்கா ஒன்னு, பாத்தா புச்சு மாதிரி இருக்கும், ஒருவாட்டி தான் போட்டுருப்பேன், எடுத்தாந்து கூடைல போட்டேன். முதல்ல மெரண்டுடுச்சி. அப்பால கம்முனு எட்துனு பூட்ச்சி.

அதுக்கு பொறவு தெனம் பாத்து சிரிச்சுக்குவோம்.

அதுக்கும் எம்மேல ரொம்ப பிரியம்னு ஒருவாட்டி நேஸ்னல் தியேட்டர்ல வச்சி தெரிஞ்சிக்கினேன் சார்.

மோகன் நட்ச படம் 'பயணங்கள் முடிவதில்லை'ன்னு. கையில தம்பிடி கெடையாது. ஆனா எப்படியாவது படம் பார்த்துடணும்னு ஆசை. பிரண்டு குமார் தான் அய்டியா குடுத்தான். ஊட்ல இருக்கற பழைய பேப்பருல்லாம் தூக்கினு போய் கடைல போட்டேன். ஒன்னாருபா தேறுச்சி. நா கொஞ்சம் கூட எதிர் பார்க்கல சார். தேட்டர்ல செவ்வந்தி.

என்னால பட்த பாக்கவே முடியல சார். பொம்புளைங்க பக்கம் குந்தினிருந்த அவளையே பாத்துகினு ருந்தேன். இன்னா ஆச்சரியம்னா சார், நான் குடுத்த ஷர்ட்ட போட்டுகினு இருந்தா. செம்ம டக்கரா இருந்தா.

எனக்கு உடம்பெல்லாம் ஒரு மாரி ஆயிட்சு. குமாருகூட கேட்டான் 'இன்னடா ஒரு மாரியா இருக்கற'ன்னு. இன்னான்னு சொல்றது. ஆனா மனசு குஜாலா இருந்துச்சி.

இன்டர்வர்ல்ல நாங்க ரெண்டு பேரும் ஒன் பாத்ரூம் போயிட்டு வந்தோம். டீக்கு துட்டுல்ல. அவ சீட்ட பார்த்தா ஆள காணோம். வெளக்கு அணச்சி படம் போடும் போது, பின்னாலருந்து வந்தவ டக்குனு குனிஞ்சி மடியில ஒரு பாப்கார்ன் பாக்கெட்ட வச்சிட்டு போய்ட்டா. குனியசோல அவளோட ஒடம்பு என் மேல பட்டுச்சி சார். செம பீலிங் சார்.

'மச்சான் இன்னாடா நடக்குது. இது எத்தினி நாளா?' குமாரு பேஜாராயிட்டான்.

அப்பால, நானும் செவ்வந்தியும் இரண்டு மூனு வாட்டி கிண்டி கொயந்தைங்க பார்க், பீச்சு, அமிஞ்சிகர லெட்சுமி தியேட்டர்ன்னு சுத்தனோம். ஆளுங்க யாருமே இல்லாதபோ கட்டி புடுச்சிக்குவோம். இங்லீஷ் சினிமா கணக்கா கிஸ் அடிச்சுக்குவோம்.

'டேய் உன்கு வயசாவுது. பொண்ணு பாக்கட்டா'ன்னு அம்மா கச்சேரி ஆரம்பிச்சிட்டா.

'எனக்கு செவ்வந்திய கட்டிக்க ஆசையா இருக்கு'ன்னு ஒரு தெகிரியத்தில சொல்டேன்.

'யார்டா அது?' சொன்னேனேன்.

'அதான் துரை, தெனோம் காலங்கார்த்தால வாசல்ல தேவு காத்தினுருந்தாரா?'

'இல்லம்மா'

'அடி செருப்பால நாயே. அந்த கழுத உன் சட்டைய போட்டாந்த அன்னிக்கே செவுளு காட்டிருந்தேனா இவ்ளோ தூரத்துக்கு வந்திருக்காது. தூ அதுங்க யாரு. நம்ப யாரு. தராதாரம் வேணா'.

மறாநாள் வந்தா.

'கீர விக்கற முண்ட, உனக்கு என் புள்ள சவகாசம் கேக்குதா?''

பாய்ஞ்சி அடிக்க கை ஒங்கினா.

'அய்யோ அம்மா அவள வுட்டுடு.' கெஞ்சனேன்.

மெர்சலான செவ்வந்தி, கூடையை தூக்கினு ஓட்னா. கீழ கிடந்த செறுப்ப தூக்கி அட்சா அம்மா. படார்ன்னு அவ முதுவுல வுயுந்துது.

டக்குனு நின்னு திரும்பி மொறச்சா.

'எருமை இன்னாடி பாக்கற. வெட்கம் கெட்ட சிறுக்கி. அரிப்பெடுத்தா செவுத்துல போய் தேச்சுக்கறதானேடி. முளைச்சு மூனு இல வுடல. அதுக்குள்ள ஆம்பள கேக்குதாடி' ன்னு கிட்ட போய் அவ மயிர கொத்தா புடிச்சி தனக்கா வலிச்சு பளீர்ன்னு அடிச்சா. நான் ஓடிப்போய் அம்மா கைய புட்ச்சன்,

'அட சீ நாய'ன்னு புட்ச்சி தள்ளிட்டா.

அன்னிக்கு தான் சார் எங்க அம்மாவோட பெலத்தை பாத்தன். அப்புடியே நட்டுக்குன்னு வுயுந்தேன்.

இந்த கேப்ல செவந்தி எஸ்கேப் ஆயிட்டா.

அப்பா எதுமே பேசமாட்டாரு. அவுரு ஊமை யாவே பொறந்து இருக்கலாம். அம்மா எது சொன்னாவும், ரைட்டுன்னு இருந்துட்டாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவாண்ட எவ்ளோவோ சொல்லி பாத்துட்டன்.

'சட்டைக்காரச்சி வேணவே வேணாம்'. சாப்பிடாம அடம் புட்ச்சேன். மசில.

'வெசம் குட்ச்சி செத்துடுவேன்னேன்.'

'சேத்து வாங்கு. மொத்தமா குஷ்ட்டு ஒண்ணா பூட்லாம்'. ஒரு நா அவள வடபயனி பஸ் ஸ்டாண்ட்ல பாத்தேன் சார். பஸ்ல குந்தினுருந்தா. ஜன்னலாண்ட கீழருந்து, 'செவ்வந்தி'ன்னேன். மூஞ்சிய திருப்பிகினா. 'செவ்வந்தி செவ்வந்தி'ன்னு உடாம கூப்டேன்.

'இன்னா'ன்னு? ஒரு லுக் வுட்டா.

'மன்ச்சுக்க செவ்வந்தி.' மூஞ்ச திருப்பிகினா.

'உன்ன உயிருக்கு உயிரா லவ் பண்றேன்'. நக்கலா சிரிச்சா.

'நம்ப மாட்டியா செவ்வு?'

'அப்படின்னா என் கூட வரியா. எங்காவது போய் கல்யாணம் கட்டிக்கினு வாழலாம்'

'அவசரப்படாதே செவ்வந்தி. டெயம் குடு. நான் எங்கவூட்ல பேசி கரெக்ட் பண்றன்' வெடுக்குனு அண்ணாண்ட திரும்பிகினா. அப்பால எவ்ளோ கூப்பிட்டும் திரும்பல. புடிவாதக்காரி சார்.

பஸ் பூட்ச்சு. அதுக்கு அப்பால அவள பார்க்கவே முடில சார்.

ஊர வுட்டு போய்ட்டான்னு குமாரு சொன்னான். கொஞ்சநாளு பைத்தியம் புட்ச்சவன் மாரி சுத்தினிருந்தேன். அம்மாக்கு ஜோசித்தில நம்பிக்கை ஜாஸ்தி. தம்பிக்கு கெரகம் சரி இல்ல. ஆறு மாசம் போனா எல்லாம் சரியாயி டும்னாரு ஜோசிரு.

நாலு மாசத்திலேயே நார்மலாயிட்டேன். அம்மா பொண்ணு தேட ஆரம்பிச்சா.

சாதி மட்டுமில்லாம, அந்த பிரிவு இந்த பிரிவுன்னு தேட்னாங்க. ஒன்னும் குதிர்ல. எல்லாம் ஒத்து வந்தா, பொண்ணு நல்லா இல்ல, சொத்து இல்லைன்னு காரணங் காட்டி தட்டிக் கயிச்சா அம்மா. எங்களுக்கு எல்லாம் புட்சி வரும்போது, அவுங்க சைட்ல, பையனுக்கு வேல செரி இல்லன்னு வேணாண்டுவாங்க. வருஷம் ஓடுச்சு.

எதுமே சொட்டாவல சார். நம்மள மாதிரி இருக்கிற வேற ஜாதியா இருந்தா கூட பரவால்லேன்னு அப்பா சொல்ல, அதெல்லாம் முடியாது என் மவனுக்கு ராஜாத்தி எங்கேயோ பொறந்து இருக்கான்னு எங்கம்மா நம்புச்சி. ஜோசியகார்ரு அவர் பங்குக்கு நம்பிக்க குடுத்துனே இருந்தாரு. எல்லாமே பொருந்தி வந்தா, நான் எதிரில் குந்தினிருக்க சோலியவே, 'மாப்பிள்ளை வரல்யா'ன்னு கேட்டாங்க. அப்படியே டீலாயிடுவேன் சார். வயசு நாப்பதுக்கு மேல ஆயிட்ச்சி.

செவ்வந்தி இன்னா ஆனான்னு தெரில. குமாரு தான் யாரோ சொன்னாங்கன்னு சொன்னான்.

ஏற்காட்ல வெள்ளைக்கார்ச்சி ஒருத்தரு வூட்டுக்கு வேலைக்கு போயிருக்காளாம். அந்தம்மாவோட பூர்வீகம் இந்தியாவாம். வயசான கால்தில இங்கதான் இருக்கனும்னு சீமைல சொத்தெல்லாம் வித்துட்டு வந்துருச்சாம்.

வீட்டோட தங்கி கூடமாட வேல செய்ய ஆளு வேணும்னு தேட்னப்ப, யாரோ சொல்லி செவ்வந்தி போய் செட்டிலாயிட்டாளாம்.

ஒருவாட்டி அவ நெனப்பு ஜாஸ்தி ஆன்தால ஏற்காடு கௌம்பி பூட்டேன். குமார்கிட்ட சொல்லல்ல. சின்ன ஊரு தானே கண்டுபுட்ச்சிடலாம்னு போனா, சுத்தமா ஆப்டல. மார்க்கட்டு, லேக், பார்க்குன்னு அலஞ்சி பார்த்தேன். ம், மாட்ல.

அதுக்கு பொறவு ஒன்னுமே தெர்ல. எங்கப்பா ஒர்நாளு மண்டைய போட்டாரு. அதுக்கப்பால அம்மா வாண்ட பயைய கெத்து கொறஞ்சிட்சி. ஆனா மன்ஸி புடிவாதத்தை வுடல சார். புள்ளிக்கு கலியாணம் எவ்ளோ முக்கிமோ அதேமேரி சாதி கௌரதையும் முக்கியம்னு இருந்துட்டா.

நானு நேஷனல்தியேட்டர்ல கொஞ்சநாளு டிக்கிட் கியிச்சேன். உடுப்பி ஒட்டல்ல சர்வரா வேல செஞ்சேன்.

மெட்ராஸுல ஒரே சௌரியம் சார். ஏதாவது செஞ்சி வயித்த கயிவிக்கலாம். அப்பா செத்து பத்து வருஷம் ஆய்டுச்சி.

இப்ப என் வயசு அம்பதுக்கு மேல. ரெண்டாம் தாரத்துக்குகூட லாயிக்கில்லாம போய்ட்டேன் சார். அம்மாவும் டீபில போய்ட்டா. இப்ப நான் ஒண்டிக்கட்ட.

எங்க ஏரியால நிறைய ஊடுங்க வந்துட்சி. காருங்க ஜாஸ்தி ஆய்ட்ச்சி. டிரைவரா போலாம்னு கார் கத்துக்கப் போனேன். எனக்கு வரல. அவன் வண்டிய ரண்டு வாட்டி இஸ்ட்டன்னா பாருங்க. 30 வருஷமா நடக்கற டிரைவிங் ஸ்கோலு, ஒருவாட்டி கூட ஆக்ஸ்டன்ட் ஆவல. நீ வந்துதா ஆச்சுன்னு அந்த ஓனர் திட்டனான். நீ கார் தொடைக்கதான் லாய்க்கின்னான்.

சரின்னு தொடைக்க ஆரம்பிச்சன். நம்ப மாட்டிங்க சார், நல்ல காசு. கொஞ்ச வருஷம் கழிச்சு குமாரு சொன்னான்.

அந்த வெள்ளக்கார்ச்சி செத்துப்பூட்ச்சாம். சொத்துல தர்ம காரியத்துக்கு கொஞ்சம் எயிதிட்டு மிச்சத்தை எல்லாம் செவ்வந்திக்கு எய்திட்டாளம். அவ மெட்ராஸ்லயே செட்டில் ஆயிட்டாளாம்.

'புள்ள குட்டிகளோடவா'ன்னு கேட்டேன்.

'கண்ணாலமே கட்டிக்கிலியாம்'.

எனக்கு திக்குன்னு ஆய்ட்சு.

'ஏண்டான்னு?' கேட்டேன்.

முக்கால் கியவனானாலும் மனஸ்ள்ள எங்கயோ ஆச ஒட்டிக்கினுருக்குது சார்.

'தெரியல'ன்னான்.

'ஒருவேள இன்னும் உன்ன நெனச்சிக்கினு இருக்காளோ என்னவோ'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அத முயுசா நம்பனே.

அவ அட்ரஸ கண்டே புடிக்க முடில சார்.

குமார் வேணும்னே செய்றானான்னு தெரில.

'இவ்ளோ விஷயத்த சொல்ற. வூட்டு அட்ரஸ், போன் நம்பர் கேட்டா தெரிலன்ற. ஒன்னு நீ புளுவற. இல்லாட்டி மறைக்கிற'.

'சத்திமா இல்லடா. நீ அவள இப்படி நெனச்சுக்கின்னு இருப்பேன்னு தெரிஞ்சிருந்தா டீடெய்ல்ஸ் வாங்கி இருப்பேன்'.

'யாரு இதெல்லாம் உன்னான்ட சொன்னாங்க?'

'எலக்ட்ரிஷன் செல்வம்.'

'யாரு?'

'லயன்மேன்டா'.

'தெர்லடா. சரி அந்தாளு எங்க இருக்கான்? வா போய் பாக்கலாம்'.

'அந்தாளு செத்து ரெண்டு வருஷத்துக்கு மேல ஆச்சு'.

'அடேய் அப்ப செவ்வந்தி நியூஸ் பயஸாடா? தூ. இவ்ளோ நாளா ஏண்டா சொல்லல? துரோகி'.

'கோச்சிக்காதடா. நான் எங்கடா ஊர்ல இருந்தன்?' குமாரு லாரி டிரைவரு. நேஷனல் பெர்மிட் வெச்சிருக்கான். பஞ்சாப், குஜராத்துன்னு சுத்துவான்'.

'ஏண்டா எத்தினி வாட்டி அவள பத்தி சொல்லி ருக்கன். நீ அவள இன்னும் நெனச்சிகின்னு இருக்கன்னு சொல்லி தொலைச்சிருக்கறதானே?'

'சொல்லலடா. தப்புதான். இப்ப எப்படிடா மச்சான் அவள கண்டுபுடிக்கறது?'

'மெட்ராஸ்லதான இருக்கா. பீச்சு பார்க்கு, சினிமா தேட்டரு, மாலுன்னு தேட்னா மாட்டாமையா போய்டுவா'.

தேட்னேன். பாதி நாளு வேலை. மிச்ச நேரம் தேடுவேன். பயினெட்டு பத்தொன்போது வயசுல பாத்தது. இப்போ எப்படி இருப்பான்னு தெரியல. உடம்பு எப்படி இருந்தா இன்னா மூஞ்சி மாறி இருக்காது இல்ல சார்.

வருஷம் தான் ஓடுச்சி.

அப்பதான் இந்த அய்டியா தோணுச்சு. ஏதாவது கல்யாண மண்டபமா பாத்து வேலைக்கு சேர்ந்துறதுன்னு. மெட்ராஸ்ல இருக்குற பெரிய கல்யாண சத்திரங்க நாலஞ்சு தான். எல்லாப் பணக்காரங்களும் எப்படியாவது கல்யாண சீஸன்ல ஒரு வாட்டியாவது வருவாங்க. செவ்விந்திய ஈஸியா புடுச்சிடலாம்னு இங்க வேலைக்கு வந்துட்டேன்.

அஞ்சு வருஷமா வேலை செஞ்சிக்கினு இருக்கன். கல்யாண நாளுங்கள்ல நல்லா ருசியா சோறு. அது போவ சம்பளம். சௌரியமா செட்டில் ஆயிட்டேன். லீவு போடாம வேல பாப்பேன் சார். ரொம்ப சின்சீரு செக்கி ரிட்டின்னு மொதலாளி பாராட்டி இருக்கார்ன்னா பாருங்க.

எங்கஷ்டம் எனிக்கு மட்டும் தான் சார் தெரியும். எத்தினி நாளு சோறு தண்ணி இல்லாம தேடிருக்கேன் தெரியுமா? வர ஒவ்வொரு காரு, ஆட்டோவ உத்து உத்து பாப்பேன். ஒர்ரு ஆளு என் கண்ணுலருந்து தப்ப முடியாது.

'செவ்வந்தி'. 'செவ்வந்தி'. இததவுர எனக்கு வேற எந்த நெனப்பும் இல்ல சார். அவ எனுக்காக தான் சார் கண்ணாலம் கட்டிக்காம இருக்கா. எனுக்கு நல்லா தெரியும் சார் அவளப் பத்தி. வைராக்கியக்காரி.

இவ்ளோ நாளு கயிச்சி இன்னிக்கு தான் சார் கண்ல மாட்னா. வெள்ல வரசோல அவ கிட்ட பேசனும்.

என்ன பேசறதுன்னு யோசிச்சி வச்சிட்டேன். இங்க பாருமா, நான் அன்னிக்கு பண்ணது தப்புதான். அதனாலவோ இன்னவோ தெர்ல, சாமி தண்டன குடுத்துடுச்சி. இன்னவரைக்கும் கண்ணாலமே ஆவல. நான் வேற பொம்பளைங்க கிட்டயும் போனதில்ல.

நீயும் கண்ணாலம் கட்டலன்னு சொன்னாங்க. அது ஏன் இன்னாத்துக்குன்னு கேட்க மாட்டேன்.

தெயவுசேஞ்சி மிச்சருக்கற நாளு, என் உசுரு போற வரைக்கும் உன்னான்ட இருக்கணும். என்ன கட்டிக்கன்னு கேக்க மாட்டன். உன் வூட்ல ஏதாச்சும் எனக்கு வேல போட்டுக்குடு. சம்பளங்கூட வேணாம். நெனைக்கும்போதே மனசு பேஜாரு ஆயிட்ச்சு. கண்ணுல தண்ணி கோத்துக்குச்சி.

மரத்தாண்ட எவ்ளோ நேரம் நின்னுகின்னு இருந்தேன்னு தெரியல. அய்யோ சார் உன்னான்ட கத சொன்னதுல டயம் போனதே தெரில. செவ்வந்தி போய்ருப் பாளோ ?

'திக்'குனு ஆய்ட்சு. பாதி வல்ட்சபீடிய போட்டுட்டு, போர்ட்டிக்கோ வான்ட ஓடியாந்தேன். வண்டிங்க வரது நின்னுடுச்சு.

'சீக்கிரம் சாப்பிட வா பெரிசு. பந்தி முடிய போவுது'.

'எனக்கு வேணாண்டா ரெகு. நீ வேனா போய் சாப்டு. எனக்கு வேண்டிவ்ங்க உள்ள போயிருக்காங்க. அவங்கள கண்டுகினு வறன்'.

'அட கம்முனு வா பெர்சு. தெனம் சாயந்திரம் ஆனா உன்னான்ட இதே பேஜாரா போச்சி'ன்னு தரதரன்னு என்னை வலிச்சுக்கினு போனான்.

* * *

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது பின் நவீனத்துவம். நவீனத்துவ படைப்புகள் வாழ்க்கையை இரண்டாம் தளத்துக்கு சிறுமைப்படுத்துகின்றன என்று பின் நவீனத்துவம் குற்றஞ்சாட்டுகிறது.

- எஸ்ஸார்சி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-9

திக்குவல்லை
கமால்



# மாப்புளக் கோட்

ஸை க் சத்தமொன்று கேட்டது. பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த ஹஸனார் ஜன்னலுக்குள்ளால் எட்டிப் பார்த்தான்.

நடுத்தர வயதான ஒருவர் ஒற்றைக் கேற்றைத் தள்ளிக்கொண்டு சைக்குடன் உள்ளே புகுந்தார். நிதானமாகப் பார்த்தபோது அது கலீல் ஸேர் என்பது புரிந்துவிட்டது. பயிர்ச் செய்கை உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றும் ஆறு வருடம் கடந்துவிட்ட ஹஸனாருக்கும் கலீல் ஸேருக்கும் அப்படி எந்தத் தொடர்பும் இருந்ததில்லை.

" ஆ வாங்க ஸேர் எனத்தியன் செய்தி ?" - என்று வரவேற்று இருக்கையைக் காட்டினான் ஹஸனார்.

"எப்படி சொகமா?"- சம்பிரதாய விசாரிப்பு.

"அல்லாட காவல்ல நல்ல சொகம் "

" எங்களுககு சின்ன ஒதவியொன்டு செய்யோணும்"

ஏதோ சல்லிகில்லி கேட்கப் போகிறாரோ என்ற தயக்கம் மனசுக்குள். " ஓ கேளுங்கோ. ஒத்தருக் கொத்தரு ஒதவி செஞ்சிக் கொளோணும்தானே "

" நாடகமொன்டு போடோணுமென்டு பழய பொடியன்மாரு ஒரேபுடியா நிக்கியானியள். கொழும்பு வரைக்கும் பெய்த்து வெத்தி எடுத்துக்கொண்டு வந்தத இன்னும் அவனியள் மறந்தில்ல."

" ஓ நல்லந்தானே. ஊரு மனிசருக்கும் சந்தோஷ மா ஈக்கும். சரி இப்ப எனத்த செய்யோணும்" - ஏதோ பெரிய நாடக ஆர்வலர்போல் கேட்டான்.

" எங்களுக்கொரு மாப்புளக் கோட் தேவ. ஒங்கட காலத்து ஆள்களுக்கட்டத்தான் கேக்கோணும். இப்ப என்னென்னவோ உடுப்பெல்லம் உடுத்துக்கொண்டு மாப்பிள போறானியள். கொஞ்சம் தேடிப்பாருங்க ஹஸனார் நானா" என்று சிரிப்போடு சிரிப்பாகக் கேட்டார்.

மாப்புளக் கோட் ஹஸனாரிடம் இருக்கவே செய்தது. ஆனால் அதனைக் கொடுப்பதா? இல்லையா? என்று அவரால் உடனடியாக முடிவெடுக்க முடியவில்லை.

" நான் யெம்பத்து நாளில கலியாணம் முடிச்சன். எத்தின வருஷமென்டு பாருங்கொ. அல்மாரி அடித்தட்டி யல்ல ஈக்கக்கூடும். எதுக்கும் நான் தேடிப் பாத்திட்டு கோலொன்டு தாரன் " - என்றான்.

" ஒங்கட கோட்டப் போட்டுக்கொண்டு நாடகம் நடிச்சா ஒங்களுக்கும் பெருமதானே. " -என்று ஐஸ் வைத்து, தோள் தட்டிவிட்டுப் படியிறங்கினார் கலீல் ஸேர்.

***** ***** ******

ஹஸனாருக்கான திருமண ஏற்பாடுகள் ஆரவாரமாக ஆரம்பித்த நாட்களில்..

"நான்மாப்புள பொகச்செல்லே கோட் போடியல்ல. ஓ அநியாயச் செலவு. அதுக்குப் பொறகு சும்மவே சும்மதான்" என்று அவன் உறுதியாகச் சொல்லிவிட்டான்.

உம்மா, தாத்தா, தங்கச்சி, தம்பிமாரெல்லாம் அதனைக் கடுமையாக எதிர்த்தனர். வழமைக்கு மாறான நடைமுறை அவர்களுக்கு போதாமையாகத் தெரிந்தது.

" ஓடா கைநெடிய சேட் போட்டு டைகட்டிக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போ. அப்பதான் எங்களுக்கும் அப்பிடிப் பொகேலும்" இன்னும் திருமணம் ஆகாத அவனது நண்பர்கள் அதற்குப் பக்கபலமாகினர்.

வாப்பாவின் கவனத்திற்கு இந்த விடயம் சென்றது."

"மகனே இது ஊரில இருந்துவார ஒழுங்கு.இவளவு பெரிசா கலியாணம் செய்த . மாப்புளக் கோட்டுக்கு வசதில்லயாண்டு மனிசரு கேப்பாங்க.மத்தது பொண்ணூட்டாரு ஞாயமான ஆள்க. அவங்கட மருவாரிய நாங்க கொறக்கப்படாது."

ஹஸனாருக்கு வாப்பா அதிகமாக ஒன்றும் சொல்வதில்லை. சொன்னால் அவன் அதைக் கேட்காமல் விட்டதுமில்லை.

அடுத்தநாள் மூத்த மச்சான் ஹஸனாரை மாத்தறைக்குக் கூட்டிச் சென்றார் . 'ஃபெஷன் டெய்லேர்ஸ்' என்ற பெயர்ப் பலகை அவன் கண்களில் பட்டது. திருமண ஆடைகள்தைப்பதில் அப்பகுதியிலேயே பெயர்பெற்றவர்கள். கடும் கபில நிறத்துணி வகையொன்றை அவன் தெரிவு செய்தான்.

மணமகள் வீட்டுக்குச் சென்றதும் மறுநாள் மணமகளை அழைத்து வந்ததுமான இரண்டு நாட்களும் அவன் அந்த கோட்ஸூட்டோடுதான் ஜொலித்தான். அதைத் தொடர்ந்துவந்த வெள்ளிக் கிழமை ஜூம்மாத் தொழுகைக்கும் ஊர்வழக்கப்படி அணிந்து சென்றான்.

திருமணமாகி ஒரு மாதம் நகரும்வரை மாப்புளக் கோட் மணவறை ஹெங்கரில் தொங்கிக்கொண்டிருந்தது. இனிமேல் பாவனைக்கு வாய்ப்பற்ற மாப்புளக் கோட்டை 'அநியாயச் செலவு' என்ற மனநிலையோடு, மடித்து அலுமாரியின் அடித்தட்டில் வைத்துவிட்டான் .

" எனத்தியன் செய்த நீங்க ?"

" மாப்புளக் கோட்ட மடிச்சி வெச்ச"

" எங்கட சினமாம மாப்புளக் கோட்ட போட்டுக் கொண்டுதான் வெள்ளிக் கெழமக்கி பள்ளிக்குப் போற.இப்ப ஆறு வரிசமாகிய"

" நான் அரசாங்கத்தில ஜொப் செய்றவன். எனக்கு சாரமுடுத்து கோட் போட்டுக்கொண்டு பொகேலுமா? களிசத்தோட கோட்போட்டுப்போனா 'புதிய மாப்பிளயா?' என்டு கேட்டுச் சிரிப்பாங்க .ஒன்டும் செய்யேல எனக்கு" அவளுக்கும் சிரிப்பு வந்துவிட்டது.


***** ***** ***** *****

அன்று வேலைவிட்டு வந்த ஹஸனார் ஏதோ ஆரவாரத்துடன் காணப்பட்டான்.

" ஷாமிலா என்ன மாப்பிளக் கோட்டத் தேடி யெடுங்கொ. அதக் கொஞ்சம் கழுகி ஸ்திரிக்க பண்ணி வைங்கொ." கொண்டுவந்து நீட்டிய தேநீர்க் கோப்பையை எடுக்க யோசனையின்றி சொல்லித் தீர்த்தான்.

"நீங்கதானே இனி இந்தமாப்புளக் கோட்டால ஒரு பொரோசனமும் இல்லயென்டு, மடிச்சி அல்மாரி அடித்தட்டில போட்டு இப்ப பத்து வருஷமாகிய நெனவில்லயா?" அவள்பட்டென்று கேட்டுவிட்டு வெளிப்பட்ட சிரிப்பை அடக்கிக்கொண்டாள்.

" அப்பிடி நெனச்சது மெய்தான்.இது எங்களுக்கே



தெரியாத விஷயமொன்டு. கிராமசேவக என்னத் தேடிக் கொண்டு ஒபீஸூக்கே வந்திட்டாரு.ஜூரி சேவிஸூக்கு ஏன்ட பேரேம் போட்டு சைன் எடுத்துக்கொண்டாரு. அதுக்கு களிசன்..கோட்...டை.. எல்லம் உடுத்துக்கொண்டு தான் பொகோணுமாம் "

"மெய்யா சல்லீந் தாராமா?"

"தராட்டி தாரன் பொகப்போற"

"அப்ப கோட் தச்ச செலவ இதில் தேடிக் கொளேலும். ம்...அதெனத்தியன் ஜூரி வேலயென்டிய?"

"வழக்கு கேக்கிய எடம். ஆ... அங்கதான் பொகோணும். எனக்கும் சரியாத் தெரிய. பெய்த்திட்டு வந்து செல்லியனே எல்லாம்" புதிய அனுபவத்தை அவன் மனம் எதிர்பார்த்து நின்றது.

அன்று அவனும் காரியாலய நண்பர் இருவரும் மாத்தறை மாவட்ட நீதிமன்றத்திற்குச் சென்றனர். அவர்களது வரவைப் பதிவு செய்துகொண்டனர். அவர்களுக்கான பிரத்தியேக அறைக்கு அழைத்துச் சென்றபோது அங்கு இன்னும் சிலர் காணப்பட்டனர். தங்களது உடைகளை மாற்றிக் கொண்டனர். தன்னை நிலைக் கண்ணாடியில் பார்த்த போது பத்து வருடங்களுக்கு முன் நிகழ்ந்த திருமணக் கோலம் அவனுக்கு ஞாபகம் வந்தது. அதற்கிடையில் அறைக்கு வந்த நிலைய உத்தியோகத்தர் தனது கையில் செங்கோல் போன்ற ஒன்றை வைத்திருந்தார்.. இருவர் இருவராக வரிசைப் படுத்தி அழைத்துச் சென்றார். அவர்களுக்கு பிரத்தியேகமான இருக்கைகள் வழங்கப்பட்டன. வழக்கொன்றின் தொகுப்புரை நடந்தது. இறுதியில் அவர்களுக்கான கொடுப்பனவு அதற்குரிய கருமபீடத்தால் வழங்கப்பட்டது. இவ்வாறாக அங்கு நடந்ததெல்லாம் வீட்டுக்கு வந்ததும் மனைவியோடு சொல்லி மகிழ்ந்தான்.

தமது கணவனுக்கு இன்னுமொரு தொழில் கிடைத்துள்ள பூரிப்பு ஷாமிலாவுக்கு.

மாத்தறையில் இரண்டு நாட்களும் தங்காலையில் ஒரு முறையுமாக ஜூரி சேவிஸ் முற்றுப்பெற்றுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம சேவகரும் எங்கோ இடமாற்றம் பெற்றிருந்தார்.

மாப்புளக் கோட் அணிந்த நாட்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து ஆறாக உயர்ந்திருந்தது. என்ன இருந்தாலும் மாப்புளக் கோட்டை திருமண அடையாளமாக இறுதிவரை பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் அவன் மனதிலே எப்படியோ புகுந்திருந்தது.

அன்று இரவு ஒன்பது மணி.

"ஹோஹோ" என்ற சத்தத்துடன் ரபான் அடித்தபடி வேன் ஒன்று வருவது கேட்டது. வீட்டுக்கும் கேற்றுக்கும் இடைப்பட்ட சிறிய தூரத்தை பெரிய வேகத்தில் ஓடி அடைந்துவிட்டாள் ஷாமிலா. வெளியூருக்குப் போய் மெச்சடித்து வென்றால்தான் இப்படி ஆரவாரத்துடன் வருவது அவளது முன்னனுபவம். ஆனால் இது வித்தியாசமாக இருந்தது.

அடுத்த வீட்டு சல்மாவைக் கேட்டுப் பார்த்தபோது "மாத்தறைக்குப் பெய்த்து நாடகம் காட்டி வெத்தியாம்" என்ற தகவல்வெளிப்பட்டது.

படிக்கும் காலத்தில் பள்ளிக் கூடத்தில் நாடகங்கள் பார்த்திருந்த போதும் அப்படிப் பெரிதாய் எதுவும் அவளது ஞாபகத்தில் இல்லை. டீவீயில் போகும் தொடர்நாடகங்கள் பற்றிப் பொம்பிளைங்கள் கதைத்திக்கொள்வது அவ்வப் போது அவள் காதில் விழாமலில்லை. ஆனால் செவ்வாய் இரவுகளில் வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் நாடகங்களை வீட்டாருடன் சேர்ந்து தவறாது அவளும் கேட்பதுண்டு. அது எப்படிப்போனாலும் பள்ளிவாசலுக்குப் போயிருக்குப் கணவன் வரும் போது எல்லாச் செய்திகளையும் கொண்டு வருவார் என்பது அவளுக்கு நிச்சயம்.

பலரதும் வேண்டுகோளுக்கிணங்க அடுத்தடுத்த நாட்களிலேயே 'கண்ணீரும் கதை சொல்லும்' வெற்றி நாடகம் மேடையேற்றப்படப் போவதாக செய்திகள் பரவின. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறு காட்சிகளாம். ஹஸனாருக்கு இருப்புக் கொள்ளவில்லை. தூங்கிக் கிடந்த தனது மாப்புளக் கோட் மேடையில் ஜொலிக்கப் போவது அவனுக்குப் பெருமையாக இருந்தது. மனிஷியும்போய் மாப்புளக் கோட்டை இனம்கண்டுவிட்டால் சிலநேரம் சிக்கலாகிவிடவும் வாய்ப்பிருந்தது.

"நாடகம் பாக்கப்பொக அடுத்தூட்டு ஸல்மா கூப்பிட்ட எனக்கு ரெணுமூனு நாளா மேல்கை நோவு. நான் பொகல்ல" முகத்தைச் சுளித்தபடி அவளாகவே சொன்னாள்.

ஹஸனாருக்கு அப்படி மகிழ்ச்சி.

நாடகம் ஓஹோவென்று பொதுஜன ஆதரவைப் பெற்றது. 'பெரிய ஹாஜி' என்ற பிரதான பாத்திரத்தில் நடித்த சாஜஹான்தான் மாப்புளக் கோட்டை உடுத்தியிருந்தான்.

***** ***** ***** *****

அவர் தோழுகைக்காக பெரிய பள்ளிவாசலுக்குப் போய்க்கொண்டிருந்தார் இபுறாஹிம் ஹாஜியார். மாலை நேரமல்லவா ? கூடிக்கூடிக் கதைத்துக் கொண்டிருப்பது நாடகம் பற்றித்தான் என்பதை அவர் அறிவார். ஒன்றும் தெரியாததுபோல் மெல்ல மெல்ல நடந்தார்.

பள்ளிவாசலுக்குள் ஹாஜியார் புகுந்ததைக் கண்டதும், அடக்கி வைத்திருந்த ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது ஹஸரத்துக்கு! ஒருவகையில் ஹாஜியார் எதிர்பார்த்ததும்தான்.

"நீங்க வரங்காட்டீந்தான் பாத்துக்கொண்டீந்த. மறுக நாடகக் கூத்து தொடங்கிக்கி. ஒங்கட மகன்தான் கோட்டெல்லம் போட்டுக்கொண்டு பெரிய நடிப்பாம். நல்ல குடும்பத்தில பொறந்திட்டு இதா செய்த வேல? இதியளுக்கு நீங்க எடங்குடுக்கியா ஹாஜி? பெரிய பதுவா. அல்லாவெடத்தில பதில் செல்லோணும்" ஹஸரத்தால் பேசிக்கொள்ள முடியாத படபடப்பு.

" எனக்குத் தெரியாமத்தான் இவன் இந்தக் கூத்தெல்லம் போடிய ஹஸரத். அவனுக்கு நான் நல்ல பாடம் படிப்பிக்கியன்." - ஹாஜி சமாளிப்பதற்காக இப்படிச் சொல்லவில்லை.

மாலைத் தொழுகையை முறைப்படி செய்தாரா என்பது அல்லாவுக்குத்தான் வெளிச்சம். விறுவிறுவென்று வீட்டுக்கு நடந்தார் ஹாஜி.

" எங்கியன் அவன்? எங்களுக்கு மானம் மருவாரியா ஊரில நிக்க உடமாட்டீன் போலீக்கி. இன்டக்கி நான் சும்முடுகியல்ல அவன"

வந்ததும் வராததுமாக அகப்பட்டுக்கொண்ட மனைவியால், அவரது கடுப்புக்கு முன்பு ஒன்றும் பேச முடியவில்லை. இப்படிக் குமுறினால் ஏதாவது செய்யாமல் விடமாட்டார் என்பதும் அவளுக்குத் தெரியும்.

***** ***** ***** *****

அன்று ஷாமிலாவின் முகத்தில் அலாதியான மலர்ச்சி ஏனென்று ஹஸனாருக்குப் புரியவில்லை. அவள் பக்கத்துக் கதிரையில் வந்தமர்ந்து கொண்டாள் என்றால் அதன் அர்த்தம் அவள் ஏதோ சொல்லப் போகிறாள் என்பதுதான்.

அந்த வீட்டில் இப்போது வேறு யாருமில்லை. அவர்கள் இருவரும்தான். மூன்று பிள்ளைகளைப் பெற்று வளர்த்து, அவர்களுக்குத் திருமணமும் செய்து கொடுத்து விட்டு நிம்மதியாக இருக்கிறார்கள். இப்போதைக்கு எட்டுப் பேரப்பிள்ளைகள். எல்லோரும் பன் இரண்டுக்கு வயதுக்கு உட்பட்டவர்கள்தான்.

"இன்னும் மூனு நாளில எங்கட கலியாணம் நடந்து நாப்பதாம் வருஷம்...ம்... நேத்து நடந்தது போலீக்கி."

" மெய்யா.? நம்பேல"

" எனம்போ தெரிய. எனக்கொரு ஆச. மாப்புளக் கோட்டோட ஒங்கள பாக்கோணும் போலீக்கி. ரெடியாகிக் கோங்கொ "

"மாப்புளக் கோட் எங்கியோ தெரிய. அல்மாரிக் குள்ள தேடிப் பாருங்க கொஞ்சம். ம்... பேரன் பேத்தியெல்லம் செட்டாகி வருவாங்க. எல்லாரடேம் பேத்டே எனுவர்ஸரி எல்லாம் அவங்களுக்கு மனப்பாடம்."

"ஓஹ இப்பவே ஐஸ்கிரீம் சொகலேட்டெல்லம் கொணந்து வெச்சிக்கொண்டா நல்லம் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல காலம் நீங்க நெனவூட்டின. எனக்கு பஜாருக்குப் பொகத் தேவேமீக்க. பாத்துப் பாத்தீந்தா சோம்பரயாகிய. நான் இப்பவே போறன்."

கணவனை அனுப்பிவிட்டு அலுமாரியைப் புரட்டிக்கொண்டு மாப்புளக் கோட்டைத் தேடித்தேடி ஏமாந்துபோனாள் ஷாமிலா. அது அங்க இருந்தால்தானே!

ஹஸனாருக்கு பஜாரில் எந்த வேலையும் இருக்க வில்லை. மனைவியின் விசித்திர ஆசைதான் அவனைத் திக்குமுக்காட வைத்தது. நேரே கலீல்ஸேரின் வீட்டுக்குத்தான் சென்றான்.

"அவரு மாத்தறக்குப் பெய்த்த"

மனைவி சொன்னாள்.

ஆனால் பைக் வெளியே நின்றது ...!

அவன் திரும்பி வரும்போது நாடகத்தில் நடித்த இரு பெடியன்கள் வந்துகொண்டிருந்தனர்.

அவர்களிடம் விசாரித்தபோது "நாடகச் சாமனெல்லம் சாஜஹான்ட ஊட்டிலதான் வெச்சீக்கி. வாப்பாம் மகனும் சண்டயாம். அவன் ஊட்டுக்குப் பொகாம, சாச்சூடு மாமியூடென்டு ஒளிச்சித் திரீதாம்" என்று சொன்ன போது ஹஸனாரின் தலையே குழம்பிப் போய்விட்டது.

அன்று மாலை கலீல்ஸேருக்கு பலமுறை கோலெடுத்து ஒருவாறு பிடித்துக் றொண்டான்.

"ஹஸனார் நானா நானொரு பயணம் பெய்த்திட்டு இப்பதான் வந்த. மனிஷீம் சென்ன நீங்க வந்தெண்டு. ஒங்கட மாப்புளக் கோட்ட இன்னும் ஒரு கெழமேல தாரன். எங்களுக்கு காலி, வெலியாமம், துந்துவ இப்படி எத்தினயோ எடத்திலீந்து கோல் வார. நாடகத்த கொணவரட்டாம். எல்லாச் செலவேம் தாறாம். கொஞ்சம் பொறுத்துக்கோங்க"

" ஆ.. மெய்யா சரிசரி"

பத்தாம் திகதி மாப்புளக் கோட் கிடைக்காது என்பது உறுதியாகிவிட்டது. இந்தப் பொம்பிளைக்கு எப்படி திடீரென்று இப்படியொரு ஆசை வந்தது?. அது இனி நிராசைதான். என்னதான் செய்வது? பதறிப் போனான். மாற்று வழிதான் என்ன ? மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டான்.

மறுநாள் விடிந்தது. முன்னேற்பாடுகளில் துரிதமாக இயங்கினாள் ஷாமிலா. ஹஸனார் பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்டிருப்பது அவளுக்கு விளங்கவில்லை.

"நான் ஊடெல்லம் தேடிப் பாத்திட்டன். மாப்புளக் கோட் இல்ல. நெனவுட்டிப் பாருங்கொ. நீங்க தாருக்காலும் குடுத்தா?"

" அந்தக் காலத்து மாப்புளக்கோட்டு, இந்தக் காலத்தில தாருக்கன் தேவ? நீங்க தெரியாம பரனகோட் காரனுக்கு குடுத்து பிளாஸ்டிக் பேஸன் - பாளியள் எடுத்தோ தெரிய. சரிசரி நீங்க ஒன்டுக்கும் யோசிக்க வாண. டைமுக்கு வரும் "- என்று வாய்விட்டுச் சிரித்தான்.

அவளுக்கும் ஏதோ நம்பிக்கை பிறந்துவிட்டது போலும்.

***** ***** ***** *****

மே மாதம் பத்தாம் திகதி.

அதிகாலை அதான் ஒலிக்கும்போதே இருவரும் எழுந்து குளித்து , தொழுது , கொஞ்ச நேரம் குர்ஆன் ஓதி மனதை நிரப்பிக் கொண்டனர். காலை ஆகாரத்தையும் நேரகாலத்தோடு முடித்துக் கொண்டனர்.

எட்டு மணியாகும்போதே பேரன் - பேத்திகள் ஒன்றுகூடி வந்திருந்தனர். இனியென்ன ஒரே கலகலப்பு. வீடு மறுபக்கம் புரண்டு கொண்டிருந்தது. இருப்பது போதாதென்று இவர்களும் கேக் வகையறாக்கள் கொண்டுவந்து பகிர்ந்தனர்.

பத்து மணியாகும்போது அவர்கள் விடைபெறும் நேரம் வந்துவிட்டது.

மூத்த மகள் பகல் சாப்பாட்டுக்கும் இளைய மகள் இரவுச் சாப்பாட்டுக்கும் அழைப்பு விடுத்திருந்தனர். மகன் வெளிநாட்டில் என்பதால் மருமகளால் ஒன்றும் செய்து கொள்ள முடியாமைக்கு வருத்தம் தெரிவித்திருந்தாள்.

மனம்போல் வீடு அவர்கள் இருவராலும் நிரம்பி இருந்தது. புத்தாடைகளோடு பழைய நினைவுகளைக் கொண்டாடினர்.

" இந்தாங்க மாப்புளக் கோட். பாருங்க" என்றவாறு அந்தப் புகைப் படத்தை நீட்டினான்.

"புத்தப் புதிசி எங்களயன்?. அடே மாப்புளக் கோட்டோட நிக்கிய. நல்ல பஸந்து." அவள் பிரமித்துப் போனாள்.

"இது மாப்புள வர ரெடியாகிக்கொண்டிந்த டைமில, கூட்டாளிமாரு கெமரா கொணந்து புடிச்சது. நான் எப்பிடிச்சரி தேடியெடுத்த. பழசாகி மங்கிப் பெய்த்தீந்த. நேத்து சிரிமா ஸ்டுடியோவில குடுத்து புதுசாக்கி எடுத்த."

"ஜாதிஜாதி. இப்ப நீங்க மாப்புளக் கோட் போட்டத் துக்கு இப்பிடிப் பஸந்து வாரல்ல. இத நானே வெச்சிக் கொளுகியன்." - என்றவாறு அந்தப் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

ஹஸனார் வென்றுவிட்டான்.

அறுபதும் அறுபத்தெட்டும் , இருபதும் இருபத் தெட்டும்போல் குதூகலித்தனர். அன்பான வாழ்வு அமைந்துவிட்டால், அதை வெறும் இலக்கங்களால் என்னதான் செய்துவிட முடியும்.

***** ***** ***** ***"*

மாப்புளக் கோட் விடயத்தில் ஹஸனாருக்கு சில சந்தேகங்கள் எழுந்தன. இதுபற்றி சில புலனாய்வு நடவடிக் கைகளில் ஈடுபட வேண்டி நேர்ந்தது அவனுக்கு. சில தகவல்கள் கிட்டின. அவை உறுதியாகின.

பிரதான கதாபாத்திரமேற்று நடித்த சாஜஹானின் வாப்பா கடுங்கோபத்துக்குள்ளானார். மகன் அகப்படாத நிலையில், நாடகச்சாமான்கள் அனைத்தையும் உள்ளடங்கிய ஹாட்போட் பெட்டியை வெளியே இழுத்துப் போட்டு மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்புக் குச்சியை அடித்துவிட்டார். கொழுந்து விட்டெரிந்த நெருப்பில், ஹஸனாரின் மாப்புளக் கோட்டும் அகப்பட்டு கருகிச் சாம்பலாகிப் போயிருந்தது.

இதுதான் மாப்புளக் கோட்டின் கதை.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்னால் ஒரு கட்டத்துக்கு மேல் தாங்க முடிய வில்லை. இதற்கு மேல்நான் இருப்பது வீண் என்று பட்டது. என் நெஞ்சிலிருந்து பாரங்களை இறக்கி வைக்க எனக்கு வேறு வழி தெரியவில்லை.' அவன் நிறுத்தினான்.

'சொல்லுங்கள்' பாவமன்னிப்புக் கேட்கும் திரைக்கு அப்பாலிருந்து குரல் கேட்டது. 'என் காதுக்குள் கேட்டுக் கொண்டிருந்த ரயில் இரைச்சலின் திசையில் என் கால்கள் நடந்தன. கடற்கரையி லிருந்து அந்த ரயில்தண்டவாளத்தினருகில் தாழம்புதர்கள் மண்டியிருந்த அந்தப் புதர்களுக்கடியில் எத்தனையோ சோடிகளை, எத்தனையோ விதங்களில் நான் கண்டிருக்கிறேன். ஆனால், அன்றைக்கு எனக்குத் தாள முடியவில்லை. அவர்கள் எல்லோரையும் கல்லால் அடித்துக் கொள்ள வேண்டும் என்ற வெறி எனக்கு வந்தது.'

'அப்படிச்செய்ய வேண்டுமென்று ஏன் நினைக்கிறீர்கள்? மனிதர் ஒவ்வொருவருக்குமிருக்கிற சுதந்திரத்தில் நீங்கள் எப்படிக் குறுக்கிட முடியும்?'

'மனிதனின் சுதந்திரம் அவனது தனியிடத்தில் மட்டுப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறான பொது இடங்களில் கட்டற்றுக் கிடந்து புரள்வது சுதந்திரம் என்று சொல்லாதீர்கள்.'

'சரி, சொல்லவில்லை. பிறகு என்ன நடந்தது?'

'நான் என் கண்களை அந்தத் திசையில் செலுத்தாமல் ரயிலை நோக்கி வந்தேன். காற்று வீசிக் கொண்டிருந்தது.. கடல் அலைகள் பேரிரைச்சலாக ஓடி வந்தன. அடிக்கும் நுரைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவை என் மனதில் எந்த உணர்வுகளையும் கிளர்த்தவில்லை. அவளை இந்த உலகத்தி லிருந்து பாதுகாக்க நினைத்தேன். அவள் தினமும் இவ்வழியே வருகிறவள். அவளது பரிசுத்தம் யாரும் அறியாதது. அதனை நான் இனங் கண்டேன். அவளது பரிசுத்தம் எப்படியானதென்றால்..?'

'எப்படியானது...?'

'வானத்திலிருந்து எந்த ஒரு அழுக்குமில்லாமல் வந்து வீழ்கின்ற அமுதத் துளி போன்றது'

'அது வீழுமிடம் சேறாக இருந்து விடக் கூடாதே, என்பது என் மனதிலிருந்த அச்சமாகவிருந்தது.

'அதற்குப் பிறகு...?'

'ம்ம், அதற்குப் பிறகு நெடுநேரம் நான் கடலையும், ரயிலையும் பார்த்தபடியிருந்தேன். கடலும், ரயிலும் இரைந்து கொண்டேயிருப்பது போலவே மனமும் இரைந்தது.

'எவ்வளவு நேரம் அங்கே இருந்தீர்கள்...?'

'எனக்குத் தெரிந்த விதத்தில் ஐந்து மணி நேரம் அப்படியே இருந்தேன்'

'எத்தனை ரயில்கள் அதற்கிடையில் சென்றன?'

'எட்டு ரயில்கள்'

'குதித்து விட நினைத்தவர் எதற்காகத் திரும் பினீர்கள்?'

'ஒவ்வொரு தடவை ரயில் வருகிற போதும் அந்தப் புதர் அசைவுகள் என்னை இழுத்தன'

'ஒவ்வொரு தடவையும் அவள் அந்தப் பக்கம் நடந்து வருகிறாள் எனவும், அந்தத் தாழம் புதர்கள் அவளை ஈர்த்து இழுத்துக் கடலுள் அமிழ்த்தி விடுவது போலவும் தோன்றிக் கொண்டேயிருந்தது.


'அந்த இரவில் அவள் வெளியே வருவாள் என்று ஏன் நினைக்கிறீர்கள்?'

'இரவில் அவள் வெளியே வருவதில்லை. பகலும் ஒரு



தாட்சாயணி





# ஜோசபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப்பிசாசு. வெளிக்கொள்ளாமல் வெயிலின் ஆபரணங்கள் அணிந்து சாதுர்யமாகத் தன்னை மறைத்துக் கொள்ளும். சட்டென்று இருள்கிற பொழுது, அவள் சுதாகரித்து வீடு சேர்வதற்குள் ஒரு புதர் நோக்கி அவளை இழுக்கும்'

'அவள் சொன்னாளா...?'

'இல்லை. எனக்கு முதுகில் கண்கள் இருக்கின்றன. நான் கண்டேன். நான் முன்னோக்கி, முன்னோக்கி ரயில் பக்கம் செல்கிற போதெல்லாம் என் முதுகில் கண்கள் முளைத்து விடுகின்றன.'

'வேறென்ன பார்த்தீர்கள்?'

'அவளுடைய எதிர்காலத்தைக் கண்டேன், நானன்றி அவள் எப்படி வாழ்வாள்? அவளைப் பற்றி எனக்குத் தெரிந்ததை விட வேறு யாருக்கும் தெரியாது. அவளைப் பற்றி அறிந்து அவளது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவன் நான். எனக்குப் பிறகு வருகிற ஒருவன், அப்படி ஒருவன் இருக்க முடியாது. இருந்தாலும், அவன் இவளை முழுதாக அறிந்து அவள் விருப்பங்களை நிறைவேற்றுவதற்குள் அவள் பாதிக் கிழவியாகி விடுவாள். நான் இருப்பது போல் நான் எப்போதும் நினைப்பேன். காலம் திரும்பிப் போய் ஒரு புள்ளியில் நின்று மீளச் சுழலத் தொடங்காதோ என்று. அப்படியானால் அந்தப் புள்ளியைத் தூக்கி இந்தப் பிரபஞ்சத்திற்கு வெளியே எறிந்து விடலாம்.'

'எதை எறியப் போவதாகச் சொல்கிறீர்கள்?'

'காலத்தின் ஒரு துகளை. நான் வாழ்ந்திருக்கக் கூடாதென நான் நினைக்கின்ற காலத்தின் ஒரு புள்ளியை'

'அந்தக் காலப் புள்ளியில் என்ன நடந்தது?'

'எதுவும் நடந்திருக்கக் கூடாதென்று நான் நினைக்கிற அந்த விஷயம்...'

'சொல்லுங்கள்' அவளை முதன்முதலாகக் கடற்கரைக்கு அழைத்து வந்திருந்தேன். அவள் ஒரு குழந்தை போலக் கடல் அலை களைப்பார்த்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தாள். திடீரென்று ஒரு தாழம்புதரை அவள் காட்டினாள். அங்கே போய் அமர் வோமென்றாள். நானும் அவளுக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்திருந்தேன். கோனைச் சுவைத்தபடி அங்கே போனோம்.

புதருக்குப் பின்னால் இரு சோடி வெறும் கால்கள் பிணைந்தபடி கிடந்தன. வழுவழுப்பாக அவை பாம்புகள் போலப் பின்னியிருந்தன. நிலவொளி அப்போது தான் விழ ஆரம்பித்திருந்தது.

'பாம்பு' என அவள் கத்தினாள். நான் அவள் கையைப் பிடித்துக் கொண்டு கடலை நோக்கி ஓடினேன். பாம்புகள் இருக்குமிடத்தில் நாம் இனி இருக்கக் கூடாதென்றேன். பாம்புகள் விஷமுள்ளவை. முழு விஷம். நீலம். அவற்றின் அருகில் நீ போகக் கூடாதென்றேன்.

தலையை அசைத்தாள். ஆனால், அவள் அந்தத் திசையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். சற்று நேரத்தில் அந்தப் பீதி அவளிடமிருந்து ஒளிந்து விட்டது.

அவளுக்கு நான் காட்டிய உலகமில்லை அது என்று அவள் புரிந்து கொண்டு விட்டாள்.

அதற்குப்பிறகு அவள் நாகங்கள் பற்றிய செய்திகளைத் தேடிப் படித்துக் கொண்டிருந்தாள்.

நாகங்கள் தாழம்பூ வாசனையை நாடி வரும் என்றாள். தனிமை, வெறுமை என்ற வாழ்வின் துயரங்களிலிருந்து மீள, அவை திரும்பத் திரும்பத் தாழம்பூக்களை நோக்கி வருகின்றன என்றாள். அதில் தவறொன்றும் இல்லையென அவள் சொன்ன கணமொன்று வந்தது. அந்தக் கணத்தினை ஒரு பாம்பு போலத் தூக்கி நிலத்தில் அடித்துக் கொல்ல வேண்டுமென நினைத்தேன். அதைத்தான் சொன்னேன். அந்தக் கணத்தினைப் பிரபஞ்சத்திலிருந்து தூக்கி வெளியே எறிந்து விட வேண்டும்'

'எறிந்து விடலாம். அதற்குப் பிறகு, எல்லாம் சரியாகி விடுமென்று நினைக்கிறீர்களா?'

'சரியாகத்தான் வேண்டும்'

'சிறு பிசகெதுவும் நேர்ந்தால்? அந்தக் கணத்தைத் தூக்கி எறிந்து விடலாம். புதிய கணங்கள் நுரைத்துப் பெருகும் காலத்தில், இனி வரும் இன்னொரு கணம் ஒன்று உண்டு. அந்தக் கணத்தில் அவள் அன்று கதைத்ததைப் புதிது போலச் சொல்லலாம் அல்லவா?'

அதனால் தானே, நானே என்னை மாய்த்துக் கொள்ள நினைத்தேன்'

'மாய்த்துக் கொண்டால் மட்டும் அவள் இந்த நிலையிலிருந்து விடுபடுவாளா?'

'விடுபட வேண்டும், மாய்த்துக் கொண்டால் என்னிடம் அளவிறந்த மாயச்சக்தி வந்து சேரும் என நம்புகிறேன். உடலற்று சக்திகளால் நிரம்பியிருப்பேன். அவள் நினைவுகளை என்னால் தூக்க முடியும். அவள் உடல் இங்கே பருப்பொருளாக இருந்தாலும், நினைவுகளை அவற்றின் புறம் திரும்பாமல் என்னால் செய்ய இயலும்.'

'அது எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்?'

'அவள் அவ்வளவு தூய்மையானவள்'

'தூய்மை என்பதை ஒரு அளவுக்கு மேல் இவ்வுலகில் எதிர்பார்க்க முடியாது.' 'அவள் இவ்வுலகிற்குச் சேர வேண்டியவள் இல்லை. ஒரே ஒருத்தி. தவறுதலாக இந்தப் பாழும் உலகிற்கு வந்து சேர்ந்து விட்டாள்.

'ஜோசபின்... உணர்வுகள் கெட்டித்திருக்கும் அவள் மீள, மீளத் தூயவளாகவே இருப்பாள்.'

'இப்போது அவள் எங்கே?'

'பல்கலைக்கழகம் சென்று விட்டாள்'

'அவள் சொல்வதை உங்களால் ஏன் ஏற்க முடியாமல் இருக்கிறது?'

'அவள் ஒரு அப்பாவி, அவளுக்கு இந்த உலகத்தைத் தெரியாது. அதன் கேடுகெட்ட போக்கிரித்தனங்கள் தெரியாது. எதையும் இலகுவில் நம்பி விடுவாள். அந்த நம்பிக்கை அவளை சீரழித்து விடும்.'

'வாழ்க்கையின் அடிப்படை நம்பிக்கை தானே?'

'நம்பிக்கை அவளைப் பற்றியதாக இருந்தால் நம்ப முடியும். மற்றவர்கள் மீது எந்தவொரு நம்பிக்கையும் அவளுக்கு இருக்கக் கூடாது'

'இது உங்களுடைய பிடிவாதம், வீம்பு' 'நீங்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளுங்கள். நான் அவளைக் காப்பாற்ற நினைக்கிறேன்'

'காப்பாற்ற நினைப்பவர் தற்கொலை செய்ய நினைப்பானேன்?'

'அவள் என் சொற்களில் நம்பிக்கை வைக்கவில்லை. நான் சொல்வது உண்மை என உணரவில்லை'

'அவளுடைய குரலையும் நீங்கள் கேட்கத்தானே வேண்டும்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கேட்கலாம். அவை உண்மை இல்லை என அவள் நம்ப வேண்டும்'

'அதே போல அவளும் நினைக்கலாம் அல்லவா, தான்சொல்வதை நீங்கள்முழுமையாக நம்ப வேண்டுமென்று...'

'இல்லை, அவளுக்கு எதுவும் தெரியாது'

'உங்களுக்கு என்ன தெரியும்?'

'எனக்கு எல்லாம் தெரியும்..'

'எப்போதிருந்து?'

'எப்போது, இந்த உலகின் கசடுகளை பார்க்கத் தொடங்கியதிலிருந்து'

'உலகின் கசடுகளை எப்போது பார்க்கத் தொடங்கினீர்கள்?'

அவன் சற்று நிறுத்தினான்.

'என் எட்டு வயதில், பாடசாலைக்குப் போய் விட்டு வந்த போது...'

'என்ன பார்த்தீர்கள்?'

'பக்கத்து வீட்டிற்கு தொலைக்காட்சி பார்க்கப்போயிருந்தேன்'

'அங்கே யார் இருந்தது?'

'ஒரு கிழவன்'

'மற்றவர்கள்...?'

'அவர்கள் வேலைக்குப் போய் விடுவார்கள்.

'என்ன நடந்தது?'

ரி.வி பார்த்தோம். அதற்குப்பிறகு அந்தக் கிழவன் என்னைப் பக்கத்தில் அமர்த்தி ரி.வி பார்த்தவன், பிறகு என்னைத் தன் மடியில் இருத்தினான். பிறகு தன் சாரத்தின் முடிச்சை அவிழ்த்தபடியிருந்தான். பிறகு என்னை அதைத் தடவச் செய்தான்'

'எத்தனை நாள் நடந்தது.

'முதல் நாள் எனக்குப் பயமும், அருவருப்பும் இருந்தது. அடுத்த நாள் இதை விட மோசமாக அவன் நடக்கத் தொடங்கினான். எனக்குத் தொலைக்காட்சி பார்க்கப் பிடிக்கவில்லை. நின்று விட்டேன்.'

'நீங்கள் இதை யாரிடம் சொன்னீர்கள்?'

'யாரிடமும் சொல்லவில்லை'

'ஏன்?'

'என்னை யாரும் நம்ப மாட்டார்கள். அவளிடம் அதைத்தான் ஒவ்வொரு தடவையும் நான் சொல்ல முயல்கிறேன். அவள் அதைக் கேட்கத் தயாராகவேயில்லை.'

'அந்தச் சம்பவத்தைச் சொன்னீர்களா...?'

'இல்லை, அதே போல் உலகில் இருப்பார்கள் என்று சொன்னேன்.

'இல்லை எல்லோருமே அப்படி இருக்க மாட்டார் கள் என்கிறாள்'

'அவள் எங்காவது சோரம் போய் விடுவாள் என்று நினைக்கிறீர்களா?'

'சோரம் போவதில் என்ன பிழை என்று கேட்கிறாள். அது அவரவர் சுதந்திரம். அவரவர் தனக்குப் பிடித்தபடி வாழலாம் என்கிறாள்.' 'அவள் சொல்வதை ஏன் ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள்?'

'அவளுக்கு மோசமான இந்த உலகின் மறுபுறம் தெரியவில்லை'

'அவளே அதில் வாழ விரும்புகிறாள் எனில் விட்டு விடுங்களேன்'

'எப்படி விட்டு விட முடியும்? அவள் எதையும் அறிந்து செய்யவில்லை. அவள் சுதந்திரமாக இருக்க விரும்புகிறாள். சுதந்திரம் எனும் பெயரில் அவள் கெட்டுச் சீரழியக் கூடாது என நான் நினைக்கிறேன்'

'அதற்காக உலகத்திலுள்ள எல்லாவற்றையும் அவள் கண்களிலிருந்து மறைத்து விடுவதால் அவள் தப்பித்து விடுவாள் என நினைக்கிறீர்களா?'

'நான் அவளைக் காப்பேன். அவள் மீது தீமையின் நிழல் விழாது காப்பது என் வேலை'

'அதை எதற்கு உங்கள் தலையில் போட்டுக் கொள்கிறீர்கள்?'

'அவள் என்னுடையவள்'

'இப்படி உரிமை கொண்டாடுவதை நிறுத்தி அவள் அவளுக்கானவள் என்று ஏன் நீங்கள் இலகுவாக எடுத்துக் கொள்ளக் கூடாது?'

'அவளுக்கு நல்லது, கெட்டது தெரியாது'

'உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் நல்லவையென்று எப்படிச் சொல்கிறீர்கள்? உங்கள் பார்வையில் நல்லதென்று நீங்கள் எண்ணுகிற விஷயத்தை அவள் தன் பார்வையில் தீயதென எண்ணலாம்'

'எண்ணலாமில்லை. எண்ணினாள்'

'அப்படியா, அதன் பிறகு...?'

'அதன்பிறகு என்னோடு சண்டையிடத் தொடங்கினாள்'

'எதற்காக?'

'தன் இஷ்டப்படி தன்னைத் தனியாக உலவ விடும்படி கேட்டாள். அவள் முதுகின் மீது என் கண்கள் படிவதை அவள் விரும்பவில்லை'

'அதில் ஆச்சரியமில்லையே. ஒரு பெண் தன் சுதந்திரத்திலிருக்க விரும்புவது அவள் இயல்பு'

'அதனால் சமூகச் சீர்கேடுகள் அதிகரித்து விடும்'

'ஆரம்பத்தில் ஒரு கட்டுக்குள்ளிருந்து அவிழ்த்துக் கொண்டு வெளியே வரும் போது அது நடப்பது இயல்பு. பிறகு அது தன்னால் சரியாகி விடும்'

'சரியாகி விடும் என்பதற்காக நான் அவளைப் பலி கொடுக்க முடியாது'

'சரி, அப்புறம் என்னாயிற்று?'

'எப்புறம்?'

'நீங்கள் ரயிலில் குதிக்கப் போன விடயம்?'

'அது தான் சொன்னேனே, என்னால் அவளை விட்டுப் போக முடியவில்லை'

'பிறகு எதற்காகத்தற்கொலை செய்ய முயற்சித்தீர்கள்?

'என்னால் அவளோடு போராட முடியவில்லை. அவள் சொல்லும் விதத்தில் நான் இல்லை...'

'அப்படித்தானே அவளும், ஏன் திரும்பினீர்கள்?'

'நான் இந்தப் பிறப்பிலிருந்து மறைந்தால், வேறொரு சட்டையைப் போட்டுக் கொண்டு வருவது போல. அதற்குள் அவள் என்னை மறந்து விடுவாள்.

'அவள் உங்களை என்ன சொன்னாள்...?'

'தன் வாழ்க்கையிலிருந்து விலகி விடச் சொன்னாள்'

'அதை நீங்கள் செய்யலாமே'

'செய்யலாம், அதற்குப் பிறகு அவளது வாழ்க்கை இன்னும் மோசமாகி விடலாம்'

'அதைப்பற்றி நீங்கள் என் கவலைப்படுகிறீர்கள்?'

'நான் கவலைப்படாமல்... வேறு யார் அவளுக்கு இருக்கிறார்கள்?

ஜோசபின் எனது மகள்'

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-11

சந்திரா
இரவீந்திரன்





# தங்கமலர்

வெட்டவெளியில் விளாசி எரிந்து கொண்டிருந்தது பொதுச்சுடர். உயர்ந்த மென்னிரும்புத் தாங்கியில் வைக்கப் பட்டிருக்கும் பென்னம்பெரிய வட்டச் சட்டியில் எரிந்து கொண்டிருக்கும் தீபத்தை துயர் நிறைந்த முகத்தோடு நின்றிருக்கும் ஒருஇளைஞன் அணைய விடாமல் கவனித்துக் கொண்டிருந்தான். அவன்ஏறி நின்றிருக்கும் மரப்பலகையாலான படிகளிற்குக் கீழே சில இளைஞர்கள் மௌனமாக நின்றிருந்தார்கள்.

ஊசி போல் உடலைத் துளைத்தெடுத்துச் செல்லும் குளிர் காற்றை சுவாசிக்க முடியாமல் திணறிக் கொண்டு நிற்கும் சனத்திரள், அந்தப் புல்வெளியில் நிமிர்ந்து நிற்கும் பல நூற்றுக்கணக்கான மாவீரத் தூபிகளில் தமது உறவுகள் அல்லது தெரிந்தவர்கள் யாராவதுஇருக்கிறார்களா என அவசர அவசரமாகத் தேடிக்கொண்டு நகருகிறார்கள்.

'உஷ்' என்ற ஓசையுடன் சுழன்றடிக்கும் குளிர் காற்றில் தூபிகளைச் சுற்றித் தொங்க விடப்பட்டிருக்கும் வர்ணத் தோரணங்களும் சிவப்பு மஞ்சள் கொடிகளும் குத்துக்கரண மடித்துக் கொண்டிருந்தன. தாய் மண்ணிற்காகப் போராடி மரணித்த மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தி முடித்த சனத்திரளை அருகிலிருக்கும் மண்டபத்திற்குள் சென்று அமருமாறு ஒலிபெருக்கியில் அறிவுறுத்தப்படுகிறது. நிரம்பி வழிந்து கொண்டிருக்கும் மண்டபத் திற்குள் உணர்ச்சி நிரம்பிய நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியிருந்தன. மண்டபத்திலிருக்கும் ஆசனங்களில் சிலர் பின்னால் நின்றபடி நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கடைசி வரிசைக்கு முதல் வரிசையில் அவள் தனியாக அமர்ந்திருந்தாள். அவளின் கண்கள் துள்ளும் மீன்களென அங்குமிங்கும் அசைந்து கொண்டிருந்தன. முகத்தில் தேங்கிக் கிடக்கும் வாட்டம் உற்றுப் பார்த்தாலன்றி கண்ணுக்குத் தெரியாமல் ஒளிந்து கிடந்தது. அவளருகில் அவளது பெண் குழந்தை மேடையில் நடைபெறும் ஒழுங்குகளைக் கண்வெட் டாமல் பார்த்துக்கொண்டிருக்கிறாள். இவள் அந்தக்குழந்தையின் ஒரு கையைப் பற்றிப் பிடித்தபடி அமைதியாகஇருக்கிறாள். மேடையில் ஒளிரும் விளக்குகளின் ஒளியில் அவளின் கண்கள் அவ்வப்போது மின்னுவது போலிருந்தன. அவள் விழிகளினுள் அரும்பி நிற்கும் கண்ணீரில் ஒளித்துளிகள் பட்டுத்தெறிக்கும் போது மற்றவர்கள் அதனைக் கண்டுவிடக் கூடாது என்பதற்காக அவள் கண்களை இமைக்காமல் அப்படியே இருக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

"தங்கமலர், எப்படியிருக்கிறீங்கள்? தனியாவோ வந்தனிங்கள்?" அவளது குழந்தை அமர்ந்திருக்கும் இருக்கைக்கு அடுத்த இருக்கையில் வந்தமர்ந்த இன்னுமொரு பெண் மெல்லிய குரலில் குசலம் விசாரித்தவாறே அமர்ந்து கொள்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம். என்னோட கனகியும் சேர்ந்து வாறதெண்டு இருந்தவ. பிறகு அவ இண்டைக்கு மேடையிலை பேச இருக்கிறதாலை, நேரத்தோடயே வந்திட்டா. நான் கொஞ்சம் பிந்தி றெயினிலை வந்தனான்.."

"கனகி எண்டு... அரசியல்துறைக்குள்ளை இருந்த கனகி தானே?" அந்தப் பெண் அவளைப் பார்த்துக் கேட்டாள்.

"ஓம் அவ தான்" தங்கமலர் சொல்லிவிட்டு மேடையையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"தங்கச்சிக்கு என்ன பெயர்?.." அந்தப்பெண் விடுவதாயில்லை. தங்கமலரின் குழந்தையை விசாரித்துக் கொண்டிருந்தாள். "வன்னியா" அந்தக் குழந்தை திரும்பி பதில் சொல்லிவிட்டு மீண்டும் மேடையை நோக்கி தன் கவனத்தை செலுத்தத் தொடங்கிவிட்டது.

"ஓவ்... நல்ல அருமையான அழகான பெயர்" அந்தப் பெண் சொல்லிவிட்டு தங்கமலரைப் பார்த்தாள். தங்கமலர் பதிலுக்கு ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு திரும்பிக்கொண்டாள்.

விடுதலைஇயக்கத்தின் மாவீரத்தளபதி ஒருவரின் மனைவி மேடைக்கு அழைக்கப்படுகிறார். அவர்தான் மேடையிலிருக்கும் மாவீரத்தூபிக்கு மலர்மாலை அணிவிக்கப் போகிறார். மண்டபத்தின் வாயிற்கதவருகில் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்களுக்கு அருகாக நின்று உரையாடிக் கொண்டிருந்த அந்தப் பெண்மணி குறிப்பிட்ட அறிவித்தல் ஒலிபரப்பப்பட்டவுடன் வேகமாக மேடையை நோக்கி நடக்கிறார்.

மேடையில் மாவீரத்தளபதியினது மனைவியின் கைகளில் றோஜாக்களாலும் செவ்வந்திப்பூக்களினாலும் கட்டப்பட்ட அழகிய பூமாலையைக் கொடுக்கிறார்கள். அவர் அதனைஇரு கைளினாலும் வாங்கி மேடையிலிருக்கும் பொதுத்தூபிக்கு அணிவிக்கிறார்.

"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்... நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்..." பாடலின் நாதஸ்வரஇசை ஒலிபெருக்கியில் ஒலிக்கவிடப்படுகிறது.

தங்கமலருக்கு அந்த இசையைத் தொடர்ந்து கேட்க முடியாமல் துயரம்பொங்கி நெஞ்சை அடைக்கிறது. அவளால் கண்களில் அரும்பும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தலையைக் குனிந்து கொள்கிறாள். கண்களைக் கைகளால் துடைக்கத் துடைக்கக் கண்ணீர் பெருக்கெடுத்துக் கொண்டேயிருக்கிறது.

"அம்மா, ஏன் அழுறீங்கள்? அழாதேங்கோ. அப்பாவை நினைச்சுத் தானே அழுறீங்கள்? அவர் எங்கட கண்ணுக்குத் தெரியாமல் இந்த காற்றிலை கலந்திருக்கிறார். எங்களுக்கு எப்பவும் துணையாகஇருக்கிறார் எண்டு நீங்கள் தானே சொல்லுறனிங்கள்?இப்ப நீங்களே அப்பாவை நினைச்சு அழுறீங்கள்...?" குழந்தை வன்னியா அவளின் கைகளைப் பற்றிப்பிடித்து சொன்ன போது தங்கமலருக்கு மேலும் அழுகை பீறிட்டது.

அருகிலுள்ளவர்கள்தன்னைப்பார்த்துவிடுவார்களோ என்ற பதற்றத்தில் அவள் எழுந்து, வன்னியாவையும் அழைத்துக் கொண்டு மண்டபத்தை விட்டு அவசரமாக வெளியே நடக்கிறாள்.

அடுத்தஇருக்கையிலிருந்த பெண் அவர்களை யோசனையோடு திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'தண்ணீர் குடிச்சிட்டு வாறம்' என்பது போல் கையினால் அந்தப் பெண்ணுக்கு ஜாடை காட்டிவிட்டு தங்கமலர் வெளியேறினாள்.

வெளியே பரந்து விரிந்து கிடக்கும் புல்வெளியில் மாவீரர்களது பெயர்கள் பொறிக்கப்பட்ட தூபிகள் கண்ணுக் கெட்டிய தூரம்வரை நாட்டப்பட்டிருந்தது.

அவள் குழந்தையின் கையினைப் பற்றியபடி ஒவ்வொரு தூபிகளாகப் பார்த்துக்கொண்டே அந்த வெளியில் மெதுவாக நடக்கிறாள். இங்கிலாந்தின் மார்கழி மாதக் குளிர்காற்று ஊசிகளாய் முகத்தை அறைந்து கொண்டிருந்தது. அந்தக்குளிரை தாங்குவதற்காக மற்றவர்கள் எல்லோரும் தடித்த அங்கிகளை அணிந்திருந்தார்கள். ஆனால் அவளோ தன் அங்கியைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு அந்தக்காற்றை அனுபவித்தபடி நடந்துகொண்டிருந்தாள். அது நெருப்பாய் கொதித்துக்கொண்டிருக்கும் அவள் மனதிற்கும் உடலுக்கும்இதமாகவும் ஆறுதலாகவுமிருந்தது.

"தங்கமலர், நீங்களிங்கை வெளியிலை நிக்கிறியள், அங்கை கனகியின்ரை உரை போய்க்கொண்டிருக்கு..." போராளி சுப்பிரமணி யோசனையோடு வினவினார்.

"இல்லை.. எனக்குக் கொஞ்சம் தலைவலியாயிருக்கு. உடம்பு அவ்வளவு சரியில்லை. அதுதான் கொஞ்சம் வெளியிலை வந்து காத்துவாங்கினால் சுகமாயிருக்குமெண்டு வந்தனான். நீங்கள் போங்கோ. நான் வாறன்.." தங்கமலர் சொல்லிவிட்டு கால்போன போக்கில் தூபிகளைக் கடந்து நடந்துகொண்டே போனாள். பின்னால் அவள் குழந்தை வன்னியா ஒவ்வொரு தூபிகளாய் எண்ணியவாறே நடந்து வந்துகொண்டிருந்தாள்.

"அம்மா,இந்தமுறை அப்பாவின்ரை தூபியை பார்க் கலாமே? எங்கையம்மா அப்பாவின்ர தூபி? நான் அதைப் பார்க்கவேணும். எங்கையம்மா?" வன்னியா கேட்டதும் அவள் திடுக்குற்றுத் திணறிப்போனாள்.

"அது தான் நானும் பாக்கிறன். கொஞ்சம் பொறுங்கோ... கண்டுபிடிப்பம்.." அவள் சமாளித்தாள்.

"நீங்கள் சும்மா சொல்றீங்கள். போனமுறை மாவீரர் நாளுக்கு வந்தபோதும்இப்பிடித்தான் சொன்னனீங்கள். அதுக்கு முதல்முறையும்இப்பிடித்தான் சொன்னனீங்கள். இப்பவும் அதையேதான் சொல்றீங்கள். நீங்கள் அப்பாவின்ரை தூபியை கண்டுபிடிக்க மாட்டீங்கள். யாரையாவது கேளுங்கோ. சொல்லுவினம்...." வன்னியாவின் ஆவலையும் ஆதங்கத்தையும் அவளால் எப்போதுமே தீர்த்துவைக்க முடியாது என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். யாரைக் கேட்டாலும் தீர்த்துவைக்க முடியாத அந்தத் துயரத்தை அவளாலேயே தாங்கமுடியாத போது அதை எப்படி வன்னியாவுக்குச் சொல்லி தீர்க்கப்போகிறாள் என்று அவள் யோசித்துக் குழம்பினாள்.

அவளால்அதற்கு மேல் அங்கு நிற்கவேமுடியவில்லை.

"அம்மாவுக்கு தலைக்குள்ளை என்னவோ செய்யுது. உடம்பு சரியில்லை. காய்ச்சல் காய்கிற மாதிரியிருக்கு. நாங்கள் இப்ப வீட்டுக்குப் போவம் செல்லம். போய் கொஞ்சம் றெஸ்ற் எடுப்பம். சரியா..?" தங்கமலர் சொன்னதும், குழந்தை யோசனையோடு தன் தாயை பார்த்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளந்த மாவீரர் பணிமனை அமைந்திருக்கும் இங்கிலாந்தின் பிரசித்திபெற்ற நகரின் பிரதான பகுதிக்கு அந்தப் பணிமனையிலிருந்து நடையாகவே வந்து சேர்ந்தாள். தொடரூந்து நிலையத்திற்கு வந்தபோது சுறுசுறுப்பானதொரு உலகத்திற்குள் நுழைந்து கொள்வது போல் அவள் உணர்ந்து கொண்டாள்.

தொடரூந்தில் ஏறியபோது மனதிற்கு சற்றே ஆறுதலாக இருந்தது. ஆனாலும் வீட்டுக்குப் போனபின்னர் வன்னியா மீண்டும் தன் அப்பாவின் தூபியைப்பற்றிக் கேட்கத் தான் போகிறாள். அதற்கு என்ன பதில் சொல்ல வேண்டு மென்று யோசிக்கத்தொடங்கினாள். இம்முறை அவளை ஏமாற்றக்கூடாது என்பதில் அவள் மிகவும் உறுதியாக இருந்தாள். அவளுக்கு இப்போது பத்து வயதாகி விட்டது. பிரச்சனைகளை ஓரளவு புரிந்துகொள்ளக்கூடிய பக்குவத்திற்கு அவள் வந்துவிட்டாள். எனவே பக்குவமாகவே எல்லாவற் றையும் சொல்லுவோம் என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

தொடரூந்திற்குள் அவளுக்கு எதிரேயும் அருகிலும் ஏராளம் வெள்ளையினத்தவர்களும் சில கறுப்பினத்தவர் களும், இன்னும் சில வேற்று நாட்டவர்களும் இருந்தார்கள். அநேகமானோர் தத்தமது கைத்தொலைபேசியில் எதை யெதையோ நோண்டிக்கொண்டிருந்தார்கள். ஒருசிலர் புத்தகங்கள் வாசித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவளுக்கு எதையும் செய்யும் மனநிலை அப்போது இருக்க வில்லை. சுற்றிச்சுற்றி நினைவுகளில் அழிந்து போகாமல் உறைந்து போயிருக்கும் போராட்ட வாழ்வின் பல சம்பவங் கள் தான் அவள் மனதிற்குள் ஓடிக்கொண்டேயிருந்தன.

ஈழத்தில் ஒருகாலத்தில் பண்டாரவன்னியனின் ஆட்சி சிறப்பாக நடைபெற்றதாக வரலாற்றிலும், பின்னர் நடந்த பல அரசியல் கூட்டங்களிலும் அவள் அறிந்திருக் கிறாள். அது அவள் அறிந்தது தான் நேரில் பார்த்ததில்லை. ஆனால் நேரில் ஒரு ஒப்பற்ற வன்னியாட்சியை அவள் பார்த்திருக்கிறாள். அதற்குள்ளே வாழ்ந்திருக்கிறாள். அதன் மகிமையை உணர்ந்திருக்கிறாள்.

அந்த ஆட்சியை நடாத்திய மாவீரத்தலைவனின் கீழ் ஒரு போர்த்திறன் மிக்க சிறந்த பெண்போராளியாக அவள் இருந்திருக்கிறாள். அந்தத் தலைவனால் அவள் பாராட்டப்பட்டிருக்கிறாள். இன்னுமொரு போராளிக்கு அவள் வழிகாட்டியாகவும், பயிற்றுவிப்பாளராகவும் இருந்திருக்கிறாள்.

போராட்ட வாழ்வு எந்தளவிற்குக் கடினமானதோ, அர்ப்பணிப்பு மிக்கதோ, சாகசங்கள் நிறைந்ததோ, கொள் கைக்காக தம் உயிரையே துறக்கத் துணியும் தியாகம் நிறைந்ததோ, அந்தளவிற்கு அன்பு, பாசம், காதல், வீரம், நட்பு என எல்லா உணர்வுகளையும் தன்னகத்தே கொண்டது தான்!

அப்படியொரு அன்பிலும், நட்பிலும் முகிழ்ந்த காதலால் அவள் வாழ்வு திசைமாறிப்போனதை எண்ணி யெண்ணி அவள் மனம் குமுறாத நாட்களில்லை. அவள் கலையழகனை முதன் முதலாக வன்னிப் பயிற்சிப்பாசறையில் தான் சந்தித்தாள். அந்த நாளை அவளால் என்றைக்கும் மறந்து விட முடியாது.

ஓயாத அலைகள்-3 ற்கான போர்ப்பயிற்சிக் காலம் அது. பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஒரே நேரத்தில் பயிற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அரசியல் வகுப்புகளும், தாக்குதலுக்கான களநிலைப் பயிற்சிகளும் மாறிமாறி நடைபெற்றுக்கொண்டிருந்தன.

தினமும் பயிற்சி வகுப்புகள் முடிவுற்ற பின்னர் வரும் மதிய உணவிற்கான இடைவேளையில் சிறப்பாக பயிற்சி செய்தவர்களை அந்தந்தக் குழுவின் பொறுப்பாளர்கள் எல்லோர் முன்னிலையிலும் பாராட்டுவார்கள். அத்தகைய ஒரு தருணத்தில் தான் பெண்போராளிகளில் தங்கமலரும், ஆண்போராளிகளில் கலையழகனும் ஒரே நேரத்தில் எல்லோர் முன்னிலையிலும் பாராட்டப்பட்டார்கள். அந்த தருணம் அவளை மிகவும் உற்சாகப்படுத்தும், உத்வேகத்தை உண்டாக்கும் ஒரு முக்கியமான தருணமாக இருந்தது. அப்போது தான் கலையழகனும் அவளும் முதன்முதலாக ஒருவரையொருவர் நேருக்கு நேர் பார்த்துப் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டார்கள், புன்னகைகளை பகிர்ந்து கொண் டார்கள்.

அவர்கள் ஒருவர்க்கொருவர் பரிமாறிக்கொண்ட அந்தப் புன்னகைகள் தான் அவர்களுக்குள் இனம்புரியாத வேறு ஏதோவொன்றையும் விதைத்துவிட்டதை போகப் போகத்தான் புரிந்து கொண்டார்கள். அந்த ஈர்ப்பும், அதனால் அவள் மனதினுள் ஏற்படும் அதீத சந்தோசமும், அது ஏற்படுத்தும் அளவற்ற உற்சாகமும் அவளின் தைரியத்தை, வாழ்வின் மீதான பற்றுதலை மேலும் மேலும் உச்சத்திற்குக் கொண்டு சென்றது.

கலையழகனின் போர்த்திறமையும், திடகாத்திரமான அழகான தோற்றமும் பார்ப்பவர்களை உடனே கவரும் தன்மை கொண்டிருக்கும் போது அவள் மட்டும் அதற்கு விதிவிலக்காக இருந்துவிடுவாளா என்ன? அதன் பின்னர் வந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்கள் பார்வைகளி னாலேயே தமது அன்பையும் நட்பையும் பரிமாறிக்கொண் டார்கள். அது தரும் சந்தோசம் அளவற்றது என உணரத் தொடங்கினார்கள்.

அப்போது தான் ஒருநாள் போராளிக்களுக்கான கலை நிகழ்ச்சியொன்று வன்னிமண்ணில் நடைபெற்றது. அதில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் போராளிக் கலைஞர்களுக்கு தலைவரின் கையினால் விருது வழங்கப்படு மென்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சியில் கலையழகனால் எழுதி வாசிக்கப்பட்ட கவிதையொன்றிற்கு முதற்பரிசில் கிடைத்தது. தங்கமலர் வரைந்த ஓவியமொன் றிற்கு முதற்பரிசில் கிடைத்தது. இருவருமே அன்று தலைவ ரின் கையினால் பரிசில்களைப் பெற்றுக்கொண்டார்கள். அந்த நாள் அவர்களின் பொன்னாள் என்பது போல் இருவருமே மனதிற்குள் குதூகலித்துக் கொண்டிருந்தார்கள். அன்றிரவு அவளால் தூங்கமுடியவில்லை. தலைவனின் கையினால் பரிசில் பெற்ற மகிழ்ச்சி அவளைத் தூங்கவிட வில்லை. அவள் பயிற்சிப் பாசறைக்க வெளியே வந்து நிலவைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். அப்பொழுது தான் கலையழகன் அவளைத்தேடி முதன்முதலாக அவளது பயிற்சிப் பாசறைக்கு வந்திருந்தான். பாசறைக்கு வெளியே மகிழமரத்தின் கீழ் நிலவொளியில் அமர்ந்திருக்கும் அவளைக் கண்டபோது கலையழகனின் மகிழ்ச்சிக்கு அளவேயிருக்கவில்லை.

"உங்கட கவிதை அருமையாக இருந்தது. அதுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்ப தலைவரின் கையாலை விருதும் கிடைச்சிட்டுது. வாழ்த்துக்கள்.." என்றாள் அவள். அவன் மகிழ்ச்சி பொங்க அவளைத் திரும்பிப் பார்த்தான்.

"நான்இதிலை உட்காரலாமா?" அவன் கேட்டான்.

"ஓம் இருங்கோ.." அவள் சொன்னாள்.

"நீங்கள் இல்லாவிட்டால் என்னால் அந்தக் கவிதையை எழுதியிருக்கேலாது. இப்பிடியொரு பரிசிலைப் பெற்றிருக்கவும்ஏலாது..." அவன்புன்னகையோடு சொன்னான்.

"நானா? நான் என்ன செய்தனான்? நீங்கள் கவிதை எழுதிறதுக்கு நானொரு உதவியும் உங்களுக்குச் செய்யேல் லையே?" அவள் புரியாமல் கேட்டாள்.

"உங்களுக்குத் தெரியாமலே நீங்கள் உதவி செய்திருக் கிறீங்கள். நீங்கள்இத்தனை சிறிய ஒரு பெண்ணாக இருந்த போதும் அன்றைக்கு பயிற்சி முகாமிலைஇருநூறுக்கும் மேற்பட்ட பெண்போராளிகள் மத்தியிலை எவ்வளவு துணிச் சலாய், எவ்வளவு வேகமாய் ஒவ்வொரு பயிற்சிகளையும் செய்தீங்கள்? நானே அதைப் பார்த்து ஆச்சரியப்பட்ட னான். இந்தச் சின்ன உடம்புக்குள்ளை இத்தனை சக்தி எங்கையிருந்து வருதெண்டு எனகே வியப்பாய் இருந்திது. அந்த சக்திமிக்க பெண்போராளியைப் பற்றிய கவிதை தானே அது. அந்தக் கவிதைக்குள்ளை இருக்கிற பெண் நீங்கள் தான்...." அவன் சொன்ன போது அவளுக்கு வியப்பிலும் சந்தோசத்திலும் நெஞ்சு அதிருவது போலிருந்தது! அவளால் எதுவும் பதிலுக்குப் பேச முடியவில்லை. ஆனால் அவனின் கைகளை உடனே பற்றவேண்டும் போல் மனம் துடித்தது.

அன்றைக்கு அவள் நெஞ்சுக்குள் முளைத்த அந்த இனம்புரியாத காதல் உணர்வை அப்பட்டமாக உணர்ந்து கொண்டு தனக்குள்ளேயே திண்டாடினாள். அவனுக்கும் அதே உணர்வு தான் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அவன் பார்வை மூலமும், மயங்கும் பேச்சு மூலமும் தெளிவாகப் புரிந்துகொண்டாள்.

அவர்களுக்குள் அப்படியானதொரு காதல் உணர்வு உருவாகுவது சரியா, பிழையா என்றெல்லாம் யோசிப்பதற்கு அவர்களுக்கு அப்போது நேரமிருக்கவில்லை. அவ்வப்போது எல்லாவற்றையும் கடந்து வந்து அவர்கள் ஒருவர்க்கொருவர் சந்திக்கத் தொடங்கும் போதும், சந்திக்காமல் அவர்களால் இருக்கவே முடியாது என்னும் நிலை உருவாகும் போதும் தான் 'இது சரியா?' என்று தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்கள்.

அதற்குள் காதல் தன் வழியில் அவர்களை வேகமாக இழுத்துச் செல்லத் தொடங்கிவிட்டது. அதன் வேகத்தை அவர்களாலேயே கட்டுப்படுத்த முடியவில்லை. ஈற்றில் அது எல்லைகடந்து, மனதும் மனதும் சங்கமமாகி, அதுவே உடலும்உடலும்சங்கமமாகும்நிலைக்கு அவர்களைஇழுத்துச் சென்றுவிட்டது.

எல்லாத்தவறுகளும் செய்து முடிந்த பின்னர் தானே அது தவறு என்று யோசிக்க வைக்கிறது. அதன் பின்னர் யோசித்து என்ன பயன் என்பது போல் அவர்கள் தடுமாறி னார்கள், தாம் செய்த பிழைக்காக தமக்குள்ளேயே நினைந்து நினைந்து வருந்தியழுதார்கள். ஆனாலும் தலைவரிடம் தம் காதலை சொல்லி, தமக்குத்திருமணம் செய்துவைப்பதற்கு கேட்கலாமென முடிவும் செய்யும் போது தான் கலையழகனை விதைத்த விதை தங்கமலரின் கர்ப்பத்தில் வளர்கிறது என்பதை அறிந்து கொண்டார்கள். அந்தக்கணம் அவர்களிரு வரும் துடித்த துடிப்பை யாரிடம் போய் சொல்வது என்பது போல் பதறினார்கள்.

அவ்வளவுதான்! இயக்கத்தின்சட்ட திட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் மிக மோசமாக மீறிய குற்றத்திற்காக இருவரும் 'போராளிகள்' என்ற உன்னத நிலையிலிருந்தும், இயக்கத்தின் சகல செயற்பாடுகளிலிருந்தும் அதன் நீதிபரி பாலன பிரிவின் கட்டளைப்படி தள்ளிவைக்கப் படுவதாக அறிவிக்கப்படுகிறது.

அந்தத் தீர்ப்பு தந்த வேதனையும், அவமானமும், குற்றவுணர்வும் அவர்களை வாட்டி வதைத்தது, சுக்கு நூறாக உடைத்துப்போட்டது! அவர்களால் இனி என்றைக்குமே மீள எழுந்துவிட முடியாது என்பது போல் துவண்டு போனார்கள்.

அந்தத் தருணத்தில் தான் சிங்களஇராணுவத்தினரின் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் வன்னிப்பகுதியில் மிகமோசமாக நடாத்தப்பட்டது. கலையழகன் எதிர்பாராமல் அந்தக்குண்டு வீச்சுத்தாக்குதலில் மரணமடைந்துவிட்டான். தங்கமலர் கனவிலும் எதிர்பார்த்திராத அவனது மரணம் அவளை துயரத்தின் எல்லைக்கே இழுத்துச் சென்றுவிட்டது.

அவன் பத்துவருடங்கள் ஒரு சிறந்த போராளியாக செயற்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் அது நடந்திருந்தால் அவன் இப்போதும் ஒரு மாவீரன். அவனுக்கு இப்போதும் ஒரு தூபி அமைத்து, தீபம் ஏற்றியிருப்பார்கள். ஆனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைக் காலத்தில் நிகழ்ந்த மரணம் அது என்பதால் அவன் மாவீரனாக அங்கீகரிக் கப்படாமல், பெயரழிந்து போனதொரு சாதாரண மனிதனாகி விட்டான்!

அதற்குக் காரணம் தானும் தான் என்ற குற்றவுணர்வு இந்த வாழ்வு முழுவதும் அவளை வாட்டி வதைத்து, தினம் தினம் கொன்று புதைத்துக்கொண்டேயிருப்பதை எவரும் அறியமாட்டார்கள்.

அவள், தான் செய்த அந்தக் குற்றத்திற்காக, ஒருகணம் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுப்போன அந்த இயலாமைக் காக, எல்லாத் துயரங்களையும், எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்துக்கொண்டு தன் காதலன் விதைத்த விதையை உயிரூட்டி, சீராட்டிப்பாராட்டி வளர்த்துக்கொண்டிருக்கிறாள்.

இப்போது விதை வளர்ந்து சிறு கன்றாக தளிர் விடுகிறது. அதன் கேள்விகளுக்கு பதில்சொல்லும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இனி அவள் எல்லாவற்றிற்கும் தன்னைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

'மனோதைரியமும் நம்பிக்கையும் ஒழுக்கமும் இருந்தால் தான் போராட்டத்தில் இலக்கை நோக்கி வேகமாகப் பயணிக்கலாம். சாதாரண வாழ்விலும் அவை இருந்தால் தான் வாழ்வில் வெற்றிபெறலாம்'

தொடரூந்திலிருந்து இறங்கும் போது அவள் மனம் சற்றே தெளிவுபெற்றது போலிருந்தது. அவள் வன்னியாவின் கையினைப் பற்றிப்பிடித்தபடி நடக்கத் தொடங்கினாள். தெரு நீளமாகஇருந்தது.

குளிர்காற்று மனதிற்கு ஏனோ இதமாக இருந்தது!

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறல்முறையோர்

ஆதிலட்சுமி
சிவகுமார்



அவள் தொடர்வண்டியிலிருந்து இறங்கிய போது, அவளுக்கான பேருந்து புறப்பட்டுவிட்டிருந்தது. இருபக்கமும் புற்கள் படர்ந்திருக்க நடுவே கருங்கற்கள் பதித்த நடைபாதையில் அவள் நடந்துவந்தாள். அவளுடைய இரண்டுகைகளிலும் பொருட்கள் நிறைந்த பைகள் சுமையாக இருந்தன. போதாததற்கு தோளிலும் ஒரு கைப்பை இடுப்பு வரை தொங்கிக்கொண்டிருந்தது. அதற்குள்ளும் சில பொருட்களை மேலதிகமாக அவள் திணித்திருந்தாள்.

இந்தக் கைப்பைகளைக் காவித்திரிய அவளுக்கும் விருப்பம் இல்லைத்தான். ஆனால் அதற்குள்தானே வாழ்வின் ஆதாரங்கள் எல்லாம் நிறைந்திருக்கின்றன. உடனடித் தேவைகளுக்கான மூக்குத்துடைக்கும் கடதாசி, தலையிடிக்கான தைலம், கொழுப்பைக்கரைக்கும் மாத்திரை, சிறிய காசுப்பை, அதற்குள் மாதாந்தப் பயணச்சிட்டை, வங்கி அட்டை, வாழ்விடத்தின் அடையாளஅட்டை, கோவில் திருநீற்றுபக்கற், உதடுகள் உலரும்போது பூசுவதற்கான தைலம் இப்படி இன்னும் பல இருந்தன.

திருமணம் செய்துகொள்வதற்காக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டுக்கு வந்தநாள் முதல் இப்படிக் கைப்பையைத்தான் காவிக்கொண்டு திரிவதாக எண்ணிக்கொண்டாள் குமுதினி. தொடர்வண்டியிலிருந்து இறங்கிவந்த எல்லோருமே எதையோ சுமந்துகொண்டுதான் வந்துகொண்டிருந்தார்கள்.

வெயிலுமில்லாத மழையுமில்லாத போர்வையால் தன்னை மூடிக்கொண்டிருக்கும் வானம். அடுத்த பேருந்துக்காகக் காத்திருக்கும் இரு இளைஞர்கள் சற்றுத்தள்ளிநின்று புகைத்துக்கொண்டிருந்தார்கள். அவளுடைய மூத்தவனின் வயதுதான் இருக்கும் அவர்களுக்கும். பெருமூச்சுப் பறிய அவள் முன்னால் தெரிந்த மரத்தைப் பார்த்தாள். குட்டிக் குட்டி வெள்ளைநிறப் பூக்களால் நிறைந்திருக்கும் அந்தப் பழையமரம் சடைத்திருந்தது. இன்னும் கொஞ்சநாட்களில் மஞ்சள்நிறத்தில் குண்டுகுண்டாகக்காய்த்து, குலைகுலை யாகப் பழுத்துத் தொங்கும். அதில் குமுதினிக்கு வியப்பு என்னவென்றால் பாதையால் போகும் எவரும் பழங்களைப் பறிக்கமாட்டார்கள்.

அந்த மரத்தின்கீழ் பலகைகளால் ஆக்கப்பட்ட வாங்கு பயணிகளுக்காக போடப்பட்டிருந்தது. அந்தவாங்கில் குமுதினி அமர்ந்துகொண்டாள். அவளுடைய கணவனிடமும் அவள் இங்கேவந்து பெற்றுக்கொண்ட மூன்று பிள்ளைகளும் சிற்றுந்து வைத்திருக்கிறார்கள். அவள் தான்மட்டும் இன்னமும் தொடர்வண்டியிலும் பேருந்திலும் தான் பயணிப்பதை நினைத்துக்கொண்டாள். அவளை வாகனம்ஓட்டக்கற்றுக்கொள்ளுமாறு அவளுடைய கணவன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரமலை எத்தனையோ தடைவை சொல்லியிருக்கிறார் தான். ஆனால் அவள் அடியோடு மறுத்துவிட்டதற்கு அவளிடம் சில உள்நோக்கங்கள் இருந்தன. அவளறியப் பெரும்பாலான தமிழர்களின் கொண்டாட்டங்களில் குளிர்பானங்களோடு, மதுவகைகளும் பரிமாறப்படும். கொண்டாட்டங்களுக்குப் போனால் வாகனம் ஓட்ட வேண்டும் என்பதற்காக கதிரமலை அவற்றை ஒருபோதும் எடுப்பதில்லை. வாகனம் ஓட்ட ஆளிருப்பின் கதிரமலை நிச்சயமாகப் பெருங்குடிக்கு அடிமையாகியிருப்பான் என்று அவள் நினைத்துக்கொள்வாள். பெரும்பாலும் ஆண்கள் மதுவைப் பழகிக்கொள்ள இப்படியான கொண்டாட்டங்கள் சில ஏதுவாகிவிடுகின்றன என்பது தான் தனது கணிப்பாக இருப்பதை அவள் நினைத்துக் கொள்வாள். வெளிநாடுகளில் இந்தப் பானங்களால் நடுத்தரவயதில் இறந்துபோனவர்களையும் நோயாளிகளாகி மருத்துவமனைகளுக்கு அலைபவர்களையும் காணும் போதெல்லாம் தன்னுடைய முடிவு சரியானதே எனத் தனக்குள் எண்ணிக்கொள்வாள்.

எண்ணங்களைக் கலைத்துக்கொண்டளாக, இப்படிப் பேருந்துக்காக காத்திருக்கப்போகும் பத்துப் பன்னிரண்டு நிமிடத்தில் அம்மாவுடன் ஒருமுறை கதைத்து விடலாம் என நினைத்துக்கொண்டாள்.

தொடர்வண்டிக்குள் இருந்தபோதும் இரண்டு மூன்று தடைவைகள் அம்மாவுக்கு அழைப்பெடுத்துப் பார்த்தாள். அம்மா கைப்பேசி அழைப்பை எடுக்கவில்லை. ஒருபுறம் கோபமாகவும் மறுபுறம் ஏதும் விபரீதம் நடந்திருக் குமோ என்று தன்மனது அச்சமுறுவதையும் அவள் உணர்ந்துகொண்டாள்.

தம்பியின் பிள்ளைகளும் வளர்ந்துவிட்டார்கள். அவரவர் தங்கள்தங்கள் வேலை, படிப்பு என்றிருப்பார்கள். இம்முறை ஊருக்குப்பேனபோதே அம்மாவுக்கு ஒரு தனியான கைபேசியை வாங்கிக் கொடுத்துவிட்டு வந்திருந்தாள். ஆனாலும், அழைப்பெடுக்கும்போது அம்மா எடுத்தால்தானே. அழைப்பு வந்தால் எப்படி எடுத்துக்கதைப்பது என்றெல்லாம் பழக்கிவிட்டுத்தானே வந்தேன் என மனது தவித்தது.

இப்போதும் நான்கைந்து தடைவைகள் தொடர்ந்து அழைத்தும் பதிலே கிடைக்கவில்லை. இப்போது அச்சமொன்று அவளுக்குள் புகுந்து, உள்ளே நடுக்கமொன்றை உருவாக்கிவிட்டிருந்தது.

விடுமுறை முடிந்து குமுதினி புறப்பட்டபோது, "எனக்கும் இப்ப முந்தினமாதிரி இல்லைப்பிள்ளை... இரவிலை சிலவேளை நெஞ்சைக் குடையிறமாதிரி இருக்கிறது... இஞ்சையும் திடீர்திடீரெண்டு சனங்கள் விழுந்து சாகுது... பத்தாததுக்கு றோட்டுவழிய அடிபட்டும் சாகுதுகளாம்... ம்... உன்னை இனி எப்ப பாக்கப் போறேனோ..." என்று அம்மா சொன்னது நினைவில் வந்துவந்து முள்ளாய் நெருடியது.

" ஏனணை... அடுத்தவரிசத் திருவிழாவுக்கு திரும்பியும் வருவன்தானே..." என்றுவிட்டு வந்தவளுக்கு, இப்போது மனது தவித்தது.

"தம்பி வேலைக்குப் போயிருப்பான்..."

நினைத்தவளாக தம்பியின் மனைவிக்கு அழைப் பெடுத்தாள். அவளும் எடுக்கவில்லை.

குமுதினிக்கோ வீட்டுக்குப்போனால் கைப்பேசியைக் கையில் எடுக்கமுடியாத வேலைகள் காத்திருக்கும். எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு கதைக்கப்போனால் ஊரில் சாமப்பொழுதாகிவிடும். அம்மா நேரத்தோடு உறங்கிவிடுவாள்.

வாரஇறுதிநாட்களில் கதைக்கலாம் என்றால், பிள்ளைகள் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு,

" ஏன் ஊர்க்கதை கதைக்கிறியள்?..... அடுத்தவை யின்ரை குடும்பக்கதையை ஏன் கதைக்கிறியள்... எங்கட வீட்டுக்கதையளை ஏன் அவைக்குச் சொல்லுறியள்? அவையும் உழைக்கினம்தானே... அவைக்கேன் நீங்கள் கஸ்டப்பட்டு உழைக்கிற காசை அனுப்புறியள்?" என்று திட்டித்தீர்த்துவிடுவார்கள்.

குமுதினி இந்தமுறை ஊருக்குப்போனபோது, அம்மாவின் அறைக்குள் அம்மாவுடன் தான் உறங்கினாள். இரவுகளில் அம்மா சொன்ன சிலகதைகள் மனதை என்னவோ செய்தன. அவற்றை மறந்துவிடலாம் எனநினைத்தாலும் தன்னால் மறக்கமுடியவில்லையே என்று மனம் வருந்தினாள். ஊருக்குப்போனால் மனஅமைதியோடு கொஞ்சநாட்கள் இருந்துவிட்டு வரலாம் என நினைத்தவளுக்கு, மனது பாரமாகித் தொங்கியதுதான் மிச்சமானது.

"நான் வருசத்துக்கொருக்கா வந்திட்டுப்போறனான்.. அவையளோடைதான் நீ இருக்கவேணும்... கொஞ்சம் சமாளிச்சுப் போ... அவையளின்ரை தனிப்பட்ட குடும்பச் சிக்கல்களுக்கை நீ மூக்கை நுழைக்காதை பிரச்சினைகளைப் பெருப்பிக்கக் கூடாது அம்மா... உனக்கு வயது போயிட்டுது... நீ சமாளிச்சுத்தான் போகவேணும்..." என்று அம்மாவுக்குத்தான் அவளால் அறிவுரைக்க முடிந்தது. தம்பியின் மனைவியும் அம்மாவைப்பற்றிச் சில குற்றச் சாட்டுகளைப் பட்டும்படாமலும் சொன்னாள்.

"எங்களுக்கே இந்தக்குளிருக்கு எலும்புகள் உக்கிக் கொண்டு போகுது... அந்த வயதான மனுசியை இஞ்ச எடுத்துத்தான் என்னசெய்யிறது..." என்று மனவருத்த முற்றாள் குமுதினி. தொங்கும் தலையோடு, எல்லாவற்றையும் நினைத்துக்கொண்டே வீட்டுக்கு வந்துசேர்ந்தாள் குமுதினி. கைகால்கள் வலியெடுத்தன. இரண்டுமூன்று நாட்களாகப் பெய்தமழை இன்றுதான் வெளித்திருந்தது. ஆனாலும் இருளும் குளிரும் அப்படியேதான் இருந்தன.

அவள் வேகமாகத் தனதுவீட்டுவேலைகளில் இணங்கிப்போயிருந்தாள். " இந்தமனுசனுக்கு இரவிலை சுடச்சுடச்சோறுதான் வேணும்... இரவிலை சோறுசாப்பிட வேண்டாம் எண்டு உந்த யூரியூப்பிலை எல்லாம் சொல்லு றாங்கள் எண்டால் கேட்டால் தானே... ஏன் ஊரிலை இரவிலை சோறுகுழைச்சுத் திண்டனாங்கள்தானே... எண்டு சொல்லுது... எனக்கென்ன... இஞ்சவந்து மனுசன்ரை... உந்தக் குடியை நிப்பாட்டின எனக்கு இரவுச்சோறை நிப் பாட்ட ஏலாமக்கிடக்கு..." மனது பலவற்றையும் அசை போட்டுப் பார்த்தது.

குமுதினி ஊரில் போய்நின்றபோது தான் தம்பி மகளின் மஞ்சள்நீராட்டுவிழா நடந்தது. தன் கழுத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்த ஐந்துபவுண் சங்கிலியைக் கழற்றி நகைக்கடையில் கொடுத்துப் புது நெக்லஸ் வாங்கி, மண்டபத்தில் வைத்துப் போட்டுவிட்டாள்.

அம்மாவின் எழுபத்தைந்தாவது பிறந்தநாளை மண்டபமெடுத்து உறவுகளை அழைத்துச் செய்யலாம் எனத் தம்பி குடும்பம் ஆசைப்பட்டபோது, வாழ்விடத்தில் சீட்டுக் கட்டி அவசரமாக எடுத்த காசில், விழாவுக்கான செலவுமுழுவதையும் தானே ஏற்றுக்கொண்டாள்.

"போனனான் மனுசன்ரை சகோதரங்களை வெறுங்கையோட பாக்கலாமோ எண்டு... அவைக்கும் எல்லாம் செய்துபோட்டுத்தான் வந்தனான்... சின்னவளுக்குத் தெரியாம சாந்தினியிட்டையும் ஆயிரம் கடனாவாங்கிக் கொண்டு போனபடியால... தோ கௌரவமா நிண்டிட்டு வந்தாச்சு.... இனி இவள் சாந்தினிக்கு வேலைக்காசில மிச்சம்பிடிச்சுக் கடன்கட்டவேணும்... என்ர மனுசன் நல்லதெண்டபடியால கணக்கு வழக்கொண்டும் கேட்கிறேல்லை... இஞ்ச சில பொம்பிளையள் படுற துன்பம்..." மனது நிம்மதிப் பெருமூச்சு விட்டது. மூத்தவன் வேலையால் வந்து சிறிது நேரத்தில் மூத்தவள் கவியும் வந்துவிட்டாள். சின்னவள் வரும்போதே...

"என்னம்மா பொரிச்சனீங்கள்?.... றோட்டில வரவே மணக்குது... எவ்வளவு சொன்னாலும் பொரியலை விட மாட்டியள்... நான் வேற வீடெடுத்து இருக்கப் போறன்..." கத்திக்கொண்டே வந்தாள்.

"ஏன்மோன.. நான் ஆசைப்பட்டே பொரிக்கிறன்... அப்பாக்குத் தானே... பாவம் மனுசன்... விடிய ஒரு தேத்தண்ணியோட போனால்... இரவுபத்துமணிக்கு மேல வந்து ஒருநேரம் தானே...சாப்பிடுது... அவர் பாவமெல்லே சகி...." கடைசிப்பிள்ளை சகிலா மற்ற இருவரையும் விட வித்தியாசமானவளாக இருப்பது குமுதினிக்கு கவலையைத் தூண்டியது. ஆனாலும் அவள் பேசும் அழகு துயரம் எல்லாவற்றையும் அவளுக்கு மறக்கடித்தும் விடுவதை அவள் உணர்ந்துகொண்டாள்.

"அம்மா... எந்தநாளும் நீங்கள் இந்தப் பொரியல் பொரிக்கிறதும்..... மற்றவையை நித்திரைகொள்ளவிடாமல் இரவிரவா ரெலிபோன் கதைக்கிறதும் எனக்குப் பிடிக்குதேயில்லை... களைப்போடை வீட்டுக்கு வந்தால் உங்கட தொல்லை பொறுக்கேலாம இருக்கு...."

"குழந்தையிலை உங்களுக்காக எத்தினை இரவுகள் நித்திரையில்லாம அப்பாவும் நானும் கஸ்டப்பட்டிருப்பம் தெரியுமே சகி... இப்ப வளந்து வாய்காட்டுறியள்... ம்..."

"அதுக்கு இப்ப பழிக்குப்பழி செய்யிறீங்களோ...."

"போபோ... உங்கள் ஒருதரோடையும் இப்ப கதைக்கேலாது.... மேல்காலைக் கழுவிப்போட்டு வந்து... உனக்கு நூடில்ஸ் போட்டுவைச்சிருக்கிறன்.... சாப்பிடு....." அவள் எதையும் காதில் வாங்கிக்கொள்ளாமல் படியேறி மேலே போனாள். தொலைக்காட்சிப்பெட்டியை இயக்கி அதன் ஒலியை நிறுத்தி, ஊமைப்படம் பார்ப்பதுபோலப் பார்த்துக் கொண்டிருந்தாள் குமுதினி. தண்ணீர் எடுப்பதற்காக கீழே வந்த மூத்தவன் அவளைப்பார்த்துச் சிரித்துவிட்டுப்போனான்.

'தீபன்... நூடுல்ஸ் போட்டு வைச்சிருக்கிறன்... வந்து சாப்பிடு.. என்ன?...' அவனும் கையைக்காட்டிவிட்டுப் போனான்.

நேரம் ஒன்பது மணியாகிவிட்டிருந்தது. "இப்ப அங்கை சாமமாப் போயிருக்கும்... இனி அம்மாவோட நாளைக்குத்தான் கதைக்கலாம்..." கையில் வைத்திருந்த கைப்பேசியை சோபாவில் போட்டாள்.

கண்கள் உறக்கத்திற்காகக் கெஞ்சிக்கொண்டிருந்தன. அவளுடைய தொலைபேசி ஒலியெழுப்பியது. எடுத்துப் பார்த்தாள். அம்மாதான் அழைக்கிறாள். "ஏன் இப்ப... அடிக்கிறா?...." மனதுக்குள் பகீரென்றது.

"ஓமண அம்மா... நித்திரை கொள்ளேல்லையே.... இப்ப என்ன நேரமெண்டு தெரியுமே?......"

"தெரியும் மேன... அவையள் எல்லாரும் நித்திரை கொள்ளட்டும் எண்டு இருந்தனான் பிள்ளை.."

"ஏனணை.... ஏதும் பிரச்சினையே......"

"இல்லை மோன.... சும்மாதான்......."

"தம்பிக்கும் மனுசிக்கும் ரண்டு மூண்டுதரம் அடிச்சனான்.... அவை எடுக்கேல்லை... எங்கையோ போனவையோ..."

"இல்லை.... ராசன் உன்னிலை கோவமாயிருக்கிறான்...."

"ஏனாம்..."

"நீ திரும்பிப்போகேக்குள்ளை அம்பது தானாம் குடுத்தனி.... அவையளுக்கு போதேல்லைப்போலை... கொண்டு வந்து என்ரை கட்டிலிலை வைச்சிட்டுப் போட்டான்மோனை..."

"எணை அம்மா.... உன்மேலை சத்தியமாச் சொல்லுறன்....சீட்டெடுத்த காசு.. சாந்தினியிட்ட வாங்கின கடன்காசு... மனுசன் கைச்செலவுக்கெண்டு தந்த காசு.... எல்லாம் உங்கை செலவழிச்சுப்போட்டு.... என்ர பிள்ளையளுக்கு கூட பெரிசா ஒண்டும் வாங்காமத்தான் வந்தனான்... கடைசியா கையிலை கிடந்த மிச்சம் அம்பதைத்தான் ராசனிட்ட குடுத்திட்டு வந்தனான்.."

"எனக்கு எல்லாம் தெரியும் தானே... நீ வெளிநாட்டுக்குப் போனகாலத்திலை இருந்து... எல்லாரையும் ஆளாக்கினது நீதானே.... நானென்ன மோனை... அனுபவிச்சதெல்லாம் போதும்... இனி கொப்பரிட்டைப் போய்ச் சேர்ந்திட வேணும்...."

"எணையம்மா.... நீ... இப்பிடிச் சொல்லுறதுக்காகவே நான் இவ்வளவு கஸ்டப்படுறன்... ம்.... ராசனுக்கு காசுதான் பிரச்சினை... அதாலைதான் கதைக்கேல்லை எண்டால்... மூத்தது கவியின்ரை கலியாணச் செலவுக்கெண்டு... ஒரு சீட்டுப் பிறம்பாக் கட்டுறன்... அதை எடுத்து அடுத்த மாதம் அனுப்பிவிடுறன்.... நீ யோசிக்காதை... என்ர உயிர் இருக்கிறவரைக்கும் உங்கள் எல்லாரையும் நான் பார்ப்பன்.." சொல்லி முடிக்கும்போது துயரம் தொண்டையை அடைத்தது. படியில் வெளிச்சம் தெரிய கைப்பேசியை சடாரென்று அணைத்தாள். சின்னவள் சகிதான் படியிறங்கி வந்தாள்.

"அம்மா.... சுகர் குளிசை, முழங்கால் வலிக்குளிசை எல்லாம் போட்டுவிட்டியளோ... நினைவுபடுத்தத்தான் இப்ப இறங்கிவந்தனான் என்றபடி, நூடுல்ஸைத் தட்டில் எடுத்துவந்து அவளருகமர்ந்தாள் சின்னவள் சகி.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-13

சியாமளா
யோகேஸ்வரன்



# நதிகளின் பாதையில்..



எண்ணெய் தீய்ந்த வாசத்தில் வெளியே எட்டிப் பார்த்தார் அகல்யா. சட்டி புகையால் மூடியிருக்க, அடுப்பிலிருந்து நீண்ட தீயின் நாக்குகள் எட்டி எண்ணெயைத் தொட முயற்சி செய்து கொண்டிருந்தன. தன் மறதியை நொந்தபடி விழுந்தடித்து வெளியில் ஓடினார் அகல்யா. இறால் பொரிப்பதற்கென சட்டியில் விட்டிருந்த எண்ணெய் அப்படியே தீய்ந்து கருகிப் போயிருந்தது. அவ்வளவு எண்ணெ யையும் வீசி விட்டு, புதிதாக எண்ணெய் ஊற்றித் தான் இறாலைப் பொரிக்க வேண்டும்.

முன்னரைப் போல் ஓடியாடி வேலை செய்ய முடியாமல் தள்ளாமை வந்து விட்டதில் சிறிய வேலை கூட பெரிதாகத் தோன்றியது. என் வயதை ஒத்தவர்கள் எல்லோரும் எவ்வளவு சுறுசுறுப்பாக ஓடியாடி வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். எழுபது வயதை எட்டித் தொட இன்னமும் இரண்டு வருடங்கள் இருக்கும் போது இந்த இயலாமை என்னை மட்டும் ஏன் இப்படிப் படுத்துகின்றது? வாழு வதற்கு ஒரு அர்த்தமும் ஆசையும் இருந்து விட்டால், இயலாமையை இயன்றவரையில் தள்ளி வைத்து விடலாம் என்பதை அனுபவம் கற்பிக்கின்றது.

கைத்தொலைபேசியை எடுத்து நேரத்தைப் பார்த்தார். மணி பன்னிரண்டைத் தாண்டிக் கொண்டிருந்தது. மகன் பரதன் மதிய உணவுக்கு வந்து விடுவதாகச் சொல்லியிருந்ததில் தான் இத்தனை துடிப்பு. அவனுக்கு மட்டுமல்ல அவனது மகன் லவீனுக்கும் அதாவது அகல்யா வின்ஒரே செல்லப் பேரனுக்கும் இறால் பொரியல் என்றால் பிடிக்கும். அதனால் தான் நேற்று மீன்சந்தைக்குப் போய் நடுத்தர அளவிலான நல்ல இறாலாகப் பார்த்து வாங்கிக் கொண்டு வந்திருந்தார். அகல்யா மாமிசம் சாப்பிடுவதை விட்டு இருபது வருடங்களுக்கு மேலாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டிருந்தது. கணவனுக்கு வந்திருந்த புற்று நோயை மாற்ற முடியாது என்று தெரிந்திருந்தும் அவனைக் குண மாக்கித் தந்து விட்டால் மச்சம், மாமிசம் சாப்பிடுவதை நிறுத்தி விடுவதாக வேண்டுதல் வைத்திருந் தார். ஆனாலும் விதி அகல்யாவின் வேண்டுதலை நிராகரித்து விட்டிருந்தது. மாமிசங்களின் மணமும் பிடிக்காமல் போய் விட, கணவனின் இறப்பின் பின்னர் மரக்கறி உணவுப் பழக்கத்தையே அகல்யா கைக் கொண்டிருந்தார்.

அகல்யா சாப்பிடுவது இல்லையே தவிர பரதனுக்கு பிடிக்கும் என்பதால் அவனுக்காக மாமிசவகைகளைச் சமைப்பது வழமை. அவனும் தாயாருக்கு சிரமம் கொடுக்கக் கூடாது என்பதால் மரக்கறி உணவையே சாப்பிடுவான்.



இப்போது மணம் முடித்து வேறு வீட்டில் குடும்பமாக வாழ்ந்து வருகின்றான். ஆனாலும், அவன் வருகின்றான் என்பது தெரிந்தால் போதும், அவனுக்குப் பிடித்த இறால் பொரியலும் மீன் குழம்பும் தயாராகக் காத்திருக்கும்.

சாப்பிடாமல் விட்டு அதிக நாட்கள் ஆகி விட்டதால், மீன் மணம் என்றாலே அகல்யாவுக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வரும். அதிலும் மீன்சந்தைக்குப் போனால், மூக்கைப் பிடித்துக் கொண்டு தான் இறாலைப் பொறுக்கி எடுப்பார். வீட்டுக்குக் கொண்டு வந்து அதன் ஓட்டை விலக்கி உடைத்து எடுப்பதற்குள் வேண்டாம் என்று போய் விடும். இதையெல்லாம் ஒருகாலத்தில் தானும் எப்படி ரசித்து உண்டோம் என்றுதான் தோன்றும். பழகி விட்டால் மனதும் உடலும் எதனையும் இயல்பாக ஏற்றுக் கொண்டு விடுகின்றது போலும். மகனுக்காகவே உள்ளி, மல்லி, செத்தலை அளவாக வாட்டி எடுத்து தேங்காய்ப் பூவையும் சேர்த்து அரைத்துக் கூட்டாக்கி மீன் குழம்பு வைத்தார். மகன் ரசித்துச் சாப்பிட்டு விட்டு 'நன்றாக இருக்கின்றது அம்மா' என்று சொல்லும் ஒற்றை வார்த்தையில், அகல்யாவின் அத்தனை களைப்பும், அருவருப்பும் பறந்தே போய் விடப் போகின்றது.

இறாலை வீட்டுக்குள் பொரித்தால் அந்த மணம் போகவே இரண்டு மூன்று நாளாகி விடும் என்பதால் வெளியில் இருக்கும் அடுப்பில் வைத்து இறாலைப் பொரிப்பது வழமை. கொதித்துக் கொண்டிருக்கும் மீனுக்கு கறி வேப்பிலையைக் கிள்ளிப் போட்டு இறக்கி வைப்பதற்கு என வீட்டுக்குள் வந்தவர், குழம்புக்கு உப்புக் காணாது என்று தோன்றவே உப்பைக் கொஞ்சம் கிள்ளிப் போட்டு விட்டு ஒரு கொதி வரட்டும் என்று காத்துக் கொண்டி ருந்ததில் வெளியே எண்ணெயைக் கொதிக்க விட்டிருந்ததை மறந்தே போனார். எண்ணெயைக் கவிழ்த்து ஊற்றி விட்டு சட்டியைக் கழுவி எடுத்தார். உப்பு, மஞ்சள் தூள், மிளகாய்த் தூளில் பதமாக ஊறியிருந்த இறால் துண்டுகளைப் பொன் நிறமாகப் பொரிய விட்டு எடுத்து வைக்கையில் நிறைவாக இருந்தது. மகன் வந்து விடப்போகிறானே என்ற பதைப்பில் ஓடிச் சென்று காக்காக் குளியல் போட்டுக் கொண்டு வெளியில் வந்தார். காலையில் எழும்பியதில் இருந்து, வீட்டைச் சுத்தம் செய்து, மகனும், மருமகளும், பேரனும் தங்குவதற்கான அறைகளையும் சுத்தம் செய்து தயார் செய்ததில் எதையும் சாப்பிட்டிருக்க வில்லை. வெறும் வயிறு 'கடமுடா' என்று அழுதது. தலையும் லேசாக சுற்றுவது போன்றிருந்தது. ஏதாவது சாப்பிட வேண்டும் என்று கேட்ட மனதை அடக்கி விட்டு தேநீரைப் போட்டு எடுத்துக் கொண்டு வந்து சோபாவில் அமர்ந்து கொண்டார்.

மகன் குடும்பத்துடன் எடுத்துக் கொண்ட படம் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. பக்கத்திலேயே பரதன் தந்தையையும் தாயையும் அணைத்தவாறு எடுத்த படம் தொங்கிக் கொண்டிருந்தது. இந்தக் குடும்பத்தில் எல்லாமாக இருந்தவன் இப்போது இன்னொரு குடும்பத்துக்குப் பொறுப்பான தலைவனாகிவிட்டிருந்தது பெருமையைக் கொடுத்தாலும் சிறிய வேதனை ஒன்றும் எட்டிப் பார்க்கத் தவறவில்லை. அது காலத்தின் தேவை என்றாலும் மகனைப் பெரிதும் நேசித்தவளுக்கு எப்போதும் அவன் தன்னுடனே இருந்தால் நன்றாயிருக்குமே என்று ஏக்கமாயிருந்தது. பெரிய மாடி வீடு, இரண்டு குடும்பம் எந்தக் குறையுமின்றித் தங்கலாம். வேலை, வேலையை விட்டால் வீட்டு வேலைகள், லவீனுக்கான நீச்சல், விளையாட்டு, படிப்பு என்று பரதனின் நேரம் ஓடிக் கொண்டிருப்பதால் அவனுக்கு எப்பொழுதாவது தான் அகல்யாவைப் பார்ப்பதற்கு நேரம் கிடைக்கின்றது.

பேரனுக்குத் தமிழ் கற்பிக்க வேண்டும் என்பது அகல்யாவின் ஆவல். ஆங்கிலம் மட்டும் தெரிந்தால் போதும் என்ற மருமகளின் கருத்து. வெளி நாட்டில் தமிழ் மருமகள் அமைவது என்பதே கொம்புத்தேனாக இருக்கும் போது, குடும்ப நட்பு வட்டத்தில் பழகிய சுதாவைக் காதலிப்பதாக பரதன் சொன்னபோது அகல்யாவுக்கு முதலில் எல்லையற்ற ஆனந்தமாகத் தான் இருந்தது.

ஆனால் அந்த மகிழ்ச்சியின் ஆயுள் மிகவும் குறுகியதாகவே போய் விட்டிருந்தது. வாழும் சூழ்நிலைக் கேற்ப இருப்பாள் என்று பார்த்தால் அவள் இரண்டும் கெட்டானாகவே நடந்து கொண்டாள். வெள்ளைக்காரரைப் போல் பழகவேண்டும், சாப்பிட வேண்டும், பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்பது அவளது எண்ணமாக இருந்தது. மாமியாருடன் நெருங்கிப் பழகினால் பிரச்சனை என்பது போல் நடந்து கொண்டாள்.

பரதன் பக்கத்திலேயே தான் இருந்தாலும், அவர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடன் ஒட்டி உறவாட முடியவில்லை. பேரனை நினைத்த நேரங்களில் எல்லாம் கொஞ்சி மகிழ முடியவில்லை. மகனையும் பேரனையும் பார்க்கத் துடிக்கும் அகல்யாவின் வேதனையைச்சுதா புரிந்து கொண்டதாகவே தெரியவில்லை. கணவனும் மனைவியும் வேலைக்குப் போகும் போது லவீனை காப்பகத்தில் விடாமல் தன்னுடன் விட்டு விட்டு செல்லு மாறு கேட்டுக் களைத்தே போனாள். மருமகளை விட்டு விட்டாலும் பரதனுக்கும் தன் ஏக்கம் புரியவில்லை என்பது தான் வேதனையைக் கொடுத்தது. லவீனுக்கு அன்றொரு நாள் காய்ச்சல் என்ற போது அகல்யா பதறிப் போனாள்.

"என்ன நடந்தது? எத்தனை நாளா காய்ச்சல் தம்பி?"

"இப்ப இரண்டு நாளா காய்ச்சல் அம்மா?"

"கொண்டு போய் காட்டி மருந்தெடுத்தனீங்களோ?"

"டொக்டரை உடனே பார்க்க இயலாது தானே? அப்பொயின்மெண்ட் கிடைக்கேல்லை."

"லவீன் இப்ப எங்கடா?"

"அவனைக் கொண்டு போய் சைல்ட் கெயரில் விட்டிருக்கம் அம்மா."

"ஏனடா, வருத்தத்தோட கொண்டு போய் விட்டனீ? பக்கத்தில வச்சுக் கவனிக்க வேண்டாமே? குழந்தையடா அவன்!" அகல்யாவின் குரலில் வேதனை தொனித்தது.

மறுமுனையில் மௌனம் குடி கொள்ள, காரோட்டிக் கொண்டே மகன் பேசுகிறான் என்பதும் பக்கத்தில் மருமகள் இருக்கிறாள் என்பதும் அப்போதுதான் அகல்யாவுக்குப் புரிந்தது.

"இரண்டு நாள் வீட்டில் தான் நின்றான். சுதாவுக்கு அதுக்கு மேல் லீவு எடுக்க முடியவில்லை."

"நான் சும்மா தானே இருக்கிறேன். என்னிடம் விட்டிருந்தால் நான் பார்த்துக் கொள்வேனே?" ஆற்றாமையில் அகல்யா சொன்னார். மறுமுனையில் மறுபடியும் மௌனம். சுதாவின் குரல் பின்புலத்தில் மெதுவாகக் கேட்டது. மகன் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கின்றானோ என்று நினைத்த போதே,

"அம்மா, எதுவானாலும் நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம். அவனை என்னை மாதிரி வளர்க்க வேண்டாம் என்று சுதா சொல்லிக் கொண்டே இருக்கிறாள். அவள் நினைக்கிறது மாதிரி வளர்க்கட்டும். நாங்கள் தலையிட வேண்டாம். இதைப் பற்றி யோசித்து நீங்கள் உங்கட உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதேங்கோ. நான் பிறகு கதைக்கிறன்." பதிலுக்கு காத்திராமல் பரதன் வைத்து விட்டான்.

பரதனில் என்ன குறை கண்டு விட்டாள் இந்தப் பெண்? கூடப் பழகுபவர்கள் முதற்கொண்டு தெரிந்தவர்கள் எல்லோரும் பரதனைப் பற்றிப் புகழாமல் இல்லை. தாய்க்கு அனுசரனையாய், வீட்டு வேலைகளில் கரங்கொடுத்து நற்குணவானாய் வாழும் அவனைப் பற்றி எல்லோருமே பெருமையாய் தான் பேசுகிறார்கள். படிப்பிலும், வேலையிலும் புத்திசாலித்தனத்திலும் கூடச் சோடை போனவன் இல்லை. தங்கமான பிள்ளையாய் வளர்த்து விட்டவளைப் புகழ்ந்த போதெல்லாம், அகல்யா எத்தனை பெருமை அடைந்திருக்கின்றார். சுதா ஏன் அப்படிச் சொல்ல வேண்டும் என்று எண்ணித் தாயின் உள்ளம் நோகாமல் இல்லை.

லவீன் பிறந்ததில் இருந்தே அகல்யாவின் வருகையை சுதா பெரிதாக விரும்பவில்லை என்பது புரிந்து போக, அகல்யா மகனிடம் செல்வதைத் தவிர்த்துக் கொண்டாள். ஆனாலும் தாயின் மனம் புரிந்தவனாய் பரதன், லவீனையும் கூட்டிக் கொண்டு அவ்வப்போது வரத்தான் செய்தான். தீபாவளி, தைப்பொங்கல் போன்ற நாட்கள், அன்னையர் தினம், அகல்யாவின் பிறந்த தினம், லவீன் மற்றும் பரதனின் பிறந்த தினம் என்றால் தாயிடம் வந்து விடுவான், அன்னை அவனுக்காகவே சமைக்கும் உணவை ரசித்துச் சாப்பிட்டு விட்டு பிரிய மனமில்லாமல் தான் வீட்டுக்குக் கிளம்புவான். அகல்யா ஒருமுறை வந்து கிளம்பும் போதே, அடுத்ததாக எப்போது வருவான் என்று காத்திருக்கத் தொடங்கி விடுவார்

திருமணம் முடித்தாகி விட்டது. இனி மகனுக்கென்று ஒரு குடும்பம் வந்து விட்டது. தேவையில்லாமல் அதில் மூக்கை நுழைத்து அவர்களின் நிம்மதியைக் குலைக்க வேண்டாம் என்ற நினைவில் அகல்யா ஒதுங்கிக் கொண்டாலும் பெற்ற மனது கேட்க மாட்டேன் என்று அடிக்கடி மல்லுக் கட்டிக் கொண்டுதான் நின்றது. நான் பெற்ற செல்வத்தை என்னிடமிருந்து முற்றாகப் பிரித்தெடுக்கும் உரிமையை யார் கொடுத்தது என்றெண்ணி மருகுவாள். தன்னைப் புரிந்து கொண்ட மகன், மருமகளுக்கு எடுத்துச் சொல்லி, ஒரு இணைப்புப் பாலம் அமைக்க ஏன் தயங்குகின்றான் என்பது புரியவேயில்லை. பேரனைக் கையில் வைத்துக் கொஞ்சி விளையாடி அவனுடன் தன் வயோதிபக் காலத்தைப் போக்க முடியாத ஏக்கம் அகல்யாவிடம் நிறையவே தான் இருந்தது.

அதை அவ்வப்போது வெளிப்படையாகவே பரதனிடம் சொல்லி இருக்கிறார். சிறுவயது முதலே பரதன் எந்த விடயங்களையும் தாயிடம் ஒளித்து வைக்காமல் அப்படியே பகிர்ந்து கொண்டு வளர்ந்திருந்தான். ஆனால் இப்போதெல்லாம் ஒரு சிரிப்புடன் வாயை மூடிக் கொள்கின்றான். அவன் முகத்தில் ஏதாவது வேதனை தெரிகிறதா என்று அகல்யா உற்று நோக்கினாலும் ஒரு வெறுமை மட்டுமே தெரிவதை மட்டுமே கவனித்திருக்கின்றார். மணம் முடித்தவுடன் தன்னையும் அந்நியராக நினைத்துக் கொண்டான் போலும் என்று வேதனைப்பட்டுக் கொண்டார்.

தன் வயதொத்தவர்கள் எல்லாம் பேரக்குழந்தைகளுடன் வார இறுதிநாட்களை செலவழித்த அனுபவங்களைப் பற்றியோ அல்லது பாடசாலையில் பங்குபற்றிய நிகழ்வுகளைச் சொல்லும் போதோ உள்ளுக்குள் அழுவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

எதையும் வெளிப்படையாகப் பேசிப் பழகுபவர் அகல்யா என்பதால் ஒரு நாள் மருமகளிடம் வெளிப்படையாகவே பேசினார்.

"எனக்கு பரதனையும், உங்களையும் தவிர வேறு யாருமில்லை. நானும் ஒருவிதத்தில் உங்களுக்கு அம்மா தானே? ஏன் என்னிடம் ஒதுங்கியே நிற்கிறாயம்மா?" அன்புடன் கேட்ட அகல்யாவுக்கு அதிர்ச்சியைப் பதிலளித்தாள் சுதா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்லம்கொடுத்து பிள்ளையைக்குட்டிச்சுவராக்கி வைத்திருக்கிறீர்கள். லவீனை நான் அம்மாப்பிள்ளையாக வளர்க்க விரும்பவில்லை. அவனைத் தைரியமானவனாக வளர்க்க ஆசைப்படுகின்றேன். எனக்கு உங்களின் மேல் எந்தக் கோபமும் இல்லை. அவ்வளவு தான்." சுதாவின் பதிலில் விக்கித்துப் போய் விட்டார் அகல்யா.

யாருக்குத் தைரியமில்லை என்கிறாள் இந்தப் பெண். தன்னோடு பரதன் சண்டை பிடிக்கவில்லை என்று வருந்துகின்றாளா அல்லது வம்புக்குப் போகவில்லை என்பதால் தைரியமற்றவன் என்று நினைத்து விட்டாளா? தானாகவே சாப்பிடப் பழகட்டும் என்று லவீனுக்கான சாப்பாட்டைப் போட்டு, அதில் கரண்டியையும் போட்டுக் கொடுத்து விடுவாள் சுதா. இரண்டே வயதே ஆன லவீனோ ஒற்றை வாய் சாப்பிடுவதற்குள் திணறி விட்டு அதை அப்படியே விட்டு விடுவான். பாவம்குழந்தைக்குப்பசிக்குமே, அள்ளி ஊட்டி விட வேண்டுமே என்று அகல்யாவுக்குத் துடிக்கும். ஆனாலும் அந்நியமான உணர்வு உள்ளுக்குள் தடுக்கும்.

இரவு உணவு முடிந்ததும் குளிக்க வைத்து விட்டு தூங்குவதற்காக அவனது அறையில் விட்டு விடுவார்கள். தனிமையில் தூங்காமலேயே லவீன் அழுது கொண்டிருந்து விக்கலெடுத்துக் கடைசியில் உறங்கி விடுவான். அகல்யாவுக்கு பரதனை வளர்த்தவிதம் ஞாபகத்துக்கு வராமல் போகாது.

சிறுவயதில்பரதனையும்சாப்பிடவைப்பது சிரமமான விடயம் தான். மறுப்பவனை எதையாவது காட்டி கதை சொன்னபடி ஊட்டி விடுவார் அகல்யா. அப்படியும் சாப்பிட மறுத்தால் அவனுக்கு பிடித்ததாய் செய்து ஊட்டி விட்ட பின்னர் தான் அகல்யாவுக்கு உணவு இறங்கும். தூங்குவதும் அப்படித்தான். தாயின் மடியில் படுத்துக் கொண்டு நன்னெறிக் கதைகளையோ, புராணக் கதைகளையோ தான் கேட்டுக் கொண்டு தூங்குவான். சொல்ல வேண்டிய புத்திமதிகளையும் அகல்யா கதையினூடோ, நடந்த சம்பவங்களின் ஊடோ சேர்த்துச் சொல்லும் போது பரதனும் தன் கருத்துக்களைச் சொல்லுவான். அகல்யாவும் அவனைப் பேசத் தூண்டுவார். அப்படித்தான் தாய்க்கும் மகனுக்குமிடையே எதையும் பகிர்ந்து கொள்ளும் பழக்கம் வளர்ந்தது. மற்றவரின் மனதைப் புரிந்து கொண்டு, அவர்களைக் காயப்படுத்தாத அளவுக்கு மகனை வளர்த்ததையிட்டு இதுவரை கொண்டிருந்த பெருமையை, மருமகள் அதில் ஒன்றுமேயில்லை வெறும் குப்பை என்று ஊதித் தள்ளி விட்டால் கவலை வரும் தானே?

வெளியில் கேட்ட காரின் சத்தத்தில் அகல்யாவின் நினைவுகள் கலைந்து போயின.

வாசலுக்குக் கிட்டத்தட்ட ஓடியே சென்றார்.

"கிரானி" கூவிக் கொண்டு ஓடி வந்த பேரனைத் தூக்கிக் கொண்டார். பேரன் சற்றுக் கனப்பதை உணர்ந்தார்.

"பெரிய பெடியனாகி விட்டாயடா!" அகல்யா சொன்னதைக் கேட்டு முகம் மலர்ந்த லவீன் அம்மம்மாவின் கண்ணாடியைப் பற்றிச் செல்லமாக இழுத்தான்.

அதற்குள் காரிலிருந்து இறங்கி வந்து விட்ட மகனையும் மருமகளையும் வரவேற்றார்.

சுதா சும்மாவே அழகி. தூக்கிக் கட்டியிருந்த கொண்டையும், முழங்கால் வரைக்குமான சட்டையும் அவளுக்கு எடுப்பாகவே இருந்தது. பாராட்டிச் சொல்ல வாய் எடுக்குமுன்னர்,

"அவனைக் கீழே விடுங்கோ. தூக்கிப் பழக்காதேங்கோ. பிறகு என்னைத் தூக்கச்சொல்லிப் படுத்துவான். இங்க வந்தால் இதுகளை எல்லாம் பழகிக் கொள்ளுறான்." சட்டெனப் பேரனை இறக்கி விட்டார். எத்தனை தான் படித்துப் படித்துச் சொன்னாலும் இந்தப் பாசங் கொண்ட பாழாய்ப் போன மனது மறந்து விடுகின்றதே! ஆனாலும் பேரனைப் பிடித்த கைகளை மட்டும் விடவில்லை.

"உங்களுக்குப் பிடித்த 'புரோன் பிரை' செய்திருக்கின்றேன். சாப்பிடலாமா?"

"வரும் வழியில் தான் 'மக்டொனால்ட்'ல்ல சாப்பிட்டோம். அவனுக்கு இப்ப ஒன்றும் வேண்டாம்."

கலங்கி விட்ட கண்களை குனிந்து மறைத்துக் கொண்டார். ஒரு நிமிடத்துள் தன்னைச் சமாளித்துக் கொண்டவர், நிமிர்ந்து பரதனைப் பார்த்தார். தாயை ஒரு வேதனை படிந்த முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவன் சட்டெனப் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

"தம்பி நீயும் சாப்பிட்டிட்டியே?"

ஒரு கணம் சுதாவின் முகத்தைப்பார்த்தவன்,

"இல்லையம்மா, வாங்கோ சாப்பிடுவம், நீங்கள் இன்னும் சாப்பிடேல்லை தானே?" அகல்யாவுக்கு இதுவரை வெறும் வயிறு போட்டுக் கொண்டிருந்த சத்தம் அடங்கி விட்டதாய் தோன்றியது.

மகனும் ஏதோ சாப்பிட்டு விட்டான் என்பதைப் புரிந்து கொண்டார். இங்கே சாப்பிட வேண்டும் என்பதற்காய் சரியாகச் சாப்பிடாமல் பேருக்குச் சாப்பிட்டிருப்பான் என்பதையும் புரிந்து கொண்டார்.

"வா சாப்பிடலாம்." பரதனை உட்கார வைத்து சாப்பாட்டைப் போட்டுக் கொடுத்தார். சுதா டிவியில் என்னமோ பார்க்கத் தொடங்கியிருந்தாள்.

"அம்மா நீங்களும் வாங்கோ." பரதன் தாயாரை இழுத்து அமர வைத்தான். எது எப்படிப் போனாலும் மகனின் அன்பில் குறைவிருக்கவில்லை என்பது புரிய அகல்யாவின் உள்ளமும் இப்போது நிறைந்தது.

பரதனுக்கும் தாயாருக்கும் இடையில் உட்கார்ந்து கொண்ட லவீன் இறால் பொரியலைச் சுவைக்கத் தொடங்கினான்.

இடையில் திரும்பிப் பார்த்த சுதாவின் பார்வையில் இருந்த செய்தியை பரதன் புரிந்து கொண்டாலும், அதற்குப் பிறகு அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்க முயற்சிக்கவில்லை. ஏதோ ஒரு விடயத்துக்குப் பிரச்சனை தொடங்கத் தான் போகின்றது. அதில் இன்னமும் ஒன்றிரண்டு இணைந்து கொள்வதில் ஒன்றும் குறைந்து விடப்போவதில்லை என்று எண்ணியிருந்திருப்பான்.

காலையில் இருந்து மகனுக்கென அக்கறையாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைத்ததை அவன் ருசித்துச் சாப்பிட்ட விதத்தில் அகல்யா வுக்கு தானே சாப்பிட்டு விட்டது போன்று நிறைவாக இருந்தது.

"தம்பி இன்றைக்கு நின்று விட்டுப் போகிறாயா? அல்லது..." அகல்யா முடிக்க விரும்பாமல் இழுத்தார்.

சுதா அதற்கும் திரும்பிப் பார்ப்பது தெரிந்தது.

"இல்லம்மா, போக வேணும். நான் சனி அல்லது ஞாயிறு வரப்பார்க்கின்றேன்."

அகல்யாவால் எந்தப் பதிலையும் சொல்ல முடிய வில்லை. அவன் வரும் வரை தனக்கென மட்டும் சமைக்கப் போவதில்லை. ஓடாத நேரத்தை வலிந்து ஓட்ட வேண்டும் என்று நினைக்கையில் என்ன வாழ்க்கை என்று சலிப்புத் தோன்றியது.

பேரனுடன் 'பசில்ஸ்' விளையாடிக் கொண்டே மகனுடன் பேசிக் கொண்டிருந்தார். இடையே மருமகளுக்கு பழங்களை வெட்டிக் கொடுக்கவும் மறக்கவில்லை.

தூங்குவதற்காக லவீனைச் சுதா அழைத்த போதும், லவீன் தாய்க்குப் பக்கத்திலேயே போகவில்லை. சுதா கூப்பிடுவதை அலட்சியம் செய்து விட்டு அம்மம்மாவுடன் ஒட்டிக் கொண்டே தான் சுவிம்மிங் செய்ததைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். பரதனே குழந்தையாகி வந்து விட்டானோ என்று அகல்யாவுக்கு ஒரு கணம் தோன்றியது. பிள்ளைக்கு அன்பு காட்டி அணைத்துக் கொண்டால் தானே அருகில் வருவான் என்று நினைத்தார் அகல்யா. மருமகளுக்குச் சொல்லிப் புரிய வைக்க முடியாததைப் பேரனுக்குச் சொன்னார்.

"அம்மா உங்களைக் கூப்பிட்டாதானே? போய் என்னவென்று கேளுங்கோ." சொன்னவுடன் லவீன் தாய்க்குப் பக்கத்தில் போய் நின்றான். பரதன் தாயைப் பெருமையுடன் பார்த்தான். டிவியைப் பார்த்துக் கொண்டிருந்த தாயின் கவனத்தைக் கலைத்து,

"மம்மி, நான் படுக்கப் போகிறேன்." சொல்லி விட்டு அம்மம்மாவுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டான்.

லவீனுக்குத் தூக்கம் வந்து விட்டதைக் கவனித்ததும் மடியில் தூக்கி மெல்லப் போட்டு காலை ஆட்டினார். அவன் கண்கள் சுகமாய் சொக்கி தூக்கம் கொள்வதைப் பார்க்கையில் 'ஆயர் மாளிகைக் கண்ணன்' மனதில் வந்து போனான்.

தலையைத் தூக்கி தூக்கக் கலக்கத்துடன் பார்த்த பேரனைப் புன்னகையுடன் பார்த்தாள். லவீனின் முகம் சற்றுக் கோணலாகிக் கொண்டு போக என்ன என்று விசாரிக்க முன்னர் வாந்தியெடுத்து விட்டான். அகல்யாவின் ஆடை முழுவதும் சிறியதும் பெரியதுமான இறால் துண்டுகள்.

லவீனைத் தூக்கிக் கொள்ளவும் முடியவில்லை. அரைத் தூக்கத்தில் இருந்த பரதன் பதறிப் போய் ஓடி வந்தான். மகனைத் தூக்கிக் கொண்டு குளியலறைக்குச் செல்ல பின்னாலேயே அகல்யாவும் பதட்டத்துடன் ஓடினார்.

"அம்மா, ஒன்றுமில்லை, நீங்கள் போய் சட்டையை மாற்றி விட்டு வாருங்கள் என்ற போதும் மனது கேளாமல் லவீனின் உடைகளைக் களைந்து குளிக்க வார்க்க உதவினாள். சுதா இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. அவள் முகம் கோபத்தில் வெடித்துப் போய் இருப்பது அப்படியே தெரிந்தது.

அகல்யா சென்று உடையை மாற்றி விட்டு வருவதற்குள் அவர்கள் கிளம்புவதற்கு தயாராகி விட்டிருந்தார்கள்.

"என்னடா, வெளிக்கிட்டு விட்டாயா?" அகல்யா வின் குரலில் ஆற்றாமை தொனித்தது.

"இப்பத் தான் வயிறு நிறையச் சாப்பிட்டவன், அதுக்குள்ள உந்த எண்ணெய் பொரியலையும் குடுத்து அவனைக் காலில் போட்டு ஆட்டினால், சத்தி எடுக்காமல் என்ன செய்வான்?" என்ற சுதாவின் கதைக்கு

தாயோ மகனோ வாயைத் திறக்கவில்லை. வாழ்ந்தாக வேண்டும் என்ற கட்டாயம் மகனுக்கும், ஒட்டி உறவாடா விட்டாலும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்க வேண்டுமே என்ற ஏக்கம் தாய்க்கும் இருக்கும் போது கருத்துச் சொல்லிக் காரியத்தைக் கெடுக்க அவர்கள் ஒன்றும் சாலமன் பாப்பையா இல்லைத் தானே?

காரில் ஏறி கைகாட்டிய மகனின் கண்கள் கலங்கி யிருந்த விதத்தில் மகனின் உள்ளம் தாய்க்குப் புரிந்து போனது. இந்த அன்னையின் வளர்ப்புத்தான் ஒரு பெண்ணைக் காயப்படுத்தி, சண்டை பிடித்து, குடும்பத்தைப் பிளவு படுத்தத் துணியவில்லை என்பதை சுதா விரைவில் புரிந்து கொள்வாள் என்ற நம்பிக்கையுடன் கதவைப் பூட்டிக் கொண்டு தன் தனிமைத் தவத்தைத் தொடர்ந்தார் அகல்யா.

* * *



இன்றைய தமிழ்க் கவிதையின் தளம் மிக விஸ்தீரணமானது. அது மனுக்குலம் எதிர்நோக்கும் புதிய புதிய பிரச்சினைகளைப் பேசுகின்றது. மனித அவலங்களை , மனித மதிப்பீடுகளின் புனர் நிர்மாணத்திற்கான அவசியங்களை, நம்பிக்கைகளை, பெண்ணிய எழுச்சிகளை, ஜனநாயக அறை கூவல்களைப் பேசுகின்றது. சில கவிதைகள் யுத்தங்களின் நியாயத்தை, சில கவிதைகள் ஆயுதங்களின் நாசத்தை மொழிகின்றன. சில பொருளாதாரத் தளத்தில் மூன்றாம் உலக நாடுகளின் பொதுக் கொடுமைகளான பசி, பிணி, அறியாமை பற்றியும் சில உலகப் பொதுப்பிரச்சினைகளான விபசாரம், எயிட்ஸ் போன்றன குறித்தும் பிரஸ்தாபிக்கின்றன.

- தேவகாந்தன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-14

நோயல் நடேசன்



# அவளா இவள்?



ஏதாவது வண்டியில் அவள் மோதி விடுவாளோ என்ற கவலை என்னை உச்சிக் கிளையில் குந்திய குரங்காக ஆட்டியது. என் கழுத்தை மீனை நோக்கிய கொக்காக, பஸ்சின் வெளியே தலையை நீட்டியபோது, ‘என்ன சின்னப்பிள்ளைபோல் தலையை உள்ளுக்குள் தலையை எடுங்கள்’ எனக் கையில் சியாமளா அடித்த போதும் உள்ளே என் தலை வரவில்லை. எனக்கோ அந்தப் பெண் வீதியைக் கடந்து அடுத்த கரைக்குச் சேர்ந்த பின்பே வழமையான எண்ணிக்கையில் இதயம் துடிக்கத் தலையை உள்ளெடுத்தேன்

‘அந்த பெண்ணை எனக்குத் தெரியும்’ என முணுமுணுத்தேன்.

மார்கழி மாதம்: மழைக் காலம் லேசாக தூறலடிக்கும் மதிய நேரத்தில் இலங்கைப் போக்குவரத்து வண்டியில் மனைவி சியாமளாவுடன் பயணம் செய்து கொண்டிருந்தேன். இலங்கைக்குப் போனால் வாடகை வானிலோ இல்லை ரயிலிலோ போவது தான் வழக்கம். இம்முறை வழக்கத்திற்கு மாறாகத் திருகோணமலை , மட்டக்களப்பு, கல்முனை என அரச பஸ்சில் பயணம் செய்தோம். மற்றைய மூன்றாம் உலகநாடுகளை ஒப்பிடும்போது இலங்கையில் போக்கு வரத்து , கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் உன்னதமானவை : ஆனால் நாம் அவற்றை எப்பொழுதும் மதிப்பதில்லை. ஆனால் போக்குவரத்துச் சாரதிகளுக்கோ அல்லது கண்டக்டர்மாருக்கோ திருகோணமலையிலிருந்து கல்முனைக்குச் செல்லும் பிரயாணிகளுக்கு இடையில் சிறுநீர் கழிக்க வேண்டும் அதிலும் வயதானவர்களுக்கும், கர்ப்பிணிகள், டயபற்றீஸ் உள்ளவர்களுக்கும் அடிக்கடி அடிவயிறு முட்டும் என்பது புரிவதில்லை. ஆனால் நான் பார்த்தபோது சாரதி இறங்கி வெளியே பேய்ந்து விட்டு வெத்திலை போட்டுவிட்டு சாவகாசமாக வந்தார்.

நான் மட்டக்களப்பில் நிறுத்தியவுடன் சாரதிக்குச் சொல்லிவிட்டு, பஸ்சிலிருந்து இறங்கி சிறுநீர் போய்விட்டு ஆறுதலாக வந்தேன். சியாமளா இருப்பதால் என்னை விட்டுச்செல்ல இயலாது. சாரதி, மீண்டும் பஸ் ஏறும்போது முகம் கடுக்கப் பார்த்தார். ‘அறுபதுக்கு மேல் அடிக்கடி சிறு நீர் வரும்’ என உரக்கச் சொன்னதும் சிரித்தபடி அந்த சாரதி பஸ்சை இயக்கினார்

என்னைத் தொடர்ந்து அவசரமாக ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்க மெலிந்த பெண் கையை உயர்த்தியபடி அவசரமாக ஏறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதற்கு மிகவும் வித்தியாசமாக இருந்தார். சிவப்பு மஞ்சள் கலந்த சீலை, பச்சைச் சட்டை அணித்திருந் தாலும் கம்பளியாலான ஒரு பச்சை ஜாக்கட் முன்பகுதியை திறந்து விட்டிருந்தார். தலையில் கம்பளியிலான குல்லா என்பன அவரை ஐரோப்பிய நாடொான்றில் வாழ்பவராகக் காட்டியது. ஐரோப்பிய காலநிலைக்கான உடையை மட்டக் களப்பில் அணிந்திருந்தார் . அதற்கு அப்பால் மேலும் விசித்திரமாகத் தெரிந்தது: அவரது காலில் அணிந்திருந்த தடிப்பான துணியாலான காலணி . அது பெரும்பாலும் நட்சத்திர விடுதிகளில் குளித்துவிட்டு வரும்போது காலில் போட்டுக்கொள்வது.

அந்த பெண்ணின் முகத்தைப் பார்த்தபோது தொல்லியலில் சிறிய எலும்பின் துண்டைவைத்து, எந்த மிருகம் எந்தக்காலம் என ஆராயும்போது ஏற்படும் விஞ்ஞானியின் சந்தேகம் நிறைந்த பரீச்சயமாகத் தெரிந்தது. உறுதியாகச் சொல்லமுடியாது மேலும் நான்கு சீட்டுகள் முன்பாக இருந்தார். அவரது பிடரியை மட்டுமே பார்க்க முடிந்தது. ஆண்கள் போல் தலை மயிர் வெட்டப்பட்டு நரைத்த தலையாக அவரது குல்லாயின் கீழ் தெரிந்தது.

மட்டக்களப்பில்கம்பளிஉடையுடன்ஒருவர்ஏறுவது பார்த்ததும் மதயானை ஒன்று தும்பிக்கையால் உணவுக்காக தனிமரத்தை அசைப்பதுபோல் அந்தக் காட்சி மனதை மேலும் கீழும் அசைத்தது.

கல்முனைக்கு முன்னைய தரிப்பில் சாரதியிடம் அவசரமாக கையைக் காட்டி நிறுத்த சொல்லி, இறங்கிய போது சிறிது நேரம் இறங்கிய இடதுபக்கத்தில் அவசரமாக சில அடிகள் முன்னோக்கி சென்ற அந்தப்பெண் மீண்டும் அதேவேகத்தில் திரும்பி வந்து பஸ் கொண்டக்டரின் முழங்கையை கையால் தொட்டு இழுத்து ஏதோ கேட்டார், அப்போது அவன் சொன்னதைக் கேட்டதும் அவசரமாக நின்ற பஸ்சின் முன்பாக வீதியின் குறுக்கால் கடந்தார் .

அப்பொழுது அந்தப் பெண்ணின் முகம் எனக்குப் பழைய சேமிப்பிலிருந்த கையிலெடுத்த கருப்பு வெள்ளை போட்டோவாகத்தெளிவானது . 'அட சுமதியாக இருக்குமோ? 'என முணுமுணுத்தேன்

என் மனைவிக்கும் சுமதியை அறிமுகம் ஆனால் முகம் நினைவிலிருக்க நியாயமில்லை என நினைத்தாலும் 'எங்களோடு சென்னையில் அறிமுகமான சுமதியைத் தெரியுமா? ' என்றேன். மேலும் தெளிவாக்க 'சில காலம் எங்களோடு சென்னை வீட்டில் இருந்தாள் பின்பு வெளிநாடு போய் விட்டாள்'

'ஓ, பிரான்ஸ் போனதாகச் சொன்னீர்கள். அவளா?.'

'முகத்தை பாரத்தால் அவள்போல் இருக்கிறது' என்றேன்.

கிழக்கு மாகாணத்தில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த பெண் என சுமதியை எனது மட்டக்களப்பு நண்பர் ஒருவர் மூலமாக அறிவேன். அவளது கதையில் ஒரு சிறிய பகுதியைத் தெரிந்திருந்தேன் . மட்டக்களப்பு சிறையுடைப்பிலிருந்து கிழக்கு மாகாணத்தின் ஊடாக தப்பியவர்களுக்கு இவள் உதவியதாகவும் கூறினார்.

அக்காலத்தில் இக்கால அகதி அந்தஸ்த்து பெறச் சொல்லும் கதைகள் போல் பலர் பல கதைகள் சொல்வாரகள். மேலும் அந்தக் கதைகள் பொய்யாக புனையப்பட்ட போதிலும் அவை உண்மையானவையாக அவர்களுடன் நிழல்போல் வாழத் தொடங்கிவிடும். அது மனித இயல்பு. இப்பொழுது நாங்கள் ராமாயணம், மகாபாரதம் மற்றும் வேதாகமம் எல்லாம் வரலாறு இல்லை எனச் சொல்லமுடியுமா? கேள்வி கேட்பவனைக் கொலை செய்வார்கள்.

இதேபோல் சுமதியின் கதையில் எவ்வளவு உண்மை பொய் தெரியாத போதிலும் இயக்கமொன்றில் இருந்த இளைஞன் ஒருவனில் காதல் கொண்டிருந்தாள் என்பது எனக்கு உறுதியானது. அவனைத் தேடி அவள் சென்னை வந்து இயக்கங்களிடையே மற்றும் அகதி முகங்களிலும் அலைந்து கரையில் இருந்த தென்னையிலிருந்து கடலில் விழுந்த தேங்காயாக மிதந்து அலைந்ததும் எனக்குத் தெரியும்.

இளம் பெண்: அழகானவள் ஆனால் தனியாக நாகபட்டினம் அகதிமுகாமில் வாழ்வது கடினமாக இருந்தது என அக்காலத்தில் அந்த மட்டக்களப்பு நண்பர் எனக்குத் தெரிவித்தபடியால் நான் வேறு ஒரு இடத்தில் ஒழுங்கு பண்ணுவதற்கு அவளைச் சென்னைக்குக் கூட்டி வந்தோம். அவளுக்குப் புதிய இடம் பார்க்கும்வரையில் எங்கள் வீட்டில் இருக்கும்படி சொன்னோம். அவளும் சில நாட்கள் எங்களது சிறுபிள்ளைகளோடு விளையாடுவாள்.

அக்காலத்தில் இயக்கமோதலின்பின் பலர் வெளி நாடுகள்போன காலம் என்பதால் சிலநாளில் ' வெளிநாடு போக விரும்புகிறேன் ' என்றாள். அப்பொழுது என்ன செய்வது என எனக்கே தெரியாத காலம் . என்ன பதில் சொல்ல முடியும்?

ஒரு கிழமையில் காணாமல் போய்விட்டாள்.

நான் பயந்தேன் ஆனால் எனது மனைவிக்குச் சந்தோசம். அழகான இளம் பெண்ணை வீட்டில் வைத்திருப் பது கடினம். 'நான் உங்களை நம்பினாலும் மற்றவர்களால் ஏதாவது பிரச்சனை வந்தால் நாம் என்ன பதில் சொல்ல முடியும் என்றபோது சரியாகத்தான் இருந்தது. நாம் சிந்திக்காத பல விடயங்களை பெண்கள் சிந்திப்பார்கள்.

சுமதி தொலைந்து ஒரு மாதமிருக்கும். நாங்கள் வேலை செய்த மருத்துவ மனையில் ஒரு நாள் நான் உள்ளே வேலை செய்து கொண்டிருந்தபோது மனைவி பிள்ளைக ளுடன் ஹாலில் இருக்கும்போது, 'உங்கள் கணவருடன் ஐந்து நிமிடங்கள் பேசமுடியுமா? ' என்ற வார்த்தைகள் பெண்ணின் குரலில் எனது காதை அடைந்தது.

மனைவியின் பதில் எனக்குக் கேட்கவில்லை.

சுமதி புயலாக உள்ளே வந்தாள்.

இருக்கச் சொன்னேன் .

எந்தச்சிரிப்போ விசாரணையோ இல்லாது 'எனக்கு ஒரு நிரந்தர விலாசம் வேண்டும் உதவ முடியுமா ?என்றாள்.

'அதுதான் வீட்டில் இருக்கச் சொன்னபோது ஓடி விட்டாயே!'

'இப்ப அது அல்ல பிரச்சனை. நான் பெண்கள் ஹாஸ்டலில் இருக்கிறேன். ஏஜென்ட் ஒருவன் நான் பிரான்ஸ் போவதற்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொரிசியஸ் பாஸ்போட் ஒன்றை அங்கிருந்து தபாலில் வரவழைப்பதாகச் சொல்லியிருக்கிறான். நான் இருக்கும் அண்ணாநகரில் பல பெண்கள் இருப்பதால் அங்கு தபாலில் வருவது நல்லதல்ல. அவளவையில் ஒருத்தி எடுத்துக்கொண்டு கம்பி நீட்டலாம். அதிலும் யாழ்பாணத்துப் பெட்டையள் எப்ப புரிசன்மாரிட்ட போவோம் எனக் காய்ந்தபடி இருக்கி றார்கள்' எனச் சிரித்தாள்.

'அப்படியா?'

'பணமெல்லாம் ஒழுங்கு பண்ணியாகிவிட்டதா? அவர்களை நம்பமுடியுமா?'

'என் நிலையில் நம்பித்தான் ஆகவேண்டும். ஊருக்கு




போனா ஆமி அல்லது இயக்கம்: இங்க இருக்க ஏலாது அதைவிட வெள்ளைத்தோலா இருப்பதால் அதிக கஸ்டம்' எனச் சிரித்தாள்.

அவளைப் பார்த்து அதிசயித்தேன். ஒரு கிராமத்து பெண் இவ்வளது துணிவாகவும் அலட்சியமாகவும் பேசுவதும் மட்டுமல்ல முடிவை எடுக்கிறாளே! பல்கலைக் கழகத்தில் படித்த எனது மனைவியின் பல தயக்கங்கள் எனக்குத் தெரியும். சுமதி வாழ்வில் சந்தித்தவைகள், இடர்கள், துன்பங்கள், சவால்கள், பல தெரியாத போதிலும், நிச்சயமாக அவையே அவளை இந்த நிலைக்குக்கொண்டு வந்திருக்க வேண்டும்.

'வீட்டு முகவரியா அல்லது இந்த மருத்துவ நிலையத் தின் முகவரியா வேணும் ' என்றேன் .

'பொது இடமாக இருப்பது நல்லது ' என்றாள்

'நான் இடைக்கிடை வருவேன் என அக்காவிடமும் சொல்லுங்கள் ' என்று சொல்லிவிட்டு மழைகால கரிய இரவில் தாக்கிய மின்னலாக வந்த வேகத்தில் மறைந்தாள். சில நாட்களில் சுமதியின் பெயரில் ஒரு புத்தகம் பார்சலாக வந்தது. அதில் என்ன என பார்க்க ஆவலாக இருந்தாலும் அடக்கியபடி இருந்தேன். என் மேசையில் இருந்த அந்த பார்சலை என்னிடம் வந்த பலர் பார்த்தபடியே இருந்ததால் இறுதியில் எனது மேசையின் லாச்சியுள் வைத்தேன். கிட்டத் தட்ட ஒரு கிழமையின் பின் சுமதி வந்து பார்சல் வந்ததா என்றபோது அதை எடுத்துக் கொடுத்தேன். அதை என் முன்னே உடைத்து காட்டியபோது அதன் நடுவில் இந்திய மேறிசியஸ்பெண்ணின்படம்கொண்ட பாஸ்போட் இருந்தது.

'பணம் எல்லாம் சரியா?' என்று கேட்டபோது 'ஆம்' என தலையை ஆட்டினாள் .

அதற்கு மேல் எனக்கு அவளிடம் விசாரிக்க ஏதுவு மில்லை :விசாரிப்பது நாகரீகமும் இல்லை. வாழ்த்துகள் என்றபோது நன்றியுடன் வெளியே சென்று அடுத்த அறையில் நோயாளி ஒருவரை பார்த்துக்கொண்டிருந்த மனைவியையும் காத்திருந்து நன்றி சொல்லிவிட்டுச் சென்றாள்.

எனக்கு மனத்தில் இவள் எப்படி ஐரோப்பா போய் சேர்வாள்?

பல பெண்களதும் ஆண்களதும் சோகக் கதைகளைக் கேட்ட காலமது. வழியில் எங்காவது ஏஜன்டுகளால் ஏமாற்றப்பட்டு விடப்படுவாளா ? பல பெண்களும் ஆண்களும் பம்பாய்க்கு வெளியே போகாது உயிர் வாழப் பல விடயங்கள் செய்து வாழ்வது எனக்குத் தெரியும்

*144* சூழைமேடு நெடுந்தெருவின் மருத்துவ நிலையத்தின் மேல்மாடிலிருந்து படிகளில் அவசரமாக இறங்கிச் செல்லும்போது, ஒரு கையில் புத்தகம் மறுகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கேட்டின் பின்பக்கத்தை ஒதுக்கியபடி அவள் செல்ல அவசரமாக சென்ற அவளது நடையையும் , மலிவான காலணிகளையும், தெருவில் நிறுத்தியிருந்த ஓட்டோவில் ஏறும் வரையும் மேல் மாடியிலிருந்து என் கண்கள் பின் தொடர்ந்தன.

சமாதான காலத்தில் எங்கோ வசதியான ஒரு குடும்பத்திலோ அல்லது அலுவலகம் ஒன்றில் வேலை செய்யும் அழகும் திறமையும் உள்ள பெண் என்பதை மனத்தில் நினைத்துக்கொண்டேன்.

சுமதி எனது மனத்தில் வந்ததுபோல மறைந்து விட்டாள். நாங்கள் நம்பி வந்த ஈழப்போராட்டம் சின்னா பின்னமாகியதை பார்க்க முடிந்தது. இயக்கங்களிலிருந்து ஆண்களும் பெண்களுமாகப் பல நாடுகளுக்குச் சென்றார்கள். பயண முகவர்கள் எல்லாம் சமூகத்தில் மரியாதையுடன் குபேரனாகிய காலம். அக்காலத்தில் எனக்கு அறிமுகமான இந்திய உளவுத்துறையை சேர்ந்த ராமசாமி என்னிடம் 'நீங்கள் இனிமேல் கவலைபடத் தேவையில்லை நாங்கள் பொறுப்பெடுக்கிறோம்' என்றார்.

'என்ன புதிரா இரகசியமா?'

'இந்திய அரசு நேரடியாக தலையிடுகிறது இது வெளிப்படையானது ' என்றார்.

அவரே எனதும் மனைவியினதும் காலாவதியான இந்திய விசாவுடன் இருந்த இலங்கைக் கடவுச் சீட்டை மீண்டும் இரண்டு நாளில் புதுப்பித்துத் தந்தார்

கிட்டதட்டச் சுமதி போய் ஒரு வருடத்தில் நானும் வெளிநாடு போவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்த காலத்தில், எங்கள் அலுவலக அறையின் கதவருகே ஒரு பெண் கறுப்பு கண்ணாடி, தலையை மூடிய ரோஜா நிற ஷகார்வ், மற்றும் மிகவும் இறுக்கமான நீல ஜீன்ஸ் அணிந்த பெண் தோன்றினாள் . முகத்தில் மேக்கப், உதட்டுசாயம் எனப் பார்ப்பதற்கு சினிமாக்காரி யாராவது வீடுமாறி வந்துவிட்டாளா என நினைத்தேன் .

மூக்குக் கண்ணாடியையும் ஷகார்வ்வையும் கழட்டியபின் ' சுமதி' என்றேன்

'எப்படி இவ்வளவு அழகாக இருக்கிறாய் ?'

'முன்பு அழகில்லையே? ' என்றாள் அதே குறும்புடன்

இப்பொழுது அழகுடன் அலங்காரமும்' என்றேன் பதில் சொல்லாது 'அக்கா இருக்கிறாவா? அடுத்த அறையில்'

இல்லை வீட்டில் ஏன்? ' என்றேன்

'இல்லை சுதந்திரமாகப் பேசத்தான்'

'எங்கிருந்து வாறாய் ?'

'பாரிஸ் ஆனால் சென்னையில் ஹோட்டலில் இருந்து வருகிறேன்' என்றாள்

'ஏன் மீண்டும் வந்தாய்? பாரிசில் நல்ல பொடியனாப் பார்த்து இருக்க வேண்டியதுதானே?'

'நல்ல பையனா எங்கே தேடுகிறது ? எல்லாம் பொறுக்கிகள்' என்றாள் அவளது வார்த்தையின் கசப்பு எனது நாக்கில் துவர்த்தது .

'நீங்கள் என்ன செய்ய உத்தேசம்'

'நான் ஜூலையில் அவுஸ்திரேலியா போகிறேன்'

'நல்லது, ஏதாவது பணம் தேவையா?' என்றாள்

வியப்புடன் 'எனது மனைவியின் அண்ணன் அதை பார்த்துக் கொள்கிறார்'

'தனது கையிலிருந்த கைப்பையிலிருந்து ஒரு சேட்டை எடுத்து தந்தாள்

'ஏன்?'

'எனது நன்றிக்கடன்' என்றாள்

'சுமதி எனக்குத் தேவையில்லை நீ நல்லா இருந்தால் போதும். அதுவே எனக்குத் தேவை'

அப்பொழுது அவளது கண்கள் மாரிக்குளமாகின.

அவளது கண்ணீரைப் பார்த்தபடி, எதுவும் செய்ய முடியாது அவளது கையிலிருந்த சேட்டை எடுத்தேன்.

வெளியே போய் கீழிருந்த தேநீர் கடைக்கு, மேலி ருந்தபடி இரண்டு தேனீர் என்று சொல்லி விட்டு வந்தேன். கைக்குட்டையால் துடைத்தபடி இருந்தாள் ..

'உங்கள் மனைவியை அக்கா என்பேன். உங்களை அண்ணன் என கூப்பிடலாமா ?'

'தாராளமாக ?'

தேனீர்க்கடை பையன் ரீ இரண்டை வைத்துவிட்டு சென்றான்.

'நான் ஒரு கடத்தல் பேர்வழியிடம் வேலை செய்கி றேன்'

'எப்படி?'

'நான் வெளிநாடு செல்ல என்னிடம் பணம் இல்லை யென்பதால் ஏஜன்ட், போதைவஸ்த்து கடத்தல்காரன் ஒருவனிடம் சேர்த்து அவர்களுக்கு போதை மருந்துப் பெட்டியை கொண்டு சேர்த்தால் டிக்கெட்டும் பணமும் தருவதாகச் சொன்னான். நானும் வேறு வழியில்லை அதைச் செய்ய தொடங்கினன் . பம்பாய் பாரிஸ் மொரிசியஸ் என என்னை நியமித்துவிட்டார்கள். ஹோட்டல், போக்கு வரத்து எல்லாம் அவர்களே . எனக்குப் பணமும் கிடைக்கும். விடமுடியாது' என்று அழுதாள் .

'எங்காவது சென்று தப்ப முடியாதா ?'

'அவர்களது ஆட்கள் எங்குமுள்ளார்கள், தப்பினால் நமது இயக்கம்போல் போட்டுத் தள்ளுவாங்கள்'

அவளுக்கு என்ன ஆறுதல் சொல்லமுடியும்?

சிறிது நேரமிருந்து விட்டு 'அக்காவை கேட்டதாக சொல்லுங்கள்..' சென்றாள்

அவுஸ்திரேலியா வந்து சில காலத்தில் பாரிசில் பிடிபட்டு ஜெயிலில் இருப்பதாக கேள்விப்பட்டேன்.

சுமதி மட்டுமல்ல ஆண்கள் பெண்கள் பலர் தமிழ்த் தேசியத்திற்கான ஆயுதப் போராட்டத்தில் அவர்களது குடும்பக் கூடுகளை விட்டு பல கனவுகளுடன் வெளியேறிச் சிதைந்தார்கள். அவர்களின் நினைவுகள் எனக்கு அதிகாலை சொப்பனமாக இன்னமும் நீடிக்கின்றன.

முழு கதையையும் மனைவியிடம் சொல்லாத போதிலும் அந்த சுமதியாக இருக்கலாம் என சியாமளாவிடம் சொல்லிவைத்தேன்.

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-15

கே.எஸ்.சுதாகர்





# நதியிலே புதுப்புனல்

சாதாரண வேளைகளில் என்றால், மதுமதிக்கு அம்மன் கோவிலுக்கு நடந்து செல்வதற்குப் பத்துநிமிடங்கள் போதும். ஆனால் இன்று இருபத்தைந்து நிமிடங்களுக்கு மேல் பிடித்தன. அவளின் உடலின் சக்தியை வீறு கொண்ட மருந்துகள் உறுஞ்சிவிட்டன.

சில மாதங்களாக உடம்பின்மூட்டுகளில் பொல்லாத வலி கண்டிருந்தது. நடப்பதற்கோ, வேலை செய்வதற்கோ முடியவில்லை. மசாஜ் செய்தால் சரிவரும் என்று, மசாஜ் சென்ரருக்குக் கூட்டிச் சென்றான் காண்டீபன்.

மதுமதி காண்டீபனை மணம் முடித்து எட்டு வருடங்கள் கழிந்துவிட்டன. திருமணம் முடிந்த சில தினங்களில் மதுமதி அவனைச் சரியாக அடையாளம் கண்டுகொண்டாள். அவனது பேச்சும் சரியில்லை, நடத்தையும் சரியில்லை. சரியான சுடுதண்ணி அவன்.

நைனி அவர்களின் பெண் குழந்தை. இரண்டாம் வகுப்புப் படிக்கின்றாள். முதலில் குழந்தை வேண்டாம் என்றுதான் சொல்லியிருந்தான் காண்டீபன். அவளைத் தொடாமலே 'மலடி' என்றும் பழித்தான். உயிர் உருவாகுவதற்குத் தான் தான் நூறுசத விகிதம் பொறுப்பு என்பதுமாப் போல, ஏதோ தன்னால்தான் அந்த வரத்தைக் குடுத்துவிட முடியும் என பின்னர் மனமிரங்கிக் கொண்டான்.

“உனக்கு மசாஜ் செய்யுறதைப் பாக்க எனக்கும் ஆசையாக்கிடக்கு.” மசாஜ் செய்வதைப் பார்த்து ஆசைப் பட்டானோ, அங்கு நின்ற பெண்ணைப் பார்த்து ஆசைப் பட்டானோ, அருகே இருந்த படுக்கையில் வீழ்ந்துவிட்டான் காண்டீபன். மசாஜ் செய்யும்போது மதுமதிக்கு உடம்பைச் சுண்டி இழுக்கும். பச்சை பச்சையாக நோகும். அவள் கத்திக் குளறுவாள். அருகே படுத்துக் கிடக்கும் காண்டீபன் “மசாஜ் சுப்பர்: நல்லாயிருக்கு, நல்லாயிருக்கு” என தனக்கு மசாஜ் செய்யும் பெண்ணை உற்சாகமூட்டுவான்.

மசாஜ் செய்ததில் மதுமதியின் உடல் நிலையில் முன்னேற்றம் காணவில்லை. குடும்ப வைத்தியர் 'ஆர்த்தரிட்டீஸ்' என்று சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான நிபுணரிடம் அனுப்பி வைத்தார். நூமற்றோலஜிஸ்ற் அவளுக்கு சில மருந்துகளுடன் பிஷியோ செய்யும்படி சொன்னார். அதன் பிறகு காண்டீபன் மதுமதியை பிஷியோ வில்விட்டுவிட்டு, தான் மசாஜ் சென்ரருக்குப் போய்விடுவான்.

கோவில் படிக்கட்டில் நண்பி கலா, சுவாமி தரிசனம் முடித்து இளைப்பாறிக் கொண்டிருந்தாள்.

"மதி, இப்ப உடம்பு எப்பிடி இருக்கு?"

"அதே மாதிரித்தான் கலா. இரவு கூட ஒரே வலி. நித்திரை கொள்ளக்கூட முடியல்ல."

"சரி, நீ இப்பதான் வந்தனி. சுவாமியைக் கும்பிட்டிட்டு வா. நான் போகேக்கை உன்னைக் கூட்டிக் கொண்டு போய் வீட்டிலை விடுறன். அவசரப்படாதை"

"உனக்கேன் சிரமம். நீ போ. வேலைக்கும் போக வேணும் தானே!"

"என்ரை கிளினிக், நான் எப்ப போனாத்தான் என்ன..." கலா மதுமதியை முறைத்துப் பார்த்தாள். இனி கலாவுடன் கதைத்துப் பிரயோசனம் இல்லை என்ற முடிவுடன், சுவாமி தரிசனத்துக்காகக் கோயிலுக்குள் நுழைந்தாள் மதுமதி. கலாவும் மதுமதியைப் போலத்தான், ஒரே நேரத்தில் இந்த நாட்டுக்குள் அடியெடுத்து வைத்தவள். இன்று படிப்படியாக முன்னேறி ஒரு டென்ரல் கிளினிக் கூட வைத்திருக்கின்றாள்.

தரிசனம் முடிந்ததும் மதுமதியை ஆதரவாகத் தாங்கிப் பிடித்து, கார் நிற்குமிடம் கூட்டிச் சென்றாள் கலா. காரினுள் ஏறுவதற்கும் உதவி செய்தாள். மதுமதிக்குக் கண்கள் கலங்கிவிட்டன.

"பிஷியோவுக்கு ஒழுங்காப் போய் வாறனி தானே!"

"எங்கை கலா, தனக்கு நேரமில்லை எண்டு இப்ப மூண்டு கிழமையாக் காண்டீபன் கூட்டிப் போறேல்லை. நான் கோயிலுக்கு வந்தே மூண்டுமாதமாப் போச்சு. ஒருக்காக் கடவுளிட்டை முறையிடுவோமெண்டு இண்டைக்கு வந்தனான்."

"இப்ப பிஷியோவுக்கு கூட்டிப் போகட்டுமா?"

"நீ உன்ரை பிள்ளையோடை, நைனியையும் பள்ளிக்கூடம் கூட்டிக் கொண்டுபோய் கூட்டிக்கொண்டு வாறாய். அந்த உதவியே எனக்குப் போதும்."

"நீ எனது உற்ற நண்பி எண்டபடியாலை சொல்லுறன். என்னாலை எதையும் மறைக்க முடியேல்லை. காண்டீபன் மீது ஒரு கண் வைத்துக் கொள்." தயங்கியபடியே சொன்னாள் கலா.

"ஏன்? ஏன்?"

"கொஞ்சம் கவனமாக இரு எண்டு சொல்லுறன். இரண்டொரு தடவை மசாஜ் சென்ரரிலை வேலை செய்யிற சைனீஸ் பெட்டையைக் காரிலை ஏத்திக் கொண்டு போனதைக் கண்டனான்"

மணம் முடித்த நாள் முதல், நகரின் ஒதுக்குப்புறத்தில் இருக்கும் சிவப்புவிளக்குப் பகுதியில், காண்டீபன் இரவு வேளைகளில் மினைக்கெடுவதாக சாடைமாடையாக கேள்விப்பட்டிருந்தாள் மதுமதி. இப்ப வெளிப்படையாக. ஆற்றுமணலை எண்ணினாலும் எண்ணலாம், அருச்சுனன் மனைவியரை எண்ண முடியாதல்லவா?

'ஓகோ! அப்பிடியா சங்கதி. என்னை பிஷியோவிற்கு விட்டிட்டு, தான் மசாஜ் சென்ரருக்குப் போனது உதுக்குத் தானோ?' மனதுக்குள் நினைத்தபடி மௌனமானாள் மதுமதி. கார் மதுமதியின் வீட்டுக்கு முன்னால் நின்றது.

"கலா, எனக்கொரு உதவி வேண்டும். இண்டைக்கு மாத்திரம் நைனியை உன் வீட்டில் வைத்திருப்பாயா?"

"ஏன்? வீட்டிலை சூரசம்ஹாரம் நடக்கப்போகுதோ? பாத்துக் கவனமாக நடத்து."

"நைனிக்கு ஒருநாள் எண்டாலும் அதிதியோடை நைற் அவுற் நிக்கவேணும் எண்டு ஆசை. இண்டைக்குத்தான் அவளுக்கும் சரிவந்திருக்கு."

"இண்டைக்கு வெள்ளிக்கிழமை தானே! ஒரு பிரச்சினையும் இல்லை. நீ அவளை விடு. நான் பாத்துக் கொள்ளுறன். இரண்டுபேரும் விளையாடட்டும்."

மதுமதிக்கு இயலாமல் வந்ததன் பிற்பாடு, நைனி அம்மாவையே சுற்றிச் சுற்றி வரத் தொடங்கினாள். எங்கே அம்மா விழுந்து விடுவாளோ என்ற பயம் அவளுக்கு. "அம்மா, நீ சரியான பாவம்" என்பாள். படிப்புச் சொல்லிக் குடுக்கும்போதும், இமைக்காமல் அம்மாவையே பார்த்தபடி இருப்பாள். பள்ளிவிட்டு வந்ததும் ஓடி ஓடி அம்மாவுக்கு உதவி செய்வாள். எதையும் குனிந்து எடுக்க விடமாட்டாள். சமையலின் போதும் பெரிய ஒத்தாசை புரிவாள்.

நைனியை கலா வீட்டிற்கு அனுப்பி வைத்ததும், வீட்டின் கதவு ஜன்னல்கள் அனைத்தையும் அடித்துச் சாத்தினாள் மதுமதி. இரவு உடுப்பை மாற்றிவிட்டுப் படுக்கையில் பொத்தென விழுந்தாள். கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தது. 'ஊரில் என் போன்றவர்களுடன், சிரித்து விளையாடி பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த என்னை, கடவுள் ஏன் இப்படித் தண்டித்தார்?'

அவள் மனம் ஊர் நினைவுகளையிட்டுக் கவலை கொண்டது.

அவுஸ்திரேலியாவில் கலா என்ற சிநேகிதியைப் போல, ஊரில் அவளுக்கு ஜனனி இருந்தாள். ஜனனி கூட கலாவைப் போல இடையில் வந்த சிநேகிதிதான். நாட்டுப் பிரச்சினைகளால் இடம்பெயர்ந்து புதிய பள்ளிக்கூடத்தில் பதினொராம் வகுப்பில் இணைந்து கொண்டபோது, ஜனனி மதுமதிக்குத் தோழியானாள். பாடசாலை சேர்ந்து இரண்டு மூன்று நாட்களாக மதுமதியை உற்றுப் பார்த்தபடி இருந்தாள் ஜனனி. பின்னர் ஒருநாள், "நாங்கள் இரண்டுபேரும் ஃபிரண்ஸ் ஆவோமா?" என்று சிரித்தபடியே கேட்டாள். மதுமதி வெட்கத்துடன், "ஆவோமே!" என்றாள். இரண்டு பேருமே அழகில் ஈடு இணையற்றவர்கள். ஜனனி மதுமதியை விட இரண்டு மூன்று அங்குலங்கள் உயரத்திலும், மூன்று மாதங்கள் வயதிலும் பெரியவள். ஜனனிக்கு இரட்டைப் பின்னல் பிடிக்கும். மதுமதி ஹபாப் கட்' வெட்டி முன்னாலே ஹபாண்ட்' ஒன்று போட்டிருப்பாள். இரண்டுபேரும் சக மாணவர்களுடன் பழகுவதில் சற்று வேறுபாடு கொண்டவர்கள். மதுமதி பெண்களுடன் கதைக்கவே வெட்கப் படுபவள். ஜனனி எதிர்மாறாக எல்லோருடனும் சகஜமாகப் பழகுவாள். ஆண்களுடன் கூட சரிக்குச் சரி நிற்பாள்.

அது முதற்கொண்டு, தினமும் பாடசாலைக்கு நடந்து செல்லும் மதுமதியை, ஜனனி தனது சைக்கிளில் ஏற்றிச் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனனிக்கு மதுமதியின் மீது கொள்ளை ஆசை. கூட நடக்கும்போது சற்றே பின்னாலே விலகி நின்று, அவளைப் பார்த்து ரசிப்பாள். பின் எட்டிக் கால்களை முன்வைத்து, சரிக்குச் சமமாக வந்ததும் பக்கப்பாட்டில் தரிசிப்பாள். தலைமயிரைப் பிடித்து சரி செய்தவாறே 'உனக்கு இப்படி வெட்டினால் இன்னும் நல்லா இருக்கும்' என்பாள். அவளின் செய்கைகள் சிலவேளைகளில் மதுமதிக்குக் கூச்சத்தை உண்டுபண்ணும்.

ஜனனிக்கு ஒரு அண்ணன் அவளின் சாயலிலே இருந்தான். சரியான புத்தகப்பூச்சியான அவன் எந்த நேரமும் அறைக்குள் ஒழிந்து கிடப்பான். தன்னை அவனுக்கு மனைவியாக்கி, தனக்கு அண்ணியாக்க நினைக்கின்றாள் என எண்ணிக்கொள்வாள் மதுமதி.

பாடசாலைக்குப் போகும் பாதையில், இடையில் வரும் ஏற்றத்தில், உன்னி உன்னிச் சைக்கிளை உழக்குவாள் ஜனனி. மதுமதிக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருக்கும்.

"அதென்ன, நீர் மாத்திரம் தான் என்னை சைக்கிளில் வைச்சு ஓடுவீரோ? நான் உம்மை வைச்சு ஓடக்கூடாதோ?"

"எங்கையாவது புருஷனை வைச்சு பெஞ்சாதி சைக்கிள் ஓடுறதைக் கண்டிருக்கிறீரோ"

"என்ன சொல்லுறாய்? எனக்கு ஒண்டுமே பரியேல்லை!"

"சுரைக்காய்க்கு உப்பில்லையாம் எண்டிறன். நான் தானே உன்னைக் கலியாணம் செய்யப் போறன்." ஜனனி சொல்ல, மதுமதிக்கு திகைப்புடன் சிரிப்பும் வந்தது.

"பெம்பிளையும்பெம்பிளயும்எங்காலும்கலியாணம் செய்வினமா?"

"நாங்கள் செய்வம்."

மதுமதி சிரிப்பை அடக்கமுடியாமல் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்க, அவளைப் பார்த்து ஜனனியும் சிரிக்கத் தொடங்கினாள். சிரிப்பின் உச்சத்தில் சைக்கிள் தடுமாறி ஒரு பள்ளத்திற்குள் இறங்கி ஏற, மதுமதி சைக்கிள் கரியரில் இருந்து தொப்பென்று பத்தைக்குள் விழுந்தாள். அந்தச் சம்பவத்தை இருவரும் அடிக்கடி நினைத்துச் சிரித்துக் கொள்வார்கள்.

ஜனனிக்கு முதல் தடவையிலே பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. தலைநகர் கொழும்பிலே பொறியியல் படித்துக்கொண்டிருந்த அண்ணனுடன்ஜனனியும்இணைந்து கொண்டாள்.

மதுமதிக்குப் பல்கலைக்கழகம் போய் படிப்பதற்குப் புள்ளிகள் காணாமலிருந்தது. இரண்டாம் தடவை பரீட்சைக்குத் தயார் செய்து கொண்டிருந்தாள். ரியூசனுக்குப் போய்விட்டு வந்திருந்த ஒரு காலைப்பொழுதில், அம்மா ஒரு படத்தைக் காட்டி 'உனக்குப் பிடித்திருக்கின்றதா?' என்று கேட்டார். திருமணம் பற்றி அவள் அப்பொழுது கனவிலும் நினைத்திருக்கவில்லை. 'நாட்டிலை பிரச்சினைகள் கூடிக் கொண்டு வருது. நான் மடியிலை நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறன். நல்ல சம்பந்தம். அவுஸ்திரேலியா போய் அங்கேயே படி.' முடிந்த முடிவாகிவிட்டது. நேரில் பழகி நடக்கின்ற திருமணங்களே முறிந்து போகின்ற நிலையில், படத்தைப் பார்த்து என்ன சொல்வது?

ஜனனி ஊரில் இருந்திருப்பாளேயானால் கடைசி வரை மதுமதியைத் திருமணம் செய்ய விட்டிருக்க மாட்டாள். "பத்தொன்பது வயசிலை உனக்கென்ன கலியாணம்" என்று சண்டை போட்டிருப்பாள்.

அடுத்தநாள் ரவுணில் இருந்த கொமியூனிக்கேசன் சென்ரருக்கு அப்பா மதுமதியைக் கூட்டிச் சென்றார். காண்டீபனுடன் பேசச் சொல்லி ரெலிபோன் பூத்திற்குள் தள்ளிவிட்டார். உலகம் என்னவென்று பிடிபடும் முன்னரே காண்டீபனின் கைகளிலே தள்ளிவிட்டார்கள்.

"எனக்குத் தொடர்ந்து படிக்க வேணும்."

"அதுக்கென்ன! உனக்கு என்னென்ன விருப்பமோ அதை எல்லாம் செய்யும் சுதந்திரம் இஞ்சை அவுஸ்திரேலியாவிலை இருக்கும்."

"வேலைக்குப் போக வேணும்."

"இஞ்சை இரண்டுபேரும் வேலை செய்தாத்தான் சீவியத்தைக் கொண்டிழுக்கலாம்."

"எனக்கு நல்லா சமைக்கத் தெரியாது!"

"அதுக்கென்ன, நான் நல்லாச் சமைப்பேனே!"

எத்தனையோ ஆசைகளை அழித்துவிட்டு, தனக்கென்று ஒருவருமேயில்லாத அவுஸ்திரேலியா நாட்டிற்குள், காண்டீபனை மாத்திரம் நம்பி அடியெடுத்து வைத்தாள் மதுமதி. அப்புறம்,

படிக்கப் போக வேண்டும் என்றாள். உதட்டுக்குள் சிரித்தான்.

வேலைக்குப் போக வேண்டும் என்றாள். மூச்சுக்கூட விட முடியாதபடி வேலை வாங்கும் ஒரு பிளாஸ்ரிக் கொம்பனியில் சேர்த்து விட்டான். அங்கே காண்டீபனைப் பற்றிய பல கதைகள் அவளுக்காகக் காத்துக் கிடந்தன. கதைகளுக்கான விளக்கத்தைக் காண்டீபனிடம் கேட்டபோது, 'உனக்கு வேலை வேண்டாம்' என்று அதையும் தடுத்து விட்டான்.

கோவிலுக்கு மாத்திரம் கூட்டிச் செல்வான். அங்கேயும் யாருடனும் அவள் கதைத்துவிட்டால் அவனுக்குப் பிடிக்காது. கடவுளிடம் மாத்திரம் தான் கதைக்க வேண்டும் என்பான். தான் மாத்திரம் எல்லாப் பெண்பிரசைகளுடனும் வழிந்து வழிந்து கதைப்பான். ஆண்களுடன் கதைத்து மதுமதி அவனைக் கண்டதில்லை. ஒரு தம்பதியினரைக் கண்டால்கூட, கணவனைத் தவிர்த்து அவன் மனைவியுடன் தான் அதிகம் கதைப்பான்.

படிக்க, வேலைக்குப் போகத் தடை, சினிமா பார்க்கத் தடை, கடைக்குப் போய் பொருட்கள் வாங்கவும் தடை. எதை அவள் பெரிதாக விரும்பவில்லையோ அதைச் செய்வதற்கு மாத்திரம் அனுமதித்தான். அதுவும் சாப்பிடும் போது அதைப்பற்றியும் கிண்டல் செய்வான். ஆயிரத்தொரு நொட்டைகள். ஆரம்பத்தில் சிறிது எதிர்ப்புத் தெரிவித்தாள். ஆனால் புரிந்துகொள்ள முடியாத பிரகிருதியின் முன்னால் ஒன்றும் எடுபடவில்லை.

காண்டீபன் எங்கே வேலை செய்கின்றான் என்று மதுமதி கேட்பதில்லை. ஆரம்பத்தில் கேட்டவள் தான். ஒருநாள் ஒருபதில் சொல்வான். இன்னொருநாள் இன்னொரு பதில்.

ஒருமுறை வேலை செய்தவிடத்தில், ஒரு பெண்ணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் அத்துமீறி நடந்து கொண்டதில் வேலையை இழந்திருந் தான். அந்தக் காலப்பகுதியில் தான் நைனிக்குப் பூசை விழுந்ததும், வீட்டிற்கும் பொலிஸ் வந்ததும் நிகழ்ந்தது.

ஒரு சனிக்கிழமை, நைனி கொம்பியூட்டர் கேம் விளையாடியதைப் பொறுக்கமாட்டாமல் தாறுக்குமாறாக அவளை அடித்துவிட்டான். நைனி வாய் காட்டிவிட்டு அம்மாவுடன் வந்து ஒட்டிக் கொண்டாள். அவளை மதுமதி யிடம்இருந்து பிரித்து இழுத்துக்கொண்டு போன காண்டீபன், பழுக்கக் காய்ச்சிய கம்பியினால் அவளின் கையில் சூடு போட்டுவிட்டான். அன்று அவன் நிறைவெறியில் இருந்த தால் குழந்தையை ஏதேனும் செய்துவிடுவானோ எனப் பயந்தபடி இருந்தாள் மதுமதி. அன்று இரவு முழுவதும் 'இந்த அப்பா எனக்கு வேண்டாம்' எனச் சிணுங்கியபடி இருந்தாள் நைனி.

"விருப்பம் இல்லாட்டி வீட்டை விட்டு இரண்டு பேரும் போகலாம்" கதவைத் திறந்து கத்திவிட்டுப் போனான் காண்டீபன். தொண்டை வெடித்ததில் நைனி பயந்து விட்டாள்.

"நாங்கள் ஏன் வீட்டை விட்டுப் போகவேணும். நான் உங்களைச்சட்ட ரீதியாக திருமணம் செய்திருக்கின்றேன். இந்த வீட்டில் எனக்கும் பங்குண்டு" மதுமதியும் திருப்பிக் கத்தினாள். கொஞ்சம் காட்டமாக அவள் சத்தம் போட, கதவைத் திறந்து மதுமதியின் கன்னத்தில் ஒன்று போட்டான்.

மறுநாள் நைனி பாடசாலை போனதும், எதுவுமே நடக்காதது போலப் பொச்சுப் பொச்சென்று மதுமதியைக் கொஞ்சினான். 'உன்னிலை மதியும் இருக்கு. மதுவும் இருக்கு' என்றான்.

பள்ளிக்கூடத்தில் ரீச்சரிடம் நைனி பிடிபட்டுக் கொண்டாள். பொலிஸ் வீட்டிற்கு வந்து காண்டீபனை எச்சரிக்கை செய்துவிட்டுப் போனது. அதன் பின்னர் சில நாட்கள் காண்டீபனுடன் கதைக்காமல் இருந்தாள் மதுமதி.

தன்வாழ்நாளில் அதிர்ந்து பேசி அறியாத மதுமதியை, எட்டு வருடங்களாக மிருகமாக நடத்தினான். நார் நாராய் அவள் உடலைக் கிழித்துத் தொங்கவிட்டான்.

இரவு எட்டு மணி. வீட்டு வாசலில் நின்று பெல்லை அழுத்தினான் காண்டீபன். சத்தமில்லாது போக, "இந்த நேரத்திலை எங்கை போச்சுது இந்தச்சனியன், பிள்ளையையும் கூட்டிக்கொண்டு" திட்டியவாறே ரெலிபோனில் மதுமதியை அழைத்துப் பார்த்தான். மதுமதியின் ரெலிபோன் செயல் இழந்திருந்தது. தன்னுடைய திறப்பினால் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். படுக்கை அறைக்குள் சென்றபோது கட்டிலில் மதுமதி படுத்திருந்தது கண்டு திகைத்துப் போனான். வந்த வேகத்தில் அவளின் உடலைத் திருப்பி, நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

"யார் நீ? இஞ்சை ஏன்வந்தாய்? திறந்த வீட்டுக்குள்ளை நாய் நுழையிற மாதிரி"

அவளின் பேச்சில் மாறுதல் கண்டு, அவளைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சினான் காண்டீபன்.

"சீ! போ! தள்ளிப் போ மசாஜ் செய்யிற பெட்டை யைப் போய்க் கொஞ்சு."

மதுமதியின் உதட்டில் இருந்து அனல் மூச்சுக் கிளம்பியது. காண்டீபன் ஏதோவெல்லாம் சமாதானங்கள் சொல்லிப் பார்த்தான். எதுவும் எடுபடவில்லை.

"உனக்குக் கலா தான் பொய் பொய்யாய் எல்லாம் சொல்லியிருக்கிறாள். அவளை நம்பாதே! இனிமேல் அவளு டன் நீ கதைக்கக் கூடாது. சொல்லிப்போட்டன். எங்கே நைனி?"

"உன்னோடை ஒரு பெம்பிளப்பிள்ளை வீட்டிலை இருந்து வளர முடியுமா?" சீறினாள் மதுமதி.

நைனியை வீடு முழுவதும் தேடினான். கலாவிற்கு ரெலிபோன் செய்து, நைனி அங்கு வந்திருக்கின்றாளா எனக் கேட்டான். அவள் வரவில்லை என்று சொல்லிவிடவே, குசினிக்குள் அமர்ந்து யோசித்தான். இன்று இவள் என்ன வித்தியாசமாகவே இருக்கின்றாளே? நிஜமாகவே பைத்தியம் பிடித்துவிட்டதா? சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்களே! எப்படிச் சமாதானம் கொள்ளலாம் என்று யோசித்தான்.

தனது உடுப்புகளை மாற்றிவிட்டு, வெறும் சாரத்து டன் படுக்கை அறைக்குள் வந்தான். பளிங்குச்சிலையொன்று,



இரவு உடுப்புகளுடன் கட்டிலில் அவனுக்காகவே காத்திருப்பது போல் உணர்ந்தான். அவளைப் பலாத்காரமாக பின்புறம் அணைத்துக் கொண்டு கட்டிலில் சரிந்தான். மதுமதி சீறிக்கொண்டு கட்டிலில் இருந்து எழுந்தாள். முழுசிப் பார்த்தாள். மொட்டந்தலை பளிச்சிட்டது. அதில் ஒன்றிரண்டு மயிர்கள் நின்று குதித்துக் கூத்தாடின. வயிறு சிறுசிறு மடிப்புகளாகத் தொங்க, நெஞ்செல்லாம் புசுபுசு வென்ற மயிர்க்கற்றைகளுடன் ஒரு பண்டிக்குட்டி போலத் தோன்றினான் காண்டீபன்.

"நான் உன்னைத் தொட்டுத் தாலி கட்டியிருக்கிறன். உன்னாலை ஒண்டுமே என்னைச் செய்ய முடியாது!" சிரித்தான் காண்டீபன்.

மதுமதி கால்களை அகல எட்டி வைத்து வீட்டிற்குள் துள்ளித் துள்ளி நடந்தாள். காளி நடனம் தொடங்கியது. உதட்டிலிருந்து வார்த்தைகள் பிசிறிப் பிசிறி தாறுக்கு மாறாக வந்தன. ஒவ்வொரு நடைக்கும் எதிர்த்தாற்போல் இருந்த குசினிச் சாமான்களைக் கீழே தட்டிவிட்டாள்.

"மதி, நான் சொல்லுறதைக் கேள். ஊரைக் கூட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாரி வைக்காதை. இரவு நேரம் பக்கத்துச் சனங்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பினம்."

மதுமதி அடங்கவில்லை. அவளின் சீற்றம் இயற்கையின் சீற்றத்தைவிட உச்சமாக இருந்தது.

"இவ்வளவு காலமும் ஆர்த்தரிட்டீஸ் எண்டு சொல்லி நடிச்சிருக்கிறாய் நீ. இப்ப நடக்கிறாய் தானே!"

காண்டீபன் கட்டிலின் நுனியில் இருந்து தனது மொபைல்போனை நோண்டத் தொடங்கினான். மதுமதி சுவாமி அறைக்குள் நுழைந்தாள். எல்லாப் படங்களையும் முறைத்து முறைத்துப் பார்த்தாள். எந்தப் பெண் தெய்வத்திற்காவது ஒன்றுக்கு மேற்பட்ட புருஷன்மார்கள் இருக்கினமா? முருகன், கிருஷ்ணர் முதற்கொண்டு எல்லாச் சுவாமிப் படங்களையும் ஓரமாகத் தள்ளிவிட்டு, அம்மனின் படத்தை நடுவில் வைத்தாள். "இனிமேல் இந்த வீட்டிலை எல்லாரும் அம்மனைத்தான் கும்பிட வேண்டும்" பெருங் குரலெடுத்துக் கத்தினாள்.

"உனக்கென்ன பேய் பிடிச்சிட்டுதா?" சுவாமி அறைக்குள் நுழைந்த காண்டீபன் மதுமதியின் கன்னத்தைப் பொத்தி அறைந்தான். அடியின் உக்கிரம் தாங்காமல் மதுமதி பொத்தென தரையில் விழுந்தாள். அவள் மூச்சு கேத்தல் சத்தம் போல் சீறிக் கொண்டிருந்தது.

சற்று நேரம் விழுந்து கிடந்த அவள், எழுந்து ரொயிலற் நோக்கிச் சென்றாள். திரும்பி வந்தபோது, அவள் கையில் ஒரு வாளி தொங்கியது. காண்டீபனின் தலை மேல் அந்த வாளியைக் கவிழ்த்து மூடினாள். நாற்றமடிக்கும் திரவம் அவன் தலைமேல் அருவியாகக் கொட்ட, காண்டீபனின் மூக்கு - கரடியின் மூக்கு போல் சுருங்கி, சிங்கத்தினுடையதைப் போல் விரிந்தது.

"சீச்" என்றபடியே கட்டிலில் இருந்து எழும்பி ஓடத் தொடங்கினான். வாளி பெரும் ஓசையுடன் நிலத்தில் விழுந்து இரவின் அமைதியைக் குலைத்தது. அவனுக்கு அந்த நேரத்தில் எங்கு ஓடுவதென்று பிடிபடவில்லை. துண்டைக் காணோம் துணியைக் காணேம் என வெறும் மேலுடன் வீட்டின் கதவைத் திறந்து வெளியே ஓடத் தொடங்கினான்.

மதுமதி வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தபோது காண்டீபனை அங்கே காணவில்லை. மேசையில் அவனது மொபைல்போனும் திறப்புக்கோர்வையும் இருந்தன. கதவை உட்புறமாக எவரும் திறக்காதபடி தாழிட்டுக் கொண்டாள். வீட்டின் எல்லா விளக்குகளையும் தாராளமா எரியவிட்டாள். இரவு உணவைச்சாப்பிட்டுவிட்டு அன்றைய மருந்துகளைப் போட்டுக் கொண்டாள். உடம்பு விண்விண்ணென்று வலிக்க தொப்பென்று படுக்கையில் விழுந்தாள். ஒரு அடி எடுத்து வைப்பதற்குள் ஓராயிரம் வேதனைகள் கொள்ளும்போது, அவருக்கு உடலின்பம்தேவைப்படுகின்றது!

நேரம் இரவு பதினொன்றைத் தாண்டிவிட்டது. மதுமதிக்கு யாருடனாவது கதைத்தால் ஆறுதலாக இருக்கும் என்று தோன்றியது. கலாவுடன் இனிக் கதைக்க முடியாது. ஜனனிக்கு எடுத்துச் சொன்னால், "இனி என்ன செய்யுறதடி அட்ஜட்ஸ் பண்ணி வாழப் பார்" என்பாள். இன்னமும் திருமணம் செய்யாத அவள், கடந்த ஐந்து வருடங்களாக இதைத்தான் சொல்லி வருகின்றாள்.

இலங்கை நேரத்தைப் பார்த்தாள். மாலை ஏழு மணி.

"எனக்கு என்ரை கணவரைப் பிடிக்கேல்லை. துரத்திப் போட்டன். விவாகரத்து எடுக்கப் போறன்" என்றாள் மதுமதி. மறுமுனையில் சிறிது நேரம் சத்தமில்லை.

"என்ன ஜனனி, நான் சொல்லுறன். நீ பேசாமல் இருக்கின்றாய்?"

ஜனனி தொடர்ந்தும் மௌனமாக இருந்தாள். பிறகு "உம்" கொட்டினாள். எதையோ ஆழமாகச் சிந்தித்தாள்.

"சரி மது. நீ உறுதியா முடிவு எடுத்திட்டியா?"

"அதிலை எந்த மாற்றமும் இல்லை. இனி உவன் எனக்கு வேண்டாம்."

"அப்படியெண்டா, நான் ஒண்டு கேட்பன். முந்திக் கேட்டதுதான். பத்தைக்குள்ளை விழுந்தாயே! ஞாபகம் இருக்கா?"

"நான் கூட அடிக்கடி அதை நினைச்சுப் பாப்பன் ஜனனி. நீ பள்ளிக்கூடச் சீருடை எண்டதையும் பாக்காமல், என்ரை நெத்தியிலை வடிஞ்ச ரத்தத்தை உன்ரை சீருடையாலை துடைச்சு விட்டாயே! அந்தத் தழும்பு கூட இப்பவும் என்ரை நெற்றியிலை இருக்கு"

"அப்ப நீயும் நானும் ஏன் ஒருத்தருக்கொருத்தர் துணையா இருக்கக்கூடாது?"

ஜனனியின் அந்தத் திடீர்க் கேள்வி மதுமதியைத் திக்குமுக்காட வைத்தது. மதுமதி அப்பிடியொரு விடயத்தை இதுவரை நினைத்தே பார்த்ததில்லை.

"எனக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியேல்லை ஜனனி. நான் இப்ப நோய் பிடிச்சு, பட்டுக்கொண்டிருக்கிற ஒரு மரம்"

"ஆருக்குத்தான் இந்த உலகத்திலை வருத்தம் இல்லை."

"இல்லை, நைனியை நினைச்சா"

"அவளுக்கு இப்ப இதைப்பற்றி அறியாத வயசு. தெரிய வாறபோது தெரியட்டும். யோசிச்சுச் சொல்லு."

மதுமதி மௌனமானாள். அதற்கும் மேல் அவர்கள் இருவரினதும் உரையாடல் நகரவில்லை. ரெலிபோனை வைத்துவிட்டார்கள்.

நைனி படுக்கும் இடத்தைத் தடவிப் பார்த்தாள் மதுமதி. இன்று தனிமை. நாளை நைனி வந்துவிடுவாள். நைனி இல்லாதது கூட நல்லதுக்குத்தான். நடந்ததை நேரில் பார்த்திருந்தால், அவள் மனம் ஆண் வர்க்கத்தையே தவறாக எடை போட்டிருக்கக்கூடும். எல்லா ஆண்களும் அப்பிடியில்லைத்தானே! பிஞ்சு மனத்தில் பதியும் எதுவுமே ஆழமானவை. அவளின் வாழ்க்கையாவது நல்லபடியாக இருக்க வேண்டும். அவள் படிக்க வேண்டும். நைனியைப் பற்றிய கனவுகளுடன் மதுமதி உறங்கிவிட்டாள்.

நள்ளிரவில் எழுந்து, கதவை நீக்கி வெளியே எட்டிப் பார்த்தாள். இருளில் பாம்பு ஒன்று வெளியேறிப் போனது போல வீட்டிலிருந்து பிரதான வீதிக்குச் செல்லும் பாதை இருந்தது. ஒழுங்கையும் பிரதானவீதியும் சந்திக்கும் புள்ளியில் புதிதாக ஒரு தெருவிளக்கு அட்டகாசமாக வெளிச்சம் போட்டுக்கொண்டிருந்தது.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-16

குரு சதாசிவம்
(அமெரிக்கா)





# பேசப்படாத மௌனங்கள்

ஒவ்வொரு நாள் காலைகளும் தமிழ்செல்விக்குப் பரபரப்பாகவே விடிவதுண்டு. சனி, ஞாயிறுகளில் இதை இன்னும் அதிகமாகவே அவளால் உணர முடிகிறது.

இன்று சனிக்கிழமையானதால் காலையிலிருந்தே இயந்திரமாய் இயங்கிக்கொண்டிருந்தாள். வயதானதால் கொஞ்சம் இயலுமை குறைந்த தாய், குடும்பக்கஷ்டத்திலும் சுட்டித்தனமும், கெட்டித் தனமுமுடைய மகன் வர்மா. ஐந்து வருஷத்திற்குமுன் விசாரணைக்கெனக் கொண்டு செல்லப்பட்டு இன்றுவரை தேடலுக்குள் இருக்கும் கணவன் வசந்தன் இவர்களுக்காகவே தான் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக உணரும் வேளைகளில் மனதைத் திடப்படுத்திக்கொண்டுதான் அவளால் நகரமுடிகிறது

முதல் நாள் மீதமிருந்த பாணை சிறு துண்டுகளாகச் சீவி, தோசைக்கல்லில் வாட்டி எடுத்துத் தாய்க்கும், வர்மாவுக்கும் கொடுத்தாள். தேனீரையும் தயாரித்து இருவருக்கும் கொடுத்துவிட்டு வேலைக்குப் புறப்படத் தயாரானாள். தாய் பால்தேனீர் என்றால் ஆசையாய்க் குடிப்பாள். வயசு போன நேரத்தில் அவளுக்கு வாய்க்கு ருசியாய்ச் சமைத்துப் போடமுடியாமல் வீட்டுநிலைமை மாறியிருப்பது தமிழ்ச்செல்விக்கு வருத்தமாயிருக்கும். ஒரு 'அங்கர்' வாங்கும் பணத்தில் ஒருவாரத்திற்குத் தேவையான அரிசியோ, மாவோ வாங்கலாம் என்று அவளே தமிழ்ச்செல்வியைக் கட்டிப்போட்டு விட்டிருந்தாள்.

"தம்பி அம்மம்மாவோட சமத்தாய் இருந்து வீட்டுப் பாடங்களைச் செய்யுங்கோ. அவவுக்குக் கரைச்சல் குடுக்கக்கூடாது. அம்மா வேலைக்குப்போட்டுவாறன்" வர்மாவின் தலையைக் கோதிவிட்டு, அவசர, அவசரமாய் வெளிக்கிடத் தொடங்கினாள். வேலைக்குரிய உடுப்புகளை மாற்றிக்கொண்டு கண்ணாடி முன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று தலையை வாரி இறுக்கமாய் ஒரு கொண்டையைப் போட்டுவிட்டு முகத்தை அழுத்தித் துடைத்துவிட்டாள். அவளது சிவந்த நிறமும் 35 வயதில் ஒரு குழந்தைக்குத் தாயாய் இருப்பதில் பொலிந்து கிடக்கும் இயற்கை அழகும் தனது வேலைக்கும், வேலைசெய்யும் இடத்துக்கும் பொருத்தமில்லை என்று அவளுக்குத் தெரியும். அவற்றை மறைப்பதற்கே அவள் வெகு சிரமப்படவேண்டியிருந்தது. எல்லாம் முடித்து, குங்குமத்தைத் தொட்டு நெற்றியிலே வைக்கும்போது வசந்தனின் ஞாபகம் வரக் கண்கள் கொஞ்சம் கலங்கத்தான் செய்தன.

"அம்மா,நான் போட்டுவாறன். இந்த வெயிலுக்குள்ள வெளியில ஒரு இடமும் திரியாதையுங்கோ. இண்டைக்குப் புரட்டாதிச் சனி. நான் மரக்கறி ஏதும் வாங்கிக்கொண்டுவந்து சமைக்கிறன். நீங்கள் ஒண்டும் செய்யவேண்டாம்..."

"உது என்ன மோன,முகமெல்லாம் எண்ணை வடிஞ்ச மாதிரிக்கிடக்கு. பவுடரெண்டாலும் பூசிக்கொண்டு போவன்"



"ஓ,நான் கந்தோருக்குத்தான போறன் அலங்கரிச்சுக் கொண்டுபோக"சொன்னபடியே சைபிக்கிலை உருட்டிக் கொண்டு வெளியே வந்தாள். எட்டு மணிக்கே வெயில் அனலாய்ச் சுட்டது.

நகரப் பகுதியை நோக்கி மூன்று மைல் போனால் தான் வாசுகி ரீச்சர் வீட்டை அடையமுடியும். புரட்டாதிச் சனி விரதம் வாறபடியால் வீடு வடிவாய்க் கழுவவேண்டும் என்று அவள் போன கிழமை சொன்னதும் மனதில் நின்றது. விலத்திப்போகும் நூற்றுக்கணக்கான மோட்டார் சைபிக்கிள்களுக்கு இடையில் விரல்விட்டு எண்ணக்கூடிய சைபிக்கிள்களோடு அவளது சைபிக்கிளும் ஊர்ந்து கொண்டிருந்தது. தன்னோடு ஏ.எல்.இல் படித்த தோழிகள் சிலர் 'ஸ்கூட்டிகளில்' அலுவலகத்திற்குப் போவதை அவள் அவதானித்திருக்கிறாள். அவற்றைத் தவிர்ப்பதற்காகத் தன் பார்வையை அங்கே, இங்கே சிதறவிடாமல் பாதையை மட்டுமே பார்த்துக்கொண்டுபோக இப்போது அவள் பழக்கப்பட்டிருந்தாள்.

தான் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்ற குறிக்கோளை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு உயர்தரம் இறுதிவரை பயணித்த தமிழ்ச்செல்விக்குக் காலம் கைகொடுக்காமல் காலைவாரிவிட்டது. யுத்த மேகங்கள் சூல்கொண்ட வன்னியில் இடப்பெயர்வுகளிலும்,முகாம் வாழ்க்கையிலும் மூன்று வருஷத்தைத் தொலைத்துவிட்டு ஊருக்கு வந்தபோதுதான் அவள் இழந்தவைகளின் தாக்கம் புரிந்தது. யுத்த காலத்தில் மக்களோடு பாடசாலைகளும் இடம்பெயர்ந்ததால் ஏ.எல்.பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாமல் தவறிப்போனது கல்வி மாத்திரமல்ல அவளது 'டொக்ரர்'கனவும்தான்.

குடும்பத்துக்குத் தூணாய் நின்ற தந்தை சண்டையில் தவறிப்போக,தாயும் ஆரோக்கியக் குறைவோடு திரும்பி வந்தது தமிழ்ச்செல்வியின் பொறுப்பை மேலும் அதிகரித்திருந்தது. அடுத்தது என்ன என்று முடிவு செய்யவேண்டிய முக்கிய கட்டத்திலே அவள் நின்றாள். வருமானத்திற்கு ஒரு வழியைத் தேடிக்கொண்டு தாயையும் பராமரித்துக் கொண்டு காலம்விட்ட வழியிலே பயணிப்பதா? அல்லது தொடர்ந்து படித்து தன்னுடைய இலக்கை எட்ட முயல்வதா?

விடையில்லாக் கேள்விகளுக்கு விடைகாண முடியாமல் தடுமாறியபோது அவளுடைய சித்தப்பா வைத்த இன்னொரு தெரிவையும் அவள் பரிசீலிக்க வேண்டியிருந்தது. திருமணம்? இதுவரையிலும் அவள் நினைத்துப் பார்க்காத ஒன்றுக்கு முடிவு சொல்லவேண்டும். திருமணத்திற்குத் தாய் பச்சைக்கொடி காட்டிவிட்டது அவளுக்கு இன்னும் நெருக்கடியாயிருந்தது.

சித்தப்பாவின் முயற்சி, தாயின் இடைவிடாத நச்சரிப்புகள், மற்றும் அவள் நம்பும் உறவுகளின் புத்திமதிகள் எல்லாமாக திருமணம் என்ற பந்தத்திற்குள் வசந்தனையும், தமிழ்ச்செல்வியையும் இணைத்துவிட்டன.

திருமணமாகி ஆறு ஆண்டுகளின் சாட்சியாய் ஐந்து வயதில் ஒரு ஆண் குழந்தையோடும், வயசான தாயோடும், ஏமாற்றம் தராத எதிர்பார்ப்புகளை வளர்த்துக் கொண்டதால் நிம்மதியோடும் தமிழ்ச்செல்வியின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது. சொந்தமாக வாகனத் திருத்தகம் ஒன்றை நடத்திக்கொண்டு அந்த அனுபவத்திலும், அறிமுகத்திலும் வாகன விற்பனைத் தரகு வேலைகள், பழைய வாகனங்களை வாங்கி, மறுசீரமைத்து விற்கும் தொழில் முயற்சிகள் என்று வசந்தனின் பெயர் பிரபலமடையத் தொடங்கிய நேரமது.

முன் நிலவு மறைந்துவிட்ட பின்னிரவு நேரமொன்றில் வலோற்காரமாகத் திறக்கப்பட்ட வாசல் கதவு, தன் வாழ்வுக்கு வேட்டு வைக்குமென்று தமிழ்ச்செல்வி துளியும் எதிர்பார்க்கவில்லை. "வசந்தகுமார்"என்றபடி வீட்டிற்குள் நுழைந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு என்று தங்களைக் கூறிக்கொண்ட சிவில் உடை தரித்தவர்கள் விசாரணைக்கு என வசந்தனை இழுத்துச் சென்றுவிட்டனர். தமிழ்ச்செல்வியும், தாயும் அழுது, ஆர்ப்பாட்டம்பண்ணி எவ்வளவோ போராடியும் அந்த மிருகங்கள் இரையோடு போய்விட்டன. ஆறு வருஷத் திருமண வாழ்க்கை ஐந்து வருஷத் தேடுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று காலங்களும், கையிலிருந்த பணமும் கரைந்துபோக, தினக்கூலி வேஷமே நிரந்தரமென்றாகிவிட்டது. வர்த்தகப் போட்டியில் நடந்த காட்டிக்கொடுப்பு என்ற கதை பரவலாயிருந்தாலும், 'சட்டம் ஏழைகளுக்கானதல்ல' என்பதை வசந்தனைத் தேடித்திரிந்த காலம் அவளுக்குக் கற்பித்து விட்டது.

வர்மா படிக்கும் ஆரம்பப் பாடசாலை அதிபர் வாசுகியுடனான சந்திப்புகளும், தொடர்பாடல்களும் வாழ்க்கையைப் பயத்தோடு பார்த்தவளுக்குப் புதிய தைரியத்தைக் கொடுத்தது. பாடசாலையில் சேர்ப்பதற்கு வர்மாவைப்பற்றிய தகவல்களைக் கொடுக்கும்போது தமிழ்ச்செல்வியின் கையறுநிலையை வாசுகியாலும் உணர முடிந்தது.

தமிழ்ச்செல்வியின் பொறுப்பான பேச்சும், சுய ஒழுக்கம் சார்ந்த அவளுடைய சீரான சிந்தனைகளும் வாசுகிக்கு அவள்மேல் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியது.

தன்னுடைய வேலைப்பழுவோடு மூன்று முழு ஆண்களின் வேலைகளையும் சேர்த்துச் சுமப்பதில் உள்ள கஷ்டம் அவளைப் பார்த்த பின் இன்னும் அதிகரித்து விட்டது போலிருந்தது.

"தனிய கஷ்டப்படாமல் சனி, ஞாயிறுகளிலே யெண்டாலும் ஒரு ஆளை வேலைக்கு வைச்சிரு"என்று மாதவனும் பல தடவை சொல்லிவிட்டார். பொருத்தமான ஒரு ஆளுக்காகக் காத்திருந்தவளுக்கு தமிழ்ச்செல்வியைப் பிடித்துப் போய்விட்டது. அன்றைக்கு இருவருக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு மூன்று ஆண்டுகளாய் வேலைக்காரி என்ற வரையறைகளைக் கடந்து குடும்பத்தில் ஒருவர் என்பதுபோல இன்னும் தொடர்கிறது.

மூன்று வருஷத்திற்கு முன் தமிழ்ச்செல்வி அங்கு வேலைக்குப்போகத் தொடங்கும்போது, வாசுகியின் கணவர் மாதவன் நகரிலுள்ள உயர்தரப் பாடசாலை ஒன்றில் கணித ஆசிரியராக இருந்தார். இரண்டு ஆண் பிள்ளைகளில் ஒருவன் உயர்தரம் முடித்துவிட்டு வீட்டில் இருந்தான். மற்றவன் உயர்தரத்தில் படித்துக்கொண்டிருந்தான். இந்த வயதிலும் வாசுகியும், மாதவனும் செல்லச் சண்டைகள் போட்டுக்கொண்டு சிணுங்கலும், சிரிப்புமாக வாழ்க்கையை அனுபவித்து வாழ்வதைப் பார்க்கும்போது தமிழ்ச்செல்விக்கு வியப்பாக இருக்கும். இதைப்போலவே தனக்கு அமைந்த வாழ்க்கை பலவந்தமாகப் பறிக்கப்பட்டதை நினைக்கும் கணங்களில் மனது உறை நிலைக்குப் போய்த்தான் இயல்புக்குத் திரும்புகிறது.

அவள் வேலைக்குப் போகத் தொடங்கி ஆறு மாதத்திற்குள் பல ஆரோக்கியமான மாற்றங்கள் வாசுகி வீட்டில் நிகழ்ந்துவிட்டன. மாதவன் பணி ஓய்வு பெற்றிருந்தார். வெளிநாட்டுக் கனவில் படிப்பில் கோட்டைவிட்டிருந்த மூத்தவன் கனடாவுக்குப் புலம் பெயர்ந்திருந்தான். மற்றவன் உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு, கணனிப் பயிற்சி நெறி ஒன்றைத் தொடர்வதற்காகக் கொழும்புக்கு மாறியிருந்தான். வாசுகியும், மாதவனும் பிள்ளைகள், கூட இல்லாத கவலை இருந்தாலும், மீண்டும் ஒரு புதிய வாழ்க்கையை அனுபவித்து வாழ்வதைப் பார்க்கும்போது தமிழ்ச்செல்வியின் மனமும் இழந்த ஒன்றுக்காய் ஏங்கும்.

இன்னும் பத்து வருஷத்தில் தனக்கும் ஓய்வு கிடைத்தவுடன், பிள்ளைகளை ஒரு பாதையில் விட்டுவிட்டுத் தாங்கள் வாழப்போகும் இன்னொரு மகிழ்வான தருணத்திற்காக வாசுகி காத்துக்கொண்டிருந்தாள். போன வருஷம் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட அவளின் ஐம்பதாவது பிறந்தநாளில் தோழிகளுடன் அவள் இதைப் பகிர்ந்து கொண்டது தமிழ்ச்செல்வியின் காதுகளிலும் விழுந்தது. வாசுகிக்கும், மாதவனுக்கும் இடையில் வயது வித்தியாசம் சற்று அதிகம் என்பது வாசுகியின் கணிப்பிலும் இருந்தது. ஆனால் பத்து வயது வித்தியாசம் என்பதைக் கொஞ்சம் நெருடலாகவே உணர்ந்தாள். தனக்கும் வசந்தனுக்குமான திருமணப் பேச்சுவார்த்தையில் ஏழு வயது வித்தியாசமே பேசுபொருளானது தமிழ்ச்செல்விக்கு நினைவிலே வந்தது. மாதவன் பணியில் இருந்ததைவிட இப்போது மிகவும் 'பிசி'யாக இருந்தார். அவரின் கணித வகுப்புகளுக்கு மாணவர் மத்தியில் மிகுந்த செல்வாக்கு இருந்தது. பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றும் மணவர்களுக்கான இலவச வகுப்புகள், சில 'ரியூட்டரி'களுடன் ஒப்பந்தங்கள், தனிப்பட்ட வகுப்புகள் என்று காலிலே சில்லைப் பூட்டி ஓடிக்கொண்டிருந்தார். தன்னுடைய உணர்வுகளுக்கும், விருப்பங்களுக்கும் முக்கியம் தராமல், மாணவர்களைத் தலையில் வைத்துக் கொண்டாடுவது வாசுகிக்குப் பிடிக்கவில்லை என்பது தமிழ்ச்செல்விக்கும் தெரிந்தே இருந்தது.

கடந்த ஒருவருஷமாக வாசுகிக்கும், மாதவனுக்கும் இடையில் மௌன யுத்தம் ஒன்று ஓடிக்கொண்டிருப்பதை அவள் கண்டும், காணாததுபோலக் கடந்துகொண்டிருந்தாள். வாசுகி ஒவ்வொரு காரணத்தை வைத்து மாதவனை வார்த்தைகளால் தாக்குவது வழமையான நடைமுறையாய் மாறிவிட்டது. சம்பளக் கணக்குக் கேட்பது, பிந்திவருவதற்கு நேரடியாய்க் கேள்வி கேளாமல் தனக்குள்ளேயே புலம்புவது என்று நாளுக்கு நாள் இருவருக்குள்ளும் இடைவெளி அதிகரிப்பதை வீட்டு வேலைக்காரி என்ற எல்லைக்குள் நின்றே அவளால் பார்க்க முடிந்தது. படுக்கை அறையில் ஒற்றைக்கட்டில் இரண்டானது, சில மாதங்களில் படுக்கை அறையே இரண்டானது எல்லாம் தமிழ்ச்செல்விக்கு மட்டுமே தெரிந்த இரகசியங்கள். இராணுவ இரகசியம் போல் இதை வெளியே கசியாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு விரும்பியோ விரும்பாமலோ அவள் தோளையே அழுத்திக் கொண்டிருந்தது.

........................

தமிழ்ச்செல்வி யோசனைச் சுமைகளோடு வாசுகி வீட்டுக்கு வந்துசேர ஒன்பது மணி ஆகிவிட்டது. வெய்யில் வெக்கையோடு வாகனப் புகைகளின் ஒவ்வாமையும் சேர்ந்து உடம்பு கச, கச என்று இருந்தது. முற்றத்திலிருந்த 'பைப்பைத்'திறந்து குளிர்ந்த நீரில் கை, கால், முகத்தைக் கழுவிவிட்டு மறுபுறம் திரும்பி நின்று முழங்கால்வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனிந்து உடுத்தியிருந்த நீளப் பாவாடையில் முகத்தையும் கைகளை யும் துடைத்துக் கொண்டாள்.

வீடு அமைதியாயிருந்தது. அவள் 'அம்மா'என்று கூப்பிடத் தயாரானபோது "சேர்"என்ற அழைப்போடு இரண்டு மாணவிகள் 'கேற்றைத்'தாண்டி வந்துகொண்டிருந்தனர். அள்ளி முடித்த கொண்டையோடு வாசுகி வெளியே வந்தாள்.

"அவர் இல்லை" முகத்தில் அடித்ததுபோல் கதவை அடித்துச் சாத்திவிட்டு மீண்டும் உள்ளே போய்விட்டாள். மாணவிகள் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டுத் திரும்பி விட்டனர். தான் நிற்பதைக் கண்டும் எதுவும் பேசாமல் அவள் போனது தமிழ்ச்செல்விக்கும் சங்கடமாயிருந்தது. வீட்டைப் பிறகு கழுவலாம் என்று தள்ளிப் போட்டு விட்டு, ஈர்க்குத் தடியை எடுத்து முற்றத்தைக் கூட்டத் தொடங்கினாள்.

"முத்தம் பிறகு கூட்டலாம். முதல் வீட்டைக் கழுவி, சாம்பிராணிபோடு வாசுகி சந்தோஷங்களைத் தொலைத்து நீண்ட நாளாகிவிட்டது என்பது அவளுக்குத் தெரியும். இன்று அது சற்று அதிகமாகவே தெரிந்தது.

"என்னம்மா ஏதும் சுகமில்லையோ"

"எல்லாம் உந்த மனுஷனாலதான். வீட்டில ஒரு மனுஷி இருக்குஅவளுக்கும் ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புகள் இருக்கும் எண்ட எண்ணம் துளிகூட இல்லை. எப்ப பார், பள்ளிக்கூடம், ரியூட்டறி. பள்ளிக் கூடம், ரியூட்டறி. போதாக்குறைக்கு இப்ப பொட்டையள வீட்டை கூப்பிடத் துணிஞ்சிட்டார்" மூக்கைச் சுழித்து உள்ளே இழுத்துக்கொண்டாள். கண்கள்கலங்கியிருந்தன.

ஒரு வேலைக்காரிக்குத் தன் குடும்பப் பிரச்சனையைச் சொல்லுமளவுக்குத் தன்னை அவள் தரம் தாழ்த்திக்கொண்டது தமிழ்ச்செல்விக்கே கஷ்டமாயிருந்தது. மாதவன் மீதான ஒரு சந்தேக பிம்பத்தைக் கட்டமைத்து, அதற்குள்ளேயே மீளமுடியாமல் சிக்கியிருப்பதாகவே அவளுக்குப் பட்டது.

அவற்றோடு, கணவரின் மௌனம், பிள்ளைகளின் பிரிவுகள் ஏற்படுத்திய தனிமை போன்றவை அவளைத் தனியாகப் புலம்பும் நிலையில் கொண்டுவந்து விட்டிருப்பதைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

"அம்மா, இதை ரெண்டுபேருமே கதைச்சுச் சரிக்கட்டிறதுதான் நல்லது. உங்களுக்குக் கிடைச்சிருக்கிற அழகான வாழ்க்கையை அனுபவிச்சு வாழுங்கோ. ஐயா நல்லவரம்மா"

"ஐயா ஊருக்கெல்லாம் நல்லவர்தான். எனக்குத் தான்... உம்? போன வருஷம், அதுக்கு முதல் எல்லாம் புரட்டாதிச் சனிக்கு என்ன சந்தோஷமாய்ப் போவம். முதல் நாளே 'பிளான்'பண்ணி பூசைச்சாமான் எல்லாம் வாங்கி வைச்சு, உடுக்கிற உடுப்பு முதல் பேசித் தீர்மானிச்சுத் தான் காலமை வெளிக்கிடுவம்.

"இண்டைக்கு வெள்ளண எழும்பி, குளிச்சு, வேட்டி எல்லாம் கட்டிக்கொண்டு வந்து, 'கோயிலுக்குப் போறன் வாறதெண்டால் வா'எண்டிறார். நான் இப்ப வேண்டாத ஆளாய் வந்திட்டன். எனக்கு வந்த ஆத்திரத்துக்கு ஏன் காலமை சண்டை பிடிப்பான் எண்டு நான் வரேல்லை எண்டு சொல்லிப்போட்டன். வெளிக்கிட்டுப்போட்டார்". குசினிப் பாத்திரங்களைத் தூக்கிப் போடுவதில் தன் ஆத்திரங்களைக் காட்டிக்கொண்டிருந்தாள்.

வீடு எல்லாம் கழுவி ஒழுங்குபடுத்திச் சாம்பிராணி போட்டுவிட்டு மற்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள் தமிழ்ச்செல்வி.

"தமிழ்ச்செல்வி இஞ்ச வாடி, தேத்தண்ணியைக்குடி" சமையலறை யன்னலுக்குள்ளால் குரல் கொடுத்தாள் வாசுகி. அவள் "டீ"போட்டுப் பேசுவது தமிழ்ச்செல்விக்கு நிறையப் பிடிக்கும். அந்த "டீ"யிலே உள்ளத்தை வருடும் ஒரு அன்பிருக்கும். தனக்குக் கிட்டாத ஒரு அக்காவின் வகிபாகத்தை அந்த "டீ"அவளுக்கு உணர்த்தி நிற்கும்.

தேனீரைக் குடித்தபின் தேனீர்க் கோப்பையைக் கழுவி வைத்துவிட்டு சமையலுக்கு உதவத் தயாரானாள்.

"வேண்டாம், நான் விரதத்திற்குச் சமைக்கிறன்...ஐயோ..."

"என்னம்மா?"

"வங்கிக்குப் போகவேணும். மறந்தே போனன். 12 மணியாச்சு இண்டைக்கு ஒரு மணிக்குப் பூட்டிப் போடுவாங்கள். உனக்குத் தாறதுக்கும் காசு இல்லை."

"இருக்கட்டுமம்மா. நாளைக்குச் சேத்து எடுப்பம்" தனக்கு முக்கிய தேவை இருந்தாலும் அவளை நெருக்க விருப்பமில்லாமல் சொல்லிவைத்தாள்.

"சரி, நான் வங்கிக்கு வெளிக்கிடப்போறன். நீயும் போட்டு நாளைக்கு வா. மிச்ச வேலையளை நாளைக்குச் செய்யலாம்."

தமிழ்ச்செல்வி சயிக்கிலை எடுத்து, புறப்படத் தாயாரானபோது மாதவன் பூக்கூ, பொட்டு, பிரசாதங்களுடன் உள்ளே வந்துகொண்டிருந்தார்.

"என்ன புள்ள வெளிக்கிட்டாச்சோ?"

"ஓம் ஐயா"

"சரியான வெய்யில், கவனமாய்ப் பாத்துப்போ" இந்த மனிதரோட வாழத்தெரியாத வாசுகியை நினைத்தால் அவளுக்குக் கோபம்தான் வந்தது.

"நானும் வங்கிக்குப் போட்டுவாறன்" மாதவனுக்கு அறிவிப்புமட்டும்தான். இப்போதெல்லாம் அவன் அனுமதிக்குக் காத்திருப்பதில்லை வாசுகி.

..........................

"உஸ்ஸ்....என்ன வெய்யில்? மனதுக்குள் சபித்தபடியே கதவைத் திறந்துகொண்டு வீட்டுக்குள் நுழைந்தாள் வாசுகி. வர்மா ஓடிவந்து கட்டிப் பிடித்துக் கொண்டான். அவனைத் தடவி ஒரு முத்தம் கொடுத்துவிட்டுத் தாயின் பக்கம் திரும்பினாள். தாய் கட்டிலில் இன்னமும் சுருண்டு படுத்திருப்பது அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது.

"என்னம்மா படுத்திருக்கிறியள்?"

"என்னவோ ஏலாமல் இருக்கு மோனே."ஒரு பக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிந்து கையை ஊன்றி எழும்ப முயற்சித்தாள்.

"குளிசை எல்லாம் ஒழுங்காய்ப் போடுறியள்தான?"

"குளிசை முடிஞ்சுது. மூண்டு நாள் போடேல்லை. உன்னட்ட காசும் இருக்காது. திங்கள் கிழமை வாங்குவம் எண்டு இருந்திட்டன்."

"என்னம்மா விசர் வேலை பாத்துக்கொண்டிருக் கிறியள். சக்கரை வியாதிக்கு ஒரு நாள் மருந்து எடுக்காமல் விட்டாலே பிரச்சனை எண்டு டொக்ரர் சொல்லியெல்லோ விட்டவர். நீங்கள் மூண்டு நாள் போடாமல் இருந்திருக் கிறியள். ஐயோ, இந்த மனிஷியின்ர வேலை!" அவசர, அவசரமாயு ஒரு தேனீரைப்போட்டு இரண்டு பேருக்கும் கொடுத்தாள். செம்பிலே தண்ணீரை எடுத்து 'மடக், மடக், என்று குடித்துவிட்டு வெளியே வந்தாள்..

"வர்மா, அம்மம்மாவைக் கவனமாய்ப் பாத்துக் கொள்ளுங்கோ. நான் வாசுகி ரீச்சரிட்டைக் காசும் வாங்கிக் கொண்டு, மருந்தும் எடுத்துக்கொண்டு கெதியாய் வாறன்." திரும்பவும் சயிக்கிலை எடுத்துக்கொண்டு தெருவுக்கு வந்தாள். நேரம் ஒன்றரையைத் தாண்டியிருந்தது. தான் போய்ச்சேர இரண்டு மணியாகும் அதற்குள் வாசுகி வந்துவிடுவாள் என்ற நினைப்பில் புறப்பட்டாள்.

அவள் வாசுகி வீட்டுக்கு வந்து சேரும்போது களைத்துச் சோர்ந்துபோய்விட்டாள். வீடு அமைதியாய் இருந்தது. கணவன் மனைவிக்குள் பேச்சுவார்த்தையோ, தேடல்களோ, தொடுதல்களோ இல்லாமல் வீடு எப்படி ஆரவாரமாய் இருக்கும்? மனதுக்குள் அங்கலாய்த்துக் கொண்டாள்.

"அம்மா" தொண்டை காய்ந்து குரல் கரகரப்பாய் வந்தது. மாதவன்தான் வெளியே வந்தார்.

"எடி ஆத்தை நீ இன்னும் போகேல்லையா?"

"போட்டுத்தான் ஐயா வாறன். அம்மா இன்னும் வரேல்லையா?"

"வரேல்லைப்போலயிருக்கு. ஏன் ஏதும் அவசரமோ?

"இல்லை ஐயா. என்ர அம்மாவுக்குக் கொஞ்சம் ஏலாமல் இருக்கு. மருந்து எடுக்கவேணும். அதுதான்...."

"ஏன் அவ காசு தரேல்லையோ?"

"வங்கியில எடுக்கவேணும். நாளைக்குத் தரலாம் எண்டு சொன்னவா. நானும் ஓமெண்டுதான் போனனான். இப்ப அம்மாவுக்கு அவசரமாய் மருந்து எடுக்கவேணும்...." இழுத்தாள்.

"ஏன் அப்பிடி என்ன திடீர் வருத்தம்"

"அவவுக்கு 'டயவிற்றீஸ்' இருக்கு, ஒவ்வொரு நாளும் குளிசை போடவேணும். குளிசை முடிஞ்சுதாம். எனக்குச் சொல்லவும் இல்லை. மூண்டு நாளாய் குளிசை போடாமல் இருந்திருக்கிறா."

"அடக் கடவுளே, ஊம்.... உவ எப்ப வாறாஎண்டு தெரியாது?. அது மட்டும் நிக்கப்போறியே?" தலையைச் சொறிந்தபடி உள்ளே போன மாதவன் ஐயாயிரம் ரூபா தாளோடு திரும்பி வந்தார்.

"என்னட்டையும் காசு இல்லை. ரியூட்டறிக் காசுதான் கிடந்தது. நாளைக்கு மிச்சக்காசை அவவிட்டைக் குடுத்துக் கணக்கைப் பாத்துக்கொள்.. மினைக்கடாமல் போய் அம்மான்ர வேலையைக் கவனி."

கை கூப்பி நன்றி சொன்னாள். அவரைத் திருநீறு, சந்தணத்தோடு பார்க்கும்போது. அவளுக்கு அதைத்தான் செய்யத் தோன்றியது.

சயிக்கிலை எடுத்துக்கொண்டு வெளியே வந்து 'கேற்றைச்'சாத்திக் கொளுவி விட்டுத் திரும்பினாள். வேகத்தைக் குறைத்தபடி வந்த மோட்டார் சயிக்கில் அவளருகே நின்றது. அது வாசுகி!'

"அம்மா"அவளைப் பார்த்த மகிழ்ச்சியில் உடற் களைப்பையும் தாண்டி முகத்தில் மகிழ்ச்சிக் கோலங்கள் இளையோடியது.

"நீயெல்லோடி போனனி, பிறகு எங்க நிண்டு மிலாந்திப் போட்டுத் திரும்பி வந்தனி?"இந்த "டீ"யை வாசுகியிடமிருந்து அவள் ஒருபோதும் கேட்டதில்லை. அவள் முகமே மாறிக் கிடந்தது. பேசும் தொனிகூட எதிரியை நோக்கி விஷத்தை வீசுவதுபோலிருந்தது.

"அம்மாவுக்கு சுகமில்லை....."

"அதுக்கு ஆஸ்பத்திரிக்கெல்லோ போகவேணும். இஞ்ச ஏன் வந்தனி?"

"..................."

"உது என்ன கையுக்குள்ள"? தமிழ்ச்செல்வியின் விரித்த கையுக்குள் வியர்வை நனைத்த ஐயாயிரம் ரூபா தாள். மாதவன் மீதுள்ள வெறுப்பு சந்தேகமாய் மாறி தன்மீது திரும்பியிருப்பதை உணர்ந்த அவள் அதிர்ச்சியில் உறைந்து போனாள்.

"கர்ணப் பிரபு தந்தவரோ? அங்க, இஞ்ச எண்டு, இப்ப வீடுவரைக்கும்...."

"மேடம்"சத்தமாய்க் கத்தியபடி கையுக்குள் கிடந்த ரூபா நோட்டைக் கசக்கி வாசுகியின் முகத்தை நோக்கி வீசினாள். காற்றிலே பறந்த ஈரத் தாள் புளுதியோடு குழைந்து நிறம் மாறிக்கொண்டிருந்தது.

"இவ்வளவு நேரமும் இந்த வீட்டு வேலைக்காரி எண்ட எல்லேக்குள்ள நிண்டுதான் கதைச்சனான். இந்த நிமிஷத்திலயிருந்து நான் வெளியில வந்திட்டன். எனக்கும் தன்மானம் இருக்கு. ஆனபடியால் யோசிச்சுக் கதையுங்கோ" புதியதொரு தமிழ்ச்செல்வியைக் கண்டதும் வாசுகி அடங்கிப் போனாள்.

"தெருவில நிண்டு கதைக்க வேண்டாம். உந்தக் காசை எடுத்துக்கொண்டு உள்ள வா"அவள் முன்னே போக, தமிழ்செல்வி காசைக் குனிந்து எடுத்து அவளின் கைக்குள் ளேயே திணித்துவிட்டாள்..

"எனக்குத் தருமதியான காசைத் தாருங்கோ. இந்தப் படலையைக் கடைசியாய்ச் சாத்திப்போட்டு நான் போயிடுறன்." அவள் பேசிய துணிச்சலும், தெளிவும்

"அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி விட் டோமோ?"என்ற குற்ற உணர்வை வாசுகிக்கு ஏற்படுத்தியது. அவள் விறு, விறு என்று நடந்துபோய் கதவைத் திறந்தபடியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் கொடுத்தாள். பின் விறந்தையில் மணவர்களின் விடைத்தாள்களோடு போராடிக்கொண்டிருந்த மாதவன் நாலுமுழத்தை இறுக்கி இடுப்பிலே சொருகியாறு வந்தார். "உவள் தமிழ்ச்செல்வி வந்தவள். தாய்க்கு ஏதோ சுகமில்லை யாம், மருந்து எடுக்கக் காசு தேவை எண்டு அவசரப்பட்டாள். உன்னையும் காணேல்ல என்னட்ட மாத்தின காசும் இல்லை. ஐயாயிரம் ரூபா தாள்தான் கிடந்துது. குடுத்தனான். மிச்சக் காசு காலமை தருவாள். மறக்காமல் கேட்டு வாங்கிப் போடு." மாதவன் திரும்பிப் போய் விடைத் தாள்களுக்குள் மறைந்து போனார்.

வாசுகி அந்த இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருந்தாள். மதியம் கோவிலில் இருந்து வரும்போது அவர் தரித்திருந்த திருநீற்றுக் குறிகளும், சந்தணப்பொட்டும் காய்ந்து இன்னும் துலக்கமாய்க் கண்களுக்குள்ளே தனியாய் ஒளிர்ந்துகொண்டிருந்தன. தனது மனதில் பதிந்துபோன எண்ணங்களுக்கும், அவரின் தோற்றத்திற்கும் உள்ள முரண்பாடு சிந்திக்க வைத்தது. 27 வருஷத் திருமண வாழ்க் கைக்குள் மூழ்கி, தனது எண்ணங்களுக்கு வலுச் சேர்க்கக் கூழாங்கற்களைத் தேட முயன்றாள். முத்துக்களே சிக்கிக் கொண்டிருந்தன.

உடலால் பிணைந்து, உயிரை உருக்கி, உடலுட் கலந்து, விடியலை நெருங்கிய சாமங்கள் எத்தனை?வியர்வை ஊற்றில் நெற்றிக் குங்குமம் கரைத்து, முகங்களில் பிரட்டி, உடைகளில் துடைத்த இரவுகள்தான் எத்தனை? மீண்டும் கண்களுக்குள் ஓவியமானது மாதவனின் பூச்சும், பொட்டும். நிராயுதபாணியோடு ஆயுதயுத்தம் நடத்திய வெற்றிக் களிப்பில், தண்ணீர் தெளித்த மாலைநேரக் கீரைப்பிடி போல வியர்வைக்குள் துவண்டு கிடக்கும் இவன் 'கூடி, பின் எழுந்து'எப்படி இவ்வளவு தெம்போடு? சந்தணச் சிதைவுக ளின்றி, திருநீற்றுக் குறிகளில் சேதாரமின்றி ! குற்ற உணர்வு நெஞ்சைப் பிழிய திரும்பி வந்து தமிழ்ச்செல்வியின் கையை இறகப் பற்றிக்கொண்டாள்.

"தமிழ்ச்செல்வி, எங்கயோ தவறு நடந்திட்டுது." பிடியை இன்னும் இறுக்கினாள்

"தவறு எங்கயும் நடக்கேல்ல. உங்கட மனதிலையும் பார்வையிலையும்தான் தவறு. நான் ஒரு கேள்வி கேக்கட்டா?"

"ம்..."

"உங்கட திருமணம் காதல் திருமணம்தான?"

"ஏன் அப்பிடிக் கேக்கிறாய்?"

"பெற்றோர் பாத்துச் செய்யிற திருமணம் எண்டால் பத்து வயது அதிகம் எண்ட காரணமே போதும் நிராகரிக் கிறதுக்கு. வயது வித்தியாசமுள்ள பல தம்பதிகள் சந்தோஷ மாக வாழுகினம்தான். வித்தியாசத்தின் பின் விளைவுகள் எப்படி இருக்குமென்ற தெளிவு அவர்களுக்கு இருந்ததால் அங்கே சந்தேகம். புகுந்து விளையாட இடமில்லாமல் போய்விட்டது."

"நீங்கள் ஏ.எல். 'பாஸ்' பண்ணினதால அங்க நிக்கி றியள். நான் ஏ.எல். விஞ்ஞானம் படிச்சும் யுத்த சூழலுக்குள்ள பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாமல் கோட்டை விட்டிட்டு இஞ்ச நிக்கிறன்." கலங்கிய கண்களை ஒருமுறை துடைத்துக்கொண்டாள்.

"என்னடி சொல்லிறாய்?. அப்ப ஏன்ரி இந்தக் கோலம் உனக்கு"?

"அம்மா, உங்கட தொழிலுக்குப் பொருத்தமாய் உங்களின் அழகைப் பேண நீங்கள் எடுக்கிற நேரத்தைவிட, என்ர வேலைக்குத் தக்கமாதிரி என்னை மாற்றிக்கொள்ள, கூட நேரம் நான் எடுக்கிறன்."

"நான் என்ர கருத்தைச் சொன்னால் கேப்பியளா?" வழமையான அப்பாவித்தனத்துடன் கேட்டாள் தமிழ்ச்செல்வி.

"சொல்லு". வாசுகிக்குக் குரலே தட்டுத்தடுமாறி வந்தது. "மனிதருக்கு 50 வயது கடந்தாலே கண், காது, பற்கள் என்று முக்கிய உறுப்புகள் மெல்ல, மெல்ல செயலிழக்கத் துவங்கும். இதுகளுக்கு இப்போ மாற்று வழிகள் இருக்கு. இன்னும் வயது 60, 70 எண்டு ஏறேக்க கை, கால்கள் போன்ற அவயவங்களும் எங்கள் விருப்பத்துக்கு ஒத்துழைக்க மறுக்கும். பாலியல் சார்ந்த உறுப்புகளும் இதற்கு உட்பட்ட வைதான். புரிஞ்சுகொள்ளுங்கோ.

"கணவன்மார் மனைவிகளிடம் தோற்றுப் போவ தைக் கௌரவக் குறைவாக நினைப்பதால் போட்டியி லிருந்தல்ல மைதானத்தை விட்டே ஒதுங்க நினைக் கிறார்கள். இதுதான் உங்கட பிரச்சனையும் எண்டு நான் நம்பிறன். வெறும் சந்தேகத்தால கடவுள் தந்த அழகான வாழ்க்கையைச் சீரழிச்சுப்போடாதயுங்கோ. மனம்விட்டுப் பேசுங்கோ. எல்லாம் சரியாகும்.

தமிழ்ச்செல்வி போவதற்குத் தயாரானள்.

"இதைக் கொண்டுபோடி" அந்த ஐயாயிரம் ரூபாவை அவளின் கைக்குள் திணித்தாள். தமிழ்ச்செல்வியின் மனதில் 'ஐயாயிரம் ரூபா தாள்' அருவருப்பின் அடையாளமாய் மாறிக்கிடந்தது. மறுத்துவிட்டு தனக்குத் தருமதியான ஆயிரம் ரூபாவை மட்டும் வாங்கிக்கொண்டாள்.

"தமிழ்ச்செல்வி"

"சொல்லுங்கோ"

"நாளைக்கு வருவியாடி" கெஞ்சும் குரல் ஈனமாய் ஒலித்தது.

"............"

மறுப்பின் அடையாளமாய்த் தலையை இடம் வலமாக, மிக மெதுவாக அசைத்தாள்.

"ஏன் கோவமா"?

"கஷ்டமாயிருக்கு" உதடுகள் துடித்தன. ஆயிரக் கணக்கான மாணவர்களைப்போல மாதவன் சேர் மேல எனக்குப் பக்திதான் இருக்கு. அவரை அடையோணும் எண்டு நினைக்கிற அளவுக்கு நான் ஒண்டும் ஆண்டாள் நாச்சியார் கிடையாது. பொலு, பொலு என்று உதிர்ந்த கண்ணீரைத் துடைத்தபடி சைக்கிளை நோக்கி நடந்துகொண்டிருந்தாள் தமிழ்ச்செல்வி.

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-17

உரும்பிராய்
எம்.ரி.செல்வராஜா





# ஏன் சிரித்தாய் என்னைப் பார்த்து

இலண்டனில் சனிக்கிழமைகளில் நடக்கும் தமிழ்ப் பாடசாலை ஒன்றில்தான் நான் அப்போது க.பொ.த உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். ஆண்கள் மூவர், பெண்கள் இருவர். ஆண்களும் பெண்களும் வகுப்பில் படிக்கும்போது எதிரெதிரே அமர்ந்துகொண்டாலும், அவர்களின் முகத்தைப் பார்ப்பது குறைவு. ஆசிரியர் தமிழ் இலக்கியங்களிலிருந்து பாடம் சொல்லித்தரும்போது அவற்றில் வரும் கதைகளில் உள்ள கதாபாத்திரமாக நான் என்னைக் கற்பனை செய்து கொள்வேன். ஆனந்தமாக இருக்கும். ஆனால் அதில் வரும் கதாநாயகிகளை யாருடனும் ஒப்பிட்டுக் கற்பனை செய்து பார்த்ததில்லை.

ஒருநாள் அந்த வகுப்பறையின் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பன்றி ஒன்றினுடைய புகைப்படம் என் கண்ணில் பட்டது. செம்பவள நிறம், வெகுண்ட விழிகள், ஒரு வெற்றிலையைக் கவிழ்த்து வைத்தது போன்ற காதுகள், சப்பையான அகன்ற மூக்கு, அதில் அதன் கண்களைவிடச் சிறிதான துவாரங்கள், அதன் கீழ் இறுக மூடியவாய். எங்கோ ஒரு பண்ணையில் அந்தப்படம் எடுத்ததாக அதன் கீழ் எழுதப்பட்டிருந்தது.

இன்னும் பாடம் ஆரம்பமாவதற்கான மணி ஒலிக்கவில்லை. அங்கே நான் மட்டும்தான் நின்றிருந்தேன். அந்தப் படத்தைப் பார்த்துக்கொண்டு, பன்றியாக இருந்தா லும் அதன் அழகிலே மயங்கிச் சில விநாடிகள் அப்படியே அசையாது நின்றுவிட்டேன். திடீரென அந்த அறைக் கதவைத் திறந்துகொண்டு நுழைந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மாணவி அபிராமி. ஆமாம் அந்த மாணவியின் பெயர் அபிராமி. மற்றைய மாணவியின் பெயர் நந்தனா. எல்லோரும் அபி என்றுதான் அவளை அழைப்போம். அவள் வீட்டில் அவளை அப்படித்தான் எல்லோரும் அழைப்பார்களாம்.

"என்ன பார்த்திபன், பன்றியின்மேல் பரிதாபமா? அல்லது காதலா?" என்றாள். நான் திடுக்குற்றேன்.

"ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள்? "

"பண்ணையில் எடுத்த படம். பல மாதங்களாகி விட்டன. இப்போதும் இந்தப் பன்றி அங்கேதான் இருக் கின்றதோ? அல்லது மண்ணோடு மண்ணாகிப் போய் விட்டதோ யாரறிவார்?" என்றாள்.

அருமையாகவே எம்முடன் பேசும் அபிராமி அப்படித் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தது எனக்கு ஆச்சரியமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது. அதைக் கேட்டுக்கொண்டே நின்றேன். அவளின் கேள்விகளுக்கு என்னால் பதில் கூறமுடியவில்லை.

"ஆசையோடு வளர்ப்பார்கள், அன்போடு தழுவு வார்கள், தினமும் கட்டி அணைத்து முத்தமும் கொடுப் பார்கள் ஆனால் ஒரு வயது வந்ததும் அதனைக் கொன்று தின்றுவிடுவார்கள். மனிதர்கள் சுயநலம் மிக்கவர்கள்" என்றும் ஒரு தத்துவஞானிபோல் கூறினாள்.

நான் எதுவும் பேசவில்லை. காரணம் வகுப்பு ஆசிரியரும் ஏனைய மாணவர்களும் அங்கே வந்துவிட்டனர். ஆசிரியர் வந்ததும் அன்று பாடத்திட்டத்திலிருந்து ஒரு நாடகப் பகுதியை எடுத்து எங்களை வாசிக்கச் சொன்னார். நாடகத்தை விளங்கிக்கொள்வதோடு வாசிப்பினையும் விருத்தி செய்து கொள்ளலாம் என்பதுதான் அதன் நோக்கம்.

அந்த நாடகத்தின் கதாபாத்திரம் எனக்குத் தரப் பட்டது. கோபுவுக்கு எனது நண்பன் பாத்திரமும் கதாநாயகிப் பாத்திரம் அபிக்கும் கொடுக்கப்பட்டது. இரு காதலரகள் பேசும் வசனங்கள். அபி இடையிடையே சிறிது நாணிக் குறுகியபடியேதான் அவற்றை வாசித்தாள். ஆனால் நான் மிகவும் உற்சாகமாகவே வாசித்தேன். வாசித்து முடிந்ததும் என்னையும் கோபுவையும் ஒரு மாதிரியாகப் பார்த்துச் சிரித்தாள். என்நெஞ்சிற்குள் பனிக்கட்டி உறைவதைப்போல் இருந்தது.

அபி என்னைவிட இரண்டு வயது மூத்தவள். நாம் எல்லோரும் ஒருவரையொருவர் பெயர் சொல்லித்தான் அழைப்போம். காதல் வயதைப் பார்ப்பதில்லை என்று படித்திருக்கின்றேன். அவை உண்மையா? அல்லது போலியா? என் மனம் எங்கோ பறந்தது.

அபி என்னைப் பார்த்துச் சிரித்த நாள் தொடக்கம் எனக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டது. முன்பு இருந்ததைவிட இப்போது என்னை நான் எவ்வளவோ திருத்திக்கொண்டேன். தாயகத்திலிருந்து இலண்டனுக்கு வந்து ஓரிரு வருடங்கள் கூட ஆகவில்லை. என் வயதினை ஒத்தவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது என்னிடம் போதியளவு பணமும் இல்லை.

அதிகமாக இவ்வளவு நாளும் நான் வாடகைக்கு இருந்த வீட்டிலிருந்த ஒரு நண்பன் தந்த அவனது அளவில்லாத உடுப்புக்களைப் போட்டுக்கொண்டு பாட சாலைக்குச்சென்ற நான், நண்பர்களிடம் கடனாகப் பணம் வாங்கிப் புதிய உடுப்புக்கள் வாங்கினேன். அங்கும் இங்கு மாகத் தலையைப் பறக்கவிட்டுச் சென்ற நான் அழகாகத் தலையைச் சீவி விட்டுக்கொண்டு செல்ல ஆரம்பித்தேன். அடுத்த சனிக்கிழமை எப்போது வரும் என்று காத்திருந்து நான் அதிகவிலை கொடுத்து வாங்கிய C.K வாசனை பறக்கும் தலைமயிரை அழுத்திப் பிடிக்கும் "ஜெல்" எல்லாவற்றையும் போட்டுக்கொண்டு பாடசாலைக்குச் சென்றேன். ஆனால் அன்று அந்தப் பெண் அபி வரவில்லை. ஏனென்று எனக்குத் தெரியவில்லை.

அவளின் நினைவிலேயே இருந்த எனக்கு அன்றைய பாடத்தில் அக்கறையுமிருக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் அருகேயிருந்த மாணவ நண்பன் கோபு அடிக்கடி திரும்பித் திரும்பி என்னைப் பார்த்து நான் உடலில் அடித்துச் சென்ற வாசனைமிக்க பொருள் தன் மூக்கை நாசமாக்குகின்றது என்ற கூறியதைக் கேட்டவுடன் அவன் கன்னத்தில் ஓங்கி அறைய வேண்டும் போலிருந்தது. ஒன்றுமே பேசாது பற்களை இறுகக் கடித்துக்கொண்டே இருந்தேன். அந்தப் படத்தில் இருந்த பன்றியையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தேன். பன்றியினுடைய மூக்கைவிட அவனுடைய வாய் பெரிதாக இருப்பதாகவே எனக்குப்பட்டது.

எழுந்து அபிராமி இருந்த இடத்திலே போய் இருந்தேன். அப்போது மற்ற நண்பன் சிவலிங்கம் "பாடம் படிக்கும்போது இடைக்கிடையே இரகசியமாக அபிராமியைத் திரும்பிப் பார்க்கும்போது கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். ஆனால் அவளிடத்தில் நீ இருப்பதைப் பார்க்கும் போது இரண்டு நாளைக்கு சாப்பாடு உள்ளே இறங்காது போல் இருக்கின்றது" என்று இரகசியமாகக் கூறினான். நான் எதுவும் பேசவில்லை. இரண்டு பேருடைய சேட்டுக்குள்ளும் கட்டெறும்புகளைப் பிடித்து விடவேண்டும்போல் இருந்தது.

அடுத்த கிழமை அபி வகுப்பிற்கு வந்தாள். என்னை நிமிர்ந்து ஒரு முறைகூடப் பார்க்கவில்லை. ஆனால் நான் அடிக்கொரு தடவை அவளை நிமிர்ந்து பார்த்துக்கொண்டே இருந்தேன். அவள் ஒருமுறை என்னைப் பார்த்துவிட்டாலே எனக்கு அன்று முழுதும் ஒரே குதூகலமாக இருக்கும். அதிலும் ஒருமுறை என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டால் கலியாணவீட்டில் பத்துக் கறிகளோடு சாப்பிட்டதுபோல் இருக்கும். நான் என்னையும் மீறி அபியைப் பார்த்ததைக் கவனித்த ஆசிரியர் என்னைப்பார்த்து

"பார்த்திபன் ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு" என்பதன் பொருள் என்ன? என்று என்னைக் கேட்டார்.

எமது தமிழ் ஆசிரியர் எப்போதும் சிறிது நகைச் சுவையாகத்தான் பேசுவார். அப்படிச் சொல்லித் தருபவை தான் அதிகமாக என் மனதிலும் ஆழமாக பதிந்து நின்றன. ஆசிரியர் கூறியதைக் கேட்டு நான் திடுக்குற்றேன்.

ஒருவாறு சமாளித்துக் கொண்டு "நாம் என்ன செய்தாலும் கருமத்தில் கண்ணாக இருக்கவேண்டும்" என்று பதிலளித்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே கோபு "ஆசைவெட்கம் அறியாது" என்பதன் பொருள் என்ன சார்? என்று வேண்டுமென்றே கேட்டான். ஆசிரியர் பதில் கூறியதும் அவன் எனக்காத்தான் அப்படிக் கேட்டான் என்பது எனக்கு விளங்கிவிட்டது.

உடனே நான் "ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்" என்றால் என்ன பொருள் என்று கேட்டேன்.

நான் கேட்டதிற்கு ஒரு காரணம் இருக்கின்றது. முன்பு ஒருமுறை கோபு அபிராமியின் அழகில் மயங்கி "எனக்கு உன்னில் விருப்பம் என்று" கூறினான் என்றும் அதற்கு அபிராமி "எனக்கு உங்களில் விருப்பம் இல்லை" என்று திருப்பிக் கூறினாள் என்றும் யாரோ சொல்லக் கேட்டது எனக்கு திடீரென்று ஞாபகத்திற்கு வந்தது. அபிக்கு இப்போது என்மேல்தான் விருப்பம் என்று என் மனத்தில் நான் ஒரு கற்பனையை வளர்த்துக் கொண்டதனாலேயே அப்படிக் கூறினேன்.

கோபு என்னை ஒருமாதிரிப் பார்த்தான். எனக்கு அபிமேல் ஒரு கண் இருக்கிறது என்பது அவனுக்கும் தெரியும். உடனே திரும்பவும் ஆசிரியரைப் பார்த்து

"ஆழமறியாது காலை விடக்கூடாது" என்பதன் பொருள் என்னசார் என்றான்.

அபிராமி கொல் என்று சிரித்தாள். ஆனால் அவள் ஏன் அப்படிச் சிரித்தாள் என்று எனக்கு விளங்கவில்லை. அன்று மகாபாரதத்திலே பாஞ்சாலி ஒருமுறை சிரித்தது தானே துரியோதனனுக்குக் கோபம். அந்தக் கோபம் இறுதிவரை அவனுக்குள் மாறாதிருந்தது. அதனால்தான் பாரதப்போர் மூண்டது என்று எங்கோ படித்ததாக ஞாபகம். இன்று இவள் சிரித்ததினால் இங்கும் ஏதாவது யுத்தம் நிகழப்போகின்றதோ என்றும் எண்ணினேன். அதற்குள் வகுப்பு முடிந்துவிட்டது.

தமிழ்ப்பாடசாலை பரீட்சையும் வந்தது. எல்லோரும் நன்றாகச் செய்ததாகவே கூறினார்கள். தமிழ் உயர் தரத்திற்குமேல் அங்கே வகுப்புகள் இருக்கவில்லை. பரீட்சையில் சித்தி என்றால் அதன்பிறகு அபி தமிழ்ப் பாடசாலைக்கு வரமாட்டாள். ஆனால் அவளையே இரவும் பகலும் நினைத்துக் கொண்டிருந்ததினால் என்னால் சோதனையை நன்றாகச் செய்ய முடியவில்லை. நான் திரும்பவும் அந்தப் பாடசாலைக்குச் செல்ல வேண்டியே வரும் என்றே என்மனம் கூறியது. பரீட்சை முடிவுகள் வருவதற்கு சில வாரங்களின் முன் அபியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

"தாயக விடுதலைப் போராட்டங்களால் அங்கு மிங்கும் அலைந்து திரிந்த உங்களுக்குப் பாடசாலையில் ஒழுங்காகப் படிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்திராது என்பது எனக்குத் தெரியும். என்னைப்போல் இளம் பெண்களோடு பழக பேச சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்காது என்பதும் எனக்குத்தெரியும். அதற்காக ஒரு பெண் சிரித்து விட்டால் அவளை உங்கள் காதலியாக எண்ணிவிடக்கூடாது. உங்களை நான் எனது உடன்பிறவாத தம்பி என்றே எப்போதும் எண்ணி வந்திருக்கின்றேன்.

நான் உங்களில் யாரையும் குறைசொல்லவில்லை. நீங்களும் கோபுவும் இருந்தால் எமது தமிழ் வகுப்பு எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் குத்தலாகச் சொல்லும் பழமொழிகளும் அதன் கருத்துக்களும் என்னைச் சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்தன. அந்த சில நாட்கள் என்மனதில் எப்போதும் பசுமையாகவே இருக்கின்றன. தாயகத்தில் எம்போன்ற இளைஞர்களில் சிலர் இழந்துவிட்ட பாடசாலை வாழ்க்கையை இங்கு நிவிர்த்தி செய்வதற்காகவும் எம்மினிய தமிழ்மொழியையும் கலைகளையும் எமது வருங்காலச் சந்ததிக்கு கற்பிப்பதற்காகவும் பலர் பலவழிகளில் முயற்சிக்கின்றார்கள். அங்கு செல்கின்ற நாம் அப்பாடசாலைகளுக்கு நல்ல பெயரையே பெற்றுத்தரவேண்டும்

இறுதியாக ஓர் இனிய செய்தி எனக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டது. எனக்கு மனதிற்குப் பிடித்த ஒருவரை நான் திருமணம் செய்ய இருக்கின்றேன். நானும் அவரும் மேற்படிப்பிற்காக சர்வகலாசாலை செல்லவுள்ளோம். எமது படிப்புக்களை முடித்த பின்னரே நாம் திருமணம் செய்வதென்றும் தீர்மானித்துள்ளோம். அப்போது உங்களுக்கு நிச்சயம் அழைப்பிதழ் அனுப்புவோம் நீங்கள் எமது திருமணத்திற்கு வரவேண்டும்.

பெரியதொரு விடயத்தை எவ்வளவு சாதாரணமாகச் சொல்லிவிட்டாள். எனக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. ஆச்சரியமாகவும் இருந்தது. கடிதத்தைப் படித்து முடிக்க முன் என்மனம் எமது தமிழ் வகுப்பில் நிகழ்ந்தவற்றை மீண்டும் இரைபோட்டது. இனிமையாகவும் அதே வேளையில் சிறிது ஏமாற்றமாகவும் இருந்தது. எவ்வளவு நேரம் அப்படி இருந்தேனோ தெரியாது.

திரும்பவும் அபியினுடைய கடிதத்தில் என் கவனம் சென்றது. பின் குறிப்பு என்று குறிப்பிட்டு "எனது வருங்காலக் கணவன் வேறு யாருமல்ல உங்களுக்கெல்லாம் தெரிந்த கோபுதான்" என்று ஒரு பெரிய அணுக்குண்டையே தூக்கிப்போட்டாள். "அவர் எனது சொந்த மைத்துனர்தான் ஆனால் அதனை யாருக்கும் நாம் கூறவில்லை. பெற்றோர் உற்றாரை இழந்து தனியே இருக்கும் எனக்குத் துணையாக இருப்பதற்காகவேதான் அவர் என்னுடன் தமிழ் வகுப்பிற்கும் வந்தார். இது முன்னரே உங்களுக்குத் தெரிந்திருந்தால் உங்களின் மனதில் இந்தச் சபலம் ஏற்பட்டிருக்காது. இதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்" என்றும் குறிப்பிட்டிருந்தாள்.

இறுதியாக எனக்குத் தெரிந்த பழமொழிகள் சிலவற்றை உங்களுக்காகக் கூறவிரும்புகின்றேன். "முதல் கோணல் முற்றும் கோணல்" என்று நினைக்க வேண்டாம். "தோல்விதான் வெற்றிக்கு அறிகுறி" என்று செயற்படவும். "முயற்சி திருவினையாக்கும்" என்பதே என் நம்பிக்கை என்று தன் கடிதத்தை முடித்திருந்தாள்.

❊ ❊ ❊

> தன்னுள் ஆழ்தல் என்பதைவிடவும் சமூக அக்கறை உன்னதமானது. இரண்டிலுமே கவிதை வேண்டும். எனினும் சமூக அக்கறை வாய்மொழி மரபை மீறாது. நாம் நம் மரபுகளில் தங்கியிருக்கிறோம்
>
> **- தேவகாந்தன்-**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-18

ந. ஜெயரூபலிங்கம்





# எல்லாம் உனக்காக...

கண்ணாடி முன்னால் நின்று காதோரமாக நின்ற ஒற்றை இளநரை முடியினை உள்ளே தள்ளி மறைத்தாள் நிர்மலா. அதனைப் பிடுங்கி விடத்தான் அவளுக்கு விருப்பம். அப்படிப் பிடுங்கினால் இன்னும் பல நரை மயிர்கள் வருமாம் என்று அம்மா சொன்னாள். அது எந்த வித ஆதாரமுமில்லாத ஒரு மூட நம்பிக்கை என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும் ஒரே ஒரு முடிதானே மறைத்து விடுவது ஒன்றும் சிரமமில்லை என்று அவள் இதுவரை அதில் கை வைக்கவில்லை. வயது இருபத் தெட்டுத்தான் ஆகிறது அதற்குள் இந்த நரைக்கு என்ன அவசரம் என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

மேசையில் அம்மா வைத்திருந்த இட்லியினைப் போட்டுச் சாப்பிட்டாள் நிர்மலா. அவளது தங்கை மாலா பல்கலைக்கழகம் போகத் தயாராக வந்தாள். அவள் பின்னால் தம்பி அருண் பள்ளிக்கூடம் போகத் தயாராக வந்தான்.

"காலையில் எழும்பப் பிந்தி விட்டது. அதனால் மூன்று பேருக்கும் லஞ்ச் செய்யவில்லை. கன்டீனில் பார்த்துக் கொள்ளுங்க." என்று அம்மா பொதுவாகச் சொன்னாள்.

"ஓகே அம்மா" என்று ஒத்த குரலில் மாலாவும் அருணும் சொல்லி விட்டுக் கிளம்பினார்கள்.

"காசு இருக்குதா மாலா அருண்?" என்று நிர்மலா கேட்டாள்.

"ஓமக்கா. நீங்கள் போன கிழமை தந்த காசு இன்னும் இருக்குது" என்று இருவரும் கோரசாகப் பதில் சொல்லி விட்டுத் தாயிடமும் அக்காவிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும் ஹாண்ட்பாக்கினை எடுத்துக் கொண்டு "அம்மா போயிட்டு வாறேன்" என்று சொல்லிக் கொண்டு நிர்மலாவும் வீட்டை விட்டு வெளியேறினாள்.

மார்கழி மாதத்து மழையில் கொழும்பு நகரத்தின் பம்பலப்பிட்டிப் பகுதியில் தெருக்களில் ஆங்காங்கு தண்ணீர் தேங்கி நின்றது. பாதசாரிகளைப் பற்றிக் கவலைப்படாது சேற்றுத் தண்ணீரை வாரியிறைத்துக் கொண்டு சென்றன ஒரு சில கார்கள். அவற்றிடமிருந்து கடும் பிரயத்தனத்துடன் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு நடந்து காலி வீதியிலுள்ள பேருந்துத் தரிப்பினை வந்தடைந்தாள் நிர்மலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேருந்துத் தரிப்பில் நிற்கும் போது அவள் முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது. இன்று அவள் மிகவும் சந்தோஷ மான மனநிலையில் இருப்பதற்கு இரண்டு காரணங்கள். முதலாவது காரணம் அவள் இன்று மாலை வேலை முடிந்த பின்னர் ஆதவனைச் சந்திக்கவிருப்பது. இரண்டாவது காரணம் காலையில் அவளது தங்கை தீபாவிடமிருந்து வந்திருந்த வாட்ஸப் மெசேஜ்.

ஆதவன் அவளுக்கு பல்கலைக்கழகத்தில் அறிமுக மான நண்பன். அவனுடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவளுக்கு நேரம் போவதே தெரிவதில்லை. வாரத்தில் ஓரிரு நாட்கள் வேலை முடிந்து வரும் போது அவனுடன் ஒரு கோப்பியுடன் ஒரு மணி நேரம் கதைப்பது வழக்கம். பெண் நண்பிகளை விட அவளுக்கு ஆதவனுடன் தான் நெருக்க மான நட்பு இருந்தது. இருவரும் தங்கள் பிரச்சினைகள் சந்தோஷங்கள் அனைத்தையும் மற்றவரிடம் பகிர்ந்து கொள்வார்கள். கடந்த இரண்டு வாரங்களாக ஆதவன் யாழ்ப்பாணம் போயிருந்ததால் அவனைச் சந்திக்க முடிய வில்லை. நேற்றுக் கொழும்பு வந்ததும் முதல் வேலையாக "நாளை மாலை சந்திப்போமா" எனும் வாட்ஸப் செய்தி அனுப்பியிருந்தான்.

ஆதவனுக்கு வீட்டில் கல்யாணம் செய்யும்படி நிர்ப்பந்தம். இதுவரை அவனுக்கு வரும் பெண்களின் போட்டோக்களை நிர்மலாவிடம் கொண்டு வந்து காட்டுவான். அதில் சிலவற்றை நிர்மலாவே தோற்றத்தின் அடிப்படையில் உனக்கு இவள் நல்ல பொருத்தமாக இருக்கும் என்று பரிந்துரையும் செய்திருக்கிறாள். ஆனாலும் அவனது திருமணப் பேச்சு எதுவும் நிறைவடைந்ததில்லை. அதற்கான காரணம் என்னவென்று அவளும் அவனிடம் கேட்டதில்லை.

நிர்மலாவுக்குத் திருமணம் பேச யாருமில்லை. அப்பா இல்லை. அம்மா உண்டு. ஆனாலும் அம்மாவுக்கு இப்படியான சிந்தனை இதுவரை வந்தது போல் நிர்மலாவி டம் காட்டிக் கொள்ளவே இல்லை. பெரியப்பாக்கள் இருவரும் ஓரிரு தடவைகள் கேட்டுப் பார்த்தார்கள். இப்போ வேண்டாம் என்று மறுத்து விட்டாள். அவர்களும் கடமை முடிந்தது என்று அது பற்றிப் பேசுவதை நிறுத்தி விட்டார்கள்.

அப்பா இறந்த நாளிலிருந்து குடும்பத் தலைவி யாகப் பொறுப்பெடுத்ததால் தனக்கென ஒரு வாழ்க்கைத் துணை தேடும் நோக்கமும் மனதில் அவளுக்கும் தோன்றியது மில்லை. உண்மையைச் சொல்லப் போனால் அவள் தனக்குத் துணை தேடுவதற்காகச் செலவழிக்க நேரமுமில்லை. அப்பா இறந்ததிலிருந்து அவள் மனதில் குடி கொண்டிருப்பது ஒரே ஒரு இலட்சியம் மட்டும் தான். அது தன்னுடன் கூடப் பிறந்தவர்களுக்கு அப்பா இல்லையெனும் குறை தெரியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதே.

அப்போ நிர்மலா உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாள். அவளுக்குக் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் அனுமதி கிடைத்திருந்தது. பல்கலைக்கழகம் தொடங்க ஒரு மாதத்திற்கு முன்னால் அவளது தந்தை ஒரு வீதி விபத்தில் திடீரென இறந்து விட்டார். அவளது தாய்க்கு ஒரு குடும்பத்தைப் பொறுப்பெடுக்கும் திறமை இருக்க வில்லை. அதனால் நிர்மலாவே அவளது இரண்டு தங்கைகள், கடைக்குட்டித் தம்பி ஆகியோருடன் அம்மா வையும் சேர்த்துப் பராமரிக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டாள். அம்மா பிள்ளைகளுக்குச் சமைத்துப் போடுவார். வீட்டு வேலைகளைச் செய்வார். மற்றும்படி அம்மாவிடம் குடும்பத்தை நிர்வாகம் செய்யும் திறன்கள் எதுவும் இருக்க வில்லை. அப்பாவின் வழிகாட்டலில் பின்பற்றி வாழ்ந்தவளே அம்மா.

சொந்தமாக வீடு இருந்த படியால் வாடகைச் செலவு இல்லை. அப்பாவின் சேமிப்பிலும் ஓரளவு பணம் இருந்தது. அப்பாவின் சகோதரர்களான இரண்டு பெரியப்பாக்களின் உதவியும் அப்பப்போ அவள் பல்கலைக்கழகத்தில் படிக்கும் வரை கிடைத்தது. அத்துடன் அவள் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்தில் சனி, ஞாயிறுகளில் டியூஷன் கொடுத்து மேலதிக வருமானத்தையும் ஈட்டினாள். அதனால் அவர்களது பொருளாதாரத் தேவைகளைப் படிக்கும் காலத்தில் அவளால் ஓரளவு சமாளிக்க முடிந்தது. படித்து முடிந்ததும் அவளுக்கு ஒரு நல்ல வேலையும் கிடைத்தது. அவளது திறமையினாலும் உழைப்பினாலும் வேலையில் புரமோஷ ன்களும் அவளைத் தேடி வந்தது. இப்போ அவள் ஒரு மேலாளர் பதவியில் இருக்கிறாள். நல்ல சம்பளமும் கிடைக்கிறது. ஆனாலும் அவள் வார இறுதி நாட்களில் டியூஷன் கொடுப்பதை நிறுத்தவில்லை. ஐவரின் வாழ்க்கைச் செலவுகளோடு தங்கைகள் தம்பிகளின் படிப்புச் செலவும் வேறு. சம்பளத்துடன் டியூஷன் வருமானமும் இருப்பதால் தான் நிர்மலாவினால் அவர்களது நடுத்தர வர்க்க வாழ்க்கைத் தரத்தைப் பராமரிக்கக் கூடியதாக இருந்தது.

நிர்மலாவின் மூத்த தங்கை தீபாவிற்கு இலங்கை அரசுப் பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்கவில்லை. அதனால் கொழும்பில் பிரித்தானியப் பல்கலைக்கழகம் ஒன்றுடன் இணைந்து பட்டப்படிப்பினை வழங்கும் தனியார் கல்லூரி ஒன்றில் படித்துப் பட்டம் பெற்றாள். அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவு சில லட்சங்கள். படித்து முடிந்ததும் அவள் மேல்படிப்பு வெளிநாட்டில் போய் படித்தால் தன்னால் அதிகம் சம்பாதிக்க முடியும் என்று சொன்னாள். அவளை லண்டனுக்குப் படிக்க அனுப்பினாள் நிர்மலா. அதற்கான செலவுக்காகக்குடும்பத்து நகைகள்சில வங்கியின்பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்து அடகுக் கடையில் குடி புகுந்தன. அடுத்த தங்கை மாலாவும் தீபாவைப் போல ஒரு தனியார் கல்லூரியில்தான் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. முதலாமாண்டு மாணவியாகப் படிக்கிறாள். தம்பி அருண் பள்ளிக்கூடத்தில் பன்னிரண்டாம் வகுப்பில் படிக்கிறான்.

அண்மையில் தான் தீபா லண்டனில் முதுநிலைப் பட்டம் பெற்றாள். அடுத்து இரண்டு ஆண்டுகள் அங்கு தங்கியிருப்பதற்கான கிராஜ்வேட் விசாவிற்கு விண்ணப்பித்து விட்டு அதன் முடிவுக்காகக் காத்திருக்கிறாள். அத்துடன் வேலையும் தேடிக் கொண்டு இருக்கிறாள். முதுநிலைப் படிப்பு முடித்த மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் இரண்டு வருட விசா கட்டாயம் கிடைக்கும். வேலையும் நான் எப்படியும் எடுத்து விடுவேன் என்று சென்ற வாரம் வீடியோ அழைப்பில் பேசும் போது தீபா நம்பிக்கையாகச் சொன்னாள்.

இன்று காலையில் வந்திருந்த வாட்ஸப் செய்தியில் "அக்கா உன்னிடம் இரண்டு நற்செய்திகள் சொல்ல வேண்டும். உன் மதிய உணவு இடைவேளையின் போது எனக்கு ஒரு வீடியோ கோல் எடு." என்று ஆங்கிலத்தில் தீபா எழுதி யிருந்தாள்.

சரியாகப் பன்னிரண்டரை மணிக்கு கன்டீனுக்குப் போய் உணவை வாங்கிக் கொண்டு ஒதுக்குப் புறமான ஒரு மேசையில் அமர்ந்தாள் நிர்மலா. காதில் இயர் போனை மாட்டிக் கொண்டு வாட்ஸப்பில் வீடியோ கோல் எடுத்தாள்.

லண்டன் நேரம் கொழும்பிலிருந்து ஐந்தரை மணி நேரம் பிந்தியதாக இருக்கும். தீபாவுக்குக் காலை ஏழு மணி.

"அக்கா எப்படி இருக்கிறாய்?" என்று சந்தோஷ மாகச் சிரித்துக் கொண்டே தீபா அழைப்பில் வந்தாள்.

தீபா இன்னும் கட்டிலில் பிஜாமாவுடன்தான் இருந்தாள்.

"இன்னும் கட்டிலிலேயே இருக்கிறாய். நான் உன் நித்திரையைக் குழப்பிட்டேனா?"

"நோ. நோ. அப்படி இல்லை அக்கா. இன்று காலை யில் அவசரமாக எழும்ப வேண்டிய வேலை ஒன்றுமில்லை. அது மட்டுமில்லை. நேற்று இரவு படுக்கப் போனதும் லேட். கோல் எடுக்கச் சொல்லி மெசேஜ் அனுப்பிய படியால் இந்த நேரத்தில எடுப்பீங்க என்று தெரியும். அதனால் எழும்பிட்டன். ஆனால் கட்டிலை விட்டு இன்னும் வெளியே வரவில்லை. அவ்வளவுதான்."

"ஓகே. இரண்டு குட் நியூஸ் என்று போட்டிருந்தாய். என்னவென்று சொல்லு." என்று சொல்லி விட்டு ஒரு வாய் சாப்பாட்டினை வாய்க்குள் வைத்தாள் நிர்மலா.

"என்னக்கா சாப்பிடுகிறீங்க?"

" பார்த்தால் தெரியலியா. சோறும் கறியும் தான். இன்று வெள்ளிக் கிழமை என்பதால் வெஜிடேரியன் சாப்பாடுதான். கன்டீனில வாங்கினேன்." என்று சொல்லி விட்டு இன்னும் ஒரு ஸ்பூன் சோற்றினை வாய்க்குள் வைத்தாள்.

"நீங்க சாப்பிடுகிறதைப் பார்க்க எனக்கும் பசிக்குது."

"பசித்தால் எழும்பிப் போய் சாப்பிடு. அது சரி என்ன குட் நியூஸ் என்று சொல் முதலில்." நிர்மலாவுக்குப் பொறுமையில்லை. என்னவாக இருக்கும் என்று அவளிடம் ஒரு ஊகம் இருந்தது. விசாவும் வேலையும் கிடைத்து விட்டது என்று சொல்லப் போகிறாள். அந்தச் சந்தோஷத்தை வாட்ஸப் மெசேஜ் ஆக அனுப்பாமல் நேரடியாக அக்கா விடம் சொல்ல ஆசைப்பட்டு வீடியோ கோல் பண்ணும்படி மட்டும் மெசேஜ் அனுப்பியிருக்கிறாள். என்ன நற்செய்தி என்று ஊகித்திருந்தாலும் அதனை அவள் வாயால் கேட்க வேண்டுமல்லவா.

"முதலாவது குட் நியூஸ் எனக்கு விசா கிடைத்து விட்டது. இரண்டு வருடங்களுக்கு நான் வேலை செய்யலாம். வேர்க் பர்மிட் ஒன்றும் என்னை வேலைக்கு எடுக்கும் கம்பனிகள் எடுக்கத் தேவையில்லை."

"கொங்கிராஜூலேஷன்ஸ். எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. வீட்டில் எல்லோரும் சந்தோஷப் படுவாங்க."

"ஓமக்கா. நான்எப்படியும்ஒரு வேலை எடுத்திடுவேன் என்று நம்பிக்கை இருக்கிறது. இப்போ கொஞ்சம் தீவிரமாக அப்ளிகேஷன்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறேன்."

"எனக்கும் உனக்கு வேலை கிடைச்சிடும் என்று நம்பிக்கை இருக்கு தீபா. விடாமல் முயற்சி செய். கிடைச் சிடும்." என்று பதில் சொன்னாலும் அவள் மனதில் தீவிரமான சிந்தனை தோன்றியது. அப்போ இரண்டாவது குட் நியூஸ் வேலை கிடைத்ததல்ல. வேறென்னவாக இருக்கும்? எனும் கேள்வி அவள் மனதில் தோன்றியது.

"ஓகே. அப்போ செகண்ட் குட் நியூஸ் என்ன தீபா?"

"அக்கா அது வந்து..." தீபாவின் தயக்கம் நிர்மலா வின் ஆர்வத்தைத் தூண்டியது.

"குட் நியூஸ் சொல்கிறதுக்கு ஏன் தீபா யோசிக்கிறாய்?" ஆச்சரியம் கலந்த குரலில் நிர்மலா கேட்டாள்.

"அது வந்து அக்கா. இங்கே வந்த பின்னர் ஒரு வெள்ளைக்காரனோட எனக்குத் தொடர்பு இருந்தது அக்கா. அவனோட பெயர் ஸ்டீவ். என்னுடன் எம்எஸ்சி படித்த சக மாணவன். நேற்று அவன் என்னைக் கல்யாணம் பண்ணுகிறாயா என்று கேட்டு எனக்குப் புரொபோஸ் பண்ணினான். நானும் ஓமென்று சொல்லிட்டேன்." என்று சொல்லிக் கொண்டு தனது இடது கையின் மோதிர விரலைக் காட்டினாள். அதில் ஒரு மோதிரம் இருந்தது.

நிர்மலாவுக்கு முழுதாகப் புரியவில்லை. "கையில் மோதிரம் எப்படி வந்தது?"

"அக்கா, இங்கு வந்து முதலில் கேர்ள் ஃபிரெண்ட் போய் ஃபிரெண்ட் என்று ஒன்றாகப் பழகுவார்கள். அதன் அர்த்தம் அந்தக் காதல் கல்யாணத்தில் முடியுமென்பதல்ல. ஒன்றாகப் பழகி அடுத்த கட்டமாகப் பெடியன் புரப்போஸ் பண்ணுவான். அதற்குப் பெண்ணும் சம்மதித்தால் அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் மோதிரம் போட்டு நிச்சயம் பண்ணுவான். அதன் அர்த்தம் அந்தக் காதல் அடுத்த கட்டமான கல்யாணத்திற்குப் போய் விட்டது என்பது. நானும் ஸ்டீவும் எங்கேஜ்ட். ஒரு வருடத்திற்குப் பிறகு திருமணம் செய்யலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். இவன் தான் ஸ்டீவ் பார்." என்று சொல்லிக் கொண்டு போனின் கேமராவைத் திருப்பினாள் தீபா. அங்கே ஒரு வெள்ளைக்காரப் பையன் ஷேர்ட், டை அணிந்து ஒரு ஆபிசர் போன்ற தோற்றத்தில் நின்று கொண்டிருந்தான்.

இது என் அக்கா நிர்மலா என்று ஆங்கிலத்தில் தீபா சொல்வது கேட்டது. அவனும் ஹாய் என்று கை காட்டினான். இவளும் என்ன சொல்வதென்று தெரியாமல் ஹாய் என்று கை காட்டினாள்.

மீண்டும் தன்னை நோக்கி கேமராவைத் திருப்பினாள் தீபா.

"அவன் வேலைக்குப் போக நேரமாச்சுது அதுதான் ரெடியாக இருக்கிறான். ஒரு செகண்ட் பொறு அவனை வழி அனுப்பிட்டு வாறேன்." போன் கட்டில் மேல் வைக்கப் பட்டதால் திரையில் ஒன்றும் தெரியவில்லை. ஒரு சில செகன்ட்ஸ்களுக்கு அப்புறம் தீபா மீண்டும் திரையில் தோன்றினாள்.

"அவன் போயிட்டான். இப்போ கதைக்கலாம். ஸ்டீவிற்குப் போன வாரம்தான் ஒரு வங்கியில் வேலை கிடைச்சிருக்கு. அவன் வேலைக்குப் போகிறான். எங்கேஜ்ட் ஆகியிருக்கேன் ஒரு கொங்கிராஜுலேஷன்ஸ் கூடச் சொல்ல மாட்டியா?"

"கொங்கிராஜுலேஷன்ஸ் தீபா" ஏதோ அவள் கேட்டதற்குப் பதில் சொன்னாலும் நிர்மலா தனக்குக் கிடைத்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. அவன் இவள் அறையில் நிற்பதைப் பார்த்தால் அவன் இவளுடன் ஏற்கனவே சேர்ந்து வாழ்வது போலத் தெரிகிறது. அத்துடன் இவள் இதுவரை சொன்னதன்படி இத்தொடர்பு நீண்ட காலமாக இருக்கிறது. இப்போ என்கேஜ்ட் எனும் கட்டத்தில் வந்திருக்கிறது. இதுவரை இவள் என்னிடம் எதுவும் சொல்லவேயில்லையே. அவள் கடுமையான சிந்தனையில் இருக்கிறாள் என்பதை அவள் முகபாவனையிலிருந்து தீபா புரிந்து கொண்டாள்.

"அக்கா, நீ யோசிக்கிறது எனக்குப் புரிகிறது. நான் லண்டன் வந்து அடுத்த மாதமே ஸ்டீவுடன் பழக ஆரம்பித்து விட்டேன். கடந்த ஆறு மாதங்களாக நாங்கள் லிவிங் டுகெதராக ஒன்றாகவே இருக்கிறோம். அவனோட வீட்டுக்கு நான் பல தடவைகள் போய் வந்திருக்கிறேன். நான் ஸ்டீவோட கேர்ள் ஃபிரெண்ட் என்று அவர்களுக்கும் தெரியும். அவன் நேற்றுப் புரப்போஸ் பண்ணினதும் அவர்களுக்குத் தெரியும். நம்ம அம்மாதான் வெள்ளைக்காரனைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணப் போறேன் என்று சொன்னால் சம்மதிப்பாவோ தெரியல. நீதான் அம்மாவின் சம்மதத்தை வாங்கித் தரணும்."

இப்போ புரிந்தது இவள் ஏன் மதிய உணவு இடைவேளையில் வீடியோ கோல் எடுக்கச் சொன்னாள் என்பது. அலுவலகத்திலிருந்து எடுப்பதால் அம்மா, மாலா, அருண் யாரும் பக்கத்தில் இருக்க மாட்டார்கள்.

"என்னக்கா பதிலே சொல்லாமல் யோசித்துக் கொண்டிருக்கிறாய்?"

"என்ன பதில் சொல்வதென்று யோசிக்கிறேன்."

"அக்கா இப்படி நான் காதலித்துக் கல்யாணம் செய்வது உனக்காகத் தானக்கா."

"எனக்காகவா?"

"ஓமக்கா. நீ எங்களுக்காகக் கஷ்டப்படுகிறாய் என்று எனக்குத் தெரியாதா என்ன. எனக்குப் பேசிக்கல்யாணம் செய்வதானால் உனக்கு எவ்வளவு கஷ்டம். அது மட்டுமல்லாமல் நம்ம ஊரில மாப்பிள்ளை பார்த்தால் சீதனம் வேற கேட்பாங்க. நம்மிடம் அதற்கெல்லாம் வசதி இருக்குதா? நான் இப்படிப் போவதால் உனக்கு எனக்குக் கல்யாணம் செய்து வைக்கும் பொறுப்பு இல்லையல்லவா. சீதனம் கொடுக்க வேண்டிய தேவையில்லை. இனி நான் என் வாழ்க்கையைப் பார்த்துக் கொள்வேன். அடுத்த வருஷம் கல்யாணம் கட்டினால் எனது விசா முடிய முன்னம் அவன் பெண்டாட்டியாக விசா அப்ளை பண்ணிடுவன். அப்படியே இங்கேயே செட்டில் ஆகிடுவேன். அதனால் என்னைப் பற்றிய கவலை உனக்கிருக்காதல்லவா. இனி நீங்க மாலாவையும் அருணையும் மட்டும் பார்த்தால் போதும்." சற்றும் எதிர்பாராமல் தங்கை செய்கின்ற தியாகத்திற்கு என்ன பதில் சொல்லலாம் என நிர்மலாவிற்குத் தெரியாமல் ஒரு சில விநாடிகள் தடுமாறினாள். பின்னர் தன்னை சுதாகரித்துக் கொண்டு பதில் சொன்னாள்.

"நான் அம்மாவிடம் சொல்லிச் சம்மதம் வாங்கிடுவேன். நீ கவலைப்படாத. எனக்கு நேரமாகிறது. சாப்பிட்டு விட்டு வேலையைத் தொடங்கணும். வீக்கெண்ட் கோல் எடுக்கிறேன்."

"தாங்க்யூ அக்கா. ஐ லவ் யூ அக்கா." என்று சொல்லி விரல்களை உதட்டில் வைத்து முத்தமிட்டு வீடியோ மூலம் ஒரு ஃப்ளையிங் கிஸ் கொடுத்தாள் தீபா. மாலை முழுவதும் ஒரு பயிற்சிப் பட்டறையை அவள் நடத்தப் போவதால் தனது போனை சைலன்ட் மோடில் வைத்து விட்டுத்தனது லாப்டாப்பினை எடுக்க அலுவலக அறையை நோக்கிச் சென்றாள் நிர்மலா. நான்கு மணி நேர பயிற்சிப் பட்டறையில் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்ததால் அவள் மிகவும் களைத்திருந்தாள். வீட்டுக்கு வந்து சோபாவில் சாய்ந்தாள். அம்மா கையில் ஒரு கோப்பியுடன் வந்தாள்.

கோப்பியை வாங்கிக் கீழே தரையில் வைத்து விட்டு ஹாண்ட்பேக்கில் இருந்து போனை எடுத்தாள். மூன்று மிஸ்ட் கோல்கள். ஐந்து வாட்ஸப் செய்திகள். அனைத்தும் ஆதவனிடமிருந்து வந்திருந்தன.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவன்



# இச்சை

அங்கிருந்து நான் ஏன் வெளியேறவில்லை என்பது கடவுளுக்குத்தான் தெரியும். மகளுக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இவ்வளவு நாளும் நோயுற்ற மனநிலையுடன் வறட்சியான உணர்வு என்னைப் பீடித்திருந்தது. லண்டனுக்கு விமானத்தில் ஏறும் வரைக்கும் என் தன்னுணர்வு எதைப் பற்றியும், யாரைப்பற்றியும் கவலை கொள்ளாமல் தன்பாட்டில் இருந்தது. ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருக்கிறேன். விமானப் பணிப்பெண் இருக்கை வாரை கொழுவி விட்டிருந்தாள். முதல் தடவை மகளின் அழைப்பை நிராகரிக்க முடியாமல் செல்கிறேன். அவளுடனே மிச்சக் காலத்தை கழிக்க வேண்டும். இரண்டு பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள். இரண்டாவது பேத்தி பிறந்து மூன்று மாதங்கள் ஆகிறது. இதுவரைக்கும் தனியாக ஏதோ சமாளித்துவிட்டாள். பிறக்கிறதுக்கு சில மாதங்களுக்கு முன் கணவனை விட்டுப் பிரியவேண்டிய கட்டாயம்.

"அம்மா அவன் சரியான சந்தேகப் பிராணி. இந்தப் பிள்ளை உண்டானதையே சந்தேகப்படுகிறான்" கலங்கிச் சொன்ன போது எனது வைராக்கியம் சற்றுத் தளர்ந்தது. ஊராரின் ஏளனம் தாங்காமல் என் கணவன் சற்குணம் மாதிரி தூக்கில் தொங்கவில்லை என்ற போதே அவள் மீது அபரிமிதமான மரியாதை ஏற்பட்டது. என்ர மூத்தவன் காணாமல் போய் விட்டானா? இல்ல என் முகத்தில் முழிக்காமல் தன்னை மறைத்துக் கொண்டானா? என்று தெரியவில்லை. இரண்டாவது சின்னவன் பொம்பிளை கொண்டு ஓடினதா அறிந்த போதும் நான் கலங்கவில்லை. என்னைப் போல மகள் அழகாக இருப்பாள். வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்கு அழகான பொம்பிளை தான் வேணும். சின்னாபின்னமான எனது குடும்பத்தைப் பற்றியோ காரணத்தைப் பற்றியோ அலட்டிக் கொள்ளாமல் அவளை திருமணம் செய்து கூட்டிக் கொண்டு போனார்கள். இன்று தனித்து விட்டிருக்கிறார்கள். நான் வாழ்ந்து சிதைந்த வீட்டை விட்டுப் போக விரும்பாமல் இறுக்கமாக பற்றி வைத்திருந்த வைராக்கியம் தளர்ந்து விட்டது.

"அம்மா உங்க வீட்டில ஆருமில்லாமல் உத்தரிக்கிறதுக்கு எங்களோட வந்திடு" என்று வற்புறுத்தி அழைத்தாள். எல்லாம் முடிந்தது என்று எப்போதும் நான் நினைத்ததில்லை. ஆனால் மகளுக்கு அப்படித் தோன்றியிருக்கலாம்.

"எல்லாம் முடிஞ்சுது எண்டிருக்காத இஞ்ச வந்து பேரப்பிள்ளைகளோட இரு" என்று






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சொல்லும் போது மனதுக்குள் ஏளனச்சிரிப்பு மட்டும் இருந்தது. எனது துயரம், அவமானம், ஆசைகள் பற்றி எதுவும் தெரியாத அவளை என்னவென்று சொல்வது? தெரிந்திருந்தாலும் இந்தச் சூழலில் ஆதரவு தேவை. அதுவும் சரிதான் என்னைப் புரிந்து கொள்பவர்கள் என்னைத்தவிர யார் தான் இந்த உலகில் இருக்கிறார்கள்?

முன்னும் பின்னும் பயணிகள் தமது இருக்கைகளைத் தேடியும் கைப் பைகளை மேல் ராக்கையில் வைத்து மூடுவதிலும் பரபரப்பாக இருந்தார்கள். அப்போதுதான் மெல்லிய புன்முறுவலுடன் சுருண்ட முடிகள் நெற்றியில் வழிய என்னைப்பார்த்து "ஹாய்" என்றான். இவனுக்கு வயது இருபத்தைந்து இருக்கும் போல. லண்டன் வரைக்கும் உதவியாக என்னை அழைத்துச் செல்லும் மனிதர் முன் வரிசையில் அமர்ந்திருக்கிறார். மகளுக்குத் தெரிந்தவர். விமானத்தில் முதல் பயணம் என்ற பதட்டம் எல்லாம் வரவில்லை. எனக்கு இலகுவில் பதட்டம் வருவதில்லை என்பது கூட வரமா சாபமா என்று தெரியவில்லை. இந்த இளம் வாலிபன் எனக்குப் பக்கத்து இருக்கையில் அமர்ந்தான். அவன் அருகில் அமர்ந்திருப்பது புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது. எழுபத்திரண்டு வயசானாலும் பார்க்க பத்துப் பதினைந்து வயசாவது குறைந்து இளமையாகத் தெரிவேன். அன்றைக்கு சந்திரனின் தோற்றம் எப்படி இருந்ததோ அதே மிடுக்கும் கண்களில் பிரகாசம் ஜொலிக்கும் துள்ளலான இளைஞன் இவன்.

ஜன்னல் வழியாக வெண்முகில் கூட்டங்கள் தெரிய தொடங்கிவிட்டன. பறப்பில் இருக்கும் விமானத்தில் இதை மட்டும்தானே இரசிக்கமுடியும். ஆனால் இரசிக்கும் மனநிலையை தொலைத்த அந்த நாளை நோக்கி நினைவுகள் தாவிப் பின்னே செல்கின்றன. அடிக்கடி இப்படி நினைவுகளில் மூழ்கிவிடுவேன் என்பதை விட நினைவுகளில் வாழத்தொடங்குவேன் என்பது தான் உண்மை.

நானும் மற்றவர்களைப் போலத்தான் மிகவும் நல்லவள் என்று சொல்வதில் உடன்பாடில்லை. ஒட்டுமொத்த மனிதர்களையும் குறை சொல்ல உனக்கு யார் அதிகாரம் தந்தது என்று நினைக்கலாம். உண்மையை சொல்ல அதிகாரம் தேவையில்லை. பொய்க்குத் தான் அதை நிலைநிறுத்த வசதியும் அதிகாரமும் வேணும். நான் உண்மையை சொல்கிறேன். அன்றைக்கும் என்மீது வன்முறையுடன் வார்த்தைச் சேறும் பூசுற சுத்த பத்தமான மனிதர்கள் என்று தங்களை பிரகடனப்படுத்தியவர்கள் இருந்தார்கள். அடிமைப்படுத்தி விட்டோம் என்ற அகங்காரம். கன்னத்தில் முதுகில் ஆசைதீர அடித்தார்கள் என்று சொல்வதை விட தொட்டு ஆசையைத் தீர்த்துக் கொண்டார்கள். அவர்களின் தூங்கி வழிந்த முகங்கள் அருவருப்பாய் இருந்தன. அதைவிட பேசும் தூசன வார்த்தைககளால் குமட்டல் எடுத்தது. அடிவயிற்றில் ஒருத்தன்



உதைத்ததை உணர்ந்தேன். சுள்ளென்று வலித்தது. வீட்டுக்குத் தூரமா இருந்ததை அந்தப் போக்கிரி தெரிந்திருக்க நியாயமில்லை. குருதிக் கசிவு நிற்காத துர்பாக்கிய உடம்பு அதிர்ந்தும் அடங்காமல் சதுரமெல்லாம் நடுங்கியது.

ஒட்டுமொத்த ஊருக்கும் நான் காட்சிப் பொருளாக இருந்த நாள். அன்றைக்கு விடிய விடிய திருவிழா நடந்தது. திருவிழா என்றாலே ஆண்கள் அதீத மூச்சுக் கொண்டு திரிவார்கள். பெண்களுக்கு அதை ஈடு செய்யவேண்டிய கட்டாயம் தானாக வந்துவிடும். வகைவகையாக ஆடைகளும் ஆபரணங்களுமே அவர்களுக்கு அதை ஈடுசெய்ய இருந்தன. ஆண்களைக் கவருவதற்கு அழகு என்ற ஒற்றை மந்திரம்போதும்என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

வைகாசி மாதம். காத்து வளம்எண்டதால ஊரடங்க பக்கத்து கோவிலில் நடப்பது போல சத்தம். முதல் மேளச்சமா இரவு பத்து மணிவரைக்கும் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகு பட்டிமன்றம். கற்பில் சிறந்தவள் கண்ணகியா மாதவியா என்று தலைப்பிட்டு நடந்திருக்க வேண்டும். கற்பு எப்போதும் விலை மதிப்பில்லாத பண்டம். அதை கூறு போட்டு விற்பதில் ஆண்களுக்கு கொள்ளையின்பம். பட்டிமன்றம் தொடங்கவும் நான் அயர்ந்து தூங்கிவிட்டேன்.

இசைக் கச்சேரி தொடங்கிவிட்டது. தட்டு முட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமான்கள் விழுந்து எழுப்பும் அலங்கோல ஒலிகள் என் உறக்கத்தை கலைத்தது. ஒலி வாங்கி இரைச்சல் காத்தடிக்கக் கூடிக் குறையும். நானும் மூன்று பிள்ளைகளும் கொட்டில் வீட்டின் ஒரே அறையில் வரிசையில் கிடந்தம். நான் மீண்டும் அயர்ந்தேன்.

வன்னியில் மில்லில் வேலைக்கு போனவர் "வாற சனிக்கிழமை வருவன். தலைக்கு மேல வேலை கிடக்கு ஒருமாதம் ஆகும். முதலாளி சொன்னால் மறு பேச்சு பேசாமல் முடிச்சுப் போட்டுத் தான் வீட்ட வருவன்" சற்குணம் சொல்லிப் போட்டு போய் மூண்டு கிழமை இருக்கும். அக்கம் பக்கத்தில ரெண்டு வளவுகள் தள்ளி சொந்தக்காரர் இருக்குதுகள். பேருக்கு தான் சொந்தம். வடக்கிலும் கிழக்கிலும் இருக்கிற சற்குணத்தின் தங்கைமார் குடும்பங்களுக்கு எங்களோட சரிவராது. பிள்ளைகள் சண்டை பிடிச்சாலும் கொழுவல் பெரியவர்களை வந்துசேரும். நாலு வளவு தாண்டி இருக்கிற கிணத்தில குளிக்க போனாலும் கொழுவல். பொம்பிள குளிக்க போனாலும் நாயக் கொண்டந்து குளிக்க வாக்க அப்பதான் அவரின் மூத்த தங்கச்சி புருஷன் வருவான்.

வெள்ளைத் தோல் முதுகைக் கண்டாலே இந்த ஆண்களுக்கு அப்படியே ஒரு கிளர்ச்சி எங்கிருந்து தான் வருகிதோ? அடிக்கடி கடைக்கண்ணால் மேய்ந்து கொண்டிருந்ததை நான் உணர்ந்தாலும் சண்டைக்கு இழுத்து அதை பெருப்பித்து வெட்டுக் குத்து ஆகக் கூடாது என்பதில் கவனமாகவும் இருந்தேன். இதை வாய்ப்பாக எடுத்துக் கொண்டு என் முதுகையும் காலுக்கு சவற்காரம் போடும் போது முழங்காலுக்கு மேல் தொடையை பார்க்கும் வக்கிரம் இருக்கே.. உடம்பெல்லாம் கூசும்.

ஆனால் அந்த இரவு உலகத்தின் உயர்வான ஆண் மக்கள்போலதங்களை வெள்ளை அடித்துக்கொண்டிருந்தனர். வீட்டு முகப்பு மண் சுவரில் ஒட்டிய மாதிரி குந்தி இருந்தேன். முகத்தை கைகளுக்குள் புதைத்து முழங்காலில் முட்டுக் கொடுத்து அடுத்த அடி முகத்தில் விழாமல் இருக்க எத்தனித்தாலும் தலையில் உடலின் மற்ற பாகங்களில் விழுவதை தடுக்க முடியவில்லை. கலங்கி அழுது துடித்தேன். "எனக்கு எதுவும் தெரியாது. அவர் இல்லாதது உங்களுக்கெல்லாம் நான் போடு தடியா போனன்." என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளுறதை தவிர வேற என்ன செய்வது. கண்கள் வீங்கியிருந்தது. அழுததாலா அறை விழுந்ததாலா என்று பிரித்து பார்க்க முடியாது வேதனையில் குமுறிக் கொண்டிருந்தேன். தாய்க்கு நடக்கும் கொடுமையை புரிந்து கொள்ள முடியாத எனது இரண்டு பிள்ளைகளும் தகப்பனின் மூத்த தங்கையுடன் வராந்தாவில் இருந்த ஆறங்குல உயரக் குந்தில் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து போய் இருந்தனர். மூத்தவன் என்னை அருவருப்பாக பார்த்ததை இன்னும் என்னால் மறக்கமுடியவில்லை. அவனுக்கு விருத்தெரிந்த வயசு. வீட்டின் உள்ளே எதுவும் தெரியாமல், சத்தடிகள் தொந்தரவு உணராமல் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தது கடைசிக் குழந்தை. அப்போது மகளுக்கு ஒரு வயதும் ஒரு மாதமும் இருக்கும்.

அந்த நெருடலான இரவு வருவதற்கு கட்டியம் கூறுவதுபோல காலையே அசாதாரணமாகத்தான் விடிந்தது. அடிவயிறு சுள்ளென்று விட்டு விட்டு வலித்தது. உள்ளி சுட்டுச் சாப்பிட்டால் வலி குறையும். அடிப் பெட்டியில் மூன்று பல்லுகள் கிடந்தது. சுட்டுச்சாப்பிட்டேன். சுவமில்லாமல் வந்து மூன்று நாள். இனி குறையும் என்று நம்பினேன். வீட்டுத் திண்ணையில் மறைவுக்குக் கட்டப்பட்ட தடுப்பின் வெளிகளிலூடு சத்தாராக விழுந்த வெயிலில் தூசும் துணிக்கைகள் எழுந்தமானமாக புகையாக அல்லாடிக் கொண்டிருந்தன. முன் வேலி என்ற பேருக்கு நாலு பூவரசுகள் மொத்திச்சு நின்றன. தப்பிப் பிழைத்து ஒரு சீமைக்கிளுவை ஆட்டுக்கு குழை ஒடிக்கத் தனிச்சு நின்றது. வீட்டுக்கு அறுக்கை எண்டு விட்டு வைத்ததுகள் இவைதான். அந்தக் கிளுவை குற்றம் தாங்கியதால் தான் செழிப்பாக நின்றது போல. குற்றம் என்பது மச்சம் மாமிசம் கழுவி ஊத்துற இடம் என்பதால அப்பிடிச் செல்லுறன். அடுப்படியால வெளியில வந்தால் முற்றத்தில் மூலையை அண்டித்தான் கிளுவை நின்றது. முதல் நாள் சூடை மீன் குழம்புச் சட்டியில் ஒட்டியிருந்த பழங்கறி கொட்டி சமையல் பாத்திரங்களை குந்தி இருந்து தென்னம் மட்டை பொச்சால் தேச்சுக் கொண்டிருக்கும் போது தான் அவன் வந்தான்.

சந்திரன் தூரத்து உறவுக்காரன். அடிக்கடி வந்து போறவன். ஆள் நல்ல சிவலை. காலை வெயில் முகத்தை தழுவ பளிச்சென்று அழகாக தெரிந்தான். அதற்கு ஒரு வருடத்துக்கு முதல் வேலை வெட்டியில்லை என்று கெஞ்சிக் கொண்டிருந்தான். "பாவம். நல்ல கலகலப்பான பெடியன். தேப்பன் இல்லாமல் தாயின்ட உழைப்பில் இருக்குதுகள். சந்தையில ஏதாவது வேலை இருந்தால் குடுங்கோ. எடுபிடி வேலைக்கு எண்டாலும் வச்சிருங்கோ." என்ர சிபாரிசு. அப்ப சற்குணம் சந்தையில யாவாரம் செய்து செய்து கொண்டிருந்த காலம் இந்த வன்னி மில் வேலைக்கு போக முன்னம். கொஞ்சநாள் அவருடன் வேலைக்கு போனவன்

திண்ணை குந்தில் இருந்து என்னுடன் ஏதோ ஊர்க் கதைகள் அலம்பிக் கொண்டிருக்கும் போது இடைக்கிடை தலையை ஆட்டி அழகான சுருண்ட முடி இடது வலதாக ஊசலாட வள வளவென்று பேசினான். நான் நிமிந்து அவனைப் பார்க்கும் போது என் கழுத்தின் கீழ் நிலைத்திருந்த அவன் பார்வை சட்டென்று சுதாரித்து நிமிர்ந்தது. வெட்கப்பட்டு சிரித்த அவனின் குழந்தைத்தனம் என்னைக் கவர்ந்தது. நானும் சிரித்தேன். பிறகு அவனைக் கவனிக்காமல் விட்டு விட்டேன். பிறகு அவன் தனது பார்வையை அங்கிருந்து நகர்த்தியதாக தெரியவில்லை. துணிவு வந்திருக்கும். காகங்கள் இன்னும் தங்களுக்குள் அடிபட்டு கொட்டி கிடந்த பழம் சோத்தையும் பழங்கறிக்குள் கிடந்த கழிவு மீன் தலைகளுக்கும் அடிபட்டுக் கொண்டிருந்தன.

அன்றைக்கு காலையில் ஆடு பார்க்க வந்ததாக சொன்னான். "தாயும் கிடா குட்டியும் சேத்து அவுக்க போறன். என்ன விலைதான் இன்னும் படிஞ்சு வரேல" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவனுக்கு இருபத்தெட்டு வயசு எண்டு நினைக்கிறேன். "ஒரு விஷயம் சொல்லவேணும். இப்ப வன்னில பொம்பிளை பார்த்திருக்கு. வாற ஐப்பசிக்கு கலியாணமாம் சித்திரா" வெட்கம் தின்ன தலை குனிந்து நிலத்தை பார்த்துச் சொன்னான். அதற்கு முன் அக்கா எண்டு கூப்பிடுறவன் முதல் முதலாக உரிமையெடுத்து என்ர பேர் சொன்னான். அவனது துணிவு எனக்குப் பிடித்திருந்தது. அந்தக் கணம் நான் என்னையே மறந்தேன் என்று சொல்லுவதில் வெட்கப்படவில்லை. சற்குணத்தை விட இவன் நல்ல சிவலை. உயரமும் நான் சற்று அண்ணாந்து பார்த்த போது இன்னும் பலமடங்கு அழகாக தெரிந்தான். எனக்குள் குறுகுறுப்பு. எதையோ இழந்துகொண்டிருக்கும் உணர்வு. பாத்திரத்தின் கரி பிடிச்ச அடிப்பக்கத்தை மிக அழுத்தமாக தேய்த்தேன். அந்தக் கணத்தில் அவனை ஏன் சற்குணத்துடன் ஒப்பிட்டு பார்க்கத் தொடங்கினேன் என்று தெரியவில்லை. பலநாட்கள் அவனைப் பார்த்துப் பார்த்து வளர்ந்த பிரியம் அந்தக் காலை என்கட்டுப்பாட்டை தாண்டி பெரும் ஆலமரமாக வளரத் தொடங்கிவிட்டது. சரி எது பிழை எது என்பதை தாண்டி திடகாத்திரமான இளைஞன் மீது ஏற்பட்ட மிதமிஞ்சிய ஆர்வம். மூத்தவன் கோடியில் கட்டிய ஆட்டை பக்கத்து வளவுக்குள் மாமரத்தின் கீழே அறுகும் கோரை புல்லும் செறிவான இடத்தில் கட்டப் போய் விட்டான். இரண்டாவது மகன் முற்றத்தில் புழுதியில் விளையாடிக் கொண்டிருந்தான். அரை அடி உயர பச்சைப் பனம் மட்டையால் கூடு கட்டி அதனுள் தத்தி தத்தி நடப்பதும் இருப்பதுமாக இருந்தாள் கடைக்குட்டி.

சந்திரன் வெளிக்கிடும் போது நான் பாத்திரங்கள் முழுவதையும் கழுவி முடித்திருந்தேன். அக்கம் பக்கத்தில் இருக்கும் சொந்தங்கள் அவன் திண்ணையில் அதிக நேரம் அலம்பிக் கொண்டிருந்தால் காது மூக்கு வைச்சு நாறடிச்சு விடுங்கள். அவ்வளவு சந்தோஷம். மேலதிகமா சற்குணம் வரும் போது அள்ளி வைக்குங்கள். கோள் மூட்டி நாங்கள் இருவரும் சண்டை போடுறதை இரசிக்கும் அருவருப்பான மனிதர்கள். இது தெரிந்து தான் சந்திரனும் கொஞ்ச நேரத்தில் கிளம்பிவிடுவான்.

வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன், அன்று முழுதும் அவன் நினைப்பு என் உள்ளத்தையும் உடலையும் தொந்தரவு செய்தது. இதுவரைக்கும் அப்படியானதில்லை. முதல் முறையாக அவனுக்காக ஏங்கினேன். மூத்தவன் ஏதோ இரண்டாவது மகனுடன் சேட்டை விட்டு தனகியது பொறுக்க முடியாத கோபத்தையும் எரிச்சலையும் தந்தது. இரண்டடி பூவரசம்கிளையை ஒடித்து அவனை அடித்தேன். என் உணர்வுகளை ஆசைகளை அடக்க முடியாமல் இருக்கும் போது பிள்ளைகள் தூரமாக தெரிகிறார்கள். மூத்தவனின் கால்கள் இரண்டும் தடித்த தழும்புகள். வக்கிரமான பெண்ணாக நான் மாறியிருந்தேன் என்பதை அன்றிரவு கையறு நிலையில் ஊர்ச் சனம் பார்க்க என் உள்ளம் சிதறிக்கிடந்த போதே உணர்ந்தேன்.

அந்த இரவு சந்திரன் வந்தான். எனக்கு அருகில் முகத்துக்கு நெருக்கமாக உதடுகளில் முத்தமிட என்மேலே படர்ந்து வந்தான். திடுக்கிட்டு விழித்தேன். இரண்டாவது விழிப்பு. ஒரே இருட்டு. இசைக்கச்சேரி தொடங்கும் ஆயத்தம் போல ஒலிபெருக்கியின் இரைச்சல் இன்னும் தொடர்கிறது. வாத்தியங்களை சரிசெய்யும் முன்னோட்டம் பார்க்கும் நள்ளிரவு கடந்த நேரம். இரண்டு மணி தாண்டியிருக்கும். குட்டித்தூக்கம் வந்து என்னை ஏதேதோ செய்து விட்டாதே என்று சஞ்சலப்பட்டேன். நல்லவேளை அது கனவு. அவன் வரவில்லை. இருந்தாலும் மனத்தில் அந்த ஏக்கம் என்னைப் பாடாய்ப் படுத்திய இரவு அது. உடலை எண்ணி மூளை வேறுவிதமாக சிந்தித்தது. என்னுடல் இன்று பொருத்தமானதாக இல்லையே என்று வேதனைப்பட்டேன்.

"கடவுளே அவன் இன்றிரவு வரக்கூடாது" என்று வேண்டினேன். அவனை ஏமாற்றுவது போலாகிவிடும். மல்லாக்கப் படுத்திருந்து கூரையைப் பார்த்தேன். பால் நிலாவின் குளிர்ந்த வெள்ளொளி கூரையின் நீக்கலுகளின் ஊடாக எனது முகத்தில் விழுந்தது. அது படும்இடமெல்லாம் முதன்முதலாக சூடாவதாக உணர்ந்தேன். திடீர் என்று அறைக்கதவை யாரோ தட்டுகிறார்கள். எனது இதயம் படபடக்கத் தொடங்கியது. தனியாக இருக்கிறேன். திறக்காமல் யாரென்று கேட்கவேண்டும். அவனாக இருக்கக் கூடாது என்ற வேண்டுதல் மறுபடியும் ஏற்பட்டது. உடல் முழுதும் புது இரத்தம் பாய்ந்த உணர்வு. விரைவாக எழுந்தேன். பிள்ளைகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள்.

இரண்டு அடிகள் கதவை நோக்கி எடுத்து வைத்திருப்பேன் பலர் திடு திடென்று முற்றத்தில் ஓடிவரும் ஒலிகள். "இந்த நாயைப் பிடிச்சுக் கட்டுங்கடா. உவள் புருஷன் இல்லாமல் கொழுப்பெடுத்து ஆடுறாள். வெளில வாடி" இன்னும் தூஷண வார்த்தைகளால் என்னையும் தான் திட்டுகிறார்கள் என்பது புரிந்தது. என்ன நடந்துவிடும் நான் தப்பு செய்யவில்லையே? என்ற துணிவு வந்தது. மனதுக்கும் உடலுக்கும் இடையில் நடக்கும் போராட்டம் இந்த மூதேவிகளுக்கு எங்கே தெரியப் போகிறது என்ற துணிவில் கதைவைத் திறந்தேன். முடியை வலுவான கரம் பற்றிப் பிடித்துத் தர தர வென்று இழுத்துச் சென்றது. முற்றத்தில் பால் நிலவொளியில் என்னைப் பேச விடாமல் ஆளாளுக்கு அடித்தார்கள்.

சந்திரனும் தலையை தொங்கப் போட்டுக் கொண்டு நின்றான். கைகளும் கால்களும் பின்னால் பிணைத்துக் குற்றம் தாங்கிய கிழுவையில் கட்டி வைத்திருந்தார்கள். நான் அவனைக் கூப்பிடவில்லை என்று திரும்பத் திரும்ப எனக்குள் சொல்லிக் கொண்டிருந்தேன். வெளிப்படையாக சொன்னால் அன்றைக்கு நல்லவர்கள் வேடம் போட்டவர்கள் வெறுப்பேறி அவனை கொன்று விடுவார்கள் என்ற பயம். அருகிலிருந்த அழகிய வாலிபன் என்னைத் தட்டினான். திடுக்கிட்டு விழித்தேன். "ஆன்டி என்ன சாப்பிடப் போறீங்கள்?" விமானச் சிப்பந்திப் பெண்ணிடம் உணவுச் சிட்டையை வாங்கிப் பார்த்தபடியே என்னைக் கேட்டான். நான் அவனையே ஆர்வமாக கண்கள் இமைக்காமல் பார்த்தேன்.

❊ ❊ ❊



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்கவி கந்தையா பத்மானந்தன்



# ஊனம்

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில எப்ப பிரயாணம் செய்தாலும் முருகண்டியிலை நிப்பாட்டிக் கைகால் முகம் கழுவி ஒண்டுக்கு ரெண்டுக்குப் போய்ப் பிள்ளையாரைக் கும்பிட்டு ஆசுவாசப்படுத்திக்கொள்ளிறதை நான் ஒரு பழக்கமா வைச்சிருக்கிறன். பேந்து அங்கை இருக்கிற கடையில தேத்தண்ணியும் குடிச்சுக் கச்சானும் வாங்கிக் கொறிப்பன். தூரப் பிரயாணங்கள் போற பாதையளிலை இப்பிடியான கோயில்களை எங்கட ஆக்கள் முந்திக் கட்டி வைச்சிருப்பினம். இப்ப மாதிரி அப்பிடி இப்படி எண்டெல்லாம் பல வழியளிலையும் ஆரையும் வறுத்து இடிச்சு சிப்பிலியாட்டி உழைச்சுக் கோடிக் கணக்கிலை சிலவழிச்சுக் கோயில் கட்டாமல் ஒரு ஓலைக் கொட்டில்லை சாமி சிலையை வைச்சிருப்பினம்.

உண்ணானப் பயணம் செய்யேக்கை அதுகும் இரவிலை பயணம் செய்யேக்கை நித்திரை முழிச்சு இருக்கிற ஆக்களுக்கு குறிப்பா சாரதியளுக்கு நிண்டாப்போலை நித்திரை வரும். அப்பிடி நித்திரை வந்தால் நித்திரைப் புலாதியிலை வாகனம் ஒட்டேலாதது மட்டும் இல்லை தற்செயலா எங்கினேக்கையும் கொண்டு போய் முட்டினால் ஆக்களுக்கும் வாகனத்துக்கும் சேதம் வரும் சில வேளை உயிராபத்திலையும் முடியும். உப்பிடி கன விபத்துகள் நடந்திருக்குது. அதாலை உந்தச் சாரதியளுக்கு ஒரு ஓய்வு வேணும் எண்டுபோட்டுத்தான் எங்கட ஆக்கள் உப்பிடியான வழிப் போக்குக் கோயில்களை உண்டாக்கிக்கடவுளைக் கும்பிடாமல் போனால் பிரயாணம் ஒழுங்கா நடக்காது எண்டு வெருட்டிக் கடவுளின்ர பெயராலை அவையை கட்டாயப்படுத்தி ஓய்வு எடுக்க வைச்சவை எண்டு எங்கட அப்பு சொல்லிறவர்.

உந்தத் தேத்தண்ணி குடிச்சா நித்திரை ஓடிப் போடும் அதோட போற வழியிலை கச்சானைக் கொறிச்சுக் கொண்டு போனாலும் நித்திரை வராது எண்டுவார் அவர். அதுமட்டும் இல்லை அந்தக் கோயிலைச் சுத்தியிருக்கிற கடை கண்ணியளிலை ஆக்கள் சாமான் சக்கட்டு வாங்கிறதாலை அவை கடைக் காறரின்ரை சீவியம் போகும். அதமாதிரி இல்லாததுகள் செல்லாததுகள் பாக்க எடுக்க ஆக்கள் இல்லாத வயது போனவை வருத்தக்காறர் வாதைக் காறர் எல்லாம் அந்தக் கோயிலை அண்டிப் பிச்சை எடுத்துப் பிழைப்பினம். உப்பிடி வழிக்கோயில்களை எங்கட ஆக்கள் உண்டாக்கினதுக்கு உப்படியான வாழ்வாதார நோக்கமும் ஒரு காரணம் எண்டு அப்பு எப்பவோ சொன்னது ஞாபகம் வருகுது.

அண்டைக்கும் அப்பிடித்தான் கொழும்புக்குப் போற வழியிலை முருகண்டியிலை காரை நிப்பாட்டி அலுவல் எல்லாம் முடிச்சுப் போட்டு கச்சான் வாங்கேக்கை "ஐயா தருமம் பண்ணுங்கோ. பிள்ளைகுட்டி நாலு நாளாத் தின்னாமல் குடியாமல் கிடக்குதுகள்...... உதவினால் உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்,,,," எண்டு ஒரு குரல் கேக்க எங்கேயோ கேட்ட குரல் மாதிரி ஒரு உணர்வு வர என்னையும் அறியாமல் திரும்பிப்பாக்கிறேன். உப்பிடிப் பிச்சை கேட்டால் "ஏன் கைகால் இருக்குத்தானே உழைச்சுத் தின்ன மாட்டியோ....." எண்டு வழக்கமாகக் கேக்கிற ஒரு கேள்வியைக் கேக்க விடாமல் ஒற்றைக் கையும் ஒற்றைக் காலும் இல்லாத ஒரு ஆண் உருவம் அந்தக் கச்சான் கடைக்குக்கிட்ட உள்ள மரத்துக்குக் கீழை இருந்தது. பொதுவா ரெண்டு கையும் காலும் ஒழுங்கா உள்ளவையே வெளிநாட்டுக்காசு வரத்தாலையும் நிவாரணங்கள் வரத்தாலையும் உழைச்சுத் தின்னப் பஞ்சிப்படுகிற காலத்திலை ஒற்றைக்கையும் ஒற்றைக் காலும் உள்ள ஒருத்தனை என்னண்டு உழைக்கச் சொல்லிக் கேக்கிறது எண்ட பச்சாபதாபம் உந்தித் தள்ள அவனுக்குக் கிட்டப் போகிறேன்.

முகத்தில் மயிர்ப்புதரோடும் எண்ணெய்தண்ணியைக் காணாத தலையோடும் இருந்த அவனது கண்கள் பஞ்சத்தாலை குழி விழுந்து இருந்தன எண்டாலும் அந்தக் கண்களிலை ஒரு ஒளி தெரிஞ்சது. அதைப் பாத்ததும் அம்மாவாண அந்த ஒளி இயல்பாக அவனுக்குள்ள இருந்திருக்குமோ இல்லாட்டில் இடையில வந்திருக்குமோ எண்டு ஒரு ஐமிச்சம் எனக்கு வந்தது அவனுக்குப் பக்கத்தில் சாத்தி வைச்சிருந்த ஊன்று கோல்களைப் பிடிச்ச படி ஒரு சின்னப்பெடி ஏம்பலிச்சபடி நிண்டது. உண்ணான அது கின்ரை தோற்றத்தில வறுமைதான் அங்கே நிண்டு கொண்டிருந்தது எண்டுதான் சொல்ல வேணும். அந்தப் பெடியின்ரை கண்களில ஆரெண்டான்ன என்னவும் தின்னக் குடிக்கத் தரமாட்டினமோ எண்ட ஏக்கம் மட்டுந்தான் இருந்தது ஆரெண்டான்ன படிக்க இல்லாட்டில் உடுக்க உதவி செய்ய மாட்டினமோ எண்ட ஏக்கம் அந்தக் கண்களில இருக்கிற மாதிரி எனக்குத் தெரியேல்லை. ஔவையார் இளமையில் வறுமை கொடிது எண்டு சொன்னது எவ்வளவு உண்மை எண்டது அந்தப் பெடியை அண்டைக்கு பாக்க எனக்கு வடிவா விளங்கிச்சு.

அந்தத் தகப்பன்ரை ஈனக் குரலோ இல்லாட்டில் அந்த பெடியின்ரை பரிதாபத்துக்குரிய தோற்றமோ ஆரையும் கவலைப்படுத்தின மாதிரித் தெரியேல்லை. எல்லாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் உண்டியலிலை காசு போடுறதிலை மும்முரமாய் இருந்தினம். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் எண்டதிலை அவைக்கு நம்பிக்கை இருக்கிற மாதிரி எனக்குத் தெரியேல்லை.

"அப்பா பசிக்குது .....தாங்கேலாமல் இருக்குது....." எண்டு வயித்தைப் பிடிச்சுக்கொண்டு முனகின அந்தப் பெடியின்ரை வேதனையைத் தாங்கேலாத அந்த ஏலாத தேப்பன்ரை கண்கள் கலங்கின "கொஞ்சம் பொறப்பன் .....ஆரும் என்னவும் தருவினம்தானே......என்னத்தையும் வாங்கித் தின்னலாம் ...." எண்டு சொல்லேக்கையே அவன்ரை குரல் உடைஞ்சு தன்ரை இயலாமையை நெச்சு கண்ணீர் பொல பொலவெண்டு ஓடவும் கலங்கிப்போன நான் அந்தப் பெடியிடம் கொஞ்சம் காசைக் குடுத்து "அந்தச் சாப்பட்டுக் கடையிலை தின்ன என்னவும் வாங்கியாப்பன் .....வாங்கியந்து நீயும் தின் கொப்பருக்கும் குடு" எண்டு அவனைத் துரத்தி விட்டன்

அவன்ரை காலிலை இருந்த ஈ மொச்ச புண்ணிலை இருந்து வந்த ஒருவித மணம் என்னை அவனுக்கு கிட்டப் போகவிடாட்டிலும் பெடி கடைக்குப் போன கையோட நான் அவனுக்கு கிட்டப் போய் இருந்து மெல்லப் பேச்சுக் குடுத்தன். அப்பதான் அவன்ரை பெண்டில் அவனோடை இல்லை எண்டது விளங்கிச்சுது. "கை கால் இல்லாத ஒண்டுக்கும் உதவாத கந்தறுந்த ஒருத்தனோடை எவ்வளவு காலம்தான் தன்ரை ஆசா பாசங்களைப் பசியை அடக்கிக் கொண்டு அவளாலை சீவிக்க ஏலும்......அக்கப்பாடுகள் முட்டுப்பாடுகளை எவ்வளவு எண்டுதான் அவளாலை தாங் கேலும்.....தன்ரை பசியை அடக்கக் கூடிய ஒருத்தனோடை போட்டாள்... இந்தப் பெடிதான் பாவம் என்ரை காலைச் சுத்திச் சுத்தி வந்து அலமலக்கப்படுகுது ....." எண்டவன் பெரு மூச்சு ஒண்டை விட்டுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான் . உண்ணான அந்தப் பெரு மூச்சு எண்டது அவன்ரை கடந்து போன காலத்தை எண்ணியோ இல்லாட்டில் கடக்க இருக்கிற காலத்தை எண்ணியோ எண்டு என்னாலை அனுமானிக்க முடியேல்லை . ஆனால் அதிலை இருந்த ஏமாற்ற வெக்கையை என்னால உணரக்கூடியதாக இருந்தது.

"அதுசரி அப்ப உன்ரை மனிசி உன்னைக் கலியாணம் கட்டேக்கையும் நீ இந்த மாதிரித்தானோ இருந்தனி...." எண்டவும் "இல்லை அண்ணை அப்ப என்னட்டை கையும் இருந்தது காலும் இருந்தது இன்னும் என்னவோ எல்லாம் இருந்தது ......அவள் என்னை விரும்பித்தான் செய்தவள்......" எண்டுகொண்டே நிமிர்ந்து என்ரை முகத்தை கூர்ந்து பாக்கவும் இந்த முகத்தை எங்கையோ கண்டமாதிரி ஒரு நினைவு எனக்கு வந்தது . சட்டென்று பொறி தட்டவும் "நீங்கள் மாறன்தானே எண்டவும்...' திகைச்சுப் போனவன் "என்னண்டு அண்ணை என்னைத் தெரியும்.." எண்டு கேட்டபோதே அவன்ரை குரல் தழுதழுத்தது. "அண்ணை நான்தான் மாறன் எண்டதை ஆருக்கும் சொல்லிப் போடா தையுங்கோ.." எண்டு அவன் மன்றாடியபோது தன்னை நான் அடையாளம் கண்டு போட்டனே எண்ட அவன்ரை வெக்கத்தை வேதனையை என்னாலை உணரக்கூடியதா இருந்தது.

மாறன் வேறை ஆரும் இல்லை நல்ல உயரமும் உரமும் திட்காத்திரமான வாளிப்பான உடல் அமைப்பும் கொண்ட பல நூறு பெடியளுக்குத் தலைமைதாங்கிச் சண்டைக் களத்திலை நிண்ட கம்பீரமான ஒருத்தன் .. சனங்கள் மதிப்பும் மரியாதையும் வைச்சிருந்த ஒருத்தன் . ஏதோ ஒரு சண்டையிலதான் அவனுக்கு கையும் காலும் இல்லாமல் போயிருக்க வேணும். எங்கட ஊர்வழியை மாறனைப் போல எத்தினையோ பேர் உப்பிடி சண்டைக்கு போயும் சண்டையில அகப்பட்டும் தங்கடை உறுப்புகளை இழந்து இருக்கினம். மாறன்ரை இண்டைய நிலமையைப் பாக்கச் சரியான கவலையா இருந்தது. அண்டைக்கும் சரி இண்டைக் கும் சரி சரியான வழிகாட்டுதல் ஒண்டு இருந்திருந்தால் இப்படியான ஒரு நிலமைக்கு அவனும் வந்திருக்க மாட்டான் அவனை மாதிரி இருக்கிற மற்ற ஆக்களும் வந்திருக்க மாட்டினம் எண்ட என்ரை எண்ணத்தை அவனிட்ட சொல்ல உன்னிப்போட்டும் பேந்து தேவையில்லாத பிரகண்டம் வந்தால் என்ன செய்யிறது எண்டுபோட்டு நான் சொல்ல வந்ததை என்ரை மனசுக்குள்ளேயே புதைச்சுக் கொண்டன். எண்ணங்களைப் புதைக்கிறதும் ஒருவகைத் துரோகம் எண்டும் தெரிஞ்சும் என்னைப் போல கனபேர் அண்டைக்கும் சரி இண்டைக்கும் சரி எங்கட எண்ணங்களை புதைச் சபடி தான் இருக்கிறம் . முந்தி உப்பிடி தங்கடை எண்ணங்களைச் சொன்னவை கனபேர் எண்ணியதுக்கு மாறாக அவையின்ரை எண்ணங்களோடை அவையும் புதைபட்டுப் போனதும் எங்களைப் போல ஆக்கள் பின்னடிச் சதுக்கு காரணமா இருக்குமோ எண்டு நான் நெடுகிலும் நினைக்கிறனான் .

"அது சரி மாறன் உங்கை உங்களைப் போல ஆக்களின்ரை பெயரைப் பாவிச்சு அரசியல் செய்யிறவங்கள் ஆரும் ஏதும் உதவி செய்தவங்களோ...."

"எப்பை எண்டாண்ணை வந்து கதைச்சவங்களோ....." எண்டு நான் கேக்கவும் அவனிட்டை இருந்து மௌனமே பதிலாகக் கிடைச்சுது . உண்ணான மாறன்ரை நிலைமையை நெக்கேக்க கவலையா இருந்தாலும் வீண் பிடிவாதங்கள் அசட்டுத் துணிச்சல்கள் எப்பிடிக்கொத்த அழிவுகளை மனிசனுக்கு கொண்டு வரும் எண்ட ஒரு படிப்பினையை கசப்பான உண்மையை எனக்கு விளங்க வைச்சுது எண்டுதான் சொல்ல வேணும். நான் உப்பிடி நெச்சுக்கொண்டு இருக் கேக்கை எங்களைத் தாண்டிப் போன வாகன ஊர்வலத்தில்


"எங்களுக்காக உயிர் துறந்தவர்களின்ரை எங்க ளுக்காக அவயவங்களை இழந்தவர்களின்ரை பாதையில் நாங்கள் வெற்றி நடைபோட எங்கள் கட்சிக்கே உங்கள் வாக்குளைப் போடுங்கள்......" என்று வாக்குப் பிச்சை கேட்ட ஒருத்தன்ரை ஒப்பாரி ஒலிபெருக்கியில் கேட்டது. மாறனைப் பார்க்கிறேன் அவன் அந்த வாக்குப் பிச்சைக் காரனை நெச்சாக்கும் பல்லை நறநறத்தபடி தன்னிடம் இருந்த ஒற்றைக்கை முஸ்டியை மடக்கித் தனது ஒற்றைத் துடையிலே ஓங்கிக் குத்திகொண்டு இருந்தான் ...

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலசிங்கம்
வசீகரன்





# ஐயாச்சி

கேள்விக்குறி போல வளைந்த ஐயாச்சி பொல்லுக் கூட இல்லாமல் தொண்ணூற்றியேழு வயதில் எப்படி வேகமாக நடந்து தனது காரியங்களை தானே ஆற்றுகிறா என்பது இன்னும் எனக்குப் புரியவில்லை.

வழமையாக, காலையில் நான் நித்திரையால் எழும்போது ஐயாச்சி பூ ஆய்ந்து கொண்டிருப்பா. பூத்தடியால் பூமரங்களின் கிளைகளை வளைத்து மரத்துக்கு நொந்துவிடக்கூடாது என்பதுபோல் பூக்களை ஆய்ந்து ஆய்ந்து பூக்கூடையில் போடுவா. எங்களது வீட்டில் உள்ள பூமரங்களின் பூக்கள் போதாதென்று அதிகாலையிலேயே ஒழுங்கைக்குள் உள்ள வீடுகளின் சுவர்களுக்கு மேலாக வெளியில் நீட்டியிருக்கும் பூமரங்களில் இருந்தும் விதம் விதமான பூக்களை ஆய்வா. வாசம் வீசும் வண்ண வண்ண பூக்களால் சுவாமிப்படங்களை அலங்கரிப்பதில் ஐயாச்சி அலாதி ஆனந்தம்.

அவவே எனக்கு பூமரங்களையும் பூக்களையும் அறிமுகம் செய்துவைத்தவ. எப்போதாவது அதிகாலையிலேயே நித்திரையிலிருந்து எழுந்துவிட்டால் ஐயாச்சியை தான் தேடுவேன்,

"பல்லை விளக்கி முகம் கழுவிக்கொண்டு வாடா மோனை, பூ ஆயப் போவம்",

முகம் கழுவாமல் சாமிக்கு பூ ஆயக்கூடாது என்பதில் ஐயாச்சி மிகவும் உறுதியாக இருப்பா. அதனாலேயே நானும் அவ சொல்ல முன்னமே பல் விளக்கி, முகம் கழுவி, சுவாமி கும்பிட்டு திருநீற்றுப் பூச்சுடன் அவர் முன் போய் நிற்பேன். அந்தக் கோலத்தில் என்னைக் கண்டதும் எப்போதும் மலர்ந்திருக்கும் அவவுடைய முகம் புன்னகை யால் பிரகாசிக்கும். காலையில் அவவின் பிரகாசிக்கும் முகத்தை காணும் போது எனக்குள்ளும் உற்சாகமும் புத்துணர்வும் ஏற்படும். தோளைப்பிடித்து இழுத்து தனது கன்னத்தோடு எனது கன்னத்தை வைத்து அணைத்துக் கொள்வா, மெதுவா சற்று விலத்தி எனது முகத்தை பூரிப்போடு பார்த்து,

"என்ர ராசா",

என்று தன்னோடு அணைத்தபடி நடப்பா. ஒவ்வொரு பூமரங்களைப் பற்றி விளக்கமாக சொல்லிக் கொண்டு போவா,

"இது செம்பரத்தை, எங்கட ஊர்ல நல்லா வளர்ர ஒரு பூமரம், உருவாக்கிறதும் சுலபம், சிவத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பரத்தை, மிளகாய் செம்பரத்தை, தும்புச் செம்பரத்தை, அடுக்குச் செவ்வரத்தை, எண்டு கனக்க வகை இருக்கு. தலைமுடி அடர்த்தியா, நல்ல கருகரு எண்டு வளரோனும் எண்டு அந்த காலத்தில உந்த செம்பரத்தை பூவத்தான் எண்ணையோட சேர்த்து தலைக்கு பூசுறனாங்கள்",

ஒரு சிரிப்போடு சொல்லும் அவவின் பொக்கைவாய் அழகாக இருக்கும்.

"நீலநிறத்தில இருக்கிற பூக்கள் கிருஷ்ணருக்கு பிடிக்கும், சரஸ்வதிக்கு வெள்ளைப்பூ, பிள்ளையாருக்கு சிவத்தச் செவ்வரத்தை பிடிச்ச பூ, மஞ்சள் எல்லா கடவுளுக்கும் பிடிக்கும், அதோட மஞ்சள் நிறத்தில தான் கன வகைப் பூக்கள் இருக்கிது",

பூக்கள் பற்றிய புதிய புதிய தகவல்கள் தினமும் சொல்லுவா. இப்படியாக நீலப்பூங்கோடி, திருவாத்தி, பொன்னுச்சி, மல்லிகை, முல்லை, நித்தியகல்யாணி, நந்தியாவெட்டை என ஒவ்வொரு பூவுக்கும் ஒரு கதை, ஒரு விளக்கம் சொல்லுவா. அதேபோல எந்தெந்த பூக்களை சுவாமிக்கு வைக்க கூடாது என்றும் சொல்லுவா,

'வாடிப்போன பூக்கள், பூச்சிகள் சாப்பிட்ட பூக்கள், முழுதாக பூக்காத பூக்கள், முள் செடியில் பூக்கும் பூக்கள், இவையெல்லாம் சுவாமிக்கு வைக்க கூடாதாம்'.



தனது பூக்கூடையிலும், பூத்தடி என சொல்லப்படும் பூமரங்களை வளைத்து பூக்களை ஆயப் பயன்படும் தடியிலும் ஐயாச்சி மிகக் கவனம். தான் வைக்கும் இடத்தில மறுநாள் அவை இரண்டும் இல்லை என்றால் கோபம் வந்துவிடும். அநேகமாக பூத்தடிதான் வைத்த இடத்திலிருந்து காணாமல் போயிருக்கும். யாரிடமும் பூத்தடி எங்கே என்று கேட்க மாட்டா. வாய்க்குள் முணுமுணுத்தபடி அங்கும் இங்கும் அவ திரிவதிலேயே எல்லோருக்கும் விளங்கிவிடும், அநேகமாக கருவப்பமிலை ஒடிக்க அம்மாதான் பூத்தடியை எடுத்திருப்பா, சமையல் அவசரத்தில் எங்கயாவது வைத்து விடுவா, ஐயாச்சி அந்தரப்பட, வீடே ஓடுப்பட்டு திரியும், பூத்தடியை தேடி எடுத்து ஐயச்சியின் கையில குடுத்த பிறகு தான் வீடு ஓயும்.

ஐயா கூட பல முறை கேட்டிருக்கிறார்,

"ஏனம்மா, வயசான காலத்தில உப்பிடி ஊரெல்லாம் திரிஞ்சு பூ ஆய்ந்து சுவாமிக்கு அலங்காரம் செய்யவேணுமே? வீட்டில இருக்கிற ஒண்டிரெண்டு பூக்களை ஆய்ந்து வைச்சா காணாதே?", என்று, ஐயாச்சி மகனுக்குப் பதில் சொல்லமாட்டா.

பூக்களை ஆய்ந்துகொண்டே மகன் கேட்ட கேள்விக்கான பதிலை எனக்கு சொல்லுவா.

"சுவாமிக்கு பூ வைக்கிறதெண்டிறது கோவில்ல ஐய்யர் செய்யிற பூசை மாதிரி வீட்டில சுவாமிக்கு பூக்களைக் கொண்டு நாங்கள் செய்யிற பூசை, கடவுள்களுக்கு பூக்களை நல்லாப் பிடிக்கும், நாங்கள் கனக்க பூக்களை சுவாமிக்கு வைக்கேக்கை அந்த பூக்களின்ர வாசம், வடிவு, நிறங்கள் எல்லாம் சுவாமிக்குப் பிடிச்சுப்போய் சுவாமி எங்கட சுவாமி யறையிலை தானே எப்பவும் இருப்பார். சுவாமி எங்களோட இருக்கிறது சந்தோசம் தானே. அதால தான் நான் ஒவ்வொரு நாளும் பூக்களை ஆய்ந்து சுவாமிக்கு வைக்கிறனான்", ஐயாச்சி கூறும் பதில்களுக்கு 'ம்' கூறிக் கொண்டு வருவேன்.

"அதோட, என்னை நானே சுறுசுறுப்பா வைச்சுக் கொள்ள வேணு மெல்லோடா மோனை, இல்லாட்டி இந்த வயசில படுக்கையில தான் இருக்கோணும். காலம வெள்ளன சூரிய வெளிச்சம் உடம்பில படுறது எவ்வளவு நல்லது, மரங்களுக்கு இடையில நடக்கேக்க சுத்தமான காத்தும் கிடைக்கும், இந்த வாசமும் பசுந்தான ஈரமும் எவ்வளவு இதமா இருக்கு பாத்தியே? மரங்களோட பூக்களோட கதைச்சுக்கொண்டு பூக்களை ஆயிறது எவ்வளவு சுகம், இதெல்லாம் உன்ர கொப்பருக்கு விளங்காது மோனை", என்று செல்லுவா.

"என்ன, மரங்கள், பூக்களோட கதைப்பீங்களோ?" நான் ஆச்சரியத் தோடு கேட்பேன்.

"ஓமடா மேனை, ஒவ்வரு நாளும் எனக்கு பூக்களை தரோணும் எண்டு மரங்களிட்ட கேப்பன், ஆயமுதல் பூவிட்டை கேப்பன், சுவாமியிட்ட போப்போறியோ, மரத் திலையே இருக்க போறியா எண்டு? அதுகள் தலையாட்டி சம்மதம் சொன்னாதான் நான் அதுகளை ஆய்வன்".

பூக்களைப் பற்றிக் கதைக்கும்போதெல்லாம் ஐயாச் சியின் சிறிய சுருக்குவிழுந்த முகம் சுருக்கங்கள் மறைந்து பொலிவாக மாறும், கண்களில் கனிவு தோன்றும், சுருக்கம் நிறைந்த ஐயாச்சியின் கைகளை ஆசையோடு தடவி இறுக்கிப் பிடித்துக்கொள்வேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடை நிறைய பூ ஆய்ந்கொண்டு வந்து முற்றத்தில் நிற்கும் செம்பரத்தம் செடியில பூத்தடியை கொலுவி வைப்பா, அந்த செம்பரத்தையை செடி என்று சொல்ல முடியாது, இரண்டு தடிகள் எட்டடி உயரத்துக்கு வளர்ந்து சடைபரப்பி நிற்கின்றது. அதன் பூக்களை ஆய்வதென்றால் வீட்டுக் கூரைக்கு மேலே ஏறவேண்டும். கன காலமாக வீட்டின் முன்புறமாக நிற்கும் அந்த செம்பரத்தை மரத்தை நட்டது யார் என்று ஐயாச்சிக்கு கூடத் தெரியாது.

தண்ணீர்க்குழாயில் பூக்கூடையை பிடித்து பூக்களை கழுவுவா.

"சுவாமிக்கு வைக்கேக்க சுத்தமான பூக்களை வைக்க வேணும், ஆனா கழுவிறம் எண்டு பூக்களை நசிச்சு பிச்சுப் போடக்கூடாது", என்று சொல்லுவா.

கை காலைக் கழுவி, பூக்கூடையோடு சுவாமியறைக் குள்ளே போவா. சுவாமியறை காலைவேளைகளில் நறுமணம் கமழ, நிறைய சுவாமிப் படங்களோடு தெய்வீகமாக இருக்கும். தேவாரம், திருவாசகம் என்று எதையேனும் வாய் முணுமுணுத்தபடி இருக்கும். ஒவ்வொரு சுவாமிபடமாக ரசனையோடு பூக்களால் சோடிக்க தொடங்குவா. அந்தந்த கடவுள்களுக்கு உகந்த பூக்கள் நடுநாயகமாக வைத்து மஞ்சள், நீலம், வெள்ளை என வர்ணங்கள் மாறிமாறி வரும்படி பூக்களால் ஒவ்வொரு சுவாமிப் படங்களும் அலங்கரிக்கப்படும்.

காலையில் பூ ஆய்ந்து சுவாமிக்கு வைத்துமுடித்த பின்னர் தான் தேநீர் கோப்பையை கையில் எடுப்பா.

ஒருமுறை அவவிடம் கேட்டேன்,

"ஐயாச்சி! சுவாமிக்கு வைக்கிறதால பூக்களை பிடிக்குமோ அல்லது பூக்களை பிடிக்கிறதால அதுகளை சுவாமிக்கு வைக்கிறியளோ?" என்று. கொஞ்சம் யோசிச்சா,

"சுவாமிக்கு வைக்கிறதுக்காக தான் நான் பூக்களை ஆயத்தொடங்கினனான், ஆனா இப்ப ஒவ்வொரு நாளும் இந்தப் பூக்களோட இருக்கிற நேரம் மனசுக்கு இதமாவும், நிறைவாவும் இருக்கு, சுவாமியை கண்ணால காணெலா, நான் பூக்கள்ள கடவுளைக் காணிறன்".

சிந்தனைவயப்பட்ட ஐயாச்சியின் முகத்தை அன்று கண்டேன்.

..................

காலையில் எழுந்தபோது வழமைக்கு மாறான அமைதி வீட்டில் குடிகொண்டிருந்தது. அயலவர்கள் உறவினர்கள் என அங்கும் இங்கும் போய்வந்து கொண்டிருந் தார்கள், வீட்டின் நடுவில் கூரைக்கு கீழே வேட்டி ஒன்று விரித்துக் கட்டப்பட்டிருந்தது. கீழே மரக்கட்டிலில் பெட்டியொன்று, பெட்டிக்குள் ஐயாச்சி படுக்கவைக்கப் பட்டிருந்தா. உட்புறம் பட்டுத்துணியால் அலங்கரிக்கப்பட்ட பெட்டியில் வெண்ணிற சேலையில் திருநீற்றுப் பூச்சுடன் ஐயாச்சி. தலைமாட்டில் உயர்ந்த குத்துவிளக்கின் ஒரு சுடர் மட்டும் எரிந்துகொண்டிருந்தது. சம்பிராணிக் குச்சிக ளில் இருந்து மெல்லிதாக புகைவந்துகொண்டிருந்தது.

அம்மாவைத் தேடினேன், வீட்டின் பின்புற விறாந்தையில் இருந்தா,

அருகில் ஓடிப்போய்,

"அம்மா, ஐயாச்சிக்கு என்ன நடந்தது, இன்னும் ஏன் படுத்திருக்கிறா?", எனக் கேட்டேன்.

அதுவரை நான் கண்டிராதவகையில் அம்மாவின் கண்கள் கலங்கி சிவந்திருந்தன,

"ஐயாச்சி சுவாமீட்ட போயிட்டா தம்பி", எனகூறிக் கொண்டே என்னை அணைத்தபடி சத்தமிட்டு அழத் தொடங்கினா.

வாசலில் வாகனம் வந்து நின்றது, கூடை கூடையாக பூக்களை இறக்கினார்கள்.

சவ ஊர்தி முழுவதுமாக பூக்களால் அலங்கரிக்கப் படவேண்டும் என்று ஐயா கட்டளையிட்டிருந்தார், ஒரு புறம் ஊர்தி அலங்கரிப்பு வேலைகள் இடம்பெற மறுபுறம் ஐயாச்சியை சுற்றி பெட்டி முழுவதுமாக பூக்கள் அழகழகாக அடுக்கப்பட்டன. ஊரே வியந்து பார்க்கும்படியாக ஐயாச்சி யின் சவ ஊர்வலம் பூக்களின் ஊர்வலம் போல இடம் பெற்றது.

............

ஐயாச்சி மறைந்த நாளில் இருந்து சுவாமி அறையில் பூக்கள் வைக்கப்படவில்லை. அந்தியேட்டி முடிய சுவாமி அறையிலேயே ஐயாச்சியின் அழகிய படம் ஒன்றை சட்டம் போட்டு கொழுவிவைத்தார் ஐயா.

"ஏன் ஐயா, ஐயாச்சியின்ர படத்தை சுவாமிப்படங் களோட கொழுவியிருக்கிறீங்கள்?"

"ஐயாச்சியும் எங்களுக்கு சுவாமி தான் தம்பி, அது தான் சுவாமிபடங்களோட அம்மாடா படத்தையும் கொழுவினனான்", என்றார் ஐயா.

மறுநாள்காலையில்எழுந்து பல்விளக்கி முகம்கழுவி சுவாமி கும்பிட்டு, ஐயாச்சியையும் கும்பிட்டு பூக்கூடை யையும் பூத்தடியையும் எடுத்துக்கொண்டு பூக்களை ஆயத்தொடங்கினேன். ஐயாச்சி பூக்களை பற்றி சொன்ன ஒவ்வொரு விடயமும் நினைவில் வந்தது. மரங்களிடம் தினமும் பூக்கும் படி கேட்டேன், பூக்களிடம் சம்மதத்தை கேட்டுக் கேட்டு பூக்களை ஆய்ந்தேன். பூக்களுக்கு நோகாமல் தண்ணீரில் கழுவி பூக்கூடையை சுவாமியறைக்கு கொண்டு வந்தேன்.

ஐயாச்சியின் படத்திற்கு முதலில் பூ வைக்கலாம் என்று எண்ணினேன். 'என்ன பூவை ஐயாச்சிக்கு வைப்பது?' தெரியவில்லை,

'அவவுக்கு என்ன பூ பிடிக்கும் என்று ஒருநாளும் அவவிடம் கேட்கவில்லையே' அப்போது தான் உறைத்தது. ஐயாச்சி இறந்தபிறகு முதல்முறையாக அந்தக்கணத்தில் அடக்கமுடியாத அழுகை வந்தது. விம்மி விம்மி அழத் தொடங்கினேன்.

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-22

# அடர் இருள் என்செயும்

ஸ்ரீரஞ்சனி





விஜோ அவசரமாகக் குளித்துவிட்டு வெளியில் வந்தாள். ஆசைதீரக் குளிப்பதற்கோ, ஆற அமரவிருந்து சாப்பிடுவதற்கோ நேரம் கிடைப்பதில்லை என்ற நினைவில் கசிந்த கண்ணீர்த் துளிகள், அவளின் முகத்திலிருந்த நீர்த்தி வலைகளுடன் சேர்ந்துகொண்டன. ஈரமாயிருந்த முகத்தை யும் உடலையையும் துவாயினால் உலர்த்தியபடி, கண்ணாடி யின் முன் நின்றவளுக்கு தான் வரவர அழகில்லாமல் போவ தாகத் தோன்றியது. கன்னங்கள் மேலும் உட்குழிந்தும், கண்களின் கீழிருந்த கருவளையங்களின் அளவு பெருத்து மிருந்தது. சர்மிக்கு வரவர என்னைப் பிடிக்காமல் போவதற்கு இவையும் காரணமோ என மனதிலெழுந்த எண்ணம் அவளை மேலும் அழுத்தியது.

சர்மியின் பாடசாலையில் பெற்றோர்-ஆசிரியர் சந்திப்பு இருந்ததால், இன்று வேலையில் ஒரு மணிநேர லீவு எடுத்துக்கொண்டு வந்திருந்தாள். சர்மி பாடசாலைக்கு நேரத்துக்கு வரவில்லை எனப் பாடசாலையிலிருந்து இரண்டு தடவை அழைப்பு வந்திருந்தது. அவளின் தேர்ச்சியறிக்கையும் திருப்தியாக இருக்கவில்லை. அது பற்றிக் கதைக்கப்போய் நேற்று சர்மியுடன் பெரும் வாக்குவாதமே நிகழ்ந்திருந்தது. எப்படி இவற்றுக்கெல்லாம் தீர்வுகாண்பது என்பது உண்மை யிலேயே அவளுக்குப் புரியவில்லை. அப்பா இல்லாத பிள்ளை எனச் செல்லமாக வளர்த்ததுதான் பிழையா?

"நீ இன்னும் சின்னப் பிள்ளையில்ல, பத்தாம் வகுப்புப் படிக்கிறாய். கொஞ்சமெண்டாலும் பொறுப்பு வேண்டாமே? ஒழுங்காய்ப் படிச்சால்தானே யூனிவசிற்றிக்குப் போகலாம், அல்லது என்னைப்போல பஃற்றரி வேலையிலை மாயவேண்டியதுதான்."

"அம்மா, என்னால முடிஞ்சதைத்தான் நான் செய்யலாம். உங்களுக்குப் புத்திக்கூர்மை இருந்தாதானே, அதை என்னட்டை நீங்க எதிர்பாக்கலாம்?" கொம்பியூட்டரில் விளையாடிக் கொண்டிருந்த சர்மி, கொம்பியூட்டரில் இருந்த கண்களை விலக்காமல் அலட்சியமாகப் பதிலளித்தாள்.

வேலைமுடிந்த களைப்புடன்வந்திருந்த அவளுக்குச் சர்மியின் எதிர்வாதம் கோபத்தைக் கொடுத்தது. சடா ரென்று அவளின் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள். "யோசிச்சுக் கதை. பொம்பர் போடுற குண்டுகளுக்கேயும், செல்லடிகளுக் குள்ளேயும் வாழ்ந்துகொண்டு நாங்க நிம்மதியாய் படிச்சிருக் கேலுமே. எவ்வளவு கஷ்டப்பட்டனாங்க எண்டது உனக்கு விளங்கினால்தானே. உன்னைச் சொகுசா இருக்கவிட்டிட்டு எல்லாத்தையும் நான் செய்யிறன். படிக்கிறதைத் தவிர உனக்கு வேறை என்ன வேலை? மேக்கப் போட்டுக்கொண்டு சுத்துறதிலைதான் உனக்கு அக்கறையே தவிர படிப்பிலை இல்லை," கத்தினாள் அவள். பின்னர் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு, "எழும்பு, பிள்ளை. முதலிலை வீட்டுப் பாடங்களைச் செய். குப்பையாய்க் கிடக்கிற இந்த அறையை ஒதுக்கு. பிறகு விளையாடலாம்," என்றாள்.

ஆனால், நீ கத்துறமட்டும் கத்து, நான் செய்வதைத் தான் செய்வேன் என்கிறமாதிரி சர்மி அசையாமலிருந்தாள். அவளுக்கு சர்மியுடன் மேலும் சண்டைபிடிப்பதற்கு வலு விருக்கவில்லை. உடுப்பை மாற்றிவிட்டுப் படுத்துவிட்டாள்.

.........................

பாடசாலைக்குச் சென்றவளுக்கு, சர்மியின் ஆசிரியர்களை எந்தெந்த அறைகளில் சந்திப்பது என்றொரு அட்டவணை கொடுக்கப்பட்டது. அதன்படி அவள் சந்தித்த அத்தனைபேரும், "எல்லோருக்கும் உதவிசெய்வா, எந்த நேரமும் சிரித்த முகம். ஆனால், வீட்டுப்பாடங்கள் செய்துகொண்டு வருவதில்லை. சிலவேளைகளில் வகுப் புக்கு நேரத்துக்கு வருவதுமில்லை. நீங்களும் நாங்களும் சேர்ந்து இந்தப் பழக்கங்களை மாற்றவேண்டும்." என்பது போல சர்மியின் நிறைகளைவிட அதிகமாகக் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்கக்கேட்க அவளின் ஐந்து அடி உடல் முழுவதும் நடுங்கியது. தொண்டை அடைத்தது.

வீட்டுக்குப் போனதும், சர்மியின் மேக்கப் பொருள் கள் எல்லாவற்றையும் எடுத்தெறிய வேண்டுமென்ற நினைப்பு டன் அவளின் அறையைச் சல்லடை செய்தபோது, ஆண் மாணவன் ஒருவனுடன் சர்மி கட்டிப்பிடித்தபடி இருந்த படமொன்று அவளின் கையில் அகப்பட்டது. அது சாதரண மான அணைப்புப்போல அவளுக்குத் தோற்றவில்லை.

அந்த நேரம் வேகமாக அறைக்குள் நுழைந்த சர்மி, "என்ர அறைக்கே நீங்க என்ன செய்யிறியள்?" என இரைந்தாள்.

"இது யாரடி?"

"என்ர நண்பர்."

"நண்பரெண்டால்?"

"என்ர போய்பிரெண்ட்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போய்பிரெண்ட்? படிக்கிற வயசிலை உனக்கென்னடி போய்பிரெண்ட்? பள்ளிக்கூடத்துக்கு நேரத்துக்குப் போகாமல் அவனோடேயோ சுத்துறாய்?"

ஆத்திரத்துடன் அடிப்பதற்காக அவள் உயர்த்திய கையைச் சர்மி எட்டிப் பிடித்தாள், "எங்கை அடியுங்கோ பாப்பம்!" சவால்விட்டாள்.

"அடிச்சால் என்னடி செய்வாய்? நாயே, எவ்வளவு கஷ்டப்பட்டு உன்னை நான் வளக்கிறன்... உனக்கு..." சத்தம்போட்டு அவள் அழுதாள். என்னசெய்வதெனத் தெரியாமல் அவளின்தங்கை தனோவை அழைத்து நடந்ததைச் சொல்லிக் குமுறினாள்.

***** ***** *****

அடுத்த நாள் வழமைபோல சமைத்துவிட்டு, வேலைக்குச் செல்லவதெற்கென உடுப்பு மாற்றுவதற்குச் சென்றபோது, அவளின் கைத்தொலைபேசி ஒலித்தது. அடுத்த முனையில் இருந்த குரல், "என்ர பெயர் வனிதா, சிறுவர் உதவிச் சபையிலிருந்து பேசுறன். இண்டைக்குப் பின்னேரம் உங்களையும் மகளையும் சந்திக்கிறதுக்காக உங்களின் வீட்டுக்கு வரவிரும்புறன். பின்னேரம் 4 மணிக்கு வரலாமா?" என்றது. ஏன், எதற்காக என எதையுமே அவள் கேட்கவில்லை. அவளின் 10 வருடக் கனடா வாழ்வனுபவத்தில், என்ன நடந்திருக்கும் என்பதை ஊகிப்பது ஒன்றும் சிரமமானதாக இருக்கவில்லை.

அவளின் மனம் சர்மியுடனான பிரச்சினையையே அசைபோட்டுக் கொண்டிருந்தது. 'அம்மா சொல்றமாதிரி அரச மானியத்தில கிடைக்கிற வீடெடுத்து அவளுக்கெனத் தனியறையைக் குடுத்து அவளைத் தனிமைப்படுத்தியதுதான் எல்லாத்துக்கும் காரணமா?' அடிக்கடி கண்களில் திரையிட்ட கண்ணீரை முழங்கையால் துடைத்தபடி, பாண் செய்வதற்கான மாவை உருட்டும் மெசினைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். திடீரென உருண்டுகொண்டிருந்த உருளை ஒன்றுக்குள் அவளின் இடது கை அகப்பட்ட வலியில் அவள் கதறிய கதறல் கேட்டுப் பக்கத்திலிருந்த எல்லோரும் ஓடிவந்தனர். கையை எப்படியோ வேகமாக இழுத்துவிட்டாள், எனினும், துண்டிக்கப்பட்ட கடைசி இரண்டு விரல்களிலிருந்தும் கொட்டுப்பட்ட இரத்தம் அவளை மயங்கி விழச்செய்தது.

கண்விழித்தபோது மருத்துவமனையில் இருந்தாள். கையில் சத்திரசிகிச்சை செய்து கட்டுப் போடப்பட்டிருந்தது. இடது தோளும், கையும் பலமாக வலித்தன. அதைவிட மனம் அதிகமாக வலித்தது. சர்மியும் அவளின் தங்கை தனோவும் அவளைப் பார்க்க வந்திருந்தனர். சர்மி அவளையும் அவளின் கையையும் பார்த்து பார்த்து அழுதாள். அவளும் அழுதாள். இனியும் அந்த வேலையைச் செய்து சர்மியை வளர்க்கமுடியுமா என்பது அவளுக்குப் பெரும் கேள்விக்குறியாக இருந்தது. கண்ணீர் மல்கியபடி நின்றுகொண்டிருந்த தனோ இருவரையும் ஆறுதல்படுத்தினாள்.

.........................

ஐந்து நாள்களின் பின் வீட்டுக்குப் போனவளைச் சந்திப்பதற்கு வனிதா வந்திருந்தா.

"உங்களுக்கு நடந்த விபத்தைப் பற்றி அறிஞ்சன். வெரி சொறி, வினோ. இருந்தாலும், என்ர கடமையை நான் செய்யவேண்டியிருக்கு. அண்டைக்கு உங்கட மகளுக்கும் உங்களுக்கும் நடந்த சம்பவம் பற்றிக் கதைக்கலாமா?"

"இது என்ர விதி," அவள் விக்கிவிக்கி அழுதாள்.

"ம்ம், கஷ்டம்தான், வெரி சொறி. ஆனா, அண்டைக்கு என்ன நடந்ததெண்டதை விளங்கிக்கொள்றதுக்கு உங்கட பக்கக் கதையையும் நான் அறியோணும்."

"என்னத்தைச் சொல்றது? அவ ஒழுங்காய்ப் படிக்கிறதில்லை, மிகக் குறைஞ்ச புள்ளிகள்தான் எடுத்திருக்கிறா. அதோடை சில வகுப்புகளுக்குப் பிந்தித்தான் போறாவாம்."

"அது தொடர்பாக நீங்க என்ன செய்தனீங்க?"

"நான் ஏசினான், நீங்க எண்டா என்ன செய்வீங்க, ஏச மாட்டீங்களா? நான் கஷ்டப்பட்டு வேலைசெய்யிறதே ... ஏன் வாழ்றதே அவளுக்காகத்தான்!"

"உங்களுக்குச் சரியான ஏமாற்றமாய்த்தான் இருந்திருக்கும். ஆனா, நீங்க அடிச்சது பிழை, அது வன்முறை எண்டது உங்களுக்கு விளங்குதா?"

"அவ வாய்காட்டினா, எனக்குக் கோபம்வந்திட்டுது. சரி, இனிமேல் அப்பிடி நடக்காமல் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்றன்."

பின்னர் சர்மியுடனும் வனிதா கதைத்தா. முடிவில் இருவரையும் ஒன்றாகச் சந்தித்தா. "சர்மி, அம்மாவுக்கு விபத்து நடந்திருக்கு, நீங்க அவவுக்கு ஒத்தாசையா இருக்கோணும். அம்மா, நீங்க சர்மியோடை மனம்விட்டுப் பேசுங்கோ, நீங்க ரண்டு பேரும்ஒத்துக்கொள்ளுறமாதிரியான ஒழுங்குமுறைகளை உருவாக்கிக் கொள்ளுங்கோ. ரண்டு கிழமையிலை நான் திரும்பவும் சந்திக்கிறன், சரியா?"

வனிதா போய்விட்டா. சாப்பாடு செய்துகொண்டு தனோ வீட்டுக்கு வந்திருந்தாள். "அக்கா, நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. முதலில நீ உன்னைக் கவனி. கொஞ்ச நாளைக்கு சர்மியை நான் என்னோடை வைச்சிருக்கிறன்." ஏதோ ஒரு மாற்றம்வருமென்ற நம்பிக்கையுடன் அவளும் அதற்குச் சம்மதித்தாள்.

சர்மி வந்து, "அம்மா போட்டு வாறன்," என்றாள். அவளால் சர்மியுடன் மனம்விட்டுக் கதைக்க முடியவில்லை.

தனிமையில்விடப்பட்டிருந்த வினோவுக்கு தன்மேல் பரிதாபமாக இருந்தது. 2009இல், வன்னியில் நடந்த உச்சக்கட்டப் போரின்போது, வீட்டுக்கொருவர் என்ற ஆள்சேர்ப்பின்படி இயக்கத்தில் சேர்க்கப்பட்ட அவளின் கணவனை நினைத்து அவள் கதறியழுதாள். ஐந்து வருடத் தாம்பத்தியம் அழிக்கப்பட்டபோதும், மூன்று வயதில் இருந்த சர்மிக்காகத் தான் வாழவேண்டுமென அன்று அவள் நினைத்தாள். அதற்காக அவள் பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால், இன்றோ வாழ்க்கையில் எந்த அர்த்தமும் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை.

.......................

மூன்று மாதம் பெரிய பிரச்சினை எதுவுமில்லாமல் கழிந்தது. ஆஸ்பத்திரியும் வீடுமென வினோவின் நாள்கள் நகர்ந்தன. இடையிடையே தனோவுடன் சர்மி வருவாள். பிணைப்பை ஒட்டமுடியாமல் ஏதோ ஒன்று தடைசெய்ய, ஏனோ தானோ என அவளும் சர்மியும் பேசிக்கொள்வார்கள். எல்லாம் ஒழுங்காகப் போகிறதா என அவள் தனோவிடம் கேட்டுத் தெரிந்துகொள்வாள்.

வழமைபோல அன்றிரவும் தனோவிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா, உனக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடா தெண்டு ஒரு கிழமையா நான் ஒரு விஷயத்தை மறைச்சுக் கொண்டிருக்கிறன். இனியும் மறைக்கேலாது."

"என்னவாயிருந்தாலும் சொல்லு, தனோ. சர்மி சொல்லுக்கேட்கிறாள் இல்லையோ?"

"பள்ளிக்கூடம் முடிஞ்சால், நேரத்துக்கு அவள் வீட்டுக்கு வாறதில்லை, இரவிலும் போனிலைதான் இருக்கிறாள். கேட்டா, ஒண்டுக்கும் ஒழுங்காப் பதிலளிக்கிற தில்லை. நேற்று இவர் மோலுக்கை அவளை ஒரு பெடிய னோடை கண்டவராம். இனியும் நாங்க இங்கை அவளை வைச்சிருக்கிறது சரிவராதெண்டு அவர் நினைக்கிறார்..."

"எனக்கு விளங்குது தனோ, இண்டைக்கே அவளை இங்கை கொண்டுவந்துவிட்டிடு." அவளுக்கு நெஞ்சடைத்தது.

"நாளைக்கு வெள்ளிக்கிழமைதானே. பின்னேர மாய்க் கூட்டிக்கொண்டு வாறன். சொறி அக்கா."

தனோ கூட்டிக்கொண்டு வந்துவிட்டுப் போனதும், சர்மியைக் கூப்பிட்டாள் அவள். "அம்மா, வேதனையில இருக்கிறன் எண்டதைப் பற்றி உனக்கொரு அக்கறையு மில்லை, வெறும் சுயநலப் பேயா நீ இருக்கிறாய்."

"உங்கட கை காயப்பட்டதிலை எனக்குக் கவலை இல்லாமலில்லை, அதுக்காண்டி நான் எந்த நேரமும் அழுது கொண்டிருக்கேலுமே?"

"உன்னை அழச்சொல்லி நான் சொல்லேல்லை, கரைச்சல் தராமல் இருக்கப்பார் எண்டுதான் கேட்கிறன்."

"நான் என்ன கரைச்சல் உங்களுக்குத் தாறன்?"

"பள்ளிக்கூடம் முடிஞ்சதும் நேர நீ வீட்டுக்குப் போறதில்லை எண்டுதான் சித்தி உன்னை இங்கை திரும்பக் கொண்டுவந்து விட்டிருக்கிறா. அவையின்ர பிள்ளைளும் உன்னைப் பாத்துப் பழகியிடுவினமெண்டு சித்தப்பா பயப்பிடு கிறார். ஒரு நாள் மோலிலை உன்னை அவர் கண்டவராம்..."

"நான் என்ர சினேகிதரோடை சந்தோஷமாக இருக்கிறது பிழையே? இது கனடா, இங்கை சுதந்திரமிருக்கு!" சர்மியின் குரல் உயர்ந்தது.

"நான் உன்னோடை வாக்குவாதப்பட விரும் பேல்லை. நீ என்னோடை இருக்க வேணுமெண்டால் என்ர சொல்லைக் கேட்டு நட."

"நீங்க சொல்லுறது சரியெண்டால்தானே நான் செய்யலாம். வனிதா சொன்னது ஞாபகம்தானே."

"பிள்ளைகளின்ர நன்மைக்காண்டித்தான் பெற்றோர் எதையும் சொல்லுவினம். எனக்கும் சித்திக்கும் உன்ர வாழ்க்கை யில இருக்கிற அக்கறை அந்த வனிதாவுக்கு இருக்காது."

"நீங்க சட்டம் போடுறதுக்கு முதல் நான் ஒண்டு சொல்றன், என்ர சினேகிதரோடை பழகக்கூடாதென நீங்க சொல்லேலாது."

"சினேகிதரோடை பழக வேண்டாமெண்டு நான் சொல்லேல்லை. ஒழுங்காகப் பள்ளிக்கூடத்துக்குப் போ. நல்லாய்ப் படி. இப்ப போய்பிரெண்ட் ஒண்டும் உனக்குத் தேவையில்லை."

"பீற்றரை நான் சந்திப்பன், கதைப்பன். நீங்க அதைத் தடுக்கேலாது."

"சரி, கதை, கதைக்கிறதை நான் நிற்பாடேலாது எண்டது எனக்குத் தெரியும். ஆனா அவனோடை கண்டபடி திரியேலாது, அப்பிடித் திரியிறதா நான் அறிஞ்சா, என்னோடை நீ இங்கை இருக்கேலாது. அதோடை பள்ளிக் கூடம் விட்டதும், உடனை வீட்டுக்கு வந்திட வேணும்."

"ஓ, நீங்க என்னைப் பயப்படுத்துகிறீங்களோ. சரி, அப்பிடியெண்டால் நான் இங்கை இருக்கேல்லை."

சர்மிக்கும் அவளுக்கும் இடையில் நடந்த பிரச்சினையைத் தனோவுக்குச் சொல்லி அவள் அழுதாள். வேறு எப்படித்தான் தான் கதைத்திருக்க முடியுமெனக் கேட்டாள். அவள் சொன்னவை சரியென ஆமோதித்த தனோ, வீட்டில்தானே சர்மி எப்படியும் இருக்கவேண்டும் என்பதால் அவள் சொல்லுக்கேட்டுத்தானே ஆகவேண்டும் என்றும், அவளை உறுதியாக இருக்கும்படியும் ஆலோசனை சொன்னாள்.

***** ***** *****

அடுத்த திங்கள்கிழமை மாலை, திரெபி முடிந்து பனிக்குளிருக்குள்ளால் வந்ததால் கைவிரல்கள் இல்லாத இடத்தில் வழமையிலும் அதிகமாகவிருந்த விறைப்பையும் வலியையும் போக்கும்முயற்சியாக அவ்விடத்தை அவள் வெது வெதுப்பான துவாய் ஒன்றால் உருவிக்கொண்டிருந்தபோது, வனிதாவிடமிருந்து அவளுக்கு மீளவும் அழைப்பு வந்தது.

"உங்களுக்கும் சர்மிக்கும் இடையில் நடந்த உரையாடலைப் பற்றிச் சர்மி சொன்னா. இனியும் உங்க ளோடை இருக்கிறதுக்கு அவ விரும்பேல்லை. ஒரு பிள்ளை வீட்டிலை இருக்க விரும்பாட்டி, இருக்கவேணுமெண்டு சொல்லி நாங்க வற்புறுத்தேலாது. நாளைக்கு நான் உங்கட வீட்டை வந்து அவவின்ர பொருள்களை எடுத்துக்கொண்டு போகலாமோ? அவற்றைத் தயார்செய்து வைக்க உங்களால் முடியுமா அல்லது என்னுடன் வந்து சர்மி எடுக்கலாமா?

அவளுக்கு அவளின் காதுகளை நம்ப முடியவில்லை. 'என்னையே சுத்திச் சுத்தி வந்த சர்மிக்கு இப்ப நானொரு தேவையில்லாத ஆளாய்ப் போயிட்டனா? அம்மா இனி அவளுக்குத் தேவையில்லையா?' தலைசுத்தியது. ஓரிரு நிமிட மௌனத்தின் பின் சரி போகட்டுமென மனதைத் திடப்படுத்திக்கொண்டாள்.

"அவளைச் சந்திக்கிறதுக்கு நான் விரும்பேல்லை. நானே எல்லாத்தையும் எடுத்து வைக்கிறன், நீங்க வந்து எடுத்துக்கொண்டு போங்கோ."

"வெரி சொறி, வினோ. உங்க ரண்டு பேரின்ரையும் மனமும் விரைவிலமாறி, உறவை மீளவும் புதுப்பிச்சுக் கொள்றதுக்கு என்ர வாழ்த்துகள்!"

வினோவின் உடலும் மனமும் மரத்துப் போயி ருந்தன. வெளியில் இடிமுழக்கத்துடன் மழை பெய்துகொண் டிருந்தது. வெளியிலிருந்த அந்த அடர் இருள் உள்ளேயும் அவளைச்சூழப் பரவுவதுபோல அவள் உணர்ந்தாள். எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை. சில நிமிடங்கள் கழிந்தன. அவளின் வலி அவளை இவ்வுலகுக்கு மீளக் கொண்டுவந்தது.

'சரி, இத்தனையையும் மேவி வாழ்ந்திட்டன், புதிசா இனி இது என்னை என்ன செய்யப்போகுது,' தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். தேநீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. கேத்திலை வலது கையிலெடுத்து இடது பெரு விரலால் குழாயைத் திறந்து கேத்திலுக்குள் தண்ணீரை நிரப்பினாள்.

கண்ணீர் அவளின் கன்னங்களை நனைத்து ஓட, அவளுக்கு விக்கலெடுத்தது.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-23

விமல் பரம்





# காத்திருப்பு

ஒரு மாதமாய் தேடியலைந்து கிடைத்த வேணியின் தொலைபேசி இலக்கத்தை கண் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தேன். கொஞ்ச நாட்களாக அவள் நினைவு வந்து போகிறது. யாரை இனிமேல் பார்க்கக் கூடாது என்று முடிவெடுத்து பத்து வருடங்களாய் வெறுத்து ஒதுங்கியிருந்தேனோ அவளை இப்பொழுதெல்லாம் மனம் தேடுகிறது. என் உயிர்த்தோழி. சின்னவயதிலிருந்து இருவரும் ஒன்றாகப் படித்து விளையாடி வளர்ந்தவர்கள். எங்களுக்குள் இப்படியொரு பிரிவு வரும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க வில்லை. நடந்த சம்பவத்தில் நான்தான் அவளை வெறுத்தேன். என்னைத் தேடிவந்து எத்தனை முறை கெஞ்சியிருப்பாள். அவளுடன் கதைக்காமலே முகத்தைத் திருப்பிக் கொண்டேன். நான் வேண்டாம் என்று உதறியதை அவள் ஏற்றுக் கொண்ட கோபம். இன்று நினைக்கும்போது எவ்வளவு சுயநலமாய் மடத்தனமாய் இருந்திருக்கிறேன் என்பது தெரிகிறது. அவளோடு கதைத்தால் என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளுவாளா.?

இன்று என்நிலைமை... என்மீது அன்பு காட்ட யாருமில்லாமல் சொந்தங்களின் வெறுப்புகளைச் சுமந்து கொண்டு தனித்திருக்கிறேன். இன்று அண்ணா அண்ணியோடு நடந்த சண்டையில் அழுது அழுது கண்கள் இரண்டும் வீங்கிவிட்டது. அழுவதைத்தவிர வேறு ஒன்றும் என்னால் செய்ய முடியவில்லை. வீட்டில் என்னைத் தவிர யாருமில்லை. வார்த்தைகளால் குதறிவிட்டு அவர்கள் வெளியே போய்விட்டார்கள். அமைதியில் உறைந்து போயிருந்தது வீடு. அதுவே மனதுக்கு அழுத்தத்தைக் கொடுத்தது. அதை உடைத்து வாய் விட்டு கதறி அழவேண்டும் போலிருந்தது. இந்த நிலைமைக்கு நான்தானே காரணம். அறியாமையால் செய்தேனா இல்லை திமிரில் நடந்து கொண்டேனா. அன்று நான் நினைத்ததுதான் சரியென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதாடினேன். அம்மா தலை தலையாய் அடித்துச் சொன்னாளே கேட்டேனா. எனக்குப் பிடித்த மாதிரித்தான் இருப்பேன் என்று பிடிவாத மாய் இருந்தேன். அம்மா கெஞ்சினாள் கொஞ்சினாள் அதட்டினாள் ஆத்திரப்பட்டாள். எதுவும் என்னிடம் பலிக்கவில்லை. அம்மா போனபின் இந்த ஆறு வருடங்கள் தந்த அனுபவம் எல்லாவற்றையும் உணரவைக்கிறது. காலம் கடந்து வந்த புரிதல்.

தனிமையின் கொடுமையை தாங்கமுடியாமல் மீண்டும் அழுகை வந்தது. அம்மா சொன்னதை ஆரம்பத்தில் கேட்காவிட்டாலும் வருடங்கள் கடந்து வயது ஏற மனதில் பயம் தோன்றியபோது கேட்டிருக்கலாம். ஆனால் வீம்புக்காக இறங்கி வராமல் இருந்தேன். அண்ணா தம்பியிருந்தும் அம்மா என்னில் அதிக பாசம் வைத்திருந்தாள். அண்ணா தன்னோடு வேலை பார்க்கும் வினியைக் காதலித்து திருமணம் செய்யக்கேட்டபோது விரும்பியதற்கு ஆதரித்த அம்மா உடனே திருமணம் செய்யச் சம்மதிக்கவில்லை.

"முதல் தங்கச்சிக்கு மாப்பிள்ளை பார்த்து செய்து போட்டு நீ தாராளமாய்ச் செய்"

அம்மாவின் பதிலைக் கேட்டு நான் திகைத்துப் போனேன்.

"எனக்கு இப்ப கலியாணம் வேண்டாம். நான் செய்ய மாட்டன்"

"உடனசரிவருமே. நல்ல குறிப்பு கிடைச்சு பொருந்தி வர எவ்வளவு நாளாகுமோ. எல்லாம் எனக்குத் தெரியும் நீ பேசாமல் இரு" அம்மா அதட்டினாள்.

"அவளுக்கு இப்பதான் இருபத்திநாலு வயசு கொஞ்சநாள் போகட்டுமம்மா"

அண்ணா சொன்னதையும் அம்மா கேட்கவில்லை.

"அவளுக்கு செவ்வாய்தோஷம் இருக்கு. குறிப்புகள் லேசில பொருந்தாது. இப்ப தொடங்கிப் பார்த்தால்தான் சரிவரும்"

யார் சொல்லியும் கேட்காமல் அம்மா குறிப்பை கையில் எடுத்து விட்டாள்.

கோபத்திலிருந்த என்னை வேணிதான் சமாதானப் படுத்தினாள்.

"அம்மா இருக்கிறதால உனக்கு நல்லது செய்ய வேணும் எண்டு நினைக்கிறா. என்னைப் பார் கவனிக்க ஆர் இருக்கினம். என்ர அப்பாவைப்பற்றித் தெரியும்தானே. அம்மாவின்ர மனசை நோகவையாதே. ஆசையாய் பார்க்கிறா பார்க்கட்டும் நீ கத்தாமல் பேசாமலிரு" என்றாள்.

வேணியை நினைக்கவும் கவலையாக இருந்தது. பதினைந்து வயதில் தாயை இழந்து தந்தையோடு இருக்கிறாள். இழப்பு அவரை குடிகாரனாக்கிவிட்டது. வீட்டிலுள்ள கஷ்டம் கவலைகளை என்னோடு பகிர்ந்து கொள்ளுவாள்.

"சரி பார்க்கட்டும். ஆனால்எனக்குப் பிடிச்சால்தான் நான் செய்வன். படிச்சவனாய் உத்தியோகம் பார்க்கிறவனாய் வடிவானவனாய்த்தான் பார்க்கவேணும்"

சம்மதம் சொன்னது அம்மாவுக்கு சந்தோஷமாய் இருந்ததால் நான் சொன்னது எல்லாவற்றுக்கும் தலையாட்டினாள். திருமண பொருத்தம் பார்க்கும் நிலையத்திலும் பதிந்து தனக்குத் தெரிந்தவர்களிடமும் சொல்லி வைத்து மும்முரமாகத் தேடிக் கொண்டிருந்தாள். முதலில் மறுத்தாலும் மனதில் ஆவலும் பரபரப்பும் இருந்தது.

வருடங்கள் ஓடிக் கொண்டிருந்தது. என் விருப்பப்படி எதுவும் அமையவில்லை. பொருந்தி வந்த குறிப்புகள் எல்லாம் கமம், தோட்டம் செய்யிறவனாயும் கடை நடத்துறவனாயும் இருந்ததால் என்னால் சம்மதிக்க முடியவில்லை. உத்தியோகத்தில் வந்தாலும் ஆளைப் பார்க்க பிடிக்கவில்லை.

"எத்தனை நாளுக்கு பிடிவாதமாய் இருப்பாய் கொஞ்சம் இறங்கி வாடி" வேணி அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள்

"கஷ்டப்பட்டு அம்மா ஒவ்வொண்டையும் கொண்டு வர இப்பிடி குற்றம் குறை சொன்னால் எப்பிடி உனக்கு கலியாணம் நடக்கும்" அண்ணா கத்தினான்.

"உன்ர அவசரத்துக்கு நான் ஒண்டும் செய்யேலாது. எனக்கு பிடிக்கவேணும் விருப்பமில்லாமல் நான் செய்ய மாட்டன்" அவனுக்கு மேலால் கத்தினேன்.

"ஓ எல் படிச்சிட்டு தொடர்ந்து படிக்கமாட்டன் எண்டு வீட்டில இருக்கிறாள். இவள் போடுற கண்டிஷனுக்கு படிச்சவன் ஆர் வருவான். அவளுக்கு நீங்கள் நல்லா இடம் குடுக்கிறீங்கள்"

"அக்கா வாழபோற வாழ்க்கை அவள் விருப்பப்படி இருக்கட்டுமண்ணா" தம்பி சொன்னதைக் கேட்க சந்தோஷமாயிருந்தது.

அண்ணாவின் முணுமுணுப்பையும் தாண்டி அம்மா பொறுமையாகத் தேடிக் கொண்டிருந்தாள். தம்பியும் அம்மாவோடு துணை நின்றான். ஐந்து வருடங்கள் கழிந்த நிலையில் ஒருநாள் வினியின் அப்பாவும் அம்மாவும் வீட்டுக்கு வந்திருந்தார்கள்.

"வினிக்கு முப்பது வயசாச்சு. உங்கட மகனுக்கும் முப்பத்திரண்டு தாண்டிட்டுது. அவர்களுக்கு முதல் நடக்கட்டும். மகளுக்கு நாங்களும் சேர்ந்து பார்க்கிறம்" என்றார்கள்.

"அவளுக்கும் வயசு வந்திட்டுது அவளுக்குச் செய்யாமல் அவன் எப்பிடிச் செய்யிறது"

அம்மா சொன்னதைக் கேட்டு அண்ணாவுக்கு கோபம் வந்து விட்டது.

"மாப்பிள்ளையைக் காணேலை எப்ப தேடி செய்து வைக்க போறீங்கள். முதல் எங்கட கலியாணம் நடக்கட்டும்" அண்ணா பிடிவாதமாய் நின்று சாதித்தான்.

எங்கள் எல்லோருடைய சம்மதத்தோடு திருமணம் நடந்தாலும் இவ்வளவு நாளும் தடையாய் இருந்த என்மீது அண்ணிக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை. என்னைக்கண்டாலே முகத்தைத் திருப்பிக் கொண்டு போனாள். அம்மாவின் புலம்பல் தாங்காது சில மாதங்களிலேயே இருவரும் வேறு வீடு பார்த்துக் கொண்டு போய் விட்டார்கள்.

"வாறவன்ர உழைப்பையும் குணத்தையும் பாரு அம்மாவைக் கஷ்டப் படுத்தாதை. கெதியாய் முடிவெடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை மாதிரி தம்பியையும் காக்க வைக்காமல் அவனை யாவது நேரகாலத்துக்கு செய்ய விடுங்கோ. வயதும் ஏறிக் கொண்டு போகுது இன்னும் பிடிவாதமாய் இருந்தால் உனக்கு கலியாணமே நடக்காதடி." போகும்போது அண்ணாவும் என் மனதை உடைத்து விட்டுப் போனான்.

அம்மாவும்களைத்து ஓய்ந்து போனாள். தந்தையின் பொறுப்பில்லாத்தனத்தால் வேணிக்கும் திருமணம் சரிவரவில்லை. எங்கள் இருவரையும் பார்த்து எந்தநேரமும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். கவலை அம்மாவின் உடம்பைப் பாதித்தது. தம்பிக்கு வேலை விஷயமாக லண்டனில் ஒரு வாய்ப்பு வர அவன் லண்டனுக்குப் பயண மாகி விட்டான். மூன்று வருடத்தில் அவனும் விரும்பிய பெண்ணை திருமணம் செய்து லண்டனிலேயே நிரந்தர மாகத் தங்கி விட்டான். திருமணத்திற்கு அம்மாவை அழைத்திருந்தான். என்னை விட்டுப் போக மனமின்றி அம்மா லண்டனுக்குப் போகவில்லை. வீட்டில் அம்மாவும் நானும் தனித்திருந்தோம்.

"என்ர மூச்சு போக முதல் உனக்கும் ஒரு வழி பிறந்திட வேணும். பெடியளை நம்பேலாது. பிடிவாதம் பிடிக்காமல் இனி பொருந்தி வாறதை செய்யடி. வயசும் முப்பத்தைஞ்சாச்சு" அம்மா ஓயாமல் சொல்லிக் கொண்டிருந் தாள். உத்தியோகத்திலிருந்து இறங்கி சொந்தத்தொழில், கடை நடத்துறவனைப் பார்க்க சம்மதித்தேன்.

அம்மா திரும்பவும் பொருத்தம் பார்க்கத் தொடங் கினாள். அன்று அம்மா மிகவும் சந்தோஷமாயிருந்தாள். ஒரு இடத்திலிருந்து சம்மதித்து வீட்டுக்கு வருவதாகச் சொல்லியிருந்தார்களாம். அவர்களின் விபரம் கேட்டபோது அம்மா தயங்கினாள். வற்புறுத்தினேன்.

"நல்ல குடும்பம். மாப்பிள்ளைக்கு விசுவமடுவில இரண்டு ஏக்கர் தோட்டக்காணியும் அஞ்சு ஏக்கர் வயல் காணியும் சொந்தமாயிருக்கு. குறிப்பும் நல்ல பொருத்தம். வேண்டாம் எண்டு சொல்லாதையடா"

அம்மா கெஞ்சினாள். அம்மாவும் என்னை ஏமாற்றியதாய் ஆத்திரம் வந்தது.

"கொஞ்சம் இறங்கி வந்தால் ஏனம்மா எனக்கு பிடிக்காததை கட்டாயப் படுத்துறீங்கள். எனக்கு வேண்டாம் நான் செய்ய மாட்டன். என்னை விடுங்கோ"

"இதுக்கு மேல நான் எங்க போய்த் தேடுறது. இதை விட்டால் நீ இப்பிடியே இருக்க வேண்டியதுதான். எவ்வளவு நாளைக்கு நானும் பொறுமையாய் இருக்கிறது" கோபத்தில் அம்மாவும் கத்தினாள்.

"எனக்கு கலியாணமே வேண்டாம். இப்பிடியே என்னை நிம்மதியாய் இருக்க விடுங்கோ"

"இப்ப தெரியாது. நான் இல்லாத காலத்தில தனிய இருக்கேக்கதான் உனக்கு விளங்கும். உதவிக்கு அண்ணனும் வரமாட்டான் தம்பியும் வரமாட்டான்"

"எனக்கு ஒருத்தருடைய உதவியும் வேண்டாம்" அழுது கொண்டே அறைக்குள் போய்விட்டேன். அம்மா பேசியதை என்னால் தாங்கமுடியவில்லை.

அடுத்த ஒரு கிழமைக்குள் வேணிக்கு திருமணம் சரிவந்து நாளும் குறித்து விட்டார்கள் என்று அறிந்து திகைத்துப் போனேன். விசாரித்தபோது நான் வேண்டாம் என்று மறுத்த விசுவமடு மாப்பிள்ளைதான் என்று தெரிந்ததும் என் கோபமெல்லாம் அவள் மீது திரும்பியது. நான் வேண்டாம் என்று சொன்னவனை அவள் எப்படி செய்யலாம். இனி அவளோடு அவனை எப்படி நேர்கொண்டு பார்ப்பேன் எனக்குத் தெரியாமல் இது எப்படி நடந்தது. ஒளிவு மறைவு இல்லாமல் என்னோடு கதைப்பவள் இதை ஏன் மறைத்தாள். அவளும் என்னை ஏமாற்றி அவமானப் படுத்தி விட்டதாக நினைத்து மறுகினேன். அவள்மீது கோபப்பட்டேன்.

"அப்பாவின் சொல்லை மீறமுடியவில்லை. இந்த வயசுக்கு மேல அவருக்கு பாரமாய் இருக்க முடியாதடி. அதுதான் சம்மதித்தேன். கலியாணத்துக்கு வாடி"

வேணி வந்து கெஞ்சியும் அவள் திருமணத்திற்குப் போகவில்லை. யாரையும் பார்க்க விரும்பாமல் வீட்டில் முடங்கிக் கிடந்தேன். திருமணமாகி விசுவமடுவுக்குப் போக முதல் என்னைக்காண வந்தாள் சந்திக்க மறுத்ததால் அம்மாவிடம் வந்து அழுது விட்டுப் போனாள். நட்பு முறிந்து விட்டது. பிறகு அவளைச் சந்திக்கவேயில்லை.

அதன்பிறகு இரண்டு மூன்று இடங்களிலிருந்து வந்தாலும் ஒன்றும் சரிவரவில்லை. மனமே வெறுத்துப் போய் விட்டது. திருமணமே வேண்டாம் என்று முடிவெடுத்தேன்.

அம்மாவும் உடம்புக்கு முடியாமல் இருந்தாள். அண்ணா அண்ணியை திரும்பவும் வீட்டுக்கு வரச்சொல்லி அம்மா கேட்டதால் இருவரும் வந்து எங்களுடன் இருந் தார்கள். தனக்கு ஏதாவது நடந்தாலும் இவர்கள் எனக்குத் துணையாக இருப்பார்கள் என்று நினைத்தாள். என் கவலையே அம்மாவுக்கு பெரும் பாரமாய் அழுத்தி நோயாளியாய் படுக் கையில் விழுத்திவிட்டது. மூன்று வருடங்கள் நோயோடு போராடி ஒரு நாள் என்னைவிட்டே போய் விட்டாள். என் விருப்பங்களுக்கு மதிப்புக் கொடுத்து எனக்காக கஷ்டப் பட்ட அம்மாவை படுக்கையில் இருந்த அந்த நாட்களில்தான் ஒரு குறையுமில்லாமல் பார்த்துக் கொண்டேன். ஆனாலும் என் மனதுக்கு திருப்தியில்லை. படுக்கையில் இருந்தாலும் அம்மா என்கூடவே இருந்திருக்கலாம். இன்னும் கவனமாய் பார்த்திருக்கலாம். என் கவலை இல்லாவிட்டால் பல வருசங்கள் அம்மா என்னோடு இருந்திருப்பாள் என்ற எண்ணமே என்னைக் கொன்றது. அதையே அண்ணா அண்ணி யும் அடிக்கடி சொல்லிக் காட்டும்போது தாங்கமுடியாமல் துடித்தேன்.

அம்மாவின் இறுதிச்சடங்குக்கு லண்டனிலிருந்து தம்பி குடும்பத்தோடு வந்திருந்தான்.

"என்னக்கா நீ கடைசிவரைக்கும் தனியாளாய் இருக்கிறதாய் முடிவு எடுத்திட்டியா. அம்மா உன்னோட எவ்வளவு கஷ்டப்பட்டா. பிறகு எண்டாலும் அம்மா சொல்லுறதைக் கேட்டிருக்கலாம். உன்னால எல்லாருக்கும் கவலைதான். அண்ணா அண்ணியோட பார்த்து நடந்து கொள்" மனம் நொந்தாலும் மௌனமாய் இருந்தேன்.

அவர்கள் எல்லோரும் ஒன்றாகயிருந்து கதைக்கும்போது சகஜமாய் அவர்களோடு கதைக்கமுடியவில்லை. அவர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விலகி அந்த வீட்டில் வேண்டாத விருந்தாளியாய் ஒதுங்கியிருந்தேன்.

நாட்கள் போகப் போக என் நிலைமை மோசமாகிக் கொண்டே போனது. அண்ணி வாய்திறந்தாலே பயந்து நடுங்கினேன். அம்மா போனதோடு என் பிடிவாதம் தைரியம் எல்லாம் போய்விட்டது போல் உணர்ந்தேன். என்னால் அம்மா பட்ட கஷ்டங்களையும் துன்பங்களையும் நினைத்து நினைத்து மனம் உடைந்து அழுதேன். இப்படியொரு நிலமை வரக்கூடாது என்றுதானே அம்மா கஷ்டப்பட்டாள். ஏன் அவ்வளவு பிடிவாதமாய் இருந்தேன். பிற்காலம் இப்படியாகும் என்று நினைத்துப் பார்க்கவில்லையே இன்று அனுபவிக்கிறேனே. வேணி கூடச்சொன்னாளே: கேட்டேனா. வேணியின் நினைவு வந்ததும் அவளைப் பார்க்கவேண்டும் அவளோடு பேச வேண்டும் என்று மனம் துடித்தது. விசாரித்தபோது விசுவமடுவை விட்டு வவுனியா போய் விட்டதாகச் சொன்னார்கள். அவளும் என்னை விட்டுத் தூரப்போய்விட்டாள். அவளோடு தொடர்பு கொள்ள முடியாமல் தவித்தேன். எனக்கிருக்கும் ஒரே ஆறுதல் அவள்தான். என்னை அவள் புரிந்து கொள்ளுவாள் என்ற நம்பிக்கையில் அவளோடு தொடர்பில் இருப்பவர்களைத் தேடினேன். அவர்கள் மூலம் வேணியின் தொலைபேசி இலக்கம் கிடைக்கும் என்று நம்பினேன். முயற்சி பலன் தந்தது.

இன்றுதான் தொலைபேசி இலக்கம் கையில் கிடைத்தது. அண்ணா அண்ணி வீட்டிலிருந்தார்கள்.

"அவளை நிம்மதியாய் இருக்க விடன். அவள் வேண்டாம் எண்டு நீதானே கலைச்சாய். இப்ப என்னத்துக்கு அவளுக்கு போன் பண்ணிறாய். அவள் புத்திசாலி தன்ர வாழ்க்கையைப் பார்த்துக் கொண்டு போட்டாள். ஆசைக்கும் ஒரு அளவு இருக்கு. இந்த மூஞ்சியை வைச்சுக் கொண்டு படிச்சவன் உத்தியோகம் பார்க்கிறவன் வடிவான மாப்பிளை கேட்குதோ. இன்னும் எவ்வளவு காலத்துக்கு உன்னை வைச்சுப் பார்க்கிறதோ எல்லாம் என்ர தலையெழுத்து..."

அண்ணியின் வாயிலிருந்து வார்த்தைகள் கொட்டிக் கொண்டேயிருந்தது. எதுவும் பேசாமல் மௌனமாய் இருந்தேன். கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

"என்னத்துக்கு இப்ப அழுகிறாய் இப்பிடியொரு நிலமை வரும் எண்டு உனக்குத் தெரியாதே. தொடர்ந்து படிச்சிருந்தால் வேலைக்காவது போயிருக்கலாம். இனி வீட்டிலேயே இருக்கவேண்டியதுதான்"

அண்ணா சொன்னதைக்கேட்டு அண்ணி ஏளனமாகப் பார்த்தாள்.

இருவரும் வெளியே போனபின் கண்களைத் துடைத்துவிட்டு வேணியின் நம்பரை அழுத்தினேன். மனதில் எழுந்த பதட்டத்தை மறைத்து காத்திருந்தேன். வேணியின் குரலைக் கேட்டதும் அடங்கியிருந்த அழுகை பீறிட்டது. என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"வேணி நான்... நான்" பேசமுடியாமல் விம்மினேன்.

"காயத்திரி நீயாடி. உன்ர கோபம் ஆறி என்னோட கதைக்க இவ்வளவு நாள் எடுத்திட்டியேடி. நான் உன்னை மறக்கவேயில்லையடி. விசாரிச்சுக் கொண்டுதான் இருக்கிறன் உன்னைப்பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். நீ ஒண்டுமே சொல்லவேண்டாம். விசுவமடுவில இருந்த காணிகளை வித்து வவுனியாவுக்கு வந்திட்டம். சொந்தக்கடை வாங்கி அவர் நடத்துறார். அதோட இப்ப மூண்டு மாசமாய் வயோதிபர் இல்லமும் நடத்துறம். அறுபது வயதுக்கு மேற்பட்ட ஆதரவு இல்லாத அம்மாக்கள் இருபத்தைஞ்சு பேர் இருக்கினம். நான்தான் பொறுப்பாய் இருந்து கவனிக்கிறன். எனக்குத் துணையாய் நீயும் வாடி. உனக்கும் ஆறுதலாய் இருக்கும். வருவாய்தானே. உனக்கு சம்மதம் எண்டால் சொல்லுடி நான் வாறன் என்னோடவரலாம்" என்னைக் கதைக்கவிடாமல் மூச்சு வாங்க அவள் சொன்னதைக் கேட்டு திகைத்தே போனேன். என் கஷ்டங்களை உணர்ந்து அதற்கு தீர்வு தந்து எனக்கு விடுதலை தந்தவளை இவ்வளவு நாளும் உணராமல் இருந்தேனே.

"அம்மாவும் நீயும் தாண்டி என்னைப் புரிஞ்சு கொண்டு தாங்கினீங்கள். நான்தான் இரண்டுபேரையும் நோகவைச்சிட்டன். இப்ப அம்மா இடத்தில நீ இருக்கிறாய் அதுபோதும் எனக்கு. வந்து என்னைக் கூட்டிக்கொண்டு போடி" அழுகை முட்டிக் கொண்டு வந்தாலும் மனப் பாரம் இறங்கி மனம் லேசானது. சந்தோஷத்திலும் அழுகை வருகிறது.

* * *

சங்க காலத்திலேயே ஜாதிப் பிரிவுகள் வந்துவிட்டன. 'வந்து விட்டனவா? என்று சொல்ல வேண்டியது ஆய்வாளர்களது கடமை. சங்க காலத்து ஐயர்கள் , திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் என்கிறார் இளம்குளம் குஞ்ஞன் பிள்ளை. 'வேளா பார்பன்' என்பவர்கள் அவர்கள்தாம் என்பது அவர் கருத்து.
அப்படியானால் வெளியிலிருந்து ஜாதிப் பிரிவுகள் வரவில்லை,
ஏற்கனவே இருந்தன என்பதுதான் அர்த்தமா?
வரலாறு என்பது களிமண்மாதிரி; பிள்ளையாராகவும் பிடிக்கலாம், குரங்காகவும் பிடிக்கலாம். அவரவர்கள் நிகழ்காலத்தில் கொண்டிருக்கும் கோட்பாடு சம்பந்தப்பட்டது இது. இந்திய அரசியலாளர்கள் ' 'பாரத புண்ணிய பூமியின் வரலாறு திரும்ப எழுதப்படவேண்டும்' என்கிறார்கள். இந்திய வரலாற்று ஆராய்ச்சி மையத்தில் இருக்கும் வரலாற்றுப் பேராசிரியர்கள் அனைவரும் காவியுடை தரித்திருக்க வேண்டுமென்கிறார்கள்.

**- இந்திரா பார்த்தசாரதி-**

**(1998ஆம் ஆண்டு கணையாழியில் வந்த கட்டுரையிலிருந்து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவஜோதி ஜோகரட்னம்,
லண்டன்



# மனிதக் கிருமி

இயற்கை தன்கோட்டில் சுயமாகவே இயங்கிக் கொண்டிருக்கிறது. மனிதர்கள் குறியீட்டுச் சொல்லி னூடாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். எதற்கெடுத் தாலும் பாஸ்வேட்தான் இன்றைய உலகம். உலகில் இயற்கையாக மலரும் செடி கொடிகளும் பறவைகளும் தத்தமது பயணத்தில் சென்று கொண்டிருக்கின்றன. அவற்றிற்கு அச்சம் இல்லை. தயக்கம் என்பதே இல்லை. ஆனால் மனிதன் தான் மனிதனுக்குப் பயப்படுகிறான். அச்சத்தில் கதவை மூடிக் கொள்கின்றான். மனிதர்களை மனிதர்கள் பார்த்தவுடன் கற்பனையில் கூடக் காட்சிப் படுத்த முடியாத கதவை மூடிக்கொள்ளும் காலமா இது? மனித வாழ்க்கை ஒரு புதிராகத் தென்படுகிறது இவளுக்கு. இது ஒரு கொரோனாக் காலம். இவளுள்ளும் விரிகிறது இனம் தெரியாத அச்சம்.

அத்தோடு தொடர்ந்து உக்ரைன் ரஷ்யப் போர் தொடர்ந்து அர்த்தமில்லாமல் போய்க் கொண்டிருக் கிறதே! வல்லரசுகளோடு பிரதேச வல்லரசுகளை பகைத்துக் கொள்ளும் வேலைத்திட்டம் போலல்லவோ தெரிகின்றது என்று அஞ்சுகின்றாள் இவள். அதுக்குள்ள நசிபடுகின்ற சனங்கள் என்ன பாவம் செய்ததுகளோ! தலைமைகளின்ர பலவீனத்தால அதுகள்தான் இரையாகு துகள். ஏதோ சொல்லினம் செய்தியில். செயற்கையாக தோற்றுவிக்கப் பட்ட இந்தக் கொரோனாவைவிட இவங்களெல்லோ அபாயகரமான நச்சுக்கிருமிகளை உருவாக்கி எல்லாப்பக்கமும் மறைச்சு வைச்சிருக்கிறாங் களாம். அவற்றை ஏவிவிட்டுக் கொண்டு சனங்களையும், கட்டிடங்களையும் அழிக்கிறாங்கள். சமூகத்தை நேசிக்கின்ற இவள் இவைகளை அறிஞ்சு நெஞ்சுள் வெடிக்கின்றாள். என்ன கொடுமையான செயல்கள் இவை? இயற்கை நமக்கு நிறையவே கற்றுத் தருகிறது.

கொரோனா காலத்தில் இப்போ நிறையவே புத்தகங்களை வாசித்துக் கொண்டிருந்தாள். வாழ்க்கை யின் இனிமையைக் கற்றுத்தருவது போல் சில நூல்கள் இவளுக்கு இருந்தது.

'தன் சிறுநீரகமும், கண்களும் பழுதுபட்ட நிலையிலும் தன் மரணம்வரை உருப்பெருக்கிக் கண்ணாடித் துணையோடு புத்தகங்களைப் படித்து வந்தவர்தான் தந்தை பெரியார். பெண் விடுதலைக்கு வழி என்ன என்று கேட்ட போது, அவர்கள் கைகளிலுள்ள கரண்டிகளைப் பிடுங்கி எறிந்து விட்டு புத்தகங்களைக் கொடுங்கள்' என்றாராம். ஆனால் தொழில் நுட்பங்களெல்லோ இன்று எக்கச்சக்கமாகப் பெருகி ஷூம் தளங்கள், அது இது என்று விரிந்து விட்டன. பல்வேறுபட்ட நண்பர்களையும் கொரோனா காலத்தில் அதனூடாகக் காணமுடிகிறது. மறதி என்பது மனிதர்களின் இயல்பாகிவிடுகிற ஒன்றுதானே! ஆனால் மறப்பதை யெல்லாம் நினைவுபடுத்தி எழுதுவதுதான் எழுத்தாளனின் செயலா? என்று இவளை எண்ண வைக்கிறது. காலம் விசித்திரமானது. கற்பனை உலகில் சஞ்சரிக்கின்றவள் இவள். இலக்கியங்களை இவள் தொழுது கொண்டிருக்கிறாள் இப்போ.

ஒரு நாள் என்பது வாழ்க்கையில் கிடைக்க முடியாத ஒன்று என்று இவள் இப்போ உணருகின்றாள். நன்மைகள் செய்தால் நிச்சயம் வெல்லும் எனத் தன் மனக்குரலால் ஒலிக்கிறாள். ஆனால் தீமைகள்தானே உலகத்தால் வசீகரிக்கப்படுகின்றது. இந்த உலகத்தில் தீயதிற்கும் தேவை இருக்கிறதா? உணர்வு ரீதியாக அந்தக் குரோமோசோன்களால் ஆக்கப்பட்டதுகள் தானே இந்த ஜென்மங்கள். ஒருபோதுமே இதுகள் திருந்தாதுகளா?... என்று தனக்குள் மின்னலாகித் தெறிக்கும் குரலுக்குள் ஒரு வெளிச்சத்தைத் தேடுகின்றாள்.

தற்போது கொரோனா கொஞ்சம் வெளிச்சம் காட்டிக்கொள்ளத் தொடங்கியுள்ளது. லண்டனில் சட்ட திட்டங்கள் தளர்த்தப்பட்டுக் கொண்டு வருகின்றன. சட்டத்தைக் கொண்டுவந்தவர்களே ஒழுங்காகக் கடைப் பிடிச்சவையா? தனக்குள்ளேயே அவற்றை நினைத்து ஒரு வரட்டுச் சிரிப்பு இவளுக்கு. ஆனால் இப்போ திருமண விழாக்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், கலை விழாக்கள், அரங்கேற்றங்கள், மகளிர் தினங்கள் என்று லண்டனில் சிறு சிறு பரபரப்புகள் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டன. நண்பியின் மகளின் பதினெட்டாவது பிறந்தநாள் கொண்டாட்ட அழைப்பு இவளுக்கு. நெருங்கிய நண்பியின் மகள். தொற்றுநோய் என்ற இந்த ஒரு நெருக்கடியான சூழ்நிலையின் பின்னர் பலரையும் சந்திக்கப் போகும் ஒரு அரிய சந்தர்ப்பம்.

நெருங்கிப் பழகும் நண்பிகளுக்கும் உறவினர்க ளுக்கும் மட்டும்தான் அழைப்பு விடுவதாக நண்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாள். எனது நெருங்கிய நண்பியும் உனக்கு விருப்பமான நண்பி 'சப்னா'வையும் குடும்பத்துடன் அழைத்துள்ளேன் என்றாள் நண்பி.

அப்படியா உனது மகளின் கொண்டாட்டத்தோடு மீண்டும் தொடரப்போகும் கொண்டாட்ட நாட்கள்... மகிழ்ந்து கொண்டாள் இவள்.

சப்னா பாரிய இனந்தெரியாத மூட்டுக்கள் சார்ந்த தசைகளின் வருத்தத்தினால் பாதிக்கப்பட்டவள். லண்டனில் பல்வேறு வைத்தியங்களை மேற்கொண்டும் அந்த நோய்க்கான மருந்துகள் கண்டுபிடிக்கவில்லை என்று மருத்துவர்கள் கூறியதால் பலனளிக்காமல் துன்பப்பட்டவள். பலரின் ஆலோசனைகளைக் கேட்டு இந்தியாவிற்குச் சென்று வைத்தியங்களை செய்து பார்த்தவள். விடாமுயற்சியுடனும் இறுதியாக புதிய உற்சாகத்தோடும் யோகாப் பயிற்சியை மேற்கொண்டவள். ஆனால் அந்த யோகாப்பயிற்சியின் பின்னர்தான் அத்தகைய ஒரு நோயிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டவள். இனந்தெரியாத அந்த நோயிலிருந்து குணமாகி இன்றும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு மறுபிறப்பானவள் என்றேதான் சப்னாவைக் கூறவேண்டும்.

பழகுவதற்கு இனிமையானவள். வைத்திய முயற்சிகளினால் பலனளிக்காத தனது நோய் யோகாப்பயிற்சியினால் மீண்டும் குணம்பெற்ற தைரியத்தில் அந்த யோகப் பயிற்சிக் கலையை முறைப்படி கற்றுக்கொண்டவள். அந்த யோகாக் கலையை தனது சமூகத்தினருக்கும் பயனளிக்கச் செய்ய வேண்டும் என்ற மிகுந்த விருப்புடையவள். சப்னா நினைத்தது போன்றே லண்டனில் பல சமூக செயற்பாட்டு நிலையங்களில் தனது கற்பித்தல் மூலம் யோகாப்பணியை மேற்கொண்டு வந்தவள் தான்.

ஆனால் இந்தக் கொரானாக் காலத்தினால் எல்லாமே முடங்கி ஒரு பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு விட்டதாக சப்னா கூறுவாள். எனக்கு என் பக்கத் துணையாக இருந்து எனக்கு நம்பிக்கை தந்தவர் என் துணைவர்தான் என்று எப்போதுமே சப்னா கூறுவாள். அவர் ஒரு தெய்வம் மாதிரி. எனது இரு குழந்தைகளையும் வளர்த்தெடுப்பதில் மிகவும் துணை புரிவார் என்றும் சப்னா ஓயாமல் கூறுவாள். அடேயப்பா என்ன கொடுத்துவைத்தவள். சப்னாவுக்கு இப்படி ஒருவர் துணைவராகக் கிடைத்திருக்கிறதே! பல குடும்பங்களில் துணைவர்கள்தான் எதிரிகள்போல் செயற்படுவதையும் இவள் பார்த்திருக்கிறாள். இன்றைய காலகட்டத்தில் அதுவும் லண்டன் நகரில் வாழ்பவர் இவ்வளவு நோயால் பாதிக்கப்பட்டு மீண்டும் எழுந்தவளோடு அன்பாக இருப்பது குறித்து இவளின் ஆழ்மனது மகிழ்ந்தது. சந்தோஷமான சப்னாவின் வாழ்வு நீடூழி வாழவேண்டும் என இவள் மனதில் அடிக்கடி மீட்டுவாள்.

இதே போன்று இவளின் இன்னொரு நண்பி புவனா பெரிய நோயினால் பாதிக்கப்பட்டபோது அந்த நோய் குறித்து எதுவுமே இவள் அறியாதிருந்தாள். ஆனால் புவனா தன் இதயத்தின் வேதனைகளை லண்டனில் இடம்பெற்ற கலை விழா நிகழ்ச்சியில் இவளைக் கண்டு விட்டு தானாகவே கொட்டித்தீர்த்தாள். இவளைக் கண்டதும் ஓடிவந்து ஆரத்தழுவியபடி தனக்கு கொடிய நோயான புற்றுநோய் என்று இவளுக்கு கூறியதை எண்ணும்போது இதயம் வேதனையில் பனித்துக்கொண்டது. மனதில் இருப்பதை ஒரு சிலரிடம்தான் வெளிப்படுத்த முடியுமோ என இவள் எண்ணினாள். அந்த வகையில்தான் புவனா ஓடிவந்து வெளிப்படுத்தியிருக்கிறாள்போல்.

'சீ என்னது? வலுவிழந்த பெண்குரலாகி மௌனத்தில் துடிக்கிறாளே! இந்த நோயால் வேதனைப்படும் இவளுக்கு இப்படிப் போலியாக நடிக்கும் துணைவரும் - பிரபலம் தேடும் பிள்ளைகளுமா?' என்று இவளின் மனம் கலங்கியதுண்டு. அவள் ஒரு பெண். அவள் ஒரு தாய். 'விரைவில் இந்த உலகுகிற்கு விடை கொடுக்கப்போகின்றேன்' என்பதை அவள் அறிந்திருந்தாள். புவனாவின் நிலையைக் கேட்டு அதிர்ந்துவிட்டாள் இவள். புவனாவின் நச்சுப்பிடித்த வார்த்தையில் இதயத்தின் கனம் அடர்த்தியாகி ஒலித்ததை இவள் அவதானிக்காமலில்லை. அதிர்வோடு நண்பியின் உணர்வுகளைப் இவள் புரிந்து கொண்டாள். கையை இறுக்கியபடி ஆறுதல் சொன்னாள். பரபரப்பான உலகத்தில் புவனாவின் வார்த்தையின் கனத்தை இன்று நினைத்தாலும் கண்கள் துளிர்க்கின்றன... இப்போ இந்த உலகில் அவள் இல்லை. எம்மிடமிருந்து விடை பெற்றுவிட்டாள்தான். ஆனால் இந்த வசந்த காலத்தின் மலர்களும் இலைகளும் துளிர்த்து அழகிய சூரியஒளியில் ஜொலிப்பதுபோல்புவனா இன்றும்ஜொலித்துக் கொண்டேதான்இவளுள்இருக்கின்றாள்.

அந்த வகையில் சப்னா மிகவும் அதிஷ்டசாலி என எண்ணிக்கொண்டவள் இவள்.

பிறந்தநாள் நிகழ்ச்சிகள் நல்லபடியாக நடந்து கொண்டிருந்தன. அழகிய வண்ண வண்ண வழமையான உடையலங்காரங்களும் ஆடல்பாடல் இசையும் கூடியிருந்தன. மேசைகளில் குளிர்பானங்களும் ஏற்ற சிற்றுண்டிகளும் கலைநயத்தோடு குலைந்து கிடந்தன. நண்பர்கள், குழந்தைகள், இளையவர்கள், உறவினர்கள், குடும்பங்கள் என்று கொரோனா காலத்தின் பின்னரான ஒரு முதற் சந்திப்பின் வாழ்வின் பல்வேறு விசித்திரங்களாகித் திளைத்தன. சப்னாவும் தனது இரு பிள்ளைகளோடும் வருகை தந்துகொண்டிருந்தாள். இவளுக்குப் பக்கத்தில் இருந்த ஆசனங்களில் ஆனந்த அக்களிப்பில் அமர்ந்துகொண்டாள்.

மகளின் உருவத்தில் அம்மா எப்படிப்பட்டவள் என்று அழகு காட்டுகிறது என்று ஆரவாரித்து சப்னாவோடு இவள் சல்லாபிக்கத் தொடங்கினாள். சப்னாவின் இரு பிள்ளைகளும் வளர்ந்து அழகிய மாற்றங்கள் வெளிப்பட்டுக் காட்சி தந்தன. வாழ்க்கை மகத்தானது என்று இவள் எண்ணினாள். 'இந்தப் பெருந் தொற்றுதலின் பின்னர் ஆறு ஓடிக்கொண்டிருப்பதுபோல் அழகாக ஓடிக்கொண்டிருக்கிறதே வாழ்க்கை' என்று நன்றியோடு இவள் தன்னுள் ஒரு தன்னம்பிகையால் மஞ்சள் வர்ணம் தீட்டும்போது... சப்னா இவளின் காதினுள் ரகசியமாகச் சொன்னாள் உன்னோடு ஒரு முக்கிய விடயம் பேசவேண்டும்.

என்ன முக்கிய விடயம் சப்னா?

சப்னாவின் முகத்தில் ஒரு வித சோக நிழல் படிந்ததை அவதானிக்காமல் இல்லை இவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவில் போன்றது எம் வாழ்க்கை சப்னா. அதில் பல வர்ண நிறங்கள் இருப்பது போன்று இன்ப துன்பங்கள் பிணைந்திருக்கும். கவலைப் படாதே! கோடிக்கணக்கானோர் வாழ்ந்துவிட்டுப் போன பூமி இது. மனதை வாட்டும் துன்பத்திலிருந்து விடுபட்டு வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து வெற்றிகரமாக எடுத்துக்கொண்டு போ சப்னா. உனக்கு நான் புத்தி சொல்லத் தேவையில்லை. காரணம் எத்தனையோ உடல் மன அழுத்தத்திலிருந்து மீண்டு வந்தவள்தானே நீ.

'எனது கணவரும் நானும் விவாகரத்துக்கான ஆயத்தங்கள் மேற்கொண்டுவிட்டோம்...' என்றாள் சப்னா.

என்ன சப்னா கூறுகின்றாய்? நம்பவே முடிய வில்லையே!

வியப்பில் விழித்துக்கொண்டாள் இவள். உங்கள் இளமையான இரு பிள்ளைகளின் நிலைமைகள். அவர்கள் இன்னும் உயர்கல்வி நிலையைக் கூட முடிக்கவில்லையே! சப்னா உன் உடல்நிலை... ஏன் இந்த முடிவை எடுத்து வீட்டைத் தண்டனைக் கூடமாக மாற்றினீர்கள் சப்னா?

நாம் இருவரும் எதுவித வாக்குவாதமோ சண்டையோ பிடிக்கவில்லை. ஆனால் அவரின் செயற்பாட்டால் நான் அதிர்ந்துவிட்டேன். நான் அவரை முற்றுமுழுதாக நம்பி விட்டேன். எதையும் நான் சந்தேகத்துடன் அணுகியதே யில்லை. ஆனால் வாழ்வை நடித்து, இப்படிக் கடத்திக் கொண்டிருப்பதை என்னால் நம்பவே முடியவில்லை. வாழ்க்கைத் துணைவன் என்று எல்லாவற்றையும் அதீதமாக நம்பி ஏமாந்துவிட்டேன். அரசாங்கத்தால் பிள்ளைகளுக்கு வரும் சலுகைப்பணத்தையும் தனது தனிப்பட்ட வங்கிக்கே மாற்றி எடுத்துக்கொண்டே இருந்திருக்கிறார்.

நீங்கள் இருவரும் சேர்ந்த இணைப்பு வங்கிக் கணக்கு இல்லையா சப்னா?

இல்லை.

அந்தப் பணத்தில் வீட்டுச் செலவுக்கு தருவார் தானே சப்னா?

இல்லை. நான் எனது சேமிப்பில் உள்ள பணத்தில் தான் செலவு செய்து கொள்வேன். ஆனால் வீட்டுக்கான தொகைப்பணத்தை மட்டும் செலுத்திக் கொண்டிருப்பார்.

பொதுவாக இவளின் கேள்விகள் சாதாரணமாக எல்லோருமே எழுப்பும் கேள்விகள் தான். ஆனால் அவர்களுக் கிடையில் என்னென்ன புதிர்களோ... உறவின் விஸ்தாரங்கள் சித்திரங்களாகின.

சப்னா மௌனமாகிவிட்டு கூறினாள்: 'விவகாரத்து கேட்பதோடு மட்டுமல்ல நாம் இருக்கும் வீட்டின் உரிமையைத்தான் தனது வீடு என்று முக்கியமாக்கிக் கோருகின்றார். இதைப்பற்றி இப்போதைக்கு யாரிடமாவது மூச்சு விட்டிடாதே என்றாள்' சப்னா! அதுதான் பெரிய தலையிடியாய் இருக்கு.

அது சரி இந்த வீடு இருவருக்குமானதுதானே சப்னா! இருவரின் பெயரில் தானே வீடு இருக்கிறது?

இல்லை. அவரின் பெயரில் மட்டும் தான் வீடு இருக்கிறது. மூளை கெட்டவளே! என்ன சப்பனா கூறுகின்றாய்? நீயும் அவருடன் குடும்பமாகத்தானே இந்த வீட்டில் இருக்கிறீர்கள்?

ஓம். இரண்டு பிள்ளைகளும் தான்.

அத்துடன் நீ உடல் நலம் குன்றியவள். சட்டப்படி திருமணம் செய்திருக்கிறீர்கள்தானே! சட்டத்துடன் வாதாடி ஒரு வெற்றி காணலாம். இந்தத் தொற்றுக்காலத்தில் எத்தனையோபேர் இப்படி ஆசைப்பட்டு என்னத்தைக் கண்டார்கள்? இருக்கிற நிமிடத்தை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் சப்னா. உக்ரைன் நாட்டுக் கட்டிடங்களைப் தொலைக்காட்சியில் நீ பார்க்க இல்லையா?... உலகப் பைத்தியத்தனம் என்றல்லவா சப்னா உன் துணைவரை எனக்கு எண்ணத் தோன்றுகின்றது சப்னா, மறைந்துபோன தன் மனைவிக்காக ஷாஜகான் நினைவு மண்டபத்தைக் கட்டினான். தாஜ்மகாலைப்போல் ஒரு இனிய கல்லறையைத் தவிர இன்றைவரை வேறொன்றையும் நாம் கேள்விட் பட்டதில்லை. ஆனால் குடும்பமாக இருக்கிற வீட்டில தனது வீடு என்று கேட்டுக்கொண்டு இருக்கிற ஆம்பிளையா இந்தப்பிறவி...

சப்னா தலையைக் கவிழ்ந்தபடி மௌனமாகி இருந்தாள்.

யாராவது அவருக்கு குடும்ப நிலைமைகள் உனது நிலைகள் பற்றி எடுத்துக் கூறமாட்டார்களா? வாழ்நாள் முழுவதும் மனித மனச்சாட்சியைத் தொட்டுக்கொண்டே இருக்கும் விடயங்களை படிக்கமாட்டாரா? உலகம் நிறைந்த வகுப்பறைகளால் ஆனது. எதற்காக இப்படி ஒரு முடிவுகளை எடுத்தார்கள்? மனிதர்கள் மட்டுமல்ல, வீடுகளுக்கும் மாற்றங்கள் ஏற்படும் என்பதை எல்லோருமே உணர வேண்டும். வீடுகளும், கட்டிடங்களும் சிலகாலம் வாழ்ந்து மனிதர்கள்போல் மறைந்து போகின்றன என்பதுதான் உண்மை சப்னா. நீ கூறுவது உண்மைதான்... மீண்டும் மௌனத்தில் சப்னா.

விம்மிக்கொண்டு அவளில் புறப்பட்டவை வெடித்துக்கொண்டு வந்த குரலில்...

'நீ ஏதோ புத்தகம், தத்துவம் என்று பேசிக்கொண்டிருக்கிறாய். ஆனால் அவர் இந்தக் கொரோனாத்தொற்றுக் காலத்தில் என் உடல் நோயிலிருந்து தப்பமாட்டேன். கொரோனாத் தொற்று என்னையும் இந்த உலகிலிருந்து மாய்த்துவிடும்' என்றுதான் அவர் கருதினார். ஆனால் நான் என் மனத்தின் நம்பிக்கையாலும், என் யோகாப் பயிற்சியாலும், என் பிள்ளைகளின் ஆறுதலாலும் இன்றும் நான் உயிர் வாழ்கின்றேன் என்றாள்.

சப்னா இதனைக் கூறும்போது கொரோனாவை விட பயங்கரமான கிருமியாகக் கிடக்கிறதே இந்த ஆள்? என்று இவள் உடல் அதிர்ந்துகொண்டது.

பிள்ளைகளே! எல்லோரும் மேடைக்கு வாருங்கோ. பிள்ளைக்கான பிறந்தநாள் 'கேக்' வெட்டுவதற்கு. சப்னாவின் இரண்டு பிள்ளைகளும் அலங்காரத்தோடு பவனியாகிச் சென்றுகொண்டிருந்தார்கள். மகிழ்வான பிறந்தநாள் இசையோடு பிறந்தநாள் கொண்டாட்டம் களை கட்டிக் கொண்டிருந்தது....

* * *


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கதை-25
பூங்கோதை
லண்டன்



# மூன்றுவினாடி விதி

**சா**ளரத்தை ஒட்டிய படி கட்டியிருந்த அந்தத் தட்டில் பலவிதமான நிறங்களில் ரோஜாக்களும் சின்னதாய் ஒரு மல்லிகைக் கொடியும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து பூத்துக் குலுங்கின. அந்த அறையெங்கும் இயற்கையான மலர்களின் வாசனை மிக மென்மையாகப் பரவியிருந்தது. சாளரத்தினூடாகத் தெரிந்த நீல வானத்தில் தூரப் பறந்து கொண்டிருந்த கருப்பும் வெள்ளையுமான பறவைகள் இரண்டு பஞ்சாய்ப் பரவிக் கிடந்த மேகத்தின் உள்ளே புகுந்து மறைந்து போயின.

சிவசங்கரன் வழமையாக விருப்பத்தோடு இரசிக்கும் எதுவும் இன்று அவருக்கு மனதில் ஒட்டவில்லை.

சிவசங்கரனின் மனம் எதையோ இழந்தது போன்று தவித்துக் கொண்டிருந்தது. அலைபேசியைப் பார்த்தார். வானதி அழைத்திருந்தாள். அவளோடு பேச முடியவில்லை. அலைபேசியின் வாழ்கைக் காலம் முடிவுறப் போகிறது. இன்று முழுதும் மனது ஏதோ நெகிழ்வாய் இருந்தது அவருக்கு.

அவர் மனம் வானதியின் உரையாடல்கள் சார்ந்து பல வருடங்கள் பின் நோக்கி நகர்ந்தது. எத்தனை விதமான விதிகளை அவருக்கு எடுத்துக் காட்டியிருக்கிறாள் இந்தக் குறும்புக்காரி. அவற்றில் பிரதானமான இரண்டை அவர் யோசித்துக் கொண்டார்.

ஏனோ இன்று அவை நினைவில் வந்தன.

"நிலத்தில விழுந்த பிஸ்கெட்டை எடுத்து வாயில போட்டுச் சாப்பிடுறதே? கூடாத பழக்கம் செல்லம்!" சிவசங்கரன் மூன்று வயதான வானதிக்கு அன்போடும் கண்டிப்போடும் சொல்கிறார். வானதி அவரைத் திரும்பிப் பார்த்த பார்வையில், அவள் முகம் எங்கும் குறும்பு கொப்பளித்தது.

அவரும் வானதி முன்பள்ளி செல்லத் தொடங்கிய இந்த மூன்று மாதங்களில் அவள் பழக்க வழக்கங்கள் நல்லதும், கெட்டதும், வினோதமானதுமாய் மாறி வருவதை வியப்போடு கவனித்துக் கொண்டுதான் இருந்தார்.

"ஐயோ தாத்தா, அது கூடாத பழக்கம் இல்லை. இது த்ரீ செக்கண்ட் ரூல் தாத்தா! த்ரீ செக்கண்ட் ரூல்! த்ரீ செகண்டில எடுத்தால் ஒரு ஜேர்ம்ஸூம் சாப்பாட்டில ஒட்டாதாம் தாத்தா." வானதி பலமாகச் சிரித்தவாறே தாத்தாவின் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தம் தந்தாள்.

"இதெல்லாம் யார் என்ர செல்லத்துக்கு சொல்லித்தந்தது? எனக்குக் கோவம் கோவமாய் வருது!"

"எனக்கு மாயா தான் சொல்லித் தந்தவ. அவவுக்குத்தான் எல்லாம் தெரியும்."

"அவவுக்கு யாராம் சொல்லிக் குடுத்தது?"

"ஐயோ தாத்தா, மாயாவுக்கு இரண்டு உயரமான அக்காமார் இருக்கினமாம். அவையள் பெரிய பள்ளிக்கூடத்தில படிக்கினமாம். மாயாவுக்கு அவை தான் எல்லாம் சொல்லிக் குடிப்பினம்." வானதி கண்களை விரித்து, கைகளை ஆட்டி, அபிநயம் பிடித்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்ம்ம்.... சரியாய்ப் போச்சு!"

நாவல் மரத்தின் கொப்புகளை உலுப்பி, மண்ணில் விழுந்த பழங்களைப் பாய்ந்து பொறுக்கி, மண்ணை ஊதி ஊதித் தனக்கு உண்ணத் தந்த தாயின் நினைவு வந்து போனது அவருக்கு. அவளுக்குச் சரி பிழையைச் சொல்லிக் கொடுத்தாற் போயிற்று என நினைத்துக் கொண்டார்.

"சரி, சரி, தாத்தா வாங்கோ, தமிழ் எழுதக் காட்டித் தாறன் எண்டு சொன்னீங்கள்..." வானதி சட்டென இன்னொரு செயலுக்குத் தாவினாள்.

தமிழில் அவளது பெயரைப் பல தடவைகள் தவறாய் எழுதி, அதை வெட்டித் திரும்பவும் எழுதிப் பார்த்து பழகிக் கொண்டதோடு அவளது முதல் வகுப்பு அன்றிலிருந்து தாத்தாவை ஆசிரியராகவும் மாற்றியது.

மேற்குலக நாடொன்றில் பிறந்து வளர்ந்த பெண் என்று சொன்னால் யாரும் நம்பவா போகிறார்கள்? சிவசங்கரனின் கிராமத்துப் பேச்சு வழக்கிலேயே பேசப் பழகிக் கொண்டவளை ஐந்து வயது வந்த போது ஒரு தமிழ் பாடசாலையில் இணைத்து, அவளை எழுதவும் வாசிக்கவும் செய்தார் சிவசங்கரன்.

தன் மகனுக்குச் சொல்லிக் கொடுக்க முடியாததை தன் பேத்திக்குச் சொல்லிக் கொடுக்க முடிவதில் அவருக்கும் ஒரு ஆத்ம திருப்தி மட்டுமில்லாது அப்படியான புது விடயங்களில், புதிய கற்றலில் அவள் பெரிதும் ஆர்வம் காட்டியதும் இன்னொரு காரணமாயிருந்தது. வானதிக்குப் புதிய கற்றல்கள் அனைத்தும் விரைவில் படிந்து வருவதை வீட்டில் அவள் பெற்றோர்களும் , அவள் முன்பள்ளியில் ஆசிரியர்களும் அவதானித்து உரையாடல்களில் பேசிக் கொண்டனர்.

இப்படியாகச் சில வருடங்கள் மாயமாய் ஓடி மறைந்த பொழுதொன்றில், அதே குட்டிப் பெண், பதின்ம வயதுகளை எட்டிப் பிடித்தபடி இன்னொரு விதியைச் சொன்ன போது சிவசங்கரன் விக்கித்துப் போனார்.

"அது பிழை மாயா. அன்பு எண்டிறது ஒருவரோடு மட்டும் தான் வரும், வர வேணும். ஒருவர் இல்லாத இடத்தில இன்னொருத்தரை அந்த இடத்தில வைச்சுப் பார்க்கிறது சரியில்லை. இதையும் மாயாவே சொல்லித் தந்தவ?"

"தாத்தா, மாயாவுக்குத் தான் எல்லாம் தெரியும். நீங்களும் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ பார்ப்பம்." குறும்பு கொப்பளித்தது அவள் கண்களில்.

அன்று சிவசங்கரன் முடிந்தவரை மிகத் தெளிவாகத் தன் பக்கத்து நியாயத்தை மிக அமைதியாகச் சொல்லி முடித்தார்.

அப்பொழுதும் மாயா, "ஐயோ, தாத்தா, இது போஸ்ட் கோட் விதி *(Post code rule)* பயப்பிடாதையுங்கோ, இது எனக்கில்லை, நான் அதை செய்யப் போறதும் இல்லை. ஆனால் அது பிழையில்லை. தாத்தா, பிழையில்லை." அதே சிரிப்போடு அவர் இரண்டு கன்னங்களிலும் முத்தங்கள் கொடுத்து விட்டு ஓடிப் போனாள்.

குழந்தைகளும் வெறுமே வீட்டிலும், பள்ளியிலும் மட்டுமல்ல அவர்களைச் சுற்றியுள்ள சமூகத்திலிருந்தும் நிறையவே நல்லது கெட்டதைக் கற்றுக் கொள்கிறார்கள் என்பது சிவசங்கரனுக்கு ஏற்கனவே அவர் மகன் தேவன் பாடசாலைக்குப் போயிருந்த காலத்திலும் தெரிந்தது தான் என்றாலும் மாயா போன்று எதையும் இத்தனை விரிவாக, அக்கு வேறு ஆணி வேறாக அவன் அவரோடு உரையாடியதில்லை. ஒரு வேளை பெண்கள் வேறு மாதிரி இருப்பார்களோ அல்லது தேவனோடு அவர் உரையாடும் அளவிற்கு அவரிடம் நேரம் இருந்ததில்லையோ எனப் பலவாறும் அவரை மாயா எண்ண வைத்தாள்.

அவளது முற்போக்கான சிந்தனைகள் அவருக்கு ஒரு வித பயத்தைக் கொடுத்தது. அவளைப் பொறுத்தவரையில் அவள் கூறுவதும் சரியாகத்தான் பட்டது.

*****************

"தாத்தா..."

"................."

"ஹேய் தாத்தா..."

"................."

"ஐ லவ் யூ தாத்தா..."

"................."

"சரி, நான் இனிக் கூப்பிட மாட்டன். இண் டைக்கு மாயா வீட்டுக்குப் போகப் போறன்."

ஷாலினி தன் உருண்ட விழிகளை இன்னும் பெரிதாக்கி, குரலை ஒரு படி உயர்த்திக் கூப்பிட்டதும் தான் சிவசங்கரன் தன்னிலைக்கு வந்திருந்தார். அவருக்கு வெட்கமும், உடனடியாகப் பதில் சொல்லாமல் போனதற்குக் காரணம் கேட்பாள் என்ற அவதியும் உருவாகியது.

"என்ன ஷாலிக்குட்டி? பள்ளிக்கூடம் எப்பிடிப் போச்சுது?"

"அதெல்லாம் நல்லாய்த் தான் போச்சுது. ஆனா உங்களுக்கென்ன ஆச்சுது என்ர ஆசைத் தாத்தா? இவ்வளவு நேரம் கூப்பிட்டுப் பார்த்தனான்?"

சிவசங்கரனுக்கு திக்கென்றது. எதுவும் சொல்ல வரவில்லை. ஷாலினியை அவர் வெறும் மகன் வயிற்றுப் பேத்தியாக மட்டும் பார்க்கவில்லை. அவள் அவருக்கு ஒரு மகளாக, தோழியாக, தாயாக எனப் பல்வேறு வடிவம் கொள்பவள். எங்கிருந்து தான் அவளிடம் இவ்வளவு அன்பும், பாசமும், அதனோடு இணைந்த குணாதிசயங்களும் வந்ததோ என அவரை அவள் அடிக்கடி சிந்திக்க வைத்தாள்.

ஏதாவது சொல்லும் வரையில் அவள் இங்கிருந்து அகலப்போவதில்லை என்பது அவருக்கு நன்கு தெரிந்ததுதான்.

"எனக்குச் சரியான தலையிடி. நாள் முழுவதும் கரைச்சல் தந்து கொண்டிருக்கு." அவர் வாயில் வந்த தைச் சொன்னதில் ஷாலினியின் கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டார். அவள் அவரது மனதை வாசிப்பதில் மிகவும் கை தேர்ந்தவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தைலம் தேய்ச்சுப் பார்த்தீங்களோ? நான் மத்தியானம் இடை வேளையில உங்களுக்கு ஃபோன் பண்ணினன், ஏன் கதைக்கேல்ல?"

ஷாலினியின் அடுத்தடுத்த கேள்விகள் அவரை ஆட்டம் காணப் பண்ணின. எத்தனை விதமாக என்னை ஆட்டம் கொள்ளச் செய்கிறாள் என்று எண்ணிக் கொண்டார் சிவசங்கரன்.

தன் அலைபேசியில் யாராவது அழைக்கும் போது அவர்களது அழைப்புக் கேட்கும், ஆனால் அவர் பேசுவது அவர்களுக்குக் கேட்பதில்லை என்பதைக் கடந்த இரு நாட்களாக அவர் அவதானித்திருந்தார். அதை வானதியின் காதுகளில் போடுவதற்கு மனம் ஒப்பவில்லை.

"தாத்தா, உங்கட ஃபோன் வேலை செய்யுதோ? நீங்கள் உங்கட ஃபிரெண்ட்ஸோட கதைக்கேல்லையோ?" மாயாவின் அடுக்கடுக்கான கேள்விகளில் திக்குமுக்காடிப் போனார் சிவசங்கரன். அவரை ஒரு குழந்தை போல நிற்க வைத்து, நறுக்கென்று கேள்வி கேட்கும் அவளை அவர் பரிதாபமாகப் பார்த்தவாறு நின்றார்.

பிடித்தவர்களோடு பேசுவது ஒன்றும் தவறல்லவே? அவர் தங்கை மாதத்தில் ஒரு தடவையோ இரு தடவையோ தவறாது பேசுவார். இப்போது சில மாதங்களாக உமாவும் இணைந்து கொண்டிருக்கிறாள். நாளைக்கு சனிக்கிழமை அவர் ஆவலோடு உமாவோடு பேசும் நாள் அது. என்ன செய்வது? மனம் பிசைந்தது.

அவரோடு சிறு வயதில் ஓடி விளையாடித் திரிந்த அவரது பக்கத்து வீட்டுப் பெண் உமாவை இத்தனை வருடங்கள் கழித்து கடந்த வருடம் தான் அவரது தங்கை கண்டு பிடித்து அவரோடும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்திருந்தாள். உமா, எட்டு வயது சின்னவளான அவரது தங்கையின் சினேகிதியும் கூட.

போர்க்கால அவலங்களும், அதன் பின்னான அரசியல், பொருளாதாரச் சிக்கல்களும் உமாவின் சாதாரண வாழ்வைச் சுக்கு நூறாக்கியிருந்தது. பெற்றோர், கணவன் உட்பட பல உறவுகளைக் காவு கொடுத்து விட்டு எங்கெல்லாமோ அலைந்து திரிந்த பின், இறுதியாக சிறு வயதில் வாழ்ந்த இடத்திற்கே திரும்பி வந்து வீடு இருந்த இடத்தில் கொட்டில் ஒன்று போட்டுக் கொண்டிருந்தவளோடு சிவசங்கரனுக்குப் பேசுவதற்கும், அவள் சொல்வதைக் கேட்பதற்கும் ஆயிரம் விடயங்கள் இருந்தன.

சிவசங்கரன் தனக்கென பெரிதாக எதுவும் செலவு செய்யாதவர். அவருக்கென இருந்த ஒரு பழைய மாதிரி கைத்தொலைபேசியில் பெரிதாக அவருக்கு அழைப்புகள் வருவதும் கிடையாது. ஆனால் இப்போதெல்லாம் அவருக்கு உமாவோடு பேசுவது தெளிவாகக் கேட்கவில்லை என்பது பெரும் கவலையாக மனதைத் தைத்தபடியே இருந்தது.

இந்த கைத்தொலைபேசியில் இலக்கங்கள் கூடப் பெரிதாகத் தெரியாமல் ஏதோ குத்து மதிப்பில் தான் அவர் அதை உபயோகித்து வந்திருந்தார். மகனையும் மருமகளையும் கேட்டால் உடனே வாங்கித் தந்துவிடக் கூடும். ஆனால் அவருக்கு அது பெரும் அவஸ்தையைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

வயது போனதன் பின்னர் எதற்குத் தொலைபேசி என மகனும், மருமகளும் எண்ணுவார்களோ என அவர் மனம் எண்ணத் தொடங்கியது. அவருக்கொன்றும் வயது வட்டுக்குள் போய்விடவில்லை என்று அவர் உள்மனம் சொல்லியது. அறுபது வயது ஆவதற்கு இன்னும் முன்னூற்றி இருபது நாட்கள் இருக்கின்றன என்று நாட்காட்டி கூறியது.

"தாத்தா இந்த ஃபோனைத் தலையைச் சுத்திப் போட்டு வீட்டுக்கு வெளியால எறிஞ்சு விடுங்கோ, யாரும் எடுக்கினமோ எண்டு பார்ப்பம். என்ன தாத்தா இதில ஒரு வீடியோவும் இல்லைப் போல? எப்பிடித் தாத்தா உங்களுக்கு பொழுது போகுது? நான், அப்பா, அம்மா எல்லாரும் காலையில போய் பின்னேரம் தான் வீட்டுக்கு வாறம். ஒருத்தரோடும் வடிவாய்க் கதைக்காமல் எப்படி இருக்கிறது? சொல்லுங்கோ பார்ப்பம்?"

வானதி மூச்சு விடாமல் அடிக்கடி சாடினாள். அவளுக்குத் தாத்தா மீது அத்தனை நேசம், அக்கறை இருந்தது.

"நான் அப்பாவைக் கேட்கட்டோ?" இதே கேள்வியைப் பல தடவைகள் கேட்டு விட்டாள்.

"இல்லை, வேண்டாம், நான் கேட்கிறன்." மாயாவை வீணாக இப்படியான விடயங்களில் சம்பந்தப்படுத்த அவர் மனம் ஒப்பவில்லை.

நாளை சனிக்கிழமை உமா ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றின் அனுசரணையுடன் ஒரு முதியோர் பராமரிப்பு நிலையமொன்றிற்கு வேலைக்கு செல்கிறாள். அவர்களே பல விடயங்களைக் கற்றுக் கொடுத்து, அதன் மூலமாக அவள் ஆரம்பிக்கப் போகும் புது வேலை. தன் காலில் சுயமாக நிற்க வேண்டும் என்ற அவள் விருப்பிற்கேற்ப அவளுக்குக் கிடைத்திருக்கும் மிகப் பெரும் சந்தர்ப்பம் என சிவசங்கரனின் தங்கை கடந்த வாரம் கூறியிருந்தாள். நீண்ட இடப்பெயர்வு, பெரும் இழப்புகள், இடையில் நின்று போன பல்கலைக்கழகக் கல்வி, தொடர்ச்சியான பொருளாதாரச் சிக்கல்கள் என அடிபட்டுப் போன வாழ்வில் ஒரு சிறு நகர்வொன்று மிகப் பெரும் நம்பிக்கையை உமாவிற்குக் கொடுத்திருப்பதை அவர்கள் இருவருமே உணர்ந்தார்கள்.

உமாவும் தயங்கித் தயங்கி வெட்கமும், பெருமையும் போட்டி போட ஒரு குழந்தை போன்ற ஆர்வத்தோடு அந்த விடயத்தை சிவசங்கரனுக்கும் சொல்லிய போது அவரும் அதற்காக பெருமகிழ்ச்சி கொண்டார். தன்னோடு சிறுவயதில் ஓடித் திரிந்து விளையாடிய அதே உமாவை மீண்டும் கண்டது போன்ற உணர்வில் தத்தளித்துப் போனார். சக மனித நேயத்தை இயல்பாகக் கொண்டவர் சிவசங்கரன்.

"நான் நாளைக்குப் பின்னேரம் கதைக்கிறன். புது வேலை, புது ஆட்கள், புது நுட்பங்கள் என்று பயப்பிட வேண்டாம், எல்லாம் நல்லபடி நடக்கும்." சிவசங்கரன் ஒரு தரத்திற்குப் பத்துத் தரம் உமாவிற்குக் கூறி விட்டு அலை பேசியை வைத்தார். ஆனால் பாழாய்ப் போன ஃபோன் அவரைக் கையை விட்டுவிட்டது. நாளைக்கு மதியம் உமாவோடு பேச வேண்டும், என்ன நடந்தது எனக் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தூக்கம் கூட வராமல் தவித்த அவர் மனது அவரை வியக்க வைத்தது.

மாலினியை இழந்த பின் அவர் எந்தப் பெண்களுடனும் கதைத்ததில்லை. அதற்கான அவசியமும் அவருக்கிருந்ததில்லை. தேவன், மகனாக இருந்தாலும் அவர்களுக்கிடையில் இத்தனை வருடங்களில் மெல்லியதாய் ஒரு இடைவெளி விழுந்திருந்தது. பாசம் இருந்தாலும், வெளிநாட்டு வாழ்வின் இயந்திரத்தனம் ஒன்று அவர்கள் வாழ்வையும் ஆக்கிரமித்திருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது நினைவுகள் பின்னோக்கி நகர்ந்ததில் கனதியான விடயங்கள் பலதும் மனதின் ஆழத்திலிருந்து வழமை போல மேல் எழுந்தன.

***** ***** *****

இருபத்தியிரண்டு வயதில் சிவசங்கரனும் அவரை விட ஒரு வயது இளையவளான அவர் மனைவி மாலினியும் ஊரை விட்டுப் புறப்பட வேண்டி வந்தபோது, தாய், தந்தையை விமானத் தாக்குதலில் பலி கொடுத்து விட்டு பரிதவித்து நின்ற நான்கு வயதுச் சிறுவனான தேவனையும் தூக்கிக் கொண்டே ஓடினார்கள். குழந்தையாய் இருந்தவனை என்ன செய்வதெனத் தெரியாது போனாலும், அவன் மேல் கொண்ட அந்த நேசத்தில் அவர்கள் இருவருமே அவனுக்கு அம்மாவும் அப்பாவுமாகினர்.

வெளிநாடுகள் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தைக் காரணம் காட்டி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 1951ம் ஆண்டின் சாசனத்தின் படி அகதிகளை ஏற்றுக் கொண்ட போது சிவசங்கரனும், மாலினியும் தேவனோடு பிரித்தானியாவில் தஞ்சம் புகுந்தனர்.

தேவனுக்கு ஊரின் நினைவுகள் சிறுகச் சிறுக மறந்து போய்விடும் என அவர்கள் இருவரும் நினைத்தது பலிக்கவில்லை என்பதை விட அவனது அதீதமான அறிவும் ஞாபக சக்தியும் அவர்களை அசர வைத்தன.

சிவசங்கரனுக்கும் மாலினிக்கும் இன்னொரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளும் தேவையோ ஆசையோ இல்லாமலே போயிருந்தது. புத்தம் புதுச் சூழல், இடப்பெயர்வின் கலாச்சார அதிர்வுகள், பொருளாதாரத் தேவைகளைக் கட்டுக்குள் வைத்திருந்தாலும், தாயகத்தின் நிலை கருதி தொடர்ச்சியாக இருந்த தொப்புள் கொடி உறவுகளின் பொருளாதாரத் தேவைகள் எனப் பலதும் அவர்களை இறுக்கியே வைத்திருந்தன.

தேவனுக்குப் பெரிதாகப் பாடசாலைக்கு வெளியேயான கலை, கலாச்சார தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத சூழ்நிலையிலேயே அவர்கள் இருவரும் இருந்தாலும் தேவன் தமிழ் கதைப்பதை மட்டும் மறந்து விடவில்லை.

அவர்கள் வாழ்ந்த புறநகருக்கு அண்மையில் இப்போது போல அன்று தமிழ் பாடசாலைகள், அமைப்புகள் குறைவாக இருந்ததும், அவர்கள் இருவரும் அப்போது கார் வசதிகள் இல்லாமலே வாழ்ந்ததும், தொடர்ந்தும் இருவரும் அதிக வருமானம் ஈட்டித்தரும் தொழில்களில் இல்லாமல் ஓய்வின்றி உழைத்ததும் எனப் பல காரணங்கள் அவர்களை அவ்வாறு இருக்க வைத்து விட்டன.

காலப்பெருவெளியில் சிவசங்கரனைத் தனித்து அலைய விட்டுவிட்டு அவர் மனைவி மாலினி இதயத்தில் ஏற்பட்ட திடீர் அடைப்பொன்றினால் அகாலமாய் மறைந்து போனார். வானதிக்கும் ஏழு வயதில் அப்பம்மாவை இழந்தது பெரும் அதிர்ச்சியைத் தந்தாலும் அவள் தான் ஏதோ பெரியவள் போல, தன் துயரை மறைத்து தாத்தாவோடு இன்னும் பல பொழுது போக்குகளில் இறங்கினாள்.

அவற்றில் ஒன்றாக, வீட்டுத் தோட்டம் ஒன்று அழகாக மலர்ந்தது. அது சிவசங்கரனின் புதிய குடியிருப்பாகத் தோன்றி மனதை அங்கே இலயிக்கப் பண்ணியது.

வருடங்கள் ஓடி மறைந்து, அவள் உயர் பள்ளி சென்ற போதும் அவளுக்குத் தாத்தா தான் வீட்டில் சிநேகிதன். அவள் தாய், தந்தைக்கு வேலை, வீடு, சமூகப் பணிகள் என மூழ்கிப் போனாலும் வானதிக்கு தாத்தா துணை இருப்பது அவர்களுக்கு பெரும் ஆறுதலாக இருந்ததில் வியப்பில்லை.

வானதியும் தாத்தாவும் பல விடயங்களைத் தேடித் தேடி அறிந்து கொண்டார்கள். சில மேற்கத்தேய நடைமுறை விடயங்கள் தாத்தாவிற்கு பெரும் சஞ்சலத்தை உண்டு பண்ணுகிறது என்பதை வானதி அறிந்து கொண்டு அதை இருவரும் பெரும் உரையாடல் ஆக்கினார்கள். பதின்ம வயதிற்குள் அவளுக்குள் இத்தனை சிந்தனை ஊற்றுக்களா என சிவசங்கரன் வியந்து தான் போனார்.

***** ***** *****

வயோதிபம் என்றெல்லாம் இல்லாவிட்டாலும் இன்னொருவரில் தங்கியிருப்பதென்பது எத்தனை விதமான அவஸ்தைகளை உருவாக்குகிறது என்று எண்ணியபடியே கட்டிலில் மீண்டும் போய் அமர்ந்து கொண்டார். கண்களை மூடித்தியானித்தார். மனம் இன்னும் அமைதி கொள்ளவில்லை.

இன்று சனிக்கிழமை. ஊரில் மாலையாகப் போகிறது. அவர் தங்கைக்கும் உமாவிற்கும் சொன்னது போல அவரது வார்த்தைகளைக் காப்பாற்ற முடியாமல் போகிறது. தலை போகிற விசயம் இல்லைத்தான். இருந்தாலும் அவருக்கென்னவோ உமாவோடு பேச முடிந்தால் அடுத்த சில நாட்களுக்கு மனம் மகிழ்வோடு இருக்கும் என்று தோன்றியது.

அவர் கையில் பழுதாய்ப் போன அலைபேசியை வைத்து உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இனிய பிறந்த நாள் வாழ்த்துகள் என்ர தாத்தாவுக்கு!" வானதி பாய்ந்து வந்து அவரைக் கட்டிக் கொண்டாள்.

அவருக்கு பெரும் ஆச்சர்யமாக இருந்தது, எப்படி ஒருவர் தன்னுடைய பிறந்த நாளை மறக்கலாம்? அவர் எழுந்திருக்க முயன்றார். எழும்பிய வேகத்தில் அவர் கையிலிருந்த அலைபேசி நிலத்தில் விழுந்தது.

"தாத்தா, இது தான் த்ரீ செகண்ட் ரூல்!" வானதி நிலத்தில் விழுந்த அலைபேசியை சட்டென எடுத்துக் கொண்டு அவர் கையில் ஒரு புது அலைபேசியை வைத்தாள். அவருக்கு அது பேரதிர்ச்சியைத் தந்தது. இன்பமான அதிர்ச்சி தான். அவர் அதை எதிர் பார்க்கவில்லை.

பழைய அலைபேசியிலிருந்த சிம் அட்டையை புதிய அலைபேசிக்கு மாற்றிய அந்த நிமிடத்தில் உமாவிடமிருந்து அவருக்கு அழைப்பு வந்ததை அறிந்து, உடனடியாகத் தாத்தாவிடம் புதிய அலைபேசியைக் கொடுத்து விட்டு அந்த அறையை விட்டு நீங்கினாள் வானதி.

கதவிற்கு வெளியே நின்றவாறே மெல்லிய குரலில் ஒரு இரகசியம் பேசுவது போல, " ஹேய் தாத்தா, இது தான் உங்களுக்கு போஸ்ட் கோட் ரூலாயும் இருக்கலாம். என்றவாறே ஓடி மறைந்தாள்.

* * *

எழுத்தே ஒரு சித்திரம். மொழி வரிவடிவம் பெற்றது
பழம் சித்திரக் கலையின் ஒரு பரிணாம நிலை.
சித்திர எழுத்துப்போய் லிபி தோன்றியது மனிதப்
பண்பாட்டு வளர்ச்சியில் மாபெரும் புரட்சி.

**- தமிழ்நாடன், கணையாழியில்-**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோர்ச் அருளானந்தம்

# தமிழ் மணி





மறவர்மன் மிகவும் களைப்படைந்து விட்டான். அந்த உடைந்து போன கப்பலில் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கிறான். அவனோடு கூட வந்த மாலுமிகள் எல்லோரையும் புயலும், கடலும் விழுங்கி விட்டது. ஈழநாட்டின், திருகோணமலையிலிருந்து சுவர்ணதீபாவுக்கு (தற்போதைய இந்தோனேசியா) சரக்குகளுடன் சென்ற கப்பல், இடைவழியில் புயலுக்குள் மாட்டிக்கொண்டது. கப்பல் பாறை ஒன்றுடன் மோத மாலுமிகள் எல்லோரும் கடலுக்குள் தூக்கி வீசப்பட்டார்கள். மறவர்மன் கப்பலுக்குள்ளேயே வீசப்பட்டு தலையில் அடிபட்டு மயங்கி விட்டான்.

மயக்கம் தெளிந்து பார்த்தபோது கப்பல் அலைகளோடு இழுபட்டு பல தூரம் சென்று விட்டதையும், மாலுமிகள் எல்லோரும் கடலுக்குள் மூழ்கி விட்டதையும் அறிந்து கொண்டான்.

கப்பல் உடைந்து இருந்தாலும் தொடர்ந்து கடலுக்குள் மிதந்து கொண்டிருந்தது. கடந்த மூன்று நாட்களாக அவன் கப்பலுக்குள் தத்தளித்துக் கொண்டிருக் கின்றான். தன்னோடு வேலை செய்த மாலுமிகளை, நண்பர்களை இழந்த துக்கமும், கப்பலோடு இழுபட்டுச் செல்வதும் களைப்பும், உடல் அசதியையும் தோற்றுவித்தன.

கப்பல் தென்கிழக்கு திசையை நோக்கி அலைகளுடன் இழுபட்டுக் கொண்டிருந்தது. எங்காவது ஒரு இடத்தில் கரை ஏதாவது தெரிகிறதோ என்ற ஏக்கத்துடன் நான்கு திசையையும் பார்த்துக் கொண்டிருந்த மறவர்மன், தன்னை அறியாமலே தூங்கிவிட்டான்.

விளங்காத பாசையில் மனிதக் குரல் ஒலிகள் கேட்க கண்ணை விழித்துக் கொண்டான் மறவர்மன். தான் காண்பது கனவோ என நினைத்துக் கொண்டான். ஒரு ஒடுங்கிய நீண்ட கப்பல் அதனுள் மிகவும் திடகாத்திரமான மனிதர்கள். அவர்கள் உடல் முழுவதும் பச்சை குத்தப்பட்டு இருந்தது. முகங்களில் கூட பச்சை குத்தி இருந்தார்கள்.

அதில் இருவர் கைகளை நீட்டி அவன் கப்பலுக்குள் ஏறுவதற்கு உதவி செய்தார்கள். மறவர்மன் தன்னுடைய கப்பலில் இருந்த மணியையும், தன்னுடைய புல்லாங் குழலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொண்டு கப்பலுக்குள் ஏறினான். அவனுடைய உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கியது. இந்தக் கடலுக்குள்ளேயே இறந்து விடுவேன் என்று நினைத்துக் கொண்டிருந்தவனுக்கு இந்த இனம் தெரியாத மக்கள் உதவி புரிகிறார்கள்.

கப்பலில் ஏறியவனை ஒரு இடத்தில் அமர வைத்து ஒரு சிறிய பாத்திரத்தில் தண்ணீர் கொடுத்தார்கள். மறவர்மன் நினைத்துக் கொண்டான் இவர்கள் அனுபவம் மிக்க மாலுமிகளாக இருக்க வேண்டும் கடலில் தத்தளித்து வந்தவனுக்கு பெரிய அளவில் தண்ணீர் கொடுக்கக் கூடாது. அது அவர்களுக்கு தெரிந்திருக்கிறது

சிறிது நேரத்தின் பின் அவனுக்கு அந்தக் கப்பலில் இருந்த ஒருவன் ஒரு பாத்திரத்தில் உணவு பரிமாறினான். அது ஒரு சுட்ட கிழங்கு. அதை சாப்பிட்ட போது, ஈழ நாட்டில் உள்ள வத்தாளைக் கிழங்கின் ருசி தெரிந்தது. ஆனால் இந்த கிழங்கின் அளவு கொஞ்சம் பெரிதாக இருந்தது.

அந்த உணவைப் பரிமாறியவன் அந்தக் கப்பலுக்குத் தலைவன் போல் தெரிந்தது அவனுக்கு மறவர்மனின் வயது இருக்கலாம் மிகவும் திடகாத்திரமாக இருந்தான். அவர்கள் அவனோடு கதைக்க முற்பட்டார்கள். அவன் இயன்ற அளவு அவர்களுக்குப் பதிலளிக்க முயற்சித்தான். ஆனால் அவர்களால் அவன் கதைத்ததையோ, அவனால் அவர்கள் கதைத்ததையோ விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இரண்டு நாட்கள் கழிந்தன: மறவர்மனுக்கு களைப்பு நீங்கி, உடம்பில் ஒரு உற்சாகமும் தெம்பும் ஏற்பட்டது. அவன் அந்த மாலுமிகளோடு மிகவும் பரிச்சமாய் விட்டான். அவர்கள் கதைப்பது அவனுக்கு விளங்காவிட்டாலும், அவன் கதைப்பது அவர்களுக்கு விளங்காவிட்டாலும், பல விடயங்களை அவர்களோடு பழகியதில் இருந்து விளங்கிக் கொண்டான்.

அவர்கள் "ஔரேயறோவா" என்ற நாட்டைச் சேர்ந்த மௌவுறி இன மக்கள். ஔரேயறோவா என்பது நீண்ட வெள்ளை முகில்களின் நிலம் என்று பொருள்படும். இவர்கள் வடக்கே உள்ள சிறிய தீவுகளில் இருந்து இந்த பெரிய நாடான ஔரேயறோவாக்கு பல நூறு வருடங்களுக்கு முன் வந்து குடியேறியுள்ளார்கள். இந்த மாலுமிகள் வடக்கே இருக்கும் தங்கள் மூதாதையருடைய தீவுகளுக்கு சென்று விட்டு திரும்பவும் தங்கள் நாட்டை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய கப்பலை "வக்கா" என்று அழைப்பார்கள். அந்த கப்பல் 25 முழ நீளம் இருக்கும். ஈழ நாட்டுக் கப்பல்களை விட மிகவும் வித்தியாசமாக இருந்தது. அதனுடைய அமைப்பு ஒரலாகவும், நீண்டதாகவும் இருந்தது. பல மாலுமிகள் சுக்கான்களை பாவித்து அந்த கப்பலை ஓட்டுகிறார்கள். அந்தக் கப்பலில் 18 சுக்கான் ஓட்டிகள் இருந்தார்கள். அதைவிட ஏழு பேர் மேலதிகமாக இருந்தார்கள்.

மாலுமிகளின் முகங்களும், உடல் அமைப்பும் தமிழர்களை விட வித்தியாசமாக இருந்தது. தமிழர்களின் தோலோடு மஞ்சள் கலந்த ஒரு நிறம் அவர்களின் நிறமாக இருந்தது. அந்தக் கப்பலில் மாலுமிகளுக்கு தலைமை தாங்கியவனின் பெயர் "கரடா".

மறவர்மன் அவர்களுக்கு பல விதத்தில் உதவி செய்யத் தொடங்கினான். சுக்கான் வலிப்பது தொடக்கம் சமைப்பது போன்ற வேலைகளில் அவர்களுக்கு உதவி புரிந்தான்.

அடுத்த மூன்று நாட்களில் கப்பல் கரையை அடைந்தது. மாலுமிகளின் உறவினர்களும், இனத்தவர்களும் கரையிலே வரிசையாக நின்றார்கள். மாலுமிகள் இறங்கியதும் கைகளை உயர்த்தியும், கண்களைப் பிரட்டியும், நாக்கை நீட்டியும் தங்களுடைய பாசையில் ஓசையை ஒலிப்பினார்கள். அதைப் பார்க்க ஏதோ சண்டைக்கு தயாராகுவது போல் இருந்தது. மறவர்மன் பயந்து போனான். ஆனால் பின்னர் அதுதான் அவர்களுடைய வரவேற்பு முறை என அறிந்து கொண்டான். அந்த வரவேற்பு முறை "கக்கா" என்று அவர்கள் அழைத்தார்கள்.

அவர்கள் அவனை "மறாய்" என்று அழைக்கப்படும் குடிலுக்கு அழைத்துச் சென்றார்கள். அந்த மறாய் மரத்தினால் செய்யப்பட்ட ஒரு பெரிய குடிலாக இருந்தது. இந்த மக்கள் எல்லோரும் கூட்டுக் குடும்பமாக இந்த மறாயில் வாழ்கிறார்கள்.

மறாயின் வடிவமைப்பு மிகவும் அழகாக இருந்தது. மரங்களால் நேர்த்தியாக செதுக்கப்பட்டிருந்தது. சிற்ப வேலை ஈழ நாட்டு சிற்பவேலையை விட மிகவும் வித்தியாசமாக காணப்பட்டது. மறாயின் முன்புறத்தில் முகம் ஒன்று செதுக்கப்பட்டிருந்தது. இது அவர்கள் இனத்தின் மூதாதையரின் முகத்தை குறிப்பதாக இருந்தது. முகத்தில் இருந்து கூரையைத் தாங்குவதற்காக, இருபக்கமும் கீழே செல்லும் இரண்டு நீண்ட மரங்கள் மூதாதையரின் கைகளைக் குறிக்கின்றன. கட்டிடத்தின் முழுப் பகுதியையும் தாங்கி நிற்கிக்கும் தூண்கள் கால்களைக் குறிக்கின்றன.

கரடா, மறவர்மனை அவர்களுடைய தலைவரிடம் அழைத்துச் சென்றான். அவர்களுடைய தலைவர் இவர்கள் இனத்தில், ஈழ நாட்டின் சிற்றரசருக்கு ஒப்பானவர் போல் இருந்தார். அவர் தோலினாலும், மிருகமென் மயிர்களாலும் உருவாக்கப்பட்ட மேலங்கி ஒன்றை அணிந்திருந்தார். அது தலைவருக்குரிய உடையாகும் மற்றவர்கள் அணிய முடியாது. மௌவுறி மக்கள் தங்கள் தலைவர்களை "ரங்கரிறா" என்று அழைத்தார்கள்.

தலைவர் "கி ஒறா" எனக்கூறி, தன்னுடைய மூக்கை அவனுடைய மூக்குடன் முட்டி அவனை வரவேற்றார். கி ஒறா என்பது ஈழத்தில் வணக்கம் என்ற சொல்லுக்கும், மூக்குகளை முட்டுவது கைகூப்பி வணக்கம் செய்வதற்கும் ஒப்பாகும். இதை "கொன்யி" என்று அழைப்பார்கள். தலைவர் அவனுடன் மிகவும் அன்பாக கதைத்தார். அவன் கதைத்ததை பெரிய அளவில் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அவன் வடமேற்கு பக்கம் உள்ள ஒரு நாட்டிலிருந்து வந்திருக்க வேண்டும் என்பதை அவர் தெரிந்து கொண்டார். ஆனால் அவருக்கு ஈழநாடு என்று தேசம் இருப்பதை பற்றி பெரிதாக தெரியவில்லை.

அவனுக்கு அந்த மறாயில் ஒரு சிறிய இடம் ஒதுக்கி கொடுக்கப்பட்டது. அவனுக்கு தனிப்பட்ட தேவைக்குரிய பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொடுத்தார்கள்.

மக்கள் எல்லோரும் அவனுடன் அன்பாகவும் பண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகவும் பழகினார்கள். மறவர்மன் மெல்ல மெல்ல அவர்களுடைய பழக்கவழக்கங்களைக்கற்று, அவர்களுடைய பாசையைப் பழகி அவர்களில் ஒருவனாக மாறிக்கொண்டிருந்தான்.

மௌவுறி இன மக்கள் தாங்கள் முதல் முதலில் வந்த கப்பலின் தலைவர்களின் பெயரைக் கொண்டு தங்களைக் குழுக்களாக பிரித்து, கப்பலின் தலைவர்களின் பெயர்களை தங்கள் குழுவுக்கு விட்டு இந்த நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். மறவர்மன் வாழ்ந்து வரும் குழுவுக்கு "ரே பரபௌ" என்று பெயர். இவர்கள் "ரே பரபௌ" என்ற கப்பலில் வந்த தலைவரின் வாரிசைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பங்கறேஎன்ற நகரத்தின் தெற்கு பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள்.

பெண்கள் பிள்ளைகளை பராமரிப்பதிலும், நெசவு போன்ற வேலைகளில் ஈடுபட்டு உடைகள் செய்வதிலும் ஈடுபடுவார்கள். அவர்கள் துணிகள் தயாரிக்க தோல்களையும், புற்கள் போன்ற தாவரங்களையும், மற்றும் பறவைகளின் இறகுகளையும் பயன்படுத்தினர். "கறகெகெ" என்ற செடியின் தாள்களை ஈழ நாட்டின் ஓலைகள் போல், கூடைகள், பாய்கள் மற்றும் கயிறுகள், மீன்பிடி வலைகளை செய்ய பயன்படுத்தப்பட்டன.

ஆண்கள் பொதுவாக, மீன்பிடித்தல் மற்றும் வேட்டையாடுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு மறாயில் உள்ளவர்களுக்கு உணவுகளை சேகரிப்பார்கள்: கரடா அவனுக்கு ஆற்றில் விலாங்கு மீன் பிடிப்பதற்கு பழக்கி கொடுத்தான்: கடலில் மீன் பிடிப்பதற்குக் கற்றுக் கொடுத்தான்: காட்டில் வேட்டையாட காட்டிக் கொடுத்தான்: கரடாவும் அவனும் மிகவும் நெருங்கிய நண்பர்களாகினர். மறவர்மன் மற்ற ஆண்களுக்கும் அவர்களது வேலையில் உதவி புரிந்தான். இரவு நேரங்களில் தனது புல்லாங்குழலை வாசித்து மறாயில் உள்ள மக்களை மகிழ்வித்தான்.

அவர்கள் வாழும் பகுதிக்குத் தெற்கே, "கரெய" ஆற்றின் மறுபக்கம், தெற்கு பங்கறேயில் "ஞாய் ரகுகு" என்ற மௌவுறி குழு வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அவர்களுக்கும் இந்த குழுவுக்கும் இடையில் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அவர்களை சந்திக்க வடக்கிலிருந்து, இந்த குழுவின் தலைவர், அவர்களின் மறாய்குச் சென்றார். அவர் செல்லும் போது கரடாவையும், மறவர்மனையும், ஒரு சில முக்கியத்தவர்களையும் அங்கு அழைத்துச் சென்றார்.

அங்கு சென்றபோது அந்தக் குழுவின் தலைவர் அவருடைய மகளை இவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவளுடைய பெயர் "அனகெர". மிகவும் அழகிய பெண். அவளுடைய நீண்ட கண்களும், அழகிய உதடுகளும் அவள் முகத்துக்கு ஒரு கவர்ச்சியைக் கொடுத்தன. அவள் நாடியில் குத்தி இருந்த பச்சை அவளுக்கு இன்னொரு அழகைக் கொடுத்தது. அனகெர என்ற பெயரின் கருத்து தேவதை. அவள் பாப்பதற்குத் தேவதை போன்றே இருந்தாள். அவள் மறவர்மனை பார்த்து புன்முறுவல் செய்தாள். அவளுடைய கண்களும் சிரித்தன. அவன் அவளோடு கதைக்க முற்பட்டான். அவளும், அவனோடு கதைக்க முற்பட்டது போல் தோன்றியது. ஆனால் இருவராலும் ஒருவரோடு ஒருவர் கதைத்துக் கொள்ள முடியவில்லை.

மறாய் வந்து சேர்ந்த அவனுக்கு, அவளை மறக்க முடியவில்லை. அவளின் நினைவுகள் எப்பொழுதும் தோன்றி மறைந்தன. அவள் தனக்கு கிடைக்காளோ என்று அவனது உள்ளம் ஏங்கியது. அடிக்கடி தூக்கத்தை இழந்தான்.

கரடா, அவனில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை கவனித்துக் கொண்டான். அவன் அன்புடன் மறவர்மனை அணுகி அவனுக்கு ஏதாவது பிரச்சனையா என கேட்டான். மறவர்மன் தனது ஏக்கத்தை கரடாவுக்கு விளங்கப்படுத்தினான்.

கரடா கூறினான் "அனகெர மிகவும் நல்ல பெண். அவள் ஒரு அழகியும் கூட. அவள் எல்லாவிதத்திலும் உனக்கு ஏற்றவள். ஆனால் அவளின் தந்தை மிகவும் கோபக்காரர், பொல்லாதவர். அவர் இதை ஏற்றுக் கொள்வாரோ தெரியவில்லை. எனினும் முதலில் அவள் உன்னை விரும்புகிறாளா என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்". மறவர்மன் பதிலளித்தான் "அவள் என்னை பார்த்த விதத்திலும், அவள் என்னைப் பார்த்து புன்முறுவல் செய்த விதத்திலும், நிச்சயமாக அவள் என்னை விரும்புகிறாள் என்றே நான் நம்புகிறேன்"

"நன்று, நீ நாளை மாலை நேரம் ஆற்றங்கரைக்குச் சென்று உன்னுடைய புல்லாங்குழலை இசை. நான் ஆற்றின் மற்றய கரைக்கு அவள் வருவதற்கு ஏற்பாடு செய்கிறேன். அவள் உன்னை விரும்பினால், உன் இசையை இரசிப்பாள். மீண்டும் அடுத்த நாள் நீ வாசிக்கும் போது திரும்பவும் வருவாள். உன்னை உண்மையிலேயே காதலிப்பாளானால், ஒரு நாள் நிச்சயமாக ஆற்றை கடந்து உன்னை வந்து சந்திப்பாள்".

மறவர்மன் கரடா சொன்னதை ஏற்றுக் கொண்டான். அவன் கூறியபடியே அடுத்த நாள் ஆற்றங்கரைக்குச் சென்று தன் புல்லாங்குழலை இசைத்தான். சிறிது நேரம் கழித்து கரையின் மறுபக்கம் அனகெர வந்தாள். அவன் வாசிப்பதையே பார்த்துக் கொண்டு நின்றாள். அவனுடைய இசையை அவள் இரசிப்பது போல் அவனுக்கு தோன்றியது. நேரம் செல்ல இருவரும் தங்கள் தங்கள் திசையில் தங்களது மறாயை நோக்கித் திரும்பினார்கள்.

தொடர்ந்து மாலை நேரங்களில் ஆற்றின் கரைக்குச் சென்று தனது புல்லாங்குழலை இசைத்தான். அனகெரவும் மறுகரைக்கு வந்து அவனுடைய இசையைக் கேட்டு இரசித்தாள். நாட்கள் கழிந்தன. ஒரு நாள் அவன் புல்லாங்குழலை வாசித்துக் கொண்டிருந்தபோது, அவள் திடீரென ஆற்றுக்குள் இறங்கி அவனது கரையை நோக்கி நீந்தி வந்தாள். மறவர்மனின் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கியது. அவள் கரைக்கு வந்ததும் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கண்கள் பேசின. அதற்குப் பிறகு சிறிது நேரம் அவனுடன் கதைத்து விட்டு அவள் திரும்பிச்சென்று விட்டாள்.

அவன் வேகமாக ஓடிச் சென்று நடந்ததை கரடாவிடம் கூறினான். மறவர்மன் மிகவும் ஆனந்தமாக இருப்பதை கண்டு கரடா மகிழ்ச்சி அடைந்தான். அவன் மறவர்மனிடம் கூறினான். "மிகவும் நன்று உனக்கு எனது வாழ்த்துகள். அவள் உனக்கு மிகவும் ஏற்ற பெண். ஆனால் நான் முன் கூறியது போல் அவளின் தந்தையையிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப்படுகிறேன். அவர் இதை ஏற்றுக் கொள்வாரோ தெரியவில்லை. இது எங்களது குழுவுக்கும், அவரது குழுவுக்கும் இடையே ஒரு மிகப்பெரிய பிரச்சனையைக் கூட உருவாக்கலாம். இருந்தாலும் நாங்கள் பொறுத்திருந்து பார்ப்போம்".

மறவர்மன் அனகெரவை அடிக்கடி சந்தித்துக் கொண்டான். நீண்ட நேரம் அவர்கள் கதைத்தார்கள். ஆற்றங் கரையோரம் நடந்தும், ஆடியும், பாடியும் மாலை பொழுதைக் கழித்தார்கள். அவர்களில் உறவு ஒரு காதலாக மலர்ந்தது.

ஒரு நாள் அவள், அவனிடம் கூறினாள் "எனது தந்தை எனக்கும் உனக்கு இடையிலான இந்த காதலுக்கு சம்மதிக்கப் போவதில்லை. நிச்சயமாக இது ஒரு மிகப் பெரிய பிரச்சனையாக வரும். நாங்கள் இதற்கு ஒரு முடிவை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இது என்னாலும் உன்னாலும் மாத்திரம் எடுக்கக் கூடிய முடிவு அல்ல. உங்களுடைய குழுவும், உங்களுடைய தலைவரும் இதற்கு சம்மதிக்க வேண்டும். நான் உன்னுடன் வந்து இங்கேயே தங்குவது ஒரு முடிவாகும். நானும், நீயும் உங்கள் தலைவரைச் சந்தித்து இதைப் பற்றி கதைப்போம். கரடாவுக்கு ஊடாக உங்கள் தலைவரை சந்திக்கும் ஏற்பாட்டைச் செய். நாங்கள் அவரைச் சந்திப்போம்.

அவள் கூறியது அவனுக்குச் சரியாகப்பட்டது. அவன் இந்த இனத்தையோ, குழுவையோ சார்ந்தவன் அல்ல. இவர்கள் இவனைக் காப்பாற்றி, உணவு கொடுத்து, உறங்க இடம் கொடுத்து வைத்திருக்கிறார்கள். அவன் தனியாக எந்த ஒரு விடயத்தைச் செய்ய முடியாத நிலையில் உள்ளான். தன்னுடைய நாடு என்று சொன்னால் அவனுக்கு நண்பர்களுடைய உதவி, உறவினர்களுடைய உதவி என கிடைக்கும். இதைக் கொண்டு ஏதாவது செய்திட முடியும். இங்கே எல்லாம் இந்த இனத்தவர்களிடமும், குழுவினரிடமும் தங்கி உள்ளாது.

அவன், அவள் கூறியபடி கரடாவுடன் கதைத்து தலைவருடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தான். மறவர் மனும், அனகெரவும், கரடாவும் ஒரு மாலைப் பொழுதில் தலைவரைச் சந்தித்தார்கள். அவள் தலைவரிடம் தங்களது காதலைப் பற்றித் தெரிவித்தாள். தான் மறவர்மனுடன் வந்து அவர்களுடைய குழுவுடன் இணைந்து இருக்கப் போவதாகத் தெரிவித்தாள்.

தலைவர் சிறிது நேரம் ஆழமாகச் சிந்தித்தார். பின்னர் மெதுவாக கூறினார். "மகளே நீ இவனுக்கு மிகவும் ஏற்ற பெண். அதேபோல் அவனும் உனக்கு மிகவும் ஏற்ற ஆண். நீங்கள் எனது பிள்ளைகள் போன்றவர்கள். நீங்கள் இருவரும் இணைந்து இருப்பதை நான் விரும்புகிறேன்." அவர் சிறிது நேரம் நிறுத்திவிட்டு தொடர்ந்தார். "ஆனால் ஒரு சிக்கல் இருக்கின்றது. உனக்கு உன் தந்தையைப் பற்றி நன்றாகத் தெரியும். நீ எங்களுடன் வந்து தங்குவாயானால், நிச்சயமாக எமது குழுவுடன் அவர் ஒரு யுத்தத்தைத் தொடங்குவார். இந்த யுத்தத்தில் நாங்கள் வெல்லலாம். அல்லது அவர்கள் வெல்லலாம். நான் யுத்தத்துக்கோ, தோல்விக்கோ பயந்தவன் அல்ல. ஆனால் நமது குழுவும், உங்களது குழுவும் சமபலம் கொண்ட குழுக்கள். சமபலம் கொண்ட குழுக்களுக்கு இடையே யுத்த நிகழ்வின் அழிவு பெரிதாக இருக்கும். எனது கணிப்பின்படி நாங்களும், நீங்களும் ஒவ்வொரு குழுவிலும் எண்பது வீதமான ஆண்களை இழப்போம்"

மறாயில் பெண்களையும், குழந்தைகளையும் கையால் காட்டியபடி தொடர்ந்தார். "இதோ பார் இங்கே இருக்கும் பெண்கள் பெரும்பாலானோர் தங்கள் கணவரை இழக்க நேரிடும். இங்கே இருக்கும் குழந்தைகள் பெரும் பாலானோர் தங்கள் தந்தையை இழக் நேரிடும். இதே நிலை உங்கள் குழுவுக்கும் ஏற்படும். இதைச் சிந்தித்துத்தான் நாம் முடிவு எடுக்க வேண்டும். அநியாயமாக மக்கள் அழிவதையும், பெண்களும், பிள்ளைகளும் பாதிக்கப்படுவதையும், அது எந்த குழுவினராக இருந்தாலும் நான் விரும்பவில்லை. அநேகமாக நீங்களும் விரும்ப மாட்டீர்கள் என்று நினைக்கின்றேன்."

அவர் கூறியதை நிறுத்தினர். அவள் ஏதோ கூற முற்பட்டாள். அவர் அவளை கை சைகை மூலம் நிற்பாட்டச் சொல்லிவிட்டு கூறினார். "இப்போது நீங்கள் முடிவெடுக்க தேவையில்லை. நீங்கள் இரணடு, மூன்று நாள் கழித்து வந்து உங்கள் முடிவை சொல்லுங்கள்"

அவர்கள் தலைவருக்கு நன்றி கூறிவிட்டு மறாயை விட்டு சென்றார்கள். அவள் ஆற்றங்கரை நோக்கி வேகமாக நடந்தாள். மறவர்மனுடனோ, கரடாவுடனோ எதுவும் பேசவில்லை. ஆற்றங்கரையை அடைந்ததும், ஆற்றில் இறங்கி மறு கரைக்கு நீந்திச் சென்று விட்டாள். மறவர்மன் அவள் போவதை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அடுத்த நாள் மாலை பொழுது ஆற்றங்கரைக்குச் சென்று தனது புல்லாங்குழலை இசைத்தான். ஆனான் அவள் வரவில்லை. நாட்கள் நகர்ந்தன. அவள் அவனை வந்து சந்திக்கவும் இல்லை. ஆற்றின் மறுகரைப் பக்கம் வரவும் இல்லை.


மறவர்மன் சோகத்தில் ஆழ்ந்து போனான். அவளைச் சந்திக்க முடியாத கவலை அவனை வாட்டியது. அவள் தனக்கு இனிமேல் கிடைக்க மாட்டாள் என்ற உணர்வு அவனை, அவன் வாழ்க்கையில் ஒரு தோல்வி அடைந்த மனிதன் போல் காட்டியது.

திடீர் என அவனுக்கு தனது சொந்த நாடான ஈழத்தின் நினைவுகள் மனதில் தோன்றின. அவன் அவரது உறவினர்களை, நண்பர்களைப் பிரிந்து ஐந்து ஆண்டுக்கு மேல் ஆகிறது. திரும்பவும் சொந்த நாட்டுக்குப் போய் விடுவோமோ என்று அவனுடைய மனம் எண்ணியது.

அவனுடைய சிந்தனையை கரடாவுக்கு எடுத்துக் கூறினான். கரடா அவனுடைய மனநிலையை அறிந்திருந் தான். இவன் தனது காதல் தாக்கத்திலிருந்து வெளியே வருவது கஷ்டம் என கரடாவுக்கு தெரிந்திருந்தது. அவன் தனது நாட்டுக்கு திரும்புவது நல்லதொரு தீர்வு என கரடா கருதினான். கரடா கூறினான் "நண்பனே இது நல்லதொரு முடிவு. ஆனால் எங்களுடைய கப்பலில் நீ உனது நாட்டுக்கு திரும்பி போக முடியாது. எங்களுடைய கப்பலை ஓட்டுவதற்கு நிறைய சுக்கான் ஓட்டிகள் தேவை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவன் தொடர்தான் "ஆனால் என்னிடம் ஒரு தீர்வு இருகிறது. நாங்கள் கிழக்கு கரையில் உள்ளோம். மேற்கு கரையில் பல தூரத்துக்கு அப்பாலுள்ள "பயிஞரோவா" (ராக்லானின் பண்டைய மௌவுறி பெயர்) என்ற கடற்கரையில், நீ வந்த கப்பல் போல் இரு கப்பல்களை நான் கண்டிருக்கிறேன். அதில் ஒன்று ஓரளவு நல்ல நிலையில் உள்ளது. நல்ல நிலையில் உள்ள கப்பலை இங்கு எடுத்துக் கொண்டு வருவோம். அங்கு சென்று வர பல நாட்கள் எடுக்கலாம். அது மாத்திரமல்ல மேற்குப் பக்கக்கடல் மிகவும் கொந்தளிப்பானது. எங்களில் மேற்குக் கடலுக்குப் பரிச்சயமான சில மாலுமிகள் இருக்கிறார்கள் நாங்கள் அவர்களை கூட்டிக் கொண்டு செல்வோம்" அவன் மேலும் தொடர்தான் "உங்களுடைய இன மக்கள் இங்கே வந்து போய் இருக்கலாம். ஏதோ ஒரு காரணத்தினால் அந்த கப்பல்களை இங்கே விட்டு விட்டார்கள்."

பின்னர் கரடாவும், மறவர்மனும் அந்த கப்பல் இருக்கும் இடத்துக்கு சென்று, வக்கா மூலம் அதை கடல் வழியாக தங்கள் இடத்துக்கு இழுத்து வந்தனர். மாலை நேரங்களில் இருவரும் அந்தக் கப்பலை திருத்தி, புதுப்பிப்பதில் ஈடுபட்டனர். குழுவின் தலைவர் இடைக்கிடை வந்து அவர்களுக்கு சில ஆலோசனைகளை வழங்கி சென்றார்.

கப்பல் திருத்தி முடிந்ததும் மறவர்மன் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உலர் உணவுகளும், தண்ணீர் மற்றும் கடலில் தேவையான பொருட்களும் கப்பலுக்குள் சேகரிக்கப்பட்டது.

மறவர்மன் வெளிக்கிடும் நாளன்று அந்தக் குழுவின் எல்லோரும் கடற்கரையில் வந்து நின்றார்கள். எல்லோர் முகங்களிலும் ஒரு கவலை தெரிந்தது. அவன் அவர்களிடமும், தலைவரிடமும் விடை பெற்ற பின்னர், கரடாவிடம் சென்று அவனை கட்டி அணைத்துக்கொண்டான்.

தன்னுடைய கப்பலிருந்து கொண்டு வந்த மணியை கரடாவுக்கு கொடுத்து, தன்னுடைய நினைவாக வைத்திருக்கும்படி கூறிக் கொண்டான். கரடா அவனிடம் கூறினான். "நானும் உனக்கு ஒரு பரிசு வைத்திருக்கிறேன். அதை கப்பலில் வைத்திருக்கிறேன். கப்பலுக்குள் கறகெகெச்செடியில் செய்த பெரிய போர்வை ஒன்றுக்குள் உள்ளது. நீ நடுக் கடலுக்குள் சென்ற பிறகு அதை எடுத்துப்பார்."

அவன் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு கப்பலை ஓட்டினான். அவனுக்கு கக்கா செய்து வழி அனுப்பி வைத்தார்கள். அவனுடைய கண்களில் கண்ணீர் வழிந்தது. கரடாவும், அவனுடன் கூட இருந்த மக்களும் கண்ணீர் விட்டு அழுதனர். அவனுடைய பிரிவு அவர்களுக்கு ஒரு வேதனையைக் கொடுத்தது. தலைவர் முகத்தில் கவலையின் சாயல் தெரிந்தது ஆனால் அவர் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. நடுக்கடலுக்குச் சென்ற பின் கரடா சொன்னது போல் அந்த போர்வையை நீக்கினான். அதற்குள் இருந்து திடீரென பெண் ஒருத்தி எழுந்து வந்தாள். அவன் திகைத்தும், பயந்தும் விட்டான். ஆனால் அது வேறு யாருமில்லை. அது அனகெர. இப்போது கரடா என்ன செய்து இருக்கிறான் என மறவர்மன் புரிந்து கொண்டான். அவனுடைய உள்ளம் ஆனந்தத்தால் குதூகலித்தது. இருவரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி கொண்டார்கள்.

திடீரென தலைவர் கூறியது அவனுக்கு ஞாபகம் வர, மறவர்மன் அமைதியாகினான். ஏன் அமைதியாகி விட்டாய் என அவள் கேட்டாள். அவன் பதில் அளித்தான். நான் தலைவர் சொன்னதை பற்றி சிந்தித்துப் பார்க்கிறேன். அவள் சிரித்தாள். இது கரடாவின் ஏற்பாடு மாத்திரமல்ல. இது தலைவரின் ஆலோசனைப்படியே நடந்தது. அவர் தான் கரடா மூலம் இதை ஏற்பாடு செய்தார்.

மறவர்மனின் உள்ளம் தலைவருக்கு நன்றி கூறியது. அவள் மேலும் தொடர்ந்தாள். சண்டை வருவதற்கான சாத்திய கூறுகளே இல்லை. நானும் நீயும் காதலிப்பது கரடாவையும், தலைவரையும் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. நான் உன்னுடன் சென்றிருப்பேன் என்று எனது தந்தையோ வேறு எவருமோ எதிர்பார்க்க மாட்டார்கள். அது மாத்திரமல்ல நான் ஆற்றங்கரையில், நீர் ஓடும் பகுதியில் சில மரங்களுக்கு இடையே என்னுடைய நகைகளையும், உடுப்பின் சில பகுதிகளை கிழித்து வைத்து விட்டு வந்திருக்கிறேன்.

அவர்கள் என்னை தேடும் போது அந்த நகைகளையும், உடுப்பின் கிழிந்த பகுதிகளையும் பார்த்துவிட்டு என்னை ஆறு இழுத்துக் கொண்டு போய்விட்டது என்று நினைப்பார்கள். ஆகவே ஒருபோதும் சண்டை நடைபெறாது. அவள் அடித்து கூறினாள்.

அவன் அவளை இறுக்கக்கட்டி அணைத்துக் கொண்டான். அவன் கப்பலை வடமேற்கு திசையை நோக்கி செலுத்த தொடங்கினான். ஔரேயறோவா நாடு இருவர் கண்களையும் விட்டு மறைந்து போனது. ஆனால் நாட்டின் மேலே இருந்த அழகிய நீண்ட வெள்ளை முகில்கள் அவர்கள் கண்களை விட்டு மறைந்து போகவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




B Hamilton, Photo.

Old bell found among the Maori folk by an early missionary. The inscription is in the Tamil script of Southern India.

THE UPPER PORTION OF A TAMIL BELL FOUND IN NEW ZEALAND IN 1836.

THE INSCRIPTION TRANSLATED RUNS: MOHOYIDEN BUKS, SHIP'S BELL.






FAC SIMILE OF INSCRIPTION.

**கதை சம்பந்தப்பட்ட உண்மைச் சம்பவங்கள்**

**1320**

பசிபிக் சமுத்திரத்தில் உள்ள சிறிய தீவுகளில் இருந்து, போலினேசியர்கள் தெற்கே உள்ள ஒரு பெரிய நாட்டுக்கு வந்து குடியேறினார்கள். இந்த நாட்டை அவர்கள் "ஔரேயறோவா" என்று அழைத்தார்கள். ஔரேயறோவா என்பதின் கருத்து நீண்ட வெள்ளை முகில்கள் கொண்ட நிலமாகும். இந்தப் பழங்குடி மக்கள் "மௌவுறி" இன மக்களாவர். இவர்கள் இந்த நாட்டின் வெவ்வேறு நகரங்களில் குடியேறி தங்களை குழுக்களாக (tribe) பிரித்துக் கொண்டனர்.

**1770**

ஔரேயறோவா ஆங்கிலேயரால் கண்டுபிடிக்கப்பட்டு நியூசிலாந்து என பெயரிடப்பட்டது. ஆங்கில குடியேற்றங்கள் தொடங்கின.

**1840**

வில்லியம் கொலென்சோ என்னும் ஆங்கிலப் பாதிரியார் நியூசிலாந்தில் உள்ள "பங்கறே" என்ற நகரத்திற்கு சென்ற போது அங்குள்ள மௌவுறி பெண்கள் ஒரு வெண்கலப் பாத்திரத்தில் சமைப்பதைக் கவனித்தார். இது அந்த நேரத்தில் வழக்கத்திற்கு மாறானதாக இருந்தது, ஏனெனில் அந்த நாட்டில் வெண்கலம் உற்பத்தி செய்யப்படவில்லை. மற்றும் அவர்களுக்கு அதை வழங்கும் வணிக வழிகள் இருந்திருக்கவில்லை. இதைக் கருத்தில் கொண்டு பண்டமாற்றம் மூலம் அந்தப் பாத்திரத்தை, பாதிரியார் பெற்றுக்கொண்டார்.

இது ஒரு கப்பலின் மணியாகும். இந்த மணி 13 செ.மீ உயரமும் 9 செ.மீ அகலமும் உடையது. அதைச் சுற்றிலும் பழங்காலத் தமிழ் எழுத்துகள் பொறிக்கப் பட்டுள்ளன. அதில் "முகைய்யதீன் பக்சு உடைய கப்பல் மணி" எனும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த மணி 500 ஆண்டுகள் பழமையானதாக இருக்கக்கூடும் எனக் கணிக்கப்படுகிறது. இந்த மணி தற்போது வெலிங்டன் நகரத்திலுள்ள "ரி பாபா" அருங்காட்சிச் சாலையில் வைக்கப்படுள்ளது.

*23 May 1936 Waikato Times Article By E H S Kawhla* இக் கட்டுரை நியூசிலாந்தின் மேற்கு பகுதியில் ரக்லான் (*Raglan*) என்ற நகரத்திலுள்ள, "றூவபுகெ" (*Ruapuke*) கடற்கரையில் இருந்த, நூற்றாண்டுகள் பழமையான கப்பலை கோடிட்டுக் காட்டுகிறது. கப்பல் எங்கிருந்து வந்தது என தெரியவில்லை. எச் எஸ் காவ்லா இந்த கப்பலை தமிழ் மணியுடன் தொடர்புபடுத்தியுள்ளார்.

ராக்லானின் மௌவுறி பெயர் "பயினுரோவா".

*30 July 2012 Waikato Times Article By Tom O' Connor*

இந்தக் கப்பலுக்கும், தமிழ் மணிக்கும் தொடர்பில்லை என்றும், தமிழ் மணி இந்தக் கப்பலில் இருந்து வரவில்லை என்றும் ரொம் வாதிடுகிறார்.

மேற்கத்தியர்கள் நியூசிலாந்திற்கு வருவதற்கு முன்பு ஈழத்திலிருந்து (அல்லது தமிழ்நாட்டிலிருந்து) கப்பல்கள் நியூசிலாந்திற்கு வந்தன என்பதை இது குறிக்கிறதா? இந்தக் கப்பலின் பகுதிகள் தற்போது "ஒட்டாகோ" நகரத் திலுள்ள அருங்காட்சிசாலையில் உள்ளன.

* * *




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-27

ஐ. கிருத்திகா
(இந்தியா)



# சுழல்



பன்னீர்ப்பூக்கள் உதிர்ந்து கிடந்தன. உதிர்ந்த பூக்களில் அநேகம் ஷூக்களில் மிதிபட்டு நசுங்கின. அவள் எச்சரிக்கை உணர்வோடு காலடி எடுத்து வைத்தாள். மற்ற இடங்களில் வேகமாக நடப்பவள் அங்கு நடையை மெதுவாக்கினாள்.

அப்படியும் சில சமயம் காலை வைக்கப் போய் தடுமாறி வெடுக்கென இழுத்துக் கொண்டாள். ஓரிருவர் பார்த்து சிரித்தனர். வட்டமான நடைபாதையில் ஆங்காங்கே ஸ்டோன் பென்ச் போடப்பட்டிருந்தது.

அதில் சிலர் அமர்ந்து சொல்லக்கூடாத ரகசியங்களை பேசுவது போல சன்னமாக பேசிக்கொண்டனர். நாலைந்து சுற்றுகள் நடந்து முடித்த சிலருக்கு லேசான மூச்சிரைப்பு ஏற்பட, உடன் வந்தவர்களிடம் பேசுவது போல நடைப் பயிற்சிக்கு இடைவெளி கொடுத்தனர். அவள் பத்துச் சுற்றுகள் முடித்திருந்தாள். ஒரு சுற்றுக்கு மூன்று நிமிடம் வீதம் பத்து சுற்றுகளுக்கு முப்பது நிமிடங்கள். பத்தாவது சுற்று முடிக்கும் போது கடைமையை நிறைவேற்றி விட்டது போன்ற ஆசுவாசம் உண்டாகும்.

அவள் அசோக மரத்தினடியில் கிடந்த அந்த ஸ்டோன் பெஞ்சில் அமர்ந்தாள். கைப்பேசி சிணுங்கிற்று. வழக்கமாய் பேசும் மகனும், அவனைத் தொடர்ந்து பேசும் மகளும் எப்போதும் போல விசாரிப்புகளுடன் முடித்துக் கொள்ள, கைப்பேசியை அணைத்து பைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டுக் கொண்டாள். பார்க்கில் கூட்டம் குறையத் துவங்கியிருந்தது. அவள் கைகளை குறுக்காகக் கட்டி மறைந்து கொண்டிருந்த சூரியனை வெறித்தபடி எழுந்து போக மனமில்லாதவளாக அமர்ந்திருந்தாள்.

வட்டவடிவ நடைபாதையின் நடுவில் பச்சைப் பசேலென 'லான்' விரிந்திருந்தது. அதில் சில குருவிகள் தத்தி விளையாடின. வலது ஓரத்தில் நின்றிருந்த பாதாம் மரத்தில் இரு அணில்கள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டிருந்தன. அவள் மெதுவாக எழுந்தாள். மடியிலிருந்து தவறி விழுந்த கைப்பையை எடுத்து இறுக அணைத்தபடி நடக்கத் துவங்கினாள். நசுங்காமல் கிடந்த பன்னீர்ப் பூவொன்று கண்ணுக்குத் தென்பட, குனிந்து அதை எடுத்து உள்ளங்கைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டாள்.

இரண்டு நிமிடம் நடந்து பார்க்கின் பின்பக்க கேட் வழியாக வெளியே வந்தாள். பார்க்கை ஒட்டியிருந்த பேருந்து நிறுத்தத்தில் கூட்டம் அதிகமிருந்தது. நிறுத்தத்தின் அருகிலேயே ஒரு பெரிய வாகை மரம் நின்றிருந்தது. வெயிலொழுகும் பகல் பொழுதில் வாகை மரத்தினடியில் தாராளமாக நிழல் கொட்டிக்கிடக்கும். நிழலுக்கு குளுமையின் அடர்த்தி அதிகம். அதை உணர்ந்த சில நாய்கள் அங்கு சுகமாக கண்ணயர்ந்திருக்கும்.

அவள் மரத்தையொட்டி நின்று கொண்டாள். அங்கு சீருடை அணிந்து கும்பலாக நின்றிருந்த சிறுமிகள் மேல் பார்வை பதிந்தது. பேருந்து வரும் திக்கை நோக்கி நொடிக்கொருதரம் பார்த்தபடி அவர்கள் அடிக்குரலில் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

காதில் விழுந்த செய்தியில் தலையும் புரியவில்லை, வாலும் புரியவில்லை. இருந்தும் சுவாரசியமாக இருந்தது. அவர்கள் அடுத்தடுத்து வந்து நின்ற பேருந்துகளில் தொற்றிக்கொள்ள, நிறுத்தம் ஓரளவு காலியானது. அவள் அதற்குமேல் அங்கு நிற்க விருப்பமில்லாதவளாக நடக்கத் தொடங்கினாள். கடலை வண்டிக்காரன்,

"கடலை வேணுமாம்மா.....?"

என்று கேட்டபோது தலையசைத்து மறுத்துவிட்டு நடந்தவளுக்கு அவித்த வேர்க்கடலையின் வாசம் நாசியை நெருடியது. நல்ல நெத்து, நெத்தான கடலைகள். குவித்து வைக்கப்பட்டிருந்த கடலையின் மேலெழுந்த ஆவி அந்தப் பக்கம் சென்றவர்களை சுண்டியிழுத்தது, ஜீப்ரா கிராஸிங்கில் சாலையைக் கடக்க சிலர் நின்று கொண்டிருந்தனர். அவள், அவர்களோடு சேர்ந்துகொண்டாள். வாகனங்கள் செலுத்தப்பட்ட அம்புபோல விரைய, ஒரு போலீஸ்காரர் அவைகளை நிறுத்தி கூட்டம் போக வழி செய்தார்.

அவள் போலீஸ்காரருக்கு நன்றி தெரிவித்துவிட்டு மெதுவாக சாலையைக் கடந்தாள். நடைமேடை சற்றே உயரமாக இருந்தது. தம் பிடித்து ஏற வேண்டியிருந்தது. மெதுவாக ஏறியவள் ஒதுங்கி நின்று கைப்பைக்குள் கையை விட்டு செல்போனை எடுத்தாள். ஏழெட்டு குறுஞ்செய்திகள் வந்திருந்தன. ஒவ்வொன்றையும் வாய்விட்டுப் படித்தாள். எதுவுமே தனக்குத் தேவையில்லாததாக, கொஞ்சம் புரியாததாகவுமிருந்ததில் அவ்வளவையும் நீக்கினாள்.

அருகிலிருந்த டீக்கடையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. டீ மாஸ்டர் கிளாஸை உயரே தூக்கி ஆற்றுவது சாகசக்காட்சி போல் தோன்ற, அவள் கண்ணிமைக்காது பார்த்தபடி நின்றிருந்தாள். சிலர் வடையைக் கடித்தபடி டீயை உறிஞ்சினர். ஒருவர் பாட்டிலுக்குள் கையைவிட்டு கேக்கை எடுத்து டீயில் நனைத்துத் தின்றார்.

டீ கிளாஸ் கழுவுமிடத்தில் ஏகப்பட்ட ஈக்கள் மொய்த்தன. கடைக்காரன் அவளைக் கவனித்துவிட்டு,

"ஏதாவது வேணுமாம்மா......?" என்றான்.

" இல்ல.... வேண்டாம்...." என்றவள் மெதுவாக நடக்க ஆரம்பித்தாள்.

கையிலிருந்த பன்னீர்ப்பூ நிறமிழந்து வாடியிருந்தது. அதை நடைபாதையை ஒட்டியிருந்த காம்பவுண்டுக்கு அந்தப்பக்கம் வீசியபோது உள்ளே குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவள் விரிந்த கண்களோடு அதைப் பார்க்க ஆரம்பித்தாள்.

நான்கு குழந்தைகளும் பந்தை காலால் எத்தி விளையாடிக்கொண்டிருந்தனர். அடர்ந்த பசும்புல்வெளித் தரையில் வெள்ளைச் சீருடையுடன் அவர்கள் ஓடியது முயல்குட்டிகளின் துள்ளலை ஒத்திருந்தது. அவளையுமறியாமல் இதழில் புன்னகை அரும்பியது. அவள் அங்கு வெகுநேரம் நின்றிருப்பதைக் கண்ட வீட்டின் வாட்ச்மேன் அருகில் வந்தான்.

" இங்கே என்னம்மா பண்ணிக்கிட்டிருக்கீங்க...?" சற்று அதட்டலாகக் கேட்டான். அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"ஓ.... ஒண்ணுமில்ல. சும்மாதான்......"

"இங்கேயெல்லாம் நிக்கக்கூடாதும்மா. போங்க... போங்க..."

முகத்தை கடுமையாக்கி, கையை நீட்டிப் போகச் சொன்னான்.

அவளுக்கு அவமானமாக இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தாள். யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை அறிந்தபிறகு கொஞ்சம் நிம்மதியாகயிருந்தது. அவள் சேலை முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு நடையை எட்டிப்போட்டாள்.

வலதுபக்கம் சீப்பின் பற்கள் போல வரிசையாக தெருக்கள். இரண்டாவது குறுக்கு சந்து, மூன்றாவது, நான்காவது குறுக்கு சந்துகளைத் தாண்டி ஐந்தாவது குறுக்குச்சந்தில் அவள் நுழைந்து நடந்தாள்.

வரிசையாக ஃப்ளாட்டுகள் நிறைந்திருந்த தெருவில் ஒரேயொரு இஸ்திரி வண்டி நின்றிருந்தது. இஸ்திரி வண்டிக்காரன் குனிந்த தலை நிமிராது துணிகளுக்குப் பெட்டிப் போட்டுக்கொண்டிருந்தான்.

அவன் காலுக்குக் கீழே துணிகளடைத்த கட்டைப் பைகள் குவிந்து கிடந்தன. வண்டியில், ஒரு ஓரத்தில் பெட்டி போடப்பட்ட துணிகள் அடுக்கப்பட்டிருந்தன. அதில் ஆரஞ்சு வண்ண போச்சம்பள்ளிப் புடவையும், கருநாவல் பழ நிறத்தில் பட்டுப்புடவையும், அடர்ந்த சிவப்பில் மைசூர் சில்க் புடவையும் இருந்தது அவளைக் கவர்ந்தது. மூன்றும் அவளுக்குப் பிடித்த நிறங்கள்.

வெகு நேர அலசலுக்குப் பிறகு அவளுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்வு அம்மூன்று நிறங்களில் ஒன்றாகத்தானிருக்கும். அவள் நின்றிருப்பதை எதேச்சையாக கவனித்த இஸ்திரி வண்டிக்காரன் வேகமாகச் சொன்னான்.

"அந்த வூட்டம்மாவுக்கு எப்பவும் அவசரந்தான். கடேசி நேரத்துல கொண்டாந்து குடுத்துப்புட்டு, இன்னும் முடியலியா, முடியலியான்னு நச்சரிக்கும். இப்பகூட ஊர்ல ஒரு விசேசத்துக்குப் போவணுமாம். பத்து நிமிசத்துல பண்ணிக் குடுத்துடுன்னு சொல்லிட்டுப் போயிருக்கு. எனக்கென்னா பத்து கையா இருக்கு, பாஞ்சு, பாஞ்சு பொட்டிப்போட......"

அவனின் புலம்பலுக்கு அவள் தலையாட்டினாள். அவனுக்கு சற்று ஆறுதலாயிருந்தது போலும்.

"வந்ததுலேருந்து ஒரு நிமிசம் ஒக்காரல. பொட்டிப் போட்டுக்கிட்டேயிருக்கேன். காலையில மூணு இட்டிலி புட்டு போட்டுக்கிட்டு வந்ததோடு சரி. மத்தியான சோறு திங்கல. இன்னும் ரெண்டு வூட்டு துணிகளை தேய்ச்சிட்டு தான் சோறு திங்கணும்."

அவன் பேசுவதை நிறுத்திவிட்டு வேலையில் கவனமானான். அவள் அங்கிருந்து நகர்ந்தாள். கடந்து சென்ற ஆட்டோ ஒன்று அவள்மேல் புகையை உமிழ்ந்து விட்டு சென்றது. அடுத்த ஐந்து நிமிடத்தில் அவள் மறுபக்க தார்சாலைக்கு வந்திருந்தாள். வாகனங்கள் முகப்பில் இரு வெளிச்சப்புள்ளிகளோடு விரைந்தன. தெருவும், சாலையும் இணையும் வலது பக்கம் ஒரு பிள்ளையார் கோவிலிருந்தது. சிறு மாடம் போல அந்த காம்பவுண்டு சுவரிலிருந்த பிள்ளையார் கோவிலில் நாலைந்து பெண்கள் நின்றிருந்தனர். அர்ச்சகர் பிள்ளையாருக்கு வஸ்திரம் கட்டிவிட்டு கற்பூரம் காட்டினார். அவள் கன்னத்தில் போட்டுக்கொண்டாள். "நாளைக்கு சங்கடஹரசதுர்த்தி. நம்ம ரமணி சார் அபிஷேகத்துக்கு கொடுத்திருக்கார். எல்லாரும் சரியா ஏழு மணிக்கு வந்துடுங்கோ...."

அர்ச்சகர் விபூதி தந்தபடியே கூற, அவளுடைய தலை தன்னிச்சையாக அசைந்தது. பைக்குள் துழாவி அகப்பட்ட நாணயத்தைத் தட்டில் போட்டுவிட்டு ஓரமாய் விட்டிருந்த செருப்புகளை அணிந்துகொண்டு அவள் நடந்தாள்.

இருள் அடர்த்தியாய் பரவியிருந்தது. சாலையோர விளக்குகள் வெளிச்சம் தெளித்துக் கொண்டிருந்தன. வாகன இரைச்சலின் டெசிபல் அளவு கூடிப்போயிருந்தது. அவளுக்கு கால்களில் அயர்வு கூடிற்று. வலியும் கூட. தொண்டை வறண்டு போயிருந்தது.

வெகுநேரமாக தண்ணீர் குடிக்காதது ஞாபகத்துக்கு வர, பைக்குள்ளிருந்து பாட்டிலை எடுத்து வாயில் சரித்துக் கொண்டாள். தண்ணீர் சூடாக இருந்தது. சுவையற்று சப்பென்றிருந்த நீர் அவள் முகத்தில் சுளிப்பை உண்டாக்கிற்று. அவள் பாட்டிலைப் பைக்குள் போட்டு, கடந்துபோன ஆட்டோவைக் கைதட்டிக் கூப்பிட்டாள்.

வட்டமிட்டு வந்து நின்ற ஆட்டோவில், கேட்ட தொகைக்கு இசைந்து ஏறி அமர்ந்து கொண்டாள். அடுத்த பதினைந்தாவது நிமிடம் ஆட்டோ ஃப்ளாட் வாசலில் நின்றிருந்தது. பணத்தைத் தந்து ஆட்டோவிலிருந்து இறங்கியவள் புதிதாய் பார்ப்பது போல் தெருவைப் பார்த்தாள். குல்மொகரும், மயில் கொன்றையும் கொட்டிக்கிடந்த தெருவில் இருபக்கமும் ராட்சச உருவில் மரங்கள் நின்றிருந்தன. அடர்ந்த கிளைகளின் ஊடே வானம் எட்டிப் பார்க்க முயன்று தோற்றுக்கொண்டிருந்தது. வழுவழுத்த தார்ச்சாலையில் பணக்கார செழுமை மின்னியது. பெரும், பெரும் பங்களாக்களின் வாயில் கதவில் தங்க எழுத்துக்களில் பெயர்கள் மின்னின. அவள் லிஃப்டில் மேலேறி நான்காவது மாடிக்கு வந்தாள். காரிடார் அமைதியில் அமிழ்ந்து போயிருந்தது.

கிரானைட் பதிக்கப்பட்ட தரையில் ஒரு காலடிச் சுவடில்லை. அவள் இடுப்பில் சொருகியிருந்த சாவியை எடுத்து லாக்கில் பொருத்திய போது எதிர் ஃப்ளாட் பாப் தலை பெண்மணி கதவைத்திறந்து ஹாய் என்றாள்.

தலையசைக்கும் முன் கதவு சாத்தப்பட்டது. அவள் வீட்டிற்குள்ளே வந்து விளக்கை உயிர்ப்பித்தாள். அங்கு திரண்டிருந்த அமைதியின் அடர்த்தி சட்டென கூடிப் போனது போலிருந்தது.

நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வரும் அமைதி சூன்ய வெளிக்கு இட்டுச் செல்வது போன்று அவளுக்கு பிரமை உண்டானது.

சங்கிலியின் தொடர்ச்சியான கண்ணிகள் போல் அமைதியின் நாட்கள் முடிவற்று நீண்டு கொண்டே போயின. உஷ்ணமேறிய பகல் பொழுதில் தலைக்கு மேலே சுழலும் மின் விசிறியின் மெல்லொலி அமைதியை கிழித்துப் போட்டதென்னவோ வாஸ்தவம்தான்.

இருந்தும் அதிலொரு அந்தகாரம் நிறைந்திருந்தது போன்ற உணர்வில் அவள் நடுங்கினாள். ஓரோர்சமயம் பொறுக்க முடியாது பாய்ந்து சென்று மின்விசிறியை நிறுத்தினாள். வியர்த்து கொட்டும் பின்மதியப் பொழுதுகளில் ஏசியின் குளிர்த் தழுவல் இதமாய் இருந்தபோதும் வெகுநேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை.


வயோதிக உடம்பில் குளிரின் பரவல் உபாதைகளை விளைவிக்க ஏசியை நிறுத்தி மின்விசிறியை சுழல விட்டாள். பின் அதை நிறுத்தினாள். இதற்கும், அதற்குமான அலைக்கழிப்பில் அவள் தவித்துப் போனாள்.

அவள் திரைச் சீலைகளை விலக்கி விட்டு ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள். வானத்தில் நட்சத்திர துணுக்குகள் மின்னின. அவள் விரல் நீட்டி நட்சத்திரங்களை எண்ண ஆரம்பித்தாள். ஒன்று, இரண்டு, மூன்று....... பத்து, பதினைந்து...... நட்சத்திரங்கள் சுற்றி சுழன்றன.

எண்ணிய நட்சத்திரத்தைத் திரும்ப எண்ணினாள். ஒவ்வொன்றும் மற்றொன்றின் சாயல் கொண்டிருந்ததில் குழப்பம் உண்டானது. அவள் அயர்ந்து போனாள். எண்ணுவதை கைவிட்டு நாற்காலியில் சரிந்தாள். வீடு முழுக்க அமைதி ததும்பி வழிந்தது. சுவரில் இருந்த குடும்ப போட்டோவில் அவள், கணவர், பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் சிரித்துக் கொண்டிருந்தனர்.

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதை-28

அர்ஷா - இந்தியா



# இன்னும் ஆறு நாட்களே...

திருநெல்வேலி மாவட்டம் அப்போ, இப்போ தென்காசி. சிவசைல கிராமம் பூர்வீகம். கடனாநதியும் குற்றாலமும் விடுமுறை நாட்களில் தவறாது செல்லும் இடங்கள். பனை மரங்களும் கருப்பட்டி கொட்டில்கள், புடவை நெய்யும் இடங்களுமே விளையாட்டுத் தளங்கள்.

மாப்பிள்ளை சங்கரன்கோயில் என்றதும் சிரிப்பில் வீடு அதிர்ந்தது.

"ஏண்டி இவ்வளவு ஆர்ப்பாட்டம்..."

"அங்கு தானே மட்டன் பிரியாணி சூப்பரா கெடைக்கும்"

"அப்போ ஒனக்கு மாப்பிளய பத்தி கவல இல்லயா..."

"இல்லயே...! அங்க இருக்க... கன்னி ஆட்ட பத்தி தான் கவல" சொல்லி பற்கள் தெரிய சிரித்தாள்.

நடந்து முடிந்தது கல்யாணம். ஆசைப்பட்டது போல் சங்கரன்கோவில் பிரியாணி சாப்பிட முடியவில்லை. ஒரே வாரத்தில் பெங்களூர்.

குடும்ப வாழ்க்கை அழகாக ஆரம்பித்தது. ஐந்து வருடங்களில் மெல்ல தொய்வுகள் தொடங்கியது. மறுபடியும் மறுபடியும் யோசித்துப் பார்த்தால் தொடங்கிய இடம் அதிர்ச்சி அடைய செய்தது அவளுக்கு.

"என்னடா ராஜேஷ் அஞ்சு வருசம் ஆச்சு.... அடுத்த வருஷம்... அடுத்த வருஷம்.... இன்னும் எத்தனை வருஷம் தள்ளி போடுவீங்க...." மாமியார்.

"நீ சும்மா இரு..! இதெல்லாம் அவகளுக்கு தெரியாதா" குரலை உயர்த்தினார் மாமனார்.

"கல்யாணமாகி 5 வருச மாச்சு இனியும் கேக்கலனா எப்புடி... எனக்கு ஒன்னும் வெளங்களயே, க்கும்.. நா கேக்கலனா பொறவு யாரு கேட்கிறதா." புடவை முந்தானையில் முகத்தைத் துடைத்து இடுப்பில் செருகிக் கொண்டே அவளை ஓரக்கண்ணால் பார்த்தாள்.

அஞ்சு வருஷம்.... ஆமா அஞ்சு வருஷம் தான். ஆனா 50 டாக்டர் பார்த்திருப்போம். என்ற மனதில் எழுந்த வார்த்தைகளை கண்களால் கடத்தினாள் மாமியாருக்கு.

12 வயசுல, மெல்ல எலுமிச்சம் பழம் அளவிற்கு என் மார்புகளை பெரிதாக பார்த்தேன். அப்போ எனக்கு அது, கொஞ்சமா ஆச்சரியம் ! அதிர்ச்சி. அம்மா கிட்ட கூட சொல்ல தயக்கம். கதவு பின்னுக்கு மறஞ்சுகிட்டு இருட்டி லேயேதான் உடுப்பு மாத்துறது எல்லாமே. உடல் மாற்றத்தை பார்க்கக் கூசிய நாட்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணத்தப்போ, ஒன்னுக்கு ரெண்டு டிரஸ் போட சொன்னாங்க, எல்லாரையும் வெளியே போக சொல்லிட்டு நானே போட்டுக்கிட்டேன். அதுதான் எ வழக்கம். இப்போ எல்லா மாறி போச்சு

"கழட்டிட்டு வந்து படுமா.. "

அந்த வார்த்தைகள் என் காதுகளில் கூசிச் செல்லும். நாட்கள் செல்லச் செல்ல எல்லாவற்றுக்கும் நானும் தயாரானேன். நிர்வாணமாக படுக்கையில் கிடந்தேன். எத்தனையோ மருத்துவங்கள்.. உடம்பை உலுக்கி உருட்டி பந்தாடினார்கள்.

மருத்துவமனை, சென்று வந்து, மறுபடியும் என் உறுப்புகள் சீராக தவறாமல் இரண்டு நாட்கள் எடுக்கும்.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடிகளும் நேர அட்டவணைகளோடு நகர்ந்தது. தாம்பத்தியம் திட்டமிடப் பட்டது. உணவுப் பழக்கமும் திட்டமிடப்பட்டது. நான் எப்படி சாப்பிட வேண்டும், எப்படி உறங்க வேண்டும், செயல்முறைகள் அட்டவணை ஆக்கப்பட்டது. எல்லாமே யார் யாரோ எழுதிக் கொடுத்தார்கள். உருட்டி உருட்டி உலாவி உள்ளுக்குள் உள்ள பரிசோதனைகள் அத்தனையும் முடிவுர, சொன்னார்கள்

"காரணத்தை, கண்டுபிடிக்க முடியவில்லை" என்று. கொத்திக் குதறி பிச்சுபோட்ட பின்பு உள்ளே எதுவும் இல்லையாம்- எப்படி இருக்கும். மீண்டும் ஒட்டு சேர்ப்பது யார்? சரி, சேர்த்து விடுவீர்கள்.. ஒட்டியது எப்போதும் ஒட்டியதுதானே.

கடைசியாக ஒரு முடிவிற்கு வந்தார்கள். சினை முட்டைகளை எடுப்பது, கருக்கட்ட வைப்பது. அதனை அவர்களே பார்த்துக் கொண்டார்கள். இரண்டு நாட்கள் அப்படியே கிடந்தேன்.

மருத்துவமனை கட்டிலில் என்ன செய்தார்கள் யாருக்கும் தெரியாது, மருத்துவமனை சுவர்கள் கூட அறியாது திரைகள் ரகசியம் காத்தது.

அடுத்த சில வாரங்களில் எல்லோருக்குள்ளும் பூரிப்பு "நான் பாட்டியாகப் போகிறேன்" "நான் தாத்தாவாகப் போகிறேன்" "நான் அப்பாவாக போகிறேன்"

"நீ அம்மாவாகப் போகிறாய்" என்றார்கள். பட்டங்கள் பதவிகள் முடிவு செய்யப்பட்டது. சந்தோசம் அனைத்தும் மூன்று மாதங்களோடு முழுக்கு போட்டது. உதிரம் கசியத் தொடங்கியது..

"தைத்து விட வேண்டும்"

"வாய் திறந்திருக்கிறது" தைத்தார்கள், மாதம் கழிந்தது.

"வலிக்கிறது...தாங்க முடியவில்லை" குழறினேன்.

"அப்படித்தான் இருக்கும் கொஞ்சம் பொறுத் துக்கோ" என்றார்கள். அமைதியாகிவிட்டேன்.

ஆறு மாதம்.. உதிரம் கசிந்தது..

மறுபடியும் தைய்த்தார்கள்.

வலி வலி வலி மட்டுமே எனக்கு. இரண்டு நாட்கள் அப்படியே கிடந்தேன்.


இரண்டில் ஒன்று இறந்து விட்டது என்றார்கள். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை அது தன்னை உருக்கிக் கொள்ளும். மற்றொன்று தானாக வளர்ந்துவிடும், இன்னும் மூன்று மாதத்தில் பிரசவம் ஆகிவிடும் என்று சொன்னார்கள். படுக்கையிலிருந்து எழுந்திருக்கக் கூடாது என்று முன்பு சொன்ன சட்ட விதிமுறைகள் இப்பொழுது தகர்க்கப் பட்டது. விண்ணைப் பார்த்து மல்லாக்க படுக்க, கால்கள் இரண்டையும் மேலே தூக்கி கட்டினார்கள்.

உண்பதும் கழிவதும் ஓரிடம் ஆனது. ஊரிலிருந்து சரசு வரவழைக்கப்பட்டாள்,

என் பள்ளிக்கூட நாட்களில் ஆடை மாற்றி அலங்காரம் செய்து அழைத்துச் செல்வாள். அந்தி சாயும் வெயிலில் கருப்பட்டி காய்ச்சும் முருகேசன் வீட்டில் கருப் பட்டி வாங்கி தர, என் அந்தரங்கத்தை யார் யாரோ பார்த் தார்கள். சரசு மட்டும் பார்த்தால் என்ன, பார்க்கட்டுமே. படுக் கையில் கிடந்த எனக்கு அவளே எல்லாவுமாக மாறினாள். காத்திருக்கிறேன். இன்னும் ஆறு நாட்களில் திட்டமிட்டபடி வாரிசு வரப் போகிறதாம், பரம்பரை மானத்தை பறைசாற்ற.

***

புராண, இதிகாச காவியங்களின் மூலப் படைப்புகள் காலத்தால் பெரிதும் மாறுதல் அடைகின்றன. ஒவ்வொரு பண்பாடும் காவியத் தலைவரைத் தம்மவராய்க் கருதி அவர்மீது தம் பழக்கவழக்கங்களைத் திணிக்கிறது. மறு ஆக்கம் செய்யும் கவிஞரும், தத்தம் மொழி மற்றும் மரபைப் பற்றுகிறார். ஏறத்தாழ அப்படைப்பு புதியதொரு படைப்புப் போலாகிறது. பாரதம், ராமாயணம் போன்ற மறு ஆக்கங்கள் இப்படிப் பலநூறு. இந்த இதிகாச காவியங்கள் சித்திர இலக்கியங்களாக புதிய வடிவம், கலைவடிவம் பெறுகையில் அவை ஆதிக் கவிகளின் மூலவடிவத்தைப் பின்பற்றக் காணோம், மாறாக சித்திர காவியம் தான் தோன்றிய பண்பாட்டுப் பகுதியின் காவியத்தையே காட்சிப்படுத்துகிறது. வட்டார மொழிகள் வளர்ச்சி பெற்று வட்டார இலக்கி யங்கள் தோன்றிய காலம், சித்திரக்காவியங்களும் அவற்றையே பின்பற்றின. சமகாலத்து எழுத்தும் சமகாலத்து ஓவியமும் கைகோர்த்து நடந்தன.




-தமிழ்நாடன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-29

வி.மைக்கல் கொலின்





# ஆண்கள் உலகம்

அந்த பெரும் கானகத்தின் நடுவே அமைந்த ஒற்றையடிப்பாதையில் ஓர் அழகிய இளம் பெண் நடந்து சென்று கொண்டிருந்தாள்.

அவளைப் பார்க்கும்போது ஒரு பேரரசின் முடிக்குரிய மகாராணி போன்ற தோற்றம் தெரிந்தாலும் ஒரு சாம்ராஜ்சியத்தையே இழந்த சோகம் அவளது முகத்தில் தெரிந்தது.

தனது வாழ்க்கையையே தொலைத்த உணர்வில் ஏதோ கால் போன போக்கில் நடந்து கொண்டிருந்தாள். அவளது முகமெங்கும் விரக்தியின் மாயச்சுழல் தன் கைவரிசையை காட்டியிருந்தது.

அவள் எதுவித சிந்தனையுமற்று தனது ஞாபகங் களைத் தொலைத்தவளாய் நடந்து சென்றதால் அந்த வழியின் இருமருங்கிலும் வளர்ந்திருந்த மரங்களிலும், முட் புதர்களிலும் அவளது ஆடைகள் பட்டு கிழி பட்டதோ, தனது கரங்களிலும், மேனியிலும் முட்கள் தைத்து ரத்தக்கசிவு ஏற்பட்டிருந்ததோ அவளது சிந்தனையில் உறைத்ததாக தெரியவில்லை.

பேரழகியாக திகழ்ந்த அவளது வதனத்தின் சௌந்தர்யம் அவளது சோகத்தின் சுவடுகளையும் மீறி அவ்வப்போது தன்னை வெளியே காண்பித்துக் கொண்டிருந்தது.

அந்த அடர்ந்த கானகத்தில் நின்ற மரங்களின் செறிவினால் சூரிய ஒளிகூட சிற்சில இடங்களிலேயே பட்டுத்தெறித்தது. சில இடங்கள் கருமை போர்த்தியபடி இருளாகவே இருந்தது. இடை இடையே தெரிந்த அந்த வெளிச்சத்தை தன் துணையாகக்கொண்டே அவள் நடந்து கொண்டிருந்தாள். அவள் எங்கு போகிறாள் என்பது அவளுக்கே தெரியாத ஒரு பித்து நிலை. அவள் யார்? அவள் எங்கிருந்து வந்தாள்? என்பது எவருக்கும் தெரியாது.

ஆனாலும் அவள் நடந்து கொண்டிருந்தாள்.

தீடீரென அந்த பேரழகியின் கரத்தைப் பிடித்து யாரோ கீழே இழுத்து விட்டார்கள். நிலை தடுமாறி கீழே விழப்போனவள் தன்னை சுதாகரித்துக் கொண்டு தன் மென் பாதங்களை நிலத்தில் ஆழப்புதைத்து நிமிர்ந்து நின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு எதிரே அவளைப்போன்ற ஒரு அழகி. ஆனால் உருவத்தில் சற்று பெருத்தும், நிறத்தில் சற்று கருமை படர்ந்தும் கருப்பழகியாக நின்றாள். அவள் முகத்தை பார்ப்பதற்கு சற்று தயக்கமாக இருக்கும். அவளது மூக்கு வெட்டப்பட்ட காயத்தின் வடு இன்னும் மறையாது இருந்தாலும், அந்த வடு அவளது முக சௌந்தர்யத்தினை மறைத்தாலும் அவளும் ஓர் அழகியே என்பதனை அவளது ஏனைய உடல் அமைப்புகள் காட்டி நின்றன.

கீழே விழாமல் தடுமாறி காலூன்றி நின்ற அழகியை பார்த்து கறுப்பழகி சற்று கோபத்துடனேயே கேட்டாள்.

"என்ன சீதா எல்லாம் முடிந்ததா? இன்று நீயும் யாருமில்லாத அனாதையாக இந்த கானகத்தில் தனிமையில் திரிகிறாய்? தன் சகோதரனை விரும்பினேன் என்பதற்காக உனது மைத்துனன் எனது மூக்கை அறுத்தான். ஒரு பெண் அழகிய ஒரு ஆண்மகன் மேல் மையல் கொள்வது இயற்கை யின் நியதிதானே? அதற்காக அவளை இப்படித்தண்டிப்பது எவ்வளவு கீழான இழிசெயல். இதுதான் உங்கள் தேவ புருஷர்கள் வீரமோ?

சீதா உண்மையான வீரம் எது என்பதனை நீ ஈழத்தில் உணர்ந்தாயா?

காட்டிக்கொடுப்பின் துரோகத்தால் என் அண்ணன் இராவண சக்கரவர்த்தி வீழ்ந்தாலும் உலகம் போற்றும் வீரமல்லவா அது?

எனது அண்ணன் வசம் இருந்த போது நீ எவ்வளவு சுதந்திரமாக இருந்தாய்.

மீண்டும் நீ ராமனைச் சேர்ந்தாய். சந்தேகத்தின் கொடூரகண்கள் உன்னை இன்று காட்டுக்குள் துரத்தி விட்டது....."

சூர்ப்பனகை பேசப்பேச சீதையின் கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் அருவி போல் ஓடியது.

தேவ புருஷர்கள் என அழைக்கப்படும் தனது கணவனும், தனது மைத்துனனும் ஒரு பெண்ணுக்குச் செய்த இழி செயல், கொடூரம் ஆணவத்தின் உச்சம் மட்டுமல்ல அது பேடிகளின் செயல் என்பது அவளுக்குத் தற்போதுதான் புரிந்தது.

சூர்ப்பனகை எதிர்பாராத நிலையில் அவளது கால்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி அவளது கால்களைப் பிடித்து மன்னிப்பு கேட்டாள் சீதா.

சூர்ப்பனகை இதனை சற்றும் எதிர்பார்க்க வில்லை. அவள் திகைத்து நின்றாள். கடவுளின் அவதாரம் என நம்பப்படும் ராமனின் தர்மபத்தினி, அயோத்தி பேரரசின் பட்டத்து ராணி எனது கால்களில் வீழ்வதா?

உடனே அவளை அள்ளி அணைத்துக் கொண்டாள் சூர்ப்ப னகை. அவளது கண்களிலும் நீர்த்துளிகள் உதிர்ந்தன. ஒரு பெண் மனது இன்னுமொரு பெண்ணுக்குத்தானே புரியும்.

"சீதா நீ உனது கணவனுக்காகவும், மைத்துனனுக் காகவும் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமில்லை. எல்லாம்முடிந்து போனது. இறுதியில் ஆதரவு இன்றி நிற்பது பெண்கள் நாம் இருவரே. இதில் என்ன முரண் நிலை என்றால் நான் தோற்றவர் சாட்சியாக, நீ வென்றவர் சாட்சியாக... உனக்கு என்றும் துணையாக நான் இருப்பேன் வா..." என சீதையை அழைத்துக்கொண்டு பயணத்தை தொடர்ந்தாள்.

அந்த ஒற்றையடிப் பாதையின் வழியே இப்போது இரண்டு அழகிய பெண்கள் தமது பயணத்தை தொடர்ந்தனர்.

## 2

நீண்ட நெடிதுயர்ந்த ஓர் ஆலமரம் விழுதுகள் பரப்பி ஒரு அரக்கனைப்போல் அவர்கள் பாதையை மறைத்து நின்றாலும், அந்த விழுதுகளுக்கு பின்னே நின்று விசும்பிக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் கேவல் சத்தமே அவர்களை தடைப்படுத்தியது.

இருவரும் நின்று நிதானித்து அந்த மரத்தின் பின்னால் சென்று பார்த்தனர். அங்கு ஒரு இளம் ரிஷி பத்தினி ஆலமர வேர்களில் அமர்ந்தபடி விசும்பிக்கொண்டிருந்தாள். உண்மையில் அவள் அழுகிறாளா இல்லை சிரிக்கிறாளா என்பது சற்று குழப்பமாகவே இருந்தது.

அவளை அடையாளம் கண்ட சீதா "அகலிகை என்ன இது? நீ எப்படி இங்கு தனிமையில்? உன் சாபம் நீங்கி கௌதம முனியோடு சென்றவள் அல்லவா நீ..?"

விசும்பிக் கொண்டிருந்த அகலிகை எழுந்து சீதாவை பார்த்து வணங்கினாள்.

"சீதா.. ராமபிரானின் கால் தூசு பட்டு பன்னிரண்டு வருடங்கள் வெறும் கல்லாக இருந்த நான் சாப விமோசனம் பெற்றது மட்டுமே நீங்கள் அறிந்ததும். இந்த உலகம் அறிந்ததும்.

என்னை மீண்டும் ஏற்றுக்கொள்வதாக கூறிய கௌதம முனியின் மனதில் சந்தேக வடுக்கள் இன்னும் போகவில்லை.

இரவு வேளைகளில் மீண்டும் இந்திரன் வருகிறானா என இரவு முழுதும் விழித்திருந்தான்.

தன் நிம்மதி தொலைத்தான். என் நிம்மதி கலைத்தான்.

விடிகாலைகளில் அவனே சேவலைப்போன்று கூவத்தொடங்கினான்.

அதிகாலை எழுந்து ஆற்றுக்குப்போவதாக சென்று பின்கதவு வழியே வீட்டுக்குள் வந்து ஒளிந்திருந்தான்.

இவ்வளவும் செய்த அவனே என்னைத் திருப்தி படுத்துவதாக நினைத்து "அகலிகை ஒரு வரம் கேள் தருகிறேன் என்றான்."

"வரம்கேட்டாயா அகலிகை?" ஆர்வமாக கேட்டாள் சூர்ப்பனகை.

"ஆம் கேட்டேன்."

சுயம்வரத்தில் என்னை தந்திரமாக அபகரித்து வந்த கௌதமன் ஆண்மையற்றவன். தன் பூசை புணர்ஸ் காரங்களுக்கே என்னை பாவித்துக்கொண்டான்.

தன் உடலை களைப்பு நீங்க வருடிவிடச்சொல்லும் அவன் என்னை ஒரு முறை கூட அன்பாக அணைத்தது கூட இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு வேலைக்கார ரிஷி பத்தினி நான்.

நானும் ஒரு பெண்தானே?

தெரிந்து இணைந்தாலும், தெரியாமல் இணைந் தாலும் இந்திரன் என்னுடன் இணைந்த பொழுதின் சுகம் அறிந்தவள்.

இந்திரசுகத்தை கௌதம வடிவில் எனக்குள் ஏற்றுக்கொண்டவள்.

இந்திரனின் இந்திரியமா? இல்லை கௌதமனின் இந்திரியமா? எனக்குள் பாய்ச்சப்பட்டது என்பதை நான் அறியேன். ஆனால் எனக்கு தெரிந்த ஆண் கௌதமன் மட்டுமே. இந்திரன் கௌதமன் வேடம் தாங்கி வந்த வேளை அவனது இயங்குதல் பிடித்திருந்தது. என்றும் இல்லாமல் அன்று என் உடல் சிலிர்த்தது உண்மை.

அதனால் கேட்டேன்

"நாதா நீங்கள் ஒருமுறை இந்திரன் வேடம் கொண்டு என்னுடன் சுகித்திருக்க வேண்டும்."

முக்காலமும் அறிந்த அவன் : அறியாமல் நான் செய்த தவறுக்கு என்னை கல்லாக்கினான். அறிந்து நான் செய்யவிரும்பும் தவறை வரமாக கேட்டதும் அவன் கல்லாகினான்...

அவன் தந்த வரமே அவனை கல்லாக்கியது...."

அவளது பேச்சில் ஒரு வன்மம் தெரிந்தது. ஏமாற்றப் பட்ட ஒரு அபலையின் சத்திய ஆவேசம் அது.

" அகலிகை நீ கௌதமன், இந்திரன் என்ற இரண்டு ஆண்களினால் ஏமாற்றப்பட்டிருக்கிறாய். இனி நீயும் எங்களோடுதான். வா பயணத்தை தொடர்வோம்..." என்ற சீதாவின் அழைப்பை அகலிகை ஏற்க மூவரும் தமது பயணத்தை தொடர்ந்தனர்.

அவர்கள் சென்று கொண்டிருந்த ஒற்றையடிப் பாதையின் குறுக்காக ஒரு துறவிகள் கூட்டம் சென்று கொண்டிருந்தது.

அதில் தலைமைத் துறவியாக புத்தபெருமான் முன்னே செல்ல அவரது தலைமைச் சீடரான ஆனந்தாவின் தலைமை யில் ஒரு கூட்டம்

"புத்தம் சரணம் கச்சாமி

சங்கம் சரணம் கச்சாமி.."

என குரல் எழுப்பியபடி சென்று கொண்டிருந்தனர்.

புத்தர் சீதாவையும், சூர்ப்பனகையையும், அகலிகை யையும் பார்த்து ஒரு புன்முறுவல் உதிர்த்தவறே அவர்களைக் கடந்து சென்றார்.

அவர்களும் அவரை ஒரு புன்னகையுடன் எதிர் கொண்டனர். அதில் தெரிந்த நக்கலும், நையாண்டியும் புத்தருக்கு தெரிந்தே இருந்தது.

புத்தர் அவர்களை கடந்து சென்று சில மணித் துளிகள் இருக்கும்.. ஒரு அழகிய இளம் பெண் அந்த பாதையில் ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தாள். அவள் இவர்கள் அருகில் வந்ததும் சீதாவே பேச்சை ஆரம்பித்தாள்.

"அழகிய பெண்ணே நீ யார்..?"

"நான் யசோதரா.. சித்தார்த்த மன்னனின் மனைவி. ராகுலனின் தாய்..."

"மன்னரின் மனைவி ஏன் இந்த கானகத்துள் திரிகிறாய்.?" சூர்ப்பனகை கேட்டாள்

"எனது கணவர் ஒரு பௌர்ணமி நள்ளிரவு நேரம் என்னையும் எனது கைக்குழந்தையையும் விலகி துறவறம் சென்று விட்டார். ஞானம் தேடிச்சென்று அவர் புத்தபெரு மானாக இந்த காட்டுக்குள் திரிவதாக கேள்விப்பட்டேன் அதுதான் அவரைப்பார்த்து ஒரு கேள்வி கேட்க விளைகிறேன்..."

"கேள்வி கேட்டு இனிமேல் ஆகப்போவதென்ன யசோதரா. அவர்தான் துறவு நிலையில் புத்தராகி விட்டாரே..?

"கட்டிய மனைவியையும், கைக்குழந்தையையும் அவர் விட்டுச் சென்றதுபோல் நான் அவரையும், குழந்தை யையும் நள்ளிரவில் விட்டுச் சென்றிருந்தால் இன்று இந்த உலகம் எனக்கு எத்தனை பெயர்களைச் சூடியிருக்கும்?

அவரை 'புத்தன்' என்று அழைக்கும் இவர்கள் என்னை வேசி, ஓடுகாலி, படிதாண்டியவள், ஓடிப் போனவள் என பல பெயர்களில் அல்லவா அழைத்திருப்பார்கள்.

ஆணுக்கு ஒரு நியதி இங்கு பெண்ணுக்கு ஒரு நியதியா..?"

" அதுதான் உலக நியதி யசோதரா. இது ஆண்களின் உலகம். இங்கு தேவனும் ஒன்றுதான், வேந்தனும் ஒன்று தான், சாதாரண மனிதனும் ஒன்றுதான். ஆண் என்றும், எங்கும் ஆண்தான்.... "

சீதாவின் கண்களில் அக்னி கனன்றது. அவள் தனது பாதத்தை தூக்கி தரையில் அறைந்தாள்.

பூமி பிளந்து பூமி மாதா வெளியே வந்தாள்.

" சீதா என்னை ஏன் அழைத்தாய்? பூமியில் உனது காலம் இன்னும் முடியவில்லையே மகளே? "

" அம்மா. இந்த பூமி ஆண்களின் பூமி. இங்கு வாழ எமக்கு விருப்பமில்லை. என்னையும் எனது சகோதரி களையும் நீயே அழைத்துக்கொள். நாம் உம்முடனேயே வருகிறோம்."

"வேண்டாம் சீதா. உங்கள் பயணம் இன்னும் முடியவில்லை. உங்களுக்குப்பின்னே நூறு, ஆயிரமாய், கோடியாய் பெண்கள் வருவார்கள். உங்கள் பயணம் தொடரட்டும். எப்போது நீங்கள் திரும்பி நடக்க தொடங்கு கிறீர்களோ அப்போது உலகம் பெண்கள் உலகாய் மாறும். அதுவும் இது விரைவில் நடக்கும்" என கூறியபடியே பூமிக்குள் சென்றாள் பூமி மாதா.

அந்த ஒற்றையடிப்பாதையின் நடுவே இப்போது நான்கு பெண்களின் பயணம் தொடர்ந்தது...

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதை-30

# அமைதிக்கும் அப்பால்...

பிரமி



ஒருமுறை முழுதாய் இதுவரை நெஞ்சிலிருக்கும் சில துன்பங்களை நாம் மறப்போம். கடிகார முள் தொலைத்து தொடுவானம் வரை போய் வருவோம். அடைமழை வாசல் வந்தால் கையில் குடையின்றி வா நனைவோம். அடையாளம்தான் துறப்போம். எல்லாத் தேசத்திலும் போய் வசிப்போம். என்ன கொண்டு வந்தோம்? நாம் என்ன கொண்டு போவோம்? அட இந்த நொடி போதும். வா! வேற என்ன வேண்டும், வேண்டும். பளபளக்குற பகலா நீ... படபடக்குற அகலா நீ... அனல் அடிக்கிற துகளா நீ... நகலின் நகலா நீ...' என்று நா. முத்துக்குமாரின் பாடல் வரிகள் ஒலித்து ஓய்கின்றது.

அடுத்த நொடியே ரீட் ரீட் ரீட்... என்றதும், பாடலில் மூழ்கிப்போன பங்கயச்செல்வியம்மாவுக்கு அப்பொழுதான் தொலைபேசி அழைப்பில் தொடர்பு கிடைக்கவில்லை என்பது தெரிந்தது.

'மறுபடியும் எடுத்துப் பார்ப்போம்.' மனம் கேட்காமல் திரும்பவும் பூச்சியம்... ஏழு... ஆறு... என தொடர்ந்து பத்து இலக்கங்களை அழுத்துகிறாள். மீண்டும் பாடல். 'இதுவரை நெஞ்சிலிருக்கும் சில துன்பங்களை நாம் மறப்போம்... என ஒலித்து ஓய்கின்றது. திரும்பவும் எடுக்கத்தான் மனம். ஆனால் 'வேலையா இருப்பான் குழப்பவேண்டாம்' தன்னைத் தான் தேற்றிக்கொண்டாள்.

மெல்லிய வண்ணங்களில் சீத்தைத் துணியில் கால் முட்ட நீளமான சட்டைதான் பங்கயச்செல்வி அம்மாவின் தேசிய உடை. அந்தச் சட்டையின் வலது பக்க இடுப்போரமாக ஒரு பொக்கட் இருக்கும். அதில் கையைவிட்டுப் பொருட்களை வைக்கும் போதோ அல்லது எடுக்கும் போதோதான் அது இருப்பது தெரியும். அந்தச் சட்டைப் பைதான் அவளது கைத் தொலைபேசியின் வைப்பிடம். காலை விடிந்ததும் அதையெடுத்து சட்டைபையில் வைத்தால், பேசும் போதும், அவள் தூங்கும் போதும் மட்டும்தான் அதை வெளியில் எடுப்பாள் பங்கயச்செல்வி அம்மா.

அந்த நாட்களில் அவ் ஊரில் அதிகம் படித்தவள் பங்கயசெல்விதான். கிராமத்துப் பொது விடயங்க ளுக்குக் கடிதம் எழுதுதல், பொதுத் தொண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தல் என எதற்கும் முன்னிற்பவள். அதனால் மதிப்பின் நிமித்தம் ஊரார் பங்கயசெல்வி அம்மா என அழைத்து இப்போது அவளது பெயர் பங்கயசெல்வியம்மாவாகவே மாறிவிட்டது.

திருமணமாகிக் கணவனுடன் முன்மாதிரியாக வாழ்ந்த அவளுக்கு ஒரே ஒரு ஆண் பிள்ளை மட்டும்தான் சொந்தப்பிள்ளை. ஆனாலும் பொதுத் தொண்டுகளில் ஓடி ஓடி வேலை செய்வதனால் இவளுக்குப் போகும் இடமெல்லாம் பிள்ளைகள் இருந்தார்கள். சில ஆண்டுகளில் அவளது கணவர் விஷம் தீண்டி இறந்து போக, கணவனின் இறுதிக்கிரியைகளுடனே அவளது துடிப்பும் சடங்காகிப் போனது. இப்போதெல்லாம் அவளது வாழ்வு சட்டைப் பையில் இருக்கும் கைபேசியுடனேதான் அதிகம் நெருக்க மாக இருந்தது.

பங்கையச்செல்வி அம்மாவின் சட்டைப் பையில் தொலைபேசி உறுமலுடன் ஒலித்தது. முகம் மலர வெளியில் எடுத்து அழுத்திக் காதில் வைக்கிறாள்.

"ஹலோ அம்மா கோலெடுத்து இருந்தது. என்னம்மா சொல்லுங்க?" என்றான் கேசவன்.

"ஓம் தம்பி எடுத்த நான். நீ தூக்கல... வேலையா இருக்கியா தம்பி?"

"என்னம்மா விஷயத்தை சொல்லுங்க? ஏன் எடுத்தனிங்க"

"வேலை என்டா பிறகு கதைக்கிறன். சும்மாதான் எடுத்தேன்."

அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கேசவனின் தொலைபேசியில் ஆங்கிலப் பாடல் ஒன்றின் இசை ஒலித்துக் கொண்டிருந்தது.

"தம்பி... தம்பி... நான் கதைக்கிறது கேக்குதா? தம்பி... தம்பி... எனக்குப்பாட்டுச் சத்தம் தான் கேக்குது. நான் கதைக்கிறது உனக்குக்கேக்குதா?" என தன்பாட்டில் பேசிய பின்புதான் புரிந்து கொண்டாள் கேசவன் வேறு ஓர் அழைப்பை இணைத்துள்ளான் என்று.

ஒருவேளை அவன் ஏதோ அவசர கோல் கதைக் கிறானோ தெரியல, திரும்பவும் என்னோட கதைப்பான் என்ற எண்ணத்தில் தொலைபேசியைக் காதிலே வைத்துக் கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் ட்ரீட் ட்ரீட் என அதுவாகவே துண்டிக்கப்பட்டது.

தம்மை சுற்றி நடக்கும் விடயங்கள் எமக்கு விருப்பம் அற்றதாக இருந்தால், அதனை மற்றவர் தலைமேல் போட்டு அவர் காரணம், இவர் காரணம், அது காரணம், எனக் குற்றம் சாட்டிவிட்டு, தம்மைத்தாம் நிரபராதிகள் என நிரூபித்துத் தப்பித்துக் கொள்கின்ற இயல்பு வாழ்க்கை யில் பங்கையச்செல்வி அம்மா விதிவிலக்கானவள்.

மற்றவர்களின் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, அவர்களுக்கு என்ன சிக்கல்களோ என நிதானித்து, பிறரைக் குற்றம் சாட்டாமல் தன் பக்கத்திலேயே எல்லாவற்றையும் சரிசெய்து கொள்ளும் சாதுரியம் தெரிந்தவள் என்பதனா லும், தொழில் நுட்ப வளர்ச்சியின் அறிவு பற்றிய தெளிவு இவளுக்கு கொஞ்சம் இருந்ததனாலும், மகன் தனது பேச்சை முழுமையாகக் கேட்கவில்லை என்ற வருத்தம் இருந்த போதும், அதனைச் சட்டை செய்யாமல், பெரிது படுத்தாமல் தனது வேலைகளைப் பார்க்க ஆரம்பிக்கிறாள்.

'மதியம் சாப்பிடுற நேரம் எடுப்பானோ தெரியல? பாவம் குடும்பகாரன் வேலையா இருப்பான்...' எனத் தனக்குத் தானே சமாதானம் சொல்லிவிட்டு, போனைப் பக்கத்திலேயே வச்சுப் பார்த்துக்கொண்டு இருந்தாள் அவள். எப்படித்தான் நேரம் போகுதோ என்று தெரியல என ஒரு காலத்தில் திட்டித் திரிஞ்சாள். இப்ப நேரம் என்ன சுத்தி சுத்தி சொத்தப் பத்த விட்டுட்டுப் போக மனம் இல்லாமல் இழுத்துக்கிட்டு கிடக்கிற சீவன் போல, இழுத்துக்கிட்டு காலச்சுத்தின பாம்பா போக மாட்டேங்குது.

இவளோட முணுமுணுப்புக்கு பயந்தோ தெரியவில்லை. அந்தச் சூரியன் மேற்கில் கொஞ்சம் இறங்கி, சிவந்து, கறுப்பாகிக் காணாமலே போனான். முத்தத்து நிலவு வெளிச்சம் இவளுக்கு பகலைப் போலயே இருக்கு. விடிஞ்சா இரவையும் இருண்டாக பகலையும் எதிர்பார்த்து எதிர்பார்த்து காத்து இருக்கிறதே பிழைப்பா போச்சு. ஆனால், இரவை எதிர்பார்த்தால் இரவும், பகலை எதிர்பார்த்தால் பகலும் உடன வராட்டியும் அதோட நேரத்திலேயே அவளுக்குக் கிடைச்சிடுது. இரவும் பகலும் தனியன்கள்தானே! முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப் பட்ட கதைதான் இந்த மனுஷிட கதையும்.

நினைச்சதை உடனே செய்து பழகிப் போனவள். கூட்டம்கூட்டமா வீட்டிலையும் தெருவிலையும் விலாசம் காட்டித் திரிந்த கைகால்கள். ஒன்று கேட்டால் இரண்டு ஏன்நாலு பதில்பேசும் வாய், சும்மாகிடக்கிறேன்டா லேசுப்பட்ட காரியமா? சமைக்காத பாத்திரத்தை எல்லாம் அள்ளிப்போட்டு தேச்சுட்டு, பெருக்கின முத்தத்தை மறுபடியும் பெருக்கிட்டு, பகலிலையும் வெள்ளி பாத்துட்டு, இருக்கிறதோட கொடுமையை விளக்கமா சொல்ல இவ்வள விட்டா வேற யாரிடமும் போக முடியாது.

'இருட்டிருச்சு தூங்குற நேரமாவது ஒரு கோல் வருமா?' அந்தப் போன் போற இடமெல்லாம் தரையைத் தேய்கிற அவள் காலுக்கு ஒத்துப் பாடிக்கொண்டே போகும். 'விடிஞ்சிடுச்சு வேலைக்கு போக முதல் ஒருக்கா எடுத்துடுவோம்.' 'இதுவரை நெஞ்சிலிருக்கும். சில துன்பங்களை நாம் மறப்போம். பாட்டுப் போகுது...

"ஹலோ அம்மா சொல்லுங்க..."

"தம்பி வேலைக்கு போயிட்டியா? வீட்டையா இருக்கிறாய?"

"ஏன் அம்மா சொல்லுங்க இனித்தான் போகப் போறேன். எடுத்த விஷயத்தைச் சொல்லுங்கம்மா..." என மின்னல் போல் கேட்டான்.

ஸ்டேஷன் இல்லாத இடத்தில் கோச்சு பொட்டிய கூட நிறுத்த வாய்ப்பிருக்கு. இவன்கிட்ட ஆறாஅமர பேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பே இல்லை. அந்த அவசர கேள்வியில எதுக்கு எடுத்தா என்றதே மறந்து போச்சு அவளுக்கு.

"ஒன்றும் இல்லைபா சும்மாதான்..." என்று போனை வைத்துவிட்டாள்.

பிறகுதான் எதுக்கு எடுத்தோம் என்று நினைவு வந்தது. திரும்ப எடுப்போம்.

"ஹலோ சொல்லுங்க" என மீண்டும் கிணத்துக் கட்டில் பிள்ளையை வைத்துவிட்டு வந்த தாய் போல வேகமான கேள்வி.

"இல்ல தம்பி இந்த பக்கம் வருவியா?"

"அம்மா அதுதான் என்னத்துக்கு என்று கேட்கிறேன்? வேலைக்கு அல்லவா போகனும். உங்களுக்கு என்ன செய்யணும். அத சொல்லுங்களேன்."

"இல்ல தம்பி இந்த ரோட்டால போனா இங்க வந்துட்டு போவன். புள்ளைக்கு தோசை சுட போட்ட நான் தந்துவிடத்தான் கேட்டேன்."

"வாய்ப்பே இல்லை நான் மெறவேவை போகணும் நீங்க பாருங்க"

"போற வழியில வர ஏலாதா?" என மீண்டும் இழுக்கிறாள்.

அவன் "சொல்லுறது விளங்கலையா" என அவசரமாக இழுத்தான்.

"சரி தம்பி." என அவளே போனைத் துண்டித்தாள்.

அண்டைக்கு காக்கா குருவிக்கு, பூனை நாய்க்கு, காலை, மதியம், இரவு என்று மூன்று நேரமும் தோசைதான். மகனுக்குப் பிடிக்கும் என்றுதான் விதவிதமாத் தோசை சுடப் பழகினவள் அவள். இண்டைக்கு முழுக்க தோசை திண்டு அவளுக்கு மட்டுமில்ல காக்கா குருவிக்கே தோசை சலிச்சு போய் இருக்கும். மாத்தி மாத்தி தோசை சுட்டு பலவிலங்குகளுக்குப் பரிமாறினதில பகல் நூர்ந்து போய், இரவு கொளுத்தி எரிந்தது.

'பாவம் அவன் வேலையாயிருப்பான். பிள்ளைக்கு எடுப்போம். யார் இந்த தொலைபேசியை கண்டுபிடித்த புண்ணியவானோ, அவன் நல்லா இருப்பான். ஏதோ அவசரத் திலயாவது இரண்டு வார்த்தை கேட்க முடியுது.' முணு முணுத்து முடியக்கிடையில "ஹலோ சொல்லுங் கம்மா"

இப்ப எல்லாம் மாமியார் கொடுமையில் தப்ப மருமகள் கண்டுபிடித்த தலையணை மந்திரத்திற்கு நிகரான மந்திரம் மாமியாரை அம்மா என்று கூப்பிடுவது.

"ஓம் புள்ள எப்பிடி இருக்கிங்க? இல்ல புள்ள அவன் வேலைக்குப் போற நேரம் எடுத்தால் கத்துவான். வேலையா நிக்கேக்க எடுத்தாலும் கத்துவான். இந்த டிவி பழுதாகப் போய்ட்டுது... என்று அந்த டயலாக் ரிசீவர திருத்த கொடுத்தன். எட்டு நாளாகுமெண்டான். ரெண்டு தரம் எடுத்துக் கேட்டன். கேட்கிறேன் பார்க்கிறேன் எண்டான். ஆளயே காணல புள்ள. ஒரு மாதம் ஆச்சு அந்தக் கறுத்தப் பெட்டிய போய்ப் பாக்குற போல பாத்துட்டு இருக்கேன் புள்ள. கொஞ்சம் நேரம் பார்த்து அதை எடுத்து தர சொல்லு புள்ள. புண்ணியமா போகும். அவனும் பாவம் வேல வேலை என்று ஓடித்திரியுறான்."

"சரி அம்மா இவரிடம் சொல்லுகிறேன். நீங்க சாப்பிட்டு யோசிக்காமல் இருங்க..." என விசாரித்துவிட்டு அவளும் நிறுத்தி விட்டாள்.

ஊர் கலகலக்கும் பகல். மனிதர்களோடு விலங்கு களும், அவன் கண்டுபிடிப்புகளும் இரைச்சல் போடும் பகல் பொழுது. இவள் வீட்டில் மட்டும் குண்டூசி விழுந்தா லும் அது விழுந்த சத்தம் கேட்கும் திசையில் திரும்ப எடுத்துக் கொள்ளலாம். கடிகார முட்களின் நகர்வு நள்ளிரவில் துல்லியமாக கேட்பது போல பட்டப்பகலிலும் கேட்கும் மயான அமைதி அவள் வீட்டில். மெல்லிய காற்றின் சலசலப்பையும் அது இலை தழைகளை அசைத்து வரும் மெல்லிய இசையையும் கூட அங்கு இலகுவாக செவிமடுக்க முடியும். ஆனால், அவளுக்குப் பூமியின் நடுப்பகுதியின் லாவா குழம்புகளின் கொதிநிலை எச்சில் விழுங்குவது கூட காதுகளுக்கு பேரிரைச்சலாக... அவள் சிந்தனை அது பெருத்த நெரிசலிகளில் மிதிபடும் குழந்தை போல் அழுது வீரிட்டுக் கொண்டிருந்தது.

யாரோ கதவைத் தட்டும் சத்தம். ஆளிருந்தாலும் பூட்டுப் போட்ட அவள் வாசல் படலையைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் நால்வர். தண்ணீர் பில் போடுபவன், கடிதக்காரன், கரண்ட் பில் போடுபவன். இவர்களைத் தவிர மகன். மகன் வரச் சாத்தியமில்லை. இப்பதான் பேசிட்டு வச்சேன். யாராயிருக்கும் பில்வாற திகதியும் இல்லை. கடிதமாயிருக்குமோ? பார்ப்போம். மகனின் கடிதம் எல்லாம் இந்த முகவரிக்குத்தான் வரும். கடிதம் வந்தால் நல்லது. அதை எடுக்க மகன் வருவான். என்று படலை வரை சென்றவளுக்கு ஏமாற்றம்.

ஒரு பொண்ணு "அம்மா 78/32 இலக்க வீடு எது?" முகவரி கேட்டாள்.

"ஓ இது 78/32 அது அந்தா தெரியுதே பச்சக் கதவு..."

வந்தவள் எட்டிப்பார்த்து எண்ணி "3வது வீடா அம்மா?"

"ஓம் ஓம் அதுதான் லலிதாட வீடு" எனச் சொல்லி விட்டு நீங்க, எண்ணத் தொடங்கி முகவரி கேட்டவரின் மொத்த முகவரியையும் கேட்டு அறிந்து கொண்டாள். 30 நிமிடம் சுவாரசியமானது அவளுக்கு. கடிதம் வரவில்லை என்ற கவலை மறுபுறம்.

தட்டுவது யார் என்று பார்க்கும் அவசரத்தில் போனை மறந்து படலைக்க வந்துட்டாள். போன் அடிக்கிற சத்தம் கேட்குது.

'யாரோ! மகனோ! பதறிப்போய் சட்டைப்பையில் இருந்து எடுத்துச் சுட்டு விரலால் அந்தப் பொத்தானை அழுத்தினாள்.

"ஹலோ" என்றாள்.

அவள் "ஹலோ" சொல்லும் முன்பதாகவே "நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் ஜோதிடமணி சிவாச்சாரி தினமும் புதிய நாளை நற்பலன்களுடன் ஆரம்பிக்க நீங்கள் விரும்பினால், சூ01 குறியீட்டினை அழைத்து இந்த சேவையினை பதிவு செய்து கொள்ளலாம்" என தொடர்ந்து யாரோ பேசிக் கொண்டே இருக்கிறார்கள்.

எலக்ட்ரானிக் உபகரணங்கள் பாவிப்பதில் கைதேர்ந்தவள் அவள். இந்த டயலாக் சேவைகள் பற்றித் தெரியும் அவளுக்கு. 'இவனுங்க வேற நேரம் கெட்ட நேரத்துல ராசியும் பலனும்' என சினந்து கொண்டாள்.

மீண்டும் ஒரு அழைப்பு போன் அடிக்கிறது.

'இது எந்தச் சேவையோ தெரியல?' வெறுப்போடு எடுத்து அழுத்தினாள். மகன் "ஓ நீயாப்பா? இப்ப கொஞ்சத் துக்கு முதல் ஒரு கோல் வந்தது. அவன் ராசிபலன்காரன்... விசர்வந்தது எனக்கு அதுதான் இப்பையும் யாரோ என்று..."

"அம்மா அம்மா சரி நேரமில்லை. இதை விடுங்க நான் சொல்றதை கேளுங்க"

அவளுக்கு அப்படியே அடங்கிப் போனது மனம்.

"சரிப்பா சொல்லு" அடித்தொண்டையிலிருந்து மெலிதாய் ஒரு சத்தம்.

"டிவி ரிசிவர் திருத்தியாச்சு இன்றைக்கு வரும்" என்றான்.

"சரிப்பா வருவியா நீ ? ஏதும் சாப்பாடு செய்யவா?" என்றாள் தாய்.

"கடவுளே நான் சாப்பிட்டேன். வையுங்கம்மா எப்பவும் சாப்பாடு சாப்பாடு" என்றபடியே அழைப்பு துண்டிக்கப்பட்டது.

'எனக்குக் கரைச்சல் தரக்கூடாது எண்டுதான் அவன் நினைப்பான். சரி வரவனுக்கு எதுவும் கொடுத்தா சாப்பிடா மலா போகப்போகிறான். பின்நேரக்கைக்கு வேலை முடிச்சு களைச்சுப் போய் வருவான் ராசவள்ளிக்கொடி காய்ந்து கிடக்கு. தோண்டுவோம்' என்று அந்த பசளை பையில நட்டு வச்ச கிழங்குக் கொடியைப் பிடிச்சபடி அந்தப் பையை அறுத்து அதில் இருந்த மண்ணை கொட்டினாள். ஒரு கிலோவுக்கு மேல வரும். உருண்டையா ஒரே ஒரு கிழங்கு இருந்தது. மனம் போல முகம் மலர்ந்து சிரித்தது.

தோலுரித்து கழுவி மெலிது மெலிதாகச் சீவி எடுத்து அப்படியே தேங்காய் பாலையும் அதுல அவளோட ஆசை பாசத்தையும் சேர்த்து பிழிந்து ஊத்தி, கொஞ்சமா உளுந்து மாவு சேர்த்து ஒரு கஞ்சி காய்ச்சி அப்படியே கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் இதை ஊற்றி ஆறவைத்து, அப்புறமா அதை ஒரு தட்டுல கொட்டி கத்தியால் சதுரம் சதுரமா வெட்டி வெச்சா, கிழங்கு வாசம் தேங்காய்ப் பாலுடன் சேர்ந்து அவள் மகன் வீட்டுக்கே மணத்தாலும் மணக்கும். அந்தத் துண்டுகளோட ஊதாப்பூ நிறம்... பார்த்தாலே நாக்க ஊறவைக்கும். மகன் வருவான் என்று படலையைத் திறந்து பார்த்துட்டே இருந்தாள்.

ஏதோ ஒரு வண்டிச் சத்தம் கேட்குது. வந்ததும் போகப்போறேன் எண்டுவான். புள்ளைக்கு கொஞ்சம் சுத்தி வைப்போம் என்று ஒரு பார்சலும் மருமகளுக்கு சுத்தி வைத்தாள். சுடு தண்ணிய கொதிக்க வைப்போம். வந்தவுடனே தேத்தண்ணிய ஊத்திகுடுக்கலாம். இல்லாட்டி இந்தா நேரமில்லை என்று ஓடிப் போயிருவான். களைத்துப் போய் வருவான்... என்று அடுப்பில் கேற்றலை வைத்து கொதிக்க விட்டாள்.

படலையின் உள்ளே வண்டி ஒன்று வருகிறது. கேசவன்தான் வருகிறான். வெளியே ஓடி வருகிறாள்.

பாதி வாசலில் நின்று "அம்மா..." என வேறு ஒரு குரல்...

"கேசவன் அனுப்பினவர் உங்களோட ரிசீவர பூட்டிவிட வந்தேன்"

மனுஷிக்கு உடல் முழுவதும் ஓடிச் சோர்ந்தது. அப்படியே பார்த்தபடி நின்றாள்.

"அம்மா நான் ரஞ்சன், கேசவன் அனுப்பினான் ரிசீவர் பூட்ட" என திரும்பவும் சொன்னான்.

"சரிப்பா வாங்க..."

ரஞ்சன் ரிசிவரைப் பூட்டிவிட்டு டிவியைப் போட்டு கே டிவியில் மாற்றிவிட்டார்.

"அம்மா படம் பாருங்க" என்றான். அவள் காதுகளில் என்ன கேட்டதோ சிரிக்கிறாள்.

"சரி நான் போயிட்டு வரேன்" என்கிறான்.

"தம்பி கேசவன் வீட்டை போவீங்களா?" என மெதுவாக கேட்கிறாள்.

"இல்லம்மா நான் இந்தப் பக்கம் போகிறேன்."

"சரிப்பா பரவாயில்ல இதை கொண்டு போய்ச் சாப்பிடுங்க..." என மருமகளுக்காக மடித்த பொட்டலத்தை கொடுத்து விடுகிறாள்.

தொலைபேசி அழைப்பு அழைக்கின்றது. எடுக்கிறாள்.

"டிவி வேலை செய்யுதா அம்மா? அம்மா...? கேக்குதா கதைக்கிறது... உங்களத்தான் நான் கதைக்கிறது கேக்குதாமா..." என்கிறான் கேசவன்.

அவள் பதில் சொல்லாமலே இருக்கிறாள்.

"மனிசி டிவியை போட்டுட்டு போணையும் எடுத்துட்டு கதைக்காம என்ன செய்யிறாவோ... எனக்கு நேரம் போவுது" என்றபடியே ஆங்கிலப் பாடலின் இசை கேட்கின்றது... சில நிமிடத்தில் போனின் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

அவள் விறைத்த அமைதியை குலைப்பது போல். டிவி பல பல படங்களை காண்பித்துக் கொண்டிருந்தது. தேநீருக்காக வைத்த உலை கொதித்துப் பொங்கி வற்றியது. அவள் உள்ளத்திற்குப் போட்டியாக கேற்றல் சூடாகி சிவந்து வெடிக்க ஆரம்பித்தது. அவள் காதுகளுக்கு அந்தச் சத்தம் கேட்டும் கேட்காதது போல்... இருக்கையில் இருந்து அவள் எழுந்திருக்கவே இல்லை.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-31

றொசில்டா அன்டன்



# ஓய்ந்தாலும் ஓயாத அழைப்புக்கள்

எனது பயணம் இப்படி ஆரம்பமாகும் என்று கனவிலும் நினைக்கவில்லை. எனது விடலைப் பருவத்தில் எதற்குமே பயம், பயம் என்ற உணர்வுடனே வாழ்ந்தவன். அழகிய பசுமையான வளம் நிறைந்த கிராமத்தில் வாழ்ந்த எனக்கு வயல், தோட்டம் பாடசாலை, வீடு நண்பர்களுடன் கிரிக்கட் விளையாடுவது, ஆற்றில் குளிப்பது, மீன் பிடிப்பதுஇது மட்டுமே என் உலகமாய்இருந்தது. யுத்தம் காரணமாக கிராமத்தை விட்டு வெளியேற வேண்டியதாய்ப் போய் விட்டது. புதிய மனிதர்கள், பழக்கப்படாத சூழல், தங்குவதற்குத் தகுந்த இடம் கிடைக்காமை என நகரத்தில் தொழிலை தேடும் போது மிகச்சிரமமாய்இருந்தது. கிடைக்கும் வேலையைச் செய்வது என்று எனக்குள் தீர்மானம் எடுத்துக்கொண்டேன். தேர்ந்தெடுத்த தொழிலால் எனக் குள் பல போராட்டங்களை நான் சந்திக்கப்போகின்றேன் என்பது அப்போது எனக்கு தெரிந்திருக்கவில்லை. பயம் ஒருபக்கம் என்னுள் இருந்தாலும் அது காணாமல் போக என்ன காரணம் என்று சிந்தித்தேன். காதலும் ஒரு காரணமே! எனது காதல் மனைவி என்னை நம்பி வந்தவள் அவளைக் கண்கலங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதாலும், படிப்பை பாதியில் நிறுத்தியதால் அரசாங்க தொழில் தேடுவது என்பதும் கடினம் என்பதாலும் நான் இத் தொழி லைத் தேர்வு செய்தேன் எனலாம்.

மோர்ச்சுவரி சிற்றூழியனாக அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றினேன். 1982இல் எனது தொழிலை ஆரம்பித்த காலப்பகுதி இனகலவரமும் ஆரம்பமாகியிருந்தது.

பிறப்பிலே நான் இஸ்லாமிய மதத்தவன் என்பதால் எனது பெற்றோர் உற்றார், உறவினர்கள் வேறு சமூகத்தைச் சேர்ந்த எனது காதல் மனைவியையும், தொழிலையும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனது உடன் பிறப்புகள் நான் கடமையாற்றிய அதே வைத்தியசாலையில் உயர் பதவிகள் வகித்த போதும் என்னுடன் பேசுவதற்கும் தயங்குவார்கள். காலபோக்கில்இவையெல்லாம் எனக்கு பழகிப் போன ஒன்றானது. வைத்தியசாலையும் விடுதியும், எனது குடும் பமும் என் உலகமானது. நான்கு பிள்ளைகள் பிறந்த பின் எனது வாழ்வில் மாற்றங்கள் நிகழத் தொடங்கியது. சொந்தங்கள் வந்துச் சென்றார்கள். மகிழ்ச்சியுடன் நாம் வாழ்ந்தாலும் நித்தமும் போராட்டமாகவே என் வாழ்க்கை கழிந்தது. பல வருடங்களாக தொடர்ந்து மோர்ச்சுவரியில் இரத்த வாடையுடனே என் காலமும் கழிந்தது.

வைத்தியசாலைக்கு அருகில் எனது தங்கும் விடுதி என்பதால சில நேரம் மதிய உணவிற்காக விடுதிக்கு நான் வருவதுண்டு. எனது மனைவி பிள்ளைகளுடன் விடுதியிலே வசித்து வந்தேன். அன்றும் வழமை போல மதிய உணவை சாப்பிட கையிலெடுத்து உண்ண ஆயத்தமான போது

"பாயிஸ் அண்ணா பாயிஸ் அண்ணா"

பதட்டமாக ஒரு குரல்! வேலி கள்ளி மரங்களாலும் கேட் தகர கதவு என்பதாலும் தட்டும் ஓசையும் வெகுவாகவே காதை கிழித்தது.

"வாரன் வாரன்" சொல்லிக்கொண்டே வாசலுக்கு போனேன். என்னுடன் வேலை செய்யும் அசோக் தம்பி நின்றான்.

"என்ன தம்பி"

"அவசரம் பாயிஸ்" எனக்காக பலர் காத்திருந்தனர். வைத்தியர் ஒருபக்கம் எம்.எஸ், சட்ட வைத்திய அதிகாரி, பொலிசார், ஆமீகாரர்கள் என பெரியதொரு பட்டாளமே.

யுத்த கலவர காலப்பகுதி என்பதால ஒவ்வொரு நாளும் இரத்த வாடையுடன் தான் என் காலமும் நகர்ந்தது. மக்கள் கூட்டங்களும் வெளியே அலைமோதிக் கொண் டிருந்தனர்.

"பாயிஸ் கடலுக்கு போன நான்கு பேரில மூன்டு பேர்ட பொடி கரை ஒதுங்கி கொண்டு வந்திருக்காங்க. தலையில் அடித்த காயங்களும், சூடுப்பட்ட அடையாளங் களும்இருக்கு என்போர்ம் பண்ணணும்"

"சரிம்மா என்று நான் தலையாட்டி எம்.எஸ் கூறியதற்கு இணங்க அவசரம் அவசரமாக எனது ஆடை களை மாற்றிக்கொண்டு காலணியை அணிந்து கைகளை உறையிட்டு மறைத்தவனாய் முகக் கவசத்துடன் என் வேலையை ஆரம்பித்தேன்.

மதியம் ஆரம்பமாகிய எனது வேலைஇரவு ஒன்பதை தாண்டியது. எனக்காக மனைவி சாப்பிடாமல் காத்திருப்பாள். பிள்ளைகள் நால்வரும் தாயுடன் சேர்ந்து வழிமேல் விழி வைத்து பார்த்துக் கொண்டிருப்பார்கள். சிறிது நேரத்திற்கு பின் அவரவர் குடும்ப விசாரணைக்குப் பின் உடலகங்களை கையளித்து விட்டு ஆடைகளை மாற்றி குளித்து விட்டு விடுதியை நோக்கி கால்கள் களைப் புடன் பயணித்தன. வீட்டிற்குள் நேராக செல்வது என் வழமையல்ல.

வீட்டிற்கு வெளியே வளவில் எனது மனைவி சுடு தண்ணியை கலந்து இளம்சூட்டில் பெரிய பாத்திரம் ஒன்றில் வைத்திருப்பார். பிள்ளைகள் மஞ்சள் தண்ணி சாம்பிராணியுடன் காத்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் தலைக்கு முழுகிவிட்டு மஞ்சள் தண்ணியில் என்னை முழுவதுமாக நனைத்து விட்டே வீட்டிற்குள் நான் வருவதுண்டு. பின்பு சாம்பிராணி புகையை வீடு முழுவதும் மூத்த மகள் போடுவாள். நிம்மதியாக சாப்பிட அமர்ந்து அந்த நேரம் மீண்டும் தகர சத்தம்.

வாசலில் மகள் "யார்" என கேட்கும் சத்தம்

"பாயிஸ் அண்ணாவை கூட்டி வரவாம் யாரையோ சுட்டு போட்டாங்களாம் டக்கண்டு வர சொல்லுங்க மகள்"

"சரி மாமா சொல்றன்"

மூத்த மகள் "சாப்பிட்டே போங்க அப்பா நிம்மதியாக சாப்பிட கூட விட மாட்டாங்க" என்று சலித்துக் கொண்டாள். பிள்ளைகள் நால்வரும் எனக்குப் பிடிக்காத சாப்பாட்டைக் கூட சாப்பிடவே மாட்டார்கள்.

"அப்பாக்குஇறைச்சி பிடிக்காது" என்று ஒருநாள் மனைவி பிள்ளைகளிடம் கதை வாக்கில் சொல்லியிருக்க அன்றிலிருந்து வீட்டில் பிள்ளைகள் இறைச்சி சமைக்கவே கூடாது என்று சொல்லிப்போட்டினம். என் பிள்ளைகளும், மனைவியும் கடவுள் தந்த வரமே அவர்களுடன் நிம்மதியாக வாழ்ந்தாலும் எனது தொழில் வலி மிகுந்தவையே......

மீண்டும் நினைவுக்கு வந்தவனாய்

வைத்தியசாலை சீருடையுடன் நான் இரவு பணியில் அமர்த்தப்பட்டேன். காரணம் நான் விடுதியில் தங்குவதால் வைத்தியசாலை அழைக்கும் நேரத்தில் கடமையில் ஈடுப்பட்டே ஆகவேண்டும். மாணவர்கள் ஐவர் உயிரற்ற உடலாய் என் கண் முன்னே.. எனது மூத்த மகளின் வயதுடையவர்கள். விசாரணைகள், சட்ட ஒழுங்குகள், அறிக்கைகள் அனைத்தும் முடிவுற்ற நிலையில் கண்ணீருடன் அவர்களுக்கு ஆடை அணிவித்தேன்.

மாப்பிளைகள் போல சவப்பெட்டியில்.....

மக்களின் கண்ணீர் அஞ்சலியுடன் இரண்டு நாட்களும் நகர்ந்தது. என்னால் நிம்மதியாக தூங்க முடிவதில்லை. அதிகாலை ஐந்து மணிக்கே வேலைக்குச் சென்று விடுவது எனது வழக்கம்.

நாட்கள் வேகமாக ஓடியது எனலாம்.

யுத்தகாலப்பகுதி என்பதால் கடைகள் எப்ப வேண்டுமானாலும் பூட்டுவார்கள். சம்பளத்தில் மாதத்திற்குத் தேவையான உணவு பொருட்களை வாங்கிச் சேமித்து விடுவேன்.

பதினாறு விடுதிகளிலுமுள்ள ஏனைய ஊழியர்களும், அவர்களின் குடும்பங்களும் இன, மத பேதமின்றி ஒற்றுமையாக வாழ்ந்தோம்.

மகிழ்ச்சியுடன் ஒரு பக்கம் குடும்ப வாழ்க்கை போனாலும், மிகுந்த மன வேதனையுடன் வேலைக்கு போன நாட்கள் தான் அதிகம்

"பாயிஸ் என்ன ஒரு மாதிரியாகஇருக்கிங்க" வேந்தன் ஓவசீயர் கேட்க சுயநினைவுக்கு வந்தவனாய்" தலைவலி தாங்க முடியல ஒவ்வொரு நாளும் நாலு தடவைக்கு மேல முழுகிறதால காய்ச்சல் குணமாகஇருக்கு சேர்"

"அப்பஇன்று லீவு போடுங்க பாயிஸ்"

"ஓம் போய் நிம்மதியாக நித்திரை கொள்ள போறன் சேர்.

லீவு கடிதம் கொடுத்து திரும்பியவனாக விடுதியை நோக்கி நடக்கத் தொடங்கினேன். கண்ணயர்ந்த சிறிது நேரத்தில் மனைவி தட்டி எழுப்பி "அப்பா வெளியில ஆட்கள் தேடி வந்திருக்கினம் என்னனு தெரியல பாருங்கப்பா"

அடித்துப் போட்ட உடல் வலியுடன் எழும்பவே மனமற்றவனாய் போர்வைக்குள்ளிருந்து விடுப்பட்டவனாய்

"என்ன தம்பிஇன்று லீவு போட்டனே சொல்லலயா வேந்தன் ஓவசியர்ட சொல்லிட்டு தானே வந்தனான்"

"ஓம் அண்ணா மூதூரில நடந்த அடிப்பாட்டில தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேராம் செத்திட்டாங்களாம் உங்களை கூட்டி வர சொன்னவங்க வேலைக்கு ஆட்கள் இல்லையாம் அது தான் கூட்டி போக வந்தன்"

"சரி போங்க தம்பி வெத்திலை ஒரு வாய்க்கு போட்டுடு வாரன்"

வைத்தியசாலையில் கால் வைத்ததுமே என்னால் தாங்க முடியாத தலைவலி மீண்டும் ஆரம்பமாகியது. பல நாட்கள் போராட்டத்தின் பின் திருகோணமலைக்கு வந்த அந்த உடலங்களை மோர்ச்சுவரியில எடுத்து வரும் போது எனது உடலில் ஆங்காங்கே புளுக்கள் நெளிந்த வண்ணம்.

17 பெட்டிகளிலும் உள்ளடங்கிய உடல்களை யாரும் பார்க்க முடியாதவாறு சீல் பண்ணப்பட்டே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இப்படி நாட்கள், வாரங்கள், மாதங்கள்,வருடங்கள் என காலங்கள் கடந்தன. அழுகை ஒரு பக்கம், மறுபக்கம் துயரம் எத்தனை தற்கொலைகள், விபத்துகள் மோர்ச்சுவரியில் நித்தம் எனக்கு ஏற்படும் அனுபவங்களை எனது மனைவியுடன் பகிர்ந்துக் கொள்வேன். "என்னப்பா யோசிக்கிறீங்க"

"இல்ல ஜெசி ஆறு வயது பெண் குழந்தையிட வாயில சொக்ஸ் திணிக்குமளவிற்கு எப்படி மனம் வருது அந்த பிஞ்சு மனம் என்ன பாடுப்பட்டிருக்கும் உறைபேக்கில போட்டு கட்டி கால்வாயில போட்டிருந்தாங்க உறை பேக்கை கழட்டும் போது அந்தக் கைகள் குழந்தையின் கைகள் போலஇல்லையே ஜெசி"

நான் தேம்பி தேம்பி இப்படி எத்தனை நாட்கள் அழுதிருப்பன். புதைகுழிகளுக்குள் புதைக்கப்பட்ட உடலகங்களை மீண்டும் விசாரணைக்காக தோண்டி எடுக்கும் போது ஏற்படும் வேதனைகளை வார்த்தையால் சொல்ல முடியாத துன்பம். தொலைபேசி வசதியற்ற காலத்தின் மரணங்கள் சொல்லொணாத் துயரம் என்றே கூற வேண்டும். மகன் தூர பிரதேசத்தில் வேலைக்கு சென்று ஐந்து நாட்களின் பின்னே வீட்டிற்கு வருவான் தாய் மட்டுமே ஐந்து நாள் கழிய வந்து பார்த்த மகனுக்கோ அதிர்ச்சி பெற்ற தாயை எறும்புகளும், புழுக்களும் தின்றுக் கொண்டிருக்கும் அந்த காட்சி...

பிள்ளைகள் நால்வரும் திருமணம் முடித்தப்பிறகு எனக்கு ஓய்வூதியமும் மனைவியுடனும், பேரப் பிள்ளைகளுடன் எனது காலத்தை மகிழ்ச்சியாக கழித்தாலும் என் தொழிலில் ஏற்பட்ட வலி, அழுகை, அங்கலாய்ப்பு, மறக்க முடியாத காட்சிகள்,இன்னும் எத்தனை அனுபவங்களையும், மரண ஓலங்களையும் கண்டு என் மனம் நாற்பது வருடங்களை கடந்தும் இன்று வரை இத்தொழிலில் ஈடுப்பட மனமுவந்து செயற்பட யாரும் முன் வருவதில்லை. வாசலில் இன்றும் கண்ணீருடன் "பாயிஸ் அண்ணா" அல்லது "பாயிஸ் நானா" என்று கூப்பிடும் அந்த கண்ணீர் குரல்கள் எத்தனையோ! எனது ஓய்விற்குப் பின்னும் ரணமான கணங்கள் இரத்தக்கறையுடன் தொடர்கின்றது.

* * *




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூர் சமரன்



# நிரந்தர நியமனம்



தொழில் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் என்றைக்குமே அத்தியாவசியமான ஓர் விடயமாகும். தொழிலை அடிப்படையாகக் கொண்டே இந்த சமூகத்தில் அந்தஸ்தும் தகுதியும் தீர்மானிக்கப்படுகின்றன. ஒருவர் தனக்கென சொந்த தொழிலில்லாவிட்டால்இந்த சமூகத்தில் மரியாதை குறைவாக நடத்தப்படுகின்ற நிலையும் உள்ளது. அந்தளவுக்குத் தொழிலின் முக்கியத்துவம் இந்நாட்களில் உணரப்பட்டுள்ளது.

கவிதா நடுத்தர குடும்பத்தில் மூத்தவளாக பிறந்தவள். அப்பா குடிசை தொழிலாளியாக இருக்கிறார் மூன்று சகோதரிகளும் ஒரு சகோதரனும் கவிதாவின் உடன்பிறந்தவர்கள். அப்பா படிக்காதவர் மழைக்குக் கூடப் பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்காதவர். ஆனால் நல்ல அறிவாளி அனுபவத்தின் அறிவே அவரின் தெளிவு. அம்மா ஆறாம் வகுப்பு வரை படித்தவர். கவிதா உயர்தரம் வரை படித்தவள், கலைப்பிரிவில் மூன்று சாதாரண சித்தியுடன் பல்கலைக்கழக வாய்ப்பையும், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி வாய்ப்பையும் இழந்தவள். படிப்பில் நல்ல கெட்டிக்காரி என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட சுமாராகப் படிப்பாள். நல்ல குணம் மிக்கவள், நேரம் தவறாது பாடசாலைக்குச் செல்வாள், அதிபர் ஆசிரியர்களிடம் நல்ல மதிப்பும் இருந்தது. இருந்தாலும் உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காமல் போனது அவளுக்கு பலத்த வீழ்ச்சியாகவே இருந்தது. ஏதாவது கற்கைநெறிகளை தொழிற் பயிற்சி நிலையங்களின் ஊடாக முடித்துவிட்டு வேலைவாய்ப்பை பெற்று விட கவிதா நினைத்தாள். சில கற்கைநெறிகளுக்கு அரசு உத்திரவாதம் இருந்தாலும் கூட அதற்கு பணம் கட்ட வேண்டிய சூழ்நிலை. கவிதாவும் ஒருவாறு தனது குடும்ப வறுமையின் மத்தியிலும் கணினி பயிற்சியை முடித்து விட்டாள். தன் பயிற்சிக்கு ஏற்ற வேலையை எதிர்பார்த்து அவள் காத்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் தெருவில் கவிதா நடந்து போகும் போது, அவளைக் கண்ட கவிதாவின் உயர்தர பாட ஆசிரியர் குணம் கவிதாவை கண்டதும் சிரித்துக் கொண்டே வந்தார். அவளை நலம் விசாரித்தார், "கவிதா எப்படியம்மா இருக்க பெயாவெல் பங்சன்ல கடைசியா பார்த்தது, இப்ப என்ன செய்திட்டு இருக்க"

"வணக்கம் சேர் நல்லா இருக்கேன், எனக்கு யுனிவர்சிட்டி போக ரிசல்ட் காணாது, அதனால கொம்பி யூட்டர் கோர்ஸ் செய்து கொண்டு ஏதும் வேலைக்குப் போகலாம்னு இருக்கேன்"

" இன்னும் கொஞ்சம் கவனமா படிச்சிருந்தா நீயும் கேம்பஸ் போய் இருக்கலாம் தானே, இனி என்ன செய்யுற, முடிஞ்சா இன்னொரு தடவை எழுதிப்பாரு, சிலவேளை யுனிவேசிற்றி கிடைக்கலாம்"

"ஓம் சேர், அப்படித்தான் செய்ய நினைச்சன், ஆனா தொடர்ந்து படிக்க என்னோட குடும்ப நிலைமை இடம் கொடுக்கல்ல அதனால தான் ஏதாவது வேலைக்கு முயற்சி செய்யிறன், அதுல வார காச வச்சு வேற ஏதும் படிப்பை படிக்கலாம் தானே"

"அதுவும் சரிதான் உன் மனசுக்கு எது சரின்னு படுதோ அதை செய், சரி நான் போயிட்டு வாரேன் கவனம் பிள்ள"

"போயிட்டு வாங்க நானும் வாரேன்"

குணம் சேர் பெயருக்கு ஏற்றால் போல நல்ல குணம் கொண்டவர். பிள்ளைகளின் படிப்பில் அதிக அக்கறை கொண்டவர். இப்போது ஆசிரியர் சேவையி லிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டு வீட்டோடிருக்கிறார். கவிதாவின் மீது உள்ள அக்கறையினால் அவளை நலம் விசாரித்துச் சென்றுள்ளார். சில நாட்களின் பின்னர் ஒரு தனியார் நிறுவனத்தில் கணனி தரப்பு பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்ட ஒரு துண்டு பிரசுரம் தெருமதிலில் ஒட்டப்பட்டிருப்பதை கண்ட கவிதா அந்த வேலைக்கான விண்ணப்பத்தை தயாரித்து குறித்த நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தாள்.

ஒரு நாள் வேலை வாய்ப்பு முகவர் ஒருவர் கவிதா வின் அப்பாவை தொடர்பு கொண்டு கவிதாவுக்கு வேலை வாங்கி தருவதாக கூறினார். இப்படியே 4 பேர் தந்தையர் களிடம் பேசி ஆட்கள் சேர்த்து உரிய ஒரு பொருத்தமான இடத்தில் பேசி தகுந்த வேலை பெற்றுத்தருவதாக நம்பிக்கை வாக்குறுதி கொடுத்திருந்தார். அவர்களும் அந்தப் பேச்சை நம்பினார்கள். ஒவ்வொருவரிடமும் தலா ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தினை குறித்த முகவர் பெற்றுக்கொண்டார்.

கவிதாவின் அப்பா தனக்கு சொந்தமாக இருந்த வயல் காணியின் ஒரு பகுதியை விற்று அந்த பணத்தினை கொடுக்க முற்பட்டார். இன்னும் எவ்வளவு நாள்தான் நாம் கஸ்டப்படுவது தனது மகள் ஒரு வேலை எடுத்து விட்டால் குடும்ப கஸ்டம் நீங்கிவிடும் அதோடு வயலையும் மீண்டும் பெற்று விடலாம், அவளின் எதிர்காலமும் நல்ல சுபிட்சமாக இருக்கும் என்று எண்ணி வீட்டாருடன் பேசினார். காணி விற்பதை முதலில் கவிதாவின் அம்மா எதிர்த்தார். இருந்தபோதிலும் பிறகு ஏற்றுக்கொண்டார். கவிதாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஒருவேளை நல்ல வேலை கிடைத்து விட்டால் அதுவே நிரந்தரமாகிவிட்டால், அப்பா சொல்வதைப்போல நடக்கும் என எண்ணினாள். பரம்பரையான வயல் விற்கப்படுவதை அவள் விரும்பவில்லை. எனினும் அப்பாவினதும் முகவரின தும் நம்பிக்கை வார்த்தைகளினால் அரை மனதுடன் அவள் சம்மதித்தாள்.

பணம் கொடுத்து ஒரு வாரம் கழிந்த பின்னர் குறித்த முகவர் கவிதா உட்பட ஏனைய நான்கு பணம் கொடுத்த நபர்களையும் அழைத்துக்கொண்டு வேலையகத் துக்குச் சென்று தனக்கு நம்பிக்கையானவரை தொடர்பு கொண்டு வேலை எடுத்து தருவதாகச் சொல்லி, அங்கே போவதற்கு தேவையான சான்றிதழ்களை தயார்படுத்திக் கொள்ளுமாறும் அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளு மாறும் கூறினார். எப்படியும் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை கவிதாவுக்கு ஏற்பட்டது. அந்த முகவர் அவ்வண்ணமே பேசியிருந்தார்.

இரண்டு நாட்கள் கழிந்த பின்னர் வேலை பெறுவ தற்காக ஒரு முக்கியநபரை சந்திக்க வேண்டும். அதற்காக தலைநகருக்கு செல்ல வேண்டும் என்று முகவர் கூறினார். இவர்களும் அதனை நம்பி அங்கு போகத் தயாரானார்கள். அங்கு சென்ற பின்னர் குறித்த நிறுவனத்தில் வேலை செய்கின்ற தரகர் ஒருவர் மூலமாக ஓர் அறையில் அனைவரும் அழைக்கப்பட்டனர். இவர்கள் கொடுத்த பணத்தின் ஒருபகுதி அங்குள்ள அதிகாரி ஒருவரிடம் கொடுக்கப் பட்டது. பணத்தை பெற்றுக்கொண்ட அவர் நிச்சயமாக தான் வேலை பெற்றுத் தருவதாகவும், இன்னும் ஓரிரு தினங்களில் அதற்கான கடிதம் அனுப்பப்படும் என்றும் வாக்களித்தார். கவிதாவுடன் சென்றவர்கள் அவரின் வார்த்தையை தெய்வவாக்காக நம்பிக்கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். தமக்கு விரைவில் வேலை கிடைத்துவிடும் என்று தமக்குள் பேசிக்கொண்டார்கள். இப்படியே சில நாட்கள் சென்றன. வேலைக்கான கடிதம் வரவில்லை தாங்கள் ஏமாற்றப்பட்டதை அறிய அதிக நாட்கள் அவர் களுக்கு எடுக்கவில்லை. முதலில் பணம் வாங்கிய முகவருக்கு தொலைபேசி மூலம் அழைப்பை மேற்கொண்டார்கள். பதில் எதுவும் கிடைக்கவில்லை தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அது கூறியது. தங்களின் பணமும், நம்பிக்கையும் பறிபோனதை எண்ணி இடி விழுந்த மரம் போல சிதறிச்சின்னாபின்னமாக மனமுடைந்தனர். கவிதாவின் குடும்பம் துக்கத்தில் புலம்பித் தவித்தது. அவளின் அப்பா கோபத்தினால் தன்னிடம் பணம் பெற்றுச்சென்ற முகவரைப் பிடித்து அவனுக்கு சரியான தண்டனை கொடுக்க வேண்டும் என்று பல்லைக் கடித்துக் கொண்டார். கவிதாவும் மனவேதனை அடைந்தாள். அவளது அம்மா பணமோசடி செய்த பாதகனை திட்டித் தீர்த்தாள். பிறகு என்னதான் அவர்களால் செய்ய முடியும் இந்த பண விவகாரம் தொடர் பாக யாரிடமும் முறைப்பாடு செய்ய முடியாத நிலை. ஏனென்றால் இலஞ்சம் வாங்குவதை விட அதை ஊக்குவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் இலஞ்சம் கொடுப்பது தவறு அல்லவா. அதனால் அது பற்றி யாரிடமும் அவர்களின் கூறவில்லை. மற்றைய குடும்பத்தினரும் வெளிக் காட்டிக்கொள்ளவில்லை.

சில நாட்களின் பின்னர் ஒருநாள் கவிதாவின் வீட்டின் முன் தபால்காரர் வந்து நேர்முகப் பரீட்சைக்கான ஒரு கடிதம் ஒன்றினை கொடுத்தார். அது எந்த வேலைக்கான கடிதமாக இருக்கும் என்று வியப்புடன் பார்த்தாள் கவிதா. கடிதத்தின் முன்புறத்தில் ஒரு தனியார் நிறுவனத்தின் இலச்சினையும் அதன் விலாசமும் இடப்பட்டிருந்தது.

அதைப் பார்த்தவுடன் அவள் நினைவுக்கு வந்தது. அவள் ஏற்கனவே தெருவில் ஒட்டியிருந்த துண்டுப் பிரசுரத்தை வைத்து வேலை வாய்ப்பு ஒன்றிற்கு விண்ணப் பித்திருந்தது. வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல கஸ்டத்தின் மத்தியிலும் போலிமுகவர் மூலமாக தாம் ஏமாற்றப்பட்டு இன்னும் பொறுத்துக் கொள்ள முடியாத வலியை தாங்கிக் கொண்டிருந்த கவிதாவுக்கு இது சற்று ஆறுதலாக இருந்தது. இருந்த போதிலும் அந்த வேலை உறுதியாக கிடைத்துவிடப் போவதில்லை. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பாகவே இது இருந்தது. குறித்த நேர்முகப் பரீட்சைக்கு தன்னை விடவும் பெறுபேறு கூடிய அல்லது வேறு தரமான கற்கைநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்த போட்டியாளர்கள் வருவார்களென்றால் வேலை கிடைப்பது சாத்தியமே இல்லை என மனதில் ஒரு கலக்கமும் இருந்தது. இப்போது தான் ஒரு துயரம் வந்து ஓய்ந்திருந்தது. இனி நடப்பது நல்லதாகவே இருக்கட்டும் என்று நினைத்தாள்.

கடிதத்தில் உள்ளவாறு குறித்த தினத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றாள். அங்கே தனது சான்றிதழ்களையும் சமர்ப்பித்து கணனியில் பதிவுகளை எவ்வாறு மேற் கொள்வது என்பது பற்றிய தனது அறிவையும், தனக்கு தெரிந்த விடயங்களையும் அங்கிருந்தவர்களிடம் வெளிக் காட்டினாள். அவர்களும் அதனை புரிந்து கொண்டு திருப்தியடைந்து இரண்டு தினங்கள் கழித்து வேலையில் இணைந்து கொள்ளுமாறு கூறினார்கள். கவிதாவுக்கு தாங்க முடியாத சந்தோசம், தனது நம்பிக்கை வீண்போக வில்லை. கடவுள் கண் திறந்து விட்டார், இனி நல்லதே நடக்கும் என்று மனதில் மகிழ்ச்சி அடைந்தாள். சம்பள விவரம் பற்றிய விவரங்களை அங்கிருந்த அலுவலர்களிடம் கேட்டு விட்டு வீட்டுக்கு வந்தாள். வீட்டில் கவிதாவின் அம்மா எதிர்பார்ப்போடு வாசலிலேயே காத்திருந்தார். சிரித்த முகத்துடன் தனது மகள் வருவதை கண்டு நம்பிக்கை ஒளி பிறந்தது. போன இடத்தில் நடந்த சம்பவங்களை கவிதா எடுத்துக் கூறினாள். இன்ப வெள்ளம் அவர்களின் குடிசை வீட்டை மூழ்கடித்து விட்டது என்று சொல்லலாம். கவிதாவின் அப்பாவும் ஓரளவு நிம்மதி அடைந்தார். இரண்டு சகோதரிகளும் ஓடி வந்து அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டே நேர்முகப் பரீட்சையின் போது ஏற்பட்ட அனுபவங்களை மாறிமாறி கேட்பார்கள். தம்பியோ எதுவும் பேசாமல் அப்பியாசக் கொப்பியில் ஏதோ படம் வரைந்து கொண்டிருந்தான். சின்னப் பிள்ளை என்பதால் இதெல்லாம் அவனுக்கு தெரியவா! போகிறது.

அந்த இரவுதான் நிம்மதியான உறக்கம் அந்த குடும்பத்திற்கு வந்திருக்கும். இரண்டு தினங்கள் கழித்து காலையில் நேரத்தில் எழுந்து வேலைக்கு போக தயாரானாள். அம்மா கொடுத்த தேனீரை மடமடவென குடித்தவள் உணவுப் பொதியை வாங்கி பையில் போட்டுக்கொண்டு பேருந்து நிலையத்திற்கு விரைந்தாள். பல எதிர்பார்ப்புக்கள் அவளிடம் இருந்தன. இந்த வேலையின் மூலம் தனது குடும்பச்சுமை குறைவது மட்டுமல்ல தனது நிலையும் மாறப் போகின்றது என எதிர்பார்த்தாள்.

குறித்த தனியார் நிறுவனத்தின் முன்னாள் பேருந்து கவிதாவை இறக்கிவிட்டது. மெதுவாக இறங்கி அலுவலகத் திற்குள்ளே நுழைந்தாள். அங்கே தமது வேலைகளைச் செய்வதற்காக தயாராகிக்கொண்டிருக்கும் ஊழியர்களை கண்டு பூரிப்படைந்தாள். அங்கிருந்த ஒருவரிடம் தனது நியமனக் கடிதத்தை கொடுத்தார். அவர் இன்னொரு நபரிடம் அவளை காட்டிவிட்டார். அந்த நபரின் பெயர் உமாபதி என்றார். உமாபதி, கவிதாவிடம் அவள் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பான விளக்கம் கொடுத்தார். கவிதாவும் அவை ஒவ்வொன்றையும் மிக கவனமாகவும் நிதானமாகவும் கேட்டு தெரிந்து கொண்டாள்.

தனது வேலையை அன்று முதல் சிறப்பான முறை யில் அவள் செய்யத் தொடங்கினாள். நாட்கள் செல்லச் செல்ல அந்த அலுவலகத்தின் பணியாளர்கள் கவிதாவுடன் நன்கு பழக்கமானார்கள். கவிதா கொடுக்கப்பட்ட வேலையை சிறப்பாகவும் நேர்த்தியாகவும் செய்வாள். மேலும் சில உத்தியோகத்தர்களின் வேலைக்கும் உதவி செய்தாள். அதனால் தங்கள் குடும்பத்தில் ஒருவளைப் போல அங்குள்ள ஏனைய வேலை செய்பவர்கள் கவிதாவை நினைத்தார்கள். நிறுவன முகாமையாளர் கூட கவிதாவின் மீது நல்ல அபிப் பிராயம் வைத்திருந்தார். ஒவ்வொரு நாளும் அலுவலகத்தில் தான் பெறுகின்ற வேலை அனுபவங்களையும் மேலும் சில அனுபவங்களையும்தன்வீட்டாருடன்பகிர்ந்து கொள்ளுவாள்.

இந்த வேலைக்காக கவிதாவுக்கு நாளொன்றுக்கு 400 ரூபாய் வீதம் வழங்கப்பட்டது. சனி மற்றும் ஞாயிறு விடுமுறை வழங்கப்படும். சிலவேளை சனிக்கிழமைகளில் வேலையும் நடைபெறும். சாதாரணமாக இந்த கொடுப்பனவு போதுமானதாக இருந்தாலும் கூட சிறிய நகை வாங்கும் அளவிற்கு கூட போதாது. இதில் மிக முக்கிய விடயம் என்னவென்றால் இந்த கணனித்தரவு பதிவாளர் வேலை நிரந்தரமானது அல்ல. ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஒருமுறை ஒவ்வொரு ஆட்கள் மாறி மாறி வந்து வேலை செய்வார்கள். இந்த முறை கவிதாவின் என்று சொல்லலாம். எப்படியோ ஐந்து மாதங்கள் கடந்துவிட்டன சம்பளம் போதவில்லை என்றாலும் கூட வேலையை விடக்கூடாது என்பதால் நேர்த்தியாக வேலை செய்தாள். ஆறாம் மாதம் முடிவுறும்தருவாயில் முகாமையாளர் கவிதாவை அழைத்து அடுத்த முறையும் அவளையே அந்த வேலைக்கு நியமிப் பதாக கூறி நியமனக் கடிதத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு அதிகரித்து அவளிடம் கையளித்தார். கவிதா மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். அவ்வாறு இருக்கும் போது நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன் ஒன்று கவிதாவின் வீட்டை தேடி வந்தது. கவிதாவுக்கு அவரைப்பிடித்துப்போகவே திருமணம் நடந்தது. திருமணம் செய்தாலும் கூட கவிதா தனது வேலையை விடவேயில்லை. இப்படியே ஆறு தடவைகள் கணனித்தரவு பதிவாளர் வேலையை ஆறுமாத ஒப்பந்த அடிப்படையில் செய்து வந்தாள். நிரந்தரமாக இந்த வேலையை பெற்று விடலாம் என்ற எண்ணத்தில் இடையிடையே சில வேலை வாய்ப்பு களையும் போட்டிப்பரீட்சைகளையும் அவள் தவறவிட்டாள். ஏனென்றால் வேலை செய்யும் நிறுவனத்தின் முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் கவிதாவின் வேலையை நிரந்தரமாக்கி தருவோம் என்ற உறுதிமொழியை கூறி அவளை நம்ப வைத்திருந்தார்கள்.

கவிதாவின் கணவர் வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக வேலை செய்கிறார். இருந்த போதிலும் அவருக்கும் போதிய வருமானம் இல்லை. வீடு கட்டுவதற்காக அவர்கள் கடன் எடுத்ததன் காரணமாக மாதாமாதம் வங்கியில் குறிப்பிட்ட தொகை செலுத்த வேண்டியிருந்தது. கவிதாவை வேலையில் நிரந்தரமாக்கினார்கள் என்றால் குடும்பப்பாரத்தை ஓரளவு சமாளிக்கலாம் என்று எண்ணி இருந்தார். எனினும் அது நடக்காத காரியமாகவே இருந்தது. கவிதா எல்லோருடன் நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் நன்றாக வேலை செய்வதனால் அவளை வேலையிலிருந்து நீக்க அவருடைய நிறுவனத்தார் விரும்பவில்லை. இப்படியிருக்கும் போது ஒருநாள் தன் முகாமையாளரிடம் தனது நிரந்தர நியமனம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளு மாறு கேட்டுக் கொண்டாள். ஏனைய ஊழியர்களும் அதனையே விரும்பினார்கள். அவரும் நிச்சயமாக வேலையை நிரந்நரமாக்கித் தருவதாக உறுதியளித்தார். இது நடந்து மேலும் ஒரு வருடம் கழிந்தது.

தலைமையகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது, அதாவது கணனித்தரவு பதிவாளர் பதவியை நிரந்தர பதவியாக மாற்றும்படி சுற்றறிக்கை வந்திருந்தது. குறித்த சுற்றறிக்கை முகாமையாளரிடம் வந்துள்ளதை அங்குள்ள அலுவலக பணியாளர் மூலமாக கவிதா அறிந்து கொண்டாள். எப்படியும் நாம் வேலையில் நிரந்தரமாகி விடலாம் என்ற நம்பிக்கை அவளுக்கு வந்தது. அடுத்த நாளே முகாமையாளர் கவிதாவை அழைத்து "இனி நீங்கள் வேலைக்கு வரவேண்டாம் உங்களை தொடர்ந்து ஏமாற்ற எனக்கு விருப்பமில்லை, ஏனென்றால் இந்த வேலையை நிரந்தரமாக மாட்டாங்க போல இருக்கு. வேற வேலைக்கு நீங்க முயற்சி செய்யப் பாருங்க, நீங்க தொடர்ந்து வேலை செய்தாலும் அது நிரந்தரமாக இருக்காது, அது தான் என்ன செய்யிற எண்டு தெரியாம இருக்கு" என்றார். முகாமையாளரின் பேச்சை கேட்டு அதிர்ச்சி அடைந்த கவிதா அவரின் போலித்தனத்தை அறிந்து கொண்டாள். இவ்வளவு நாளும் தன்னை வேலை வாங்குவதற்காகவே தன்னுடன் நன்றாக பழகியிருந்தார்கள், இப்போது வேலை நிரந்தரமாக இருக்கும் தருணத்தில் தமக்குத் தெரிந்தவரான அவரின் உறவினர் முறையான ஒருவருக்கு அவர் பெற்றுக் கொடுப்பதற்கே இவ்வாறு நடந்து கொள்கிறார். இது சக ஊழியர் மூலமாக கொஞ்சம் இலேசாக கவிதாவுக்கு அறியக்கிடைத்திருந்தது.

"ஏன் நான் நல்லாதானே வேலை செய்தன்"

"நல்லாத்தான் செய்திங்க ஆனா இது நிரந்தரமாக்க மாட்டாங்க, அதுதான் உங்களை வேற வேலயப் பாக்க சொன்னன்" என்றார்.

இனி பேசி என்ன வரப்போகிறது, எல்லாமே திட்டமிட்டபடி தான் நடக்கிறது நான் என்ன சொன்னாலும், செய்தாலும் இனி நிரந்தர வேலை என்றதே கிடைக்கப் போவதில்லை. எல்லாம் கடவுள் விட்ட வழி, எல்லாம் என் தலைவிதி என்று மனதிற்குள் சொல்லி வேதனையடைந்தாள். "நன்றி கெட்ட மனிசங்கள நம்பி ஏமாந்து விட்டேனே" என்று சொல்லிக் கொண்டு ஏமாற்றத்தினாலும் துரோகத்தினாலும் மனமுடைந்த கவிதா பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக்கொண்டு தனது விலகல் கடிதத்தை மேசையில் வைத்துவிட்டு தான் வேலை செய்த கணணியை கடைசியாக ஒருமுறை தடவி கொடுத்து விட்டு அலுவலகத்தை விட்டு வெளியேறினாள். நிரந்தர வேலை என்று நம்பி நிச்சயமற்ற வேலையைச் செய்ததை எண்ணி கலங்கி அவள் மீண்டும் அலை கடலின் அலை திரும்பி வந்து அடிப்பதைப் போல துன்பம் அவளை வாட்டி வருத்தியது.

செய்த வேலையும் நிரந்தரமற்றுப் போகவே செய்வதறியாது திகைத்திருந்த கவிதா எப்படியாவது தனக்கென ஒரு வேலையை நிரந்தரமாக பெற்றுவிட வேண்டும் என்றும் அதற்கான வாய்ப்பு எப்போது உருவாகும் எனவும் காத்திருந்து மனம் சலித்துப் போனாள். அவளது கணவர், அவள் வேலையிலிருந்து விலகிக் கொண்டதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அந்த வேலை அவருக்குப் பிடித்திருந்தால் அவள் தொடர்ந்து செய்திருப்பாள் தானே என்று ஒன்றுமே அதைப்பற்றி அவர் அதைக் கதைப்பது மில்லை. கவிதாவும் இதைப் பற்றி யாரிடமும் பேச விரும்பவில்லை. வீட்டில் தனக்கென நிறைய கடமைகள் உண்டு, எனவே அதனை முதலில் செய்ய வேண்டுமென அவள் தீர்மானித்துக் கொண்டாள். வேலைக்கு இனி போவதில்லையென மனதில் உறுதி கொண்டாள்.

இப்படியே நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. ஒருநாள் நகரத்தின் கடை ஒன்றில் கவிதாவும் அவளது கணவரும் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டிருக்கும் போது அவளது பள்ளித்தோழி நந்தினியை கண்டாள். நந்தினி தன்னுடைய சகோதரன் முறையான ஒருவருடன் அந்த கடைக்கு வந்திருந்தாள். கவிதா அவளை நெருங்கி சென்று மெதுவாக முதுகில் தட்டினாள்.

"யார் இது, எங்கேயோ பார்த்த முகம் போல இருக்கே, அடியே கவிதா நீயாடி, எப்படி இருக்க, இது யாரு உன் ஹஸ்பண்ட் ஆ, கல்யாணத்துக்கு என்னைய நீ கூப்பிடவே இல்ல, மறந்துட்டா போல எங்களை"

"ஐயோ அப்படி இல்லடி, ஏன் இப்படி சரசர எண்டு கேள்வியா கேட்டிற்றிருக்க, நான் நல்ல சுகம் இது என்னோட ஹஸ்பண்ட் தான், வீட்டில திடீரெண்டு கல்யாணம் ஒழுங்கு பண்ணிட்டாங்கடி, பெரிசா யாரையுமே நான் இன்வைட் பண்ணல, நெருங்கின சொந்தக்காரர்களுக்கு மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சொன்னம், உனக்கு சொல்லனும் என்று நினைச்சேன் ஆனா முடியாமல் போயிற்று, என்னடி செய்ற என்ன தப்பா நினைக்காதடி"

"சரி பரவாயில்லை இப்ப எனக்கு ஒபீஸில சின்ன வேல ஒண்டு இருக்கு, உண்ட போன் நம்பராவது தா, நம்ம பிறகு கதைப்பம்"

"சரி இந்தா என்னோட நம்பர் இதுதான் மறக்காம கோல் பண்ணுடி"

"ஓம் ஓம் சரி நான் போயிட்டு வரேன்"

"நானும் போகத்தான் போய்ட்டு வாரன்டி"

நந்தினி சென்றதும் கவிதா அவளின் தோற்றத்தையும் தற்போது அவள் இருக்கின்ற நிலையையும் எண்ணி பிரமித்துப் போனாள். ஏனென்றால் நந்தினியும் கவிதாவை போலவே சுமாராகத்தான் படிப்பாள். உயர்தர இறுதி தவணையில் கூட இருவரின் புள்ளிகளும் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான் இருந்தது. நந்தினி ஏதாவது பெரிய வேலையில் இருப்பாளோ? என்று பல கேள்விகள் கவிதாவின் மனதிலே எழுந்தன. அவற்றுக்கெல்லாம் விடை நந்தினியிடம் இருந்துதான் வரவேண்டும். அவளிடமிருந்து வரும் தொலைபேசி அழைப்பில் கிடைக்கும் எனவே அதற்காக காத்திருந்தாள்.

இரண்டு நாட்கள் கழிந்து மாலை ஐந்து முப்பது மணியளவில் கவிதாவின் தொலைபேசிக்கு புதிய இலக்கம் ஒன்றிலிருந்து அழைப்பு வந்தது. அவள் எடுத்து பேசினாள். "ஹலோ யாரு கவிதாவா, நான் நந்தினி கதைக்கிறன் இதுதான் என்னோட நம்பர்"

"ஆஹ் நந்தினி நீ எப்படி இருக்க, அண்டு ஏதோ வேலை இருக்குது எண்டு போயிட்டியே, எங்க வேலை செய்ற"

"ஓ அதுவா நான் அரசாங்க காணி திணைக்களத்தில் வேலை செய்யிறேண்டி, அரை நாள் லீவு போட்டுட்டு தான் வந்தேன். அது தான் அதிக நேரமில்லாம உடனே போக வேண்டி இருந்துச்சு"

"ஓ சரி அப்படியா? அங்க எப்பிடி வேல கிடைச்சது, அது நிரந்தர வேலையா?"

நான் ஏ.எல் முடிய ஓபன் யூனிவர்சிட்டில வெளிவாரி பட்டத்துக்கு அப்ளை பண்ணினேன், அதற்கு மறுமொழி வந்தது நீங்க செய்யலாம் என்று சொல்லி, பிறகு அங்கு பட்டம் முடித்த கையோடு இந்த வேலைக்கு விண்ணப்பம் கோரி இருந்தாங்க நானும் அந்த பட்டத்தோடு விண்ணப்பிச்சி அதுல தெரிவாகி இப்ப வேல கிடைச்சு ரெண்டு வருசமிருக்கும், சரி நீ என்ன வேலை செய்துட்டு இருக்க?"

"அப்படியா! நான் ஒரு தனியார் கம்பெனியில வேலை செய்தன், அந்த வேலை நிரந்தரம் இல்லாம இழுப்பறியா இருந்துச்சு, அதோட அங்க நிறைய வேலைகளை எனக்கு தந்தாங்க அதான் விட்டிற்றன், சாதாரண ஏ.எல் தகுதியோட வேலை பார்த்தது என்னோட பிழை"

"ஐயோ என்னடி இப்படி சொல்ற, சரி பரவாயில்லை நீயும் என்னப்போல வெளிவாரியா பட்டம் முடிச்சிருந்தா வேல எடுத்து இருக்கலாம், அதுக்கு என்ன இப்ப மட்டும் படிக்க ஏலாதா? நீ எந்த யுனிவர்சிட்டிலையும் வெளிவாரியா பட்டம் படிக்க விண்ணப்பம் போடலாம். நேரத்த வீணாக்காம உடனே அதுக்கு போட்டு விடு, அனுமதி கிடைச்சி பட்டப்படிப்பை முடிச்சிட்டா எப்படியும் வேலை கிடைக்கும்"

"ஓம் நந்தினி இப்பதான் எனக்கு ஞானம் பிறந்திருக்கு, உடனே நானும் வெளிவாரிப் பட்டத்திற்கு விண்ணப்பிச்சி படிப்பத் தொடரப் போறன், அவரும் எனக்கு உதவி செய்வாரு உன்னோட கதைச்சது எனக்கு நல்லதா போயிட்டுடி"

"அப்படித்தான் செய் அதுதான் உனக்கு நல்லது, சரி நான் பிறகு கதைக்கிறன் நீ நல்ல முடிவா எடு சரியா? நான் வைக்கிறேன்"


நந்தினியுடன் பேசிய பிறகு கவிதாவுக்கு மனதில் நம்பிக்கை பிறந்தது. இனி வேலைக்கே போவதில்லை என மனதில் உறுதி கொண்டிருந்தவள், இரண்டு மூன்று நாட்களாக யோசனையில் ஆழ்ந்தாள். நீண்ட காலமாக சந்திக்காமலிருந்த தோழி நந்தினி தன் கண்களில் பட்டமை, அவள் கூறிய விடயங்கள் எல்லாமே மாற்றத்தை ஏற்படுத்தியது. துன்பங்களாலும் ஏமாற்றங்களாலும் துவண்ட நெஞ்சம் மாறியது. ஆம், மீண்டும் வேலையை பெறுவதற்காக முயற்சி தொடங்கியது.

தனது தங்கையிடம் சொல்லி எந்த பல்கலைக் கழகத்தில் வெளிவாரி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம் கோரி இருக்கிறார்கள் என தெரிந்து கொண்டாள். அதில் அருகாமையில் உள்ளதில் ஒன்றைத் தெரிவு செய்து விண்ணப்பித்தாள். இரண்டு மாதங்கள் கழித்து வெளிவாரிக் கல்வியைத் தொடர்வதற்கு பதிவு செய்வதற்கான கடிதம் வந்தது. அதன்படி பதிவு செய்து தனது வெளிவாரி பட்டத்தை மூன்று வருடங்களில் பல கஸ்டங்களின் மத்தியிலும், கணவரின் குறைந்த சம்பளத்தில் குடும்பத்தையும் கவனிச்சு தனது படிப்புக்கும் எடுத்துக்கொண்டு முடித்து விட்டாள். வெளிவாரி பட்டம் முடித்தமைக்கான சான்றிதழும் அவளிடம் வீடு தேடி வந்து விட்டது. மகிழ்ச்சியில் கவிதா பூரித்துப் போனாள். பட்ட கஸ்டத்துக்கு விடிவு காலம் வந்துவிட்டதே என எண்ணி பெருமூச்சு விட்டாள். இனி என்ன? நிச்சயமாக ஒரு வேலையை பெற்று விடலாம் என்ற உறுதி பிறந்தது.

அன்று தினசரி பத்திரிகை ஒன்றில் அரசு வேலை வாய்ப்பு பற்றிய விளம்பரம் ஒன்றினை கண்டதாகக் கூறி கவிதாவின் கணவர் அந்த வேலைக்கான விண்ணப்பப் படிவத்தை வாங்கி கொண்டு வந்து கவிதாவிடம் நீட்டினார். ஆச்சரியமடைந்த கவிதா சந்தோச மிகுதியால் அதை வாங்கிக் கொண்டு தனது கடந்தகால துன்பங்களை மனதில் ஏந்தியவளாய், தனது படிப்பறையின் மேசையில் அந்த விண்ணப் படிவத்தை கொண்டு வைத்தாள். பேனாவை தன் விரலினால் பற்றிப்பிடித்து எதிர்காலத்தில் தனக்கு கிடைக்கப் போகும் வேலைக்கான முதல் கையெழுத்தாக தன் பெயரை அந்த விண்ணப்ப படிவத்தில் எழுதிக் கையொப்பம் இட்டாள்.

***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய திங்கள்

அகரா



“பனிப்புகாரும் மூடிக்கொண்டு நிக்குது. எத்தின மணிக்கு என்ர வேலையெல்லாம் முடிச்சு எத்தின மணிக்கு கோயிலடிக்குப் போய்ச்சேரப்போறனோ தெரியேல்ல. ஏழரை மணிக்கு அபிஷேகம் தொடங்கிவிடும் எண்டு நேற்றுப் பின்னேரம் கடையடில கண்டு கோமகன் சொன்னவன்” என தனக்குள்ளே கதைத்துக்கொண்டு பனிவிழாமல் தலைக்குத் துணியொன்றும் கட்டியவாறு கிணற்றடிப் பள்ளத்திற்குள் ஒரு மூலையில் பலகைக் கட்டையில் இருந்துகொண்டு அவசரவசரமாகப் பாத்திரங் களைக் கழுவிக்கொண்டிருந்தாள் வெண்மதி. கண்களைக் கசக்கிக்கொண்டு குடிசைக்குள் இருந்து வெளிப்பட்ட குறிஞ்சியை தூரத்திலிருந்தே கண்டுவிட்ட வெண்மதி “பிள்ளை கெதியா வா பயங்கரப் பனியும் குளிருமாக்கிடக்கு தாவாரத்தில தண்ணி மூட்டிக்கிடக்கு எடுத்துக் கலந்து ரெண்டு வாளிய அள்ளி ஊத்திக்கொண்டு வெளிக்கிடு நேரம்போட்டுது” என்றாள்.

“அ..ம்..மா.... இந்தக் குளிருக்க போகவேணுமே...” என்று சிணுங்கினாள் குறிஞ்சி. பிள்ளை விசர்க்கதை கதைக்காம படக்கெண்டு குளிச்சுப்போட்டு வெளிக்கிடு, வச்ச நேத்திய நேரகாலத்துக்குச் செய்யாததாலதான் மாறி மாறி வருத்தமும் துன்பமுமாக்கிடக்கு. நேற்றே கோயில்ல கதைச்சுப்போட்டன். ஆறரைக்கெண்டாலும் போனாத்தான் ஆதிமூலப் பூசைக்கிடையில பொங்கி முடிச்சுப் படைக் கலாம். ஆ... சொல்ல மறந்திட்டன் குளிச்சிட்டு பூவும் கொஞ்சம் ஆஞ்சுகொண்டு வா என்று சொல்லிக்கொண்டே கழுவிய பாத்திரங்களை எடுத்துக்கொண்டு போய் அட்டாளையில் கவிழ்த்தாள் வெண்மதி.

ஓலைக்குடிசைதான் அவர்களின் இருப்பிடம். ஆனாலும் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்ட குடிசை அது. வீட்டைச் சுற்றி வாழையும் பூங்கன்றும் தென்னையுமாய் மரங்கள் செடிகள் நிறைந்த சோலை வளவு அது. இரண்டு பெண்பிள்ளைகளும் வெண்மதியும் கணவனும் வாழ்ந்து வருகின்ற அமைப்பான குடும்பம். கணவனின் உழைப்புக்கு மேலதிகமாக வீட்டிலேயே இருந்துகொண்டு பிள்ளைகளை நன்றாகக் கவனிப்பதோடு பெட்டியிழைத்தல், ஈர்க்குக்கிழித்தல், ஆடு, மாடு, கோழி வளர்த்தல் எனப் பலவற்றைச் செய்து குடும்பத்தை மிக வல்லமையாக நடத்தி வருபவள் வெண்மதி.

மண்சட்டிகளையும் பானைகளையும் மற்றைய பாத்திரங்களையும் மிகக் கவனமாக அட்டாளைக்குக் கொணர்ந்து சேர்த்துவிட்டு வாத்துவாளியிலிருந்த குறிஞ்சி குளித்த மிச்சத் தண்ணீரையள்ளித் தலையிலே ஊற்றினாள் வெண்மதி. குளித்து முடித்ததும் குளிரினால் பற்கள் கடகடவென அடித்துக்கொள்ள குடிசைக்குள் புகுந்து உடைமாற்றிக்கொண்டவள் “தமிழினி...தமிழினி...” என்று தனது மூத்தமகளைத் தட்டியெழுப்பினாள். தமிழினி இன்னமும் குளிருக்கு இதமாக புற்பாயிலேயே புரண்டு கொண்டிருந்தாள். “நாங்கள் முன்னுக்குப் போறம் நீ எழும்பிக் குளிச்சுப்போட்டு சுடுதண்ணிப்போத்திலுக்க தேத்தண்ணி கிடக்கு குடிச்சிட்டுக் கெதியா வா” என்று சொல்லிக்கொண்டே சுடச் சுடத் தேனீரை சில்வர்க் கோப்பையில் ஊற்றி ஆவி பறக்கப் பறக்க ஊதிக் குடித்தாள். பின்னர் பொங்கல் சாமான்களோடு படலையைத் திறந்து கொண்டு கோயிலை நோக்கிப் புறப்பட்டாள்

அவர்கள் வீட்டுக்கு நேர் எதிராகவே இருந்தது அந்த அம்மன் கோயில். ஆனால் ஒழுங்கையால் சுற்றி ஐந்நூறு மீற்றர்கள் நடந்து செல்லவேண்டும். ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் குடிசைப் படலையைத் திறந்து வாசலில் நின்று தலையிலே கைவைத்து கோபுரத் தைக் கும்பிட்டுவிட்டுத்தான் தங்களது வேலைகளைத் தொடங்குவார்கள் வெண்மதியும் அவள் கணவனும். தினமும் காலையில் தன் அத்தனை வேலைப்பளுக்களின் மத்தியிலும் கணவனையும் பிள்ளைகளையும் கவனிப்பது போல அம்மனையும் கவனிக்கத் தவறுவதில்லை வெண்மதி. எந்த நேரமும் எந்த நிலையிலும் அவள் மனமும் உதடும் அம்மாளாச்சி தாயே என்ற வார்த்தைகளை உச்சரிக்கத் தவறு வதில்லை. சிறுவயதிலிருந்தே அந்தக் கோயிலை வணங்கு பவள். மரத்தடியில் இருந்து பின் ஓலைக் குடிசையில் இருந்து இன்று வானளாவிய கோபுரங்களுடன் நிற்கிறது அந்த அம்மன் கோயில். தன் வாழ்க்கையில் எப்போதும் அந்த அம்மனே துணை நிற்பதாக முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தாள் வெண்மதி.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினி ஒருமுறை நோய்வாய்ப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் "அம்மாளாச்சி தாயே நீ தான் என்ர பிள்ளையை காப்பாத்தவேணும். பிள்ளை நல்லபடியா சுகமாகி வரவேணும். அவள் சுகமாகி வர உன்ர கோயிலடில நான் பொங்கல் செய்து படைத்து அடியவர்களுக்கு கொடுப்பேன்" என்று நேர்த்தி வைத்த வளுக்கு இன்றுதான் அதற்கான வசதி வாய்க்கப்பெற்றது. கொஞ்சம் கொஞ்சமாக அரிசி வாளிக்குள் சேர்த்து வைத்த பணத்தை எண்ணி எடுத்துக்கொண்டு நேற்றுமாலைதான் பரமேசுவின் கடைக்குச் சென்று பொங்கல்ப் பொருட்களை வாங்கிக்கொண்டு வந்தாள். அந்த ஊரிலேயே கொஞ்சம் பெரிதாகவும் போதிய பொருட்களைக் கொண்டதுமாகவும் இருப்பது பரமேசுவின் கடை. "எங்கட சனம் தான் கூடுதலா உந்தக் கடைக்குப் போறது. அவங்கட ஆக்கள் ஒருத்தரும் பெருசாப் போறேல அங்க. எல்லாச் சாமானையும் அடாத்து விலைக்கு விக்கிறான். கூலிக்குப் போய் மாரடிக்கிற காசை எங்கட சனம் அவனிட்டக் கொண்டுபோய் குடுத்து சாமான் வாங்க அவன் அதிலயும் கொள்ளை அடிக்கிறான் கொட்டுண்டு போவான்" என்று வெண்மதியின் தாய் இலட்சுமி முன் பெல்லாம் அடிக்கடி சொல்வாள். இப்போது இலட்சுமி இறந்துவிட்டாள். ஆனால் பரமேசு கடையோ முன்பைவிட பலமடங்கு பொருட்களோடு விசாலமாய் மாறிவிட்டது.

வாங்கிய பொருட்களை இரவே பொங்கலுக்கு ஏற்றாற்போல தயார்ப்படுத்தி வைத்ததால் இப்போது அவற்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாள். அபிஷே கத்திற்கான ஆயத்தங்களை கோமகன் செய்துகொண்டிருந் தான். கோமகன் வெண்மதியின் வயதை ஒத்தவன். பலவரு டங்களாக அம்மன் கோயிலில் பூசை செய்பவன். ஏதோ தனக்குத் தெரிந்த அறிந்த முறையில் மந்திரங்களில்லாமல் பூசை செய்து வருகின்றான். தான் பொங்க வந்திருப்பதை மீண்டும் ஒருதடவை அவனிடம் சென்று நினைவுபடுத்தி விட்டு வழமையாக எல்லோரும் பொங்கும் இடத்தில் கற்களை ஒழுங்குபடுத்தி அம்மாளாச்சியை மனதில் நிறுத்தி பொங்கலை செய்துமுடித்தாள். அதற்குள் தமிழினியும் அங்கு வந்து சேர்ந்துவிட்டாள். பூசை நேரமாகியது. பக்தர்கள் வர ஆரம்பித்துவிட்டார்கள். வழமைபோல மங்கலகரமாக மேளதாளத்துடனும் பாடல்களுடனும் அம்மனுக்குப் பூசை ஆரம்பமாகியது. வெண்மதியினால் செய்யப்பட்ட பொங்கல் தலைவாழையிலை விரித்து பழங்கள் மற்றும் கற்கண்டுடன் அம்மன் முன்னிலையில் படைக்கப் பட்டிருந்தது. ஊர்கோயில் என்பதாலும் அடிக்கடி செல்வ தாலும் அங்கு வந்துள்ளவர்கள் அதே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் அங்கு வந்திருந்த பக்தர்களில் அநேகமா னவர்கள் அவளுக்குத் தெரிந்த முகங்கள்தான். ஆனால் தெரிந்தவர்கள் அறிந்தவர்களாக இருந்தும் பலர் தெரியாத வர்கள் போலவே நடந்துகொண்டனர். அங்கிருந்தவர்களின் முக மாற்றமும் செயற்பாடுகளும் வெண்மதிக்கு ஏதோ சங்கடத்தைக் கொடுத்தது. இருப்பினும் அவள் எதையும் காட்டிக்கொள்ளாமலே அம்மன் முன்னிலையில் அமர்ந்து வேண்டினாள்.

பூசை முடிவடைந்து திருநீறு வழங்கப்பட்டதும் அதன் தொடர்ச்சியாக பொங்கல் வழங்கப்பட்டது. அங்கிருந்த பலர் பொங்கல் வாங்காமலே முகத்தைத் திருப்பிக்கொண்டு கோயிலைவிட்டு வெளியேறியபோது தான் ஊருக்குள் இத்தனை நாட்களாக சிலேடை முகங்களாக பழகியவர்களை வெண்மதியால் இனங்கண்டுகொள்ள முடிந்தது. பிள்ளைகள் இருவரும் அவள் முகத்தை ஏமாற்றத்தோடு பார்க்க அவள் அம்மாளாச்சியின் முகத்தை ஏமாற்றத்தோடு பார்த்தாள். பிள்ளையார் மடத்தினூடாகச் சென்று பின்பக்க வாசலால் எதுவுமறியாதவன் போல வெளியேறுகிறான் கோமகன். என்னதான் மௌனமாகப் பூசை செய்தாலும் அவனும் அவன்ர சாதிக் குணத்தைத்தானே காட்டுவான். சாதி, மதம், பணம், பொருள் என்பவற்றை யெல்லாம் தாண்டி அம்மாளாச்சி முன்னிலையில் மனிதம் தோற்றுப்போனது.

"ஊரிலே யாருடைய வீட்டில் அழுகைச்சத்தம் கேட்டாலும் முன்னுக்கு ஓடிப்போய் உதவி செய்யிறது நாங்கள்தான். ஆனால் கொண்டாட்டங்களில் எல்லாம் புறக்கணிக்கப்படுவோம். எங்கட வீட்டுக் கொண்டாட்டங் களுக்கு உங்களக் கூப்பிட்டா.... எங்கட சமுதாயம் எங்களை மதிக்காது என்று சொன்ன கமலாக்கா குடும்பம் ஊரில் விலாசமே இல்லாமல் அழிஞ்சுபோச்சு. அவையள் குண்டி வைச்ச கதிரையில் நாங்கள் குண்டி வைக்க ஏலுமோ என்று கேட்ட விமலாக்காவின் மகள் எங்கட பெடியனத்தானே விரும்பி முடிச்சவள். ஆரம்பத்தில தள்ளி வச்சவே இப்ப அவனை நடுவீட்டுக்கயெல்லோ வச்சுக் கொண்டாடினம். எல்லாரையும் பழிக்கிற பிறேமாக்கா குடும்பத்தில மகன் காரன் ராத்திரில பொம்பிளை தேடிப்போய் கிணத்துக்க விழுந்தெழும்பின கதையெல்லாம் தங்களுக்க மறைச்சு வச்சிருக்கிறதா நினைப்பு அவேக்கு. இன்னும் எத்தின பேர் மானம் மரியாதை இழந்து ஒருத்தனுக்குப் பிள்ளை பெத்திட்டு இன்னொருத்தனோட வாழினம். இவையள் எல்லாரையும் விட ஓலைக் குடிசையில் வாழ்ந்தாலும் மானம் மரியாதையோடு வாழிற நாங்கள் எவ்வளவோ மேல். சாதி சாதி எண்டு தலையில தூக்கி வச்சுக் கொண்டாடின பலபேர் தலையால அழிஞ்சுபோயும்கூட இந்தச் சனம் இன்னும் மாறேல. இதுகளை நாங்கள் மாத்தவும் ஏலாது. ஆனால் எங்களை நாங்கள் மாத்தலாம். எங்கட சனம் அவங்கட வீடு வாசலுக்கு கழுவித் துடைக்கப் போறத முதல்ல நிப்பாட்ட வேணும். எங்கட பிள்ளையளை நல்லாப் படிக்க வச்சு எங்கட சமுதாயத்தை நாங்கள் முன்னேற்ற வேண்டும். இண்டைக்கு இந்த அம்மாளாச்சி முன்னிலையில சத்தியம் செய்யுறன். இனியும் நாங்கள் குறைஞ்சவங்கள் இல்லை. கல்விதான் இதற்கான ஆயுதம். அதை என் பிள்ளைகள் இருவருக்கும் முறையாகக் கொடுத்து தலைநிமிர்ந்து வாழ்வேன். அம்மாளாச்சி தாயே இதுதான் உன்ர முத்தத்தில என்ர கடைசிப் பொங்கல்" என்ற திடமான சபதத்தோடு மாசு படிந்த மனங்கள் நிறைந்த புனிதமான அம்மன் கோயிலைவிட்டுப் பிள்ளைகளோடு வெளியேறி னாள் வெண்மதி.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலாவெளியூர்
கெஜதர்மா



# பாடம்

இரவிரவாக நாய்கள் குரைக்குஞ் சத்தமும், இடைக்கிடையே அவைகள் ஊளையிடுஞ் சத்தமும், அன்றிரவு முழுவதும், அம்பலவாணரைத் தூங்க விடவில்லை.

"ஏனப்பா, எழும்புங்கோவன்... ஏதும் சுகமில்லையோ? இல்லாட்டிக்கு ஏலாமக் கிடக்கோ? இண்டைக்குத் திருகோணமல ஆசுப்பத்திரிக்குக் "கிளினிக்" போகோணுமல்லோ" அம்பலவாணரின் மனைவி அம்பிகம் தன் கணவனுக்கு நினைவூட்டினாள்.

"ஓமப்பா, எங்க... இந்த நாய்கள் இரவு முழுக்க "வள்" "வள்" எண்டு குலைச்சுக் கொண்டு கிடந்ததால, நித்திரையே இல்ல விடிஞ்சுதான் கொஞ்சம் தூங்கினன்" வழக்கமாகக் காலை ஐந்து மணிக்கே எழுந்துவிடும் பழக்கத்தை, வழக்கமாகக் கொண்ட அம்பலவாணர், தான் அன்றைய தினம் தூக்கத்தில் இருந்து விடுபடத் தாமதித்தமைக்கான காரணத்தை தன் மனைவிக்கு விளக்கினார்.

"சரி, நீங்க ஆயத்தமாகுங்கோ நான், காலைச் சாப்பாட்டுக்குப் புட்ட விக்கிறன்... சம்பலும், இடிக்கிறன்... சாப்பிட்டிற்றுப் போங்கோ" என்றபடி அம்பிகம் தன் கடமையில் பரபரப்பானாள்.

"அவசரப்படாத நேரங்கிடக்குது....ஆறுதலாகச் சமை" என்ற அம்பலவாணரைப் பார்த்து "ஏனப்பா நேரகாலத்துக்குப் போனாத்தானே இப்போ இஞ்ச கொளுத்திற வெய்யில் ஏறுறத்துக்கு முதல், மருந்தெடுத்திற்று வந்திருவியள்"

"முதல்தான் அப்பிடி, இப்ப அப்பிடி இல்ல... ஒவ்வொரு வருசத்தில வாற முதல் "கிளினிக்" அண்டைக்கு, எத்தனை மணிக்குப் போய் வரிசையில் நிக்கிறமோ, அதன்பிரகாரந் தாற இலக்கத் துண்டுதான், அந்த வருஷம் முழுதுக்குமான இலக்கமாக இருக்கும். அதுமட்டுமல்ல நேரமும் குறிச்சுத் தருவினம், அந்த நேரத்துக்குள்ள அங்க நிண்டாச் சரி... என்ர இலக்கம் இருநூற்றி நான்கு, நேரம்.. பதினொரு மணிக்கும், பன்னிரண்டு மணிக்கும் இடையில்.அதுக்க நிக்கோணும். அதால பத்துமணிக்குப் புறப்பட்டாக் காணும்" என்று விளக்கம் கூறிய அம்பலவாணர் காலைக் கடனை முடிக்கத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் முடித்துக் கொண்டுவர, நேரம் ஒன்பதைத் தாண்டியது.

பிட்டையும் சம்பலையும் கோப்பையில் போட்டுக் கொண்டு வந்த அம்பிகம் அதைத் தன் கணவனிடம் நீட்டியபடி "இந்தாங்கோ சாப்பிடுங்கோ....அது சரி முந்தி நேரகாலத் தோட போய், துண்டெடுத்து மருந்தெடுத்திற்று வந்திருவியள். அது நல்லம் போலத்தானே இருந்தது" எனத் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினாள்.

"ஓமப்பா நீ சொல்லுறதும் சரிதான். அதிலும் சில குறைபாடுகள் இருந்தது. என்னென்ண்டா, ஆசுப்பத்திரிக்கு அயலில உள்ள சனங்கள் சிலபேர் நேரகாலத்தோட போய், வரிசையில் நிண்டு, இலக்கத் துண்டுகளைப் பெற்று, மருந் தெடுக்க வரும், நோயாளர்கட்குக் கொடுத்துக் காசைப் பெற்றுக் கொள்ளுவினம் இதனை அறிந்து கொண்ட ஆஸ்பத்திரி நிர்வாகம், நடமுறைய மாத்திற்று. இந்த புதிய முறை நல்லது. நேரகாலத்தோட போய்க் காத்துக் கிடக்கத் தேவையில்லை"

"சரியப்பா எதுக்கும் பத்துமணிக்கு நீங்க றோட்டுக் குப் போனால்தான், பஸ்ஸப் பிடிச்சுப் பன்ரெண்டு மணிக்கு முதல் போய்சேரலாம்" என அவசரப்படுத்தினாள்.

உண்மைதான் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அம்பலவாணரின் சொந்த ஊரான நிலாவெளியில் இருந்து, அவர் மாதாந்த மருத்துவப் பரிசோதனைக்குச் ("கிளினிக்") செல்லும் வைத்தியசாலை அமைந்துள்ள திருக்கோண மலைக்குச் செல்ல, அரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவை பேரூந்து வரும், ஆனால் நாட்டில் ஏற்பட்ட கொரோனா நோய்த்தாக்கம் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்கள், விலையேற்றங்கள் எரிபொருளுக்கான, தட்டுப்பாடு, இவ்வாறனநிலைமையினால் ஒரு மணித்தி யாலத்திற்கு ஒருதடவையே பேரூந்து வரும்.

பத்துமணிக்கே பேரூந்து தரிப்பிடத்திற்கு வந்த அம்பலவாணர் ஒரு மனித்தியாலத்திற்கு மேல் காத்திருந்தார். பேரூந்து வரவேயில்லை. திருக்கோணமலையில் இருந்து உல்லாசப்பயணிகளை, அவர்கள் "ஒன் லைன்" மூலம் பதிவு செய்த நிலாவெளியில் உள்ள ஹோட்டல்களில் இறக்கிவிடும் முச்சக்கர வண்டிக்காரர், திரும்ப திருக்கோணமலைக்குச் செல்லும் வழியில் பேரூந்து தரிப்பில் நிற்கும் பயணிகளை ஏற்றிச்செல்வது வழக்கம். அதற்கான கட்டணமாக பேரூந்துக் கட்டணத்தை விடவும் ஐம்பது ரூபா மேலதிகமாகவே பலரும் எடுப்பதுண்டு.

நீண்டநேரம் காத்திருந்த அம்பலவாணர் " சரி .. பஸ் வந்தபாடில்ல ஆட்டோ வந்தா ஏறிற்றுப் போவோம்" என முடிவெடுத்த அடுத்த சிலநிமிடங்களில் முச்சக்கரவண்டி ஒன்று வந்து, அவரருகே நின்றது.

அதனை ஓட்டி வந்த இருபத்தைந்து வயது மதிக் கத்தக்க இளைஞன் "ஐயா எங்க போகவேணும்"? என வினாவினான்.

"திருகோணமலைக்கு"

"எவ்வளவு காசு தருவியள்"

"நூற்றி ஐம்பது ரூபா"

"முந்நூறு ரூபா தாங்கோ"

"....அப்படி தரேலா மகன், பஸ்சுக்கு நூறு ரூபாதான் எடுக்கிறவங்கள் ஐம்பது ரூபா கூடப்போட்டுத் தாறன். நூற்றைம்பது ரூபாதான் வழக்கமாய் எடுக்கிறவையள்.. நானும் நூற்றைம்பது ரூபா கொடுத்துத்தான் போறனான்"

"நூற்றைம்பதுக்கு ஏத்தேலா. ஏலுமெண்டா நடந்துபோ" என்று ஏளனமாகச்சொல்லிப் புறப்பட்டவனை நிறுத்தி,

"தம்பி எங்கட தகப்பனார், இரண்டு வருசத்துக்கு முந்தி, தன்ர நூற்றி ஏழாவது வயசு வரையும் தேகாரோக் கியமாக வாழ்ந்திருந்து காலமானவர். அவர் சொன்னவர், தனது தந்தையின் திருமணத்திற்கு, தன் தாயாரை அவர்கள் உறவினர்கள், யாழ்ப்பாணம் இணுவிலில் இருந்து முல்லைத் தீவு ஊடாக மாட்டு வண்டிலில்தான் அழைத்து வந்தார்கள் என்றும் அக்காலத்தில், அதுதான் "கார்".என்றும் உள்ளூர்ப் பயணங்களெல்லாம் பெரும்பாலும் கால் நடைதானாம், அதனால் அந்தக்காலத்தவர்கள் தேகாரோக்கியமாக வாழ்ந் தார்களாம்,. இப்போ, நாங்களெல்லாம் கூப்பிடற சத்தம் கேட்கிற அளவு தூரத்துக்குப் போறதுக்கே, ஆட்டோவில அல்லது மோட்டார் சைக்கிளில போய்ப் பழகி, பெரும் பாலான நோய்களைப் பெற்றுக் கொண்டுதான் வாழுகிறம்." என்றும் எங்களைப் பார்த்துச் சொல்லிக் கவலைப்படுவார்.

"தம்பி நீ கவலைப்படாத...நான் நடந்துபோறன். ஆனால் எங்கடகாலம் இன்னும் கொஞ்ச ஆண்டுகள்தான்.. ஆனால் உங்களைப் போன்ற இளைஞர்கள் இன்னும் பல ஆண்டுகள், வாழ வயசு இருக்கு..எங்கள் நாடுபோற போக்கி னாலும் ..ஏன் எண்ணெய் வளம் கொழிக்கும் நாடுகளான காசா, இஸ்ரேல் போரினாலும்,.. உலகப்போர் நிகழும் நிலைமை வந்தால் .நீங்களும் நடந்துபோற காலத்தைச் சந்திக்கவேண்டிவரும்" என்று கூறியவர், தொடர்ந்து,

"நீ. போ மகன் பின்னால வரும் பஸ்சில நான் வாறன்" என்று அம்பலவாணர் கூறியதைக்கேட்ட, முச்சக் கரவண்டிக்கார இளைஞன்.சற்று நேரம் யோசித்துவிட்டுப் பதில் ஏதும் சொல்லத் தோணாதவனாய்ப் புறப்பட்டான்..

காலந்தான் இவன் போன்றவர்க்குப் பாடம் புகட்டும், என எண்ணிய அம்பலவாணர், அமைதியாகப் பொறுமையுடன் பேரூந்துக்காக காத்திருந்தவர் " நானும் ஒருசோடி நாம்பன் கண்டுகள் வேண்டி வண்டிலுக்குப் பூட்டக்கூடிய விதத்தில் பழக்கி வைத்தால், என் பேரப் பிள்ளைகட்கு உதவும்" என எண்ணி "ம்ம்ஹூம்"....என்று பெருமூச்சொன்றை உகுக்க, பேரூந்து ஒன்றும் "...ஸ்ஸ்..." என்ற ஓசையுடன், அவரை ஏற்றுவதற்காக வந்து நின்றது. " உந்த பஸ்சும் தன் எதிர்காலம் என்ன ஆகுமோவென எண்ணிப் பெருமூச்சு விடுகுதோ" என எண்ணியவாறு அதில் ஏறிப் பயணித்தார்.

*** 




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-35

சுரேந்திரன்
தர்சித் ராகுல்





# அக்கார அடிசில்

பார்வதி ஒரு மிகச் சிறந்த வேலைக்காரி ... எவ்வளவு சிறப்பான வேலைக்காரி என்றால் கண்ணுசாமி கங்காணியின் வீட்டினை கூட்டும் போது மட்டும் சுமார் இருபது முப்பது தடவைக்கும் மேல் அவர்களின் வீட்டுச் சிறு குழந்தைகளின் தோட்டுத் திருகாணிகளை கண்டெடுத்துக் கொடுத்திருக்கிறாள். சரியாக பதினாறு வருடங்களுக்கும் மேலாக சம்பள உயர்வு எதுவும் இன்றி உழைத்து வருகிறாள். அவள் தயாரிக்கும் தேநீரும், அவள் போடும் கோலமும் இவை எல்லாவற்றுக்கும் மேல்,மார்கழி மாதம் முடிவதற்கு நான்கு நாட்கள் முன்னதாக அவள் செய்யும் அந்த பசு நெய் இட்ட அக்கார அடிசில் அது ஒன்று போதும் அவள் எப்பேர்பட்ட தொழில் தெரிந்த தொழிலாளி என்பதை பறை சாற்றிட. இந்த பார்வதி இதே நாள் பதினாறு வருடங்களுக்கு முன்னர் தான் கங்காணியின் வீட்டில் வேலைக்குச் சேர்ந்து இருந்தாள். அப்போது அவளுக்கு சரியாக வயது பதினெட்டு இருக்கும்.உயர் தரத்துக்கு தோற்றி விட்டு வீட்டில் இருந்தாள். தந்தைக்கு கூலி வேலைதான். தாயும் கூலி வேலை செய்பவள். பார்வதிக்கு மொத்தம் இரண்டு தங்கைகள் வேறு ஆகவே வேறு வழி ஏதும் இன்றி இந்த வேலைக்கு வந்து விட்டாள்.

வேளைக்கு சோறும் நேரத்திற்கு சம்பளமும் கிட்டியதால் அவளுக்கு பெரிய பிரச்சனைகள் ஏதும் இருந்ததில்லை.

ஆனால் சிலவேளைகளில் இன்று ஏதும் ஓர் பிரச்சனை ஏற்படக்கூடும். ஒன்றில் அவள் மனம் உடையக் கூடும் இல்லை வேறு எதுவும் உடையக் கூடும். ஏன். எது பிரச்சனையை உண்டாக்கக் கூடும் என்பதுதான் உங்கள் கேள்வி என்றால் அதனை அறிய சரியாக இதே நாள் பதினாறு வருடங்கள் நாம் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கன்கள் ஒவ்வொன்றாய் செத்து மடிந்திட..... காலம் கடுகதி புகைவண்டியாட்டம் பின்னோக்கிச் சுழன்றிட.....

நாம் வரவேண்டிய காலத்துக்கு வந்து விட்டோம். அது ஹந்தானை தோட்டத்தின் நான்காம் கட்டை கிராமம்.

ஊரைச் சூழவும் பசிய நிறத்து தேயிலை தோட்டம். ஊர் மக்களைப் போலவே லயத்து வீடுகளும் எப்போதும் போல ஒன்றோடு ஒன்று ஒட்டி இருந்தன.

அந்த லயத்து வீடுகளுக்கு நேர் எதிரே இருந்த ஊரின் ஒரே கல் வீடு அதுதான் கண்ணுசாமி கங்காணியின் வீடு.

அது இரண்டாயிரங்களின் நடுப்பகுதி. இரண்டாயிரங்களின் நடுப்பகுதி தானே ஆதலால் எல்லோரும் கையில்

தொலைபேசியோடும், காதுகளில் தலையணி ஒலிவாங்கிகளோடும் சுற்றிக் கொண்டிருந்திருப்பார்கள் என நீங்கள் எண்ணுவீர்களேயானால் உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.

அவை எல்லாம் அந்த காலத்தில் பெரும்பாலும் நகர மக்களுக்கு மட்டுமே சாத்தியமாகியிருந்தது.

அப்போது பார்வதி உயர்தரம் எழுதி முடித்திருந் தாள். பார்வதியின் தகப்பன் கண்ணுசாமி கங்காணியின் வீட்டில் இருந்தான்.

“ஏனுங்க ஐயா அந்த கடுதாசி ஏதும் வந்துச்சிங்களா........”

“யோவ் ..... எத்தன தடவையா சொல்லுறது ஒனக்கு, அதெல்லாம் ஒன்னும் வரல ........வந்தா நானே ஒன்ன கூப்புடுறேன் சரியா........”

“சரிங்க ஐயா.....”

“ஆங் .... அப்பறோம் இந்த கடுதாசி கெடச்சா மட்டும் என்ன மேல படிப்பிக்கவா போற எதுக்குயா ஒனக்கு இந்த வீணான வேல...”.

“சரி அத விடு நானும் சொல்லனும்னு நெனச்சுகிட்டு இருந்தேன் பேசாம பார்வதி புள்ளைய வீட்டு வேலைக்கு அனுப்புறது......”

பார்வதியின் தகப்பன் தலையை சொறிந்தான்.

“என்னடா ஏதோ ஒன்னும் தெரியாத மாதிறி முழிக்குற.... சரி அந்த கடுதாசி வர வரைக்கும் வேல செய்யட்டும் வந்தோன்ன ஒன் பாடு ஒன் பொண்ணு பாடு என்ன சொல்லுற...”

பார்வதியின் தகப்பன் மௌனமாயிருந்தான். மௌனம் சம்மதத்திற்கான சமிஞ்ஞை அதை அறியாதவன் இல்லை அந்த கண்ணுசாமி. அடுத்த நாளில் இருந்து பார்வதி வேலைக்காரி ஆனாள். வீடு கூட்டுவாள். சமையல் செய்வாள்.

பாத்திரம் தேய்ப்பாள்.

அந்தி சாயும் நேரம் வேலை முடிந்த பின்னர் கடுதாசி வந்ததா என ஒரு தடவை கேட்டு விட்டு வீடு சென்று விடுவாள்.

இப்படியே அவள் காலம் கரைந்து போனது. கடுதாசி வரும் வரை செய்வோம் என்று தொடங்கிய வீட்டு வேலை இப்போது கன்னுசாமியே இன்றைக்கோ நாளைக்கோ என்று இருக்கிறான் ஆனபோதும் இன்னும் தொடர்கிறது.

பார்வதி இப்போது வீட்டை கூட்டிக் கொண்டிருந்தாள்.

“பார்வதி ..... வீட்டக் கூட்டிட்டு மொப்பும் போட்டுரு சரியா .....”

“சரிங்க ஐயா....”

“அப்பறோம் ஒன் புள்ளயோட எக்ஸாம் கடதாசி கேட்டு இருந்தஇல்ல...... அப்புடி ஒன்னும் இன்னும் வரல.....வந்தா சொல்லுறேன் சரியா ........ காலம் போன காலத்துல அத வச்சுக்கிட்டு நான் என்ன பண்ண........”

“சரிங்க ஐயா.....”

அந்த நேரம் பார்த்து மீண்டும் கண்ணுசாமியின் குரல் கேட்டது. முன்னர் கேட்டது போல் இல்லாமல் கொஞ்சம் வித்தியாசமாய்..... விகாரமாய்... கூடவே ஏதோ தட்டு முட்டு சாமான்கள் விழும் சத்தம்.

பார்வதி ஓடிப் போய் பார்க்கிறாள். கண்ணுசாமி நிலத்தில் மல்லாக்க விழுந்து கிடந்தான்.

அவனைச் சுற்றிலும் ஏகப்பட்ட தாள்கள், கோப்பு கள் விழுந்து கிடந்தன. கொஞ்ச நேரத்திற்குள் வைத்தியர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். மூச்சு நின்று விட்டதாய் சொன்னார்கள்.

மூன்று நொடிகள் முன்னதாய் அழைத்திருந்தால் காப்பாற்றியிருக்க வாய்ப்பு இருந்திருக்கும் என்றனர். பார்வதி பதினாறு வருடங்களுக்கு முன்னர் தான் எடுத்த உயர் தர புள்ளிகளை அறிந்து கொண்ட மகிழ்ச்சியில் ......தன் பிள்ளையின் சாதாரண தர புள்ளிகளை அறிந்து கொண்ட பூரிப்பில் எல்லை சாமிக்கு படைக்கும் பொருட்டு அக்கார அடிசில் செய்ய தேவையான தேங்காயை கழுவி உடைத்து எடுத்தாள்.

சாதாரண தரம் சித்தி பெற்ற தன் மகளை உயர் தரத்துக்கு எந்த பள்ளியில் சேர்ப்பது என்கிற புதிய பிரச்சனைக்கு தீர்வை யோசித்துக்கொண்டே தன் வேலையை கவனிக்கத் தொடங்கினாள் அவள்.

* * *

---

பொதுவுடமை இயக்கங்களை , தேசிய இன இயக்கங்களை, கலாசார இயக்கங்களை தலித்திய இயக்கங்களை, இதர மாதர் இயக்கங்களை எல்லாம் உலுக்கிப்பார்க்கும் எந்த எண்ணமும் பின் நவீனத்திலிருந்து எழ முடியாது. அப்படி எழுப்புபவர்கள் பின் நவீனத்துவத்தின் போர்வையில் ஒளிந்து கொண்டு நவீனத்துவத்தை சாதிக்கிறார்கள் என்று குற்றம் சுமத்த முடியும்.

— **எஸ்ஸார்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-36

சோலையூர்
குருபரன்





# கண்ணிவெடி

அன்று காலைச் சூரியன் சோக முகத்தைக் காட்டிய வாறே கிழக்கு வானில் வெளிப்பாட்டான். சரண்யாவின் கையும் காலும் ஏதோவொரு பதட்டத்தை உணர்த்துவது போலிருந்தது. அடிக்கடி வெளியே வருவதும்வீட்டுக்குள்ளே செல்வதுமாகப் பதட்டத்துடன் காணப்பட்டாள். அவளின் அடி மனம் இன்றைக்கு ஏதோ என்னமொ நடக்கப் பொவது போல் உறுத்தியது. அன்று 12-06-1991 வெள்ளிக் கிழமை பகல்11.00 மணி இருக்கும் குசினிக்குள் மும்முரமாகச்சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கமலம் "ஏண்டி பித்துப் பிடிச்ச மாதிரி அங்குமிங்கும் அலையிறா. இஞ்ச வந்து இதக் கந்தப்பாரு" என அதட்டலாகக் கூறினாள். 'இவட நச்சரிப்புத் தாங்கேலாது' என மனதுக்குள் நினைத்துக் கொண்டு குசினிக்குள் சென்று உதவி செய்வது போல் செய்தாள்.

சரண்யாவின் எண்ணம் முழுவதும் முகுந்தனைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தது. இரண்டு வருடமாக முகுந்தனோடு இனம்புரியாத நட்பு. அது காதலென்பது இரண்டு மாதமாத்தான் அவளுக்குத் தெரியும். பழகுவதைக் கொண்டு அவனும் அவ்வாறுதான் இருப்பான் என இரண்டு வாரங்களுக்கு முன் நினைத்திருந்தாள். இந்த விடயம் கமலத்துக்குத் தெரியாது. கமலத்துக்குத் தெரிந்தால் பெரிய பிரளயமே நடந்துவிடும் என்ற பயமும் அவளுக்கிருந்தது. கமலத்தின் கணவன் 1987 இல் இறால் வளர்ப்புப் பண்ணையில் நடந்த அசம்பாவிதத்தில் கொல்லப்பட்டார். இருவரும் இருப்பதைக் கொண்டு ஏதோ வாழ்ந்து வருகிறார்கள். சரண்யா உயர்தரம் கலைப் பிரிவில் கற்று நான்கு பாடத்திலும் சாதாரண சித்தியுடன் தொழில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறாள். முகுந்தனும் அப்படித்தான். இருவரும் மகிழையூர்தான்.

மகிழடித்தீவு மட்டக்களப்பு படுவான்கரையில் மரபுகள், பாரம்பரியங்களைப் பேணும் ஓர் அழகிய கிராமம். அக்கிராமத்துக்கருகில் அடிக்கடி நடந்த மோதல்கள், சம்பவங்களால் பலர் நகரத்துக்கும் வெளிநாடுகளுக்கும் புலம் பெயர்ந்து சென்றுவிட்டார்கள்.

சரண்யாவின் அடிமனதில் ஏதோ இனம் புரியாத பயம் தோன்றி மனதை உறுத்திக் கொண்டிருந்தது.

ஆனி மாதக் கொழுத்தும் வெயில் அன்றில்லை. சூரியன் மௌனித்திருந்தான். ஏதோ ஒன்று நடக்கப் போவது போல் கதிரவனும் இருள் சூழ்ந்த மேகத்துள் மறைந்திருந்தான். நேரம் மதியம் 12.00 ஐத் தாண்டியிருந்தது.

தரம் மூன்று வரை கற்ற மாணவர்கள் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். மகிழத்தீவு பொது விளையாட்டு மைதானத்தில் பயிற்சியை முடித்துக் கொண்டு கொக்கட்டிச் சோலையில் முகாமிட்டிருந்த பாதுகாப்புப் படையினர் மண்முனை இறங்கு துறைக்குச் சென்று திரும்பிவரும் நேரமாகிக் கொண்டிருந்தது.

"சரண்யா வெளியால என்னடி செய்யிறா? அடுப்பில கொதிக்கும் கறிச் சட்டிக்குள்ள தலப்பாலை ஊத்தி ஆத்திப் போட்டு இறக்கி வை" என்றதும் பதட்டத்துடன் இருந்த சரண்யா வேண்டா வெறுப்புடன் குசினிக்குள் சென்றாள். நேரம் 12.30 தைத் தாண்டியிருந்தது. பகல் பூசைக்குப் பிள்ளையார் கோயில் மணி ஒலித்துக் கொண்டிருந்தது. வெள்ளிக் கிழமை என்பதனால் விசேட பூசையும் நடைபெற்றது. கோயிலில் அடியார்களும் அதிகம் நின்றிருந்தனர். குறிஞ்சாத்தீவு, மகிழடித்தீவு பிள்ளையார் ஆலயங்களில் நின்றிருந்த அடியார்களுக்குத் துறையடியில் இருந்து படையினர் கால் நடையாக வருவது தெரிந்தது.

நேரம்12.45. அக்காலத்தில் சக்தி, சூரியன் பண்பலை வரிசைகள் இல்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி ஒலிக்கிறது. படையினர் சந்தியைக் கடந்து விட்டனர். ஒரு சில நிமிடத்தில் பிரதேசத்தை அதிரவைத்த பாரிய வெடிச்சத்தம் கேட்டது. பிரதான வீதியில் மகிழடித்தீவு மீனாச்சியடியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிச் சத்தந்தான் அது. காயப்பட்ட இரு படையினரை தங்களுடன் வந்த வாகனத்தில் துரிதமாக ஏற்றித் துறையடிக்குச் செல்வதற்குத் தயாராகினர். குறிஞ்சாத்தீவு, மகிழடித்தீவு பிள்ளையார் கோயிலில் நின்றவர்கள் சிதறி ஓடினர்.

நாலா பக்கமும் சுட்டவாறு படையினர் மகிழடித்தீவுக்குள் நுழைந்தார்கள். அருகில் வீடுகளில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகினர். கமலமும்சரண்யாவும்பதறி ஓடி ஊரின்கிழக்குப்புற எல்லையில் ஒதுங்கினர். 'ஐயோ முகுந்தன் என்வானாரோ. வெடிச்சத்தம் கேட்ட மீனாச்சியடிக்குப் பக்கத்தில்தானே முகுந்தனின் வீடு. என்ன நடந்திருக்குமோ ஓடிவிட்டாரோ' என்று பல நூறு கேள்விகளைக் கேட்டு மனதுக்குள் அழுது கொண்டிருந்தாள் சரண்யா. இருவருக்கும் இடையில் நட்பு ஏற்பட்டதை எண்ணிப் பார்க்கிறாள். கண்ணீர் கண்களுக்குள் பனித்துப் போயிருக்க பலர் அயல் கிராமத்தை நோக்கி ஓடுவதைக் கண்டு இவர்களும் பின்தொடர்கிறார்கள். சரண்யாவின் சிந்தனை முகுந்தனையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. மகிழடித்தீவின் நாலா புறமும் துப்பாக்கிச் சத்தம் கேட்ட வண்ணம்இருக்கப்பல வீடுகள்எரிவது தெரிந்தன. இதெல்லாம் சரண்யாவை நிலை குலையச் செய்து அவளைப் பிரம்மை பிடித்தவள் போல் ஆக்கிவிட்டது. நிலை குலைந்து விழ இருந்த அவளைத்தாயும் இன்னொரு பெண்ணும் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றனர்.

துப்பாக்கிச் சத்தத்துடன் ஊர் முழுவதும் மரண ஓலம் கேட்டது. அரச ஊழியர்கள், ஊரப் பெரியவர்களின் வீடுகளில் பாதுகாப்பாக இருக்கலாம் என நம்பி இருந்தவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டு சுட்டுக் கொல்லப் பட்டனர். பல பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். சிலரைக் கொடூரமாகத் தாக்கிக் கொன்றனர். பலரை உயிரோடு வீடுகளுக்குள் போட்டு எரித்தனர்.

இயற்கையும் தனது சோக முகத்தை வெளிக் காட்டுவது போல் வானம் மேக மூட்டத்துள் சூழ்ந்து சூரியனை மறைத்திருந்தது. படையினரின் கொலைவெறி அடங்கவில்லை. வீடு, வாசல், தெருவெல்லாம் சுடுபட்ட, எரிந்த மனித உடல்கள் சிதறிக் கிடந்தன. பலர் வீடுகளுக்குள் வைத்து எரிக்கப்பட்டனர்.

அயல் கிராமத்தில் உறவினர் வீட்டில் கமலமும் மகளும் தஞ்சமடைந்தனர். முகுந்தனைப் பற்றிய கவலையில் சரண்யா சித்தப் பிரம்மை பிடித்தவள் போலாகிவிட்டாள். பலர் அருகிலிருந்த வாவிக் கண்ணாக் காட்டுக்குள் ஓடி ஒழிந்து கொணடனர்.

ஒரு மணித்தியாலத்தின் பின்னர் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க வேர்க்க விறுவிறுக்க ஓடிவந்த கந்தசாமி "ஊர் பற்றி எரியுது. ஆமி சுட்ட சவங்கள் ஊரெல்லாம் கிடக்குதாம். ஆக்கள வீட்டுக்குள்ள போட்டுப் பத்தவைக்கிறானுகளாம். ஆர் எவரெண்டு தெரியல்ல" என்று உடல் நடுநடுங்கப் பதட்டத்துடன் கூறி நிலத்தில் அமர்ந்த கொண்டார்.

துப்பாக்கிச் சத்தம் ஓயவில்லை. வீடுகள் எரிந்த தீச்சுவாலை விண்ணைத் தொட்டுக் கொண்டிருந்தது. அழுகுரல்சத்தமும்தொடர்ந்த வண்ணமே இருந்தன. பொழுது சாயும் நேரமாகிவிட்டது. வெடிச் சத்தம் கேட்டதும் சிதறி ஓடிய மாணவர்களில் சிலர் என்ன ஆனார்களோ என்ற கவலையில்சில பெற்றார் புலம்பிக் கொண்டிருந்தனர். கோரத் தாண்டவமாடிய படையினர் முகாமுக்குச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

கூடி இருந்தவர்களில் இருந்து ஒரு அழு குரல் தொடர்ச்சியாகக் கேட்டவண்ணம் இருந்தன. அது முகுந்தனின் தாய் மரகதத்தினுடையது. ஒரு மகனை 1987 இல் இறால் வளர்ப்புப் பண்ணையில் நடந்த சம்பவத்தில் பறி கொடுத்திருந்தாள். முகுந்தனும் இன்னும் வரவில்லை என்ற கவலை, ஏக்கத்தில் அழுது கொண்டிருந்தாள். படிப் படியாக இருள் கௌவிக் கொண்டிருக்க துப்பாக்கி வேட்டுச் சத்தமும் ஓய்ந்தது. அழு குரல்கள் எங்கும் கேட்டுக் கொண் டிருந்தன. படையினர் ஊரிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். முற்றாகப் படையினர் வெளியேறியதும் கண்ணாக் காட்டுக்குள் ஒழித்துக் கொண்டிருந்த ஆண்கள் ஒருவர் இருவராக ஊருக்குள் நுழைந்தனர். அதில் பரமேஸ் ஊரின் நிலவரத்தை முழுமையாக நோட்டம்விட்டு விட்டான்.

அங்கு துப்பாக்கிக் குண்டு பட்டு வேலி ஓரத்தில் இறந்து கிடப்பது நண்பன் முகுந்தனைப் போல் இருப்பதாக உணர்ந்தான். இருள் சூழ்ந்திருந்தது. அருகில் செல்லப் பயமாகவும் இருந்ததால், தன்னைச் சுதாகரித்து நிலமையைப் புரிந்து கொண்டு, இங்கு நிற்பது உசிதமல்ல என விலகிச் சென்றான். அங்கொன்றும் இங்கொன்றுமாகத் துப்பாக்கிக் குண்டு துழைத்தும் வெட்டுக் காயங்களுடனும் பலர் இறந்து கிடந்தனர். பல வீடுகள் எரிந்து சாம்பராகியும் எரிந்து கொண்டும் இருந்தன. பற்றைக்குள் இருந்து முனகல் சத்தம் கேட்கவே எட்டிப் பார்த்தான் "அது அது செல்லத் தம்பி மாமாவாச்சே. மாமா மாமா" என எழுப்பினான். கையை மாத்திரம் அசைத்தார். தொடையில் குண்டு துழைத்திருந்தது. நாதன் அண்ணை வருவதைக் கண்டதும் இருவருமாகச் சேர்ந்து அவரைத் தூக்கிச் சென்று முதலுதவி செய்தனர்.

படையினரால் பலாத்காரமாகக் கற்பழிக்கப்பட்ட பத்துக்கு மேற்பட்டோர் பேச்சு மூச்சற்றுக் கிடந்தனர். அந்தக் காலகட்டத்தில் இரவு வேளையில் வைத்தியசாலை களுக்குக் கொண்டு சென்று வைத்தியம் பார்க்க முடியாது என்பதால் முதலுதவிகள் மாத்திரம் செய்தனர். காயப் பட்டோர் 150 க்கு மேல் இருந்தனர்.

பரமேஸ் முகுந்தனைப் பற்றி மரகதத்திடம் எதுவும் கூறவில்லை. "தம்பி பரமேஸ்! முகுந்தனக் கண்டதாடா? இன்னும் அவனக் காணல்ல. ஊருக்குள்ள சவமெல்லாம் கிடக்குதாம். அவனுக்கு என்னவும்..." எனக் கூறவந்த மரகதம் விக்கித்து அழ ஆரம்பித்து விட்டாள். பலரும் அவளைத் தேற்றி ஆசுவாசப் படுத்னர். சரண்யாவைத் தேடினான். எங்கும் காணவில்லை. அங்கு இருந்த பெண்ணொருத்தி "அம்மாவும் மகளும் பக்கத்து ஊருக்குப் போயித்தாங்களாம்" என்றொரு குரல் வந்தது.

சரண்யாவின் காதலுக்குத் தூது போய் உதவியவன் பரமேஸ்தான். இரண்டு வாரத்துக்கு முன்னர் "முகுந்தன் உன்னக் காதலிக்கிறதச் சொல்வதுக்குப் பயப்படுறான். அவன் பல நாளாக உன்னக் காலிக்கிறான். இண்டைக்குத்தான் என்னிட்டையும் மனம்விட்டுச் சொன்னான்" என்றதும் அந்தரத்தில் மிதப்பது போல் உணர்ந்தாள் சரண்யா. தன்ர காதலைத் தன்னிடம் கூறமாட்டானா என ஏங்கி தவித்த வளுக்கு இச்செய்தி மகிழ்ச்சியைக் கொடுத்தது. இருந்தும் காட்டிக் கொள்ளவில்லை. மிதிவண்டியில் செல்லும் போது சரண்யாவைக் கண்டதும் ஒரு புன்சிரிப்பு அவ்வளவுந்தான். இருவரும் நிழலுக்கு ஒதுங்கி ஒரு நாளும் பேசியதில்லை.

முகுந்தனைப் பற்றிய எண்ணமும் எதிர்பார்பும் சரண்யாவை வாட்டி வதைத்தது. அவளின் இதயம் கனத்து மனதுக்குள் அழுகிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரும் பகல் உணவு சாப்பிடாததால் பலரும் சோர்வாக இருந்தனர். சிலர் பகல் சமைத்த சாப்பாட்டை எடுத்து வந்து பரிமாறினர். பசி மயக்கத்தில் குழந்தைகளும் சிறுவர்களும் அழுது தூங்கிவிட்டனர். காயப்பட்டவர்களின் முனகலும் அழுகுரலும் கேட்டவண்ணமே இருந்தன. என்றைக்கும் போல் இல்லாமல் இன்றைக்கு ஆந்தை இடைவிடாது அலறியது. நரிகளும் நாய்களும் அக்கம், பக்கம், தொலைவிலிருந்து தொடர்ச்சியாக ஊளையிட்டுக்கொண்டே இருந்தன. இச்சத்தமும் பலருக்கு மேலும் பய பீதியை ஏற்படுத்தின.

அங்கு கமலம் உட்படப் பலரும் உறங்கிவிட்டனர். சரண்யா படுக்கையில் புரண்டு புரண்டு முகுந்தனின் நினைவுகளை அசைபோட்டு மனதுக்குள் அழுது கொண்டிருந்தாள். இரவு முழுவதும் அவளுக்குச் சிவராத்திரிதான்.

கிழக்க வானில் விடிவெள்ளி அடிவானத்தில் இருந்து மேலெழுந்திருந்தது. கோழிகள் சிறகடித்துக் கூவின. காகங்கள் கரைந்தன. குயில்கள் கூவிய சத்தம் கேட்டுக் கிழக்கு வானைப் பார்த்தனர். வானில் சிறிய ஒளிக்கீற்றுத் தென்படுவது பொல் தெரிந்தது. அவரவர் வீடுகளுக்குச் செல்லத் தயாராகினர். சிலர் விடிந்த பின்னர் போகலாம் எனத் தடுத்தனர். கமலம் மகளையும் அழைத்துக் கொண்டு இன்னும் சிலருடன் வீடு நோக்கிப் புறப்பட்டாள்.

சரண்யா மனதில் முகுந்தனைச் சுமந்து கொணடு கால் போன போக்கில் சென்று கொண்டிருந்தாள். 'பிள்ளையாரே முகுந்தன எண்ட கண்ணுல காட்டு' என மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்.

சரண்யா பரமேஸைக் கண்டதும் வேகமாக நடந்து சென்று "முகுந்தனக் கண்டையா? எங்க நிக்கான். ஏன் அவனக் கூட்டித்து வரல்ல" எனக் கேட்டு அவனை ஏற இறங்கப் பாத்தாள். அவளைக் கண்டதும் அதிர்ச்சியடைந்து என்ன செய்வதென்றறியாது திகைத்துப் போனான். ஒருவாறு மனதைத்திடப்படுத்திக் கொண்டு "அவன் எங்க போனானோ தெரியல்ல. சைக்கிளின் கிழக்குப் பக்கம் போனவனாம். அவங்கட அம்மா விசாரிச்சு விசாரிச்சு அழுது கொண்டிருக்கா" எனத் தழுதழுத்த குரலில் கூறினான். "அங்க என்னடி செய்யிறா? வீடெல்லாம் பத்தவச்சிப் போட்டானுகளாம். நம்மட வீட்டுக்கு என்ன நடந்ததோ தெரியாது. சுறுக்கா வா போகணும்" என அதட்டினாள் கமலம். 'நேத்தில இருந்து இவ என்ன பாடு படுத்துறாவு' என மனதுக்குள் பொருமிக் கொண்டு பின் தொடர்ந்தாள்.

பல வீடுகளில் இருந்து அழுகுரல் கேட்டுக் கொண்டிருந்து. 'அவரக் காணல்ல இவரக் காணல்ல. சுட்ட சவமெல்லாம் ஊர் முழுக்கக் கிடக்குதாம். நிறையப் பேர வீடுகளுக்குள் போட்டு எரிச்சுப் போட்டானாம்' எனப் பலரும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஊர் முழுவதும் சோக மயமாக இருந்தன. சிலர் காயப்பட்டவர்களை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லத் தயாராகிக் கொண்டிருந்தனர். நூற்றுக்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம்' எனப் பலரும் கூறினர்.

படையினர் முகாமைவிட்டு வெளிவரவில்லை. தமிழ் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்தன. வெளிநாட்டு வானொலிகளில் கோரச்சம்பவம் தொடர்பான செய்திகள் ஒலிபரப்பப்பட்டன. மகிழடித்தீவு யுத்தம் நடந்து முடிந்த பூமி போல் காட்சியளித்தது.

கமலத்தின் வீடு திறந்த மாதிரியே இருந்தது. எந்தப் பாதிப்புமில்லை. ஊரெல்லாம் ஒப்பாரி கேட்டுக் கொண்டிருந்தது. சில வீடுகளுக்குள் அரை குறையாக எரிந்த நிலையில் சடலங்கள் காணப்பட்டன. இளைஞர் இருவர் இறந்தவர்களைக் கணக்கெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

கமலத்தின் நச்சரிப்பையும் குதர்க்கமான பேச்சையும் கேட்டுக் கொண்டு வீட்டைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள் சரண்யா. 'இருதலைக் கொள்ளி எறும்பு போல்' தன் கவலையை வெளிக் காட்டாமல் செயற்பட்டுக் கொண்டிருந்தாள். முகுந்தனைப் பற்றி யாரிடமும் கேட்கவும் முடியாமல். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தாள்.

"பரமேஸ் அங்க பாரடா முகுந்தன் எங்கோ நின்று வாறான் போல இருக்கு" என ரவி கூறியதும் நிமிர்ந்து பார்த்தான் "அது அது முகந்தன்தாண்டா. அப்டிண்டா அந்த வேலி ஓரத்தில அரை குறையா எரிஞ்சி கிடக்கிறது யாருடா?" எனப் பிரமித்துப் போய்ப் பார்த்தான். "மச்சான் எங்கடா போன நீங்க? அம்மாவும் சரண்யாவும் எங்கடா இருக்காங்க" என முகுந்தன் கேட்டதும். அம்மா மாமாட வீட்டிலும். சரண்யா அவங்க விட்டுலயும் இருக்காங்க. உங்க வீடு எரிஞ்சு கிடக்குது இதெல்லாம் அம்மாட்டச் சொல்லல்ல. அம்மா உன்ன விசாரிச்சு விடிய விடிய அழுது கொண்டிருந்தா. சரண்யாவும் அப்படித்தான் இருந்திருப்பாள் போல. முகம் வாடிக் கிடந்துது. விடியக் காலையில என்னக் கண்டதும் ஓடி வந்து உன்னத்தான் விசாரிச்சாள்" என்று பரமேஸ் கூறியதும், "சரி வாங்கடா போய் அம்மாவப் பாப்பம்" எனக் கூறிக் கொண்டு மூவரும் சென்றனர். முகுந்தன் கண்ட காட்சிகள் அவனை நிலை குலையச் செய்தன.

முகுந்தனைக் கண்டதும் ஓடி வந்து கையைப் பற்றிக் கொணடாள் மரகதம். புதுத் தெம்பு வந்ததை உணர்ந்தாள். "அம்மா நாங்க வீட்டப் பாத்துத்து ஆக்களுக்கு ஒத்தசை செஞ்சித்து வாறம்" எனக் கூறிக் கொண்டு சரண்யாவைப் பார்க்கச் சென்றனர். இறந்தவர்கள் பற்றிய தகவல்களை உடனடியாகப் பெற முடியவில்லை என்றும். பயத்தில் ஊரைவிட்டு ஓடியவர்கள் திரும்பி வந்த பின்னர் தான் முழுமையாகத் தெரியும் எனவும் எப்படியும் நூற்றுக்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாம் எனவும். 64 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டதாகவும் 20 வீடுகள் பகுதியளவில் எரிச்திருப்பதாகவும் கூறினர்.

கமலம் மாமிக்குப் பயந்து கொண்டு படலையைத் திறந்து உளளே நுழைந்த முகுந்தனைக் கண்டதும் வைத்த கண் வாங்காமல் அசையாமல் அவனையே பார்தவாறு நின்றாள் சரண்யா. அவளின் உடலுள் மின்சாரம் பாய்வது போல் உணர்ந்தாள். தாயை மறந்து இருவருடைய பார்வையும் சங்கமித்தன. பரமேசும் ரவியும் இருவரையும் பார்த்தவாறு நின்றனர். "அங்க என்னடி செய்யிறா? வெளியால யாரடி" எனத் தாயின் குரல் கேட்டுச் சுய நினைவுக்கு இருவரும் வந்தனர். இரவெல்லாம் நித்திரையின்றி தன்னிலை இழந்து சோகத்தோடு இருந்த சரண்யாவுக்கு இந்தப் பார்வை ஒன்றே போதுமே.....

❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-37

# அகதியின் காணி

குணறுபேஸ்





காற்றைக் கிழித்துக் கொண்டு வந்த எறிகணை வீச்சுக்கள் கிளிநொச்சிப் பகுதியில் வாழ்ந்து வந்தவர்களின் உயிர்களையும், உடைமைகளையும் பதம் பார்த்ததினால் தான் அவர்கள் இடம்பெயர்ந்து வாழவேண்டிய சூழ்நிலை உருவானது. அநியாயமாகக் பலியாகிப் போன சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் தவிர எஞ்சியவர்கள் மூட்டை முடிச்சுக்களைக் கட்டி எடுத்துக் கொண்டு தலையில் சுமையுடன் இடம்பெயர்ந்தபோதுதான் ஆறுமுகம் தெய்வானை குடும்பமும் இடம்பெயர்ந்தனர். ஒவ்வொருவரும் தங்களுக்கு அறிமுகமான இடங்களுக்குச் சென்றபோது சிலர் மட்டக்களப்பிற்கு இடம்பெயர்ந்து வந்தனர். வந்தாரை வாழவைப்பதுவும் விருந்தோம்பலுக்குப் பெயர்பெற்றதுமான மட்டக்களப்பை வந்தடைந்த ஆறுமுகம் தெய்வானை குடும்பம் இந்துக் கல்லூரியில் அடைக்கலம் புகுந்தனர்.

மட்டக்களப்பு தமிழ் சமூகம் இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு உணவும், உடுதுணிகளும் மருத்துவ வசதிகளும் செய்து கொடுத்து பராமரித்து வந்த நாட்களில் ஒருமாதம் விரைவாகவே உருண்டு சென்றது. இந்துக் கல்லூரி அகதிகளினால் நிரம்பி வழிந்ததனால் பாடசாலை நடைபெறவுமில்லை. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஒரு மாதமாகப் பாதிக்கப்பட்டது. நலன்விரும்பிகளும், சமூக ஆர்வலர்களும் ஒன்றுகூடி அகதிகள் விடயம் குறித்து கலந்து ஆலோசித்து ஒரு முடிவிற்கு வந்தனர். இந்துக் கல்லூரி மைதானத்தில் தற்காலிக கொட்டில் அமைத்து அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதுதான் அந்த முடிவு.

ஓரிரு வாரங்களில் இந்துக்கல்லூரி மைதானத்தில் அகதிகளுக்கான தற்காலிக கொட்டில் அமைக்கப்பட்டு அவர்கள் அங்கு குடியமர்த்தப்பட்டனர். இடம் பெயர்ந்து வந்தவர்களின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அவர்கள் இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக சேர்க்கப்பட்டிருந்தனர். பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளும் மாணவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டாயிற்று.

அகதிகளாய் இடம்பெயர்ந்து வந்தவர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுவந்த நிவாரண உதவிகளுடன் வாழ்ந்து வந்த நாட்களில் குடும்பத்தலைவர்கள் கூலி வேலைகளுக்குச் சென்று நாளாந்த செலவிற்குத் தேவையான பணத்தையும் தேடிக் கொள்ள ஆயத்தப்பட்டு சிலர் மீன்பிடி வேலைகளிலும், சிலர் மேசன் வேலைகளிலும் ஈடுபட்டு உழைக்கவும் தொடங்கினர்.

தமிழனாய் பிறந்தால் இதுதான் நமது தலைவிதி. சொந்த மண்ணில் வாழமுடியாது. அகதி என்பதுதான் நமது மறுபெயர் என்று தங்களது ஏக்கங்களை பெருமூச்சு விட்டுச் சொன்னபடி உயிர்களைப் பாதுகாத்து வாழ்ந்து வந்தனர்.

அகதி முகாமில் சிலர் துப்பாக்கி ரவைக் காயங்களுடனும், எறிகணை வீச்சுக்களின் சிதறல்களினால் காயப்பட்ட தழும்புகளுடனும், இன்னும் சிலர் அங்கவீனர்களாகவும் காட்சி தருவதானது அவர்கள் யுத்தத்தில் அனுபவித்த துன்பங்களைத் துல்லியமாகக் காட்டி நின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் - தெய்வானை குடும்பத்தில் இரு பிள்ளைகள். மூத்தவன் இளங்கோவன். இரண்டாமவள் கார்த்திகா. இதில் இப்போது இளங்கோவன் உயிருடன் இருக்கிறானா இல்லையா என்பது குறித்து எந்தத் தகவலும் இல்லை. கிளிநொச்சியில் நடைபெற்ற சுற்றிவளைப்பின்போது ஆமிக் காரர்களால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவன் இதுவரை வீடு திரும்பவில்லை. என்றோ ஒரு நாள் அவன் வீடு வந்து சேர்வான் என்னும் எதிர்பார்ப்புடன் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

அகதிமுகாமில் இருந்த நாட்களில் ஆறுமுகத்தார் நாட்கூலி வேலைக்குச் சென்று வரத் தொடங்கி விட்டார். இந்நாட்களிலேதான் அவரோடு வேலை செய்கின்றவர்கள் நீர் கொழும்புப் பகுதிக்கு மீன்பிடித்தொழிலுக்காய்ச் சென்றிருந்தனர். அந்நாட்களில் அவர்களோடு ஆறுமுகத்தாரும் இணைந்து கொண்டார். "இந்த அகதிமுகாம் வாழ்வும் தொழிற் பிரச்சினையும் நமக்குத் தொடர்கதையாகத்தான் இருக்கும். நான் நீர்கொழும்பிற்கு தொழிலுக்காய் போறவயளோட போயிற்று ஏதாவது கொண்டு வாறன்." என்று மனைவியிடமும் எஞ்சியிருந்த ஒரே மகள் கார்த்திகாவிடமும் கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார் ஆறுமுகம்.

நீர்கொழும்பிற்குச் சென்று ஓரிரு மாதங்களாக ஆறுமுகத்தாரிடமிருந்து தெய்வானைக்கு அகதிமுகாமிற்கு கடிதம் அனுப்பி தொடர்பிலிருந்த நாட்களில் இரண்டு முறை அகதிமுகாமிற்கு வந்து மனைவியையும், பிள்ளையையும் சந்தித்துச் சென்றிருந்தார். மீண்டும் நீர்கொழும்பிற்கு மீன்படித் தொழிலுக்காய் சென்றிருந்த நாட்களில் தான் விபரீதச் சம்பவம் நடந்தது.

இந்த நாட்களில் அகதிமுகாமில் தெய்வானையும் மகள் கார்த்திகாவுமாக இணைந்து காலையிலே பால் அப்பம் செய்து விற்கும் சிறுதொழில் முயற்சியில் ஈடுபட்டு தங்களுக்குரிய அன்றாடத் தேவைக்கான சிறுதொகைப் பணத்தையும் சம்பாதிக்கத் தொடங்கியிருந்தனர். தெய்வானை செய்யும் பால் அப்பத்திற்கு அகதி முகாமில் வசிப்பவர்கள் மத்தியிலும், சூழவுள்ள குடியிருப்பாளர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பிருந்தது. நல்ல பெரிய பால் அப்பம். சுவையோ என்றால் பிரமாதம்.

நீர்கொழும்பிற்குச் சென்ற ஆறுமுகத்திடமிருந்து இப்போது எந்தவிதமான கடிதமும் வருவதில்லை. இன்று கணவனிடமிருந்து கடிதம் வரும் என்னும் எதிர்பார்ப்பு மட்டும் ஒவ்வொரு நாளும் இருந்து வந்தது. ஆனால் தெய்வானைக்கு ஆறுமுகத்தார் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இரண்டு மாதங்கள் உருண்டோடின.

ஆறுமுகத்தாரோடு தொழிலுக்குச் சென்றவர்கள் திடீரென விடுமுறையில் வந்திருந்தனர். அப்போது அவர்களில் ஒருவர் தெய்வானையை சந்திப்பதற்கு தெய்வானை குடியிருந்த 4 ஆம் இலக்க அகதிமுகாம் கொட்டிலை வந்தடைந்து தெய்வானையைக் கண்டு கொண்டார். "என்ன இவர் வரயில்லையோ?" என்று தெய்வானை கேட்டபோது நடந்த சம்பவத்தை எப்படிச் சொல்வதென்று வந்தவருக்குச் சங்கடமாயிருந்தது. எப்படியாவது சொல்லித்தான் ஆக வேண்டும் என்று சிந்தித்தவர் "நீர் கொழும்புக் கடலிலே நாங்கள் மீன்படித்துக் கொண்டிருக்கைக்குள்ள எங்கோயிருந்து வந்த கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஆறுமுகம் ஆக்கள் இருந்த படகில் இருந்தவர்கள் எல்லாரும் சூடுபட்டு செத்துப் போனாங்கள். நாங்கள் காயப்பட்டு ஒருமாதிரியாகத் தப்பிக் கொண்டம்." என்று சொன்னபோது தெய்வானையும் மகள் கார்த்திகாவும் தலையில அடித்தபடி ஒப்பாரி வைத்து நிலத்தில் புரண்டு அழுதகாட்சி அன்று இந்துக் கல்லூரி அகதிமுகாம் வாசிகளை இன்னுமொருபடி சோகத்தில் ஆழ்த்தியது. அந்தச் செய்தி கேட்டதிலிருந்து தெய்வானையின் கொட்டிலில் அழுகையும், கண்ணீரும், சோகமும் மாத்திரமே குடிகொண்டிருந்தது.

மகனை சுற்றிவளைப்பில் இராணுவத்திற்குப் பலிகொடுத்துவிட்டு உயிர்வாழ்வதற்கான போராட்டத்தில் இருந்தபோது கணவனை கடற்படை சுட்டுக்கொன்று போட்ட சோகம் தெய்வானைக்கும், மகள் கார்த்திகாவிற்கும் வெந்த புண்ணில் வேல் பாய்வது போலிருந்தது. இப்போது கணவனும் இன்றி மகனும் இன்றி கணவனின் பாதுகாப்பும் அவரின் சிறுதொகை வருமானமுமின்றி வயதிற்கு வந்த பெண்பிள்ளையோடு வாழவேண்டிய நிலை தெய்வானையின் வாழ்வில் விதியானது.

நாட்கள் மாதங்களாகி உருண்டோடிக் கொண்டிருந்த நாட்களில் மனதைத் தேற்றிக் கொண்டு தெய்வானையும் மகள் கார்த்திகாவும் வாழவேண்டியிருந்தது. மீண்டும் தங்கள் பால்அப்பம் செய்யும் குடிசைத்தொழிலை தெய்வானை ஆரம்பித்தாள். அகதிமுகாமில் இருந்தவர்களுக்கு இப்போது உதவிகள் கிடைப்பதுவும் குறைந்து போய்க்கொண்டிருந்தது. சிலர் அறிமுகமானவர்கள் மூலமாக அவர்களுக்குச் சொந்தமான காணிகளில் தற்காலிகமாக சிறு கொட்டிலமைத்து தனித்தனி குடும்பங்களாகவும் சென்று விட்டனர். எங்கேயும் செல்லமுடியாதவர்கள் மாத்திரமே இப்போது அகதிமுகாமில் தொடர்ந்து வசிக்கின்றனர். சிலர் வாடகைக்கு வீடெடுத்தும் வாழத் தொடங்கி விட்டனர்.

தெய்வானை தனது மகளுடன் பால் அப்பம் செய்து விற்பனை செய்து வந்த வருமானத்தில் வாழ்ந்து வந்த நாட்களில் நாளாந்தம் சிறுதொகைப்பணம் மீதப்பட்டதனால் அதனை சேமித்து வாழத் தொடங்கினர். எது எப்படியாயினும் தான் கண்மூடிய பின்னர் தனது ஒரே மகள் கார்த்திகா வாழ்வதற்காய் ஒரு சிறு வீடு வேண்டும் என்னும் சிந்தனை தெய்வானைக்கு ஏற்பட்டது. பால் அப்பம் செய்து கிடைத்த வருமானத்தில் சேகரித்த பணங்கள் இப்போது ஓரளவு பெரிய தொகையாய் வளர்ந்திருந்தது.

தாங்கள் குடியிருந்த அகதிமுகாமிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் பெரியதொரு நிலப்பரப்பு இருக்கின்றது. அந்த நிலத்திற்குச் சொந்தமானவர் தனது குடும்பத்தாருடன் கனடாவில் குடியேறி வாழ்வதற்கான எல்லா ஏற்பாடுகளும் நிறைவடைந்ததனால் அந்த நிலத்தை விலைக்கு கொடுப்பதற்கு ஆயத்தமானார். இந்தச்செய்தியைக் கேள்விப்பட்டவர்கள் தங்களிடமிருந்த பணத்தைக் கொடுத்து அதற்கேற்றபடி பத்துப் பரப்பு காணியை கொள்வனவு செய்யத் தொடங்கினர். தெய்வானைக்கு இந்தச் செய்தி கிடைத்த போது தன்னிடமிருந்த பணத்திற்கு ஒரு நிலத்தை வேண்டிக் கொள்வதற்காக அந்த நில உரிமையாளரை சந்திக்கச் சென்றிருந்தாள். அவ்வளவு கடுமையான சிந்தனை உடையவரல்ல அந்த நில உரிமையாளர். தெய்வானை அன்று அவரைச் சந்தித்து தனது குடும்பத்தின் நிலையைக் கூறி தன்னிடமிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைக் கொடுத்து பத்துப் பரப்பு காணியைக் கேட்ட போது மறுப்பேதும் தெரிவிக்காமல் தெய்வானை கேட்ட நிலப்பகுதியை அவளுக்கு எழுதிக் கொடுத்தார். அந்த நிலம் பிரதான வீதியின் ஒரு வளைவில் இருக்கின்றது. தெய்வானைக்கு அந்த நில உரிமையாளர் மனமிரக்கம் காட்டியது பெரும் ஆறுதலாயிருந்தது.

தன் மகள் கார்த்திகாவுக்காக ஒரு நிலத்தை வேண்டிக் கொண்டவள் அதில் தற்காலிகமாகவேனும் ஒரு குடிசையை அமைத்து கொள்வதற்காக மீண்டும் பால் அப்பம் செய்து விற்கும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தாள்.

வியாபாரம் செய்து சிறுகச் சிறுகப் பணம் சேகரித்து வந்த நாட்களில் அந்த நிலம் பற்றைக் காடாய் வளர்ந்து விட்டிருந்தது. அந்த நிலத்தின் மத்தியில் ஒரு அரச மரமும் வளர்ந்திருந்தது. அப்போது ஓரளவு உயரமாயிருந்த மரம் இப்போது வளர்ந்து இன்னும் சற்று உயரமாய் போய் விட்டது. அந்த அரச மரத்தின் இலைகள் மெல்லிய பச்சை நிறமாய் காட்சி தரும். அழகிய அரச மரம் அது. அந்த அரச மரத்தின் கீழ் நின்றால் மெல்லிய பச்சை நிற மின்விளக்கு ஒளிர்வது போன்ற பிரகாசமும் இருக்கும். மெல்லிய காற்றிற்கு அசைகின்ற இலைகள் சர...சர... என்ற ஒரு சிறு இரைச்சலையும் தரும். அந்த ஊர்க்காதலர்களும் அயலூரிலுள்ள காதலர்களும் அந்த அரச மரத்தடிக்கு வந்து தங்கள் காதல் கதைகளைப் பேசிச் செல்வது வழக்கம். அப்படியாய்ப் பேசிய காதல் கதைகளையெல்லாம் பிறர் அறிந்திருக்காவிட்டாலும் பேசிய காதல் வார்த்தைகள் அந்த அரசமரத்திற்கு மட்டும்தான் தெரியும். அந்த அரச மரத்தைக் கேட்டால் எத்தனை காதல் ஜோடிகள் என்னென்ன விடயங்கள் எல்லாம் பேசினார்கள் என்று வாயிருந்தால் சொல்லும். அதுமட்டுமா? காதல் ஜோடிகள் அரச மரத்தைச் சுற்றி சுற்றி ஓடிப்பிடித்து விளையாடுவதும் பின்னர் அந்த அரச மரத்தில் இதய அடையாளம் வரைந்து அவர்களின் பெயர்களை அம்புக்குறி போட்டுப் பொழிந்து வைப்பதும் என எத்தனையோ காதல் ஜோடிகளின் பெயர்கள் அந்த அரச மரத்தில் பொழியப்பட்டிருக்கிறது.

அந்தப் பிரதான வீதியின் வளைவில் இருக்கும் அந்த நிலப்பரப்பின்மீதும், அதில் இருக்கும் அரச மரத்தின்மீதும் ஒரு குழுவினருக்கு ஒரு திட்டமிருந்தது. அந்தக் குழுவினருக்கு காவி உடை தரித்தவர்கள்தான் தலைமை தாங்குபவர்கள்.

அன்று ஒருநாள் காவி உடை தரித்தவர்களுடன் அந்தக் குழுவினர் தெய்வானையின் காணிக்குப் படையெடுத்து வந்தனர். அந்தக் காணிக்குள் நுழைந்து கைகளைக் காட்டி ஏதோ திட்டம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்தப் பிரதான வீதி வழியாய் உந்துருளியில் சென்று கொண்டிருந்த ஒருவர் தெய்வானையின் காணிக்குள் ஒரு குழுவினர் நிற்பதையும், ஏதோ பேசுவதையும், திட்டமிடுவதையும் கண்டு தான் சென்று கொண்டிருந்த பாதை வழியே உந்துருளியைத் திருப்பி வேகமாக மிதிக்கத் தொடங்கி ஒருசில நிமிடங்களுக்குள் தெய்வானையிடம் வந்தடைந்தார். "தெய்வானை உன்ர காணிக்குள்ள யாரோ காவியுடை தரித்த குழுவொன்று நின்று ஏதோ பேசித் திட்டம் போடுறாங்கள். உடனே போய் என்னெண்டு பாரன்" என்று சொல்லவும் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டபடியே கார்த்திகாவையும் கூட்டிக் கொண்டு தெய்வானை ஓட்டமும், நடையுமாக அரக்கப் பறக்க ஓடினாள். அங்கு சென்றபோதுதான் தெய்வானைக்கு சங்கதி தெரிந்தது. அது சிங்களவர்களின் பூர்வீகக் காணி என்றும் இந்தக் காணியின் மத்தியிலேயிருக்கும் அரச மரம் விகாரைக்கருகில் அமைந்திருக்க வேண்டிய அரசமரம் என்றும், அதனால் இந்தக்காணி விகாரை அமைப்பதற்குத்தான் பொருத்தமான காணி என்றும், அந்தக்குழுவில் இருந்த தமிழ்பேசத்தெரிந்தவர் சொன்னதுடன் உங்களின் நிலம் என்பதற்கு உங்களிடம் என்ன ஆதாரம் இருக்கிறது? என்று கேட்டு தெய்வானையை அச்சுறுத்திக் கொண்டிருந்தனர். தெய்வானை தனது கையிலிருந்த உறுதிப்பத்திரத்தைக் காட்டி உரிமை கோரியபோது இது நீங்கள் கள்ளமாய் உறுதி முடித்து உங்களுக்குச் சொந்தமானது என்கிறீர்கள். இதனுடைய தாயுறுதி எங்களிடமிருக்கிறது. இது எங்களுக்குத்தான் சொந்தமானதென்று வாதிடத் தொடங்கினர்.

செய்வதறியாது தவித்த தெய்வானை தலையில் அடித்துப் பலம்பினாள். "கணவரையும், ஒரு பிள்ளையையும் யுத்தத்திற்குப் பலி கொடுத்து விட்டேன். ஐயோ... என் பிள்ளைக்கு ஒரு வீடு கட்ட அப்பம் செய்து குருவி சேர்ப்பது போல சேர்த்த பணத்தில் வேண்டிய நிலத்தை இவங்கள் அபகரிக்கிறாங்களே... இந்த அநியாயத்தைக் கேட்பதற்கு யாருமே இல்லையா..? என்று புலம்பியபடி அந்த ஊர்த்தலைவரிடமும், கிராம சேவையாளரிடமும், நிலத்தை வேண்டிய சொந்தக்காரரிடமும் சென்று தனது நிலத்தை காவி உடை தரித்த குழுவினர் அபகரிப்பது குறித்து முறைப்பாடும் கொடுத்தாள்.

அழுகையும், புலம்பலுமாக தெய்வானையின் அன்றைய நாட்கள் சென்று கொண்டிருந்தன. தெய்வானையின் நிலையைக் குறித்து எந்தக் குழுவினருக்கும் எதுவித கவலை யும் இருக்கவில்லை.

பிறரை அன்பு செய்யுங்கள். பிறர் பொருட்களை அபகரித்து வாழாதீர்கள் என்றெல்லாம் நல்ல பல போதனைகளைத்தந்த போதிமாதவனின் போதனைகளை குழிதோண்டிப் புதைத்து விட்ட காவி உடைக்காரர் எந்தவித பயமுமின்றி அட்டகாசமாக நின்று தலைமைதாங்க அவர்களோடு வந்தவர்கள் விகாரை அமைப்பதற்காக அத்திவாரத்தை வெட்டத் தொடங்கினர். சிலர் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்து கொண்டிருந்தனர். இன்னும் இரண்டு வாரங்கள் கடந்து சென்றன.

தன்னுடைய நிலத்தை தனக்குப் பெற்றுத்தரும்படி தெய்வானை அங்குமிங்குமாக அலைந்து தனக்காக உதவக் கூடியவர்களையும், அரசியல் தலைவர்களையும், தேடி அலைந்து கொண்டிருந்தாள். காவி உடை தரித்த குழுவினர் இப்போது மூன்று வாரமாக தெய்வானையின் நிலத்தில் விகாரை அமைப்பதற்கான பணியில் ஈடுபட்டு அந்த அரச மரத்திற்கு மிக அருகில் விகாரையை அமைத்து அதனுள் போதிமாதவனின் உருவச் சிலையையும் வைத்து சுற்று மதில் அமைத்து 'மங்களாராம விகாரை' எனப் பெயர் சூட்டி மல்பூஜா வழிபாடு செய்து புண்ணிய பூமியாக பிரகடனம் செய்வதற்கான இறுதிக்கட்ட வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

தெய்வானை தனது மகள் கார்த்திகாவுடன் புலம்பியபடி செய்வதறியாது மலைத்துப் போய் நிற்கின்றாள்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-38

கனகசூரியம் யோகானந்தம்



# ஆறிய தேநீர்

இது இரண்டாவது சந்திப்பு. மேசையின் நடுவே இரு தேநீர்க்கோப்பைகள். ஒருபுறம் அவன் மறுபுறம் நான். அவன் எதுவும் பேசுவதாகத் தெரியவில்லை. தொண்டை வரை உள்ள விடயம் வாய்க்குள் வருவதாயும் இல்லை. ரகசியம் கட்டிக்காப்பாற்றுவதற்கும் காட்டிக்கொடுக்காமல் இருப்பதற்கும் எத்தணிப்பவனாக அமர்ந்திருந்தான்.

முதல் சந்திப்பானது அவசர அவசரமாக ஏற்பட்ட தொன்று. நான் யார் எனத்தெரியாத அவனும், அவனைப் பற்றி அறிய எண்ணிய நானுமாக அறிமுகமான சந்திப்பு அது. எனது குறும்புத்தனத்தால் ஏற்பட்ட சந்திப்பானாலும் அதன்தாக்கம்பெரிதாகவே இருந்தது. எங்காவது தொலைபேசி இலக்கங்களைப் பார்த்தால் விளையாட்டாக எடுத்துப் பார்க்கும் அந்தப் பழக்கம் என்னிடமில்லை. ஆனால் அன்று அந்தச்சுவரில் எழுதப்பட்டிருந்த தொலைபேசி இலக்கத்தை எனது தொலைபேசியில் சேமித்து வைத்தவனும் நான் தான். அதேவேகம் அந்த எண்ணிற்கு அழைப்பெடுத்து பேசவேண்டும் என்று என்னை உந்திக்கொண்டிருந்தது. எதுக்கும் முயற்சி செய்து பார்த்துவிடலாம் என்றுதான் அன்று அந்த அழைப்பு மேற்கொள்ளப்பட்டது.

"கலோ... கலோ... யாருங்க பேசிறது" என்ற கேள்விக்கு தயங்கிய படியே பதில் கூறினேன்.

"இந்தப் போண் நம்பர் ஜெயில்ல ஒரு அறையில எழுதி இருந்திச்சு, நிறைய சித்திரங்கள், சில வரிகள் எல்லாம் அந்த அறையில இருந்திச்சு. அதுகளப் பாத்திற்றுத்தான்... இந்த நம்பருக்கு எடுத்துப் பாத்தன்"

"என்ன வரிகள்"

"அம்மாவ பத்தி எழுதியிருந்திச்சே..."

சற்றுநேரம் மெளனம் குறுக்கிட்டுக் கொண்டது.

"கலோ.. அண்ணா.. அண்ணா.."

"ஆ... சொல்லுங்க தம்பி.."

"உங்கள ஒரு தடவ பாத்துக்கதைக்கணும் அண்ணா"

பதில் ஏதும் வரவில்லை. ஒரு பக்கம் பயமாவேறு இருந்தது எனக்கு. ஜெயில்ல இருந்தது தெரிந்து அவமானப்படுத்தி நக்கலுக்கு எடுத்திருக்கிறேன் என்று தப்பாக புரிந்து கொண்டாரோ தெரியவில்லை.

"சரி தம்பி... நீங்க எந்த இடம்.. நான் எங்க வரணும்"

"அண்ணா உங்கட இடத்தச் சொல்லுங்க நானே வாறேன்" என்று அவரின் இடத்தை அறிந்து கொண்டேன். பெரிய அதிஷ்டம் என்னவென்றால் அவர் சொன்ன இடம் எனக்கு மிகவும் பக்கமாக இருந்தது. அங்கேயே அவரைக் காத்திருக்குமாறு கூறிவிட்டு பேருந்தில் ஏறி வந்துவிட்டேன். சிறையில் இருந்த கைதியைப் பார்க்கப்போகிறேன், நல்லவர் கெட்டவர் விபரம் அறியவில்லை. வெறுமனே சுவரில் எழுதப்பட்ட வரிகளையும் சித்திரங்களையும் வைத்துக் கொண்டு என் மனதில் எதையோ எண்ணிக்கொண்டு பயணப்படலாயிற்று. ஏது நடக்கும் என்று அறியாமலே ஓர் எதிர்பார்ப்புடன் சென்றடைந்தேன். ஆளை அடையாளங்காண்பதற்காக மீண்டும் அழைப்பெடுத்து இறுதியாக அவரிடம் சென்றடைந்தேன். அவரைப் பார்த்ததும் அண்ணா என்று கூப்பிடத்தோன்றவில்லை. தோழர் என்று கூறுமளவிற்கு ஆள் இளமையானவராகவே இருந்தார். எப்படியும் இருபத்தைந்து வயது மதிக்கலாம்.

"நீங்க தான் கால் பண்ணினீங்களா"

"ஆமா அண்ணா"

"சரி வாங்க ரீ குடிச்சின்ரே பேசலாம்"

என்னைக் கூப்பிட்டதிலிருந்து தேநீரை வாங்கி கதிரையை எடுத்து அமர்ந்தது வரை அவரது செயற்பாடுகளில் பொறுப்பும் பண்பும் இருந்தது.

"ஜெயிலுக்கு போனீங்களா"

"ஆமாண்ணா, அங்கதான் நீங்க எழுதி வச்ச சில வரிகளையும் பார்தேன். அங்கதான் உங்க நம்பரும் எழுதி இருந்திச்சு. எப்படியாச்சும் உங்களப் பாத்து கதைச்சிரணும் எண்டு நினைச்சன். அதுதான் அந்தப் போன் நம்பர் வேல செய்யுதோ இல்லயோ எண்டு தெரிஞ்சுக்க எடுத்துப்பாத்தன். நல்லவேள நீங்க கதைச்சிற்றீங்க.. உங்க பேரு என்னண்ணா?"

"தக்ஷிக்"

"வயசு"

"26"

"அப்பிடின்னா நா உங்கள அண்ணா எண்டு கூப்பிடாம தக்ஷிக் எண்டே கூப்பிடட்டுமோ"

"சரி"

"எங்கிட்ட இப்போதைக்கு ஒரு கேள்வி தான் இருக்கு. அம்மாவ பற்றிய வாழ்க்கை பற்றி இவ்வளவு யோசிக்கிற நீங்க ஏன் ஜெயிலுக்கு போனீங்க"

"சொல்லியே ஆகணுமா?"

"கட்டாயம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்க சின்ன குடும்பம், அம்மா, அப்பா நான் மூண்டு பேருந்தான். அப்பா சீரீபில றைவரா இருக்காரு. படிப்பில பெரிய கெட்டித்தனமும் இல்ல, மக்குத்தனமும் இல்ல. அளவா படிப்பன், நல்லா விளையாடுவன். பள்ளிக்கூடம் விட்டா கிறவுண்டு அதுவுமில்லாட்டி வீடு எண்டுதான் வாழ்க்கை போச்சுது. பத்தாம் வகுப்புக்கு வேற பள்ளிக்கூடம் மாறினன். தெரியாதா, பொடிகள் செற்று... காதால கேட்டறிஞ்ச கஞ்சா, ஐஸ் எல்லாத்தையும் கண்ணில காட்டினாங்க. அது பழக்கமாகிரிச்சு. சிகரெட்டில்லாத இரவுகள் மிகவும் கஸ்ரமா இருந்திச்சி. எப்பிடியோ ஓஎல் பாஸ் பண்ணி போட்டன். ஏஎல் படிக்கும் போதும் அதே தக்ஷிக் தான். பள்ளிக் கூடத்துக்க வச்சு குடிக்கல அவ்வளவுதா.. மிச்சப்படி போதைய விட முடியல. வீட்ட தெரிஞ்சிரிச்சி. விழாத பேச்சில்ல.. அப்பா ஒரு நாள் அடிச்சும் பாத்தாரு.. இப்பிடியான காலத்திலதான் அவளும் வந்தாள்".

"என்ன தோழர் காதலா"

"ஏல் எடுக்கிற காலம் நெருங்கும்போதுதான் லவ் பண்ணன். பக்கத்து ஊரு புள்ள தான். அடிக்கடி சண்ட, கதைக்காம இருக்கிற எண்டுதான் லவ்வும் போச்சு. ஏஎல் எடுத்தப்புறம் வேலைக்கு போறெண்டு சொல்லிட்டு பக்கத்து ஊருக்கு வந்திற்றன். இப்பிடியே போன வாழ்க்கையில ஒரு நாள் அவளுக்கு புடிக்கும் எண்டு சொல்லி ஒரு பரிசு கேட்டாள். அத வாங்கிக்கொடுக்க எங்கிட்ட அவ்வளவு காசு இருக்கல. கிடைக்கிற காசு பொடிகளோட சேர்ந்து இழுக்கவும் பத்தவும் சரியாப்போச்சு. ஒரு நாள் செமபோதை. பொடிகள் கூடதான் இருந்தன். ஒரு பதினொருமணி வாக்கில அவள் கால் எடுத்தாள். வழம மாதிரியே தொடக்கமே சண்டதான். ஆனா முடியும்போது நீ கேட்டத வாங்கித் தருவன் செல்லம் எண்டுசொல்லி போன வைச்சன். அவள் கேட்டத வாங்கிக்குடுத்தே ஆகணும் எண்டு தோணிச்சு. பொடிகள் ஐடியா தந்தாங்க. காசுப்பார்ட்டியா பாத்து வீடு புகுந்தம். டொக்டர் எண்டு பாக்கல. கழுத்தில கத்தி வச்சு, ஆக்கள கட்டிப்போட்டு தேவையான அளவு எடுத்தின்ரு வந்திற்றம். போதையில சீசீரீவி இருந்தத பாக்கவே இல்ல. விடிய தட்டிச்சு ஓடச்சொல்லி பொடிகள் கோல் எடுக்கும் போது எல்லாத்தையும் விட்டிற்று ஓடினன். கடசியில அடையாளங் குத்தி நீ பாத்த அந்த ஜெயிலுக்குத்தான் அனுப்பி வச்சாங்க. நாலு வருசம் அங்கதான். வெளிய வந்து ஒரு வருசம்தான் ஆகுது".

"அப்போ அந்தப் பொண்ணு"

"அவளா... ஜெயில்ல நாலு வருசத்தில ஒரு தடவயாச்சும் வந்து பாப்பாள் எண்டுதான் பெரும் நம்பிக்கையா இருந்தன். ஒரு நாள் தன்னும் வரல. அப்பா அம்மாவத் தவிர வேற யாரும் வந்து பாக்கல. அவள் ஒண்டு மட்டும் சொன்னாளாம். "குடிகாரக் கள்ளனுக்கு பொண்ணு தர எங்கப்பா ஒண்ணும்மடையனில்ல" எண்டு. இதுகள கேள்விப் பட்ட காலத்தில எழுதினதுகள்தான் நீ பாத்த வரிகளும் சித்திரங்களும். யோசனையின் உச்சம்தான் அதுகள்".

"அந்தப் பொண்ணு இப்ப எங்க, அவங்கட போட்டோ இருக்கா"

"பக்கத்து ஊர்ல இருக்கிறதா தான் கேள்வி. இது புதுப் போன். சிம் மட்டும் தான் பழசு. இப்போ உன்னிட்ட காட்ட போட்டோ இல்ல. அடுத்த தடவ சந்திக்கும்போது கட்டாயம் போட்டோ கொண்டு வாறன்"

இவ்வாறுதான் முதல் சந்திப்பு முடிவடைந்திருந்தது. இன்று புகைப்படத்துடன் வருவதாகக் கூறியவன் வந்து நேரமாகியும் எதுவும் பேசவில்லை. மௌனமாகவே இருந்தான். ஹோட்டலின் உள்ளே உள்ள அமைதியிலும் பார்க்க இவனது அமைதி மிகவும் அதிகமாகவே இருந்தது. சரி என்றபடி நானே பேச்சைத் தொடக்கலாம் என்றபடி தக்க்ஷிக் என்றேன். அவன் "ஓம்" என்னும் போதே ஒரு தொலைபேசி அழைப்பும் வந்தது. இரண்டு நிமிடங்கள் தருமாறு கேட்டுவிட்டு வெளியே சென்றுவிட்டான்.

உலகில் எத்தனை வகையான மனிதர்கள் என ஒவ்வொருவரைப் பார்த்தும் தெரிந்துகொள்கிறோம். இவனும் அவ்வாறானவர்களில் ஒருவன்தான். உண்மையில் என் நண்பர்களுக்கே நன்றி சொல்லவேண்டும். அவர்களே இந்தச் சந்திப்புக்கு காரணமானவர்கள்.

அன்று விரிவுரைகள் நேரத்திற்கே முடிவடைந்ததால் என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டிருந்தேன். வெள்ளிக்கிழமை என்றபடியால் பீடத்தில் மாணவர்களின் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. ஏதும் செய்வதற்கில்லை விடுதிக்கே செல்வோம் என்று எண்ணும்போதுதான் அவர்கள் வந்தார்கள். "நாங்க போகம்பர சிறைச்சாலை பாக்கப் போறம் வாறியா" என்று கேட்க சரியென்று பேருந்தில் ஏறிச்செல்லும்போது நான்கு மணியாகிவிட்டது. ஒரு மணித்தியாலயத்தினுள் மொத்தச் சிறைக்கட்டடத்தையும் பார்க்கவேண்டும் என்ற நிலை.

சிறையின் முழுக் காட்சியையும் பார்க்கும் இடம் முன்னுக்கு உள்ள வெளி மட்டும்தான். அதிலிருந்து பார்க்கும் போது ஓடிந்துபோய் உள்ள சுவர்களில் இரத்தம் பூசப் பட்டதுபோல செங்கற்கள் காட்சி தந்தன. முழுக்கட்டடத்தையும் பார்க்கும்போது புறாக்கூடுகளில் காணப்படும் துவாரங்கள் சுவர்களில் பொருத்தப்பட்டிருப்பதுபோல இருந்தது. உள்ளே எப்படி இருக்கும் என்ற ஆவலிலும் வலது காலை எடுத்துவைத்து உள்ளே சென்ற நண்பர்களை என்னவென்று சொல்வது.

மொத்தம் மூன்று அடுக்கிலான சிறைக்கட்டடம். தரைப்பகுதித் தளத்தைத் தவிர ஏனைய இரண்டு தளங்களும் பலகைகளால் ஆக்கப்பட்டவை. ஒவ்வொரு அறையும் பலமான கதவுடனும் சிறிய யன்னலுடனும் காணப்பட்டது. அதனை யன்னல் என்று கூற முடியுமா என்று தெரியவில்லை. வீட்டிற்கு வைக்கும் பூக்கல்லாகவே நான் அதனைப் பார்த்தேன். மூச்சுமுட்டி இறந்துவிடாதபடிக்கு காற்று வந்துசெல்லவே அந்தத் துவாரம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த துவாரத்தினூடாக வெளிச்சம் கிடைக்குமா என்பது சந்தேகமே. இத்துவாரங்களே வெளியிலிருந்து பார்க்கும்போது புறாக்கூடுகளில் அமைக்கப்படும் துவாரமாகத் தென்பட்டன.

இவ்வாறாக ஒருவகை சிறை அறைகள் இருக்க இன்னொரு வகையானதும் இருந்தது. ஒரு மூலையாக தூக்கு மேடைக்கு செல்வதற்கு முன்னர் உள்ள இடத்தில் இவ்வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைகள் இருந்தன. மூன்று பக்கமும் சுவர் நாலாவது பக்கம் கதவு. துவாரம் ஏதுமில்லை. இதுதான் அமைப்பு. இங்கு வெளிச்சம் கிடைப்பதற்கோ காற்று புகுவதற்கோ சந்தர்ப்பமே இல்லை. உள்ளே நின்றால் வியர்வை சொட்டும் வெக்கை. கொஞ்சம் பயம் தரக்கூடிய இவ்வகை அறையே தண்டனைச் சிறையாம்.

இங்கு இன்னொரு வகையான சிறையும் காணப் பட்டது. இங்கு ஏனையவற்றைவிட வசதியாக தனிப்பட்ட கழிப்பறையும் அறையினுள்ளே காணப்படுகிறது, ஆனால் இவை எவ்வகை குற்றம் செய்வோருக்கு வழங்கப்படும் என்பது தெரியவில்லை.

ஒரு மூலையின் உட்புறமாக ஒரு தனியிடம் இருந்தது. அதுதான் தூக்குமேடை. சற்றே உடைந்து காணப்பட்டதால் அதன் செயற்பாடு எவ்வாறு நடைபெற்றது என்பது பற்றி அறியமுடியவில்லை. அதில் நிற்கும்போது சற்று சஞ்சலமாக உணர்ந்ததால் அதைவிட்டு வேகமாக நகர்ந்தோம்.

மேலடுக்குத் தளங்களில் காணப்படும் படிகள் தனிச்சிறப்பானவை. இவற்றுள் ஏறி இறங்க வேண்டுமாயின் நிதானமாகவே செயற்பட வேண்டும். இங்கு அவசரத்திற்கு ஏறி இறங்க முயன்றால் கீழேதான் விழவேண்டும். இவ்வா றான கட்டட முறையெல்லாம் சிறைச்சாலைகளுக்கென்றே தனியாக காணப்படும் கட்டட முறை போல.

முதல் மாடியில் பூசை அறை உள்ளது. அங்கு அன்பு, அறிவு, அமைதி என்பவற்றில் உருவாம் புத்தபெருமான் அருள்பாலித்துக்கொண்டிருக்கிறார். காற்றோட்டமானதும் வெளிச்சமானதுமான இடம், சிறையின் முன்பகுதி தெரியும் அமைவு என சிறையிலும் இறைதேடலை ஊக்குவிக்கும் முயற்சிகள் அவை. இவை அனைத்தும் அடங்கிய அக்கட் டடம் சிறந்த மரவேலைப்பாடுகளால் உருவாகியிருப்பது அவ்விடத்தை ஒரு கலைக்கூடமாகவே காண்பித்தது.

சிறையை கலைக்கூடமாக மாற்றும் மேலும் சில விடயங்களும் அங்கு உள்ளன. அவைதான் ஒவ்வொரு அறைகளிலும் காணப்படும் கவிவரிகளும் சித்திரங்களுமாகும். நாற்புறமும் அடைக்கப்பட்ட இடத்தில் தாங்கள் கழித்த காலங்களில் கைதிகள் தங்கள் எண்ணங்களையும் உணர்வு களையும் பதித்துவைத்த கல்வெட்டுகளாக அவை விளங்கு கின்றன. தங்கள் முன் இருந்த சுவர்களில் தோன்றியவற்றை எழுதி, வரைந்து தங்களைத் தாங்களே ஆறுதற்படுத்திய அவர் களது செயல்களை ரசித்தே ஆகவேண்டும் என தோன்றியது. அவ்வாறு நான் ரசித்த வரிகளில் ஒன்றுதான் தக்ஷிக் எழுதியது,

"தாய் என்பதன் அர்த்தம்
எனது உயிர்
இந்த உலகைவிடப் பெரியது
எனது அம்மா"

சற்றுநேரம் அவ்விடத்தே நின்று மீண்டும் மீண்டும் இவ்வரிகளை மீட்டிப்பார்த்தேன். தாய் என்றால் என்ன வென்று கேட்பவர்களுக்கு அவள் ஒரு பெண், என்னைப் பெற்றவள் என்றெல்லாம் சொல்பவர்களுக்கிடையில் அவள் என்னுடலை இயக்குகின்ற உயிர் என்று கூறும் அவனை என்னவென்று சொல்வது. தன் கண் முன்னால் விரிந்து கிடக்கும் இந்தப் பரந்த உலகு தாயை விடச்சிறியதே என்று அவளை உயர்த்திவிடும் அந்தப் பண்பு, குற்றவாளி என்று சிறைத்தண்டனை பெற்றாலும் மாறாத அவனது தாய்ப்பாசம், இத்தனைக்குப் பிறகும் சுவரில் கெட்ட வார்த்தைகளை எழுதிட நினைத்திடாத அந்த மனசு என்பன என்னை வெகுவாக ஈர்த்துக்கொண்டன.

அந்த அறையில் எழுதப்பெற்றிருந்த இந்த வரிக ளுடன் ஒரு தொலைபேசி இலக்கமும் எழுதப்பட்டிருந்தது. இவ்வாறான மனிதனை சிறை தன்பக்கம் உள்வாங்கிக் கொண்டதன் காரணம் அறியவே அன்று அந்த தொலைபேசி எண்ணை சேமித்துவைத்தேன். செயற்பாட்டில் இல்லாத எண்ணோ அல்லது விளையாட்டுத்தனமாக எழுதப்பட்ட எண்ணோ என்று பல சந்தேகங்கள் இருந்தன. அனைத்தும் பொய்யாகவே இன்று இரண்டாவது சந்திப்பில் வந்து நிற்கிறேன். மனிதர்களைப் பற்றி அறியும் ஆவல் என்னை யாரிடமோ எல்லாம் சேர்ப்பித்துவிடுகிறது.

தன்னைப் பற்றி கூறியவன் தன் இந்நிலைக்கு காரணமானவளைக் காட்டுவதற்கு வந்திருக்கிறான். நானும் காத்திருக்கிறேன்.

"ஐயோ.. றொம்ப காக்க வச்சிற்றனோ.. விசயம் கொஞ்சம் அவசியமானதால பேச்சு நீண்டுபோச்சு" என்றபடி வந்து கதிரையில் அமர்ந்துகொண்டான்.

"என்ன, தக்ஷிக் இண்ணைக்கு சொல்லுவிங்களா? இல்ல மௌனம் தானா"

"அதில்ல, நான் போட்டோவக்காட்டி இவதா என்ர காதலி எண்டு சொல்லத்தான் வந்தன். ஆனா இப்பதான் என்ர பிறண் கோல் பண்ணினான். அவளுக்கு நிச்சயமாகிரிச் சாம். அதுவும் பக்கத்து ஊர்லதானாம், என்ன பக்கத்துஊரு உங்க ஊருதான். அதுதான் போட்டோவ காட்டணுமா எண்டு யோசிக்கிறன்" என்றான்.

வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்த கதையாக ஆகிவிடக்கூடாது என்பதற்காக புகைப் படத்தைக் காட்டுமாறு கட்டாயப்படுத்தினேன்.

புகைப்படத்தைப் பார்க்கும்போது எங்கேயோ பார்த்த ஞாபகம் எழுந்தது. சந்தேகமின்றி அடையாளம் கண்டுகொண்டேன். அவள்தான்..... என் நண்பனின் வருங்கால மனைவி. பார்த்தவுடனே அடையாளம் கண்டு கொண்டாலும் என் நண்பனின் வாழ்க்கை முக்கியமானதால் ஏதும் பேசாமல் இருந்துவிட்டேன்.

"சரி, இப்போ நீ என்ன செய்யிறதா எண்ணம்" என்று கேட்டேன்.

"நான் வேற எதச்செய்ய, திரும்ப இதையே கதச்சு, இதுக்காக சண்ட போட்டு, பிரச்சின செஞ்சு மாட்டிக்கொள்ள நான் பழைய தக்ஷிக் இல்லதானே... அவள்ட வாழ்கைய அவள் வாழட்டும் நான் என்ர வாழக்கைய வாழ்றன்.. எல்லாம் காலம் தானே"

அவனது கதைகளுக்கு ஆமாம் சொல்லியபடியே தேநீர்க்கோப்பையைக் கையிலெடுத்தேன். ஆறிப்போயி ருந்தது... அதில்சிறிதும்சூடில்லை... சூடேற்றிக்குடிப்பதற்கு இருவருக்குமே மனமில்லை...

* * *




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-39

ச. சிறீரங்கன்





# புதுப்புது அர்த்தங்கள்

தொண்டைக் குழிக்குள் சிக்கிய முள்ளுப் போல் விழுங்கவும் முடியாமல் வெளியே எடுக்கவும் முடியாமல் அவஸ்தைப்பட்டாள் துளசி. இதை எப்படியும் வீட்டில் சொல்லியாக வேண்டும். வீட்டில் இப்போது மாப்பிள்ளை பார்க்கும் படலம் ஆரம்பித்துவிட்டது. இப்போது சொல்லா விட்டால் எல்லாம் கைமீறிப் போய்விடும். ஆனாலும் இதை எப்படி சொல்லுவது. அம்மா அப்பா இதை ஏற்றுக் கொள்வார்களா? பழைமையில் ஊறிய ஆசார சீலியான பாட்டி இதனை ஏற்றுக் கொள்வாளா என்று மொத்தமாகவே குழம்பிப் போயிருந்தாள் துளசி.அந்த நேரம் பார்த்து இனுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில் மணி அடித்தது.

"பிள்ளையாரப்பா நான் எடுக்கும் முயற்சி கைகூட வேண்டும். அதற்கு நீ தான் அருள் புரிய வேண்டும். உன் தம்பி முருகன் காதலுக்கு துணை போன நீ என் காதலுக்கும் துணை நில்லு அப்பனே" என்று மனதார வேண்டிக் கொண்டாள். பட்டதாரி ஆசிரியையான துளசி அயலூர் பாடசாலை ஒன்றில் கணித ஆசிரியையாகக் கடமையாற்றுகின்றாள். இருபத்தாறு வயதான அவள் பார்த்தவரை திரும்பிப் பார்க்க வைக்கும் ஓர் அழகி. செதுக்கி வைத்த செம்பொன் அவள். உடலில் ஏற்ற இறக்கங்கள் நெழிவு,சுழிவு எல்லாம் அங்கங்கே அம்சமாக இருந்தது. அவளின் அப்பா ஓய்வு நிலை அரச ஊழியர். அம்மாவோ இல்லத்தரசி. ஒரே ஒரு செல்ல மகள் அவள்.

அன்று பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்தவள் சாப்பிட்டு விட்டு குட்டித் தூக்கத்தில் இருந்தாள். உண்டகளை தொண்டனுக்கும் உண்டல்லவா.

"துளசி... அடி துளசியம்மா..." என்று தாய் கூப்பிட திடுக்குற்று எழுந்தாள். "என்னம்மா கொஞ்ச நேரம் என்றாலும் நித்திரை கொள்ள விடமாட்டியலே?" என்றாள் சினப்புடன் .

"அஞ்சு நிமிஷம் உன்னோட கதைக்க வேண்டும். பிறகு நித்திரையைக் கொள்ளு" என்றாள் தாய். "என்னணை அப்படி உயிர் போற அவசரம்?" கண்களைக் கசக்கியவாறு சோம்பல் முறித்தாள் துளசி.

"எல்லாம் உன்ர கலியாண விசயம் தாண்டி புள்ள". தான் எதிர்பார்த்த நேரம் கனிவதைப் புரிந்துகொண்டவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு இப்ப ஏனணை கலியாணம்?" என்று பீடிகை போட்டாள்.

"இப்ப ஏனோ?அப்ப எப்ப செய்யிறது?உன்ர வயசுப் பிள்ளைகள் எல்லாம் கையில ஒன்று வயித்தில ஒன்று என்று திரியுதுகள்"

தன் ஆதங்கத்தை வெளியிட்டாள் தாய்.

"அதுக்கு என்னையும் சுமக்கச் சொல்லுறீயே?" என்று தாயைச் சீண்டினாள் மகள்.

"ஐயோடி புள்ள அப்படிச் சொல்லாத....எத்தனை பேர் இலட்ச லட்சமாக செலவழித்தும் அந்தக் கொடுப் பினை இல்லாம தவம் கிடக்குதுகள்."

"நான் என்ன சொல்லுறன்னெண்டால்...."என்று இழுத்த மகளை

"எனக்கு நீ ஒன்றும் வகுப்பு எடுக்க வேண்டாம்" என்று தாய் தடாலடியாக சொல்ல துளசி குபீர் என்று சிரித்து விட்டாள். மகள் சிரிப்பதைப் பார்த்து தாயும் சிரித்தாள். உள்ளே பாக்கு இடித்துக் கொண்டிருந்த பாட்டியும கொடுப்புக்குள் சிரித்தாள். சிரிப்பும் ஓர் தொற்று நோய் தான். தன் கையில் வைத்திருந்த கவரில் இருந்து ஒரு படத்தை எடுத்து மகளிடம் காட்டினாள் தாய்.

"எப்படி இந்த மாப்பிள்ளை ? நல்ல பொருத்தம்" என்றவாறு மகளின் முகத்தைப் பார்த்தாள்.

"எனக்கு பிடிக்கல" என்று ஒற்றைச் சொல்லில் முடித்தாள் மகள்.

" என்னடி... அவனுக்கு என்ன குறைச்சல். ரோசா படத்தில நடிச்ச அவன் மாதிரியல்லோ இருக்கு" என்றாள் அம்மா.

"நான் சினிமாக்காரனை எல்லாம் கல்யாணம் செய்ய மாட்டேன்" என்று சீண்டினாள் மகள்.

"உன்ர விஷர்க்கதையை விடு. ஆளு சொவ்ட்வெயர் இன்ஜினியர். கை நிறையச் சம்பாதிக்கிறான்." தாய் தன் வாதத்தை தொடர்ந்தாள்.

"எணை அம்மா அழகோ தொழிலோ முக்கியமில்ல. முதல்ல நல்ல புருஷனா அவன் இருக்கணும்."

"அவன்ர முகத்தைப் பார். பால் வடியும் முகம்."

"அப்படியும் இருக்கக் கூடாது" என்றாள் மகள் விடாப்பிடியாக.

"கொப்பற்ர குசும்பு உன்னிலும் கொஞ்சம் கிடக்கு. உப்படி குறுக்க குறுக்க கதைக்காத புள்ள".

" என்னதான் சொன்னாலும் எனக்கு புடிக்கல " என்றாள் மகள் வெட்டொன்று துண்டு இரண்டாக. அதிர்ச்சியுடன் தாய் மகளைப் பார்த்தாள்.

"அப்ப உன்ர மனசுல என்ன தான் இருக்கு ?"

"நான் ஒருவரைக் காதலிக்கிறன். அவரைத்தான் கல்யாணம் செய்யப் போறேன்." என்றாள் மகள் மிக உறுதியாக.

"இதுக்குத்தான் இவ்வளவு பீடிகை போட்டனியோ?"இடிஞ்சு போய் இவள் படுத்திருந்த கட்டிலில் அமர்ந்துவிட்டாள் தாய்.

***** ***** ***** *****

ஒரு மாதிரி அப்பா அம்மாவை ஒரு வழிக்கு கொண்டு வந்துவிட்டாள் துளசி. ஆனால் பாட்டியைத் தான் என்ன செய்வதென்று புரியவில்லை. அவளையும் திருப்திப்படுத்த வேண்டுமே! பத்தாததற்கு அம்மா காட்டிய மாப்பிள்ளை பாட்டியின் சகோதரியின் வழியில் சொந்தமாம்.

பாட்டியோ இணுவிலில் பிறந்து வளர்ந்தவள். இணுவிலார் பெரிய ஆசாரசீலர்கள் ஆச்சே! அதிலும் பாட்டி அதை பன்மடங்கு கட்டிக்காப்பவள். "இலந்தை முள்ளைத் திருத்தினாலும் இணுவிலாரைத் திருத்த முடியாது" என்று வெள்ளையன் கைவிட்டு போன பரம்பரை இவர்களின் பரம்பரை. பாட்டியை சம்மதிக்க வைக்கும் பொறுப்பினை தாயிடமே ஒப்படைத்தாள். துளசி. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.பாட்டியும் பச்சைக்கொடி காட்டி விட்டாள்.

***** ***** ***** ******

சில நாட்கள் உருண்டோடின.

"உந்த மாப்பிள்ளைய எங்க புடிச்சாய்?" பாட்டியின் கேள்விக்கணைகள் அம்பு போல் பாய்ந்தன ஏமாற்றம், வெறுப்பு, இயலாமை போன்ற அனைத்துக் கலவை சேர்ந்த முலாம் பூசப்பட்ட அம்பு. துளசிக்கு அக்கேள்விக்கு பதிலளிக்க விருப்பமில்லை.

"என்னணை பாட்டி, ஆடு, மாடு பிடிக்கிற மாதிரிக் கேட்கிறாய்?"

"இல்ல... பள்ளிக் கூடமும் வீடும் என்று இருந்த நீ எப்பிடி அவனைப் பிடிச்சா என்று கேட்கிறன்?

பாட்டி விடுவதாய் தெரியவில்லை. அமுங்குப் பிடியாட்டம் நின்றாள்.

"பேஸ்புக் லவ்."

"என்ன இலவு அது?"பாட்டியின் நையாண்டி துளசியின் நெஞ்சைத் தைத்தது.

"போனுக்களாள காதலிக்கிறது பாட்டி. அந்தக் காலத்து உனக்கு இதெல்லாம் தெரியாது. சொன்னாலும் புரியாது" பாட்டிக்கு உறைக்க வேண்டும் என்று உரத்துச் சொன்னாள் துளசி.

"அதுதான் அறைக்குள் அடைஞ்சு கிடந்து போன் கதைக்கிறனியாக்கும்."

"பாட்டீ,,,,,,"என்று கத்தினாள் துளசி.

"இந்தக் காலத்தில பொம்பிளைப்பிள்ளையள் வீட்டிற்குள் அடைஞ்சு கிடப்பதே பிரச்சனை தான்""என்று முணுமுணுத்தவாறு பாக்கை வாய்க்குள் போடமுன் கசக்கி ஒருமுறை மோர்ந்து பார்த்தாள் பாட்டி.

**** **** **** ****

தை பிறக்க வழி பிறக்கும் என்பார்கள். தையும் பிறந்தது. லண்டனிலிருந்து அவளின் காதலன் கோகுலிட மிருந்து இனிப்பான செய்தியும் வந்தது.

"அம்மா உன்னைப் பொண்ணு பார்க்க வாறா"

அம்மா மட்டுமல்ல அப்பாவும் வந்திருந்தார்.

"நீ ரொம்ப அழகா இருக்கிறாய்"

என்று கட்டியணைத்து துளசியின் கன்னத்தில் மாமியார் முத்தமிட்டார். மாமனார் கொஞ்சம் அமைதியான சுபாவம். கதைப்பதற்கு சங்கடப்பட்டார். அவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து மாமியார் கதைத்துக்கொண்டார். அவர் போகும் போது மட்டும் "போட்டு வாறம்" என்று சொல்லிவிட்டு போனார்.

"என்னடி துளசி, உன்ர மாமியார் ஆம்பளையாட்டமும் மாமனார் பொம்பளையாட்டமும் மாதிரியல்லோ இருக்கு" என்று பாட்டி வாயை மெல்லத் தொடங்கினாள்.

அன்றிரவு கோகுலுடன் நிறைய நேரம் போனில் கதைத்தாள் துளசி. அவள் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தாள். அப்போது பேச்சுவாக்கில்

"என்னப்பா அம்மா வருவார் என்று சொன்னீங்கள். அப்பா வருவர் என்று சொல்லலையே"

"அப்படியா? நான் உன்னுடன் இதைப்பற்றி நேரில் கதைக்கின்றேன்" என்று அவள் கதைக்கு முற்றுப் புள்ளி வைத்தான் கோகுல்.

***** ***** ***** *****

ஓரிரு வாரங்கள் ஓடி இருக்கும். பாடசாலை முடித்து வீட்டுக்கு வந்த துளசி வீட்டிலே ஏதோ மாறுதல் இருப்பதாய் உணர்ந்தாள்.

பாட்டி இவளை பார்க்காது எங்கோ பார்த்தவாறு பாக்கு உரலை இடித்துக் கொண்டிருந்தாள். அப்பா பத்திரிகைக்குள் மூழ்கிக் கிடந்தார். படிக்கின்றாரா அல்லது பாசாங்கு செய்கின்றாரா என்று புரியவில்லை. அம்மாவோ

"பசிச்சா போட்டு சாப்பிடுவது தானே எங்களுக்கு என்ன பத்து கைகளா இருக்கு" என்று வெறுப்பை வார்த்தைகளில் உமிழ்ந்தாள் தாய். துளசிக்கு ஈயத்தைக் காய்ச்சி காதுக்குள் விட்டதைப் போல் இருந்தது.

இன்று ஏதோ வீட்டில் நடந்திருக்கு என்று மட்டும் ஊகித்தாள் துளசி. மலிஞ்சா சந்தைக்கு வரத்தானே வேண்டும் என்று தானாக சாப்பாட்டை போட்டு சாப்பிடத் தொடங்கினாள்.

சாப்பாட்டை முடித்து தன்னறைக்குச் சென்றவள் மேசையின் ஓரத்தில் வெளிநாட்டுப்பை நிறைய சாக்லேட்டுகள் இருப்பதை பார்த்து ஆச்சரியப்பட்டாள். ஆர்வம் தாளாது "யாரம்மா வீட்டை வந்தது?" என்று தன் ஆதங்கத்தை கேட்டு விட்டாள்.

"ஆங்...உன்ர மாமாவும் மாமியும்"

"அவங்கதான் கனடா போட்டாங்களே"

"அது உன்ர மாமியும் மாமாவும்"

"என்னம்மா உளறுறீங்க?"

பொறுமை இழந்தாள் துளசி.

"நான் உளரல அந்த கன்றாவிய என்னன்று சொல்ல?"

"இந்தக் கன்றாவிகளை பார்க்க முதல் நான் போய் சேர்ந்திடனும் முருகா..."

புலம்பினாள் பாட்டி.

சொல்லம்புகளை தாங்க முடியாமல் வெலவெலத்துப் போனாள் துளசி. தன் அறைக்குள் சென்று படார் என்று கதவைச் சாத்திக்கொண்டாள். உடனே கோகுலுக்கு தொலைபேசி அழைப்பினை எடுத்தாள்.

"ஹலோ சொல்லு துளசி"

"இங்கே என்ன நடக்குது.எனக்கொன்றும் புரியல!"

உஷ்ணமான அவள் மூச்சு மறுமுனையில் அவன் காதுகளை சுட்டெரித்திருக்கும்.

"எதைக் கேட்கிறாய்?"

"எங்கட வீட்டை இன்று யார் வந்து போனது?"

"ஓ அதுவா எங்க அப்பாவும் மம்மியும்"

"அப்ப அண்டைக்கு வந்து போனது"

"எங்க அம்மாவும் டாடியும்"

"என்ன பித்தலாட்டம். உங்களுக்கு எத்தனை அம்மா அப்பா?"

"ப்ளீஸ் அவசரப்படாத துளசி".

"எப்பவோ நான் அவசரப்பட்டுட்டன்" என்று அர்த்தப்பட அழுத்திக் கூறினாள். அவளின் சொல்லம்புகளை தாங்க முடியாமல் துவண்டு போனான் கோகுல்.

"எங்க அம்மாக்கும் அப்பாக்கும் ஒத்து வரல. இருவரும் டிவோர்ஸ் எடுத்துட்டாங்க. ஆனா அவங்க தங்களுக்கு இன்னொரு துணையையும் தேடிக் கொண்டாங்க... மறுமணம் செய்யாமலே சேர்ந்து வாழ்றாங்க."

*"I mean they are living together."*

"நல்ல அம்மா அப்பா. நல்ல குடும்பம். நீங்க நல்லா வருவீங்க" வெறுப்பை வார்த்தைகளில் உமிழ்ந்தாள். கைப்பேசியின் இணைப்பை துண்டித்தாள். வாய்க்குள் துணி ஒன்றை அடைந்தவாறு ஊமையாய் அழுதாள் துளசி. கோகுலிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்து கொண்டே இருந்தது. அன்று அவள் தொலைபேசி தொல்லை தரும் பேசியாக மாறியது. இறுதியில் அதனை ஓவ் செய்து வைத்தாள். ஆனால் அவளின் அழுகை தொடர்ந்தது. மௌனமாக அழுதாள். அன்றைய நீளமான கரிய இரவு அவளின் அழுகையில் கரைந்து போனது.

நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாக உருண்டோடின. காலம் அது மனிதனில் எவ்வளவோ மாற்றங்களை ஏற்படுத்திச் செல்கின்றது. புதிய புதிய எண்ணங்களை விதைத்து செல்கின்றது. புதிய கலாசாரங்களை பரப்புகின்றது. அதற்கு புதிய அர்த்தங்களை கற்பிக்கின்றது நேற்று சரியானவை இன்று பிழையாகவும் இன்று பிழையானவை நாளை சரியாகவும் புதுப்புது அர்த்தங்களை கற்பித்து செல்கின்றது. மனிதன் கால ஓட்டத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்கின்றான். மாற முடியாதவன் வாழ்க்கையில் தோற்றுப் போகின்றான். காலம் அது மனதின் காயத்துக்கு ஒரு அருமருந்து. துளசியின் மனக் காயமும் சற்று ஆறி இருந்தது. இவ்வளவு காலமும் மனதில் தோன்றிய வாதப் பிரதிவாதங்களுக்கு தீர்ப்பு வழங்குவது போல் அவளது கைப்பேசியும் இன்று உயிர்ப் புற்றது. தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்த துளசி கைப்பேசியை எடுத்து கோகுலுக்கு அழைப்பை ஏற்படுத்தினாள்.

* * *




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Story-40

- Jeevaretnam Kennedy



# Awaiting



*While I was looking at the roof of mine, it collapsed. The shelling had started three days before. Terrible shelling! One of the shells had fallen on my roof, which caused heavy damage. I had sensed a terrible shake, and the entire ceiling had collapsed.*

*Still, I I remember when all the family members – an old couple, husband and wife, and three children – came inside the uncompleted "me" and finalized the roofing. The husband told them to have asbestos sheets for the roof. Still, the wife protested. There is a talk that asbestos causes cancer and lung problems, so let's have concrete" Shee gave an alternative suggestion as well. The husband's father, one in the old couple, quarried Iss the foundation strong enough to bear the weight of the concrete?" The wife immediately replied, "Yes, Mama, we plan to build a three-storied building and laid the foundation on that basis." For that, the husband's mother, the other one in the old couple, said, "Son, concrete is too hot, so we'll have clay tiles." The son replied immediately; It's tough to remove cobwebs and dust deposited." For that, the old lady said, "Then we'll have clay tiles and have them under the ceiling." The youngest immediately raised his doubt; "then Amma! Are we not going to build the second floor now? You already promised that the ground floor would be for the elder sister, the first floor for the younger sister, and the second floor for me. Then why are you now talking about roofing?" He was only four. His ten-year-old sister immediately shut his mouth and said: "Thumby, father and mother will build the second floor for you later. Now, this is for you and our two-year-old younger sister." Her worries were within herself. "Two odd years have passed, and it is not completed," she said. Likewise, with one thousand odd clay tiles, I was crowned with a fine roof with under ceilings. I was so pleased when I had the roofs for me. That roof itself had collapsed by the shelling.*

*All my walls were damaged, and nearly the whole first floor fell and collapsed. Seven shells fell on me during the last night's shelling, and mostly all the walls had fallen. It was not paining me, but I felt a kind of heaviness in my heart. After the people left me, the three twitters, a couple of squirrels, and four couples of pigeons had also died on the last night's shelling. "Who will come and take these bodies?" After five months, my roof collapsed, and the Twitter family came to me for shelter. I came to understand from the armed groups who move around me that in the part of the village, many bodies are lying – male, female, and children – for more than forty hours. I am apprehensive: Who will take the bodies of the twitters, squirrels, and pigeons since there is no one to take charge of the human bodies?"*

*Still, I I could remember when the husband, wife and children came to see me while I was on the verge of building*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*the first floor. The elder daughter fought because she needed this first floor, and the son was adamant that this first floor was for him. The parents finalized that the ground floor was for the elder sister and the first floor was for the younger sister. The son angrily asked, describing his four years of experience. Then, where are you going to keep me? Are you still going to keep me in a rented house?' His elder sister wanted to pull his legs and said, "No, Thamby! Now you live with our grandparents, and after your marriage, you go to your new wife's home and live there forever!' He was still angry, and the parents settled that the second floor would be for him. Then, the husband and wife were confused about the colour of the paint for the first floor and decided to use light green paint. With three rooms and two washrooms – a wide eight hundred and fifty square feet floor area –the first floor was lovely. Once the fittings and the lights had been fixed, everyone who visited was overwhelmed, and I was so happy to hear them. Even that entire first floor had now collapsed.*

*Here! The ground floor was damaged during the multi-barrel shelling. Thirteen shells had fallen on me. The people with weapons nearby said that more shells had fallen on me while I was unconscious after the shelling. The lizards, spiders, and the newly built termite were all dead on the first shell fall. After three months, the owners left me, and the lizards came to stay here. When the lizards came, the already living spiders felt ashamed and feared. They were the only species living alone without any interruption. Now, there are some newcomers, the newly colonized lizards, who are oversized and try to rule and eat them. After fighting, they shrunk themselves with the colonized majority lizard. The termites were late arrivals. The spiders had a new headache in the form of termites, which were considerable in the majority. These termites had encroached on the little land the spiders lived on.*

*"The day when the upper concrete slab of this floor was laid, which is still green in my mind." Suddenly, timber slabs, wooden posts, and nails came in a lorry. After two days, four carpenters came with handsaws, hammers, etc. They started poling the long wooden posts and filling the upper floor with the long timber slabs. After that, the older girl and the boy ran on the smooth floor; I still felt happy when they ran on me. I was so elated by the parents' happiness when their children walked on the chestshest. Then, the masons came and did something with iron bars and winding wires, and after four days, some machines landed.*

*Only then did I come to know that those machines were concrete-making machines. Fifteen masons and five drivers, altogether twenty people, went on that day. The landlord, his wife, and the elder girl came to see the sight. Since cement dust was an allergy to the second boy and the third girl, they did not come into sight. Aha! The work started at 6:30 in the morning and went on till 8:30. The dhal curry that the landlady had prepared and bread was given to all twenty people for breakfast, and the landlord, his wife, and the daughter also had breakfast. Then, the work continued till two thirty in the afternoon, and I completed my upper floor. After some confusion, biriyani parcels were distributed to all twenty people. The landlord was angry that someone had taken his parcel too.*

*After the day, the concrete slabs were done, and every evening, the landlord, landlady, and the children came to see me and watered me for about one month. They gossiped and left me alone late in the evening. After twenty-five days, the carpenters removed the wooden planks and the poles. Though I felt the heaviness of the heavy concrete, I accepted it as parents take the heaviness of their children, even though they were grown up. Oh! Even the concrete slabs were damaged due to the multi-barreled shelling. I felt as if my heart was broken. Since the only existing roof was broken, where would the dogs, goats, and even the bulls and cows that came for shelter on me?*

*The family members who were with me whilst I was built had then left me. I expected they would come today or tomorrow, clean bushes, chase the lizards, frogs, and snakes, and live with me again. Four and a half years, they had passed. My four-and-a-half-year dream was also broken when the final concrete upper slab was broken. I believe the eldest girl would now be fifteen; the son would be about nine, and the little girl might be six odd years old. Oh God! I had been expecting them as the grandparents expect their grandchildren! Did the landlord and the lady get their grey hairs, or were they still black and had other children, too? When the second floor of mine collapsed, the armed people came here in the day and night who spoke Sinhala and Tamil and said that the owners had left the place and might be in some other city or abroad. They left when the war was in its peak.*

*"Oh! Even the ground floor is being attacked by the shells. That was the eighth shell." That was a great shock, as I had been awaiting "my people." A shell had fallen on the last anthill. That was also shattered. When the shelling started, snakes and the lizards had left me, and since the snakes had left, the frogs were moving freely, and the termites were good food for the frogs. The frogs would also starve since the termites had left after the shelling. Even they, too, would leave me. "Am I pity? Or are the white ants and the frogs who were with me till the last moment pity? Or are we all pity?"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*After the foundation was completed, the walls were erected. You would see how the landlord and his family were happy while the walls were finished. The oldest girl stroked on me. The small boy kept his cheeks on the wall and enjoyed the chillness of it. The landlord and the landlady wrote the accounts, and I enjoyed watching them. Then, the third girl was not born. The house consisted of two rooms, one kitchen, one bathroom, and a large hall which covered nine hundred square feet on the ground floor. The landlady wanted to have a swing in the hall. She asked her husband, "Appa, we want to have a swing in the hall. Where shall we place it? In the middle or on the side?" He replied: "Why? I will put it outside the house." She refused and said: "No, Appa. I want one in the hall and love to play on it." The daughter said, "Appa, Amma also wants to sleep on the swing." Finally, they decided to have a swing in the hall. After a lengthy discussion, they decided to have light-red paint on the ground floor. They, too, discussed where to place whose photos after the completion of the house. The elder daughter suggested they hang their family photographer and agreed to her suggestion. The third girl was six months old when they had a housewarming ceremony. "I have so many such memories, and if they all are damaged by shelling, don't my heart break?"*

*"Today, I have been waiting for them for the past one and a half years only with the last existing foundation. Even shells and bullets fall on me and make me wounded. For the past one-and-a-half years, one – goats, bulls, cows, even dogs – does not come near me. Do they think that they have come to a place where people do not even touch? Snicks and frogs that come sometimes are the only living things that come near me. They, too, come for a while and leave me. There is no permanent one that stays on me now."*

*I can still remember the day the foundation was laid. It was the day I was conceived. Two masons came and measured with thread and dug in a place to lay the foundation stone in the cleared land. The husband, wife, children, and the old couple came in the morning and made Pongal. A catholic priest came and prayed during the auspicious time at 7.30 in the morning. Then they all put tampons and nNavathaniyamin in the hole, and the elder daughter laid the first foundation stone. It was already decided that the elder daughter should lay the first foundation stone since she was the one to live in the house permanently. Then, all others laid nine foundation stones and began the foundation construction. I was conceived like this.*

*Then, two masons dug the entire foundation and completed the whole foundation within two weeks, nine hundred square feet. Then, I was standing alone for one-and-a-half years. I was not standing as I am now with the shrubs and bushes because everyone expected that I would be completed soon. Whenever they came to see me, I understood that they did not have sufficient money to complete me. The elder daughter asked with exhaustion: "When will you complete the house, Appa?" It ran like this for about two summers and two winters, and suddenly, building materials had been unloaded, and I was growing slowly. Within six months, I had become a complete home. Then, the family came to dwell in me.*

*One day, the first firing sound was heard while they were watching TV. Then, the firing grew into shelling and ended in multi-barrel bombing. One of those days, the landlady told her husband: "Appa, I think the problem has started. They are killing innocent people too. Our neighbouring aunt's son and the opposite house sister's husband were killed. I am afraid to keep the children here. Our daughter said that a shell had fallen near her school. What shall we do now, Appa?" In response, her husband, the landlord, said, "I, too, think of this darling. Shall we go and live somewhere out for some time?" I was taken aback when I heard this. However, they waited for another three months. Suddenly, one day, they packed everything for three days and sent them in a lorry. They told the people who came to see them off that they would stay outside for "some days."*

*When they said "some days," I also believed that because that was their habit. Sometimes, they locked my doors and went out and came back after a month or so. I thought that "some days" would be a week or two. "Some days" had passed four and a half years. It was not sad had they left abroad, as the gunmen who came here said.*

*Today, they may live with a fifteen-year-old daughter, a six-and-a-half-year-old younger son, and a five-year-old youngest daughter outside or abroad. They may have new children, too. I do not know whether the old couple is still living. I am waiting for them as if the great-grandparents are waiting for their great-grandchildren. One day, the war would end. They would come here one day and cry when they saw me. Then, I believe, they would re-build me. A maiden would never become a maiden again. Still, I started as the foundation and became a foundation again, and I would become a home again. I would become a home again and a home to them constantly. They all live with their grandchildren in me. My expectations would never end in vain. I am waiting for them. The war would end in one day.*

❋ ❋ ❋




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Story-41

- M. Thayalan





# REALISATION

*My son's name is Dinesh, and he is 31 years old. He is my eldest and has completed his engineering studies. Dinesh is now working as an engineer at a company.*

*Many of my friends have proposed potential matches for him, but he has never responded. These proposals have been coming in since he was 25. My wife and I worry about him a lot regarding his marriage.*

*My wife mentioned that Dinesh might be dating an English girl from a different cultural background. She expressed that we would be happy if he were to marry a Tamil girl. However, Dinesh is not interested in marrying a Tamil girl. He has described the opinion that Tamil girls are not open-minded; they avoid face-to-face conversations, always hide something, and live with secrets. He believes they tend to cry for everything. These behavioural differences have caused tension in our family as we try to balance our traditional values with the changing world.*

*We both, as parents, brought him up well and taught him the essential values of life. When he was small, he would come to temples regularly with us. We always tell him about our Tamil culture and lifestyle.*

*He never spoke Tamil with us at home, which worried us. I took him to Tamil school to learn the language in his early days, but he didn't want to. Dinesh always felt that there was no need to learn Tamil because it's a language that's only necessary in specific places, particularly in his parents' native area. We tried to change his views and explained the importance of the language, but he never understood or changed his mind. Whenever we said something, he wouldn't accept it.*

*As the days pass, Dinesh is growing older. One day, as I sat reading the newspaper, my mind was filled with thoughts of my son. The previous*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*day, my wife had mentioned his upcoming wedding in hushed tones, leaving me with a lingering sense of uncertainty. Despite broaching the topic with my son several times before, I had yet to receive a clear answer from him regarding his plans for marriage. However, when I least expected it, he appeared before me and said, "Dad, I want to talk to you."*

*I stopped, put aside the newspaper I was reading, and asked him to sit in front of me.*

*I know today he will say something we don't like. So, I looked at him, waiting for him to tell me something. He told me,*

*"Dad, I love Katherine, who is working with me." He usually talks in English with us at home. When he started, my wife also joined us. We weren't shocked when he spoke of his love because we had expected this.*

*Katherine is not a Hindu, and she won't be following our Tamil culture. I responded to him and said,*

*"Dinesh, this will not be a good decision for our family!". Dinesh exclaimed,*

*"Dad, I don't care what you have to say, but I love her very much. I want to marry her!".*

*His reply was insulting. He never spoke to me like this; I was hurt and disappointed by it. I was trying my best not to get very angry with him, but I was annoyed and infuriated when I said to him, my voice trembling with a mix of emotions,*

*"So you have decided alone, and just let us know."*

*He didn't react to my question. So, I continued in the same mood and said to him,*

*"Dinesh, I am not against love marriage, but the problem is Katherine."*

*"Why, Dad, what is the problem in marrying her?"*

*"She is very nice and will look after me well."*

*" Dinesh, a wedding is not only happening between two people; It is happening between two families," I said*

*He raised his voice a bit more. After this, I decided not to talk about anything. He spoke with me without any hesitation. In our culture, we won't talk with elders like the way he told us. In those days, I never dared to speak like this with my dad unnecessarily. I never said a single word against my father. "Dad, somebody must have given you the wrong information about the English girls you,"*

*Dinesh told me. So, I replied to him and said,*

*"Nobody said anything to me, Dinesh. It's just that Katherine doesn't know anything about our Tamil culture, and so how can I accept her as my daughter-in-law?"*

*'Learning our culture is not that hard, Dad. Culture is only part of our lifestyle. We can always teach her, and she will learn about it quickly,' Dinesh reassured me. His words resonated with me, planting a seed of hope in my heart.*

*After I said that, he left the place without telling me. It seemed very rude and shocked me. I was confused and began to think about his roots. It didn't help that my wife agreed with Dinesh's argument. I was torn between my love for my son and my loyalty to our cultural traditions, unsure of how to navigate this new territory.*

*I told my wife I was going out for a while, and she asked me to buy fish from the Tamil shop. On my way to the shop, I thought about the arguments we've all been having at home.*

*What is the Tamil culture? Unfortunately, I don't have a solid answer for this.*

*Is it wearing a saree, talking in Tamil, or living as a Hindu? I am confused by it. "Uncle...uncle!" someone called me, and I looked back. Then, my friend's son came towards me with his wife, who happened to be an English girl. She wore a saree, and that surprised me.*

*"Where are you going, Mahesh?" I asked*

*"Uncle, today is Friday. We are going to the temple."*

*Mahesh continued speaking to me and said, "What happened, uncle?",*

*"Are you struggling to accept that Mary is coming to our Hindu temple? Nowadays, these are very normal uncles. First, we go to Murugan temple and then to the church."*

*I couldn't answer back to him with a single word against him. I wished them both well, and the girl suddenly greeted me goodbye in Tamil,*

*"OK, uncle. See you later." I was taken aback by this, and it definitely put me in a different dilemma.*

*After speaking to Mahesh, I walked towards my friend Nagenthiran's house. Nagenthiran's son also got married to an English girl, so I only met him for a few months. I rang the doorbell, and his daughter-in-law opened the door. She invited me inside and greeted me in English. The way she called me to come inside surprised me a lot.*

*"Take a seat, Uncle; he will be down soon."*

*Her welcome was hot and kind, which made me happy. I didn't expect this. She lived like a Tamil girl even though she was an English girl. Slowly, all my wrong opinions and assumptions about an English girl started to change within me. After seeing these incidents, my view of them has changed much more positively.*

*My son said, "Culture is just part of our lifestyle." I have learned a lot. Yes, I must change myself with the new society and go along with the time, but not backward. I couldn't wait any longer for my friend to come down, so I got up and started walking back to my house to see Dinesh as fast as possible.*

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Story-42

Rajes Bala



# GOING TO PLANET MARS

*I am scared. I wish I could talk to someone to remove the fear. From me.*

*I have to decide what I want to do.*

*I wish I could see my friend Melanie now. She has a vision of the future, and I would like to see her 'curing' smile.*

*She is one of those people who has the wonderful personality to put one in an easy setting and make you feel good. She sees things differently from most of us. She has a big heart, lots of love, and kindness to help others. She is a very rare creature with a fascinating personality. She is not much taller than me, but at times, she seems taller when she talks about things that are not easy for me to comprehend, such as the realm of Science, etc.*

*While I was pottering around in the garden (not a designer's one like some of my friends' gardens), I thought about Melanie. My mind was a bit relaxed when I was thinking about her. The red roses danced seductively to the gentle breeze as they wanted me to touch them. The birds were on the trees and talking to themselves (about me?). It's so beautiful to be with the wonderful nature around us.*

*I watered my jasmine. I like the fragrance of jasmine. That smell brings back old memories from back home: sitting under the moonlight and listening to the flute music playing somewhere far away in the village.*


*No coronavirus or any virus, then. We small kids sometimes get cold if we get soaked in the monsoon rain. Mother would give us boiled coriander water with ginger and add pure forest honey a few times. That's all. We get better. We continued our activities, such as playing around the river, walking through the overgrown bushes to pick up berries, and stealing the next-door old man's mangoes for fun, which annoyed him and made him chase us.*

*'You all are growing up. The germs wouldn't like to hurt you, and God wouldn't let germs get the better of you.' That's the statement from my 'very knowledgeable' grandma.*

*But now?*

*The coronavirus COVID-19 is attacking us all. 'Old people may die a lot, but others may get infected, too,' the scientists say.*

*'We are going to face the second wave of COVID-19. It is inevitable. 'This was the news everywhere in the morning. That's why I am so scared at the moment.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Last December, the Covid-19 infection was identified in Wuhan province in China. Since then, no place on this beautiful planet has been able to escape from the most devastating Virus attack in human history. How are we going to escape?*

*'The Virus is mutating itself. They found that after testing patients in various areas of the Western world, the Virus from Wuhan differs from the one in Italy...' The scientists' statements on Corona are as confusing as the politicians' words. The situation is frightening, as we are going to face doom day.*

*It's everywhere, hot or cold weather. Do not stop this Virus from doing the last dance of destruction, as the Hindu God Shiva did the cosmic dance, destroying the world in order to create another one.*

*I do not want to just die with Covid-19. As I read it somewhere,' They will isolate you in the hospital. Once infected with the Virus, it will get into your central nervous system and the air passages. Then your five great vital organs, the brain, lungs, heart, liver and kidneys, will lose their ability to keep you alive. No family member will be allowed to see you die alone- that's like a small animal dying alone after attack by the strong one in the jungle'. I am one of the vulnerable people to be affected by the covid-19.*

*I am old, my body cells are not more muscular any more, and I can die any time; even when I am in my sleep, my breathing can stop, and my body will be as 'body' as a piece of wood. A frightening prospect.*

*The telephone rang.*

*My God, it's Melanie. I was thinking about her most of the time today.*

*'I have not seen or talked to her since the first week in March 2020. She was busy, she said, as her granddaughter Maya came to stay with her. Her Son was away abroad and did a lot of work for a company in London with branches in various other countries. Melanie's Son, who lives with a lovely little family, lives in south England. Maya had to stay with Melanie in London for a while as her daughter-in-law was looking after her mother, who was not well and in hospital. Melanie was so happy that Maya was staying with her in London. Melanie does not often see her Son as he works on some 'project' abroad.*

*Melanie was kind enough to take me to her Son's house once. It was a tranquil place surrounded by greenery, dense bushes, and the Sea on one side—more like the village I was growing up in. I wish I could have a place like that now to sit and write.*

*'This is a wonderful place for people like us,' I said while I looked at the Sea. The waves were gently kissing the soft sand on the shore. The air was cool and blended with the area's country aroma of multiple wildflowers.*

*Her daughter-in-law was a very kind young woman. She brought some snacks and tea for us and left two oldies to discuss the 'world's issues. Maya was playing around us.*

*Melanie fixed her eyes on the beautiful blue sky and said, 'We always love this place,' I listened, and I felt she wanted to tell me something more.*

*'My son is often away,' she said softly. I could tell from her tone that she was sad that she couldn't see him often.*

*I never asked her what the 'project' was about. She never elaborated on her personal matters, such as her divorce. Maya came near us and said,*

*'My dad is working on a project to go to Mars,' Melanie's five-year-old granddaughter Maya said in a jolly tone. I noticed that she loves to talk. A wide smile spread on her beautiful angelic face. I felt a bit like when I was a little 'talkative'.*

*I smiled at her. 'I am an angel from the sky', she jumped up and down happily, her golden blond hair playing with air and covering her face partially.*

*Melanie and I looked at each other; I asked Maya,' Oh, are we all coming from the 'sky?'*

*Melanie smiled at her and said, 'Yes, yes, but that's a very long time ago,' Maya ran towards her grandma, hugged her grandmother tightly and kissed her cheeks tenderly.*

*'No, don't tell me you believe in 'extraterrestrials,' I joked with Melanie, thinking my boys were madly in love with the Star Trek program on T.V. when they were little.*

*'Well, you never know why these scientists, researchers, and many other people are doing a hell of a job to find out about the moon and Mars and so on, are looking for connections to the past of mankind.' She asked me a question while she poured the tea for me, shaking her head as she asked the question to herself, too.*

*Why, indeed, why is the speedy space race, I thought.*

*'The space race has been going on since the 1960s, with about 45 missions to Mars. America, Russia, the E.U., then India in 2014, and now the United Arab Emirates went there on 20.07.2020. And they all wanted to do or take or control something in the Mars' She continues*

*'We have many problems on this planet; why are these people spending so much money and time on these missions?' I am getting interested in Meanie's explanation. Little Maya seems fascinated by how much information her grandmother has on Mars.*

*'How long for us to go there, grandma?' Maya's eyes were sparkling. She looked at the sky and asked her grandma in an excited tone, as she wanted to start planning her journey to Mars immediately.*

*'Oh my darling, it will take over six months, in a vast Space ship with everything in it, to look after people going there,' Melanie thought, giving information to the*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*child with a wild imagination.*

*I went to Australia directly from London Heathrow Airport, which took me 24 hours or more. I have decided I never going to be in the flight for twenty four hours looking through the window of passing clouds.*

*I am not into a long flight or an adventurous person, I thought.*

*'No, that is not my cup of tea. Thank you, I giggled nervously. Maya joined me in the giggle as little girls do when they are in 'grown-up' company.'*

*I leant toward Melanie, looked into her blue eyes, and asked her,' By the way, why are these experts, such as scientists, aeronautic engineers, and cosmonauts, helping the rich? As they fund these space projects, they are running in a hurry to another planet away from our beautiful planet, Earth. I emphasized the word 'beautiful' nicely.*

*She sighed and started tapping on the table with her index finger as she made a strong point: 'This planet is in trouble. We are not going to run out of enough water to drink.' Melanie's voice reflected the pain in her heart about the forthcoming water shortages for humans. I did not argue. When I was away recently, I noticed the struggle of the poor to buy drinking water.*

*Melanie noticed my silence. She continued,' Thousands of people are going to die as there will not be enough fields to grow food crops, not a proper place to live as a few men are destroying the beautiful planets for their greed and self-satisfaction'. Melanie said this as if she were reading my mind.*

*She continues,' Not everyone can join the trip to Mars; when people are faced with problems, most will struggle to survive, a fair number will die of hunger and poverty, and some will kill themselves to get away from a horrible world' Melanie was angry about rich people and explained to me about the rich who are destroying the world for their individual families benefits. I nearly cried when she talked about the poor.*

*'Why do you think that the rich are interested in Mars?' This is my childish(!) question.*

*'Well, the planet may not have the same atmosphere as the Earth, but it is supposed to have other components such as oxygen and rich minerals other items for survival, so Mars is a significant planet, and many people think that the next step for mankind from the earth'.*

*Next stop? Next stop from the Earth? Just like that?*

*When I return from this village to London, I will visit my library to read more about Mars.*

*I stared at her blankly, but I knew that she knew I had millions of questions in my mind.*

*'Why are you looking at me as if I am mad?' she asked, her beautiful smile flashing.*

*I started to say,' Well, there is no water for any life to strive..' I did not finish,*

*She said, 'Yes, there is a little water on the surface but plenty underneath. With modern technology from the Earth, getting water for consumers' use is not a huge problem.'*

*I thought she was crossed that the rich people would somehow leave this planet to seek a better life on Mars.*

*'Living in a tiny place like this made people think differently than the busy Londoners. We have more time to read and see nature and question its complexity; my Son Robert was like Maya when he was a little boy; he always asked many questions about the Sea, the waves, trees, leaves, flowers, and animals. Fields, mostly about sky and stars.*

*She stopped for a few seconds and said,' Maybe that is the reason my Son Robert got interested in space science.' She got up suddenly, as she did not want to continue the subject any more.*

*After a few months of meeting her in Corona, the world was downright chaotic. I went to Sri Lanka to be with my sister in the second week of March 2020, as my kids wanted me to be away from London. The Virus infection was increasing then, and there were a few cases in Sri Lanka.*

*But I was stranded in Colombo, the capital city, as they put a curfew on me due to the spread of Corona. While I was in Colombo, when I phoned my other friends in London, they told me about the worrying situation there. England is losing more people to Corona than any other country in the world.I was so shocked to hear the news; I was worried about friends and family in London. I was alone with strangers in the hotel. Not a single familial face at all. Practically empty everywhere. I could go to the rooftop and see and feel the world's silence and emptiness. All humans are indoors except for animals, birds, and bees. I was in a breathtakingly beautiful surroundings. I could see the sunrise over the green field and the lovely sunset in the Sea. Seeing those trees from the rooftop as I talk to them in close contact. Seeing the pattern of the Marcosa leaves makes me feel the mighty design of nature.*

*The tropical trees, flowers, fruits, singing, talking, and birds all seem magical. During the full moon in April, I was looking at the extraordinary sight of the red moon and the bright stars of Orion, Cyrus and so on. Oh god, you are great I mumbled. Nature is mighty. It has its own rhythm to bring the world back from any disaster. Then I thought about Melanie a lot when I was alone. Maybe the 'red moon' and the stars Orion unconsciously think about 'Red Planet Mars' and Melanie and Maya.*

*Melanie and I talked via video call the next day, but she did not seem 'engaged' in the conversation. Has she lost anything during the coronavirus crisis? Her old in-law was in the hospital; what had happened to her?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*I did not ask her. When I asked about the situation in London, not much as she said about the Corona. She said she is 'busy' with her granddaughter, who is stranded in London with her due to lockdown.*

*Now I am back in London, and her call made me happy. I wanted to ask her many questions about her lockdown experience with her family, so I ran and answered the phone.*

*How are you, my dear?' Her tone is sad but very loving and concerned.*

*Me;' I am fine, thank you. There is a pause from her side.*

*She;' What are you going to do?'*

*What am I going to do? I wanted to say,' I am not doing much'. But her question was, 'What are you going to do'*

*me:' Well, I will continue to do what I am doing now: read, write, go for a walk and so on.'*

*She said,' And die,' her tone so solid and definite. She did not say,' Die with coronavirus.'*

*I paused a bit but started to talk.*

*She: My daughter-in-law has died.. her mother got infected in hospital with Corona and my ..'*

*She stopped; I felt numb; what could I say to comfort my friend who had lost her young daughter-in-law to the horrible Virus?*

*Me: Oh no, I am so sorry,' I repeated that line a few times; I was devastated, upset and frightened when I thought about her question about dying; she continued.*
*She: Are you just going to die?*

*Me: What? Yes, we all die one day, but that's not good to hear from your friend or family at a time like this.'*
*(There was a gap of half a minute or so, then,*
*Melanie:' Maya and I are going away. Her voice sounds certain, and it ends everything.*
*Me:' To the South?' As to Son's place, where she said she loved it so much?*

*There is no answer. Melanie was quiet for thirty seconds or so and said,*
*Melanie;' Far away from everything and everyone."*
*me: 'What?'*
*Melanie.' The Virus is mutating, which means no vaccine can protect us, and no scientists can tell the exact truth about this hazardous Virus.'*
*'Me:' What are you saying'*
*Melanie:' Think very carefully. We cannot live here anymore; we must isolate ourselves from this uncertain world.'*
*Me: What on Earth are you talking about?' I am getting cross with Melanie now.*
*Melanie: 'My dearest, we have to do it; far from this confusing world, we three women will take a new path and go far, forget the past, and see the light on the other side. She sounds like she has already found the 'way and place 'to escape this world.*

*What? Far from everything? Is she going to kill herself and Maya? Does the isolation from Covid-19 make her lose her mind? Or did the death of their daughter-in-law make her take drastic action?*
*Me:(panicking)' Oh no, please, Melanie, don't do that.' (I am crying) running around in the garden, breathing heavily.*
*Melanie:' You can come too; life sometimes takes sudden turns, you know?' (her voice is calm, as she thought through a perfect plan, and she will be glad if I join her)*
*What? What is my excellent, beautiful Melanie, who has so much wisdom and knowledge as King me, to do?*

*Going far away from this place Where? Kill ourselves somewhere alone?*

*I am not going to join them or kill myself; I do not like people who are going to 'Dignitas', the place in Switzerland, to finish themself in front of their families while they are fit and healthy.*
*Me;' No, no, Melanie, I am not going to do a Suicide pack with you (I shouted at her, still crying)*
*She said, 'What? Oh no, I am not going, Dignitas, you idiot. We are going to Mars. I thought you liked adventures in life. It will be fun to join the crew, who are from various backgrounds. I recommend you as you have medical knowledge and are interested in Aliens and other worlds away from us. 'She explained a lot in a minute! WE ARE GOING TO PLANET MARS!*

*I was angry; I yelled at her and asked,' What about your talk and tears about the poor on this planet? Oh, I see you are joining your Son's secret project, aren't you?' I wanted to scream at her, BUT,*
*Suddenly, there is a loud noise. A vehicle is starting to move fast. Oh my god, isn't the spaceship taking over with Melanie and Maya?*

*I woke up sweating and with a rapid pulse because of the confusing bad dream about going to Mars with Melanie and Maya.*

*I could hear the car moving outside my house. The man next door usually gets ready for work by four o'clock.*

*He may be one of the poor who works on the front lines to help others—people like him and many billions of others. He may catch Corona and die, but he will never be able to go to Mars.*

* * *


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை மஞ்சரி அனைத்துலக வாசகர் வட்டம்

சிறுகதை மஞ்சரி அனைத்துலக வாசகர் வட்டமானது எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தினால் கடந்த ஆண்டு (2023 ஆவணி) வட்சப் குழுவாக ஆரம்பிக்கப்பட்டது. திரு. கனக.தீபகாந்தன் ஒருங்கிணைப்பில் சிறுகதை மஞ்சரி வாசகர்கள்,சிறுகதை மஞ்சரியில் சிறுகதைகளை எழுதிய எழுத்தும் எழுத்தாளர்கள் என உலகில் பரந்து வாழும் இலக்கிய ஆர்வலர்களை ஒன்றிணைத்து மாதம் இருதடவைகள் நிகழ்நிலை மூலம் (Zoom) சிறுகதைகளுக்கான விமர்சன களம் மற்றும் பகிர்வு நடைபெற்று வருகிறது.

முதலாவது நேரடி ஒன்றுகூடலானது 09.09.2023 இல் எழுத்தாளர் கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. திருகோணமலையிலுள்ள சிறுகதை மஞ்சரி வாசகர்களும்,எழுத்தாளர்களும் கலந்துகொண்டு சிறுகதை மஞ்சரி சிறுகதைகள் பற்றிய வாசிப்பின் பகிர்வினையும் விமர்சனத்தையும் பகிர்ந்துகொண்டனர். அதன் பின்னர் நிகழ்நிலை மூலம் இலங்கை மற்றும் புலம்பெயர் தேசங்களில் வாழும் சிறுகதை மஞ்சரி வாசகர்கள், எழுத்தாளர்கள் இணைந்துகொண்ட விமர்சனகளமாக இற்றைவரை 10 ஒன்றுகூடல்கள் நடைபெற்றன. இவ்வாறான ஒன்றுகூடல் மூலம் சிறுகதைகளின் வாசிப்பினூடு பல்வேறுபட்ட கோணங்களில் வெளிப்படும் கருத்துக்களை அறிய முடிவது சிறப்பம்சமாகும். அத்துடன் சிறந்த விமர்சகர்களை நாம் பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது..

ஒவ்வொரு முறையும் இரண்டு சிறுகதைகள் தெரிவுசெய்யப்பட்டு அச்சிறுகதைகளை இரு வாசகர்கள் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்வார்கள். மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் சிறுகதைகள் விமர்சிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

சிறுகதை மஞ்சரி பிரதம ஆசிரியர் கரவை மு.தயாளன் சிறுகதையாளர்கள் பற்றிய அறிமுகம், சிறுகதை தெரிவின் மீது முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு திருப்திகரமாக பதிலுரைப்பார். விமர்சகர்கள் உரையாடுவதற்கு அளிக்கப்படும் நிமிடத்தில் இடையில் யாரும் எவ்வித கலந்துரையாடலுக்காயும் இடையில் உரையாட மாட்டார்கள்.

விமர்சனங்கள் முடிவுற்றபின் சிறுகதை மஞ்சரி வாசகர் குழுவில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் கருத்தை பரிமாறிக்கொள்வார்கள்.

சிறந்த விமர்சனக்களமாய் தொடரும் இந்நிகழ்வில் கதையின் ஆசிரியர்கள் இறுதியாக தங்கள் குறை நிறைகளை ஏற்றுக்கொண்டு இனிதாக நிகழ்வு நிறைவுறும்.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடம் பதிப்பக வெளியீடுகள் -2022 | 2023




பதிப்பக நூல்களை பெற்றுக் கொள்ள மகுடம் பதிப்பகம், 90, பார் வீதி, மட்டக்களப்பு. தொ.பே. இல.: 077 4338878

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUXMI
EDUCATION

2024/2025 REGISTER NOW

0208 573 0368
WWW.LECONLINE.CO.UK
07852 810 285

WHAT WE OFFER

KS1, KS2, KS3, KS4
AND KS5

MATHS, ENGLISH, SCIENCE
PHYSICS, CHEMISTRY, BIOLOGY,
MECHANICS, STATISTICS



REGISTER NOW

WWW.LECONLINE.CO.UK

101A Blyth Road, Hayes, UB3 1DB

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org